# பாடத்திட்டமும்

# ஆசிரியர் வழிகாட்டியும்

DRAFT

# தரம் 2

**(2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதற்கானது)**

முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

**பாடத்திட்டமும்**
**ஆசிரியர் வழிகாட்டியும்**
**தரம் 2**

முதற் பதிப்பு 2017
தேசிய கல்வி நிறுவகம்
© பதிப்புரிமையுடையது

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.

இணையத்தளம் : **www.nie.lk**

மின்னஞ்சல் : **info@nie.lk**

பதிப்பு : தேசிய கல்வி நிறுவகம்

DRAFT

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்ட பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது.

இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினை பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய

DRAFT

கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்கு தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

DRAFT

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்தவொரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியாயமற்றவற்றைக் களைந்து, நல்லவற்றைப் பயன்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாக அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதி மிக்கவை எவையோ அவையும் கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். இவ்வகையில், கலைத்திட்டத்தில் அடங்குகின்ற பாடத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டி, வசதி செய்து கொடுப்போர் (Facilitator) போன்றவை எல்லாம் கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கையின் பண்டைய அருஞ் செல்வங்களையும் நவீன செல்நெறிகளையும் உள்வாங்கி, தனது கல்விக் கோலத்தை மேம்படுத்தி வருகின்றது. சமகாலத் தேவைகளுக்கு அமைய, எட்டாண்டுகளுக்கு ஒரு தடவை கல்வி மறுசீரமைப்புகளினூடாக இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இந்த ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மை பேணப்படுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் சற்றேனும் மாறுபடாது, அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்கு உரியவை அல்ல. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காக பாட விடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஆக்கபூர்வமானதாக மாற்றி அமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மாணவரது அடைவு மட்டத்தை உயர் சதவீதத்துக்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதல் அளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி, மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்த முடியும். குறித்த பாடத்தின் பாட நூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இந்த ஆசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அல்ல என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை அண்மிக்கச் செய்தல் வேண்டும். அவ்வகையில் பாடத்தைக் கற்பிப்பதற்கு வழிகாட்டி, வசதிசெய்து கொடுப்பவர்களால் வகுப்பறையில் குறிப்பிட்ட பாடத்துக்குரிய கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் இறுதியில் மதிப்பீடு நடத்தப்பட வேண்டும். அவ்வாறான களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இந்த ஆசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி வண. மாபுல்கொட சுமணரத்ன தேரர்**
**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

DRAFT

# முன்னுரை

கற்றல்

DRAFT

**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**
**கல்வி அமைச்சு**
**இசுறுபாய**

# அறிமுகம்

2017 ஆம் ஆண்டு இரண்டாம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியானது, 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய ஆசிரியர் வழிகாட்டியை 9 வருட காலம் அமுல்படுத்திப் பெற்றுக்கொண்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. அத்தோடு தேசிய கல்வி நிறுவகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட கலைத்திட்ட பின்னடைவு பற்றிய செயலமர்வுகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள், பல்வேறு நிறுவனங்கள் மூலமாக ஆரம்பக் கல்வி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலமாக பெறப்பட்ட தகவல்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் மூலமாக பெறப்பட்ட தகவல்கள் என்பனவும் இவ் மறுசீரமைப்பின்போது பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி என்பது ஆசிரியர்கள் தமது வகுப்பறையின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்வதற்கு வழிகாட்டும் அறிவுறுத்தல் வழிகாட்டியாகும். இவ் அறிவுறுத்தல்களுக்கு அமைவாகத் தமது கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்வது ஆசிரியர்களின் பொறுப்பாகும். ஆரம்பக் கல்வி மாணவர்கள் தமது வளர்ச்சிப் பருவத்தில் மிக முக்கியமானதொரு கட்டத்தில் இருப்பவர்கள். மாணவர்களின் ஆக்கச் சிந்தனைத் திறன், சமூகத்திறன், ஆளுமைத்திறன் என்பன கட்டியெழுப்பப்படுவது இப்பருவத்திலேயாகும். இதனால் மாணவர்களுக்கான கற்றல் அனுபவங்களைக் கட்டியெழுப்பும்போது இவ் வழிகாட்டியிலுள்ள தகவல்களும் மேலே குறிப்பிட்ட பிள்ளை விருத்திக் காரணிகளும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். மாணவர்களின் கற்றலுக்காக அவர்களது அண்மித்த சுற்றாடலை மிகவும் வெற்றிகரமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். இவ்வயது மாணவர்களின் கற்றல் இடம்பெறுவது முற்றுமுழுதாக சூழலோடு இடைத்தொடர்பை மேற்கொள்ளும் போதேயாகும். இதனால் மாணவர்களுக்குக் கற்றல் அனுபவங்களை வழங்கும்போது அண்மித்த சுற்றாடலை மிக வெற்றிகரமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்த வழிகாட்டியிலுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும்போது மகிழ்ச்சிகரமான செயற்பாடுகள் மற்றும் வழிகாட்டப்பட்ட விளையாட்டுகளுக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு தமது பிள்ளைப் பருவத்தில் மகிழ்ச்சியை அனுபவிப்பதற்கும் வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் சந்தர்ப்பங்கள் வழங்க வேண்டியது அவர்களது முழுமையான விருத்திக்கு அவசியமானதாகும். அவ்வாறே அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு அவசியமான தேர்ச்சிகளை எய்துவதற்கான வாய்ப்புகளையும் வழங்க முடியும். அதற்காக வகுப்பறைக்குள் முடியுமானவரை சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். தமது வகுப்பில் கற்கின்ற கற்றல் சந்தர்ப்பங்களின்போது எந்தளவுக்கு மிகச் சிறப்பாக தொடர்புபடுகின்றனர் என்பதில் எப்பொழுதும் ஆசிரியர் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும். கணிப்பிடுதல் எனக் குறிப்பிடப்படுகின்ற இச்செயற்பாட்டின் இறுதி விளைவாக அமைய வேண்டியது சகல மாணவர்களினதும் கற்றலை விருத்தி செய்தலாகும்.

இவ் ஆசிரியர் வழிகாட்டியை தயார்செய்யுமுகமாக ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர் கல்லூரிகள், தேசிய கல்விக் கல்லூரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் கல்வி நிர்வாகிகள் பலரதும் உதவிகள் பெறப்பட்டன. இவ் அனைவரும் வழங்கிய பங்களிப்புக்காக மனமார்ந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன். அவ்வாறே எப்பொழுதும் எங்களுக்கு வழிகாட்டுகின்ற தேசிய கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகம் கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர அவர்களையும் நன்றியுடன் நினைவுகூருகின்றேன். இந்நூலை ஆக்குமுகமாக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய எமது திணைக்களத்தின் சகல பணியாளர்களுக்கும் கல்விசாரா ஊழியர்களுக்கும் எனது நிறைவான நன்றிகள் உரித்தாகட்டும்.

**எம்.ஏ.ஜீ.டபிள்யு. குலரத்ன**
பணிப்பாளர்,
முன்பிள்ளை விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித் துறை

DRAFT

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது, தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக, நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத்திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக்கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்கள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு, தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப, இணங்கி வாழவும் மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

**(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 திசெம்பர்)**

DRAFT

# அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(i) தொடர்பாடல் தேர்ச்சிகள்**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில்நுட்பத் தகைமை:

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையிலான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல் விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகிய வற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை : கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

**(ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

**(iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல் : தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல் : வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

DRAFT

பௌதிகச் சூழல் : இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக்கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்; அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்; அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்; பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான சீவனோபாயத்தில் ஈடுபடல்.

**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள், மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**(vii) "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

DRAFT

DRAFT

# கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் அனுமதியும்**

**ஆலோசனை** : **கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர**
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்

**வண.கலாநிதி மாம்புல்கொட சுமணரதன தேரர்**
பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.

**பணிப்பு** : **எம்.ஏ.ஜீ.டபிள்யு. குலரத்ன**
பணிப்பாளர், முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித் துறை)

**தொகுப்பும் இணைப்பாக்கமும்**: **எம்.ஏ.ஜீ.டபிள்யு. குலரத்ன**
சிரேஷ்ட விரிவுரையாளர் (பதில் கடமையாற்றும் பணிப்பாளர், முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை)

**கலைத்திட்டக் குழு** : **கே.ஏ.டீ.பி. சரத்சந்திர** (ஓய்வுபெற்ற பணிப்பாளர்)
**எம்.ஏ.ஜீ.டபிள்யு. குலரத்ன** (சிரேஷ்ட விரிவுரையாளர்)
**எம்.ஆர்.டபிள்யு. மத்தும** (சிரேஷ்ட விரிவுரையாளர்)
**ஆர்.எம்.கே. த சில்வா** (சிரேஷ்ட விரிவுரையாளர்)
**வி.என்.எஸ். உதயசந்திரன்** (சிரேஷ்ட விரிவுரையாளர்)
**டபிள்யு.ஜீ.எஸ். குமார** (சிரேஷ்ட விரிவுரையாளர்)
**எஸ்.எம்.எஸ். தேசப்பிரிய** (விரிவுரையாளர்)
**எச்.டபி.டபி.எம். சஜீவா ரம்புக்வெல** (விரிவுரையாளர்)
**ரீ. சந்திரிக்கா பீரிஸ்** (விரிவுரையாளர்)
**ஜே.ஏ.நிர்மலா ஜயசிங்க**(உதவி விரிவுரையாளர்)
**எச்.ஜீ. வனசேகர** (உதவி விரிவுரையாளர்)
**கே.ஆர.எம். சகுந்தலா ரணசிங்க** (உதவி விரிவுரையாளர்)


**தாய்மொழி (தமிழ்)** : **வி.என்.எஸ்.உதயசந்திரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும்
ஆரம்பக்கல்வித் துறை


**மொழிபெயர்ப்பு** : **எம்.எச்.எம். யாக்கூத்**
ஓய்வுபெற்ற பிரதம செயற்றிட்ட அதிகாரி

**அட்டைப்படம்** : **வி.என்.எஸ்.உதயசந்திரன்**

**கனணி வடிவமைப்பு** : **கே. ஜெயகாந்தன்**

**மொழிச் செம்மையாக்கமும் பதிப்பும்** : **வி.என்.எஸ்.உதயசந்திரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும்
ஆரம்பக் கல்வித் துறை


அடிப்படை தேர்ச்சிகள்
தொடர்பாடல் தேர்ச்சிகள்
ஆளுமை விருத்தி தொடர் பான தேர்ச்சிகள்
சூழல் தொடர்பான தேர்ச்சிகள்
வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்
சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்
ஓய்வு நேரத்தைப் பயன் படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்
"கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்
பிள்ளைகளை அறிந்து கொள்வோம்
முதன்மை நிலை 1
தரம் 1
தரம் 2
தாய்மொழி
இரண்டாவது தேசிய மொழி
கணிதம்
சமயம்
செயற்பாடு சார்ந்த வாய்மொழி ஆங்கிலம்
சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்
இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்
முதன்மை நிலை 1 இன் அத்தியவசியத் தேர்ச்சிகளை எய்தியமையை உறுதிப்படுத்தல்
முதன்மை நிலை 2
தரம் 3
தரம் 4
தாய்மொழி
ஆங்கிலம்
இரண்டாவது தேசிய மொழி
கணிதம்
சமயம்
செயற்பாடு சார்ந்த வாய்மொழி ஆங்கிலம்
சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்
இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்
முதன்மை நிலை 2 இன் அத்தியவசியத் தேர்ச்சிகளை எய்தியமையை உறுதிப்படுத்தல்
முதன்மை நிலை 3
தரம் 5
தாய்மொழி
ஆங்கிலம்
இரண்டாவது தேசிய மொழி
கணிதம்
சமயம்
செயற்பாடு சார்ந்த வாய்மொழி ஆங்கிலம்
சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்
பிள்ளையின் விருப்புக்கும் சிந்தனைக்குமான தெரிவுப்பாடம்
இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்
முதன்மை நிலை 3 இன் அத்தியவசியத் தேர்ச்சிகளை எய்தியமையை உறுதிப்படுத்தல்


கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு
விளையாட்டு விநோதச் செயல்கள்
செயற்பாடுகள்
எழுத்துவேலை
தரம் 1
தரம் 5

DRAFT

## புதிய கல்விச் சீர்ததிருத்தங்கள்

புதிய கல்விச்சீர்திருத்தங்கள்- மறுசீரமைப்பின் கீழ் ஆரம்பக்கல்வி கலைத்திட்டத்தின் விசேட பண்புகள்.

- ஐந்து ஆண்டுகளைக் கொண்ட ஆரம்பக்கல்விப் புலம் கலைத்திட்ட விருத்தியினதும் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளினதும் வசதி கருதி மூன்று முதன்மை நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

  **முதன்மை நிலை 1 - தரங்கள் 1 உம் 2 உம்**
  **முதன்மை நிலை 2 - தரங்கள் 3 உம் 4 உம்**
  **முதன்மை நிலை 3 - தரம் 5**

- தரம் 1 இல் பிரவேசிக்கும் பிள்ளையை இனங்காண்பதற்கு வசதியான செயற்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளன.

- பொதுக்கல்வி நிலை இறுதியில் மாணவர்களிடம் விருத்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் என விதந்துரைக்கப்பட்ட அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் வெளியிடப்பட்டுள்ளன. அத்தேர்ச்சி களைக் கட்டியெழுப்புவதற்குப் பொருத்தமான அடித்தளத்தை இட்டுச் செல்லும் கலைத்திட்டமாக, தேர்ச்சி சார்ந்த கலைத்திட்டமாக உள்ளது.

- பாட விடயங்கள் நான்காக வகுக்கப்பட்டுள்ளன.
  - **மொழி**
  - **கணிதம்**
  - **சமயம்**
  - **சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்**

- பிள்ளையின் பூரண விருத்திக்கு மொழி, கணிதத் தேர்ச்சிகளுடன் வேறு சில தேர்ச்சிகளும் விருத்தி செய்யப்படவேண்டியது அவசியமாகும்.
  எடுத்துக்காட்டு: அழகியல், ஆக்கம், விஞ்ஞானம், விழுமியம், உடல் விருத்தி, சுகாதாரம் சார்ந்த தேர்ச்சிகள்

- இத்தேர்ச்சிகளைத் தனித்தனிப் பாட அலகுகள் மூலம் முன்வைப்பதை விட பிள்ளை களுக்குப் பொருத்தமான கருப்பொருள்கள் மூலம் வெளிக்கொணர்ந்து எய்துவதே சிறந்ததென ஏற்றுக்கொள்ளப்படடுள்ளது. 16 கருப்பொருள்களைக் கொண்ட சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் எனும் பாடப்பரப்பு முன்பை விட ஒன்றிணைக்கப்பட்ட பண்பைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

- தரம் 1 இலிருந்து செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி ஆங்கிலமும் இரண்டாவது தேசிய மொழியும் (சிங்களம் / தமிழ்மொழிப் பாடங்கள்) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- முதன்மை நிலை 2 இலிருந்து முறைசார ஆங்கிலம் சேர்க்கப்பட்டுள்ளது.

- தரம் 1 இலிருந்து தொடர்ச்சியாக பாட இணைச் செயற்பாடுகளுக்கும் தரம் 5 இல் பிள்ளைகளின் விருப்புக்கும், தேவைக்குமேற்பப் பொருத்தமான விருப்புப் பாடங்களைக் கற்பதற்கும் கால அட்டவணையில் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

- ஆரம்பக்கல்விப் பருவத்தினருக்குப் பொருத்தமாக மேற்கொள்ளக்கூடிய கற்றல் - கற்பித்தல் முறைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை:
  - **விளையாட்டுக்களும் விநோதச் செயற்பாடுகளும்**
  - **செயற்பாடுகள்**
  - **எழுத்து வேலைகள்**

DRAFT

முதன்மை நிலை 1 இல் விளையாட்டுக்களுக்கும் செயற்பாடுகளுக்கும் அதிக அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு முதன்மை நிலைகள் மூன்றிலும் கற்றல் - கற்பித்தல் முறைகள் ஒழுங்கமைக்கப்பட்டுப் படிப்படியாக மாறிச் செல்லும் விதத்தில் அவை வடிவமைக்கப்பட்டுள்ளன.

- பிள்ளையின் முன்னேற்றம், கற்றல் இடர்ப்பாடுகள் தொடர்பாக தகவல் சேகரிப்பதற்கு முறைசாராத கணிப்பீடு முறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்ற அதாவது, தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய தொடர் கணிப்பீட்டிற்காக முன்னுரிமை பெறுகின்ற கணிப்பீட்டுச் செயல்முறையை நடைமுறைப்படுத்தல்.

- யாவருக்கும் கல்வியை உறுதி செய்வதை இலக்காகக் கொண்டு அதற்குத் தரநிர்ணயமுள்ள ஒவ்வொரு முதன்மைநிலை இறுதியிலும் மாணவர்கள் கட்டாயமாக பாண்டித்தியம் அடைய வேண்டிய அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- ஒவ்வொரு முதன்மைநிலை இறுதியிலும் எதிர்பார்க்கின்ற அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகளில் சகல மாணவர்களும் பாண்டித்தியம் அடைய வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு ஒவ்வொரு முதன்மைநிலையும் ஒரே ஆசிரியரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- ஒரு பிள்ளையின் அடைவை இன்னொரு பிள்ளையின் அடைவோடு ஒப்பிட்டுத் தீர்மானம் எடுக்கும் முறைமையை விடுத்து, குறித்தவொரு நோக்குடன், நியதியுடன் அடைவை ஒப்பிட்டு தீர்மானம் மேற்கொள்வதற்கு, நியதிசார்ந்த அடிப்படை கணிப்பீடு முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- முதன்மை நிலை 1 இன் பிள்ளைகள் தரம் 5,6 இன் பிள்ளைகளுடன் சேர்ந்து ஒழுங்கமைப்புடன் செயற்பாடுகளிலும் விளையாட்டுக்களிலும் ஈடுபடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

- 2007 ஆம் ஆண்டு முதல், முதன்மை நிலை ஒன்று தொடக்கம் இரண்டாவது தேசிய மொழியும் அறிமுகம் (சிங்களம்/தமிழ்) செய்யப்பட்டுள்ளது.

- 2007 ஆம் ஆண்டு முதல் செயற்பாடு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம் கணித பாடத்துடனும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- மாணவர்களின் உடல், உள விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தில் உடலியக்கச் செயற்பாடுகள் எனும் வேலைத்திட்டம் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் தரம் ஒன்றிலிருந்து அறிமுகம் செய்யப்படுகின்றது.

DRAFT

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள்

எதிர்வரும் 2017 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வருகின்ற இந்த (திருத்தியமைக்கப்பட்ட) ஆசிரியர் வழிகாட்டியானது, தமது மாணவர்க்கு மேலும் பயனுள்ள வகையிலும் தரமிக்க வகையிலும் கற்பிக்க வழிகாட்டுவதற்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

மாணவரைத் தரமான கற்றலின்பால் வழிப்படுத்துவதற்கான இந்த ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

தாய்மொழி, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், ஆங்கில பிரதான பாடங்களும் இரண்டாம் தேசிய மொழி, செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி ஆங்கிலம், மாணவரது முன்னேற்றத்தைக் கணிப்பீடு செய்தல், விளையாட்டு முற்றத்தைப் பயன்படுத்துதல் ஆகியனவும் இதில் அடங்கியுள்ளது. அத்தோடு, கணிதம், சமயம் ஆகிய பாடங்களுக்கென தனித்தனியாகத் தயாரிக்கப்பட்ட ஆசிரியர் வழிகாட்டிகள் உள்ளன. முதலாம் தரத்தில் கற்கும் மாணவர்களின் கணித பாடத்திற்கென கணித செயல்நூல் ஒன்றும் தாய்மொழிப் பாடத்திற்காக பாடநூலுடன் செயல்நூல் ஒன்றும் சமய பாடத்திற்காக ஒரு பாடநூலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

மாணவரை இனங்காணல் எனும் வேலைத்திட்டத்தின் மூலம் கண்டறியப்படும் தகவல்களைக் கருத்திற்கொண்டு மாணவர்களை, எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளின்பால் இட்டுச்செல்வதற்காக வினைத்திறனான கற்பித்தலின்பால் வழிப்படுத்துவதற்காக இந்த ஆசிரியர் வழிகாட்டியைப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவது அவசியமாகும். அதற்காக, இந்த ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள சகல விடயங்களையும் நன்கு வாசித்து விளங்கிக்கொள்வது அவசியமாகும். மேலும், அந்தந்தப் பாடப்பகுதியின் கீழ் நாளாந்த கற்பித்தல் நடவடிக்கைகளைத் திட்டமிட்டுக் கொள்வதற்கும் அது உங்களுக்கு துணையாகும்.

தாய்மொழிப் பாடத்தில் அந்தந்தப் பாடசாலைத் தவணையில் கற்பிக்க வேண்டியவை எவை என்பது தெளிவாகத் தரப்பட்டுள்ளது. தாய்மொழிப் பாடத்தில் செவிமடுத்தல் (கேட்டல்), பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய பரப்புகளுக்கு இடையே ஒன்றிணைப்பு நிகழுமாதலால் அத்தகைய பரப்புக்குரிய பகுதிகளை வெவ்வேறாகக் கற்பித்தலாகாது. தாய்மொழிப் பாடக் கற்றல் - கற்பித்தல் செயன்முறையின்போது அந்தந்தச் செயற்பாட்டிற்குப் பொருத்தமானவாறு பாடநூலையும் செயல்நூலையும் துணையாகக் கொள்வது இன்றியமையாதது. அவ்வாறின்றி பாடநூலையும் செயல்நூலையும் மாத்திரம் தொடர்ச்சியாகப் பயன்படுத்திச் செல்லலாகாது. மேலும், கற்றல் - கற்பித்தலின் வெற்றிக்காக மேலும் அர்த்தபுஷ்டியான பொருத்தமான உபகரணங்களைப் பயன்படுத்துவது அவசியமாகும்.

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் எனும் பாடம், ஆரம்பக்கல்விக் கலைத்திட்டத்தின் மற்றுமொரு பிரதான பாடமாகும். மாணவர்க்கு மிக நெருக்கமாக பௌதிக, உயிரியல் மற்றும் சமூகச் சூழலின்பால் கவனஞ் செலுத்தி, 16 கருப்பொருள்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு, அவ்வொவ் வொன்றுக்குமுரிய பல செயற்பாடுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இப்பாடத்திற்காக ஆசிரியர் வசமுள்ள ஒரேயொரு மூலாதாரம் இந்த ஆசிரியர் வழிகாட்டியில் உள்ளடக்கம் மாத்திரமேயாகும். சூழலில் தேடல், வரைதல், அழகியல் ஆக்கங்கள், உடற்கல்விச் செயற்பாடுகள், உணவும் போசணையும் போன்ற பல பாடப்பரப்புகளை உள்ளடக்கிய இப்பாடமானது ஓர் ஒன்றிணைந்த பாடமும் இணைப்பாக்கப் பாடமுமாகும். இது பார்த்த விடயப்பரப்பில் உள்ளடக்கி உருப்பெற்றுள்ளது. இந்த எல்லாப் பகுதிகள் தொடர்பாகவும் ஆசிரியர் பூரண விளக்கத்துடன் செயற்படுவது முக்கியமானது.

ஆக்கபூர்வமான ஆசிரியர் இங்கு தரப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கு மாத்திரம் வரையறைப்பட்டிராது புதிய செயற்பாடுகளைத் திட்டமிட்டு மாணவர்க்கு மேலும் பயனுள்ள கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்கிச் செயற்படுவதற்கு இந்த ஆசிரியர் வழிகாட்டி தாராளமாக வாய்ப்பளிக்கிறது.

DRAFT

கற்றல் - கற்பித்தல் சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக தமது சுற்றுப்புறத்தில் பெறத்தக்க இயற்கையான வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி அவற்றை ஆக்கிக் கொள்வதில் கவனஞ் செலுத்துவது முக்கியமானது. மேலும் இங்கு தரப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொருத்தமான பல்வேறு கற்றல் முறைகளைப் பயன்படுத்தி மாணவரை செயலூக்கத்துடன் கற்றலில் பங்குகொள்ளச் செய்து களிப்புடன் கற்க வகை செய்வதும் இன்றியமையாததாகும்.

செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி ஆங்கிலத்தை, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தில் மட்டுமன்றி கணித பாடத்தின்போதும் பயன்படுத்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. ஆங்கில மொழியை மாணவர்க்கு பரிச்சயப்படுத்துவதற்காக நாளாந்த வாழ்க்கையில் பயன்படும் சொற்கள் மற்றும் சொற்றொடர்களைச் கற்றலுடன் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தில் அடங்கியுள்ள கருப்பொருள்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் தேசிய மொழியை (சிங்களம்) பயன்படுத்துவது தொடர்பாகவும் இந்த ஆசிரியர் வழிகாட்டியில் வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது. அது சார்ந்த பாடத்திட்டமும் பல செயற்பாடுகளும் தரப்பட்டுள்ளதோடு அவற்றைப் பொருத்தமானவாறு பொருத்தியமைத்து, ஒழுங்கமைத்து மாணவர்க்கு வழங்குவது அவசியமாகும். செயற்பாடு சார்ந்த வாய்மொழி ஆங்கிலம், இரண்டாம் மொழி (சிங்களம்) ஆகிய பாடப் பகுதிகளைக் கற்பிக்கும்போது பொருத்தமான கற்றல் - கற்பித்தல் வளங்களைப் பயன்படுத்துவதும் அவசியமாகும். இவ்வாறாக ஒவ்வொரு பாடப்பகுதியின் மூலமும் எதிர்பார்க்கப்படும் கற்றல் தேர்ச்சிகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பதை ஆசிரியர் கணிப்பிட்டுத் தேவையான வழிகாட்டலையும் உதவிகளையும் வழங்குதல் வேண்டும்.

முறைமையில் வகையிலும், முறைசார்ந்த வகையிலும் நடத்தும் கணிப்பீட்டுச் செயன்முறையின் மூலம் இனங்காணப்பட்டுள்ளவாறான மாணவரின் வலிவு - நலிவுகள் தொடர்பாக நாளாந்தம் நடாத்தும் கற்றல் - கற்பித்தல் செயன்முறையின்போது தேவையான வழிகாட்டலை வழங்குதல் வேண்டும். மாணவர்களைக் கணிப்பிடுவதற்காக உரிய கணிப்பீட்டு நியமங்களை உள்ளடக்கிய கணிப்பீட்டுப் படிவங்கள் இந்த ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ளன.

இப்பணியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்காக அந்தந்தப் பாடத்திற்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதோடு அந்நேரத்தை உச்சளவில் பயன்படுத்துவதற்கு ஆசிரியர்கள் ஆவன செய்ய வேண்டும்.

இரண்டாம் தரத்தில் பிரவேசிக்கும் பிள்ளைகளின் தன்மையும் அவர்களின் கற்றல் கோலமும் ஆளுக்காள் வேறுபட்டுக் காணப்படும். எனவே, அது தொடர்பாக உணர்தன்மையுடன் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஒவ்வொருவரும் கவனஞ் செலுத்தி மாணவ மாணவியரை நன்கு இனங்கண்டு செயற்படுவர் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

**எம்.ஏ.ஜீ.டபிள்யு. குலரத்ன**
கலைத்திட்ட இணைப்பாளர்,
முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்.

DRAFT

# நேர ஒதுக்கீடு

## முதன்மை நிலை ஒன்று (தரம் 1, 2)

| | பாடம் | **வாரத்திற்கான நேர ஒதுக்கீடு** |
|---|---|---|
| 1. | தாய் மொழி | 5.00 மணித்தியாலம் |
| 2 . | கணிதம் | 3.30 மணித்தியாலம் |
| 3 . | சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் | 5.30 மணித்தியாலம் |
| 4 . | சமயம் | 1.15 மணித்தியாலம் |
| 5 . | இரண்டாம் தேசிய மொழி | 30 நிமிடம் |
| 6 . | காலைக் கூட்டமும் சமய அனுட்டானமும் | 1.15 மணித்தியாலம்<br>(நாளொன்றுக்கு 15நிமி) |
| 7 . | ஓய்வு | 1.15 மணித்தியாலம்<br>(நாளொன்றுக்கு 15நிமி) |
| 8 . | உணவு வேளை | 50 நிமிடம் (நாளொன்றுக்கு 10நிமி) |
| 9 . | உடல் நலச் செயற்பாடுகள் | 1.40 மணித்தியாலம்<br>(நாளொன்றுக்கு 20நிமி) |
| 10 . | பாடம் தொடர்பான செயற்பாடு | 30 நிமிடம் (வாரம் ஒருநாள்) |
| வாரத்திற்கான மொத்தக் காலம் | | **21 மணித்தியாலம் 15 நிமிடங்கள்** |

DRAFT

# தரம் இரண்டு - பாட உள்ளடக்கமும் ஆசிரியர் வழிகாட்டியும்


1.0 தாய்மொழி (தமிழ்) - அறிமுகமும் பாடத்திட்டமும் xxii

தாய்மொழி ஆசிரியர் வழிகாட்டி 1

2.0 சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் - அறிமுகமும் பாடத்திட்டமும் 120

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் - ஆசிரியர் வழிகாட்டி 134

01. நாமும் பாடசாலையும் 135

02. எமது வீடு 142

03. தோட்டத்திற்கு வரும் பிராணிகள் 147

04. நீருடன் விளையாட்டு 154

05. புத்தாண்டுக் காலம் 162

06. நாம் காணும் வானம் 167

07. நாம் உண்பவையும் குடிப்பவையும் 172

08.1தகவல்கள் கிடைக்கும் வழிகள் 180

09. சுற்றுப் புறத்தில் நிகழும் மாற்றங்கள் 187

10. எமது நல்வாழ்வு 193

11. எனக்குத் தேவையானவை கிடைக்கும் வழிகள் 200

12. பிரயாணம் 206

13. ஒளியுடன் / வெளிச்சத்துடன் விளையாட்டு 214

14. மனிதர் வேலை செய்யும் இடங்கள் 220

15. சுற்றுப் புறத்தில் வெவ்வேறுபட்ட இடங்கள் 226

16. எமது உதவி தேவைப்படுவோர் 232

3.0 செயற்பாடுகள் அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம் 237

4.0 இரண்டாவது தேசிய மொழி - பாடத்திட்டமும் ஆசிரியர் வழிகாட்டியும் 251

5.0 விளையாட்டு முற்றம் 278

6.0 மாணவர் முன்னேற்றத்தைக் கணிப்பிடல் 282

7.0 அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் 290


**கணிதம், சமயங்கள் தொடர்பான பாடத்திட்டங்களும் ஆசிரியர் வழிகாட்டிகளும் தனித்தனியாக முன்வைக்கப்பட்டுள்ளன.**

DRAFT

# 1.0 தாய் மொழி (தமிழ்) - தரம் 02

## 1.0 அறிமுகம்

செவிமடுத்தல். பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகியன மொழியின் அடிப்படைத் திறன்களாகும். இவை இரு வகைப்படும். செவிமடுத்தல் வாசித்தல் என்பன உள்ளீட்டுத் திறன்களாகும். எழுதுதல், பேசுதல் என்பன வெளியீட்டுத் திறன்களாகும். உள்ளீட்டுத் திறன்களை விருத்தி செய்தலானது, மாணவரின் வெளியீட்டுத் திறன்களின் விருத்தியில் பங்களிப்புச் செய்யும். இத்திறன்களின் விருத்திக்குப் பாடசாலைச் சூழலும் புறச்சூழலும் துணைநிற்கும். எனவே அடிப்படையான மொழித் திறன்களை விருத்தி செய்வதில் ஆரம்பக் கல்வியின் வகிபாகம் அளப்பரியதாகும்.. அடிப்படையான மொழித்திறன்கள் ஒழுங்காக முன்வைப்பதற்காக அவை வெவ்வேறாக காட்டப்பட்டுள்ள போதிலும் ஒன்றிணைந்த வகையில் கற்பிக்கத்தக்கவாறாக அவற்றை முன்வைத்தல் முக்கியமானதாகும்.

தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் போது தொடர்பாடல் திறன்களின் முதன்மையான ஓர் அம்சமாக எழுத்தறிவு இடம்பெறுகின்றது. கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், விளங்கிக் கொள்வதற்காக வாசித்தல், சரியாகவும், தெளிவாகவும் எழுதுதல், விளைதிறனுடையவாறு கருத்துப் பரிமாறுதல் ஆகிய தேர்ச்சிகளின்பால் மாணவரை இட்டுச் செல்வது எதிர்பார்க்கப்படுகின்றது. பிரதானமாக மேற்படி தொடர்பாடல் தேர்ச்சிகளுக்கு மேலதிகமாக, சுற்றாடல் சார்ந்த தேர்ச்சிகள், வேலையுலகுக்கு ஆயத்தமாதல் தேர்ச்சிகள், ஒழுகலாறு மற்றும் சமயம் சார்ந்த தேர்ச்சிகள், விளையாட்டு மற்றும் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல் தொடர்பான தேர்ச்சிகள், போசாக்கு மற்றும் வளர்ச்சி தொடர்பான தேர்ச்சிகள், கற்கக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள் ஆகிய ஏனைய தேர்ச்சிகளும் விருத்தியடையும் வகையில் பாடத்துக்குரிய கற்றல் - கற்பித்தற் செய்முறையை விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

முதலாம் முதன்மை நிலையில் உயிரோட்டமான அடிப்படை மொழித்திறன்களாகிய செவிமடுத்தல் மற்றும் பேசுதலுக்குரிய களிபூட்டத்தக்க கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுப் படிப்படியாக வாசித்தல் எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களை விருத்திசெய்து கொள்வது அவசியமாகும்.

இரண்டாம், முதன்மை நிலையின் போது அடிப்படை மொழித்திறன்களை விருத்தி செய்தவாறு, குறிப்பாக செம்மையாக மொழியை விருத்தி செய்து கொள்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுவது எதிர்பார்க்கப்படுகின்றது. மூன்றாம் முதன்மை நிலையின் இறுதியில், குறிப்பாக ஆக்கபூர்வமாகப் பேசுதல் மற்றும் ஆக்கபூர்வமாக எழுதுதல் தொடர்பான உயர்மட்டப் பாண்டியத்தியம் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே தாய்மொழியை நேசிக்கும் பிரசைகளின் முதன்மையான மொழி அத்திவாரத்தையும், இடைநிலைப் பருவத்தில் தாய்மொழியைப் பயில்வதற்குத் தேவையான முதன்மை அடித்தளத்தையும் இடுவது எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.0 தரம் 1-5 இற்கான மொழித் தேர்ச்சிகள்

- கிரகித்துத் துலக்குவதற்காகச் செவிமடுப்பார்.
- செவிமடுத்தல் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.
- விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுப்பார்.
- நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகச் செவிமடுப்பார்.
- சொற்களஞ்சிய விருத்திக்காகச் செவிமடுப்பார்.
- தொடர்பாடலுக்காகச் செவிமடுப்பார்.
- மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.
- கற்றல் விருத்திக்காகச் செவிமடுப்பார்.
- கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றிச் செவிமடுப்பார்.



DRAFT

- நியம மொழிப் பிரயோகத்திற்காகச் செவிமடுப்பார்.
- விளக்கத்துடன் தெளிவான உச்சரிப்புடன் கருத்துப் புலப்படப் பேசுவார்.
- பேசுதல் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார்.
- விருப்புடனும் இரசனையுடனும் இயல்பாகப் பேசுவார்.
- நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகப் பேசுவார்.
- சொற்களஞ்சிய விருத்திக்காகப் பேசுவார்.
- தொடர்பாடலுக்காகப் பேசுவார்.
- மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார்.
- கற்றல் விருத்திக்காகப் பேசுவார்.
- கிரகித்தவற்றை ஆக்கத்திறனுடனும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமுறவும் பேசுவார்.
- நியம மொழிப் பிரயோகத்திற்காகப் பேசுவார்.
- வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.
- வாசித்தல் திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.
- விருப்புடனும் இரசனையுடனும் இயல்பாக வாசிப்பார்.
- நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக வாசிப்பார்.
- சொற்களஞ்சிய விருத்திக்காக வாசிப்பார்.
- தொடர்பாடலுக்காக வாசிப்பார்.
- மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.
- கற்றல் விருத்திக்காக வாசிப்பார்.
- கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றி வாசிப்பார்.
- நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் வாசிப்பார்.
- எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவார்.
- எழுத்துத் திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார்.
- விருப்புடனும் இரசனையுடனும் எழுதுவார் / வரைவார்.
- நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக எழுதுவார்.
- சொற்களஞ்சிய விருத்திக்காக எழுதுவார்.
- தொடர்பாடலுக்காக எழுதுவார்.
- மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார்.
- கற்றல் விருத்திக்காக எழுதுவார்.
- கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் எழுதுவார்.
- நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் எழுதுவார்.

DRAFT

## 4.0 கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

தரம் இரண்டு மொழிப் பாடத்துக்கான கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடும் போது, வழிப்படுத்திய விளையாட்டுக்கள் கூடுதலாகவும் செயற்பாடுகள் போதிய அளவிலும், எழுத்துப் பயிற்சிகள் குறைந்த அளவிலும் இடம்பெறச் செய்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள் சிறுகுழுக்களாக, சோடிகளாக பெரிய குழுக்களாக வகுப்பு வாரியாக, வேண்டியவிடத்துத் தனித்தனியாகச் செயற்படுத்துவதற்கும் இயங்குவதற்கும் ஏற்றவாறு செயற்பாடுகளைத் திட்டமிடுதல் வேண்டும்.

இவற்றோடு, கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிடும்போது பாடநூல், செயல் நூல் ஏனைய வாசிப்பு நூல்கள் என்பவற்றைப் பயன்படுத்துவதற்கான பொருத்தமான சந்தர்ப்பங்களிலும் கவனஞ் செலுத்துதல் வேண்டும். வழிப்படுத்திய விளையாட்டுக்கள், செயற்பாடுகள் எழுத்து வேலைகள் தொடர்பான மாதிரிகளும் வழிகாட்டல்களும் இவ்வழிகாட்டியில் அடங்கியுள்ளன.

## 5.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

தாய்மொழிப் பாட விருத்திக்கும் மேம்பாட்டுக்கும் உதவும் வகையில் பல வேலைத் திட்டங்கள் பாடசாலையில் நடைமுறையில் உள்ளன. அவற்றுள் சில வருமாறு:

- காலைக் கூட்டமும் நற்சிந்தனையும்
- வகுப்பு மன்றங்கள்
- கலை நிகழ்ச்சிகள்
- கண்காட்சிகள்
- சமய நிகழ்ச்சிகள்
- சிறுவர் நிகழ்ச்சிகள் - சந்தை சுற்றுலா போன்றவை
- ஆசிரியர், பெற்றோர் தினம் போன்றவை

இவற்றைப் பயனுள்ளவாறு நடைமுறைப்படுத்தல் பாடசாலைக் கொள்கையாக அமைதல் வேண்டும். பாடசாலைச் சமூகமும் சமுதாயமும் இதற்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும்.

## 6.0 கணிப்பீடு

தரம் இரண்டில் தாய்மொழிப் பாடத்தில் எழுத்துப் பரீட்சையைவிட முறைசாராத கணிப்பீடுகளுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது மாணவர்கள் செயற்பாடுகளில் ஈடுபடும் போது அவர்களின் துலங்கல்களை அவதானித்து மேற்கொள்ளப்படுகின்ற கணிப்பீடுகளுக்கே முன்னுரிமை வழங்குதல் வேண்டும். கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது குறிப்பாக வழிப்படுத்திய விளையாட்டுக்கள் (Guided Play) செயற்பாடுகளின் போது, அவதானித்தல் (Observation) உற்றுநோக்குதல் (Critical Observation) வாய்மொழி வினாக்கேட்டல் (Oral questioning) என்பவை மூலம் தரம் ஒன்று மாணவர்களுக்கான தேர்ச்சிகள் அடையப்படுகின்றனவா அல்லது விருத்தி அடைகின்றனவா என்பதைத் தொடர்ச்சியாகக் கணிப்பீடு செய்தல் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

DRAFT

# பாடத்திட்டம்

DRAFT

| கருப்பொருள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| $L_1$ $S_1$ | $L_1$ கிரகித்துத் துலங்குவதற்காகச் செவிமடுப்பார். | $L_1$<br>• பேசுவதைச் செவிமடுத்தல்<br>• படம் பார்த்துப் பேசுவதைச் செவிமடுத்தல்<br>• கதை சொல்வதைச் செவிமடுத்தல்<br>• காட்சிப்படங்கள், கதைப் படங்களைப் பார்த்து சொல்வதைச் செவிமடுத்தல்<br>• உயிர் மெய் எழுத்துக்கள்<br>• குறில், நெடில் சொற்கள்<br>• ஒருமை, பன்மைச் சொற்கள் |
| | $S_1$ விளக்கத்துடன், தெளிவான உச்சரிப்புடன் கருத்துப் புலப்படப் பேசுவார். | $S_1$<br>• சுயமாகப் பேசுதல்<br>• படம் பார்த்துப் பேசுதல்<br>• சுயமாகக் கதை சொல்லல்<br>• காட்சிப் படங்களைப் பார்த்து கதை கூறுதல்<br>• கதைப் படங்களைப் பார்த்து கதை கூறுதல்<br>• உயிர் மெய் எழுத்துக்கள்<br>• குறில், நெடில் சொற்கள்<br>• ஒருமை, பன்மைச் சொற்கள் |
| $R_1$ $W_1$ | $R_1$ வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார். | $R_1$<br>• படம் பார்த்து வாசித்தல்<br>• கதைப் படங்களை வாசித்தல்<br>• நெடுங்கணக்கு வரிசைப்படி எழுத்துக்களை வாசித்தல்<br>• படங்களைப் பார்த்து சொற்களை வாசித்தல்<br>• சொற்களை வாசித்தல் (அறிமுகம்)<br>• நெடுங்கணக்கு வரிசைப்படி சொற்களை வாசித்தல்<br>• உயிர் மெய் எழுத்துக்கள்/சொற்கள்<br>• குறில், நெடில் சொற்கள்<br>• ஒருமை, பன்மைச் சொற்களை வாசித்தல் |
| | $W_1$ எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவார். | $W_1$<br>• எழுத்து முன்பயிற்சி<br>- சரியான கொண்ணிலையில் அமரும் பயிற்சி<br>- சரியாகப் பென்சில் பிடிக்கும் பயிற்சி<br>- எழுதுவதற்கான நுட்பப் பயிற்சிகள்<br>- வரைதல்<br>- நிறந்தீட்டுதல்<br>- அச்சுப்பதித்தல்<br>• நான்கு றூள் கொப்பியில் அகரவரிசைப்படி எழுத்துக்களை எழுதுதல் |

DRAFT

| கருப்பொருள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | | • நான்கு றூள் கொப்பியில் தெரிவு செய்யப்பட்ட சொற்களை எழுதுதல் (உறுப்பமைய)<br>• படங்களைப் பார்த்து சொற்களை எழுதுதல்<br>• காட்சிப்படங்களைப் பார்த்து சொற்களை எழுதுதல்<br>• கதைப்படங்களைப் பார்த்து சொற்களை எழுதுதல்<br>• நெடுங்கணக்கு வரிசைப்படி சொற்களை எழுதுதல்<br>• உயிர்மெய் எழுத்துக்கள் / சொற்கள்<br>• குறில் நெடில் சொற்கள்<br>• ஒருமை, பன்மைச் சொற்கள் |
| $L_2$ $S_2$ $R_2$ $W_2$ | $L_2$ செவிமடுத்தல் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார். | $L_2$ • சொற்கள்<br>- ஒத்த கருத்துச் சொற்கள்<br>- எதிர்க் கருத்துச் சொற்கள்<br>- எதிர்ப்பாற் சொற்கள்<br>• வாக்கியங்கள் (சிறிய)<br>- நிறுத்தக் குறிகள் (முற்றுப்புள்ளி, காற்புள்ளி) |
| | $S_2$ பேசுதல் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார். | $S_2$ • சொற்கள்<br>- ஒத்த கருத்துச் சொற்கள்<br>- எதிர்க் கருத்துச் சொற்கள்<br>- எதிர்ப்பாற் சொற்கள்<br>• வாக்கியங்கள் (சிறிய)<br>- நிறுத்தக் குறிகள் (முற்றுப்புள்ளி, காற்புள்ளி) |
| | $R_2$ வாசித்தல் திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார். | $R_2$ • சொற்கள்<br>- ஒத்த கருத்துச் சொற்கள்<br>- எதிர்க் கருத்துச் சொற்கள்<br>- எதிர்ப்பாற் சொற்கள்<br>• வாக்கியங்கள் (சிறிய)<br>- நிறுத்தக் குறிகள் (முற்றுப்புள்ளி, காற்புள்ளி) |
| | $W_2$ எழுதுதல் திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார். | $W_2$ • சொற்கள்<br>- ஒத்த கருத்துச் சொற்கள்<br>- எதிர்க் கருத்துச் சொற்கள்<br>- எதிர்ப்பாற் சொற்கள்<br>• வாக்கியங்கள் (சிறிய)<br>- நிறுத்தக் குறிகள் (முற்றுப்புள்ளி, காற்புள்ளி) |

DRAFT

| கருப்பொருள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| $L_3$ $S_3$ | $L_3$ விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுப்பார். | $L_3$ • சிறுவர் பாடல்கள்<br>• சிறுவர் கதைகள்<br>• விரல் பொம்மை உரையாடல்கள்<br>• போலச் செய்தல் (தனி நடிப்பு)<br>• ஒலி, ஒளி இறுவட்டுக்கள் |
| | $S_3$ விருப்புடனும் இரசனையுடனும் இயல்பாகப் பேசுவார். | $S_3$ • சிறுவர் பாடல்கள்<br>• சிறுவர் கதைகள்<br>• போலச் செய்தல் (தனி நடிப்பு)<br>• ஒலி, ஒளி இறுவட்டுக்கள் |
| $R_3$ $W_3$ | $R_3$ விருப்புடனும் இரசனையுடனும் வாசிப்பார். | $R_3$ • சிறுவர் பாடல்கள்<br>• சிறுவர் கதைகள்<br>• விரல் பொம்மை உரையாடல்கள்<br>• போலச் செய்தல் (தனி நடிப்பு)<br>• ஒலி, ஒளி இறுவட்டுக்கள்<br>• சித்திரங்கள் |
| | $W_3$ விருப்புடனும் இரசனையுடனும் எழுதுவார்/வரைவார். | $W_3$ • சிறுவர் பாடல்கள் (சொற்கள்)<br>• சிறுவர் கதைகள் (சொற்கள்)<br>• விரல் பொம்மை உரையாடல்கள்<br>• போலச் செய்தல் (தனி நடிப்பு)<br>• ஒலி, ஒளி இறுவட்டுக்கள் (சொற்கள்)<br>• சித்திரங்கள் |
| $L_4$ $S_4$ $R_4$ $W_4$ | $L_4$ நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகச் செவிமடுப்பார். | $L_4$ • பாடசாலையுடன் தொடர்புடைய<br>- அறிவித்தல்கள்<br>- அறிவுறுத்தல்கள்<br>- கட்டளைகள்<br>- தகவல்கள்<br>- சுய விபரம் |
| | $S_4$ நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகப் பேசுவார். | $S_4$ • பாடசாலையுடன் தொடர்புடைய<br>- அறிவித்தல்கள்<br>- அறிவுறுத்தல்கள்<br>- கட்டளைகள்/ஏவல்கள்<br>- தகவல் பரிமாற்றம்<br>- சுய விபரம் |

DRAFT

| கருப்பொருள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | $R_4$ நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக வாசிப்பார். | $R_4$ ● பாடசாலையுடன் தொடர்புடைய<br>- அறிவித்தல்கள்<br>- அறிவுறுத்தல்கள்<br>- கட்டளைகள்<br>- தகவல்கள்<br>- சுய விபரம் |
| | $W_4$ நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக எழுதுவார். | $W_4$ ● பாடசாலையுடன் தொடர்புடைய<br>- அறிவித்தல்கள்<br>- அறிவுறுத்தல்கள்<br>- கட்டளைகள்<br>- தகவல்கள்<br>- சுய விபரம் |
| $L_5$ $S_5$ $R_5$ $W_5$ | $L_5$ சொற்களஞ்சிய விருத்திக்காகச் செவிமடுப்பார். | $L_5$ ● சிறிய கதைகள்<br>● மரபுச் சொற்கள்<br>● விடுகதைகள்<br>● குறியீடுகள்(விளக்கம்)<br>● சொல்வதெழுதுதல் |
| | $S_5$ சொற்களஞ்சிய விருத்திக்காகப் பேசுவார். | $S_5$ ● சிறிய கதைகள்<br>● மரபுச் சொற்கள்<br>● விடுகதைகள்<br>● குறியீடுகள்(விளக்கம்)<br>● சொல்வதெழுதுதல் |
| | $R_5$ சொற்களஞ்சியஷ விருத்திக்காக வாசிப்பார். | $R_5$ ● சிறிய கதைகள்<br>● மரபுச் சொற்கள்<br>● விடுகதைகள்<br>● குறியீடுகள்(விளக்கம்)<br>● சொல்வதெழுதுதல் |
| | $W_5$ சொற்களஞ்சிய விருத்திக்காக எழுதுவார். | $W_5$ ● கதையில் வரும் சொற்கள்<br>● மரபுச் சொற்கள்<br>● விடுகதைகள்<br>● குறியீடுகள் (விளக்கம்)<br>● சொல்வதெழுதல் (தெரிவுசெய்யப்பட்ட சொற்கள்) |

DRAFT

| கருப்பொருள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| $L_6$ $S_6$ | $L_6$ தொடர்பாடலுக்காகச் செவிமடுப்பார். | $L_6$ • விளையாட்டுக் கடை(மாதிரி)<br>• புத்தகசாலை (உரையாடல்)<br>• வானொலி / தொலைக்காட்சி (உரையாடல்) |
| | $S_6$ தொடர்பாடலுக்காகப் பேசுவார். | $S_6$ • விளையாட்டுக் கடை (மாதிரி)<br>• புத்தகசாலை (உரையாடல்)<br>• வானொலி / தொலைக்காட்சி (உரையாடல்) |
| $R_6$ $W_6$ | $R_6$ தொடர்பாடலுக்காக வாசிப்பார். | $R_6$ • பெயர்ப்பலகைகள்(பாடசாலை)<br>• நேர அட்டவணை (புகையிரத/ பேருந்து)<br>• ஒட்டிகள் (லேபல்கள்) |
| | $W_6$ தொடர்பாடலுக்காகச் எழுதுவார். | $W_6$ • பெயர்ப்பலகைகள் (பாடசாலை)<br>• நேர அட்டவணை (புகையிரத/ பேருந்து)<br>• ஒட்டிகள் (லேபல்கள்) |
| $L_7$ $S_7$ $R_7$ $W_7$ | $L_7$ மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார். | $L_7$ • காட்சிப் படங்கள்<br>• கதைப் படங்கள்<br>• சுயசரிதை<br>• கொன்றைவேந்தன் (தெரிவு செய்யப்பட்ட 10 அடிகள்)<br>• கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய)<br>• பண்டிகைகள் |
| | $S_7$ மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார். | $S_7$ • காட்சிப் படங்கள்<br>• கதைப் படங்கள்<br>• சுயசரிதை<br>• கொன்றைவேந்தன் (தெரிவு செய்யப்பட்ட 10 அடிகள்)<br>• கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய)<br>• பண்டிகைகள் |
| | $R_7$ மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார். | $R_7$ • காட்சிப் படங்கள்<br>• கதைப் படங்கள்<br>• சுயசரிதை<br>• கொன்றைவேந்தன் (தெரிவு செய்யப்பட்ட 10 அடிகள்)<br>• கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய)<br>• பண்டிகைகள் |

DRAFT

| கருப்பொருள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | $W_7$ மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார். | $W_7$ <br>● காட்சிப் படங்கள் (விபரித்தல) <br>● சுயசரிதை <br>● கொன்றைவேந்தன் (தெரிவு செய்யப்பட்ட) <br>● கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய) <br>● பண்டிகைகள் |
| $L_8$ $S_8$ $R_8$ $W_8$ | $L_8$ கற்றல் விருத்திக்காகச் செவிமடுப்பார். | $L_8$ <br>● வரைந்த சித்திரங்கள் <br>● பங்குபற்றிய சந்தர்ப்பம்/பார்த்த நிகழ்வுகள் <br>● சுற்றுலா |
| | $S_8$ கற்றல் விருத்திக்காகப் பேசுவார். | $S_8$ <br>● வரைந்த சித்திரங்கள் <br>● பங்குபற்றிய சந்தர்ப்பம்/பார்த்த நிகழ்வுகள் <br>● சுற்றுலா |
| | $R_8$ கற்றல் விருத்திக்காக வாசிப்பார். | $R_8$ <br>● வரைந்த சித்திரங்கள் <br>● பங்குபற்றிய சந்தர்ப்பம்/பார்த்த நிகழ்வுகள் <br>● சுற்றுலா |
| | $W_8$ கற்றல் விருத்திக்காக எழுதுவார். | $W_8$ <br>● வரைந்த சித்திரங்கள் <br>● பங்குபற்றிய சந்தர்ப்பம்/பார்த்த நிகழ்வுகள் <br>● சுற்றுலர் |
| $L_9$ $S_9$ $R_9$ $W_9$ | $L_9$ கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றிச் செவிமடுப்பார். | $L_9$ <br>● ஒலி, ஒளி இறுவட்டுக்கள் <br>– சிறுவர் பாடல்கள் <br>– சிறுவர் கதைகள் <br>– உரையாடல்கள் <br>– தகவல்கள் (பிராணிகள்) <br>● சிறுவர் இணையத்தளங்கள் <br>● சிறுவர் சஞ்சிகைகள் <br>● சிறுவர் நூல்கள் |
| | $S_9$ கிரகித்தவற்றை ஆக்கத்திறனுடனும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமுறவும் பேசுவார். | $S_9$ <br>● ஒலி, ஒளி இறுவட்டுக்கள் <br>– சிறுவர் பாடல்கள் <br>– சிறுவர் கதைகள் <br>– உரையாடல்கள் <br>– தகவல்கள் (பிராணிகள்) <br>● சிறுவர் இணையத்தளங்கள் <br>● சிறுவர் சஞ்சிகைகள் <br>● சிறுவர் நூல்கள் |

DRAFT

| கருப்பொருள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | $R_9$ கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றி வாசிப்பார். | $R_9$ <br>• ஒலி, ஒளி இறுவட்டுக்கள்<br>– சிறுவர் பாடல்கள்<br>– சிறுவர் கதைகள்<br>– உரையாடல்கள்<br>– தகவல்கள் (பிராணிகள்)<br>• சிறுவர் இணையத்தளங்கள்<br>• சிறுவர் சஞ்சிகைகள்<br>• சிறுவர் நூல்கள் |
| | $W_9$ கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் எழுதுவார். | $W_9$ <br>• ஒலி, ஒளி இறுவட்டுக்கள்<br>– சிறுவர் பாடல்கள்<br>– சிறுவர் கதைகள்<br>– உரையாடல்கள்<br>– தகவல்கள் (பிராணிகள்)<br>• சிறுவர் இணையத்தளங்கள்<br>• சிறுவர் சஞ்சிகைகள்<br>• சிறுவர் நூல்கள் |
| $L_{10}$ $S_{10}$ $R_{10}$ $W_{10}$ | $L_{10}$ நியம மொழிப் பிரயோகத்திற்காகச் செவிமடுப்பார். | $L_{10}$ <br>• காட்சிப் படங்கள்<br>• கதைப் படங்கள்<br>• படம் பார்த்து விவரித்தல்<br>• ஒலி, ஒளி இறுவட்டுகள்<br>• இணையத் தளங்கள<br>• மொழிப் பயிற்சிகள் |
| | $S_{10}$ நியம மொழிப் பிரயோகத்திற்காகப் பேசுவார். | $S_{10}$ <br>• காட்சிப் படங்கள்<br>• கதைப் படங்கள்<br>• படம் பார்த்து விவரித்தல்<br>• ஒலி, ஒளி இறுவட்டுகள்<br>• இணையத் தளங்கள<br>• மொழிப் பயிற்சிகள் |
| | $R_{10}$ நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் வாசிப்பார். | $R_{10}$ <br>• காட்சிப் படங்கள்<br>• கதைப் படங்கள்<br>• படம் பார்த்து விவரித்தல்<br>• ஒலி, ஒளி இறுவட்டுகள்<br>• இணையத் தளங்கள்<br>• மொழிப் பயிற்சிகள் |
| | $W_{10}$ நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் எழுதுவார். | $W_{10}$ <br>• காட்சிப் படங்கள்<br>• கதைப் படங்கள்<br>• படம் பார்த்து விவரித்தல்<br>• ஒலி, ஒளி இறுவட்டுகள்<br>• இணையத் தளங்கள்<br>• மொழிப் பயிற்சிகள் |

DRAFT

## தாய்மொழி தமிழ்
## ஆண்டுத் திட்டம்

| முதலாம் தவணை | | |
|---|---|---|
| | தேர்ச்சிகள் | உத்தேச காலம் |
| 01. | $L_1$ $S_1$ <br> $R_1$ $W_1$ | |
| 02. | $L_2$ $S_2$ $R_2$ $W_2$ | |
| 03. | $L_3$ $S_3$ <br> $R_3$ $W_3$ | |

| | இரண்டாம் தவணை | |
|---|---|---|
| | தேர்ச்சிகள் | உத்தேச காலம் |
| 04. | $L_4$ $S_4$ $R_4$ $W_4$ | |
| 05. | $L_5$ $S_5$ $R_5$ $W_5$ | |
| 06. | $L_6$ $S_6$ <br> $R_6$ $W_6$ | |
| 07. | $L_7$ $S_7$ $R_7$ $W_7$ | |

| மூன்றாம் தவணை | | |
|---|---|---|
| | தேர்ச்சிகள் | உத்தேச காலம் |
| 08. | $L_8$ $S_8$ $R_8$ $W_8$ | |
| 09. | $L_9$ $S_9$ $R_9$ $W_9$ | |
| 10. | $L_{10}$ $S_{10}$ $R_{10}$ $W_{10}$ | |

DRAFT

# கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல்

DRAFT

# 1

**தேர்ச்சிகள் :**

$L_1$ - கிரகித்துத் துலங்குவதற்காகச் செவிமடுப்பார்.

$S_1$ - விளக்கத்துடனும் தெளிவான உச்சரிப்புடனும் கருத்துப் புலப்படப் பேசுவார்.

**உள்ளடக்கம் :**

- சுயமாகப் பேசுதல்
- பேசுவதைச் செவிமடுத்தல்
- இரு படங்களுக்கிடையே வேறுபாடுகளை இனங்காணல்
- படம் பார்த்துப் பேசுதல்
- காட்சிப்படம் பார்த்துப் பேசுதல்
- சுயமாகக் கதை சொல்லல்
- கதை சொல்வதைச் செவிமடுத்தல்
- கதைப் படங்களைப் பார்த்துக் கதை சொல்வதைச் செவிமடுத்தல்
- கதைப் படங்களைப் பார்த்துக் கதை கூறுதல்
- உயிர் மெய் எழுத்துக்கள் (ஒலி வேறுபாடு)
- குறில் நெடில் சொற்கள்
- ஒருமை பன்மைச் சொற்கள்

**கற்றற் பேறுகள் :**

- சுயமாகப் பயமின்றிப் பேசுவதற்கு முன்வருவார்.
- இரு படங்களுக்கிடையே வேறுபாடுகளை நுணுக்கமாக இனங்காண்பார்.
- படங்களைப் பார்த்துப் பேசுவதைச் செவிமடுப்பதுடன் தானும் படம் பார்த்துப் பேசுவார்.
- காட்சிப் படங்களைப் பார்த்துச் சரியான உச்சரிப்புடன் வெளிப்படுத்துவார்.
- தாம் செவிமடுத்த கதைகளைப் புரிந்து கொண்டு முன்வைப்பார்.
- கதைப் படங்களைப் பார்த்து தமது பாணியில் கதைகளை முன்வைப்பார்.
- உயிர் மெய் எழுத்துக்களைச் சரியாக உச்சரிப்பார்.
- ஒலி வேறுபாடுகளைப் புரிந்து கொண்டு தெளிவுற வெளிப்படுத்துவார்.
- குறில் நெடில் சொற்களைச் சரியாக இனங்கண்டு கூறுவார்.
- ஒருமை பன்மைச் சொற்களை இனங்கண்டு உரிய முறையில் வெளிப்படுத்துவார்.

**வளங்கள் :**

- பட அட்டைகள், பந்துகள், காட்சிப்பட அட்டைகள், கதைப்பட அட்டைகள், கத்தரிக்கோல், பைண்டகர்ம், இரண்டு பக்கமும் ஒட்டக்கூடிய செலோரேப், ஒட்டும் பலகை, செருகல் அட்டைப் பலகை, பெட்டிகள், நிறப் பென்சில்கள், நிறப் பேனைகள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு: 2**

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- குழுக்களிடையே ஆசிரியரும் சுயமாக உரையாடி அவர்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து கொள்ளுங்கள்.
- பாடுபவர்கள், கதை சொல்பவர்கள், ஆடுபவர்கள், சித்திரம் வரைபவர்கள், விளையாட்டில் ஆர்வம் உள்ளவர்கள் ஆகியோரை இனங்காணுங்கள்.

DRAFT


- மாணவர்களுடன் சேர்ந்து ஆசிரியரும் பாடி ஆடி அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.
- ஆசிரியர் மீது உள்ள பயத்தைப் போக்கி நம்பிக்கையை ஏற்படுத்துங்கள்.
- அதன் பின்னர் மாணவர்கள் தமது குழுக்களிடையே சுயமாகப் பேசுவதற்குப் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை தூரத்தில் இருந்து அவதானியுங்கள்.

**செயற்பாடு: 2**

- கிழே தரப்பட்டுள்ள படங்களைப் பிரதியெடுத்து எல்லா மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- இரண்டு படங்களுக்கிடையேயும் ஏழு வித்தியாசங்கள் உள்ளன. அவற்றுள் மூன்று அல்லது நான்கு வித்தியாசங்களையாவது கண்டுபிடித்துக் கூற ஆர்வமூட்டுங்கள்.

**எடுத்துக்காட்டு:**


**இரண்டு படங்களுக்கிடையேயும் உள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடிப்போம்.**



**செயற்பாடு: 3**

- மாணவர்களின் வயது மட்டத்திற்குப் பொருத்தமான ஐந்து படங்களைத் தெரிவு செய்யுங்கள்
- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் ஐந்து படஅட்டைகள் கொண்ட பெட்டிகளை வழங்குங்கள்.
- அவர்கள் குழுவாக படஅட்டைகளின் பெயர்களை சரியாக உச்சரித்துக் கூற வழிப் படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**




- அதன் பின்னர் பொருட்களின் படங்களை ஒட்டுப் பலகையில் ஒட்டுங்கள்.

DRAFT

- படங்களின் பெயர்களை ஒழுங்கில் மாணவர்கள் கூற வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் ஒரு படத்தை ஒட்டுப் பலகையில் இருந்த நீக்குங்கள். நீக்கிய படத்தின் பெயரைக் கூற வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*





- இதுபோன்று வேறு வேறு பட அட்டைகளை நீக்குங்கள்.
- நீக்கிய பட அட்டைகளின் பெயர்களைக் கூற வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் எல்லா பட அட்டைகளையும் நீக்குங்கள்.
- நீக்கிய பின்னர் எந்த ஒழுங்கில் பட அட்டைகள் இருந்தனவோ அதே ஒழுங்கில் நினைவுபடுத்தி பட அட்டைகளின் பெயர்களைக் கூற ஊக்கப்படுத்துங்கள்.
- இச் செயற்பாட்டை மாற்றி மாற்றி வழங்குவதற்கான சுதந்திரம் ஆசிரியருக்கு உண்டு என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.

செயற்பாடு 4

- கீழே தரப்பட்டள்ள படத்தை காட்சிப்படுத்துங்கள்.
- அப்படத்தை A4 தாளில் பிரதி எடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள்.
- அதன் பின்னர் மாணவர்களை ஐந்து பேர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- படத்தில் உள்ள பிராணிகளைக் கண்டுபிடித்து அவற்றின் பெயர்களைச் சரியாகக் கூற வழிப்படுத்துங்கள்.

எடுத்துக்காட்டு:



© பதிப்புரிமையுடையது

DRAFT

செயற்பாடு: 5:

- மாணவர்கள் தமக்கிடையே கதைகளைக் கூறுவதற்காக மாணவர்களை நால்வர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- அவர்கள் தமக்கிடையே சுயமாகக் கதை கூறுவதற்கு ஊக்கப்படுத்துங்கள்.
- கதை கூற ஆர்வமுள்ள மாணவர்களை வகுப்பின் முன் அழைத்துக் கதை கூற ஊக்கப்படுத்துங்கள்.

செயற்பாடு: 6

- மாணவர்களை பாடசாலைக்கு வெளியிலோ அல்லது அமைதியான இடத்திற்கோ அல்லது மர நிழல் உள்ள இரம்மியமான இடத்திற்கோ அழைத்துச் சென்று மாணவர்களை வட்டமாக அமரச் செய்யுங்கள். மாணவர்கள் விரும்பக்கூடிய சிறிய கதை ஒன்றைச் சொல்லுங்கள்.

**கதை - அன்பு**

**கண்ணன் இரண்டாம் வகுப்பில் படிக்கிறான். அவன் வீடு கடற்கரை வீதியில் உள்ளது. அவனது வீட்டில் அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, தம்பி, தங்கை, தாத்தா, பாட்டி ஆகியோர் உள்ளனர். அவன் எல்லோரிடமும் அன்பாக இருப்பான்.**

**ஒருநாள் அவன் பாடசாலை முடிந்து வீட்டுக்கு வரும்போது மழை பெய்து கொண்டிருந்தது. நாய்க்குட்டி ஒன்று மழையில் நனைந்து நடுங்கிக் கொண்டிருந்தது. அதனால் நடக்க முடியவில்லை. அவன் அருகில் உள்ள கடை ஒன்றில் சிறிய பெட்டி ஒன்றை வாங்கினான். அப்பெட்டிக்குள் குளிரால் நடுங்கும் நாயை வைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றான். அவனது அக்காவின் உதவியுடன் நாயைக் காப்பாற்றினான்.**

**அந்த நாய்க்குட்டி அழகாக இருந்தது. அதனை வீட்டிலேயே வளர்த்தான். அவன் எங்கு சென்றாலும் வாலை ஆட்டிக் கொண்டு அவன் பின்னாலேயே செல்லும். அந்த நாய் அவன் மீது மிகுந்த அன்பு வைத்திருந்தது. கண்ணனும் நாய்க்குட்டியும் இணைபிரியாத நண்பர்களாயினர்.**

- இக்கதையை உணர்வுபூர்வமாகக் கூறுங்கள்.
- கதையுடன் தொடர்புபட்ட வினாக்களை வினவுங்கள்.
- அவர்கள் விடையளிக்க உற்சாகமூட்டுங்கள்.

எடுத்துக்காட்டு:

1. கண்ணன் எத்தனையாம் வகுப்பில் படிக்கிறான்?
2. அவனது வீடு எங்குள்ளது?

*குறிப்பு:* இக்கதை வாசிப்பதற்குரியதல்ல. ஆசிரியர் கதை சொல்ல மாணவர்கள் செவிமடுத்து மீண்டும் கதையைக் கூறவேண்டும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.

செயற்பாடு: 7


- கீழே தரப்பட்டுள்ள கதைப்படங்களை மாணவ குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப பிரதி எடுத்து அட்டைகளில் ஒட்டிக் கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் கதைப்படங்கள் கொண்ட அட்டைகளை வழங்குங்கள்.
- குழுக்களிடையே படங்களைப் பார்த்துக் கதை கூறுவதற்கு ஆர்வமூட்டுங்கள்.

DRAFT

### படக்கதை

## ஆமையும் முயலும்

**கதைக்கரு: வி.என்.எஸ்.உதயசந்திரன் சித்திரம்: டி.டி.குமாரி**



© பதிப்புரிமையுடையது

***குறிப்பு:*** கதைப்படங்களைப் பார்த்துக் கதை கூறும்போது இறந்த காலத்தில் கூறவேண்டும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.

**செயற்பாடு: 8**

- மாணவர்களுக்கு உயிர் மெய் எழுத்துக்களில் முக்கியமான எழுத்துக்களின் ஒலிகளை அறிமுகம் செய்யுங்கள்.
- தரம் 2 மாணவர்களுக்கு அவசியமான உயிர்மெய் எழுத்துக்களை பெரிய எழுத்துக்களில் படிப்படியாகக் காட்சிப்படுத்தி ஒலிகளை அறிமுகம் செய்யுங்கள்.

**f fh fp fP F $ nf Nf if nfh Nfh**

**r rh rp rP R # nr Nr ir nrh Nrh**

**l lhb B L ^ nl Nl il nlh Nlh**

**z zh zp zP Z Z} nz Nz iz**

**j jh jp jP J J} njNj ij njhNjh**

e eh ep eP E E} ne Ne

g gh gp gP G g+ ng Ng ig ngh Ngh

k kh kp kP K % nk Nk ik nkh Nkh

a ah ap aP A a+ na

u uh up uP U & nu Nu iu

y yh yp yP Y Y} ny Ny iy

t th tp tP T t+ nt Nt it

o oh op oP O * no No io

s sh sp sP S @ ns Ns is

w wh wp wP W W} nw Nw iw nwh Nwh

d dh dp dP D D} nd Nd id

- இவ்வொலிகளை மாணவர்கள் நன்கு பயிற்சி பெற வாய்ப்பு வழங்குங்கள்.
- மாணவர்களை வகுப்பிற்கு வெளியே அழைத்துச் சென்று உரத்து ஒலிக்க ஆர்வ மூட்டுங்கள்.
- ஒரேநாளில் எல்லா எழுத்துக்களையும் உச்சரிக்க வழிப்படுத்த வேண்டாம். படிப்படியாக பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள்.

**குறிப்பு:** ஒவ்வொரு எழுத்தாக ஒலித்து பிறகு அனைத்தையும் வேகமாக ஒலித்தால் அந்தச் சொற்களுக்குரிய ஒலிப்பு முறை தானாக வந்துவிடும். முன்பு இரண்டு எழுத்துக்களை இணைத்துப் படித்துப் பழகியது நினைவிருக்கிறதா? அதைப் போலவே இணைத்து ஒலிக்கச் செய்யுங்கள்.

***எடுத்துக்காட்டு:***

| | | | |
|---|---|---|---|
| க கா | கி கீ | கு கூ | கெ கே |

**செயற்பாடு: 9**

- உயிர்மெய் எழுத்துக்கள் சிலவற்றைத் தெரிவு செய்து அவ் எழுத்துக்களில் ஆரம்பமாகும் சொற்களைக் கூறச் செய்யுங்கள்.

**எடுத்துக்காட்டு:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | - | காடு | கி | - | கிளி |
| சா | - | சாடி | சி | - | சிலை |
| தா | - | தா | தி | - | திகதி |
| நா | - | நாடு | நி | - | நிலம் |
| பா | - | பாட்டி | பி | - | பிள்ளை |

DRAFT

| | | | |
|---|---|---|---|
| **மா - மாடு** | | **மி -** | **மிளகு** |
| **வா - வானம்** | | **வி -** | **விளக்கு** |

- மாணவர்கள் சரியாக உச்சரித்துக் கூறுவதை அவதானித்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**செயற்பாடு: 10**

- மாணவர்களுக்கு இலகுவான குறில், நெடில் சொற்களைப் படங்களினூடாக அறிமுகம் செய்யுங்கள். (குறில் சொற்கள் குறுகி ஒலிக்கும் என்பதனையும், நெடில் சொற்கள் நீண்டு ஒலிக்கும் என்பதனையும் நினைவிற் கொள்ளுங்கள்.)
- மாணவர்களுக்கு முதலில் ஐந்து குறில், நெடில் சொற்களை படங்களினூடாக அறிமுகம் செய்யுங்கள்.

**எடுத்துக்காட்டு:**


| குறில் | | நெடில் |
|---|---|---|
| கல் | - | கால் |
| பனை | - | பானை |
| மலை | - | மாலை |
| குடை | - | கூடை |
| வனம் | - | வானம் |


- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் குறில் நெடில் சொற்களுக்கான பட அட்டைகள் கொண்ட பெட்டியையும் வழங்குங்கள்.
- குழுவில் உள்ள ஒருவர் குறில் சொல் பட அட்டையையும் அதற்குப் பொருத்தமான நெடில் சொல் பட அட்டையையும் பெட்டிகளில் இருந்து எடுத்து குழுவில் வாசித்துக் காட்ட வேண்டும். மீண்டும் மீண்டும் பெட்டிகளில் இட்டு குறில் நெடில் சொறகளுக்கான பட அட்டைகளையும் தெரிவு செய்ய ஆர்வமூட்டுங்கள்.
- பின்னர் குழுக்களிடையே குறில் நெடில் பட அட்டைப் போட்டிகளை நடத்துங்கள். ஒரு குழுவில் உள்ள ஒருவர் குறில் பட அட்டை எடுத்து வாசித்தால், மற்றைய குழுவில் உள்ளவர் உடனே தமது குழுவில் உள்ள பெட்டியில் இருந்து நெடில் பட அட்டையை எடுத்து வாசித்துக் காட்டவேண்டும். இவ்வாறு எல்லாக் குழுக்களிடையேயும் போட்டியை நடாத்துங்கள்.

**செயற்பாடு: 11**


- அன்றாடம் பயன்படுத்தும் ஒருமை பன்மைச் சொற்களை மாணவர்களுக்கு முதலில் படங்கள் ஊடாக அறிமுகம் செய்யுங்கள். மாணவ குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப ஒருமை, பன்மை $(5 + 5)$ பட அட்டைகளைத் தயாரித்து இரண்டு பெட்டிகளில் இட்டு குழுக்களுக்கு வழங்குங்கள்.

**எடுத்துக்காட்டு:**





DRAFT



- ஒவ்வொரு குழுவிலும் ஐவர் இடம்பெறுதல் வேண்டும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.
- மாணவர்கள் ஒருமைப் படங்களுக்கு எதிரே பன்மைப் படங்களை வைத்து உச்சரித்துக் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் ஆசிரியர் வேறாக வைத்திருக்கும் ஒருமைப் பன்மைப் படங்களைக் காட்டி ஒருமை பன்மைச் சொற்களைக் கூற வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் எல்லோரையும் அழைத்து ஆசிரியரிடம் உள்ள பெட்டிகளில் இருந்து ஒருமை பன்மைப் படங்களைத் தெரிவு செய்து சரியாகக் கூற ஆர்வமூட்டுங்கள்.

**குறிப்பு:** இதுபோன்று வேறு பயிற்சிகளையும் வழங்குங்கள்.

**கணிப்பீடு:**

- சுயமாகப் பேச முன்வருதல்
- இரு படங்களுக்கிடையேயான வேறுபாடுகளை இனங்காணல்
- படம் பார்த்துப் பேசுதல்
- காட்சிப் படங்களைப் பார்த்துக் கூறுதல்
- கதைப் படங்களைப் பார்த்து கதை சொல்லல்
- சுயமாக கதை சொல்லல்
- உயிர் மெய் எழுத்துக்களை சரியாக உச்சரித்தல்
- குறில் நெடில் சொற்களை இனங்கண்டு கூறுதல்
- ஒருமை பன்மைச் சொற்களைக் கூறுதல்
- வினாக்களுக்கு விடையளித்தல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

DRAFT

**தேர்ச்சிகள்:**

**$R_1$** - வாசிப்பு பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.

**$W_1$** - எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவார்.

**உள்ளடக்கம்:**

- சரியான கொண்ணிலையில் அமரும் பயிற்சி
- சரியாகப் பென்சில் பிடிக்கும் பயிற்சி
- எழுதுவதற்கான நுட்பப் பயிற்சிகள்
    - வரைதல்
    - நிறந்தீட்டுதல்
    - அச்சுப் பதித்தல்
- உயிர் மெய் எழுத்துக்களை எழுதி வாசித்தல்
- அகர வரிசைப்படி சொற்களை எழுதி வாசித்தல்
- நெடுங்கணக்கு வரிசைப்படி சொற்களை எழுதுதல்
- படங்களைப் பார்த்து சொற்களை எழுதி வாசித்தல்
- காட்சிப் படங்களைப் பார்த்து சொற்களை எழுதுதல்
- கதைப் படங்களைப் பார்த்து சொற்களை எழுதுதல்
- கதைகளில் வரும் சொற்களை எழுதுதல்
- குறில் நெடில் சொற்களை எழுதுதல்
- ஒருமை பன்மைச் சொற்களை எழுதுதல்

**கற்றற் பேறுகள்:**

- சரியான கொண்ணிலையில் அமர்ந்து முறைப்படி பென்சிலைப் பிடித்து எழுதுவார்.
- எழுதுவதற்கான முன்ஆயத்தப் பயிற்சிகளை நிறைவு செய்வார்.
- உயிர்மெய் எழுத்துக்களை இனங்கண்டு ஒலி வேறுபாடுகளை அறிந்து எழுதுவார்.
- அகர வரிசைப்படி எழுத்துக்களையும் சொற்களையும் எழுதி வாசிக்க முயல்வார்.
- நெடுங்கணக்கு வரிசைப்படி சொற்களை எழுதி வாசித்து பரிச்சியம் பெறுவார்.
- படங்களைப் பார்த்துச் சொற்களைப் பிழையின்றி எழுதுவார்.
- காட்சிப் படங்களைப் பார்த்து சொற்களை பிழையின்றி எழுதி வாசிப்பார்.
- கதைப் படங்களைப் பார்த்து சொற்களை பிழையின்றி எழுதி வாசிப்பார்.
- குறில் நெடில் சொற்களை இனங்கண்டு சரியாக முன்வைப்பார்.
- ஒருமை பன்மைச் சொற்களை சரியான முறையில் பிரயோகிப்பார்.

**வளங்கள்:**

- படங்கள், பட அட்டைகள், ஒருமை பன்மைப் பட அட்டைகள், கதைப்பட அட்டைகள், நான்கு றூள் கொப்பி, சொல் அட்டைகள், சிறிய பெட்டிகள், சோக் கலர்கள், பப்ரிக் கலர், நிறப் பேப்பர்கள், கத்தரிக்கோல், பைண்டகர்ம்.


DRAFT

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு: 1**

- மாணவர்களுக்கு தரம் ஒன்றில் அமர்வதற்கான பயிற்சியை வழங்கியதைப் போன்று பயிற்சியை வழங்குங்கள்.
- சரியான கொண்ணிலையில் அமராத மாணவர்களை அழைத்துப் பயிற்சிகளை வழங்குங்கள்.
- ஏனைய மாணவர்கள் அவதானித்துச் செயற்பட வழிகாட்டுங்கள்.
- எல்லா மாணவர்களும் அமரும் முறை புத்தகப்பையை அமரும் கதிரையில் தொங்க விடுதல் போன்றவற்றை அவதானியுங்கள்.
- புத்தகப்பையை உரிய இடத்தில் வைக்க வேண்டும் என அறிவுறுத்துங்கள்.
- புத்தகப்பையை வைப்பதற்கு ஓர் இடத்தை தெரிவு செய்து புத்தகப்பைகளை வைப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.


***எடுத்துக்காட்டு:***




**செயற்பாடு: 2**

- மாணவர்கள் சரியான கொண்ணிலையில் அமருவதனை உறுதி செய்த பின்னர் பென்சில் பிடிக்கும் முறையை அவதானியுங்கள்.
- தவறாக பென்சில் பிடிக்கும் மாணவர்களையும், தலையை கீழ்நோக்கி சாய்த்து எழுதும் மாணவர்களையும் இனங்கண்டு பயிற்சிகளை வழங்குங்கள்.
- பென்சிலை நடுவிரல், ஆட்காட்டி விரல், பெருவிரல் ஆகிய மூன்று விரல்களாலும் பிடிக்கவேண்டும் என்பதனை வலியுறுத்திக் கூறுங்கள்.
- பெற்றோருக்கும் பென்சில் பிடிக்கும் முறை தொடர்பாக விளக்கமளியுங்கள்.

**எடுத்துக்காட்டு:**





**செயற்பாடு: 3**

- மாணவர்கள் எழுதும்போது எவ்வாறு அப்பியாசக் கொப்பியை வைத்திருக்கிறார்கள் என அவதானியுங்கள்.
- பிழையான முறையில் அப்பியாசக் கொப்பியை வைத்து எழுதும் மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்குங்கள்.

DRAFT

- இப்பயிற்சியின்போது ஏனைய மாணவர்களை அவதானிக்கச் செய்யுங்கள்.


*எடுத்துக்காட்டு:*



**செயற்பாடு: 4**

- மாணவர்கள் சரியான முறையில் எழுதும் பயிற்சியைப் பெறுவதற்காகப் பின்வரும் நுட்ப முறைகளை வகுப்பறையில் பயன்படுத்துங்கள்.
- ஒரு சுட்டுவிரலைப் பயன்படுத்தி கலர் மூலம் வரைய வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*





- உருவங்களை வரைந்து பசை பூசி வித்துக்களால் அலங்கரிக்க மாணவர்களுக்கு பயிற்சி வழங்குங்கள். கடுகு, வெந்தயம், சீரகம், கொத்தமல்லி போன்ற வித்துக்களைப் பயன்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**



- A4 நிறத்தாள்கள் / பேப்பர்த் தட்டு போன்றவற்றைக் கொண்டு ஆக்கங்களை செய்வதன் மூலம் நுண்தசை நார்களுக்கான பயிற்சியை வழங்குங்கள்.

**எடுத்துக்காட்டு**







DRAFT

- கோட்டுருவப் படங்களுக்கு நிறம் தீட்டும் பயிற்சியை வழங்குங்கள்.
- எல்லைகளுக்குள் நிறந்தீட்ட மாணவர்களுக்கு பயிற்சி வழங்குங்கள்.

**எடுத்துக்காட்டு:**



- காட்போட் அட்டைகளில் உருவங்கள், பிராணிகள், பழங்கள் போன்றவற்றை அச்சுக்களாக வெட்டி அச்சுப்பதிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.



- அச்சுப் பதிக்கும்போது பென்சில் கலர்/ சோக் கலர்களைப் பயன்படுத்த அறிவுறுத்துங்கள்.



செயற்பாடு: 5

- **தரம் இரண்டில் கற்கும் மாணவர்கள் இரண்டாம் தவணை நிறைவு பெறும் வரை நான்கு றூள் கொப்பியையே பயன்படுத்த வேண்டும்** என்பதனை நினைவிற் கொள்ளுங்கள். பெற்றோருக்கும் வலியுறுத்திக் கூறுங்கள்.
- மாணவர்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட உயிர் மெய் எழுத்துக்களை நெடுங்கணக்கு வரிசைப்படி எழுத வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு: 1*

க கா கி கீ கு கூ கெ கே கை

*எடுத்துக்காட்டு: 2*

ச சா சி சீ சு சூ செ சே சை

செயற்பாடு: 6

- மாணவர்கள் அகர வரிசைப்படி சொற்களை நான்கு றூள் கொப்பியில் எழுதுவதற்கு ஊக்கப்படுத்துங்கள்.
- அகர வரிசைப்படி சொற்களை எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.
- அவற்றைப் பார்த்து சொற்களை எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**

அம்மா ஆடு இலை ஈட்டி உரல் ஊதி

எருது ஏணி ஐந்து ஒன்று

ஓலை ஔவை

செயற்பாடு: 7

- நெடுங்கணக்கு வரிசைப்படி சொற்களை எழுதுவதற்கு மாணவர்களுக்கு உதவுங்கள்.
- நெடுங்கணக்கு வரிசைப்படி சொற்களை எழுதிக் காட்சிப்படுத்தி எல்லா மாணவர் களையும் வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- நெடுங்கணக்கு வரிசைப்படி நான்கு றூள் தாளில் எழுதி, A4 தாளில் பிரதி எடுத்து அட்டைகளில் ஒட்டி மாணவ குழுக்களுக்கு வழங்குங்கள். (ஒரு குழுவில் ஐவர்)
- அவர்கள் அவ் ஒழுங்குமுறையைப் பின்பற்றி எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*

படம் பாடம் பிரம்பு பீர்க்கு புகை

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| | | | | | | | | | | | | |


| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |
| | | | | | | | | | | | | |

**செயற்பாடு: 8**

- மாணவர்களுக்கு ஏற்கனவே கற்ற படங்களை மீண்டும் பயன்படுத்துங்கள். (செவிமடுத்தலுக்கும் பேசுதலுக்கும்)
- ஒவ்வொரு குழுவுக்கும் ஐந்து பறவைகள் / காய்கறிகள் / பழங்கள் / பிராணிகள் ஆகியவற்றின் படங்களைக் கொடுத்து அவற்றின் பெயர்களை எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***

**பறவைகள்:**



மயில்



செண்பகம்



மைனா




குயில்




கிளி


**பழங்கள்:**




மாம்பழம்




வாழைப்பழம்



தோடம்பழம்




திராட்சைப்பழம்



பப்பாசிப்பழம்


**காய்கறிகள்:**

| | | | | |
|---|---|---|---|---|
|  |  |  |  |  |
| கத்தரிக்காய் | பாகற்காய் | வெண்டிக்காய் | பூசணிக்காய் | முருங்கைக்காய் |

**செயற்பாடு: 9**

- ஏற்கனவே கற்ற காட்சிப் படமொன்றைக் காட்சிப்படுத்துங்கள்.
- அப்படத்தில் உள்ள பிராணிகளை மாணவர்கள் இனங்காண வழிப்படுத்துங்கள்.
- அக்காட்சிப் படத்தை A4 தாளில் குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரதி எடுத்து அட்டையில் ஒட்டி வழங்குங்கள்.
- அப்படத்திலுள்ள பிராணிகளின் பெயர்களை மாணவர்கள் எழுத வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**



யானை, நரி, சிங்கம்,

ஆமை, முயல், ஆந்தை,

அணில், கிளி, குரங்கு,


மான், ஒட்டகச்சிவிங்கி

© பதிப்புரிமையுடையது

**செயற்பாடு: 10**

- மாணவர்கள் ஏற்கனவே கற்ற கதைப்படங்களைப் பார்த்து சொற்களை எழுத வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி, குழுக்களுக்கு A4 தாளில் படங்களை பிரதி எடுத்து வழங்குங்கள்.
- அவற்றைப் பார்த்து சொற்கள் எழுத ஊக்கப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**



© பதிப்புரிமையுடையது

DRAFT

செயற்பாடு: 11

**கதை - அன்பு**

கண்ணன் இரண்டாம் வகுப்பில் படிக்கிறான். அவன் வீடு கடற்கரை வீதியில் உள்ளது. அவனது வீட்டில் அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, தம்பி, தங்கை, தாத்தா, பாட்டி ஆகியோர் உள்ளனர். அவன் எல்லோரிடமும் அன்பாக இருப்பான்.

ஒருநாள் அவன் பாடசாலை முடிந்து வீட்டுக்கு வரும்போது மழை பெய்து கொண்டிருந்தது. நாய்க்குட்டி ஒன்று மழையில் நனைந்து நடுங்கிக் கொண்டிருந்தது. அதனால் நடக்க முடியவில்லை. அவன் அருகில் உள்ள கடை ஒன்றில் சிறிய பெட்டி ஒன்றை வாங்கினான். அப்பெட்டிக்குள் குளிரால் நடுங்கும் நாயை வைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றான். அவனது அக்காவின் உதவியுடன் நாயைக் காப்பாற்றினான்.

அந்த நாய்க்குட்டி அழகாக இருந்தது. அதனை வீட்டிலேயே வளர்த்தான். அவன் எங்கு சென்றாலும் வாலை ஆட்டிக் கொண்டு அவன் பின்னாலேயே செல்லும். அந்த நாய் அவன் மீது மிகுந்த அன்பு வைத்திருந்தது. கண்ணனும் நாய்க்குட்டியும் இணைபிரியாத நண்பர்களாயினர்.

- ஏற்கனவே கற்ற அன்பு என்ற கதையை பெரிய எழுத்துக்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.
- அக்கதையை வாசித்துக் காட்டுங்கள்.
- அக்கதையில் வரும் முக்கிய சொற்களைக் கரும்பலகையில் பட்டியலிடுங்கள்.

**எடுத்துக்காட்டு:**

| | | | |
|---|---|---|---|
| வகுப்பு | கடற்கரை | பாடசாலை | கடை |
| மழை | நாய்க்குட்டி | பெட்டி | வீடு |
| குளிர் | அழகு | அன்பு | நண்பர்கள் |

- இச்சொற்களைப் பார்த்து எழுத நான்கு றூள் கொப்பியில் மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- அவற்றை எழுதிய பின்னர் வாசித்துக் காட்ட ஆர்வமூட்டுங்கள்.

செயற்பாடு: 12

- மாணவர்களுக்கு ஏற்கனவே கற்ற குறில் நெடில் சொற்களை பெரிய எழுத்துக்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.
- அவற்றை மாணவர்கள் வாசிக்க வழிப்படுத்துங்கள்

**எடுத்துக்காட்டு:**

| **குறில்** | | **நெடில்** |
|---|---|---|
| கல் | - | கால் |
| பனை | - | பானை |
| மலை | - | மாலை |
| குடை | - | கூடை |
| வனம் | - | வானம் |

- குறில் நெடில் சொற்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள்.

DRAFT

- அதன் பின்னர் தொடர்புபடுத்தும் பயிற்சியை வழங்குங்கள். (A4 தாளில் பிரதி எடுத்து வழங்குங்கள்.)


**எடுத்துக்காட்டு:**

| (அ) | (ஆ) |
|---|---|
| கல் | பாடம் |
| பனை | பானை |
| மலை | கால் |
| குடை | மாலை |
| வனம் | கூடை |


**செயற்பாடு: 13**

- செவிமடுத்தலுக்காகவும் பேசுதலுக்காகவும் ஏற்கனவே பயன்படுத்திய ஒருமை - பன்மை பட அட்டைகள் கொண்ட பெட்டிகளை மாணவ குழுக்களுக்கு வழங்குங்கள்.
- அவர்கள் இரண்டு பெட்டிகளிலும் இருந்து ஒருமை பன்மைப் படங்களைத் தெரிந்தெடுத்து ஒருமை, பன்மைச் சொற்களை எழுதி, வாசிக்க வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*



| ஒருமை | | பன்மை |
|---|---|---|
| முயல் | - | முயல்கள் |
| வண்டு | - | வண்டுகள் |
| இலை | - | இலைகள் |
| பூனை | - | பூனைகள் |
| தொப்பி | - | தொப்பிகள் |



(இதுபோன்று வேறு செயற்பாடுகளையும் மாணவர்களுக்கு வழங்கும் சுதந்திரம் ஆசிரியருக்குண்டு.)

**கணிப்பீடு:**

- சரியான கொண்ணிலையில் அமருதல்
- சரியாகப் பென்சில் பிடித்தல்
- எழுதுவதற்கான நுட்பங்களை அனுசரித்து எழுதுதல்
- உயிர் மெய் எழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளை வாசித்து எழுதுதல்
- அகர வரிசைப்படி சொற்களை எழுதி வாசித்தல்
- நெடுங்கணக்கு வரிசைப்படி சொற்களை எழுதி வாசித்தல்
- படங்களைப் பார்த்துச் சொற்களை எழுதுதல்
- காட்சிப் படங்களைப் பார்த்துச் சொற்களை எழுதுதல்
- கதைப் படங்களில் வரும் சொற்களை எழுதுதல்
- கதைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களை எழுதுதல்
- குறில் நெடில் சொற்களை எழுதுதல்
- ஒருமை பன்மைச் சொற்களை எழுதுதல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

DRAFT

## 2

**தேர்ச்சிகள் :**

$L_2$ – செவிமடுத்தல் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.

$S_2$ – பேசுதல் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார்.

$R_2$ – வாசித்தல் திறனைச் செவிமடுப்பதற்காக வாசிப்பார்.

$W_2$ – எழுதுதல் திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- ஒத்தகருத்துச் சொற்கள்
- எதிர்க்கருத்துச் சொற்கள்
- எதிர்ப்பாற் சொற்கள் (ஆண்பால், பெண்பால்)
- சிறிய வாக்கியங்கள் (முற்றுப்புள்ளி, காற்புள்ளி)

**கற்றற் பேறுகள் :**

- ஒத்தகருத்துச் சொற்கள், எதிர்க்கருத்துச் சொற்கள், எதிர்ப்பாற் சொற்கள் ஆகியவற்றை இனங்கண்டு கொள்வார். அவற்றை உரிய வகையில் பயன்படுத்துவார்.
- வாக்கியங்களில் நிறுத்தக்குறிகளை (முற்றுப்புள்ளி, காற்புள்ளி) இடுவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து பொருத்தமுறப் பயன்படுத்துவார்.

**வளங்கள் :**


- படங்கள், காகிதத்தட்டு, வண்ண எழுதுகோல் (நிறப் பேனா), சிறிய காட்போட் அட்டைகள், ஒட்டுப்பலகை, BLUE TACK, பிறிசில் அட்டை, நூற்பந்து, மூங்கில்தட்டு, காகிதத் தட்டுகள், சவர்க்காரப்பெட்டி, தகரப்பேணிகள், சிறிய மரக்குற்றிகள் / கட்டைகள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு: 1**

- மாணவர்களுக்கு இலகுவான ஒத்தகருத்துச் சொற்கள் நான்கினை அறிமுகஞ் செய்யக்கூடிய ஐந்து படங்களைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள்.

**எடுத்துக்காட்டு :**



- தெரிவுசெய்யப்பட்ட படங்களை மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப பிரதியெடுத்து அட்டைகளில் ஒட்டி கடதாசித் தட்டுகளில் வையுங்கள். மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்பப் படங்களின் பெயர்களை அட்டைகளில் எழுதி கடதாசித் தட்டுகளில் இடுங்கள்.

DRAFT

| | | | |
|---|---|---|---|
| **பூ** | **கை** | **காது** | **வீடு** |



- மாணவர்களை நால்வர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவிற்கும் பட அட்டைத் தட்டையும் சொல் அட்டைத் தட்டையும் வழங்குங்கள். குழுக்களில் உள்ள ஒவ்வொருவரும் படத் தட்டிலிருந்து ஒவ்வொரு படத்தை எடுக்குமாறு அறிவுறுத்துங்கள். படங்களின் பெயர்களைத் தமது குழுவில் கூறுமாறு அறிவுறுத்துங்கள். அதன் பின் தமது கையிலுள்ள படத்திற்குப் பொருத்தமான சொல்லை மற்றைய தட்டிலிருந்து தெரிவுசெய்து குழுவில் வாசித்துக் காட்டுமாறு கூறுங்கள்.
- அதன் பின்னர் ஒட்டுப் பலகையில் ஒவ்வொரு குழுவுக்கும் இடத்தை ஒதுக்குங்கள். ஒவ்வொரு குழுவும் தமக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் கரும்பலகையில் அறிமுகப்படுத்திய ஒத்தகருத்துச் சொற்களை எழுதி வாசித்துக் காட்டுங்கள்.

**ஒத்தகருத்துச் சொற்கள்**

பூ – மலர்
கை – கரம்
காது – செவி
வீடு – இல்லம்

- ஒவ்வொரு குழுவும் தமக்கு வழங்கப்பட்ட தட்டிலுள்ள சொற்களை எழுதிக்காட்டி வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் ஏற்கனவே ஒட்டுப்பலகையில் படங்களுக்கு எதிரே ஒட்டப்பட்டுள்ள சொற்களுக்கு அருகில் பொருத்தமான ஒத்தகருத்துச் சொற்களை ஒட்டுமாறு ஆர்வமூட்டுங்கள்.
- இடர்ப்படும் மாணவர்களுக்கு மீண்டும் மீண்டும் வாய்ப்பினை வழங்குங்கள்.


**எடுத்துக்காட்டு** : ஒத்தகருத்துச் சொற்கள்

| | | |
|---|---|---|
|  | பூ | மலர் |
|  | கை | கரம் |
|  | காது | செவி |
|  | வீடு | இல்லம் |


DRAFT

- ஒவ்வொரு குழுவாக அழைத்து, ஒட்டப்பட்டுள்ள ஒத்தகருத்துச் சொற்களைக் குழுவிலுள்ள ஒவ்வொருவரும் வாசிக்க வழிப்படுத்துங்கள். மாணவர்கள் அனைவரும் வாசித்த பின்னர் நாள்கு றூள் கொப்பியில் உறுப்பமைய எழுதவும், எழுதிய சொற்களை குழுவிலுள்ளவர்களுக்கு வாசித்துக் காட்டவும் ஆர்வமூட்டுங்கள்.
- படங்களையும் அதற்கு எதிரே சொற்களையும் ஒட்டுமாறு கூறுங்கள். (இதற்கு BLUE TACK ஐப் பயன்படுத்தலாம்)

***எடுத்துக்காட்டு*** :




பூ



கை



காது



வீடு

- படங்களுக்கு எதிரே எழுதப்பட்டுள்ள சொற்களை வாசிக்க வழிப்படுத்துங்கள் (குழுவாக).
- காட்சிப்படுத்தப்பட்ட சொற்களை நான்கு றூள் கொப்பியில் உறுப்பமைய எழுதுமாறு அறிவுறுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு** :

**பூ கை காது வீடு**

- குழுக்களுக்கு அருகே சென்று உறுப்பமைய எழுதுகின்றமையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- அதன் பின்னர், மேற்குறிப்பிட்ட சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களை மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப வேறு நிற எழுதுகோலினால் அட்டைகளில் எழுதி, அதனைத் தட்டுகளில் இட்டுக்கொள்ளுங்கள். மாணவர்களுக்கு படம் மூலம் அறிமுகப்படுத்திய சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களை அறிமுகஞ்செய்து அவற்றை வாசித்துக் காட்டுங்கள்.
- அதன் பின்னர், குழுக்களுக்கென வேறு நிற எழுதுகோலினால் எழுதி வைத்திருக்கும் சொற்கள் உள்ள தட்டினை வழங்குங்கள்.

DRAFT

**செயற்பாடு: 2**

- முதல் நாள் கற்ற சொற்களையும் அச்சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களையும் கேட்டறியுங்கள். அச்சொற்களைக் கரும்பலகையில் எழுதி மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள். எழுமாறாக மாணவர்களை அழைத்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர், ஏற்கனவே அப்பியாசக் கொப்பியில் எழுதிய ஒத்தகருத்துச் சொற்களை உரத்து வாசிக்க வழிப்படுத்துங்கள். மாணவர்கள் எல்லோரும் வாசித்த பின்னர் புதிய ஒத்தகருத்துச் சொற்கள் நான்கினை படங்களின்றிக் கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதி அறிமுகஞ் செய்யுங்கள்.

**எடுத்துக்காட்டு :**

| | | |
|---|---|---|
| அம்மா | – | தாய் |
| அப்பா | – | தந்தை |
| பழம் | – | கனி |
| நிலா | – | சந்திரன் |

- மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து வாசிக்க வழிப்படுத்துங்கள். வாசிக்கும்போது எழுத்துக்கூட்டி வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.
- அதன் பின்னர், மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒத்தகருத்துச் சொற்களை அட்டைகளில் எழுதி காகிதத் தட்டுகளில் இட்டு குழுக்களுக்கு வழங்குங்கள். ஒவ்வொரு குழுவும் கரும்பலகையில் எழுதப்பட்டுள்ள ஒழுங்கில் ஒத்தகருத்துச் சொற்களை மேசை மீது வைக்க வழிப்படுத்துங்கள்.
- கரும்பலகையில் காட்டப்பட்டுள்ளவாறு எதிர்க்கருத்துச் சொற்களை ஒழுங்குபடுத்திய பின்னர் அச்சொற்களை நான்கு றூள் கொப்பியில் உறுப்பமைய எழுத வழிப்படுத்துங்கள். அப்பியாசக் கொப்பியில் எழுதிய பின்னர் குழுவில் சோடி சோடியாக வாசிக்க ஆர்வமூட்டுங்கள் (ஒருவர் வாசிப்பதை மற்றவர் செவிமடுக்க வேண்டும்). எல்லோரும் வாசித்து முடிந்ததும் ஆசிரியர் ஒத்தகருத்துச் சொற்களை வாசிக்க மாணவர்கள் அமைதியாகச் செவிமடுக்க வேண்டும். மாணவர்கள் மனதில் பதியவைக்க ஆசிரியர் மீண்டும் மீண்டும் வாசிக்க வேண்டும். அவ்வாறு வாசித்த பின்னர் மாணவர்களுடன் சேர்ந்து வாசிக்க வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

**செயற்பாடு: 3**

- மாணவர்கள் ஏற்கனவே கற்ற எட்டு ஒத்தகருத்துச் சொற்களையும் பெரிய பிறிசில் அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு :**

| | | |
|---|---|---|
| பூ | - | மலர் |
| கை | - | கரம் |
| காது | - | செவி |
| வீடு | - | இல்லம் |
| அம்மா | - | தாய் |
| அப்பா | - | தந்தை |
| பழம் | - | கனி |
| நிலா | - | சந்திரன் |

DRAFT

- காட்சிப்படுத்திய சொற்களை உரத்து வாசித்துக் காட்டுங்கள். மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து ஒத்தகருத்துச் சொற்களைப் பிழையின்றி வாசிக்க உதவுங்கள். ஒருவர் வாசிக்கும்போது மற்றைய மாணவர்கள் செவிமடுக்கிறார்களா என அவதானியுங்கள்.
- அதன் பின்னர் ஒத்தகருத்துச் சொற்களைத் தனித்தனியாக அட்டைகளில் எழுதிக் கொள்ளுங்கள் (ஒரே அளவான அட்டைகள்). அவற்றைப் பின்வருமாறு ஒட்டுப்பலகையில் ஒட்டுங்கள்.

**எடுத்துக்காட்டு :** ஒத்தகருத்துச் சொற்கள்

| | | |
|---|---|---|
| **1.** | **பூ** | |
| **2.** | | **கரம்** |
| **3.** | **காது** | |
| **4.** | | **இல்லம்** |
| **5.** | **அம்மா** | |
| **6.** | | **தந்தை** |
| **7.** | **பழம்** | |
| **8.** | | **சந்திரன்** |

- வெற்றுக் கட்டங்களில் வரவேண்டிய ஒத்தகருத்துச் சொற்கள் கொண்ட அட்டைகளைக் கடதாசித் தட்டுகளில் வையுங்கள். ஒவ்வொரு மாணவராக அழைத்து ஒரு ஒத்தகருத்துச் சொல் அட்டையைச் சரியாக ஒட்ட ஆர்வமூட்டுங்கள்.
- முதலில் எட்டு மாணவர்களை அழைத்து ஒத்தகருத்துச் சொற்களைக் கண்டுபிடித்து ஒட்ட வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் மாணவர்கள் ஒட்டிய சொற்களை ஒட்டுப்பலகையில் இருந்து நீக்காமல் சொற்களை நீக்குங்கள். வேறு எட்டு மாணவர்களை அழைத்து ஒத்தகருத்துச் சொற்களைக் கண்டுபிடிக்கும் விளையாட்டைத் தொடங்குங்கள். இவ்வாறு வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களையும் இவ்விளையாட்டில் ஈடுபட ஆர்வமூட்டுங்கள்.
- இவ்விளையாட்டு நிறைவடைந்ததும் ஒத்தகருத்துச் சொற்கள் நான்கினைத் தெரிவுசெய்து A4 தாளில் கீழ்வருமாறு எழுதிக்கொள்ளுங்கள்.

**பயிற்சி - 1**

ஒத்த கருத்துச் சொற்களை எழுதுவோம்.

1. பழம் - ..........................
2. காது - ..........................
3. பூ - ..........................
4. அம்மா - ..........................

DRAFT

**பயிற்சி - 1**

ஒத்த கருத்துச் சொற்களை எழுதுவோம்.

| | | |
|---|---|---|
| 1. | கை | சந்திரன் |
| 2. | வீடு | தந்தை |
| 3. | அப்பா | கரம் |
| 4. | நிலா | இல்லம் |

- இப்பயிற்சிகளைப் பிரதிசெய்து மாணவர்களுக்கு வழங்குங்கள்.அவர்கள் உற்சாகமாக விடையளிக்க உதவுங்கள்.

**செயற்பாடு: 4**

- கீழே தரப்பட்டுள்ள எதிர்க்கருத்துச் சொற்களை அறிமுகஞ்செய்வதற்கு முன்னர் இச்சொற்கள் தொடர்பாக வினாக்கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

**எடுத்துக்காட்டு :**

**எதிர்க்கருத்துச் சொற்கள்**

| | | |
|---|---|---|
| காலை | – | மாலை |
| இரவு | – | பகல் |
| உள்ளே | – | வெளியே |
| பெரிது | – | சிறிது |

**வினாக்கள் :**

1. காலையில் எந்த உணவை விரும்பி உண்பீர்கள்?
2. மாலையில் விளையாடுவீர்களா?
3. வீட்டின் உள்ளே விளையாடுவீர்களா?
4. வீட்டிற்கு வெளியே விளையாடுவீர்களா?
5. நான் இரண்டு பென்சில்களை வைத்திருக்கிறேன் (பென்சில்களைக் காட்டி) இதில் பெரிய பென்சில் எது? சிறிய பென்சில் எது?

- வினாக்களை எல்லா மாணவர்களிடமும் கேட்டு விடைகளைப் பெற்ற பின்னர், மேலே தரப்பட்டுள்ள எதிர்க்கருத்துச் சொற்களை மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அட்டைகளில் எழுதி இரண்டு பெட்டிகளில் இட்டுக்கொள்ளுங்கள் (எல்லாக் குழுக்களுக்கும் இரண்டு பெட்டிகள் வழங்கக்கூடிய வகையில்)



**பெட்டி 1**
காலை
இரவு
உள்ளே
பெரிது

**பெட்டி 2**
மாலை
இரவு
வெளியே
சிறிது





DRAFT

- ஒவ்வொரு குழுவிற்கும் இரண்டு பெட்டிகளையும் வழங்குங்கள். (பெட்டி 1, பெட்டி 2) ஒவ்வொரு குழுவினரையும் பெட்டி 1 இல் உள்ள சொற்களை வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் பெட்டி இரண்டில் உள்ள சொற்களை வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் கரும்பலகையில் இரண்டு பெட்டிகளிலும் உள்ள சொற்களை எழுதுங்கள்.

**எடுத்துக்காட்டு :**

| **எதிர்க்கருத்துச் சொற்கள்** | | |
|---|---|---|
| காலை | - | மாலை |
| இரவு | - | இரவு |
| உள்ளே | - | வெளியே |
| பெரிது | - | சிறிது |

- கரும்பலகையில் எழுதிய சொற்களை வாசித்துக் காட்டுங்கள். இவை எதிர்க்கருத்துச் சொற்கள் என்பதை அவர்களுக்குப் புரியவையுங்கள். அதன் பின்னர் மாணவர்களை ஒவ்வொருவராக வாசிக்க வழிப்படுத்துங்கள். மாணவர்கள் வாசித்து முடித்ததும் தமது குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள இரண்டு பெட்டிகளில் பெட்டி 1 இல் உள்ள சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொற்களை பெட்டி 2 இலிருந்து தெரிவுசெய்து மேசைமீது எதிரெதிரே வைக்குமாறு வழிப்படுத்துங்கள். இடர்ப்படும் மாணவர்கள் கரும்பலகையைப் பார்த்து எதிர்க்கருத்துள்ள சொற்களை கண்டுபிடிக்க உதவுங்கள்.

**எடுத்துக்காட்டு :**

| | |
|---|---|
| காலை | மாலை |
| மேடு | பள்ளம் |

- அதன் பின்னர் எதிர்க்கருத்துச் சொற்களை அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் குழுக்களுக்கிடையே எதிர்க்கருத்துச் சொற்களைக் கண்டுபிடிக்கும் போட்டியை நடாத்துங்கள். முதலில் குழு 1 ஐயும் குழு 2 ஐயும் அழையுங்கள். குழு 1 இலுள்ளவர்கள் பெட்டி 1 இலுள்ள சொற்களில் ஒவ்வொன்றை எடுத்துக்கொள்ள வேண்டும். குழு 2 இலுள்ளவர்கள் பெட்டி 2 இலுள்ள சொற்களில் ஒவ்வொன்றை எடுத்துக்கொள்ள வேண்டும். குழு 1 இல் உள்ள ஒருவர் சொல் ஒன்றை வாசித்துக் காட்ட குழு 2 இல் அதற்கான எதிர்க்கருத்துச் சொல்லை வைத்திருப்பவர் அதனை வாசித்துக் காட்ட வேண்டும். இவ்வாறு போட்டியைத் தொடர வேண்டும். இவ்வாறு எல்லாக் குழுக்களுக்கும் இடையே போட்டியை நடாத்துங்கள்.
- அதன் பின்னர் இரண்டாவது சுற்று எனக் கூறுங்கள். முதல் சுற்றில் பெட்டி 1 இலுள்ள சொற்களை வாசித்தவர்கள் பெட்டி 2 இலுள்ள சொற்களையும் பெட்டி 2 இலுள்ள சொற்களை வாசித்தவர்கள் பெட்டி 1 இலுள்ள சொற்களையும் வாசித்து எதிர்க்கருத்துள்ள சொற்களைக் கண்டுபிடிக்கும் போட்டியைத் தொடருங்கள். (போட்டியில் எல்லோருமே வெற்றிபெற்றவர்களே என்று ஆசிரியர் பாராட்ட வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.)
- இப்போட்டி நிறைவுபெற்றதும் ஆசிரியரால் ஒட்டுப்பலகையில் கீழ்வருமாறு சொற்கள் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

DRAFT

| எதிர்க்கருத்துச் சொற்கள் | | |
|---|---|---|
| இரவு | - | |
| | - | வெளியே |
| மேடு | - | |
| | - | இருள் |
| காலை | - | |

- மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்துப் பெட்டியில் இருந்து பொருத்தமானதொரு எதிர்ச்சொல்லைக் கட்டத்திற்குள் ஒட்ட வழிப்படுத்துங்கள். அடிக்கடி சொற்களின் இடங்களை மாற்றுங்கள். எல்லா மாணவர்களுக்கும் எதிர்க்கருத்துச் சொற்களைக் கண்டுபிடிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- கரும்பலகையில் எழுதப்பட்டுள்ள எதிர்க்கருத்துச் சொற்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசித்துக்காட்ட ஆர்வமூட்டுங்கள்.

**செயற்பாடு: 5**

- மாணவர்களிடம் ஏற்கனவே கற்ற எதிர்க்கருத்துச் சொற்களை நினைவுகூருங்கள். அச்சொற்களைக் கரும்பலகையில் எழுதுங்கள். முதலில் ஆசிரியர் வாசித்துக் காட்ட வேண்டும். அதனைத் தொடர்ந்து ஆசிரியரும் மாணவர்களும் சேர்ந்து வாசிக்க வேண்டும்.
- அதன் பின்னர் மாணவர்கள் தாமாக உரத்து வாசிக்க ஆர்வமூட்டுங்கள். இச்செயன்முறை நிறைவுபெற்றதும் பின்வரும் எதிர்க்கருத்துச் சொற்களை விளையாட்டு முறையில் மாணவர்களிடம் கேட்டு அவர்களிடம் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு :**

எதிர்க்கருத்துச் சொற்கள்

| **ஆசிரியர்** | | **மாணவர்கள்** |
|---|---|---|
| சூடு | - | குளிர், குளிர், குளிர்..... |
| முன் | - | பின், பின், பின், .... |
| அழு | - | சிரி, சிரி, சிரி, ........ |
| மேலே | - | கீழே, கீழே, கீழே, ....... |

- பலமுறை இந்த விளையாட்டைத் தொடருங்கள்.

**எடுத்துக்காட்டு :**

| **ஆசிரியர்** | | **மாணவர்கள்** |
|---|---|---|
| குளிர் | - | சூடு |
| பின் | - | முன் |
| சிரி | - | அழு |
| கீழே | - | மேலே |

DRAFT

- மாணவர்கள் குழுவாகவும் தனித்தனியாகவும் எதிர்க்கருத்துச் சொற்களைக் கூற வழிப்படுத்துங்கள்.
- இவ்விளையாட்டு நிறைவுபெற்றதும் எதிர்க்கருத்துச் சொற்களைக் கண்டுபிடித்து இடைவெளியை நிரப்பும் பயிற்சியை வழங்குங்கள்.

எடுத்துக்காட்டு :

**எதிர்க்கருத்துச் சொற்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆடு | - | ...................... |
| 2. | ............... | - | பின் |
| 3. | அழு | - | ...................... |
| 4. | ............... | - | கீழே |

- மாணவர்களின் அப்பியாசக் கொப்பிகளைப் பார்வையிட்டு திருத்தங்களை மேற்கொள்ளுங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு அவ்வவ்போதே பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ளுங்கள்.

**செயற்பாடு: 6**

- மாணவர்கள் ஏற்கனவே கற்ற எதிர்க்கருத்துச் சொற்களை அட்டைகளில் எழுதி, ஒட்டுப்பலகையில் கீழ்வருமாறு காட்சிப்படுத்துங்கள்.

**எதிர்க்கருத்துச் சொற்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | காலை | - | மாலை |
| 2. | இரவு | - | பகல் |
| 3. | உள்ளே | - | வெளியே |
| 4. | பெரிது | - | சிறிது |
| 5. | சூடு | - | குளிர் |
| 6. | முன் | - | பின் |
| 7. | அழு | - | சிரி |
| 8. | மேலே | - | கீழே |

- அறிமுகப்படுத்திய எட்டு எதிர்க்கருத்துச் சொற்களையும் மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள்.
- மாணவர்களை நால்வர் கொண்ட குழுக்களாக்கி ஒவ்வொரு குழுவாக அழைத்து குழுவினருடன் சேர்ந்து வாசியுங்கள். அதன் பின்னர் இரண்டு குழுக்களை அழைத்து ஒரு குழு எதிர்க்கருத்துச் சொற்களை வாசிக்க மற்றைய குழு அவர்கள் வாசிக்கும்

DRAFT

எதிர்க்கருத்துச் சொற்களை திரும்பக் கூறுதல் வேண்டும். இவ்வாறு இரண்டு குழுக்களையும் வாசிப்பதற்கு ஆர்வமூட்டுங்கள். எல்லாக் குழுக்களும் ஒன்றுடனொன்று இணைந்து வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.

- கரும்பலகையில் எழுதிய சொற்களை நான்கு றூள் கொப்பியில் எழுதி தாமாக வாசிக்க ஆர்வமூட்டுங்கள். அதன் பின்னர் A4 தாளில் 5 எதிர்க்கருத்துச் சொற்களைத் தெரிவுசெய்து கீழ்வருமாறு எழுதி A4 அளவுள்ள தடித்த அட்டையில் ஒட்டி, துளையிட்டுக் கொள்ளுங்கள். அவைகளில் நூல் கொண்டு சரியான எதிர்க்கருத்துச் சொல்லுடன் இணைக்கச் செய்யும் விளையாட்டில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள் (மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி).

**எடுத்துக்காட்டு :**

**தொடர்புபடுத்துக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| • | இரவு | - | கீழே | • |
| • | காலை | - | சிறிது | • |
| • | மேலே | - | குளிர் | • |
| • | சூடு | - | மாலை | • |
| • | பெரிது | - | பகல் | • |

- ஒவ்வொரு குழுவிற்கும் இதுபோன்ற அட்டைகளை வழங்குங்கள். உற்சாகமாக இச்செயற்பாட்டில் ஈடுபட ஆர்வமூட்டுங்கள். அதன் பின்னர் தாம் பொருத்திய எதிர்க் கருத்துச் சொற்களை நான்கு றூள் கொப்பியில் உறுப்பமைய எழுத வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு: 7**

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி கீழே தரப்பட்டவாறான பட அட்டைகளைக் கொடுத்து ஆண், பெண் என வேறுபடுத்த மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு :**





- 10 படங்களையும் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப பிரதியெடுத்து அட்டைகளில் ஒட்டி வழங்குங்கள். அவர்கள் அப்படங்களைப் பார்வையிட்டு வேறுபடுத்தி உறவு முறைப்படி சோடி சோடியாக அருகருகே வைப்பதற்கு வழிப்படுத்துங்கள்.

DRAFT

- அப்படங்கள் தொடர்பாகக் கலந்துரையாடி எதிர்ப்பாற் சொற்கள் தொடர்பான விளக்கத்தைப் பெற உதவுங்கள். அதன் பின்னர் கீழே தரப்பட்டுள்ள சொற்களைக் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப அட்டைகளில் எழுதிக் கொள்ளுங்கள். சிறிய மூங்கில் ஒன்றை எடுத்து படத்தில் காட்டியவாறு செய்துகொள்ளுங்கள் (குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப).

**எதிர்ப்பாற் சொற்கள்**

| | | |
|---|---|---|
| தந்தை | - | தாய் |
| மாமா | - | மாமி |
| தம்பி | - | தங்கை |
| சிறுவன் | - | சிறுமி |




- மேலே காட்டியவாறு தயாரித்து, ஒவ்வொரு குழுவின் மேசை மீதும் வையுங்கள். மூங்கில் தட்டுகளுக்குப் பதிலாக பயன்படுத்தாத சவர்க்காரப் பெட்டிகளை இதேபோன்று பயன்படுத்தலாம். அதன் பின்னர் கரும்பலகையில் மேலே தரப்பட்ட எதிர்ப்பாற் சொற்களை எழுதுங்கள். அவற்றை வாசித்துக் காட்டுங்கள்.

**செயற்பாடு: 8**

- மாணவர்கள் கற்ற எதிர்ப்பாற் சொற்களிலிருந்து ஆசிரியர் நான்கு எதிர்ப்பாற் சொற்களைத் தெரிவு செய்து, சிறிய தாள்களில் எழுதி எட்டுப் பேணிகளில் அல்லது சிறிய மரக் குற்றிகளில் ஒட்ட வேண்டும்.
- ஆசிரியர், மாணவர்களை வட்டமாக நிற்கவைத்து ஒவ்வொரு மாணவராக அழைத்து எட்டுப் பேணிகளிலிருந்து ஆசிரியர் குறித்துக்காட்டும் பேணியில் எழுதப்பட்டுள்ள சொல்லுக்குரிய எதிர்க்கருத்துச் சொல் எழுதப்பட்டுள்ள பேணியை தெரிவுசெய்து ஆசிரியரிடம் கொடுக்க வேண்டும். எல்லா மாணவர்களும் தனித்தனியாக வந்து இந்த விளையாட்டில் ஈடுபட வேண்டும் [ஆசிரியர் அடிக்கடி எதிர்ப்பாற் சொற்களை (ஏற்கனவே கற்ற) பேணிகளில் மாற்றி ஒட்டுவதற்கு சுதந்திரம் உண்டு]
- இவ்விளையாட்டு நிறைவடைந்தவுடன் ஆசிரியர் கரும்பலகையில் கீறிட்ட இடம் நிரப்பும் பயிற்சியையும் கட்டங்களைப் பூர்த்திசெய்யும் பயிற்சியையும் வழங்குதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு :**


| பயிற்சி 1 | |
|---|---|
| மாமா | : ........................... |
| அப்பா | : .......................... |
| சிறுவன் | : ........................... |
| மகன் | : ......................... |

- குழுவில் உள்ள ஒருவர் மூங்கில் தட்டு ஒன்றில் அப்பா என்ற சொல் அட்டையைச் செருகினால் அடுத்தவர் அம்மா என்ற சொல்லை அடுத்த மூங்கில் தட்டில் செருக வேண்டும். கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதப்பட்டுள்ள எதிர்ப்பாற் சொற்களைப் பார்த்து அட்டைகளைத் தெரிவுசெய்ய சந்தர்ப்பம் வழங்குங்கள். மாணவர்கள் விரும்பும்வரை இவ்விளையாட்டை விளையாடச் சந்தர்ப்பமளியுங்கள்.
- விளையாட்டு நிறைவுபெற்றதும் கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதப்பட்டுள்ள எதிர்ப்பாற் சொற்களை நான்கு றூள் கொப்பியில் உறுப்பமைய எழுதி, வாசிக்க வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு: 9**

- எட்டு தகரப்பேணிகள் அல்லது எட்டு சிறிய உருளைக் குற்றிகளை எடுத்துக் கொள்ளுங்கள். அவற்றில் கீழ்வரும் எதிர்ப்பாற் சொற்களைத் தனித்தனியாக எழுதி, ஒட்டிக்கொள்ளுங்கள்.


| எதிர்ப்பாற் சொற்கள் | | |
|---|---|---|
| மகன் | - | மகள் |
| மாணவன் | - | மாணவி |
| நண்பன் | - | நண்பி |
| பாட்டன் | - | பாட்டி |




- மேலே தரப்பட்டுள்ள எதிர்ப்பாற் சொற்களை ஆசிரியர் கரும்பலகையில் / வெண்பலகையில் பெரிய எழுத்துக்களில் எழுதி, மாணவர்களுக்கு வாசித்துக் காட்ட வேண்டும். பின்னர் மாணவர்களுடன் சேர்ந்து வாசிக்க வேண்டும். அதன் பின்னர் மாணவர்களைச் சுயமாக வாசிக்க ஆர்வமூட்ட வேண்டும். மாணவர்கள் வாசித்துப் பயிற்சி பெற்ற பின்னர், ஆசிரியர் கீழே தரப்பட்டவாறு சொற்கள் எழுதப்பட்ட நான்கு பேணிகளை அடுக்கி வைத்தல் வேண்டும்.


DRAFT

**எடுத்துக்காட்டு :**




- ஆசிரியர் “மகன்” என்ற சொல்லைக் கூறினால் மாணவர் ஒருவர் பந்து ஒன்றை எடுத்து சற்றுத் தொலைவில் நின்று “மகள்” என்று எழுதப்பட்டுள்ள பேணியை இலக்கு வைத்து பந்தை உருட்டுதல் வேண்டும். சரியான பேணி கீழே விழுந்தால் அவரைக் கைதட்டிப் பாராட்ட வேண்டும். இவ்விளையாட்டில் ஆசிரியருடன் சேர்ந்து மாணவர்களும் விளையாட வேண்டும்.
- கீழே காட்டப்பட்டவாறு வேறு நான்கு பேணிகளை வைத்து இதுபோன்று ஆசிரியரும் மாணவர்களும் சேர்ந்து விளையாடுதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு :**




- கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதப்பட்டுள்ள எதிர்ப்பாற் சொற்களைப் பிரதிசெய்து நான்கு றூள் கொப்பியில் உறுப்பமைய எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள்.

பயிற்சி : 2

| | | | |
|---|---|---|---|
| 1. | மாணவன் | - | |
| 2. | | - | நண்பி |
| 3. | பாட்டன் | - | |
| 4. | | - | சிறுமி |

- மாணவர்கள் இடர்ப்படும் சந்தர்ப்பங்களை இனங்கண்டு பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ளுங்கள்.

**செயற்பாடு: 10**

- மாணவர்கள் வாசிக்கக்கூடிய வகையில் அட்டைக் கீலங்களை வண்ண எழுத்துக்களில் கீழே தரப்பட்டவாறான வாக்கியங்களை எழுதி ஒட்டுப்பலகையில் ஒட்டுங்கள்.

DRAFT

**எடுத்துக்காட்டு :**

| |
|---|
| அது பூனை |
| அது கறுப்புப் பூனை |
| அது சிறிய கறுப்புப் பூனை |

| |
|---|
| இது கிளி |
| இது பச்சைக் கிளி |
| இது அழகிய பச்சைக் கிளி |

| |
|---|
| அவன் பாடகன் |
| அவன் சிறந்த பாடகன் |
| அவன் மிகச் சிறந்த பாடகன் |

| |
|---|
| அது பூனை |
| அது கறுப்புப் பூனை |
| அது சிறிய கறுப்புப் பூனை |

| |
|---|
| அது தோட்டம் |
| அது காய்கறித் தோட்டம் |
| அது பசுமையான காய்கறித் தோட்டம் |

| |
|---|
| அது முயல் |
| அது அழகான முயல் |
| அது மிகவும் அழகான முயல் |

- ஒட்டுப்பலகையில் ஒட்டப்பட்டுள்ள வாக்கியங்களை ஆசிரியர் உரத்து வாசித்துக்காட்ட வேண்டும். அதன் பின்னர் ஏற்ற இறக்கங்களுடன் வாசித்துக்காட்ட வேண்டும். மாணவர்களுடன் சேர்ந்து வாசிக்க வேண்டும். இவ்வாறு பயிற்சியளித்த பின் வாக்கியங்களை உறுப்பமைய நான்கு றூள் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். எழுதிய பின் முற்றுப்புள்ளி இட வழிப்படுத்துங்கள். எழுதிய வாக்கியங்களை உரத்துப் பிழையின்றி வாசிக்க வழிப்படுத்துங்கள்.

DRAFT

**செயற்பாடு: 11**

- கீழே தரப்பட்டுள்ள வாக்கிய அட்டவணையை எல்லா மாணவர்களுக்கும் கிடைக்கக்கூடிய வகையில் பிரதியெடுத்து கீலங்களாக வழங்குங்கள்.

எடுத்துக்காட்டு :

| | | |
|---|---|---|
| அப்பா | புத்தகம் | வாங்கினார் |
| அம்மா | | வாங்குகிறார் |
| அண்ணா | | வாங்குவார் |

- ஆசிரியர் கரும்பலகையில் / வெண்பலகையில் வாக்கியங்களை ஆக்கி, வாசித்துக் காட்டுதல் வேண்டும். அதன் பின்னர் மாணவர்கள் தமக்கு வழங்கப்பட்ட வாக்கிய அட்டவணைக் கீலத்தைப் பார்த்து வாக்கியங்களை ஆக்கி முற்றுத்தரிப்பிட வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் நான்கு றூள் கொப்பியில் உறுப்பமைய எழுதி முற்றுத்தரிப்பிடுகிறார்களா என அவதானிக்கவும். எழுதிய வாக்கியங்களை வகுப்பின் முன் வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.

**செயற்பாடு: 12**

- மாணவர்கள் காற்புள்ளி இடப்பட்ட வாக்கியங்களை நிறுத்தி வாசிக்கவும் அவ்வாக்கியங்களைப் பார்த்து உறுப்பமைய நான்கு றூள் கொப்பியில் எழுதிக் காற்புள்ளி, முற்றுத்தரிப்பு இடவும் பயிற்சியளிக்கவும்.

எடுத்துக்காட்டு :

**சிங்கம், புலி போன்றவை காட்டில் வாழ்கின்றன.**

**எங்கள் வீட்டிற்கு மாமா, மாமி, பாட்டி ஆகியோர் வந்தனர்.**

**நீலம், மஞ்சள் ஆகிய நிறங்களில் பந்துகள் உள்ளன.**

- இவ்வாக்கியங்களை வாசிக்கும்போது காற்புள்ளிகளை அனுசரித்து வாசிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுவதோடு வாக்கியங்களைக் காற்புள்ளி இட்டு எழுதப் பயிற்சி அளியுங்கள்.

**கணிப்பீடு :**

- ஒத்தகருத்துச் சொற்களை இனங்காணல்
- எதிர்க்கருத்துச் சொற்களை இனங்காணல்
- எதிர்ப்பாற் சொற்களை இனங்காணல்
- வாக்கியங்களை எழுதி முற்றுப்புள்ளி, காற்புள்ளியிடல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

DRAFT

# 3

**தேர்ச்சிகள் :**

$L_3$ – விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுப்பார்.

$S_3$ – விருப்புடனும் இரசனையுடனும் பேசுவார்.

**உள்ளடக்கம் :**

- சிறுவர் பாடல்கள்
- சிறுவர் கதைகள்
- விரல் பொம்மை / பலூன் பொம்மை (உரையாடல்கள்)
- போலச் செய்தல் (தனி நடிப்பு)
- ஒலி, ஒளி இறுவட்டுக்கள்

**கற்றற் பேறுகள் :**

- பாடல்கள், கவிதைகளை விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுத்து ஆக்கபூர்வமாக வெளிப்படுத்துவார்.
- சிறுவர் கதைகளைச் செவிமடுத்து முகபாவனை, உடலசைவு, தொனி வேறுபாடு ஆகியவற்றை வெளிப்படுத்துவார்.
- விரல் பொம்மை / பலூன் பொம்மையினூடாக பாடல்கள், கதைகள் மற்றும் உரையாடல்களை விருப்புடனும் இரசனையுடனும் ஆக்கபூர்வமாகவும் வெளிப்படுத்துவார்.
- பாடல்கள், கதைகளில் வரும் கதாபாத்திரங்கள், பிராணிகள், பழங்கள் போன்று முகமூடி அணிந்து போலச் செய்துகாட்ட முன்வருவார்.
- ஒலி, ஒளி இறுவட்டுக்களைச் செவிமடுத்து விருப்புடனும் இரசனையுடனும் இயல்பாக வெளிப்படுத்துவார்.

**வளங்கள் :**

- பாடல் அட்டைகள், கதை அட்டைகள், கதைப் படங்கள், விரல் பொம்மைகள், கையுறைகள், நிற பலூன்கள், குண்டுமணிகள், பசை, ஒலி - ஒளி இறுவட்டுக்கள், முகமூடிகள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு: 1**

- மாணவர்களுக்கு முன்கூட்டியே சிறிய படம் ஒன்றைப் பெற்றோரின் உதவியுடன் செய்து கொண்டு வருமாறு அறிவுறுத்துங்கள்.
- அவர்கள் கொண்டு வந்த பட்டங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- பட்டம் செய்யத் தேவையான பொருட்களைக் கேட்டறியுங்கள்.
- அதன் பின்னர் பட்டத்தை எப்படிக் கட்டலாம் என வினவுங்கள்.

DRAFT

- எல்லோரும் பட்டம் கட்டும் முறையைக் கூறுவதற்கு உற்சாகப்படுத்துங்கள்.
- இச்செயன்முறை நிறைவு பெற்றதும் கீழ்வரும் பாடலை மாணவர்களுக்கு அறிமுகப் படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**

**பட்டம் விடுவோம்**

பட்டம் விடுவோம்
பட்டம் விடுவோம்
பாடிப் பாடிப்
பட்டம் விடுவோம்
பட்டம் பட்டம்
பட்டம் பட்டம்

- **"பட்டம் விடுவோம்"** என்ற பாடலைப் மாணவர்கள் குழுவாகவும் தனியாகவும் அபிநயத்துடன் பாடி ஆட ஆர்வமூட்டுங்கள்.

**செயற்பாடு: 2**

- கீழே தரப்பட்டுள்ள பாடலைப் படத்துடன் காட்சிப்படுத்துங்கள்.
- காட்சிப்படுத்திய பாடலை ஒலி வேறுபாடுகளுடன் வரிவரியாக வாசித்துக் காட்டுங்கள்.
- அதன் பின்னர் பாடிக் காட்டுங்கள்.
- பாடிக்காட்டிய பின்னர் அபிநயத்துடன் பாடிக் காட்டுங்கள்.

**எடுத்துக்காட்டு:**

**வாத்து**

குவாக் குவாக் வாத்து
குட்டைக் கால் வாத்து

தட்டைச் சொண்டு வாத்து
தத்திச் செல்லும் வாத்து

வெள்ளை நிற வாத்து
விரும்பும் அழகு வாத்து

- ஆசிரியர் பாடிக் காட்டிய பின்னர் வரிவரியாக மாணவர்களுடன் சேர்ந்து பாடுங்கள்.
- மாணவர்கள் பாடலை மனனம் செய்யும் வரை அவர்களுடன் சேர்ந்து பாடுங்கள்.
- அதன் பின்னர் மாணவர்களைச் சிறிய குழுக்களாக்கி, அபிநயத்துடன் பாட ஆர்வ மூட்டுங்கள்.

DRAFT

**செயற்பாடு: 3**

- கீழே தரப்பட்டுள்ள பாடலை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி அவர்களுக்கு வரிவரியாக சொல்லிக் கொடுத்து மாணவர்கள் அபிநயத்துடன் பாடி இரசிக்க வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**

**பூக்கள்**

சின்னச் சின்னப் பூக்கள்
சிறிய நல்ல பூக்கள்

வெள்ளை நிறப் பூக்கள்
வெற்றி தரும் பூக்கள்

மஞ்சள் நிறப் பூக்கள்
மனதைக் கவரும் பூக்கள்

- வி. என். எஸ். உதயசந்திரன்

**செயற்பாடு: 4**

- மாணவர்களிடம் நிலா பற்றிக் கேட்டறியுங்கள்.
- அதன் பின்னர் நிலாக் காட்சியைக் காட்சிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் பின்வரும் பாடலை அறிமுகம் செய்யுங்கள்.

**எடுத்துக்காட்டு:**

**பந்து நிலா**

நிலா நிலா வா வா
நீயும் நானும் ஆடலாம்

பந்து போல் இருக்கிறாய்
பந்து அடிக்க வா வா

கிண்ணம் போல் இருக்கிறாய்
சோறு உண்ண வா வா

வட்டமாக இருக்கிறாய்
எட்டிப் போக எண்ணாதே

கிட்ட கிட்ட வா
எட்டி முத்தம் தா

- வெ. நல்லதம்பி
நன்றி: கண்ணே பாப்பா.


- முதல் நான்கு அடிகளை முதல் நாளில் மாணவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.
- புத்தளிப்புக் கருவிகளைத் தாளத்திற்கு பயன்படுத்துங்கள்.
- அடுத்த ஆறு அடிகளையும் மறுநாளில் அறிமுகம் செய்யுங்கள்.
- புத்தளிப்புக் கருவிகளைப் பயன்படுத்துங்கள்.
- மூன்றாம் நாள் முழுமையான பாடலை புத்தளிப்புக் கருவிகளைப் பயன்படுத்தி அறிமுகம் செய்யுங்கள்.
- மாணவர்கள் விரும்பக்கூடிய வகையில் பாடல்களை அபிநயத்துடன் பாடிக் காட்டுங்கள்.
- மாணவர்களின் பெற்றோர்களுக்கு முன்கூட்டியே அறிவுறுத்தல் வழங்கி நிலா முகமூடி ஒன்றைச் செய்ய அபிநயத்துடன் மாணவர்கள் சுதந்திரமாக பாடி ஆட வாய்ப்புக்களை வழங்குங்கள்.

DRAFT

செயற்பாடு: 5

- மாணவர்களுக்குக் கீழே தரப்பட்டுள்ள கதையை அபிநயத்துடன் அவர்கள் விரும்பி இரசிக்கும் வண்ணம் கூறுங்கள்.

**எடுத்துக்காட்டு : கதை - நரியும் கொக்கும்**



ஒரு நாள் நரியும் கொக்கும் சந்தித்துக் கொண்டன. நரி கொக்கிடம் ''கொக்கு அக்கா என்னுடைய வீட்டுக்கு வருவீர்களா? '' என்று கேட்டது. அதற்குக் கொக்கு சற்றுத் தயங்கியபடி ''சரி நாளை வருகிறேன்'' என்று கூறியது.

அடுத்த நாள் கொக்கு நரியின் வீட்டுக்குச் சென்றது. நரி, வட்டமான தட்டு ஒன்றில் பாலை ஊற்றி வைத்தது. கொக்கு நரியைப் பார்த்தது. நரியார் கொக்கைப் பார்த்து ''கொக்கு அக்கா, பாலைக் குடியுங்கள்'' என்றது.
கொக்கினால் பாலைக் குடிக்க முடியவில்லை. ஏனெனில் அதன் அலகு மிகவும் நீளமானது. நரி அதைப் பார்த்துச் சிரித்தது. ''கொக்கு அக்கா நான் குடிப்பது போன்று குடியுங்கள்'' என்று கூறி பாலை நாக்கால் நக்கிக் குடித்துக் காட்டியது. கொக்கு எதுவுமே சொல்லாமல் கவலையுடன் பறந்து சென்றது.

இன்னொரு நாள் கொக்கு நரியாரைச் சந்தித்தது. ''நரியாரே என்னுடைய வீட்டுக்கு விருந்துண்ண வருவீர்களா? '' என்று கேட்டது.

அதற்கு நரி ''சரி வருகிறேன்'' என்று கூறியது. அடுத்த நாள் நரி கொக்கின் வீட்டுக்குச் சென்றது. கொக்கு தட்டையான தட்டு ஒன்றில் பாலை ஊற்றி வைத்தது. ''நரியாரே பாலைக் குடியுங்கள்'' என்றது. நரி மகிழ்வுடன் பாலைக் குடித்தது. அதன் பின்னர் கொக்கிடம் எதுவும் சொல்லாமல் நரி வெட்கத்துடன் திரும்பிச் சென்றது. சிறிது தூரம் சென்ற நரி என்னை மன்னித்து விடுங்கள். நான் உங்களுக்கு தீமை செய்தேன். ஆனால் எனக்கு நீங்கள் நன்மை தான் செய்தீர்கள். ''இனிமேல் எவருக்கும் இவ்வாறான தீமையை செய்யமாட்டேன்'' என்று கூறிவிட்டு நரி திரும்பி பார்க்காமல் சென்றது.

**குறிப்பு:** இக்கதை மாணவர்களின் இரசனையுணர்வை வளர்ப்பதற்காக ஆசிரியர் மாணவர்களுக்கு இரசனையுடன் சொல்வதற்காகத் தரப்பட்டுள்ளது. (தரம் இரண்டு மாணவர்கள் வாசிப்பதற்காக அல்ல.)

- மாணவர்களுக்குக் கதையை இரசனையுடன் கூறுங்கள்.
- அவர்கள் சுயமாகக் கதையை இரசனையுடன் கூறுவதற்கு ஊக்கமளியுங்கள்.
- மாணவர்களை சிறிய குழுக்களாக்கி தமக்கிடையே இக்கதையைக் கூறுவதற்கு ஆர்வமூட்டுங்கள்.
- அதன் பின்னர் மாணவர்கள் கதையில் வரும் காட்சியை அல்லது பிராணிகளை கிளே மூலம் ஆக்குவதற்கு ஆர்வமூட்டுங்கள்.



DRAFT

**எடுத்துக்காட்டு:**

**கிளேயைத் தயார்ப்படுத்துவதற்குத் தேவையான பொருட்கள்:**

- ஒரு கப் தண்ணீர்
- உணவுக்குப் பயன்படுத்தப்படும் நிறங்கள்
- தேவைக்கேற்ப தேங்காய் எண்ணெய் (இரண்டு மேசைக்கரண்டி)
- 4 கப் கோதுமை மா
- ஒன்றரை (1½) கோப்பை உப்பு

முதலில் ஒரு பாத்திரத்தில் 4 கப் கோதுமை மாவை இட்டுக் கொள்ளுங்கள். அதற்குள் 1½ கப் தூள் உப்பை இட்டு கலவையாக்குங்கள். அதன்பின்னர் மூன்று பாத்திரங்களை எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு பாத்திரத்திலும் ¼ கப் தண்ணீர் ஊற்றுங்கள். ஒவ்வொரு பாத்திரத்திலும் உணவுக்குப் பயன்படுத்தும் நிறத் திரவங்களில் இருந்து சிறிதளவு உணவுக்குப் பயன்படுத்தும் நிறத்திரவத்தை இடுங்கள். அதன் பின்னர் ஒவ்வொரு பாத்திரத்திலும் ½ மேசைக்கரண்டி தேங்காய் எண்ணெயை ஊற்றுங்கள். அதன் பின்னர் ஒவ்வொரு கப் கோதுமை மாவை இட்டு பிசையுங்கள். பிசைந்ததும் எமக்கு கிளே கிடைக்கும். அதனைக் கொண்டு மாணவர்கள் தனித்தனியாக கதையில் வந்த பிராணிகளை ஆக்குவதற்கு ஊக்கமளியுங்கள். (சிறுவர் ஆக்கம் பெரியவர்களின் ஆக்கத்திலிருந்து வேறுபட்டது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.)

- மாணவர்களின் ஆக்கங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் கோதுமை மாவில் தயாரிக்கப்பட்ட கிளே மூலம் செய்த உருவங்களைப் பற்றிக் கூறவோ அல்லது கதையைக் கூறவோ ஊக்கப்படுத்துங்கள்.
- மறுநாள் இக்கதையை முகமூடி அணிந்து கூறுவதற்கு ஆர்வமூட்டுங்கள்.
- எல்லா மாணவர்களும் முகமூடி அணிந்து குழுவாகவோ தனியாகவோ கதை கூற வேண்டும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.

**குறிப்பு:** கதை கூறும்போது முகமூடி அணிந்து கூறுவதைப் பிள்ளைகள் விரும்புகின்றார்கள்/ மகிழ்ச்சியடைகின்றார்கள். கதையைக் கூறுவது ஒரு மிருகமாகவோ அல்லது மனித கதாபாத்திரமாகவோ இருக்கலாம் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள். இங்கு தரப்பட்டுள்ள கதை போன்று இரசனைமிக்க சிறிய கதைகளைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.

**செயற்பாடு 6:**



- மாணவர்களைச் சிறிய குழுக்களாக்குங்கள்.
- அவர்களுக்கு தமது விரல்களில் முகங்களை வரைந்து (விரல் பொம்மை - Finger Pappets) தமக்குத் தெரிந்த கதைகளை அல்லது கற்ற கதைகளை, பாடல்களை இரசனையுடன் கூறுவதற்கு ஆர்வமூட்டுங்கள்.

- விரல் பொம்மைகளை ஆசிரியர் தயாரித்து வழங்க முடியும். விரல் பொம்மை ஆக்குவதற்கு கையுறையைப் பயன்படுத்த முடியும். கையுறைகள் மூலம் விரல் பொம்மைகளைத் தயாரிக்க முடியும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள். (மேலதிக உதவியினை ஆசிரிய ஆலோசகரிடம் பெற்றுக் கொள்ள முடியும்.)

**செயற்பாடு: 7**

- மாணவர்களை பலூன்களைக் கொண்டு வர அறிவுறுத்துங்கள்.
- பலூன்களை ஊதிப் பெரிதாக்கிக் கட்டிக் கொள்ளுங்கள்.
- அதன் பின்னர் பலூன்களில் முகம் வரைந்து இரண்டு பக்கமும் கண்மணிகளை ஒட்டிக் கொள்ளுங்கள்.
- ஒட்டிய பின்னர் பலூன் பொம்மைகளின் ஊடாக (பலூன்களை அசைத்து) மாணவர்கள் பாடல்களைப் பாடவோ கதை சொல்லவோ ஊக்கப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**



**நாய்க்குட்டி**

சின்னச் சின்ன நாய்க்குட்டி
சிங்கார நாய்க்குட்டி
நன்றி உள்ள நாய்க்குட்டி
நான் வளர்க்கும் நாய்க்குட்டி



- ரா. பொன்னரசன்

நன்றி: பாலும் தேனும்






**செயற்பாடு: 8**

- மாணவர்கள் ஏற்கனவே கற்ற பாடல்கள் கதைகளில் வரும் பாத்திரங்களை நினைவுபடுத்தி, அப்பாத்திரங்களைப் போன்று போலச் செய்து காட்ட மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**

- பட்டம் விடுதல்
- வாத்துப் போன்று கத்துதல், நடத்தல்
- பூக்கள்
- நிலா வெளிச்சத்தில் ஆடுதல்
- நிலாப் பாடலை போலச் செய்து காட்டுதல்
- நரி போல ஊளையிடுதல்
- நாய்க்குட்டி போல விளையாடுதல், வாலை ஆட்டுதல், குரைத்தல்
- நரி போன்று நடித்துக் காட்டுதல்
- கொக்குப் போன்று நடித்தல்

- கற்றவற்றில் இருந்து போலச் செய்தல் ஞாபக சக்தியை வளர்க்க உதவும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.

DRAFT

**செயற்பாடு: 9**

- ஏற்கனவே கற்ற பாடல்கள் கதைகள் போன்றவற்றை ஒலிப்பதிவு செய்து, அவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- அவர்கள் செவிமடுத்திருக்கின்றார்களா, என அறிய அவர்களிடம் அது தொடர்பான வினாக்களை வினவுங்கள்.

**எடுத்துக்காட்டு:**

- **நரியும் கொக்கும்** என்ற கதையை ஒலிப்பதிவு அல்லது ஒளிப்பதிவு செய்து மாணவர்களைச் செவிமடுக்க வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் அக்கதை தொடர்பான வினாக்களை வினவுங்கள்.

1. **யாரை நரி வீட்டுக்கு அழைத்தது?**
2. **நரி பாலை எதிலே ஊற்றி வைத்தது**?
3. **கொக்கினால் பாலை ஏன் குடிக்க முடியவில்லை**?
4. **நரி பாலை எப்படிக் குடித்துக் காட்டியது**.?
5. **நரி ஏன் வெட்கத்துடன் திரும்பிச் சென்றது?**

**செயற்பாடு: 10**

- யூ ரியூப்பில் (You Tube) மாணவர்களுக்குப் பொருத்தமான கதைகள், பாடல்களைத் தெரிவு செய்து அவர்கள் விருப்புடன் இரசனையுடனும் செவிமடுக்க ஆர்வமூட்டுங்கள்.
- பாடசாலையில் உள்ள கணினிக் கூடத்தைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை முற்கூட்டியே பெற்றுக் கொள்ளுங்கள்.

**கணிப்பீடு:**

- பாடல்களை இரசனையுடன் பாடுதல்
- கதைகளை உணர்வுபூர்வமாகக் கூறுதல்
- போலச் செய்து காட்டுதல்
- விரல் பொம்மை / பலூன் பொம்மை ஊடாக உரையாடுதல்
- ஒலி ஒளி நாடாக்கள் ஊடாக பாடல்கள், கதைகள் ஆகியவற்றைச் செவிமடுத்தல்

போன்றவற்றைக் கணிப்பீடு செய்க.

DRAFT

**தேர்ச்சிகள்:**

**R₃** விருப்புடனும் இரசனையுடனும் வாசிப்பார்.

**W₃** விருப்புடனும் இரசனையுடனும் எழுதுவார் / வரைவார்.

**உள்ளடக்கம்:**

- சிறுவர் பாடல்கள்
- சிறுவர் கதைகள்
- உரையாடல்கள் (விரல் பொம்மை / பலூன் பொம்மை)
- போலச் செய்தல் (தனி நடிப்பு)
- ஒலி இறுவட்டுக்கள்
- சித்திரங்கள்

**கற்றற் பேறுகள்:**

- பாடல்கள், கவிதைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களை வாசித்துப் புரிந்து கொள்வார். அச்சொற்களைப் பிழையின்றி எழுதுவார்.
- சிறுவர் கதைகளில் வரும் கதாபாத்திரங்கள், பயன்படுத்தப்பட்டுள்ள முக்கிய சொற்கள், மாணவரைக் கவர்ந்த சிறிய உரையாடல் விதிகள் ஆகியவற்றைப் பிழையின்றி எழுதுவார். விருப்புடனும் இரசனையுடனும் வாசிப்பார்.
- விரல் பொம்மை / பலூன் பொம்மை ஆகியவற்றின் ஊடாகக் கூறிய உரையாடல்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சொற்களை விருப்புடனும் இரசனையுடனும் முன்வைப்பார்∴ எழுதுவார்.
- போலச் செய்தலின்போது தெரிவு செய்த கதாபாத்திரங்களின் பெயர்களை நினைவுபடுத்தி பிழையின்றி எழுதி வாசிப்பார்.
- ஒலி ஒளி இறுவட்டுக்களின் ஊடாக செவிமடுத்த பாடல்கள், கதைகள் உரையாடல்களில் பயன்படுத்தப்பட்ட சொற்களை எழுதுவார் / வாசிப்பார்.
- விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுத்த பாடல்கள் கதைகளை சித்திரமாக வரைவார். தாம் வரைந்த சித்திரங்களைப் பார்த்து சில சொற்களை எழுதி வாசிப்பார்.

**வளங்கள்:**

- பாடல் அட்டைகள், கதை அட்டைகள், சொல் அட்டைகள்
- ஒலி ஒளி இறுவட்டுக்கள், செருகல் அட்டை, பெட்டிகள் நிறப் பென்சில்கள், சோக்கள் (Pastel).

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு: 1**

- மாணவர்கள் ஏற்கனவே கற்ற பாடலை மாணவர்களுக்கு நினைவுபடுத்தி பாட ஆர்வ மூட்டுங்கள்.
- அதன் பின்னர் அப்பாடலினைப் பெரிய அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

DRAFT

**எடுத்துக்காட்டு:**

**பட்டம் விடுவோம்**
**பட்டம் விடுவோம்**
**பாடிப் பாடிப்**
**பட்டம் விடுவோம்**
**பட்டம் பட்டம்**
**பட்டம் பட்டம்**

- இப்பாடலில் வரும் சொற்களை அட்டைகளில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.
- | பட்டம் | விடுவோம் |

  என்ற சொற்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசிக்குமாறு கூறுங்கள்.
- பட்டம் என்ற சொல்லை வைத்து வாக்கியங்களை ஆக்குமாறு மாணவர்களிடம் கூறுங்கள்.
- பின்வருவன போன்ற வாக்கியங்களைக் கூற ஆர்வமூட்டுங்கள்.

  **எடுத்துக்காட்டு:**

**பட்டம் அழகானது**
**பட்டம் பறக்கும்**
**பட்டம் கட்டுவோம்**
**பட்டம் வாங்குவோம்**

| அழகானது | பறக்கும் |
| கட்டுவோம் | வாங்குவோம் |

- மாணவர்கள் கூறிய புதிய சொற்களை கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதுங்கள்.
- அச்சொற்களை வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.
- அதன் பின்னர் மாணவர்களை நால்வர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் பட்டத்தின் படம் ஒட்டிய நான்கு பட அட்டைகளையும் புதிதாக எழுதிய நான்கு முடிக்கும் சொற்களையும் அட்டைகளில் எழுதி பெட்டிகளில் இட்டு குழுக்களுக்கு வழங்குங்கள்.
- குழுக்களில் உள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு படஅட்டையையும் முடிக்கும் சொல்லையும் எடுத்துத் தமக்குள் வாசித்துக் காட்ட வேண்டும்.
- வாசித்த பின் முடிக்கும் சொற்களை இணைத்து சிறிய வாக்கியங்களை நான்கு றூள் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.

DRAFT

*எடுத்துக்காட்டு:*



**அழகானது**

**பட்டம் அழகானது.**

- வாக்கியங்களைப் பார்த்து எழுதும்போது முற்றுப்புள்ளியை சரியாக இடுகின்றார்களா என அவதானியுங்கள்.

**செயற்பாடு: 2**

- மாணவர்கள் ஏற்கனவே கற்ற **'வாத்து'** என்ற பாடலை பெரிய அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.
- அப்பாடலை இரசனையுடன் வாசித்துக் காட்டுங்கள்.
- அதன் பின்னர் பாடலின் ஒவ்வொரு அடிகளையும் தனித்தனியாக அட்டைகளில் எழுதி ஒட்டும் பலகையில் காட்சிப்படுத்துங்கள்.

| |
|---|
| **குள்ளக் குள்ள வாத்து** |
| **குட்டைக் கால் வாத்து** |
| **தட்டைச் சொண்டு வாத்து** |
| **தத்திச் செல்லும் வாத்து** |
| **வெள்ளை நிற வாத்து** |
| **விரும்பும் அழகு வாத்து** |

- ஒட்டும் பலகையில் தனித்தனியாக அட்டைகளில் எழுதிக் காட்சிப்படுத்தியுள்ள பாடலடிகளை விருப்புடனும் இரசனையுடனும் ஏற்ற இறக்கத்துடன் வாசிக்க ஆர்வ மூட்டுங்கள்.
- மாணவர்களை அறுவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் பாடலில் ஆறு அடிகளையும் தனித்தனியாக அட்டைகளில் எழுதி பெட்டிகளில் இட்டு வழங்குங்கள்.
- குழுக்களில் உள்ள ஒவ்வொருவரும் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பாடலடிகளின் ஒழுங்கில் எல்லா அடிகளையும் (அட்டைகளையும்) விருப்புடனும் இரசனையுடனும் ஏற்ற இறக்கத்துடனும் வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.
- அதன் பின்னர் பாடலடிகளை அப்பியாசக் கொப்பியில் உறுப்பமைய எழுதிச் சுயமாக வாசிக்க வழிப்படுத்துங்கள்.

DRAFT

- இச்செயற்பாடு நிறைவு பெற்றதும் குழுக்களுக்கு வழுங்கப்பட்ட பாடலடிகள் எழுதப்பட்ட அட்டைகள் கொண்ட பெட்டிகளை மீளப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- வாத்து என்ற பாடலில் உள்ள அடிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சொல்லை நீக்கி கட்டமிட்டுக் காட்சிப்படுத்துங்கள்.
- கட்டமிட்ட இடத்தில் வரவேண்டிய சொற்களைக் குழுவாகக் கண்டுபிடித்துக் கூற ஆர்வமூட்டுங்கள்.
- மாணவர்களை எழுமாற்றாக அழைத்து கட்டமிட்ட பாடலடிகளில் வரவேண்டிய சொற்களை பெட்டியில் உள்ள அட்டைகளில் இருந்து பொருத்தமான சொல்லட்டை களைத் தெரிவு செய்து கட்டமிடப்பட்ட இடங்களில் ஒட்ட அறிவுறுத்துங்கள். (ஒட்டுவதற்கு புளுரெக்கைப் பயன்படுத்த முடியும்.)
- எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அதன் பின்னர் அப்பியாசக் கொப்பியில் பாடலடிகளில் உள்ள கட்டங்களில் வரவேண்டிய சொற்களை வைத்து எழுத வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*

**குவாக் ☐ குவாக்**

**குட்டைக் ☐ வாத்து**

**தட்டைச் ☐ வாத்து**

**தத்திச் ☐ வாத்து**

**☐ நிற வாத்து**

**விரும்பும் ☐ வாத்து**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **கால்** | **அழகு** | **வெள்ளை** | **செல்லும்** | **சொண்டு** | **வாத்து** |

**செயற்பாடு: 3**

- கீழே தரப்பட்டுள்ள **'பூக்கள்'** என்ற பாடலைக் சோடி சோடி அடிகளாக அட்டைக் கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*

**சின்னச் சின்னப் பூக்கள்**
**சிறிய நல்ல பூக்கள்**

**வெள்ளை நிறப் பூக்கள்**
**வெற்றி தரும் பூக்கள்**

**மஞ்சள் நிறப் பூக்கள்**
**மனதைக் கவரும் பூக்கள்**

- அதன் பின்னர் மாணவர்களை நால்வர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் பாடலடிகள் எழுதப்பட்ட கீலங்கொண்ட (சோடியாக) பெட்டிகளை வழங்குங்கள்.

DRAFT

- விருப்புடனும் இரசனையுடனும் ஏற்ற இறக்கங்களுடன் பாடலடிகளை வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- தெளிவாக சொற்களை உச்சரிக்கின்றார்களா என அவதானியுங்கள்.
- அதன் பின்னர் பாடலடிகளை அப்பியாசக் கொப்பியில் எழுதி சுயமாக வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.
- மாணவர்கள் எல்லோருக்கும் பூக்கள் என்ற பாடலை கணினி மூலம் எழுத்தமைப்புச் செய்து பிரதி எடுத்துக் கொடுங்கள்.
- அதனை மாணவர்களை வாசிக்கச் செய்யுங்கள்.
- அதன் பின்னர் பாடலில் ஆசிரியர் கூறும் சொற்களை மட்டும் கட்டமிடுமாறு கூறுங்கள். (மாணவர்கள் கட்டமிடுகிறார்களா எனப் பாருங்கள். கட்டமிட்ட சொற்களை வாசித்துக் காட்ட ஆர்வமூட்டுங்கள்.)

**எடுத்துக்காட்டு:**

| | |
|---|---|
| **பூக்கள்** | **வெள்ளை** |
| **நல்ல** | **வெற்றி** |
| **மஞ்சள்** | **தரும்** |
| **கவரும்** | |

- வாசித்துக் காட்டிய பின்னர் அச்சொற்களை அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு: 4

- மாணவர்களை ஐந்து பேர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- **'பந்து நிலா'** என்ற பாடலின் அடிகளை இரண்டு இரண்டாக எழுதி ஒட்டுப் பலகையில் எழுதி இரசனையுடன் வாசித்துக் காட்டுங்கள்.
- மாணவர்களை குழுவாக அழைத்து பாடலில் இரண்டு அடிகளை விருப்புடனும் இரசனையுடனும் வாசித்துக் காட்ட ஆர்வமூட்டுங்கள்.

**எடுத்துக்காட்டு:**

1. **நிலா நிலா வா வா**<br>**நீயும் நானும் ஆடலாம்**
2. **பந்து போல் இருக்கிறாய்**<br>**பந்து அடிக்க வா வா**
3. **கிண்ணம் போல் இருக்கிறாய்**<br>**சோறு உண்ண வா வா**
4. **வட்டமாக இருக்கிறாய்**<br>**எட்டிப் போக எண்ணாதே**
5. **கிட்ட கிட்ட வா**<br>**எட்டி முத்தம் தா**

DRAFT

- மேலே காட்டப்பட்டவாறு பாடலை அட்டைக்கீலங்களில் எழுதி பெட்டிகளில் இட்டு ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குக. (எல்லாக் குழுக்களுக்கும் ஐந்து அட்டைக் கீலங்களும் கிடைத்தல் வேண்டும் என்பதனை நினைவிற் கொள்க.)
- குழுவில் உள்ள முதலாவது மாணவன் பாடல் அடிகளின் முதல் அட்டைக் கீலத்தை இரசனையுடன் வாசிக்க இரண்டாவது மாணவன் அடுத்த பாடலட்டைக் கீலத்தை வாசிக்க வேண்டும்.
- இவ்வாறு குழுவில் உள்ள ஐந்து மாணவர்களும் வாசிக்க வேண்டும்.
- அதன் பின்னர் ஐந்து அட்டைகளையும் தமக்கிடையே மாற்றிக் கொள்ள வேண்டும்.
- அதன் பின்னர் பாடல் அடிகளை மீண்டும் ஒழுங்குமுறையாக வாசிக்க வேண்டும்.
- இவ்வாறு ஒவ்வொரு குழுவில் உள்ள எல்லா மாணவர்களும் எல்லா அட்டைகளையும் வாசிக்க வேண்டும்.
- அதன் பின்னர் அப்பியாசக் கொப்பியில் பாடலை எழுதிச் சுயமாக வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் சில வினாக்களை வினவி விடையளிக்க ஆர்வமூட்டுங்கள்.

**எடுத்துக்காட்டு: 1**

வினாக்கள்:

1. நிலா எவை போன்று இருப்பதாக பாடலில் கூறப்பட்டுள்ளது?

விடை:

| பந்து போல் | கிண்ணம் போல் |
|---|---|

**எடுத்துக்காட்டு: 2**

பாடலின் சில அடிகளைக் கொடுத்து அடுத்த அடிகளை எழுதுமாறு பயிற்சி வழங்குங்கள்.

1. பந்து போல் இருக்கிறாய்
   ......................................................
2. கிண்ணம் போல் இருக்கிறாய்
   ......................................................

**செயற்பாடு: 5**

- கீழே தரப்படுகின்ற கதையைக் (ஏற்கனவே கற்ற) காட்சிப்படுத்துங்கள்.
- அக்கதையை இரசனையுடன் வாசித்துக் காட்டுங்கள்.
- அதன் பின்னர் அக்கதையில் இருந்து சில வாக்கியங்களைத் தெரிவு செய்யுங்கள்.
- அவ்வாக்கியங்களை அட்டைக்கீலங்களில் எழுதுங்கள்.
- அவற்றைக் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்களை வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி எல்லாக் குழுக்களுக்கும் அட்டைக்கீலங்களில் எழுதி வழங்குங்கள்.

DRAFT

- அவற்றைக் குழுவாக வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.
- வாசித்த வாக்கியங்களை அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.
- எழுதிய வாக்கியங்களை சுயமாக வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.

**எடுத்துக்காட்டு:**

**கதை**

**நரியும் கொக்கும்**

ஒரு நாள் நரியும் கொக்கும் சந்தித்துக் கொண்டன. நரி கொக்கிடம் ''கொக்கு அக்கா என்னுடைய வீட்டுக்கு வருவீர்களா? '' என்று கேட்டது. அதற்குக் கொக்கு சற்றுத் தயங்கியபடி ''சரி நாளை வருகிறேன்'' என்று கூறியது.

அடுத்த நாள் கொக்கு நரியின் வீட்டுக்குச் சென்றது. நரி, வட்டமான தட்டு ஒன்றில் பாலை ஊற்றி வைத்தது. கொக்கு நரியைப் பார்த்தது.

நரியார் கொக்கைப் பார்த்து ''கொக்கு அக்கா, பாலைக் குடியுங்கள்'' என்றது.

கொக்கினால் பாலைக் குடிக்க முடியவில்லை. ஏனெனில் அதன் அலகு மிகவும் நீளமானது. நரி அதைப் பார்த்துச் சிரித்தது. ''கொக்கு அக்கா நான் குடிப்பது போன்று குடியுங்கள்'' என்று கூறி பாலை நாக்கால் நக்கிக் குடித்துக் காட்டியது. கொக்கு எதுவுமே சொல்லாமல் கவலையுடன் பறந்து சென்றது.

இன்னொரு நாள் கொக்கு நரியாரைச் சந்தித்தது. ''நரியாரே என்னுடைய வீட்டுக்கு விருந்துண்ண வருவீர்களா? '' என்று கேட்டது.

அதற்கு நரி ''சரி வருகிறேன்'' என்று கூறியது. அடுத்த நாள் நரி கொக்கின் வீட்டுக்குச் சென்றது. கொக்கு தட்டையான தட்டு ஒன்றில் பாலை ஊற்றி வைத்தது. ''நரியாரே பாலைக் குடியுங்கள்'' என்றது. நரி மகிழ்வுடன் பாலைக் குடித்தது. அதன் பின்னர் கொக்கிடம் எதுவும் சொல்லாமல் நரி வெட்கத்துடன் திரும்பிச் சென்றது.

சிறிது தூரம் சென்ற நரி என்னை மன்னித்து விடுங்கள். நான் உங்களுக்கு தீமை செய்தேன். ஆனால் எனக்கு நீங்கள் நன்மை தான் செய்தீர்கள். ''இனிமேல் எவருக்கும் இவ்வாறான தீமையை செய்யமாட்டேன்'' என்று கூறிவிட்டு நரி திரும்பி பார்க்காமல் சென்றது.

DRAFT

**கதையில் இருந்து தெரிவு செய்தவை:**

**பகுதி - 1**

- கொக்கு அக்கா வீட்டுக்கு வருவீர்களா?
- சரி நாளை வருகிறேன்.
- கொக்கு நரியின் வீட்டிற்குச் சென்றது.
- நரி வட்டமான தட்டில் பாலை ஊற்றியது.
- கொக்கு அக்கா பாலைக் குடியுங்கள்.
- கொக்கினால் பாலைக் குடிக்க முடியவில்லை.
- கொக்கு அக்கா, நான் குடிப்பது போன்று குடியுங்கள்.
- கொக்கு எதுவுமே சொல்லவில்லை.
- கவலையுடன் பறந்து சென்றது.

**பகுதி - 2**

- இன்னொரு நாள் கொக்கு நரியைச் சந்தித்தது.
- என்னுடைய வீட்டிற்கு வருவீர்களா?
- சரி அக்கா, வருகிறேன்.
- கொக்கின் வீட்டிற்கு நரி சென்றது.
- தட்டில் பாலை ஊற்றிக் கொடுத்தது.
- நரியாரே பாலைக் குடியுங்கள்.
- நரி மகிழ்வுடன் பாலைக் குடித்தது.
- அதன் பின்னர், நரி வெட்கத்துடன் திரும்பிச் சென்றது.
- மீண்டும் கொக்கின் வீட்டிற்கு வந்தது.
- அக்கா என்னை மன்னித்து விடுங்கள்.
- நான் உங்களுக்கு தீமை செய்தேன்.
- நீங்கள் எனக்கு நன்மை செய்தீர்கள்.
- நான் எவருக்கும் இனிமேல் தீமை செய்யமாட்டேன்.

- கதையில் வரும் வாக்கியங்களை மேற்குறிப்பிட்டவாறு அட்டைகளில் எழுதி வாசிக்க இரசனையுடன் வழிப்படுத்துங்கள்.
- ஒரே நாளில் இச்செயற்பாட்டைச் செய்வதனைத் தவிர்க்கவும்.
- இரண்டு, மூன்று நாட்கள் இவ்வாசிப்புச் செயற்பாட்டினைத் தொடர முடியும்.
- ஒவ்வொரு நாளும் சில வாக்கியங்களைப் அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் சில வாக்கியங்களை பூர்த்தி செய்யும் பயிற்சியை வழங்குங்கள்.

**எடுத்துக்காட்டு: 1**

1. நரியும் ...................... சந்தித்துக் கொண்டன.
2. கொக்கு ......................... வீட்டிற்குச் சென்றது.
3. நரி ..................... ஊற்றி வைத்தது.
4. கொக்கினால் பாலைக் ..................... முடியவில்லை.
5. கொக்கு கவலையுடன் ............................ சென்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| பறந்து | கொக்கும் | நரியின் | பாலை | குடிக்க |

**எடுத்துக்காட்டு: 2**

1. ஒருநாள் ........................... நரியைச் சந்தித்தது.
2. கொக்கின் ..................... நரி சென்றது.
3. தட்டு ஒன்றில் பாலை ........................ வைத்தது.
4. நரி மகிழ்ச்சியுடன் பாலைக் ......................
5. நரி வெட்கத்துடன் ............................ சென்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| கொக்கு | வீட்டிற்குச் | ஊற்றி | குடித்தது | திரும்பிச் |

DRAFT

**செயற்பாடு: 6**

- பாடல்கள் / கதைகளின் சில வரிகளை நினைவுபடுத்திக் கூற ஆர்வமூட்டுங்கள்.
- அவற்றை கரும்பலகையில் பட்டியல்படுத்துங்கள்.
- அதன் பின்னர் அவற்றை அப்பியாசக் கொப்பியில் எழுத ஆர்வமூட்டுங்கள்.
- அவர்கள் எழுதியவற்றை சுயமாக இரசனையுடன் வாசித்துக் காட்ட ஊக்கமளியுங்கள்.
- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- மாணவர்களுக்கு எடுத்துக்காட்டுக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்களை அட்டைக் கீலங்களில் எழுதி ஒவ்வொரு குழுக்களுக்கும் வழங்குங்கள். (ஒவ்வொரு எடுத்துக் காட்டுக்களையும் ஒரேநாளில் செயற்படுத்த வேண்டாம்.)

**எடுத்துக்காட்டு: 1**

**(பாடல்களில் இருந்து)**

1. பட்டம் விடுவோம்.
2. பாடிப்பாடிப் பட்டம் விடுவோம்.
3. தட்டைச் சொண்டு வாத்து.
4. தத்திச் செல்லும் வாத்து.
5. வெள்ளை நிற வாத்து.

**எடுத்துக்காட்டு: 2**

**(பாடல்களில் இருந்து)**

1. மஞ்சள் நிறப் பூக்கள்.
2. சின்னச் சின்னப் பூக்கள்.
3. நிலா நிலா வா வா.
4. பந்து அடிக்க வா வா.
5. சோறு உண்ண வா வா.

**எடுத்துக்காட்டு: 3**

**(கதையில் இருந்து)**

1. நரியும் கொக்கும் சந்தித்தன.
2. நரியின் வீட்டிற்கு சென்றது.
3. பாலை ஊற்றி வைத்தது.
4. பாலைக் குடிக்க முடியவில்லை.
5. நரி பாலைக் குடித்தது

DRAFT

**எடுத்துக்காட்டு: 4**

| | |
|---|---|
| 1. | நான் தீமை செய்தேன். |
| 2. | என்னை மன்னித்து விடுங்கள். |
| 3. | நீங்கள் நன்மை செய்தீர்கள். |
| 4. | நான் தீமை செய்யமாட்டேன். |
| 5. | நரி திரும்பிச் சென்றது. |

- இவ்வெடுத்துக்காட்டுக்களில் பயிற்சி பெற்ற பின்னர் மாணவர்களுக்குப் பொருத்தமான பயிற்சிகளை வழங்குங்கள்.

**செயற்பாடு 7:**

- மாணவர்கள் ஏற்கனவே கற்ற பாடல்கள், கதைகளில் இடுவது போலச் செய்தலை பற்றிக் கேட்டு கரும்பலகையில் / வெண்பலகையில் பட்டியற்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு: 1**

- பட்டம் விடுதல் .
- வாத்து போன்று நடத்தல்.
- பூக்கள் மலர்தல்.
- நிலா வெளிச்சத்தில் ஆடுதல்.
- நரி போன்று ஊளை இடுதல்.

**எடுத்துக்காட்டு: 2**

- கொக்கு ஒற்றைக்காலில் நிற்றல்.
- பந்து வந்து அடித்தல்.
- நரி பால் குடித்தல்.
- சோறு உண்ணல்.
- தத்தத் தத்திச் செல்லல்.

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- எடுத்துக்காட்டு - 1 இல் உள்ள வாக்கியங்களை அட்டைகளில் எழுதி குழுக்களுக்கு வழங்குங்கள்.
- மாணவர்களை குழுவாகவும் தனியாகவும் அவற்றை வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.
- அதன் பின்னர் அட்டைகளில் உள்ளவற்றைப் பார்த்து எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அதேபோல் எடுத்துக்காட்டு - 2 இலுள்ள வாக்கியங்களையும் குழுக்களுக்கு அட்டைகளில் எழுதி வழங்குங்கள்.
- முதலில் வழங்கிய செயற்பாடு போன்று இச்செயற்பாட்டையும் செயற்படுத்துங்கள்.
  (ஒரேநாளில் செயற்படுவதைத் தவிர்க்குக.)
- அதன் பின்னர் பொருத்தமான சிறிய பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்.

DRAFT

செயற்பாடு: 8

- மாணவர்கள் கற்ற பாடல்கள் / கதைகளை ஒலி ஒளி இறுவட்டுக்களில் பதிவுசெய்து கொள்ளுங்கள்.
- ஒலி, ஒளிப்பதிவு செய்த பாடல்கள் / கதைகளை மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- அவர்கள் செவிமடுத்த பின் வினாக்களை வினவுங்கள்.
- வினாக்களை கரும்பலகையில் எழுதுங்கள்.
- அவற்றுக்கான விடைகளை சுருக்கமாக எழுத ஆர்வமூட்டுங்கள்.

*எடுத்துக்காட்டு:*

1. பட்டம் விடுவதற்கு எங்கு செல்வோம்?
2. வாத்தின் கால் எவ்வாறானது?
3. அதன் சொண்டு எப்படியானது?
4. வாத்து எப்படிச் செல்லும்?
5. வெற்றி தரும் பூ எது?
6. மனதைக் கவரும் பூ எது?
7. பந்து போன்று இருப்பது எது?
8. கிண்ணம் போன்று இருப்பது எது?
9. நரி யார் வீட்டிற்குச் சென்றது?
10. கொக்கு தனது வீட்டுக்கு யாரை அழைத்தது?
11. நரி யாரிடம் மன்னிப்புக் கேட்டது?
12. நரி அல்லது கொக்கைப் பற்றிக் கூறுங்கள்?

- வினாக்களை ஒலிப்பதிவு செய்து மாணவர்களை செவிமடுக்கச் செய்து, விடையை மட்டும் அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். (ஆசிரியர் கரும்பலகையில் எழுதி உதவ முடியும்) ஒவ்வொரு வினாவாக ஒலிக்க விட்டு விடை எழுத ஆர்வமூட்டுங்கள்.

செயற்பாடு: 9

- மாணவர்கள் இதுவரை கற்ற பாடங்கள் / கதைகளில் பிடித்தமானவற்றைச் சித்திரமாக வரைய ஆர்வமூட்டுங்கள். (எல்லோருக்கும் A4 தாள், சோக் கலர் என்பவற்றை வழங்குங்கள்.)

*எடுத்துக்காட்டு:*

- நிலாக்காட்சி
- பட்டம் விடும் காட்சி
- கொக்கு பறக்கும் காட்சி
- வாத்து நீந்தும் காட்சி
- நரியும் கொக்கும் சந்திக்கும் காட்சி

DRAFT

- மாணவர்கள் வரைந்த சித்திரங்களுக்கு அருகில் அக்காட்சியின் பெயரை எழுத உதவுங்கள்.
- மாணவர்களின் ஆக்கங்கள் எல்லாவற்றையும் காட்சிப்படுத்தி, அதிபர் மற்றும் பெற்றோர் பார்வையிட்டு மாணவர்களைப் பாராட்ட ஊக்கப்படுத்துங்கள். (கண்காட்சியாகக் கூட நடத்தலாம்.)

**கணிப்பீடு:**

- பாடல் அடிகளை இரசனையுடன் வாசித்தல் / எழுதுதல்
- கதையில் வரும் உரையாடல்களை விருப்புடனும் இரசனையுடனும் வாசித்தல்/ எழுதுதல்
- விரல் பொம்மை உரையாடல்களை வாசித்தல் / எழுதுதல்
- போலச் செய்து காட்டிய பாத்திரத்தை வாசித்தல் / எழுதுதல்
- ஒலி ஒளி இறுவட்டுக்களை செவிமடுத்து விடையளித்து எழுதுதல்
- கற்ற பாடல்கள், கதைகளில் வரும் காட்சிகளை வரைதல்; அதற்கு உரிய தலைப்பை எழுதுதல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

DRAFT

# 4

**தேர்ச்சிகள் :**

- $L_4$ – நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகச் செவிமடுப்பார்.
- $S_4$ – நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகப் பேசுவார்.
- $R_4$ – நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக வாசிப்பார்.
- $W_4$ – நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- பாடசாலையுடன் தொடர்புடைய
  - அறிவித்தல்கள்
  - அறிவுறுத்தல்கள்
  - கட்டளைகள்
  - தகவல் பரிமாற்றம்
  - சுய விபரம்

**கற்றற் பேறுகள் :**

- பாடசாலையில் வழங்கப்படும் சிறிய, சுருக்கமான அறிவித்தல்கள், அறிவுறுத்தல்களை விளக்கி அவற்றைப் பாடசாலையிலோ அல்லது வீட்டிலோ சுயமாக வெளிப்படுத்துவார்.
- வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் புரிந்துகொண்டு உரியவாறு துலங்குவார்.
- சிறிய, சுருக்கமான அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், கட்டளைகள் மற்றும் தகவல்களை வாசிக்க முயலுவார்.
- காட்சிப்படுத்தப்படும் அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், கட்டளைகள், தகவல்கள் ஆகியவற்றைத் தெளிவாக எழுதிச் சமர்ப்பிப்பார்.
- தன்னைப் பற்றிய முக்கிய விபரங்களை பெற்றோரின் உதவியுடன் எழுதி வெளிப்படுத்துவதுடன் காட்சிப்படுத்துவார்.

**வளங்கள் :**

- அறிவித்தல் அட்டைக் கீலங்கள், சொல் அட்டைகள், பயிற்சி அட்டைகள், சரியாக கை கழுவும் முறையைக் காட்டும் படங்கள், சிறிய சவர்க்காரக் கட்டிகள், சுயவிபரப் படிவப் பிரதிகள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு: 1**

- மாணவர்களுக்குப் பொருத்தமான சிறிய அறிவித்தல்களைத் தெரிவுசெய்யுங்கள். அதனை பெரிய அட்டைக் கீலமொன்றில் வண்ண எழுதுகருவிகளைப் பயன்படுத்தி எழுதி, ஒட்டுப்பலகையில் காட்சிப்படுத்துங்கள்.

DRAFT

எடுத்துக்காட்டு :

| |
|---|
| அறிவித்தல் - 1 |
| **நாளை பாடசாலையில் சிறுவர் தினம் கொண்டாடப்படும்.** |

| |
|---|
| அறிவித்தல் - 2 |
| **இன்று சித்திரப் போட்டி நடைபெறும்.** |

| |
|---|
| அறிவித்தல் - 3 |
| **நாளை கோலப் போட்டி நடைபெறும்.** |

| |
|---|
| அறிவித்தல் - 4 |
| **நாளை மறுதினம் கதை சொல்லும் போட்டி நடைபெறும்.** |

DRAFT

- காட்சிப்படுத்திய அறிவித்தலை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். அறிவித்தல் தொடர்பான வாக்கியத்தை மாணவர்களுக்கு வழங்குங்கள். (தரம் இரண்டு மாணவர்களுக்கு அறிவித்தல் என்றால் என்ன? என்பது தொடர்பான விளக்கம் கொடுப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்)
- மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள். அதன் பின்னர் மாணவர்களை சோடியாக்கி தமக்கிடையே அவ்வறிவித்தலைக் கூற ஆர்வமூட்டுங்கள். (நான்கு அறிவித்தல்களையும் ஒரே நேரத்தில் அல்லது ஒரே நாளில் வழங்குவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்)
- சோடியாக மாணவர்கள் வாசித்து முடித்ததும் எழுமாறாக மாணவர்களை அழைத்து, அறிவித்தலைக் கூறச்செய்யுங்கள்.
- அதன் பின்னர், கரும்பலகையில் அவ்வறிவித்தலை எழுதுங்கள். ஒட்டுப்பலகையில் ஒட்டப்பட்டுள்ள அறிவித்தலின் கீழே அறிவித்தலில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களை அட்டைகளில் எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு :

**நாளை பாடசாலையில் சிறுவர் தினம் கொண்டாடப்படும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| **நாளை** | **பாடசாலை** | **சிறுவர்** | **தினம்** | **கொண்டாடப்படும்** |

- ஒட்டுப்பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சொற்களை வாசித்துக் காட்டுங்கள். மாணவர்கள் சிலரை அழைத்து வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் நான்கு றூள் கொப்பியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சொற்களை எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் மாணவர்கள் சோடி சேர்ந்து வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் கரும்பலகையில் மாணவர்கள் வாசித்த சொற்களில் எழுத்துக்களை நீக்கி எழுதுங்கள்.

**எடுத்துக்காட்டு :**

| | | |
|---|---|---|
| வ [ ] ப்பறை | கூ [ ] | க [ ] வு |
| பொ [ ] ட்கள் | இ [ ] ங்கள் | |

- விடுபட்ட எழுத்துக்களைக் கூறுமாறு உற்சாகமூட்டுங்கள். அதன் பின்னர் விடுபட்ட எழுத்துக்களைப் பூர்த்திசெய்து கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் எழுதிமுடித்ததும் மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் அறிவித்தல் எழுதப்பட்ட அட்டைக் கீலங்களை வழங்குங்கள். அவர்கள் குழுவாக அறிவித்தலை வாசித்து விளங்கிக்கொள்ள வழிப்படுத்துங்கள். ஒவ்வொரு குழுவாக அழைத்து காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தலை வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.
- மாணவர்கள் வாசித்து முடித்ததும் குழுக்களில் உள்ள அறிவித்தல் கீலங்களை கத்தரிக்கோலால் கீழ்வருமாறு வெட்டிக்கொடுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| **நாளை** | **பாடசாலையில்** | **சிறுவர்** | **தினம்** | **கொண்டாடப்படும்.** |

| | | | | |
|---|---|---|---|---|
| **நாளை** | **பாடசாலையில்** | **சிறுவர்** | **தினம்** | **கொண்டாடப்படும்** |

- வெட்டப்பட்ட அட்டைகளை ஒழுங்குபடுத்தி, அறிவித்தலாக்குமாறு மாணவர்களுக்குக் கூறுங்கள். அவர்கள் குழுவாக அறிவித்தலை ஒழுங்குபடுத்தி மேசையில் வைத்துள்ளார்களா என அவதானியுங்கள். அதன் பின்னர் ஒழுங்குபடுத்திய அறிவித்தலை வாசிக்குமாறு கூறுங்கள். அதன் பின்னர் மாணவர்களை இருவரிருவராக சோடியாக்கி அறிவித்தலைக் கூறுமாறு ஆர்வமூட்டுங்கள்.

**குறிப்பு :** இதேபோன்று ஏனைய அறிவித்தல்களையும் செயற்பாடாக வழங்குங்கள்.

**செயற்பாடு: 2**

- கைகளை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென அறிவுறுத்துங்கள். உணவு உண்ண முன்பும் உணவு உண்ட பின்பும் கைகளைக் கழுவ வேண்டுமென அறிவுறுத்துங்கள்.
- படங்களைக் காட்சிப்படுத்தி மாணவர்களுக்குச் சரியான முறையில் கைகளைக் கழுவுவதற்குரிய முறைகளைச் சொல்லிக்கொடுங்கள்.

DRAFT




நன்றி : சுகம் மருத்துவ சஞ்சிகை (சுகாதாரக் கல்விப் பணியகம்)

- முதலில் படங்களைக் காட்டிக் கைகளைக் கழுவுவதற்குரிய முறைகளைக் கூறுங்கள். அதன் பின்னர் போலச் செய்துகாட்டுங்கள்.
- மாணவர்களை ஆசிரியர் கூறும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி கைகளைக் கழுவுமாறு அறிவுறுத்துங்கள். (போலச் செய்தல் முறையைப் பின்பற்றுங்கள்)

**சரியாகக் கைளைக் கழுவுவதற்கான அறிவுறுத்தல்கள்**

1. கைகளை நீரில் நனைத்துக்கொள்ளுங்கள்.

2. உள்ளங்கைகளில் சவர்க்காரத்தைப் பூசிக்கொள்ளுங்கள்.

3. உள்ளங்கைகளையும் விரல்களுக்கு இடையேயுள்ள இடைவெளிகளையும் மற்றைய கையின் உள்ளங்கையினாலும் விரல்களுக்கு இடையிலும் நன்றாகத் தேயுங்கள்.

4. கையை இறுக்கிப்பொத்தி, புறப்பகுதியை மற்றைய கையின் உள்ளங்கையினால் தேயுங்கள்.

5. பெருவிரலை மறு கையினால் நன்கு தேயுங்கள்.

6. விரல் நுனிகளையும் நகத்தையும் மற்றைய கையில் இருக்கும் சவர்க்கார நுரையினால் நன்கு தேயுங்கள்.

7. சுத்தமான நீரினால் கைகளில் இருக்கும் சவர்க்காரம் அற்றுப்போகும்வரை கழுவுங்கள்.

8. சுத்தமான துணியினால் கையைத் துடைத்துக் காயவிடுங்கள்.

9. அந்தத் துணியை தினமும் சவர்க்காரம் இட்டுக் கழுவி வெயிலில் காயவிடுங்கள்.

- மாணவர்களைச் சிறிய குழுக்களாக்கி கைகழுவும் செயற்பாட்டை ஆசிரியர் கூறும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி செய்யுமாறு கூறுங்கள். அதன் பின்னர் மாணவர்களை வெளியில் உள்ள தண்ணீர்க் குழாய்க்கருகில் அழைத்துச் செல்லுங்கள்.
- மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் சிறிய சவர்க்காரக்கட்டிகள் ஒவ்வொன்று வீதம் வழங்கி, ஆசிரியர் கூறும் கைகளைக் கழுவுவதற்கான அறிவுறுத்தலைப் பின்பற்றி கைகளைக் கழுவிய பின்னர் தாம் கொண்டுவந்த சிறிய துவாயினால் கைகளைத் துடைக்க அறிவுறுத்தவும். கை துடைத்த துவாயை ஒரு பைக்குள் இட்டு வீட்டிற்குக் கொண்டுசென்று சவர்க்காரமிட்டுக் கழுவிக் காயவிட்டு மறுநாள் கொண்டுவருமாறு கூறுங்கள். மீண்டும் வகுப்பில் மாணவர்கள் அமர்ந்துகொண்டதும் ஒவ்வொரு மாணவர் குழுவாக அழைத்து ஆசிரியர் கூறிய அறிவுறுத்தல்களை நினைவுபடுத்திக் கூற உற்சாகமூட்டுங்கள்.
- சில அறிவுறுத்தல்களைக் கூறினால் போதுமானது (வீட்டில் பெற்றோருக்கும் இவ்வறிவித்தலைச் சொல்லிக்கொடுக்குமாறு உற்சாகமூட்டுங்கள்).
- அறிவுறுத்தல்களில் பயன்படுத்தப்பட்ட சொற்களை அட்டைகளில் எழுதி ஒட்டுப்பலகையில் காட்சிப்படுத்துங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| **கைகள்** | **நீர்** | **உள்ளங்கை** | **சவர்க்காரம்** | **விரல்கள்** |
| **பெருவிரல்** | **நகம்** | **நுரை** | **துணி** | **வெயில்** |

- இவற்றை மாணவர்களுக்கு வாசித்துக்காட்டுங்கள். ஒவ்வொரு மாணவனையும் அழைத்து விரும்பிய இரு சொற்களை வாசித்துக்காட்ட ஆர்வமூட்டுங்கள்.
- அதன் பின்னர், எல்லாச் சொற்களையும் அப்பியாசக் கொப்பியில் உறுப்பமைய எழுத வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் சில சொற்களைத் தெரிவுசெய்து சொற்களில் விடப்பட்ட எழுத்துக்களைப் பூர்த்திசெய்யும் பயிற்சிகளை வழங்குங்கள்.

எடுத்துக்காட்டு :

**பயிற்சி 1**

| | | |
|---|---|---|
| 1. கை☐ள் | 2. வெ☐ல் | 3. ந☐ம் |
| 4. விர☐கள் | 5. சவ☐க்காரம் | |

- ஒருமைச் சொற்கள், பன்மைச் சொற்களுக்கும் பயிற்சி வழங்குங்கள்.

**எடுத்துக்காட்டு :**

| | | |
|---|---|---|
| 1. கை | - | ☐ |
| 2. விரல் | - | ☐ |
| 3. நகம் | - | ☐ |
| 4. துணி | - | ☐ |


(ஆசிரியர், மாணவர்களுக்கு இதுபோன்ற பயன்மிக்க அறிவுறுத்தல்களுடன்கூடிய பயிற்சிகளை வழங்க முடியும்)

**செயற்பாடு: 3**

- மாணவர்களை வெளியில் அழைத்துச்சென்று வட்டமாக நிற்கச் செய்யுங்கள். ஆசிரியர் படத்தில் காட்டிய இடத்தில் ரோபோ போன்று நின்றுகொண்டு பேசி கட்டளைகளை இட வேண்டும். அதனைப் பின்பற்றி மாணவர்கள் செயற்பட வேண்டும்.

DRAFT

**எடுத்துக்காட்டு :**




| | | |
|---|---|---|
| ரோபோ | : | ரோபோ சிரித்துக் கொள்கிறார். (சிரியுங்கள்) |
| மாணவர்கள் | : | சிரிக்க வேண்டும். |
| ரோபோ | : | ரோபோ துள்ளச் சொல்கிறார். (துள்ளுங்கள்) |
| மாணவர்கள் | : | துள்ள வேண்டும். |
| ரோபோ | : | ரோபோ கைகளை உயர்த்தச் சொல்கிறார். (உயர்த்துங்கள்) |
| மாணவர்கள் | : | கைகளை உயர்த்த வேண்டும். |
| ரோபோ | : | ரோபோ குனிந்து கால்களைக் கைகளால் தொடச் சொல்கிறார். (தொடுங்கள்) |
| மாணவர்கள் | : | கைகளால் கால்களைத் தொட வேண்டும். |
| ரோபோ | : | ரோபோ பாடச் சொல்கிறார். (பாடுங்கள்) |
| மாணவர்கள் | : | பாடலொன்றைப் பாட வேண்டும். (விரும்பிய) |
| ரோபோ | : | ரோபோ கைகளைத் தட்டச் சொல்கிறார். (தட்டுங்கள்) |
| மாணவர்கள் | : | கைகளைத் தட்ட வேண்டும். |

- இந்தக் கட்டளை விளையாட்டை மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து தமக்குள்ளே கட்டளையிட்டு விளையாட வழிப்படுத்துங்கள். (எல்லோரும் ரோபோ பாத்திரமேற்பதற்கு சந்தர்ப்பம் வழங்குக)
- ரோபோ இட்ட கட்டளைகளை மாணவர்கள் நினைவுபடுத்திக் கூற வழிப்படுத்துங்கள்.

  **எடுத்துக்காட்டு :**

  - சிரியுங்கள்
  - துள்ளுங்கள்
  - உயர்த்துங்கள்
  - தொடுங்கள்
  - பாடுங்கள்
  - தட்டுங்கள்
- மாணவர்கள் கூறும் கட்டளைகளை கரும்பலகையில் எழுதுங்கள். அதனை அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- குழுக்களிடையே சென்று மாணவர்கள் வாசிக்கிறார்களா என அவதானியுங்கள்.

DRAFT

* அதன் பின்னர், சொற்களில் விடுபட்ட எழுத்துக்களை நிரப்பும் பயிற்சியை வழங்குங்கள்.

**எடுத்துக்காட்டு :**

**பயிற்சி 1**

| | |
|---|---|
| 1. சிரி ☐ ங்கள் | 2. துள் ☐ ங்கள் |
| 3. உயர்த் ☐ ங்கள் | 4. தொடு ☐ கள் |
| 5. பா ☐ ங்கள் | 6. தட் ☐ ங்கள் |

ஒரே சொற்களைத் தொடர்புபடுத்தும் பயிற்சியை வழங்குங்கள்.


**பயிற்சி 2**

| (அ) | (ஆ) |
|---|---|
| சிரியுங்கள் | தட்டுங்கள் |
| உயர்த்துங்கள் | துள்ளுங்கள் |
| துள்ளுங்கள் | பாடுங்கள் |
| பாடுங்கள் | உயர்த்துங்கள் |
| தட்டுங்கள் | சிரியுங்கள் |

**செயற்பாடு: 4**

* மாணவர்கள் தகவல்களைச் செவிமடுத்துச் சரியாகப் பரிமாறுவதற்கான பயிற்சியை வழங்குவதே இச்செயற்பாட்டின் நோக்கமாகும். உலகிலுள்ள தகவல்களைத் தரம் இரண்டு மாணவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டதன்று. இப்பயிற்சி ஆசிரியர் பெற்றோருக்கு வழங்கும் தகவல்கள், பெற்றோர்கள் ஆசிரியருக்கு வழங்கும் தகவல்கள் என்பன சரியாகச் சென்றடைய உதவும்.
* மாணவர்களை வெளியே அழைத்துச்சென்று வட்டமாக நிற்கச் சொல்லுங்கள். ஆசிரியர், வட்டமாக நிற்கும் மாணவர்களில் ஒருவருக்கு ஒரு தகவலைச் சொல்ல அவர் அத்தகவலை மற்றைய மாணவருக்குச் சொல்ல வேண்டும். இவ்வாறு சுற்றி இறுதி மாணவருக்கு அத்தகவல் சென்றடைய வேண்டும்.அவர் அத்தகவலை உரத்துக் கூற வேண்டும்.

எடுத்துக்காட்டு :





DRAFT

- இப்பயிற்சி நிறைவு பெற்ற பின்னர், கீழே தரப்பட்டுள்ள தகவல்களை நான்கு குழுக்களுக்கு வழங்கி அவர்களிடையே பரிமாற வழிப்படுத்துக.

    - இன்று மழை பெய்யும்.
    - தம்பி நன்றாக வரைவான்.
    - மாமா வீட்டுக்கு வந்தார்.
    - அதிபர் என்னைப் பாராட்டினார்.

- மாணவர்களை அறுவர் கொண்ட குழுக்களாக்கி அவர்களுக்கிடையே மேற்குறிப்பிட்ட தகவல்களைப் பரிமாற ஊக்கப்படுத்துங்கள். தகவல்களைச் சரியாகப் பரிமாறத் தவறிய மாணவர்களை இனங்கண்டு அவர்களை ஒரு குழுவாக்கி பயிற்சியை வழங்குங்கள்.

எடுத்துக்காட்டு :




- எல்லாக் குழுக்களும் எல்லாத் தகவல்களையும் பரிமாற ஊக்கப்படுத்துங்கள். ஆசிரியரே தகவலை முதலில் ஒரு மாணவருக்குக் கூற வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். பரிமாறப்பட்ட தகவல்களை தனித்தனியாக அட்டைகளில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள். மாணவர்கள் குழுவாகவும் தனியாகவும் வாசிக்க வழிப்படுத்துங்கள். காட்சிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களை அப்பியாசக் கொப்பியில் பார்த்து எழுத வழிப்படுத்துங்கள். முற்றுத் தரிப்பு இட வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு வாக்கியங்களில் உள்ள இடைவெளிகளை நிரப்பும் பயிற்சியை வழங்குங்கள்.

**எடுத்துக்காட்டு :** பயிற்சி

| தம்பி, | மழை, | அதிபர், | வந்தார், | பரிசு |
|---|---|---|---|---|

1. இன்று .................. பெய்யும்.
2. மாமா வீட்டுக்கு ................
3. ............... நன்றாக ஆகுவான்.
4. எனக்கு .................. கிடைத்தது.
5. .............. என்னைப் பாராட்டினார்.

DRAFT

**செயற்பாடு 5**

- மாணவர்கள் எல்லோரும் சுய விபரப் படிவத்தை நிரப்புவதற்காகக் கீழே தரப்பட்டுள்ளவாறு தயாரித்துப் பிரிதியெடுத்து எல்லா மாணவர்களுக்கும் முன்கூட்டியே வழங்கிப் பெற்றோரின் உதவியுடன் பூர்த்திசெய்து வருமாறு கூறுங்கள்.

**சுய விபரப் படிவம்**

மாணவரின் படம்

மாணவர் பெயர் :...................................

கற்கும் வகுப்பு :..................................

வயது :..................................

வீட்டு முகவரி :..................................

.......................................

பெற்றோரின் கையொப்பம்

- தாம் பெற்றோரின் உதவியுடன் பூர்த்திசெய்து வந்த படிவத்தை சோடி சேர்ந்து வாசித்துக் காட்ட வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், எல்லா மாணவர்களையும் தனித்தனியாக வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் தம்மிடம் உள்ள சுய விபரப் படிவத்தைப் பார்த்து அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். ஆசிரியர் பார்வையிட்டு உதவி தேவைப்படும் மாணவர்களை இனங்கண்டு பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ளுங்கள்.

  (தரம் இரண்டு மாணவர்களிடம் தேவைக்கு அதிகமான விபரங்களைப் பூர்த்திசெய்ய வழங்குவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்)

- ஏற்கனவே பிரதியெடுத்து மாணவர்களுக்கு வழங்கிய படிவத்தை மீண்டும் பிரதியெடுத்து மாணவர்களுக்கு வழங்குங்கள் (பூர்த்திசெய்யாத).

- மாணவர்களிடமுள்ள படிவத்தைப் பார்த்து புதிய படிவத்தில் அத்தகவல்களைப் பூர்த்தி செய்ய ஆர்வமூட்டுங்கள்.

**கணிப்பீடு :**

- அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், கட்டளைகள் ஆகியவற்றைச் செவிமடுத்துத் துலங்குதல், வாசித்தல், எழுதுதல், தகவல்களைப் பரிமாறுதல், சுய விபரப் படிவங்களை வாசித்துப் பூர்த்திசெய்தல் ஆகியவற்றைக் கணிப்பிடுக.

DRAFT

# 5

**தேர்ச்சிகள் :**

- $L_5$ – சொற்களஞ்சிய விருத்திக்காகச் செவிமடுப்பார்.
- $S_5$ – சொற்களஞ்சிய விருத்திக்காகப் பேசுவார்.
- $R_5$ – சொற்களஞ்சிய விருத்திக்காக வாசிப்பார்.
- $W_5$ – சொற்களஞ்சிய விருத்திக்காக எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- சிறிய கதைகள்
- ஒலி மரபுச் சொற்கள்
- விடுகதைகள்
- குறியீடுகள் (விளக்கம்)
- சொல்வதெழுதல் (தெரிவுசெய்யப்பட்ட சொற்கள்)

**கற்றற் பேறுகள் :**

- சிறிய கதைகள், மரபுச் சொற்கள் (ஒலி மரபு) ஆகியவற்றைச் செவிமடுத்து அவற்றை மீளவும் முன்வைப்பார். உரிய வகையில் பிரயோகிப்பார்.
- விடுகதைகளைக் கேட்டறிந்து முன்வைப்பதோடு ஆர்வத்துடன் விடுவிப்பார்.
- குறியீடுகளை இனங்காண்பதோடு விளங்கிப் பொருத்தமுறப் பயன்படுத்துவார்.
- தெரிவுசெய்யப்பட்ட சொற்களைக் கவனமாகச் செவிமடுத்து பிழையின்றி எழுதுவார்.

**வளங்கள் :**

- கதைப்படங்கள், சொல்லட்டைகள், விடுகதை அட்டைகள், வினா அட்டைகள், ஒலிப்பதிவுக் கருவி, கணினி, கைப்பேசி, ஒலி மரபுச் சொற்களுக்கான படங்கள், விடுகதைக்கான விடைப் படங்கள், ஒட்டுப்பலகை, அட்டைக் கீலங்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு: 1**

- மாணவர்கள் சொற்களஞ்சியத்தை விருத்திசெய்து கொள்வதற்காகக் கதைப் படங்களை பெரிதாகப் பிரதியெடுத்து காட்சிப்படுத்துங்கள். காட்சிப்படுத்திய கதைப் படங்களை யு4 தாளில் பிரதியெடுத்து குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப அட்டைகளில் ஒட்டி ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள். ஒவ்வொரு குழுவிலும் ஐவர் இடம்பெறுதல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். கதைப் படங்களைப் பார்த்து தனியாகவும் குழுவாகவும் தாம் விரும்பிய வகையில் கூறுவதற்கு ஆர்வமூட்டுங்கள்.


DRAFT

எடுத்துக்காட்டு :

### படக்கதை

## ஆமையும் முயலும்

கதைக்கரு: வி.என்.எஸ்.உதயசந்திரன் சித்திரம்: டி.டி.குமாரி



© பதிப்புரிமையுடையது

**குறிப்பு:** கதைப்படங்களைப் பார்த்துக் கதை கூறும்போது இறந்த காலத்தில் கூறவேண்டும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.

- மாணவர்கள் சுயமாகச் சிந்தித்து ஆக்கபூர்வமாகக் கதைகளைக் கூறுவதற்கு ஆர்வமூட்டுங்கள். மாணவர்களின் கற்பனையாற்றலை விருத்தி செய்யக்கூடிய வகையில் உற்சாகமூட்டுங்கள். வித்தியாசமான கோணத்தில் கதைகளைக் கூறும் மாணவர்களை அவதானியுங்கள். மாணவர்கள் கதைகளைக் கூறி முடித்ததும் ஆசிரியர் கதைப் படங்களைப் பார்த்து மாணவர்களைக் கவரும் வகையில் கதைகளைக் கூறவேண்டும்.

இறுதியில் ஆசிரியர் கதையைச் சுதந்திரமாக தமது மொழிநடையில் இறந்தகாலத்தில் கூற வேண்டும். கூறிய பின் கதைப் படங்களுக்குக் கீழே கதையைச் சுருக்கமாக அட்டைகளில் எழுதி ஒவ்வொரு படத்திற்குக் கீழேயும் ஒட்டுதல் வேண்டும்.

| படம் 1 |
| --- |
| நரி குகை ஒன்றுக்குள் முயல் இருப்பதைக் கண்டது. |

| படம் 2 |
| --- |
| அதனைப் பிடிக்க குகைக்கு அருகில் சென்றது. |

| படம் 3 |
| --- |
| முயல் துள்ளிப்பாய்ந்து ஓடியது. |

| படம் 4 |
| --- |
| வழியில் மானைக் கண்டது. தனக்கு உதவிசெய்யுமாறு கேட்டது. மான் மறுத்துவிட்டது. |

| படம் 5 |
| --- |
| அப்போது அங்கே ஒரு கழுதையைக் கண்டது. கழுதையிடம் தன்னைக் காப்பாற்றுமாறு மன்றாடியது. கழுதையும் மறுத்துவிட்டது. |

| படம் 6 |
| --- |
| என்னசெய்வதென முயலுக்குத் தெரியவில்லை. அப்போது ஒரு யானை வருவதைக் கண்டது. யானையிடம் உதவி கேட்டது. அதேநேரம் நரியும் அவ்விடத்திற்கு வந்தது. |

- அதன் பிறகு என்ன நடந்திருக்குமென மாணவர்கள் ஊகித்துக்கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள். இவ்வாறுதான் நடந்தது எனக்கூறி கதையை நிறைவுசெய்ய வேண்டாம். முடிவினை மாணவர்களிடம் விட்டுவிடுங்கள்.
- கதைப்படங்களுக்கு அருகில் எழுதப்பட்டுள்ள அல்லது ஒட்டியுள்ள வாக்கியங்களை வாசித்துக் காட்டுங்கள்.
- மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள். அதன் பின்னர், மாணவர்களைக் குழுவாக வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- எழுமாறாக சில மாணவர்களை அழைத்துக் கதையை இறந்தகாலத்தில் சுயமாகக் கூற வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர், வினா அட்டைகளைக் காட்சிப்படுத்துங்கள். வினாக்களுக்கு விடையளிக்க மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

DRAFT

**வினா அட்டை**

1. நரி முயலை எங்கே கண்டது?
2. முயல் யாரிடம் முதலில் உதவி கேட்டது?
3. இரண்டாவதாக யாரிடம் உதவி கேட்டது?
4. மூன்றாவதாக யாரிடம் உதவி கேட்டது?

- வினாக்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி சுயமாக விடைகளை எழுத வழிப்படுத்துங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள். எல்லா மாணவர்களினதும் அப்பியாசக் கொப்பிகளைப் பார்வையிடுங்கள்.
- இக்கதையை மாணவர்கள் குழுவாக நடித்துக் காட்டுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குக.

**செயற்பாடு 2**

- கதையொன்றை அறிமுகஞ் செய்வதற்கு முன்னர் அக்கதையைப் பாத்திரங்களின் படங்களைக் (நரி, சிங்கம், குளவி) காட்டி அப்படங்கள் தொடர்பாகக் கேட்டறியுங்கள்.
- கதையைப் பெரிய எழுத்துக்களில் பெரிய அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

எடுத்துக்காட்டு :

**காட்டிற்கு ராஜா யார்?**

அது ஒரு பெரிய காடு. அந்தக் காட்டில் பல மிருகங்கள் வாழ்ந்து வந்தன. ஒரு நாள் நரி ஒன்று வேகமாக ஓடி வந்தது. இதைக் குளவி ஒன்று கண்டது. ஏன் ஓடி வருகிறாய்? என்று குளவி கேட்டது. அதற்கு நரி ''சத்தம் போடாதே'' ராஜா வருகிறார். எங்களைக் கண்டால் கொன்றுவிடுவார் என்றது.

காட்டு ராஜாவா? யார் அவரை ராஜாவாக்கியது? என்று குளவி கேட்டது. நரி பயந்து நடுங்கியது. அப்போது மிருகங்கள் ஒன்று கூடின.

அங்கு வந்த சிங்கம் ''இங்கே என்ன சத்தம்'' எனக் கேட்டது. அதற்கு நரி தந்திரமாகப் பதிலளித்தது. ''இந்தக் குளவி சிங்கத்தைக் காட்டு ராஜாவாக ஏற்கமுடியாது என்று கூறுகிறது'' என்றது. நரியாரே! அப்படியா குளவி கூறியது எனச் சிங்கம் கேட்க, அதற்கு நரி ''ஆம் அரசே'' எனப் பதிலளித்தது. சிங்கம் கர்ஜித்தது.

உடனே குளவி ''நீங்கள் என்னுடன் சண்டையிட்டு வெல்லுங்கள் பார்ப்போம். வென்றால் நீங்கள்தான் ராஜா என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்'' என்று சவால் விட்டது.

வேறு வழியின்றி சிங்கமும் சம்மதித்தது. குகைக்கு வெளியே சண்டை ஆரம்பமானது. சற்றும் எதிர்பாராத சமயத்தில் சிங்கத்தின் மூக்கில் குளவி ''டொக்'' என்று கொட்டியது. சிங்கத்தால் வலி தாங்க முடியவில்லை. தோற்று அவ்விடத்தைவிட்டு ஓடியது.

மற்றைய மிருகங்கள் துள்ளிக்குதித்தன. குளவியைப் பாராட்டின. குளவி ரீங்காரமிட்டபடி பறந்து சென்றது.

- இக்கதையை ஆசிரியர் அபிநயத்துடன் முதலில் வாசித்துக்காட்டுதல் வேண்டும். அதன் பின் கதையை கதைசொல்லும் பாணியில் உணர்வுபூர்வமாகக் கூறுங்கள். (ஒலிப்பதிவு செய்து கணினி மூலம் பயன்படுத்த முடியும்)
- அதன் பின்னர், மாணவர்கள் சிலரை அழைத்து சுயமாகத் தமது மொழிநடையில் கூற வழிப்படுத்துங்கள்.

- கதை கூற முன்வரும் அனைவருக்கும் கதை கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள். கதை கூறத் தயங்கும் மாணவர்களை அழைத்து அவர்களுடன் சேர்ந்து கதை கூறலில் பங்கெடுங்கள். இக்கதையில் வரும் நரி, சிங்கம், குளவி போன்ற பாத்திரங்களையேற்று சுயமாக நடித்துக்காட்ட மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கதையில் வரும் சில உரையாடல்களைப் பேசுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**எடுத்துக்காட்டு :**

1. குளவி : ஏன் ஓடி வருகிறாய்?
   நரி : ராஜா வருகிறார். எம்மைக் கண்டால் கொன்றுவிடுவார்.

2. குளவி : காட்டு ராஜாவா? அவர் யார்?

3. நரி : உங்களைக் காட்டு ராஜாவாக ஏற்க முடியாது என்று குளவி கூறுகிறது.
   சிங்கம் : நரியாரே அப்படியா! குளவி கூறியது?
   நரி : ஆம் அரசே.

4. குளவி : நீங்கள் என்னுடன் சண்டையிட்டு வெல்லுங்கள் பார்ப்போம்.
   வென்றால் நீங்கள்தான் ராஜா என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

- இவ்வாறு மாணவர்களுக்கு நடித்துக்காட்டிப் பேச வையுங்கள்.
  (மாணவர்களிடமுள்ள கூச்ச சுபாவத்தைப் போக்க முகமூடிகளைப் பயன்படுத்த முடியும்)
- மாணவர்கள் நடித்துக்காட்டிப் பேசிய பின்னர் அவர்களிடம் வினாக்களை வினவுங்கள்.
  1. நரியார் ஏன் ஓடிவந்தார்?
  2. ''ஏன் ஓடி வருகிறாய்'' எனக் கேட்டது எது?
  3. நரி சண்டையிட்டு வென்றதா?

- கதையில் பயன்படுத்தப்பட்ட முக்கியமான சொற்களைத் தெரிவுசெய்து அட்டைகளில் எழுதி ஒட்டுப்பலகையில் ஒட்டி வாசிக்க விடுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| காடு | மிருகங்கள் | நரி | குளவி | குகை | வந்தது |
| கண்டது | ராஜா | வருகிறார் | கேட்டது | சிங்கம் | கூறியது |
| சண்டை | தந்திரம் | வெல்லுங்கள் | கர்ச்சித்தது | கொட்டியது | |
| ரீங்காரமிட்டது | | | | | |

- மாணவர்கள் இடர்ப்படும் சொற்களை வாசிப்பதற்கு மீண்டும் மீண்டும் பயிறிசியளியுங்கள். மாணவர்கள் ஏற்கனவே கற்காத சொற்களைத் தெரிவுசெய்து உறுப்பமைய எழுத வழிப்படுத்துங்கள்.

- மாணவர்கள் எழுத்துக்களை இனங்காண்பதில் சிறப்புத் தேர்ச்சியைப் பெறுவதற்காக சொற்களில் எழுத்துக்களை நீக்கி அவ்வெழுத்துக்களை இனங்காணும் பயிற்சியை வழங்குங்கள்.

எடுத்துக்காட்டு :

பயிற்சி : சரியான எழுத்தின் கீழ்க் கோடிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1. | கு ☐ வி | ழ | ள |
| 2. | மி ☐ கம் | ரு | று |
| 3. | கூ ☐ யது | றி | ரி |
| 4. | ச ☐ டை | ன் | ண் |
| 5. | தந்தி ☐ ம் | ற | ர |

(கதையுடன் தொடர்புடைய வேறு பயிற்சிகளையும் வழங்குவதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு)

செயறபாடு: **3**


- தரம் இரண்டு மாணவர்களுக்கு ஒலிமரபுச் சொற்களையே அறிமுகஞ் செய்யுங்கள். தரம் ஒன்றில் கற்ற சொற்களை நினைவுபடுத்தி, புதிய சொற்களை அறிமுகஞ் செய்யுங்கள். (எட்டுச் சொற்களுக்கு மேற்படக்கூடாது என்பதை நினைவிற் கொள்ளுங்கள்)

எடுத்துக்காட்டு :


| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூனை | - | சீறும் | காகம் | - | கரையும் |
| ஆந்தை | - | அலறும் | குதிரை | - | கனைக்கும் |
| மயில் | - | அகவும் | நாய் | - | குரைக்கும் |
| அணில் | - | கீச்சிடும் | புலி | - | உறுமும் |

- இவற்றுக்கான ஒலிகளை இணையத்திலிருந்து (MP3 வடிவில்) பெற்று ஒலிக்கச் செய்து காட்டுங்கள். இதற்கு கைப்பேசியையும் பயன்படுத்த முடியும்.
- ஒலிமரபுச் சொற்களை அறிமுகஞ் செய்யும்போது படங்களுடன் இணைத்து அறிமுகங் செய்வதால் ஒலி மரபுச் சொற்கள் எளிதில் மாணவர்கள் மனதில் பதியும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.


**எடுத்துக்காட்டு :**




அலறும்



கீச்சிடும்



கனைக்கும்




உறுமும்


DRAFT


- மேற்குறிப்பிட்ட பிராணிகளுடைய படங்களைக் கொண்டுவருமாறு முன்கூட்டியே அறிவித்தல் வழங்கிப் பெற்றுக்கொள்க. பிராணிகளின் படங்களை அப்பியாசக் கொப்பியில் ஒட்டி அவற்றுக்கருகில் ஒலிகளை எழுதுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- அதன் பின்னர் மாணவர்களைச் சோடிகளாக்கி, அப்பியாசக் கொப்பியில் ஒட்டியுள்ள பிராணிகளது படங்களின் பெயர்களைக் கூறி, அவற்றின் ஒலிகளைக் கூற வழிப்படுத்துக. சோடிசேர்ந்த இருவரும் மாறிமாறிக் கேட்கவேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.
- அதன் பின்னர், பிராணிகளின் படங்களுக்குரிய ஒலிகளைத் தொடர்புபடுத்தும் பயிற்சியை வழங்குங்கள். A4 தாளில் கணினி மூலம் கீழே தரப்பட்டுள்ள பயிற்சியைத் தயாரித்து எல்லோருக்கும் வழங்குங்கள். அவர்கள் சரியாகத் தொடர்புபடுத்துகிறார்களா என அவதானியுங்கள்.


**எடுத்துக்காட்டு :**


பயிற்சி: 1 ஒலிமரபுச் சொற்களைத் தொடர்புபடுத்துங்கள்.


அலறும்


அகவும்


கனைக்கும்


கரையும்


குரைக்கும்

- அதன் பின்னர், படங்கள் இன்றித் தொடர்புபடுத்தும் பயிற்சியை வழங்குங்கள்.

**எடுத்துக்காட்டு :**

தொடர்புபடுத்துங்கள்

1. மயில் குரைக்கும்
2. குதிரை கீச்சிடும்
3. புலி அகவும்
4. அணில் கனைக்கும்
5. நாய் உறுமும்

DRAFT

**செயற்பாடு: 4**

- பத்து விடுகதைகளைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப விடுகதைக்குரிய விடைப்பட அட்டைகளைக் கொண்ட பெட்டிகளைத் தயாரித்துக் குழுக்களுக்கு வழங்குங்கள். விடுகதைகளை ஒலிப்பதிவு செய்துகொள்ளுங்கள். (ஒலிப்பதிவு செய்ய முடியாவிடின் ஆசிரியரே விடுவிக்க வேண்டும்)

எடுத்துக்காட்டு : விடுகதைகள்

1. மேலே எறிந்தால் கீழே வருவான், தரையில் போட்டால் மேலே போவான் அவன் யார்?

2. ஆடியாடி நடப்பான்; அகிலம் அதிர நடப்பான் அவன் யார்?

3. பற்கள் உண்டு ஆனால் கடிக்கத் தெரியாது அது என்ன?

4. நீரிலே நீந்திவரும் ; தரையிலே தாவிவரும் அது என்ன?

5. உடல் முழுதும் காற்று ; ஆனால் சுவாசிக்க மாட்டான் அவன் யார்?

6. கையளவு உடம்புக்காரன் ; காவலுக்குக் கெட்டிக்காரன் அவன் யார்?


7. உயிரற்ற பறவை ஊரூராய்ப் பறக்கும் அது என்ன?

8. மீன்பிடிக்கத் தெரியாது ஆனால் வலை பின்னுவான் அவன் யார்?

9. கோபத்திற்கு வாயைக் காட்டுவான்; நன்றிக்கு வாலைக் காட்டுவான் அவன் யார்?

10. நனைந்தாலும் நடுங்கமாட்டான் அவன் யார்?

**விடுகதைகளின் விடைக்குரிய பட அட்டைகள்**



DRAFT

- ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கும் அல்லது ஆசிரியர் விடுக்கும் விடுகதைகளுக்குரிய விடை அட்டைகளை மாணவர்கள் கண்டுபிடித்து விடையைக் கூற வேண்டும்.
- அதன் பின்னர் ஆசிரியர் விடுகதைகளை அட்டைக் கீலங்களில் வண்ண எழுதுகோல்களால் எழுதி ஒட்டுப்பலகையில் ஒட்டி மாணவர்களுக்கு வாசித்துக்காட்ட வேண்டும்.ஆசிரியருடன் சேர்ந்து மாணவர்களும் விடுகதைகளை வாசிக்க வேண்டும். அதன் பின்னர் குழுவில் உள்ளவர்களுடன் இணைந்து உரத்து வாசிக்க வேண்டும்.
- அதன் பின்னர் விடுகதைகள் மூன்றினைப் பார்த்தெழுதி அவற்றுக்கருகில் விடைகளையும் எழுத வேண்டும் என அறிவுறுத்துங்கள்.


  (ஒரே நாளில் எல்லா விடுகதைகளையும் எழுத முடியாது என்பதை நினைவிற் கொள்ளுங்கள்)

கதைகள் சொல்வது போலப் பிள்ளைகளுக்கு விடுகதைகளையும் சொல்லிக்கொடுக்க வேண்டும். அவர்களது சிந்தனைத்திறனை விடுகதைகள் வளர்க்கும்.

DRAFT

**செயற்பாடு: 5**

- மாணவர்களுக்கு தரம் ஒன்றில் கற்ற போக்குவரத்துக் குறியீடுகளை நினைவூட்டுங்கள். அக்குறிகளின் விளக்கத்தைக் கேட்டறியுங்கள்.



**பேருந்துத் தரிப்பிடம்**




**முன்னால் பாதசாரிகள் கடவை**



**முன்னால் சிறுவர் கடவை**

- அதன் பின்னர், கீழ்வரும் குறியீடுகளைப் பெரிதாகப் பிரதியெடுத்து அட்டைகளில் ஒட்டி ஒட்டுப்பலகையில் காட்சிப்படுத்துங்கள்.









- **தரம் இரண்டு மாணவர்களுக்கு மேலே தரப்பட்டுள்ள மூன்று குறியீடுகளை மட்டும் அறிமுகம் செய்யுங்கள்.**

- இக்குறியீடுகளை மாணவர்கள் பார்வையிட ஊக்கப்படுத்துங்கள். பெற்றோருடன் வீதியில் செல்லும்போது எங்காவது இக்குறியீடுகளைக் கண்டிருக்கிறீர்களா எனக் கேட்டறியுங்கள். இக்குறியீடுகள் காணப்படும் இடங்கள், அவற்றின் முக்கியத்துவம் என்பவை பற்றிக் கலந்துரையாடுங்கள். இக்குறியீடுகளைப் பிரதியெடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். அவர்கள் அக்குறியீடுகளைத் தனித்தனியாக வெட்டியெடுத்து அப்பியாசக் கொப்பியில் ஒட்டுவதற்கு வழிப்படுத்துங்கள்.

- ஒட்டுப்பலகையில் காட்சிப்படுத்திய குறியீடுகளுக்குக் கீழே பின்வருமாறு அட்டைகளில் எழுதி ஒட்டுங்கள்.






பேருந்துத் தரிப்பிடம் ஒலியெழுப்பத் தடை நிறுத்துக

- குறியீடுகளுக்குக் கீழே எழுதப்பட்டுள்ள விளக்கத்தை அப்பியாசக் கொப்பியில் ஒட்டிய குறியீடுகளுக்கு அருகில் எழுத வழிப்படுத்துங்கள். குறியீடுகளின் விளக்கத்தைச் சோடியாக உரத்து வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் குறியீடுகளையும் அதன் விளக்கத்தையும் தொடர்புபடுத்தும் பயிற்சியைப் பிரதியெடுத்து மாணவர்களுக்கு வழங்கி தொடர்புபடுத்த அறிவுறுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு :**

தொடர்புபடுத்துங்கள்.

 பேருந்துத் தரிப்பிடம்

 ஒலியெழுப்பத் தடை


 நிறுத்துக

 வைத்தியசாலை


- சரியான விடையைக் கண்டுபிடித்து அதன் கீழக் கோடிடும் பயிற்சியை பிரதியெடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். வாசித்துச் சரியான குறியீடுகளைக் கண்டுபிடிக்க ஆர்வமூட்டுங்கள்.

**எடுத்துக்காட்டு :**


1. பேருந்துத் தரிப்பிடம்

2. வைத்தியசாலை


   

3. நிறுத்துக


   

DRAFT

4. முன்னால் சிறுவர் கடவை

5. முன்னால் பாதசாரிகள் கடவை

- இவ்வாறான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் மாணவர்கள் குறியீடுகளைச் சரியாக இனங்காண்பார்கள் என்பதை நினைவிற்கொள்க.

**செயற்பாடு: 6**

- மாணவர்கள் இதுவரை கற்ற சொற்களைப் பட்டியற்படுத்துங்கள். அச்சொற்களை அட்டைகளில் எழுதிக் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப வழங்குங்கள்.

**கதை - முதலாம் நாள்**

| | | | | |
|---|---|---|---|---|
| காடு | நரி | குளவி | குகை | தந்திரம் |
| சண்டை | வந்தது | மிருகங்கள் | கூறியது | கேட்டது |

- இச்சொற்களைக் குழுவாக வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- சரியாக உச்சரித்து வாசிக்கிறார்களா என்பதை அவதானியுங்கள்.
- அச்சொற்களை சொல்வதெழுதலாக வழங்குங்கள். மாணவர்களுக்கு அருகில் சென்று அவர்கள் எழுதிய சொற்களைப் பார்வையிட்டு திருத்தங்களை மேற்கொள்ளுங்கள். பிழைவிட்ட சொற்களை மீண்டும் எழுதுமாறு வலியுறுத்துங்கள்.

DRAFT

**ஒலி மரபுச் சொற்கள் - இரண்டாம் நாள்**

கீழே தரப்பட்டுள்ள சொற்களைக் கரும்பலகையில் பெரிய எழுத்தில் எழுதுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சீறும் | அகவும் | கரையும் | உறுமும் |
| கனைக்கும் | கீச்சிடும் | அலறும் | |

- இச்சொற்களை தனித்தனியாக மாணவர்களை வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- சரியாக உச்சரிக்கிறார்களா என அவதானியுங்கள்.
- அதன் பின்னர் சொல்வதெழுதலை வழங்குங்கள்.
- எல்லா மாணவர்களது கொப்பிகளையும் பார்வையிடுங்கள்.
- இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.
- எந்தச் சொற்களை எழுதும்போது அவர்கள் இடர்ப்படுகிறார்கள் என அவதானித்து, பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ளுங்கள்

**விடுகதைச் சொற்கள் - மூன்றாம் நாள்**

- விடுகதைகளுக்கான விடைகளைச் சொல்வதெழுதலாக வழங்குங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| நாய் | சிலந்தி | விமானம் | பலூன் | குடை |
| தவளை | சீப்பு | யானை | பந்து | பூட்டு |

- சரியான திசைமுகத்தைப் பின்பற்றி எழுதுகிறார்களா என்பதையும் கூறப்படும் சொற்களைச் சரியாகச் செவிமடுத்து எழுதுகிறார்களா என்பதையும் அவதானியுங்கள். சரியான திசைமுகத்தைப் பின்பற்றி எழுதாத மாணவர்களுக்குச் சரியாக எழுதும் பயிற்சியை வழங்குங்கள். எழுத்துக்களைத் தெளிவாகவும் அழகாகவும் எழுதுகின்ற மையை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

**குறியீடுகள் - நான்காம் நாள்**

- குறியீடுகளுடன் தொடர்புடைய சொற்களை எழுதிப் படங்களின்றிக் காட்சிப்படுத்துங்கள். அவற்றை மாணவர்கள் சரியாக வாசிக்க வழிப்படுத்துங்கள்.

| | | | |
|---|---|---|---|
| தரிப்பிடம் | வைத்தியசாலை | நிறுத்துக | பேருந்து |
| ஒலி | கடவை | பாதசாரிகள் | தரிப்பிடம் |
| தடை | சிறுவர் | பேருந்து | |

- இச்சொற்களைச் சொல்வதெழுதலாக வழங்குங்கள். இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு அவ்விடர்களை நிவர்த்திசெய்யக்கூடிய பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ளுங்கள்.

**கணிப்பீடு :**

- கதையைச் சுயமாக முன்வந்து கூறுதல்
- கதையில் வரும் உரையாடல்கள் சிலவற்றை நினைவுபடுத்திக் கூறுதல்
- விடுகதைகளை விடுவித்தல்
- குறியீடுகளை இனங்காணலும் விடுவித்தலும்
- கற்ற சொற்களைச் சொல்வதெழுதலாக எழுதுதல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

DRAFT

# 6

**தேர்ச்சிகள் :**

- **$L_6$** – தொடர்பாடலுக்காகச் செவிமடுப்பார்.
- **$S_6$** – தொடர்பாடலுக்காகப் பேசுவார்.

**உள்ளடக்கம் :**

- விளையாட்டுக் கடை (மாதிரி)
- புத்தகசாலை
- வானொலி / தொலைக்காட்சி

**கற்றற் பேறுகள் :**

- பொது இடங்களில் எவ்வாறு பேச வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டு கண்ணியமாகப் பேசுவார்.
- மாற்றங்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்துச் செவிமடுத்துத் துலங்குவார்.
- ஊடகங்களில் பேசுவதைப் போன்று தாமும் சுயமாகப் பேசுவதற்கு முன்வருவார்.

**வளங்கள் :**

- மாதிரிப் பழக் கடைக்குரிய விளையாட்டுப் பழங்கள், புத்தகசாலையில் விற்கப்படும் பொருட்கள், மாதிரி வானொலிப் பெட்டி (காட்போட் பெட்டி), தொலைக்காட்சிப் பெட்டி (காட்போட் பெட்டி), ஒலிப்பதிவுக் கருவி, கணினி

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**


- பழக் கடை ஒன்றை அமைப்பதற்குப் பாடசாலையில் உள்ள பிளாத்திக்குப் பழங்களைப் பயன்படுத்தலாம். பிளாத்திக்குப் பழங்கள் கிடைக்கவில்லையாயின் மாணவர்களுக்கு முன்கூட்டியே கூறி ஒருசில பழங்களைக் கொண்டுவருமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள்.

***எடுத்துக்காட்டு :***

மாம்பழம், வாழைப்பழம், பப்பாளிப்பழம், கொய்யாப்பழம், திராட்சைப்பழம், பலாப்பழம், தோடம்பழம், விளாம்பழம், மாதுளம்பழம், அப்பிள் போன்றவை


- தமது பிரதேசத்தில் கிடைக்கும் பழங்களையே மாணவர்கள் கொண்டுவருதல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். கொண்டுவர முடியாத மாணவர்களுக்கு உதவுங்கள். பொருட்களை வாங்குவதற்கு கற்றலுக்காக கடைகளில் விற்கும் மாதிரிப் பணத்தாள்களைப் பயன்படுத்துங்கள். பணத்தாள்களை நகல்பிரதி எடுப்பதைத் தவிர்க்கவும்.

**எடுத்துக்காட்டு :**



DRAFT

- பெற்றோரின் உதவியுடன் பழக்கடை ஒன்றை அமைத்துக்கொள்ளுங்கள். பழங்களுக்கு அருகில் பழங்களின் பெயர்களை அட்டைகளில் எழுதி வையுங்கள்.



**எடுத்துக்காட்டு :**

| | | |
|---|---|---|
| மாம்பழம் | விளாம்பழம் | மாதுளம்பழம் |
| பலாப்பழம் | வாழைப்பழம் | கொய்யாப்பழம் |

- மாணவர்கள் சிலரைத் தெரிவுசெய்து பழங்களை விற்பனை செய்பவர்களாகவும் ஏனைய மாணவர்களை பொருட்களை வாங்குபவர்களாகவும் மாற அறிவுறுத்துங்கள். பொருட்களை வாங்குபவர்கள் பெற்றோர்கள் போன்று உடையணிந்து வாங்குவதற்கு வழிப்படுத்துங்கள். (பெற்றோரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்)
- கடையில் பழங்களை விற்பனை செய்பவர்களும் பழங்களை வாங்குபவர்களும் பண்பாகவும் சுமுகமாகவும் உரையாடுதல் வேண்டும் என்பதை மாணவர்களுக்கு விளக்குங்கள்.

**எடுத்துக்காட்டு :**

| | | |
|---|---|---|
| **வாங்குபவர்** | : | ஐயா, மாம்பழம் என்ன விலை? |
| **விற்பவர்** | : | தம்பி, மாம்பழம் பத்து ரூபாய். |
| **விற்பவர்** | : | உங்களுக்கு எத்தனை பழங்கள் வேண்டும்? |
| **வாங்குபவர்** | : | எனக்கு இரண்டு பழங்கள் வேண்டும். |
| **விற்பவர்** | : | இருபது ரூபாய் தாருங்கள். |

..........................................................................................

..........................................................................................

- மாணவர்கள் சுதந்திரமாக பொருட்களை வாங்குவதற்கு அனுமதியுங்கள். பழங்களை வாங்கும்போது பழங்களின் பெயர்களைச் சரியாக உச்சரிக்கிறார்களா என அவதானியுங்கள். பழக்கடையில் பழங்களுக்கு எதிரே எழுதி வைக்கப்பட்டுள்ள பழங்களின் பெயர்களை வாசிக்க ஊக்கப்படுத்துங்கள்.
- விளையாட்டுக் கடைச் செயற்பாடு நிறைவுபெற்றதும் மாணவர்களை வகுப்பறைக்கு அழைத்துச்சென்று கலந்துரையாடுங்கள். வினாக்களை வினவுங்கள்.

DRAFT

**எடுத்துக்காட்டு :**

- பழக்கடையில் விற்கப்பட்ட பழங்கள் எவை?
- உங்களுக்கு விருப்பமான பழம் ஒன்றைக் கூறுங்கள்? (ஒவ்வொருவராக)
- பழங்களை எவ்வாறு உண்ண வேண்டும்?

(பழங்களை உப்பு நீரில் கழுவிய பின்னரே உண்ணவேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.

பழக்கடையில் உள்ள பழங்களின் படங்களை அப்பியாசக் கொப்பியில் ஒட்டிப் பெயர்களை எழுதுமாறு ஊக்கப்படுத்துங்கள்.

**செயற்பாடு: 2**

- பாடசாலையில் மாதிரிப் புத்தகக்கடை / புத்தகசாலை ஒன்றை அமையுங்கள். இதற்கான உதவியைப் பெற்றோரிடம் இருந்து பெற்றுக்கொள்ளுங்கள்.



**எடுத்துக்காட்டு :**

**புத்தகக் கடையில் இருக்கவேண்டிய பொருட்கள்**

கரிக்கோல்கள் (பென்சில்), எழுதுகோல்கள் (பேனைகள்), அப்பியாசக் கொப்பிகள், அழிறப்பர்கள், சிறிய கதைப் புத்தகங்கள் போன்றவை

(தனியார் பயிற்சிப் புத்தகங்களை மாதிரிப் புத்தகக் கடையில் வைத்திருப்பதைத் தவிர்க்கவும்)

- மாணவர்கள் சிலரை புத்தக விற்பனையாளர்களாகவும் ஏனையவர்களை புத்தகக் கடையில் பொருட்களை வாங்கும் மாணவர்களாகவும் செயற்பட வையுங்கள்.
- புத்தகக் கடையில் பொருட்களை வாங்கும்போது பண்புடனும் சுமுகமாகவும் உரையாடுதல் வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுங்கள். இச்செயற்பாட்டில் எல்லா மாணவர்களும் பங்குபற்ற வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.
- மாணவர்களுக்கு புத்தகசாலைக்கும் வாசிகசாலைக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கிப் புரியவையுங்கள்.
- இச்செயற்பாடு முடிவடைந்ததும் மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். வினாக்களை வினவுங்கள்.

எடுத்துக்காட்டு :

- புத்தகசாலைக்குச் சென்றிருக்கிறீர்களா?
- யாருடன் சென்றீர்கள்?
- எவற்றை வாங்கினீர்கள்?

என்பதுபோன்ற வினாக்களை வினவுங்கள். புத்தகசாலையில் விற்கப்படும் பொருட்களைச் சுயமாக அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு: 3**

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். அவர்களைத் தமது குழுக்களிடையே காணொளியில் பேசுவதுபோன்று பேச வையுங்கள். அதன் பின்னர் ஒவ்வொரு குழுவாக அழைத்து மாதிரி ஒலிவாங்கி ஒன்றைக் கொடுத்து அவர்களை உரையாடவும் பாடவும் கதை சொல்லவும் ஆர்வமூட்டுங்கள. அவர்கள் பேசுவதை ஒலிப்பதிவு செய்து ஒலிக்கவிடுங்கள். அவர்களின் முக மாற்றத்தினை அவதானியுங்கள். பாராட்டுங்கள்.

**செயற்பாடு: 4**

- முன்கூட்டியே அட்டைப் பெட்டியில் தொலைக்காட்சிப் பெட்டியொன்றைத் தயாரித்து வைத்துக்கொள்ளுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி அதற்குப் பின்னால் நின்று தொலைக்காட்சியில் பேசுவது போன்று பேச வையுங்கள்.



- அதன் பின்னர் மாணவர்கள் விரும்பியவாறு நடித்துக் காட்டுவதற்கோ கதை சொல்வதற்கோ அறிவிப்புச் செய்வதற்கோ செய்தி வாசிப்பதற்கோ கருத்துக்களைச் சொல்வதற்கோ ஆர்வமூட்டுங்கள். இச்செயற்பாட்டின் ஊடாக தொடர்பாடல் திறன் விருத்தியடையும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

**கணிப்பீடு :**

- கடையில் பொருட்களை விற்கும்போதும் வாங்கும்போதும் உரையாடுதல்
- பழங்கள், பொருட்களின் பெயர்களைச் சரியாக உச்சரித்தல்
- போலச் செய்தல்
- தனது திறமைகளைக் காட்ட முன்வருதல்

போன்றவற்றைக் கணிப்பீடு செய்தல்.

DRAFT

**தேர்ச்சிகள் :**

$R_6$ – தொடர்பாடலுக்காக வாசிப்பார்.

$W_6$ – தொடர்பாடலுக்காக எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- பெயர்ப் பலகைகள் (பாடசாலை)
- நேர அட்டவணை (புகையிரத / பேருந்து)
- ஒட்டிகள் (லேபிள்கள்)

**கற்றற் பேறுகள் :**

- பாடசாலைப் பெயர்ப் பலகைகளை வாசித்துப் புரிந்துகொள்வதோடு தகவல்களையும் பெற்றுக்கொள்ள முயல்வார்.
- நேர அட்டவணையில் (புகையிரத / பேருந்து) எழுதப்பட்டுள்ள இடங்களின் பெயர்கள், ஒட்டிகளின் பெயர்கள் ஆகியவற்றை வாசித்துத் தெரிந்துகொள்வார்.

**வளங்கள் :**

- பாடசாலையில் உள்ள இடர்கள், அறைகள் ஆகியவற்றின் பெயர்கள் எழுதப்பட்ட அட்டைகள், புகையிரத / பேருந்து நேர அட்டவணை (இடங்களின் பெயர்கள்), ஒட்டிகள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு: 1**

- பாடசாலையை அமைதியாகச் சுற்றிப்பார்க்க மாணவர்களை அழைத்துச் செல்லுங்கள். அங்குள்ள பெயர்ப் பலகைகளை வாசிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள். மீண்டும் வகுப்பிற்கு மாணவர்களை அழைத்து வந்து அவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்கள் வாசித்த பெயர்ப் பலகைகளைப் பற்றிக் கேட்டறியுங்கள். அவற்றை அட்டைகளில் எழுதி ஒட்டுப் பலகையில் காட்சிப்படுத்தி அவற்றை வாசிக்கவும் எழுதவும் வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு :**

| | | |
|---|---|---|
| அலுவலகம் | அதிபர் | நூலகம் |
| முதலுதவி அறை | மனையியல் அறை | கணினிக்கூடம் |
| ஓய்வு அறை | சிற்றுண்டிச்சாலை | விளையாட்டு அறை |
| பற்சிகிச்சை நிலையம் | தேசிய சேமிப்பு வங்கி | வரவேற்பறை |
| சித்திலெவ்வை மண்டபம் | விவேகானந்தர் மண்டபம் | விபுலானந்தர் மண்டபம் |

DRAFT

- • மாணவர்களுக்குக் கீழ்வரும் பயிற்சியை வழங்குங்கள்.

**எடுத்துக்காட்டு** : சொற்களில் உள்ள விடுபட்டுள்ள எழுத்துக்களைக் கண்டுபிடியுங்கள்.

| | |
|---|---|
| 1. அ.....பர் (தி, றி) | 2. நூ.....கம் (ள, ல) |
| 3. முத.....தவி (லு, ழு) | 4. ப.....சிகிச்சை (ற், ள்) |
| 5. அ.....வலகம் (ளு, லு) | 6. சிற்.....ண்டிச்சாலை (ரு, று) |

**எடுத்துக்காட்டு** : எழுத்துக்களை ஒழுங்குபடுத்திச் சொற்களாக்குங்கள்.

| | |
|---|---|
| 1. மு / லு / த / வி<br>................................... | 2. வி / டு / ளை / ட் / யா<br>..................................... |
| 3. சி / று / ற் / டி / ன்<br>................................... | 4. சே / ப் / மி / பு<br>..................................... |

**செயற்பாடு: 2**

- கீழே தரப்பட்டுள்ளவாறான நேர அட்டவணை ஒன்றைத் தயாரித்துக் காட்சிப்படுத்துங்கள். நேர அட்டவணையில் உள்ள இடங்களின் பெயர்களை வாசித்தறிய மாணவர்களை ஆர்வமூட்டுங்கள்.

**புகையிரத சேவை**

(இரவு நேர கடுகதி / அரைக்கடுகதிப் புகையிரதங்கள்)

| புகையிரத வகை | பயணம் |
|---|---|
| இரவுநேரப் புகையிரதங்கள் | கொழும்பு - பதுளை |
| இரவுநேரப் புகையிரதங்கள் | கொழும்பு - மட்டக்களப்பு |
| இரவுநேரப் புகையிரதங்கள் | கொழும்பு - திருகோணமலை |
| இரவுநேரப் புகையிரதங்கள் | கொழும்பு - வவுனியா |
| இரவுநேரப் புகையிரதங்கள் | கொழும்பு - காங்கேசன்துறை |

- புகையிரத சேவை அட்டவணையை (மாதிரி) பெரிதாக எழுதிக் காட்சிப்படுத்துங்கள். காட்சிப்படுத்திய இரவு நேரப் புகையிரத அட்டவணையை மாணவர்கள் வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் புகையிரதம் செல்லும் இடங்களின் பெயர்களைக் கூறுமாறு உற்சாகமூட்டுங்கள். அவர்கள் கூறும் இடங்களைக் கரும்பலகையில் பெரிய எழுத்துக்களில் எழுதுங்கள்.

**எடுத்துக்காட்டு :**

| | |
|---|---|
| கொழும்பு | பதுளை |
| மட்டக்களப்பு | திருகோணமலை |
| காங்கேசன்துறை | |

- கரும்பலகையில் எழுதிய இடங்களைப் பார்த்து உறுப்பமைய எழுதிச் சரியாக உச்சரித்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.

DRAFT

- அருகில் புகையிரத நிலையம் இருப்பின் புகையிரதத்தைப் பார்வையிட அழைத்துச் செல்லுங்கள். இன்றேல் பெற்றோரிடம் பிள்ளைகளை புகையிரத நிலையத்தைப் பார்வையிட அழைத்துச் செல்லுமாறு கூறுங்கள்.
- பிள்ளைகளைப் புகையிரதமாக்கி விளையாடுங்கள். புகையிரத நிலையத்தில் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை மாணவர்களிடம் சேர்ந்து நீங்களும் வழங்குங்கள். புகையிரத நிலையச் செயற்பாடுகளை விபரியுங்கள். காணொளிக்காட்சி இருப்பின் அதனைப் பார்வையிட அனுமதியுங்கள்.
- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி ஒவ்வொரு குழுவிற்கும் ஐந்து அட்டை வீதம் வழங்குங்கள்.
- புகையிரத அட்டவணையைப் பார்த்து புகையிரதம் செல்லும் இடங்களை அட்டைகளில் எழுதிக் காட்சிப்படுத்தி உரத்து வாசிக்குமாறு ஊக்கமளியுங்கள்.
- மாணவர்களுக்குக் கீழே தரப்பட்டுளள்வாறான பயிற்சியைப் பிரதியெடுத்து மாணவர்கள் எல்லோருக்கும் வழங்குங்கள். புகையிரத அட்டவணையில் உள்ள இடங்களை மட்டும் கண்டுபிடித்து அவ்வட்டைகளைச் சுற்றி வட்டமிடுமாறு கூறுங்கள்.

**எடுத்துக்காட்டு :**

**அட்டன்**

**கண்டி குருநாகல்**

**கொழும்பு பதுளை பேராதனை யாழ்ப்பாணம்**

**மட்டக்களப்பு திருகோணமலை சிலாபம்**

**வவுனியா புத்தளம்**

**அநுராதபுரம்**

- நேர அட்டவணையில் இடம்பெறாத இடங்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி உரத்து வாசிக்குமாறு வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு: 3**

- பழச்சாறு அல்லது பழக்கலவை ஒட்டிகளைப் போதுமானளவு தயாரித்துக் கொள்ளுங்கள். மாணவர்கள் எல்லோரையும் ஒட்டி ஒட்டப்படாத போத்தல்களைக் (ஜாம் போத்தல்) கொண்டுவருமாறு கூறுங்கள். பழக்கலவை / பழச்சாறுகளின் ஒட்டிகளை ஒட்டுப் பலகையில் காட்சிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு :**

| | | |
|---|---|---|
| **மாம்பழச்சாறு** | **விளாம்பழச்சாறு** | **திராட்சைச்சாறு** |
| **அன்னாசிச்சாறு** | **பப்பாளிச்சாறு** | **தோடம்பழச்சாறு** |

- மாணவர்களை அறுவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவிற்கும் மேலே கூறப்பட்ட பழச்சாறுகளின் பெயர்களை அட்டைகளில் எழுதி வழங்குங்கள்.

DRAFT

- ஒவ்வொருவரும் ஒரு அட்டை வீதம் எடுத்துக்கொள்ளுமாறு கூறுங்கள்.அதன் பின்னர் எதுவுமே எழுதாத ஒட்டிகள் ஆறினை ஒவ்வொரு குழுவிற்கும் வழங்குங்கள்.
- அந்த ஒட்டிகளில் குழுக்களில் உள்ள ஒவ்வொருவரும் தம்மிடமுள்ள அட்டையைப் பார்த்து ஒரு பழச்சாறின் பெயரை எழுதி போத்தலில் ஒட்ட வேண்டும் என வலியுறுத்திக் கூறுங்கள்.




- போத்தலில் எழுதப்பட்ட ஒட்டிகளைப் பார்த்து வாசிக்கவும். அவற்றின் பெயர்களை எழுதவும் வழிப்படுத்துங்கள். ஒவ்வொரு குழுவாக அழைத்துத் தமது கையிலுள்ள போத்தல்களில் எழுதப்பட்டுள்ள பழச்சாறுகளின் பெயர்களை வாசித்துக்கூற வழிப்படுத்துங்கள்.




- அதன் பின்னர் பழச்சாறு தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட வளங்களின் பெயர்களை ஒழுங்குபடுத்தும் பயிற்சியை வழங்குங்கள்.

**எடுத்துக்காட்டு :**

| எழுத்துக்களை ஒழுங்குபடுத்திச் சொற்களாக்குங்கள். | |
|---|---|
| 1. மா ப ம் ழ ம் | 2. தி ட் ரா ப் சை ப ம் ழ |
| 3. அ னா ன் ப் சி ப ம் ழ | 4. தோ ட ப ம் ழ ப ம |
| 5. ப பா ப் ளி ப ப் ழ ம் | 6. வி ளா ப ம் ம் ழ |

**கணிப்பீடு :**

- பாடசாலைப் பெயர்ப்பலகைகளை வாசித்து எழுதுதல்
- புகையிரத / பேருந்து நேர அட்டவணையை வாசித்து இடங்களின் பெயர்களை எழுதுதல்
- புகையிரத / பேருந்து நிலையங்களின் ஒலிபெருக்கியில் கூறப்படும் அறிவித்தல்கள் சிலவற்றைக் கூறுதல்
- ஒட்டிகளை எழுதுதல், ஒட்டுதல், வாசித்தல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

DRAFT

## 7

**தேர்ச்சிகள் :**

- **L₇** – மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.
- **S₇** – மொழியாட்சிததிறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார்.
- **R₇** – மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.
- **W₇** – மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- காட்சிப் படங்கள் / கதைப் படங்கள்
- சுயசரிதை
- கொன்றைவேந்தன்
  (தெரிவுசெய்யப்பட்ட 10 அடிகள்)
- கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய)
- பண்டிகைகள்

**கற்றற் பேறுகள் :**

- காட்சிப் படங்களைப் பார்த்து தமது மொழிநடையில் விபரிப்பார், எழுதுவார்.
- படங்களின் தொடர்பைக் கண்டுபிடித்துக் கதையொன்றைக் கட்டியெழுப்புவார்.
- தாம் அறிந்த பிராணிகள் / காய்கறிகள் / மரங்கள் பற்றிய சுயசரிதைகளை மொழியாட்சித்திறனை விருத்திசெய்வதற்காக முன்வைப்பார்.
- தெரிவுசெய்யப்பட்ட கொன்றைவேந்தன் அடிகளை (10 அடிகள்) மனனஞ்செய்து தெளிவாக முன்வைப்பார்.
- கிராமிய விளையாட்டுக்களை அறிந்து மற்றவர்களுடன் இணைந்து விளையாடுவார்.
- பண்டிகைகள் பற்றிய அனுபவங்களை முன்வைப்பதோடு அவற்றின் முக்கியத்துவத்தையும் தெந்துகொள்வார்.

**வளங்கள் :**

- காட்சிப் படங்கள், கதைப் படங்கள், காய்கறிகளின் பழங்கள், மரங்கள் போன்றவற்றின் முகமூடிகள், கொன்றைவேந்தன் அடிகள் எழுதப்பட்ட அட்டைக் கீலங்கள், பண்டிகைகள் தொடர்பான படங்கள், சொல் அட்டைகள், செயற்பாட்டு அட்டைகள், பயிற்சி அட்டைகள், பண்டிகைகள் தொடர்பான படங்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**


**செயற்பாடு: 1**

- மாணவர்கள் விபரித்துக் கூறக்கூடிய காட்சிப் படமொன்றைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். அப்படத்தைக் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப (ஒரு குழுவில் ஐவர் இடம்பெற வேண்டும்) பிரதியெடுத்து அட்டைகளில் ஒட்டி குழுவுக்கு ஒரு பட அட்டை

DRAFT

வீதம் வழங்குங்கள். காட்சிப் பட அட்டையைப் பார்த்து நிகழ்காலத்தில் விபரித்து வாக்கியங்களாகக் கூற வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு :** காட்சிப்படம்



- குழுக்களில் உள்ள ஒவ்வொருவரும் காட்சிப் படத்தைப் பார்த்து ஒரு வாக்கியமாவது கூற வழிப்படுத்துங்கள். அவர்கள் நிகழ்காலத்தில் கூறுகின்றார்களாவென அவதானி யுங்கள். (தரம் இரண்டில் காலங்களை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்பதை நினைவிற் கொள்ளுங்கள்)
- ஒவ்வொரு குழுவையும் அழைத்து காட்சிப் படத்தைப் பார்த்து வாக்கியங்களைக் கூற உற்சாகமூட்டுங்கள். அவர்கள் கூறும் வாக்கியங்களைக் கரும்பலகையில் எழுதுங்கள். (ஒரே விதமான வாக்கியத்தைக் கூறினால் திரும்பத் திருப்ப கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதத் தேவையில்லை என்பதை நினைவிற் கொள்ளுங்கள்)

**எடுத்துக்காட்டு :**

- பூனை ஒன்று பதுங்குகின்றது
- வீட்டிற்கு அருகில் மாடு ஒன்று நிற்கின்றது.
- வீட்டிற்கு அருகில் வாத்து நிற்கின்றது.
- வாத்திற்கு அருகில் கோழி நிற்கின்றது..
- வாத்து கோழியைப் பார்க்கின்றது.
- கோழி வாத்தைப் பார்க்கின்றது.
- வாத்தும் கோழியும் ஒன்றையொன்று பார்க்கின்றன.
- ..........................................................................


- இவ்வாறு மாணவர்கள் கூறுவார்கள். அவர்கள் கூறும் வாக்கியங்களில் நான்கினைத் தெரிவுசெய்து அட்டைக் கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் எல்லா மாணவர்களுக்கும் காட்சிப் படங்களைப் பிரதியெடுத்து வழங்குங்கள். காட்சிப் படத்தை அப்பியாசக் கொப்பியில் ஒட்டிக்கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள். அதன் பின்னர் ஒட்டுப்பலகையில் காட்சிப்படுத்திய வாக்கியங்களைப் பார்த்தெழுதி உரத்து வாசிக்குமாறு வழிப்படுத்துக.
- குழுக்களிடையே சென்று மாணவர்கள் வாக்கியங்களைச் சரியாக வாசிக்கிறார்களா என அவதானியுங்கள்.

DRAFT

செயற்பாடு: 2

- காட்சிப் படத்தினை மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப (ஒரு குழுவில் ஐவர் இடம்பெறும் வகையில்) பிரதியெடுத்து அட்டைகளில் ஒட்டி வழங்குங்கள். குழுக்களிடையே காட்சிப் படத்தைப் பார்த்து நிகழ்காலத்தில் வாக்கியங்களை எழுத ஆர்வமூட்டுங்கள்.

  ***எடுத்துக்காட்டு*** :




© பதிப்புரிமையுடையது

- காட்சிப் படத்தைப் பிரதியெடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். அப்படங்களை அப்பியாசக் கொப்பியில் ஒட்டுமாறு அறிவுறுத்துங்கள். அதன் பின்னர் காட்சிப் படத்தைப் பார்த்து சில வாக்கியங்களைச் சுயமாக எழுத ஆர்வமூட்டுங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள். எல்லா மாணவர்களினதும் அப்பியாசக் கொப்பியையும் பார்வையிடுங்கள்.

செயற்பாடு: 3

- மாணவர்களின் சொற்களஞ்சியத்தை விருத்திசெய்து கொள்வதற்காக கதைப் படங்களைத் தனித்தனியாகக் காட்சிப்படுத்துங்கள். கதைப் படங்களைப் பிரதியெடுத்து அட்டைகளில் ஒட்டி குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப (ஒரு குழுவில் ஐவர் இடம்பெறும் வகையில்) ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு அட்டை வீதம் வழங்குங்கள். மாணவர்கள் குழுவாக கதைப் படங்களைப் பார்த்து கதையைக் கட்டியெழுப்ப ஆர்வமூட்டுங்கள்.

  **எடுத்துக்காட்டு :** எறும்பின் சாமர்த்தியம்



© பதிப்புரிமையுடையது

- மாணவர்கள் கதைப் படங்களைப் பார்த்துச் சுயமாக கதையை இறந்தகாலத்தில் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள் (காலங்களை மாணவர்களுக்குக் கற்பிப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள்).
- மாணவர்கள் சுயமாக தமது கற்பனை வளத்திற்கேற்பக் கதையைக் கூறுகிறார்களா என அவதானியுங்கள். மாணவர்களின் மொழியாற்றலை விருத்திசெய்வதற்கு கதையினூடாக முயற்சிசெய்யுங்கள்.
- மாணவர்கள் குழுவாக கதையைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள். அதன் பின்னர் தாமாகக் கதை கூற முன்வரும் மாணவர்களுக்குக் கதை கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள். அதன் பின்னர் காட்சிப்படுத்திய கதைப் படங்களுக்குக் கீழே கதையைச் சுருக்கமாக எழுதுங்கள்.

    1. எறும்பு ஆற்றைக் கடக்க முயன்றது.
    2. அது ஆற்றங்கரைக்குச் சென்றது.
    3. ஆற்றில் வெள்ளம் பாய்ந்து ஓடியது.
    4. எப்படிக் கடப்பது என்று சிந்தித்தது.
    5. அதற்கு உதவி செய்வதற்கு அங்கு யாரும் இல்லை.
    6. மரத்தில் ஏறி இலை ஒன்றைப் பறித்தது.
    7. இலையைத் தெப்பமாகப் பயன்படுத்த நினைத்தது.
    8. ..........................................................................................

- இறுதி முடிவை மாணவர்கள் எவ்வாறு கூறுகிறார்கள் என அவதானித்து அவர்கள் கூறும் முடிவை எழுதிக் காட்சிப்படுத்துங்கள். அதன் பின்னர் மாணவர்களுக்குக் கதையை உணர்வுபூர்வமாகக் கூறுங்கள். மாணவர்கள் கருத்தூன்றிச் செவிமடுக்கிறார்களா என அவதானியுங்கள். எழுமாறாக சில மாணவர்களை அழைத்து தமது மொழிநடையில் ஆசிரியர் கூறிய கதையைக் கூறுமாறு உற்சாகப்படுத்துங்கள்.
- மாணவர்கள் கதைகூறி முடித்ததும் அவர்களிடம் வினாக்களை வினவி விடையளிக்க ஆர்வமூட்டுங்கள். கரும்பலகையில் வினாக்களை எழுதுங்கள். அவ்வினாக்களையும் வினாக்களுக்குரிய விடைகளையும் அப்பியாசக் கொப்பியில் எழுதுமாறு அறிவுறுத்துங்கள்.
- இக்கதையைக் குழுவாக நடித்துக்காட்ட மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

**செயற்பாடு: 4**

- தாம் விரும்பும் காய்கறிகள், பழங்கள், பிராணிகள் போன்றவற்றின் முகமூடிகளைப் பெற்றோர்கள், சகோதரர்களின் உதவியுடன் தயாரித்துக் கொண்டுவருமாறு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அறிவுறுத்துங்கள்.
- மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப ஒரு குழுவுக்கு ஒரு முகமூடி கிடைக்கக் கூடியவாறு ஆசிரியரும் முகமூடிகளைத் தயாரித்துக்கொள்ளுதல் வேண்டும்.
- முதலில் ஆசிரியர் ஒரு முகமூடியை அணிந்து அறிமுகஞ் செய்யவேண்டும்.

எடுத்துக்காட்டு : **சிங்க முகமூடி**



நான் யார் என்று தெரியுமா?

நான்தான் சிங்க ராஜா.

நானே காட்டின் அரசன்.

என்னை யாரும் வெல்ல முடியாது.



DRAFT

- அதன் பின்னர் மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து அவர்கள் எந்த முகமூடியைக் கொண்டுவந்துள்ளார்களோ அதை அணிந்து அதுவாக மாறி அதனுடைய சுயசரிதையை கூறுதல் வேண்டும். அவர்கள் மூன்று அல்லது நான்கு வாக்கியங்களைக் கூறுதல் போதுமானது.

**எடுத்துக்காட்டு :**

மாணவன்: 1 கோழி முகமூடி



நான்தான் கோழி.


நான் முட்டை இடுவேன்.

அடைகாப்பேன்.

குஞ்சு பொரிப்பேன்.

குஞ்சுகளைக் கவனமாக வளர்ப்பேன்.

மாணவன்: 2 வாழைப்பழ முகமூடி



நான்தான் வாழைப்பழம்

நான் மஞ்சள் நிறமானவன்.

எங்கும் கிடைப்பேன்.

எல்லோரும் என்னை விரும்பி உண்பர்.

மாணவன்: 3 தென்னை முகமூடி



நான்தான் தென்னைமரம்

நான் உயரமாக வளர்வேன்.

நான் உங்களுக்கு இளநீர் தருவேன்.

நான் தேங்காயும் தருவேன்.

- இவ்வாறு மாணவர்கள் எந்த முகமூடியை அணிந்துள்ளார்களோ அதுவாகவே மாறி சுயசரிதையைக் கூற வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.
- தாம் கொண்டுவந்த முகமூடிகளை அணிந்து சுயசரிதையைக் கூறிய பின், ஆசிரியர் குழுக்களுக்கு வழங்கியுள்ள முகமூடியை ஒவ்வொருவராக அணிந்து, அணிந்துள்ள முகமூடியின் சுயசரிதையைக் கூற வேண்டும். எல்லா மாணவர்களும் விருப்புடன் பங்குபற்றுகிறார்களா என அவதானியுங்கள்.
- அதன் பின்னர் மாணவர்கள் கூறிய சுயசரிதைகளில் சிலவற்றைக் கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதுங்கள். அச்சுயசரிதைகளை அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசிக்கவும் வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு :**

**மாதுளம்பழம்**



நான் மாதுளம்பழம்.

என்னிடம் சிவப்புப் பவளங்கள் உள்ளன.

நான் மிகவும் இனிமையானவன்.

என்னை எல்லோரும் விரும்புவார்கள்.

DRAFT

**குறிப்பு** : பாடசாலைக் கலைவிழாக்களின்போது மேடையில் முகமூடி அணிந்து சுயசரிதையைக் கூற மாணவர்களை உற்சாகப்படுத்துவதன் மூலம் அவர்களின் மேடைக் கூச்சத்தைப் போக்க முடியும் என்பதோடு மொழியாற்றலையும் விருத்திசெய்ய முடியும் என்பதை நினைவிற்கொள்ளுங்கள்.

**செயற்பாடு: 5**

- மாணவர்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட கொன்றைவேந்தன் பாடலடிகளை அட்டைக் கீலங்களில் எழுதி ஒட்டுப்பலகையில் ஒட்டி அறிமுகஞ் செய்யுங்கள்.

எடுத்துக்காட்டு : தெரிவுசெய்யப்பட்ட கொன்றைவேந்தன் அடிகள் (10 அடிகள்)

**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்**
**எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்**
**கிட்டாதாயின் வெட்டென மற**
**குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை**
**தந்தை சொல்மிக்க மந்திர மில்லை**
**தாயிற் சிறந்த தொரு கோயிலுமில்லை**
**திரைகடல் ஓடியும் திரவியம் தேடு**
**மருந்தே ஆயினும் விருந்தோடு உண்**
**முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்**
**மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்**

- முதலில் தெரிவுசெய்யப்பட்ட கொன்றைவேந்தன் அடிகள் ஒவ்வொன்றாக ஏற்ற, இறக்கங்களுடன் ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொடுங்கள்.
- அதன் பின்னர் தாளத்துடன் ஒவ்வொரு அடிகளையும் சொல்லிக்கொடுங்கள். இப்பயிற்சியை பலமுறை மேற்கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு நாளும் இரண்டு அடிகளை மாணவர்களுக்குக் கற்றுக்கொடுங்கள். மாணவர்களைச் சோடியாக வாசிப்பதற்கு ஏற்ற வகையில் கொன்றைவேந்தன் அட்டைக் கீலங்களை வழங்குங்கள்.
- ஒவ்வொரு பாடலடியையும் ஒவ்வொரு நிற எழுதுகோலினால் எழுதி வழங்குங்கள். குழுவாக ஒவ்வொரு அடியையும் ஆசிரியரின் துணையுடன் வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- முதல் நாள் இரண்டு அடிகள், அடுத்த நாள் இரண்டு அடிகள் என கொன்றைவேந்தன் அடிகளை அறிமுகஞ் செய்யுங்கள். அவ்வடிகளைப் பெற்றோரின் உதவியுடன் மனனஞ் செய்ய வழிகாட்டுங்கள். ஒரே நாளில் இங்கு தரப்பட்டுள்ள கொன்றைவேந்தன் அடிகளை மாணவர்களுக்கு அறிமுகஞ் செய்வதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். மாணவர்கள் குழுவாக கொன்றைவேந்தன் அடிகளைத் தாளத்துடன் கூற வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு** :

**முதல் நாள்**
**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்**
**எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்**

DRAFT

| இரண்டாம் நாள் |
|---|
| கிட்டாதாயின் வெட்டென மற |
| குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை |

| மூன்றாம் நாள் |
|---|
| தந்தை சொல்மிக்க மந்திர மில்லை |
| தாயிற் சிறந்த தொரு கோயிலுமில்லை |

| நான்காம் நாள் |
|---|
| திரைகடல் ஓடியும் திரவியம் தேடு |
| மருந்தே ஆயினும் விருந்தோடு உண் |

| ஐந்தாம் நாள் |
|---|
| முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும் |
| மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம் |

- கொன்றைவேந்தன் அடிகளின் கருத்தினையும் மாணவர்களுக்குக் கதைபோன்று கூறி, இலகுவாக மாணவர்களின் மனதில் பதிய வையுங்கள்.
- ஒவ்வொரு நாளும் இரண்டு அடிகளை அறிமுகஞ்செய்து அவ்வடிகளை அப்பியாசக் கொப்பியில் உறுப்பமைய எழுத வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர், இரண்டு அடிகளிலும் சொற்களை நீக்கி அவ்விடத்தில் கட்டமிடுங்கள். அவ்வாறு கட்டமிடப்பட்ட இடத்தில் வரவேண்டிய சொற்களைக் கண்டுபிடித்து நிரப்புகின்ற பயிற்சியை வழங்குங்கள்.

**எடுத்துக்காட்டு :**

| | | |
|---|---|---|
| அன்னையும் | | முன்னறி தெய்வம் |
| எண்ணும் | | கண்ணெனத் தகும் |

- ஒட்டுப்பலகையில் இவ்வாறு எழுதிக் காட்சிப்படுத்தி கட்டமிடப்பட்ட இடங்களில் வரவேண்டிய சொற்களை பெட்டியிலுள்ள சொற்களில் இருந்து தெரிவுசெய்து ஒட்டும் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- எல்லா மாணவர்களும் சொற்களைத் தெரிவுசெய்து ஒட்டுப்பலகையில் ஒட்டி, வாசித்துக் காட்டுதல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.
- இச்செயற்பாடு முடிவடைந்ததும் அப்பியாசக் கொப்பியில் எழுதி கட்டமிட்ட சொல்லை தாமாகக் கண்டுபிடித்து வாக்கியத்தைப் பூர்த்திசெய்து எழுத வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு நாளும் இரண்டு கொன்றைவேந்தன் அடிகளை அறிமுகங் செய்யும்போது இச்செயற்பாடு தொடருதல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.
- இச்செயற்பாட்டின் ஊடாக மொழித்திறன் விருத்தியடைவதோடு தெளிவான உச்சரிப்புப் பயிற்சியும் மாணவர்களுக்குக் கிடைக்கும் என்பதையும் கவனத்திற் கொள்ளுங்கள்.

DRAFT

**செயற்பாடு: 6**

- மாணவர்களுக்கு இலகுவாகப் புரிந்துகொள்ளக்கூடிய இவ்விளையாட்டை பெரிய அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்தி விளையாட்டினை மாணவர்களுக்கு அறிமுகஞ் செய்யுங்கள்.


**எடுத்துக்காட்டு : எலி என்ன செய்கிறது?**




- எல்லா மாணவர்களும் வட்டமாகக் கைகோர்த்துக்கொண்டு நிற்க வேண்டும். நடுவில் ஒரு மாணவர் எலியாக நிற்க வேண்டும் என்பதுடன் வட்டத்திற்கு வெளியே ஒரு மாணவர் பூனையாக நிற்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| பூனையாக நிற்பவர் | : | எலி என்ன செய்கிறது? |
| வட்டத்தில் நிற்பவர்கள் | : | உறங்குகிறது |
| பூனையாக நிற்பவர் | : | எலி என்ன செய்கிறது? |
| வட்டத்தில் நிற்பவர்கள் | : | பல் துலக்குகிறது |
| பூனையாக நிற்பவர் | : | எலி என்ன செய்கிறது? |
| வட்டத்தில் நிற்பவர்கள் | : | குளிக்கிறது |
| பூனையாக நிற்பவர் | : | எலி என்ன செய்கிறது? |
| வட்டத்தில் நிற்பவர்கள் | : | உடை அணிகிறது |
| பூனையாக நிற்பவர் | : | எலி என்ன செய்கிறது? |
| வட்டத்தில் நிற்பவர்கள் | : | உணவு உண்கிறது |
| பூனையாக நிற்பவர் | : | எலி என்ன செய்கிறது? |
| வட்டத்தில் நிற்பவர்கள் | : | பாடசாலை செல்ல ஆயத்தமாகிறது |





என்றவுடன் வட்டத்திற்குள் நிற்கும் எலி வட்டத்தைவிட்டு வெளியேறும். பூனை பிடிக்க வரும். பூனையிடம் இருந்து தப்பிக்க எலி வட்டத்திற்குள்ளும் வட்டத்திற்கு வெளியேயும் மாறி மாறி ஓடும். பூனை வட்டத்திற்குள் நுழைய வட்டத்திற்குள் இருப்பவர்கள் தடுக்க வேண்டும். பூனை எலியைப் பிடித்துவிட்டால் மற்றைய இரண்டு பேர் எலி, பூனையாக மாறி விளையாட வேண்டும்.

- இவ்விளையாட்டு மொழியாற்றல் திறனை விருத்திசெய்ய மிகவும் உறுதுணையாக அமையும்.

- விளையாட்டின்போது பயன்படுத்தப்பட்ட உரையாடல்களை கீழ்வருமாறு காட்சிப்படுத்தி அவ்வுரையாடல்களை மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதிப் பூர்த்தி செய்து சோடி சேர்ந்து உரையாடிப் பயிற்சி பெற ஆர்வமூட்டுங்கள்.

பூனை : எலி என்ன செய்கிறது?
மாணவர்கள் : ....................................
பூனை : எலி என்ன செய்கிறது?
மாணவர்கள் : ....................................
பூனை : எலி என்ன செய்கிறது?
மாணவர்கள் : ....................................
பூனை : எலி என்ன செய்கிறது?
மாணவர்கள் : ....................................
பூனை : எலி என்ன செய்கிறது?
மாணவர்கள் : ....................................
பூனை : எலி என்ன செய்கிறது?
மாணவர்கள் : ....................................

- சோடியாக உள்ள மாணவர்களை மாற்றி மாற்றி உரையாடுவதற்கு வழிப்படுத்துங்கள். இப்பயிற்சி விளையாட்டை விளையாடுவதற்கு மிகவும் உறுதுணையாக அமையும்.


**செயற்பாடு: 7**

- குதிக்கும் தவளையாக மாறும் விளையாட்டை மாணவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள். இவ்விளையாட்டில் மாணவர்கள் அனைவரும் பங்குபற்றச் செய்யுங்கள்.

**எடுத்துக்காட்டு :**

**குதிக்கும் தவளையாக மாறுவோம்**

எல்லா மாணவர்களையும் மைதானத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். மாணவர்களை உயரத்தின்படி வரிசையாக நிற்கச் சொல்லுங்கள். மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மைதானத்தில் வட்டமொன்றை வரையுங்கள். அவ்வட்டத்தைச் சுற்றி மாணவர்கள் அனைவரையும் சிறிய இடைவெளி விட்டு நிற்கச் சொல்லுங்கள்.



- மாணவர்கள் அனைவரும் ஆசிரியரைப் பார்த்தபடி வட்டத்தில் நிற்க வேண்டும். தவளையாக மாறும் மாணவன், இடுப்பில் இரு கைகளையும் வைத்துக்கொள்ள வேண்டும்.ஆசிரியர் விசில் ஊதியதும் தவளை குதிப்பது போன்று குதித்துச் செல்ல வேண்டும். வட்டத்திற்கு வெளியில் மாணவர்களின் முதுகுப் புறமாக சுற்றிவருதல் வேண்டும். சுற்றும்போது ஓடக்கூடாது. குதித்து வரும்போது திடீரென ஒரு மாணவனின் முதுகைத் தொட வேண்டும். தொடப்பட்ட மாணவன் தவளையாக மாறி எதிர்த் திசையில் தவளை போன்று குதித்துச் செல்லுதல் வேண்டும்.

DRAFT

- இருவரும் ஓரிடத்தில் சந்திப்பர். அப்போது முதல் தவளை இரண்டாவது தவளையிடம் விரைவாக வீட்டுக்குப் போ என்று சொல்ல வேண்டும். இரண்டாவது தவளையாக மாறியவர் சரி சரி என்று கூறிவிட்டு குதித்துச் செல்லுதல் வேண்டும்.
- இரண்டு தவளைகளும் இடைவெளியாக இருக்கின்ற இடத்தை அடைவதற்குத் தாவித் தாவிக் குதித்துச் செல்ல வேண்டும். எந்தத் தவளை முன்னதாக வந்து இடைவெளியாக உள்ள இடத்தை அடைகிறதோ அத்தவளை அங்கேயே நிற்க வேண்டும். மற்றைய தவளை வட்டத்தைச் சுற்றியவாறு குதித்துச் செல்ல வேண்டும். அப்போது அந்தத் தவளை எந்தவொரு மாணவரையும் தொடலாம். தொடப்பட்டவர் தவளையாக மாறி எதிர்த்திசையில் செல்ல வேண்டும். இவ்வாறு விளையாட்டைத் தொடர வேண்டும்.எல்லா மாணவர்களும் தவளையாக மாறிய பின்னர் இவ்விளையாட்டு நிறைவுக்கு வரும்.

  இவ்விளையாட்டால் கிடைக்கும் நன்மைகளை மாணவர்களிடம் எடுத்துக்கூறுங்கள்.

  - பாதங்கள் வலுவடைகின்றன
  - கால்கள் உறுதியடைகின்றன
  - இடுப்பெலும்பு பலம் பெறுகிறது
  - வயிற்றுக்குச் சிறந்த பயிற்சி கிடைக்கிறது.
  - மூளை சுறுசுறுப்படைகிறது.
- இவ்விளையாட்டால் கிடைக்கும் நன்மைகளைக் கரும்பலகையில் எழுதுங்கள். அவற்றை மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் பார்த்து எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள். எழுதிய வாக்கியங்களை வாசிப்பதற்கு ஆசிரியர் உதவுதல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

DRAFT

**செயற்பாடு: 8**

- மாணவர்களிடம் முன்கூட்டியே பண்டிகைகள் தொடர்பான படங்களைக் கொண்டுவருமாறு அறிவுறுத்துங்கள். நீங்கள் கொண்டாடிய பண்டிகைகள் பற்றி தமது அனுபவத்தைக் கூற ஆர்வமூட்டுங்கள். அயலவர்கள் அல்லது வேறு சமயத்தவர்கள் கொண்டாடிய பண்டிகைகளையும் கேட்டறியுங்கள்.

**எடுத்துக்காட்டு :**

தைபபொங்கல்
புதுவருடப் பிறப்பு
தீபாவளி
ரம்சான்
நோன்புப் பெருநாள்
கிறிஸ்துமஸ்



என மாணவர்கள் கூறுவார்கள். அவர்கள் கூறும் பண்டிகைகளை அட்டைகளில் எழுதி ஒட்டுப்பலகையில் ஒட்டுங்கள். அவற்றை மாணவர்கள் வாசிக்க வழிப்படுத்துங்கள்.

- மாணவர்கள் கொண்டுவந்த பண்டிகைகள் தொடர்பான படங்களை அப்பியாசக் கொப்பியில் ஒட்டி, அப்பண்டிகைகளின் பெயர்களை அருகில் எழுதுமாறு வழிப்படுத்துங்கள். எழுதிய பின் உரத்து வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.
- தமக்கு விரும்பிய பண்டிகைகள் பற்றி இரண்டு சிறிய வாக்கியங்கள் எழுத ஆர்வமூட்டுங்கள்.

- அதன் பின்னர் பண்டிகைகளின்போது தயாரிக்கப்படும் உணவு வகைகள் பற்றி கேட்டறியுங்கள். அவற்றின் பெயர்கள் சிலவற்றை மாணவர்கள் சுயமாக எழுத வழிப்படுத்துங்கள்.
- எல்லாச் சமயத்தவர்களையும் மதிக்க வேண்டும் என்ற எண்ணக்கருவை எல்லா மாணவர்களிடமும் வலியுறுத்தும் வகையில் வகுப்பறையில் அல்லது பாடசாலையில் மாதிரிப் பண்டிகைக் கொண்டாட்டங்களை மாணவர்கள் கொண்டாட ஏற்பாடு செய்யுங்கள். இதற்குப் பெற்றோரின் பங்களிப்பையும் பெற்றுக்கொள்ளுங்கள்.
- புதுவருடப் பிறப்புப் பண்டிகையின்போது விளையாடப்படும் விளையாட்டுக்களை கேட்டறியுங்கள். அவற்றை அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். அவ்விளையாட்டுக்களில் சிலவற்றை மாணவர்களுக்கு அறிமுகம் செய்து அவர்கள் விளையாடி மகிழ வாய்ப்புக்களை வழங்குங்கள்.

**கணிப்பீடு :**

- காட்சிப் படங்களைப் பார்த்துக் கூறுதல்
- கதைப் படங்களைப் பார்த்து கதையைக் கட்டியெழுப்பல்
- சுயசரிதையை, போலச் செய்தல் மூலம் முன்வைத்தல்
- தெரிவுசெய்யப்பட்ட கொன்றைவேந்தன் அடிகளைப் பிழையின்றிக் கூறுதல்
- கிராமிய விளையாட்டுக்களை விருப்புடன் விளையாடுதல்
- பண்டிகை தொடர்பான அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

DRAFT

# 8

**தேர்ச்சிகள் :**

- **$L_8$** – கற்றல் விருத்திக்காகச் செவிமடுப்பார்.
- **$S_8$** – கற்றல் விருத்திக்காகப் பேசுவார்.
- **$R_8$** – கற்றல் விருத்திக்காக வாசிப்பார்.
- **$W_8$** – கற்றல் விருத்திக்காக எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- சித்திரங்கள்
- பங்குபற்றிய சந்தர்ப்பங்கள் / பார்த்த நிகழ்வுகள்
- சுற்றுலா

**கற்றற் பேறுகள் :**

- அன்றாட வாழ்வில் கண்ட அனுபவங்களைச் சித்திரமாக வரைந்து முன்வைப்பார்; விபரிப்பார்.
- சித்திரங்களின் ஊடாக தனது கற்பனையாற்றலை வெளிப்படுத்துவார்.
- சித்திரங்களைப் பார்த்து, இரசித்து, கருத்துக்களை முன்வைப்பார்.
- பார்த்த / பங்குபற்றிய சந்தர்ப்பங்களை அல்லது நிகழ்வுகளைச் சித்திரமாக வரைவதோடு அனுபவங்களைச் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வார்.
- சுற்றுலா சென்ற அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வார்; சித்திரமாக முன்வைப்பார்; குறித்துக்கொள்வார்.

**வளங்கள் :**

- சித்திரங்கள், கோட்டுருவப் படங்கள், கோட்டுருவக் கதைகள், வாக்கிய அட்டைகள், கணினி (இணையத்தளம்)

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு: 1**

- சித்திரமொன்றைக் காட்சிப்படுத்துங்கள். அச்சித்திரத்தினை மாணவர்கள் அனைவரும் பார்வையிடுவதற்கு சந்தர்ப்பமளியுங்கள். மாணவர்கள் அச்சித்திரம் தொடர்பாக கருத்துக் கூற ஆர்வமூட்டுங்கள்.



DRAFT

- சித்திரம் தொடர்பாக மாணவர்கள் கூறும் கருத்துக்களை சிறிய வாக்கியங்களாக அட்டைகளில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள். அவற்றை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். மாணவர்களைச் சுயமாக வாசிக்க வழிப்படுத்துங்கள். காட்சிப்படுத்தியுள்ள வாக்கியங்களை அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். எழுதிய வாக்கியங்களுக்கு முற்றுத்தரிப்பிடுகிறார்களா என அவதானியுங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு அச்சந்தர்ப்பத்திலேயே உதவுங்கள்.

**செயற்பாடு: 2**

- மாணவர்களுக்கு சந்தை ஒன்றின் காணொளிக் காட்சியைச் சில நிமிடங்கள் பார்வையிடச் சந்தர்ப்பமளியுங்கள். சந்தைக் காட்சியை உங்களது கைப்பேசியில் பதிவுசெய்து கணினியில் பதிவேற்றம் செய்து மாணவர்கள் சந்தைக் காட்சியைப் பார்வையிடச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துங்கள். இணையத்தளங்களில் இருந்தும் சந்தைக் காட்சியைப் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தலாம். இவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு வசதிகள் கிடைக்கவில்லையாயின் சந்தைக் காட்சியொன்றை வரைந்து காட்சிப்படுத்தி மாணவர்களைப் பார்வையிடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்



© பதிப்புரிமையுடையது

- அதன் பின்னர் கலந்துரையாடுங்கள். பார்த்த சந்தைக் காட்சியைத் தாம் விரும்பிய வகையில் சித்திரமாக வரைய ஆர்வமூட்டுங்கள்.

**எடுத்துக்காட்டு :**



Kavinuli



Shavidi

- சந்தைக் காட்சியை மாணவர்கள் வரைந்த பின் அக்காட்சியைப் பார்த்து நிகழ்காலத்தில் மூன்று வாக்கியங்களை எழுத வழிப்படுத்துங்கள். எழுதிய வாக்கியங்களை வாசிக்க வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**

சந்தையில் காய்கறிகளை வாங்குகிறார்கள்.

தேங்காய் வியாபாரி கூவிக் கூவி அழைக்கிறார்.

பழ வியாபாரி பழங்களை விற்கிறார்.


**செயற்பாடு: 3**


- மாணவர்கள் தாம் மகிழ்ச்சியாகக் கொண்டாடிய பண்டிகை ஒன்றைச் சித்திரமாக வரைய வழிப்படுத்துங்கள்
- மாணவர்கள் வரைந்து நிறந்தீட்டிய சித்திரங்களைக் காட்சிப்படுத்துங்கள். எல்லோருடைய சித்திரங்களையும் எல்லா மாணவர்களும் பார்வையிடச் சந்தர்ப்பமளியுங்கள். அது பற்றிக் கருத்துக் கூறவும் ஆர்வமூட்டுங்கள்.
- சில வாக்கியங்களை அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். எல்லா மாணவர்களின் கொப்பிகளையும் பார்வையிடுங்கள்.


**செயற்பாடு: 4**


- மாணவர்களுக்கு சில கோட்டுப்படங்களை வரைந்து காட்டுங்கள். அவற்றைப் பார்த்து மாணவர்கள் வரைய வழிப்படுத்துங்கள். வரைந்த கோட்டுப்படங்களுக்கு நிறந்தீட்டிய பின்னர் அவற்றுக்கருகில் அவ்வுருவங்களின் பெயர்களைப் பிழையின்றி எழுத வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**










DRAFT

செயற்பாடு: **5**

- மாணவர்களுக்குத் தொப்பி வியாபாரிக் கதையின் கோட்டுருவப் படங்கள் சிலவற்றைக் காட்சிப்படுத்துங்கள்.



© பதிப்புரிமையுடையது

- காட்சிப்படுத்திய பின் கதையைச் சித்திரமாக வரைந்து நிறைவுசெய்யுமாறு கூறுங்கள். விரும்பிய வகையில் சித்திரமாக வரைய முடியும் எனக் கூறுங்கள். வித்தியாசமாகச் சிந்திக்க அவர்களைத் தூண்டுங்கள். மாணவர்களுக்கும் MONKEY KINGDOM (DISNEY NATURE) என்ற விவரணப் படக் காட்சியைக் காட்டி சிந்திக்க வையுங்கள். அதன் பின்னர் மாணவர்கள் கதைப் படத்தை நிறைவுசெய்ய வேண்டிய காட்சிகள் இரண்டினை வரைய ஆர்வமூட்டுங்கள். (விவரணப் படக் காட்சி ஒளிநாடாவை ஆசிரிய ஆலோசகரிடம் பெற்றுக் கொள்ளுங்கள்.)
- மாணவர்களின் கற்பனையாற்றலைப் பாராட்டுங்கள். அதன் பின்னர், வரைந்த காட்சிகளை களிமண் / கிளே கொண்டு ஆக்குவதற்கு ஊக்கமளியுங்கள்.

எடுத்துக்காட்டு :





DRAFT

செயற்பாடு: **6**

- பின்னவில யானைகள் சரணாலயக் காணொளி ஒன்றை இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளுங்கள் அல்லது ஆசிரிய ஆலோசகர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். அக்காணொளியைக் கணினி மூலமோ, TAB மூலமோ, தொலைக்காட்சி மூலமோ அல்லது எறிகருவி மூலமோ (புரொஜெக்டர்) மாணவர்கள் பார்வையிடச் சந்தர்ப்பமளியுங்கள்.

- அக்காணொளி ஊடாக பின்னவில யானைகள் சரணாலயத்திற்குச் சென்ற உணர்வைப் பெற ஆவன செய்யுங்கள். காணொளி மூலம் பார்த்த காட்சிகள் தொடர்பான அனுபவங்களை மாணவர்கள் எல்லோரும் கூறுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள். அதன் பின்னர் யானைகளின் செய்கைகளை நடித்துக் காட்டவும் யானை போன்று பிளிறும் ஒலி எழுப்பவும் சந்தர்ப்பமளியுங்கள். இறுதியாக யானைகள் பற்றி சிறு வாக்கியங்களைச் சுயமாக எழுத வழிப்படுத்துங்கள்.

  **எடுத்துக்காட்டு :**

  யானை பெரிய மிருகம்

  அதற்கு தும்பிக்கை உள்ளது.

- யானை ஒன்றை வரைந்து நிறந்தீட்ட அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

**செயற்பாடு: 6**

- மாணவர்களை சுற்றுலா அழைத்துச் செல்லுங்கள்.

  **எடுத்துக்காட்டு :**

  அருகிலுள்ள பூங்கா

  நூலகம்

  பேருந்து நிலையம்

  புகையிரத நிலையம்

  காய்கறிச் சந்தை

- அவற்றைப் பார்வையிடுவதற்கு இடமளியுங்கள் (பாதுகாப்புக்குப் பெற்றோர் சிலரையும் அழைத்துச் செல்லுங்கள்). பார்வையிட்ட இடங்கள் பற்றி வகுப்பறையில் சுதந்திரமாக ஆசிரியருடன் உரையாட அனுமதியுங்கள்.
- தாம் பார்த்த அனுபவங்களைக் கொண்டு இரண்டு வாக்கியங்கள் எழுத உற்சாகப் படுத்துங்கள். அவர்கள் சென்ற சுற்றுலாவைச் சித்திரமாக வரைந்து காட்சிப்படுத்த வாய்ப்புக்களை வழங்குங்கள்.

**கணிப்பீடு :**

- சித்திரங்கள் பற்றிச் சுயமாகக் கூறுதல்
- சித்திரங்கள் பற்றிக் கூறுவதைச் செவிமடுத்தல்
- அனுபவங்களைச் சித்திரமாக முன்வைத்தல்
- தாம் பங்குபற்றிய நிகழ்வுகள் பற்றிப் பேசுதல்
- தனது அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளல்
- தனது கற்பனையாற்றலை சித்திரங்களின் ஊடாக வெளிப்படுத்துதல்
- அனுபவங்களை / பார்த்தவற்றை / கேட்டவற்றை / வரைந்தவற்றைப் பற்றி சில வாக்கியங்கள் எழுதுதல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்யுங்கள்.

DRAFT

# 9

## தேர்ச்சிகள் :

**$L_9$** – கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றிச் செவிமடுப்பார்.

**$S_9$** – கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமுறப் பேசுவார்.

**$R_9$** – கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றி வாசிப்பார்.

**$W_9$** – கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- ஒலி, ஒளி இறுவட்டுக்கள்
  - சிறுவர் பாடல்கள்
  - சிறுவர் கதைகள்
  - உரையாடல்கள்
  - தகவல்கள் (பிராணிகள்)
- சிறுவர் இணையத்தளங்கள்
- சிறுவர் சஞ்சிகைகள்
- சிறுவர் நூல்கள்

**கற்றற் பேறுகள் :**

- ஒலி, ஒளி இறுவட்டுக்களின் ஊடாக கிரகித்த பாடல்கள், கதைகள், உரையாடல்கள், தகவல்கள் ஆகியவற்றை நினைவுபடுத்திக் கூறுவதோடு வினாக்களுக்கும் விடையளிப்பார்.
- சிறுவர் இணையத்தளங்களைப் பார்வையிடுவதுடன், ஒலி ஒளிக் குறிப்புக்களைச் செவிமடுப்பதோடு கருத்தூன்றி வாசித்தும் ஆக்கபூர்வமாக வெளிப்படுத்துவார்.
- சிறுவர் சஞ்சிகைகள் சிறுவர் பத்திரிகைகள் தமக்கு விருப்பமான/ தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட பகுதியைப் பார்வையிட்டு ஆக்கபூர்வமாக முன்வைப்பார்.
- சிறுவர் நூல்களைப் பார்வையிட்டு அவை தொடர்பான முக்கிய தகவல்களைச் சமர்ப்பிப்பார்.

**வளங்கள் :**

- கதைகள், பாடல்கள், உரையாடல்கள் கொண்ட ஒலி - ஒளி இறுவட்டுக்கள், சிறுவர் இணையத்தளம், சிறுவர் சஞ்சிகைகள், சிறுவர் நூல்கள், பிராணிகள் பற்றிய தகவல்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**

- மாணவர்களுக்குப் பொருத்தமான, அவர்கள் விரும்பிச் செவிமடுக்கக்கூடிய பாடல்களைத் தெரிவுசெய்து அவற்றைப் பாடி ஒலிப்பதிவு செய்துகொள்ளுங்கள். மாணவர்களை வட்டமாக அமரச்செய்யுங்கள். நடுவில் ஒலிப்பதிவுக் கருவியை வையுங்கள். ஒலி இறுவட்டை ஒலிக்கவிட்டு பாடலைக் கவனமாக இரசிக்க வழிப்படுத்துங்கள். பாடலை இரசித்த பின்னர், மீண்டும் அப்பாடலை ஒலிக்கச் செய்யுங்கள். அதன் பின்னர், பாடலுடன் தொடர்புடைய வினாக்களை வினவுங்கள். வினாக்களுக்கான விடைகளை அப்பியாசக் கொப்பியில் மாணவர்களை எழுதச் செய்யுங்கள். எழுதிய சொற்களை வாசிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

  *குறிப்பு : இதே அணுகுமுறைகளையே ஒளி இறுவட்டுக்களைப் பயன்படுத்தும்போதும் கடைப்பிடிக்க வேண்டுமென்பதைக் கவனத்திற்கொள்ளுங்கள்.*

DRAFT

**செயற்பாடு : 2**

- மாணவர்களுக்குப் பொருத்தமான விரும்பி இரசிக்கக்கூடிய கதையைத் தெரிவுசெய்யுங்கள். கதை மிகவும் சிறியதாகவும் மாணவர்களால் இலகுவில் கிரகிக்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். கதை தொடர்பாக வினவப்படும் வினாக்களுக்குரிய விடைகளை அட்டைகளில் எழுதி மாணவ குழுக்களின் எண்ணிக்கைக்கேற்பப் பெட்டிகளில் இட்டுக்கொள்ளுங்கள். அக்கதையை உணர்வுபூர்வமாக வாசித்து ஒலிப்பதிவு செய்துகொள்ளுங்கள்.

**கதை** - அன்பும் பாசமும்

இனிப்பு விற்கும் கடை ஒன்றில் விதவிதமான இனிப்புகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. கடையினுள் நுழைந்த எலி ஒன்று இனிப்புகளை நோட்டமிட்டது.

பலவகையான இனிப்புப் பண்டங்கள் இருந்தன. எதனை எடுத்துச்செல்வது என்று எலி யோசனை செய்தது. அந்த நேரம் திடீரென கடைக்குள் கடைக்காரர் வந்துவிட்டார். எலி துள்ளிக் குதித்து தெருப்பக்கமாக ஓடியது.

அந்த நேரத்தில் தெருவோர மதிலில் காகமொன்று அமர்ந்திருந்தது. அந்தக் காகம் எலியைக் கண்டுவிட்டது. எலியைப் பிடிக்க பறந்து வந்தது. தனது தடித்த அலகினால் எலியைக் கொத்தப்பார்த்தது.

காகம் தன்னைக் கொத்தவருவதைக் கண்ட எலி கீச் கீச் என்று கத்தியது. பரிதாபமாக காகத்தைப் பார்த்தது.

காக்கையாரே, நீங்கள் செய்வது சரிதானா? கடையில் உள்ள மனிதருக்குப் பயந்து தெருவில் ஓடி வந்தேன். நான் சிறியவன். நீங்கள் என்னைக் கொத்த நினைக்கிறீர்கள். இது சரிதானா? கொஞ்சமாவது கருணை காட்ட மாட்டீர்களா? உங்களது குஞ்சைப் போன்று என்னை நினைக்க மாட்டீர்களா? என்று அன்புடன் கேட்டது.

எலியின் சாமர்த்தியப் பேச்சினால் காகத்தின் மனம் இளகிவிட்டது. உன்னைக் கொத்தத்தான் பறந்துவந்தேன். உன்னுடைய அன்பான வார்த்தைகள் என் மனதை மாற்றிவிட்டது. உன்மீது எனக்கு பாசம்தான் வருகிறது. நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன். நீ போகலாம் எனக் கூறிவிட்டு அவ்விடத்தைவிட்டுப் பறந்துசென்றது.

எலியும் உயிர் பிழைத்த மகிழ்ச்சியில் தன் இருப்பிடத்தை நோக்கி வேகமாக ஓடியது.

- மாணவர்களை வெளியே அழைத்துச்சென்று வட்டமாக அமரச் செய்யுங்கள். நடுவில் ஒலிப்பதிவுக் கருவியை வைத்துக் கதையை ஒலிக்கச் செய்யுங்கள். மாணவர்கள் கதையைக் கவனமாகச் செவிமடுக்கிறார்களா என அவதானியுங்கள். கதையை மாணவர்கள் செவிமடுத்த பின் கதையில் வரும் பாத்திரங்கள் தொடர்பாக மாணவர்களிடம் வினவுங்கள். அவர்களை விடையளிக்கத் தூண்டுங்கள். அதன் பின்னர், மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். வினவப்படும் வினாக்களுக்குரிய விடைகள் எழுதப்பட்ட அட்டைப் பெட்டிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள். செவிமடுத்த கதையை மீண்டும் ஒலிக்க விடுங்கள்.
- ஒவ்வொரு குழுவிலிருந்தும் இவ்விருவரை எழுப்பி ஒருவர் விடையைக் கூற மற்றையவர் அட்டைப் பெட்டியிலிருந்து விடை அட்டையைத் தெரிவுசெய்து வாசித்துக்காட்ட வழிப்படுத்துங்கள். ஆசிரியரால் பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளை அல்லது ஒலிப்பதிவுக் கருவியின் ஊடாகக் கேட்கப்படும் வினாக்களுக்குரிய விடைகளை கரும்பலகையில் எழுதி அவ்விடைகளை மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் உறுப்பமைய எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள்.



DRAFT

செயற்பாடு: 3

- கீழே தரப்பட்டுள்ளவாறு உரையாடலை ஒலிப்பதிவு செய்து கொள்ளுங்கள்.

**எடுத்துக்காட்டு:**

**அப்பா** : மகளே, வீதியைக் கடக்கும் போது இருபுறமும் பார்த்துக் கடக்க வேண்டும்.

**மகள்** : ஏன் அப்பா

**அப்பா** : இருபுறமிருந்தும் வாகனங்கள் வேகமாக வரலாம். அதனால் தான் அவ்வாறு கூறினேன்.

**மகள்** : அப்பா, நடந்து எவ்வாறு செல்ல வேண்டும்.

**அப்பா** : மகளே, வலது புறமாகச் செல்ல வேண்டும்.

**மகள்** : அப்பா, போக்குவரத்து விளக்குகள் பற்றிக் கூறுங்கள்.

**அப்பா** : போக்குவரத்து விளக்குகளில் **சிவப்பு** விளக்கு எரிந்தால் நில், செல்லாதே என்றும், **மஞ்சள்** விளக்கு எரிந்தால் சாலையைக் கடக்கத் தயாராக இரு என்றும், பச்சை **விளக்கு** எரிந்தால் செல் என்றும் அறிவிக்கின்றது.

**மகள்** : நன்றி அப்பா.

- எல்லா மாணவர்களிடமும் உரையாடல் தொடர்பாக கேட்டறிந்த பின்னர் உரையாடல் தொடர்பாக ஒலிப்பதிவு செய்யப்பட்ட வினாக்களை ஒலிக்கச் செய்யுங்கள். (அல்லது ஆசிரியரே வினாக்களை வினவலாம்.) வினாக்களைச் செவிமடுத்து சரியாக விடையளிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

  அதன் பின்னர், உரையாடலுடன் தொடர்புடைய வாக்கியங்களை சிலவற்றை கரும்பலகையில் எழுதுங்கள். மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் அவற்றைப் பார்த்து, எழுதி, வாசிக்க வழிப்படுத்துங்கள்.

DRAFT

செயற்பாடு : 4

- கீழே தரப்பட்டுள்ள பிராணிகளின் தகவல்களைப் போன்ற தகவல்களைத் திரட்டி, ஒலிப்பதிவு செய்து கொள்ளுங்கள். பிராணிகளைத் தெரிவுசெய்யும்போது மாணவர்களின் சூழலில் காணப்படும் பிராணிகளையும் மாணவர்கள் அதிகம் விரும்பும் பிராணிகள் பற்றிய தகவல்களையுமே தெரிவு செய்தல் வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளுங்கள்.


**எடுத்துக்காட்டு:**

### காட்டுக்கோழி



காட்டுக்கோழி பார்ப்பதற்கு நமது வீட்டுக்கோழி போலிருந்தாலும் இவை காட்டில் இயற்கையாக வசிக்கும் கோழிகள். கழுத்தில் மஞ்சள் புள்ளிகளுடன் அழகும் கம்பீரமும் பொருந்தியதாகச் சேவல்கள் இருக்கும். இதற்கும் வீட்டுக் கோழிக்குமிடையே உள்ள முக்கியமான வித்தியாசம், காட்டுக் கோழியால் பறக்க முடியும் என்பதுதான்.

### மரங்கொத்தி



பொன் முதுகு மரங்கொத்தி உளி போன்ற உறுதியான அலகால் மரத்தில் டக், டக், டக் என்று ஒரே தாள லயத்தில் வேகமாகத் தட்டுவதை வைத்து, ஓரிடத்தில் மரங்கொத்தி இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம். மரத்தில் செங்குத்தாக ஏறக்கூடிய ஒரே பறவையான இது, பட்டுப்போன மரங்களில் இருந்து பூச்சிகளைப் பிடித்து உண்ணும். மரங்கொத்தி குடைந்த பொந்துகளில்தான் கிளி, மைனா போன்றவை கூடமைக்கும்.

### வாலாட்டி குருவி



வெண்புருவ வாலாட்டி நீளமான வாலைக் கொண்ட இந்தப் பறவை நடக்கும்போது, ஓடும்போது எல்லாம் வாலை ஆட்டிக்கொண்டே இருக்கும். அதனால்தான் இந்தப் பெயர். நீர்நிலைகளின் விளிம்புகள், திறந்தவெளித் திடல் பகுதிகளில் புழு, பூச்சிகளை வாலை ஆட்டிக்கொண்டே பிடித்து உண்ணும். இது இனிமையாகக் குரல் எழுப்பக்கூடியது.

### தேன்சிட்டு



தேன்சிட்டு பூக்களின் உட்பகுதியில் இருக்கும் தேனைக் குடிக்க வசதியாக ஊசி போன்று நீண்டு வளைந்த அலகைக் கொண்ட மிகச் சிறிய பறவை. பூவின் அடிப்பகுதிவரை அலகை நீட்டித் தேனைக் குடிக்கிறது.

### எறும்புகள்



எறும்புகளுக்கு கண்கள் மிகத் துல்லியமாகத் தெரியும். மேலும் உழைப்பதில் எறும்புகளுக்கு ஈடு இணை எதுவும் இல்லை. எறும்புகள் ஒன்றைப் பின்பற்றி ஒன்றாகச் செல்லும் சுபாவமுடையவை. இவை கூட்டமாக வாழும் தன்மை கொண்ட உயிரினமாகும். எறும்புகள் முட்டையிடும் வகையைச் சேர்ந்தவையாகும். தோல் வழியாகவே சுவாசிக்கின்றன. இவற்றின் இரத்தம் நிறமற்றதாகும்.

- எந்தப் பிராணியைப் பற்றிய தகவல்களைச் சொல்லப் போகிறீர்களோ அல்லது ஒலிக்கவிடப் போகிறீர்களோ அப்பிராணி தொடர்பான படங்களைக் காட்சிப் பலகையில் காட்சிப்படுத்துங்கள். அப்பிராணி பற்றி மாணவர்கள் அறிந்த தகவல்களை மாணவர்களிடம் கேட்டறியுங்கள். அதன் பின்னர், அப்பிராணி பற்றிய தகவலடங்கிய ஒலி இறுவட்டை ஒலிக்கச் செய்யுங்கள்.

- மாணவர்கள் கவனமாகச் செவிமடுத்துக் கிரகிக்கின்றார்களா என்பதை அவதானியுங்கள். மாணவர்களை எழுப்பி வினாக்களை வினவி அவர்களை அப்பிராணி தொடர்பாக பேச வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் ஒலி இறுவட்டில் ஒலித்த தகவல்களில் பயன்படுத்தப்பட்ட முக்கிய சொற்களை கரும்பலகையில் எழுதுங்கள். அச்சொற்களை மாணவர்கள் தமது உறுப்பமைய எழுதும் கொப்பியில் எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள்.

DRAFT

எடுத்துக்காட்டு :

**தேன்சிட்டு**

- தேன்சிட்டு
- பூக்கள்
- வால்
- பறவை
- அலகு
- ஊசி
- அடிப்பகுதி
- உட்பகுதி

அதன் பின்னர், சில சொற்களைத் தெரிவுசெய்து அச்சொற்களில் உள்ள கட்டமிடப்பட்ட இடங்களில் வரவேண்டிய எழுத்தைத் தெரிவுசெய்து எழுத வழிப்படுத்துங்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கு | ன் | ற | ல | சி | ல் | டி | க் |

1. தே ☐ சிட்டு
2. பூ ☐ கள்
3. வா ☐
4. அ ☐ கு
5. ஊ ☐
6. அ ☐ ப்பகுதி
7. ப ☐ வை
8. உ ☐ பகுதி

மாணவர்கள் பிராணிகள் பற்றி அறிந்துகொள்ள ஆர்வம் ஏற்படுவதற்காகப் பத்திரிகைகளில் அல்லது இணையத்தளங்களில் உள்ள தகவல்களைப் பிரதியெடுத்து அப்பியாசக் கொப்பியில் ஒட்ட வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு: 5**

- மாணவர்களை கணினிக்கூடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். அங்கு மாணவர்களை சிறுவர் தகவல்களைப் பார்வையிட வழிப்படுத்துங்கள். இணையத்தளத்தில் சிறுவர் பாடல்கள், கதைகளைச் செவிமடுக்க ஆர்வமூட்டுங்கள். அதன் பின்னர், மாணவர்களை அழைத்துச் சென்று இணையத்தளத்தில் இரசித்த பாடல்கள், கதைகளைக் கேட்டறியுங்கள். மாணவர்கள் இணையத்தளத்தில் இரசித்த பாடல்கள், கதைகளை பதிவிறக்கம் செய்து, கணினி ஊடாக மாணவர்கள் பார்த்து, கேட்டு, இரசிக்க வழிப்படுத்துங்கள். பார்த்தும் கேட்டும் இரசித்த பாடல்களைப் பாடிக்காட்டியும் கதைகளை தமது பாணியில் மற்றவர்களுக்குக் கூறவும் வழிப்படுத்துங்கள். இணையத்தளத்தில் இரசித்த பாடல்கள், கதைகளில் வரும் சொற்களை மாணவர்கள் நினைவுபடுத்தி அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு அச்சந்தர்ப்பத்திலேயே உதவுங்கள்.

**செயற்பாடு : 6**

- வகுப்பறைப் புத்தக மூலையில் சேகரித்து வைத்திருக்கும் சிறுவர் சஞ்சிகைகளில் மாணவர்களின் வயது மட்டத்திற்குப் பொருத்தமான சிறுவர் சஞ்சிகைகளைத் தெரிவு செய்யுங்கள். அல்லது சிறுவர் சஞ்சிகைகளைப் பாடசாலை நூலகத்திலிருந்து அல்லது புதிதாக விற்பனை நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளுங்கள். (பாடசாலை நிதியிலிருந்து). மாணவர்களை சோடிகளாக்குங்கள். ஒவ்வொரு சோடிக்கும் ஒரு சஞ்சிகை வீதம் வழங்குங்கள். அச்சஞ்சிகைகளை அவர்கள் சுதந்திரமாகப் பார்வையிடச் சந்தர்ப்பம் வழங்குக. அவர்கள் பார்வையிடும் சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு சோடிக்கும் அருகில் சென்று சஞ்சிகை தொடர்பாக உரையாடுங்கள். அவர்களிடமிருந்து பின்வரும் தகவல்களை அறிந்துகொள்ளுங்கள்.
    - (1) சஞ்சிகையில் பிடித்த பக்கம்
    - (2) ஏன் அப்பக்கம் பிடித்திருக்கிறது?
    - (3) சஞ்சிகையில் உள்ள படங்களில் கவர்ந்த படம் எது? ஏன் உங்களை அப்படம் கவர்ந்தது?
    - (4) சஞ்சிகையின் முதல் பக்கத்தைப் பற்றிக் கூறச் செய்யுங்கள்.
    - (5) சஞ்சிகையின் பெயரை வாசிக்கச் செய்யுங்கள்.

DRAFT

மாணவர்களிடம் தகவல்களைப் பெற்றுக்கொண்ட பின்னர், சஞ்சிகையில் உள்ள அம்சங்கள் தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கமளியுங்கள். சஞ்சிகையில் உள்ள அம்சங்களைக் கரும்பலகையில் எழுதி வாசித்துக்காட்டுங்கள்.

- சஞ்சிகையின் பெயர்
- கதைகள்
- பாடல்கள்
- விடுகதைகள்
- புதிர்கள்
- பழமொழிகள்
- நகைச்சுவை
- படப்புதிர்
- நிறந் தீட்டுதல்
- புள்ளிக் கோடுகளை இணைத்தல்

இவற்றைப் பார்த்து அப்பியாசக் கொப்பியில் எழுதவும் அவற்றை மீண்டும் வாசித்துக் காட்டவும் நினைவுபடுத்திக் கூறவும் ஆர்வமூட்டுங்கள்.

**செயற்பாடு : 7**

- வகுப்பறையில் உள்ள புத்தக மூலையில் இருந்து சிறுவர் கதை, பாடல் நூல்களைத் தெரிவுசெய்யுங்கள். அல்லது பாடசாலை நூலகத்திலிருந்து அதிபரின் அனுமதியுடன் சிறுவர் பாடல், கதை நூல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். மாணவர்களைச் சோடிகளாக்கி அவர்களுக்கு சிறுவர் நூல்கள் ஒவ்வொன்றைச் சுதந்திரமாகப் பார்வையிட உற்சாகமூட்டுங்கள். பார்வையிடும் சந்தர்ப்பத்திலேயே ஒவ்வொரு சோடிக்கு அருகிலும் சென்று பார்வையிடும் நூல்கள் பற்றிய பின்வரும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

(1) நூலின் பெயர்
(2) எழுதியவர்கள் பெயர்
(3) அட்டைப் படம்
(4) படங்கள் பற்றிய கருத்து
(5) கதைகள் / பாடல்களின் தலைப்பு

இவை பற்றி மாணவர்கள் கூறவும் வாசித்துக் காட்டவும் வழிப்படுத்துங்கள்.

அதன் பின்னர், தமது கைகளில் உள்ள

(1) நூலின் பெயர்
(2) நூலாசிரியரின் பெயர் ஆகியவற்றை எழுத வழிப்படுத்துங்கள்.

அப்பியாசக் கொப்பியில் பார்த்து எழுதிய பின்னர்அதனை வாசித்துக் காட்டவும் வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு : 8**

- தரம் இரண்டு மாணவர்களின் வயது மட்டத்திற்குப் பொருத்தமான சிறிய கதைகள், படங்கள், சிறிய கதைப் படங்கள், சிறிய பாடல்கள் போன்றவற்றை வாரப் பத்திரிகைகள், சிறுவர் சஞ்சிகைகள், சிறுவர் நூல்கள், இணையத் தளங்கள் போன்றவற்றிலிருந்து தெரிவு செய்து பிரதியெடுத்து அட்டைகளில் ஒட்டித் தொகுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். குழுக்களுக்கு சிறிய பாடல்கள் கொண்ட அட்டைகளை வழங்குங்கள். எல்லோரையும் வாசிக்க வழிப்படுத்துங்கள்.

- மாணவர்கள் வாசித்துக்கொண்டிருக்கும்போது குழுக்களுக்குச் சென்று குழுவிலுள்ள எல்லோரும் வாசிக்கின்றார்களா என அவதானியுங்கள். அவர்கள் வாசித்த பாடல்களுடன் தொடர்புடைய வினாக்கள் மற்றும் பயிற்சிகளைக் கரும்பலகையில் எழுதி மாணவர்களை விடையளிக்க வழிப்படுத்துங்கள்.

- இது போன்று சிறிய கதைகள்,சிறிய கதைப் படங்கள், படங்கள் போன்றவற்றை கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றி வாசிப்பதற்காகவும் எழுதுவதற்காகவும் வழங்க வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.



DRAFT

*குறிப்பு : இச்செயற்பாட்டிற்காக தேவையான நாட்களை ஒதுக்கிக் கொள்வதற்கான சுதந்திரம் ஆசிரியர்களுக்குண்டு.*

**செயற்பாடு : 9**

- சிறுவர்களின் வயது மட்டத்திற்குப் பொருத்தமான படங்களுடன் கூடிய புத்தகம் ஒன்றை /நூலொன்றைத் தெரிவு செய்யுங்கள். அந்த நூலின் உள்ளடக்கத் தலைப்புகளை மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப எழுதிப் பெட்டியில் இட்டுக்கொள்ளுங்கள் மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். குழுக்களுக்கு ஒவ்வொரு பெட்டி வீதம் வழங்குங்கள். பெட்டியில் உள்ள நூலின் உள்ளடக்கத் தலைப்புகளை குழுவில் உள்ள எல்லோரும் வாசிக்க வழிப்படுத்துங்கள். மாணவர்கள் வாசித்துக் கொண்டிருக்கும்போது குழுக்களுக்குச் சென்று குழுவிலுள்ள எல்லோரும் ஒரு அட்டையையாவது வாசித்துக்காட்ட ஆர்வமூட்டுங்கள். அதன் பின்னர், நூலின் உள்ளடக்கத்தை ஒன்றன்பின் ஒன்றாக கரும்பலகையில் எழுதுங்கள். எழுதிய பின் குழுவில் உள்ளவர்கள் அட்டைப் பெட்டியிலுள்ள உள்ளடக்கத் தலைப்புகளைக் கரும்பலகையில் எழுதிய ஒழுங்கில் குழுவின் மேசை மீது வைக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், உள்ளடக்கத் தலைப்புகளை அப்பியாசக் கொப்பியில் எழுதி சுயமாக வாசிக்க ஆர்வமூட்டுங்கள். அதன் பின்னர் அந்த நூலில் உள்ள படங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். மாணவர்கள் சித்திரம் வரைந்து காட்சிப்படுத்த உற்சாகமூட்டுங்கள்.

**கணிப்பீடு :**

- கிரகித்து நினைவுபடுத்தி வினாக்களுக்கு விடையளித்தல்
- சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமுறப் பேசுதல்
- செவிமடுத்து ஆக்கத்திறனுடன் பொருத்தமுறப் பேசுதல்
- ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகக் கருத்தூன்றி வாசித்தல், எழுதுதல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

DRAFT

# 10

**தேர்ச்சிகள் :**

**$L_{10}$** – நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் செவிமடுப்பார்.

**$S_{10}$** – நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் பேசுவார்.

**$R_{10}$** – நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் வாசிப்பார்.

**$W_{10}$** – நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் எழுதுவார்.

**உள்ளடக்கம் :**
- காட்சிப் படங்கள்
- கதைப் படங்கள்
- படம் பார்த்து விவரித்தல்
- ஒலி - ஒளி இறுவட்டுக்கள்
- இணையத்தளங்கள்
- மொழிப் பயிற்சிகள்

**கற்றற் பேறுகள் :**

- காட்சிப் படங்களையும் கதைப் படங்களையும் மற்றும் படங்களையும் பார்த்து விளங்கி நியம மொழியில் விபரிப்பார்.
- ஒலி, ஒளி இறுவட்டுக்களைச் செவிமடுத்து / பார்த்துக் கேட்டு வினாக்களுக்கு நியம மொழியில் விடையளிப்பார்.
- செவிமடுத்த கதைகளை நியம மொழியில் சுயமாக முன்வைப்பார்.
- தெரிவு செய்யப்பட்ட பகுதிகளை ஒலி, ஒளி இறுவட்டுக்களின் துணையுடன் வாசித்தறிவார்.
- மொழிப் பயிற்சிக்கான அறிவுறுத்தல்களைக் கருத்தூன்றிச் செவிமடுப்பதுடன் வாசித்து விளங்கி வினாக்களுக்குச் சரியாக விடையளிக்க முயல்வார்.

**வளங்கள் :**
- பட அட்டைகள், கதைப்பட அட்டைகள், காட்சிப்பட அட்டைகள், சொற் சக்கரம், சொல் அட்டைகள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**


செயற்பாடு: **1**

- மாணவர்களுக்குப் பொருத்தமான காட்சிப் படமொன்றைத் தெரிவு செய்யுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். மாணவ குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப காட்சிப்படத்தைப் பிரதி எடுத்து அட்டைகளில் ஒட்டிக் கொள்ளுங்கள். எல்லாக் குழுக்களுக்கும் காட்சிப்பட அட்டைகளை வழங்குங்கள். காட்சிப் படங்களைப் பார்த்துக் குழுவாக நிகழ்காலத்தில் கூறுவதற்கு ஆர்வமூட்டுங்கள்.

  மாணவர்களை எழுமாறாக அழைத்து காட்சிப்படத்தைப் பார்த்துச் சுயமாகக் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் எல்லா மாணவர்களையும் காட்சிப்படத்தைப் பார்த்து சில சொற்களை எழுதுவதற்கு ஆர்வமூட்டுங்கள். எழுதிய சொற்களை குழுக்களிடையே வாசித்துக் காட்ட வழிப்படுத்துங்கள். சில சொற்களைத் தெரிவு செய்து நான்கு றூள் கொப்பியில் உறுப்பமைய எழுத வழிகாட்டுங்கள்.

DRAFT


**எடுத்துக்காட்டு :**



**செயற்பாடு : 2**

- கதைக் கருவொன்றைத் தெரிவு செய்து ஆறு காட்சிப் படங்களாக வரைந்து கொள்ளுங்கள். (சித்திர ஆசிரியரின் உதவியை நாடுங்கள்) வரைந்த கதைக் காட்சிப் படங்களை மாணவ குழுக்களுக்கு ஏற்ப பிரதியெடுத்து தனித்தனி அட்டைகளில் ஒட்டி, மாணவ குழுக்களுக்கு வழங்குங்கள். (ஒரு குழுவில் ஐந்து மாணவர்கள்) ஒவ்வொரு குழுவுக்கும் வழங்கப்பட்ட கதைப் பட அட்டைகளை (ஆறு அட்டைகள்) ஒழுங்குபடுத்தி, தமக்கிடையே கதை சொல்ல ஆர்வமூட்டுங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள். தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்துங்கள். மாணவர்கள் தமது குழுக்களிடையே கதைப் படங்கள் இன்றிச் சுயமாகக் கூறுவதற்கும் தமக்கிடையே கதையைக் கட்டியெழுப்புவதற்கும் ஆர்வமூட்டுங்கள். வகுப்பு முன்னிலையில் மாணவர்கள் சிலரை அழைத்துக் கதை கூறுவதற்கும் கதையில் பிடித்த கதாபாத்திரமொன்றைத் தெரிவு செய்து போலச் செய்து காட்டுவதற்கும் ஆர்வமூட்டுங்கள். கதையில் பயன்படுத்திய சிறிய வாக்கியங்கள் சிலவற்றை அப்பியாசக் கொப்பியில் பிழையின்றி எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு :**





© பதிப்புரிமையுடையது

**செயற்பாடு : 3**

- பிராணிகளின் படங்கள் அல்லது வீட்டுப் பொருட்கள் பற்றிய படங்களைத் தெரிவு செய்து கொள்ளுங்கள். அவற்றிலிருந்து 10 படங்களைத் தெரிவு செய்து கொள்ளுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப படங்களைப் பிரதிகள் எடுத்து அட்டைகளில் எழுதி பெட்டிகளில் இட்டுக் கொள்ளுங்கள். ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு பெட்டி வீதம் வழங்குங்கள். குழுவில் உள்ள ஒவ்வொருவரும் ஒரு படத்தை எடுத்து சில வாக்கியங்களைக் கூறுவதற்கும் கூறிய வாக்கியங்களில் இருந்து இரண்டு சிறிய வாக்கியங்களை எழுதுவதற்கும் ஆர்வமூட்டுங்கள்.

  **எடுத்துக்காட்டு :**






இது ஒரு கோழி.
கோழி முட்டை இடும்.
கோழி அடை காக்கும்.
கோழி கொக்கரிக்கும்.

வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பை அவதானித்துத் திருத்தங்களைச் செய்து கொள்ளுங்கள். மாணவர்கள் கூறிய வாக்கியங்களிலிருந்து மூன்று சிறிய வாக்கியங்களை கரும்பலகையில் எழுதுங்கள். அவ்வாக்கியங்களை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். அவ்வாக்கியங்களை உறுப்பமைய எழுத வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு : 4**

- சிறுவர்களுக்கான இணையத்தளங்களில் இருந்து கணினி ஊடாக பாடல்கள், கதைகள் விடுகதைகள் என்பவற்றை மாணவர்கள் பார்வையிட / செவிமடுக்க ஆவன செய்யுங்கள். பாடசாலையில் இவ்வசதி இல்லாதிருப்பின் இணையத்தளத்திலிருந்து கதைகள், பாடல்களைப் பிரதி செய்து அவற்றைச் சுவைபட மாணவர்கள் மத்தியில் முன்வையுங்கள்.

  **எடுத்துக்காட்டு : 1 பாடல்**




நல்ல நல்ல வீடு
நாங்கள் வாழும் வீடு.

கல்லும் மண்ணும் சாந்தும்
கலந்து கட்டும் வீடு


நல்ல யன்னல் ஊடே
மெல்லக் காற்று வீசும்

கொட்டும் மழையில் எம்மைக்
காக்கும் எங்கள் வீடு

நன்றி : த.கனகரத்தினம்

DRAFT

எடுத்துக்காட்டு : 2




ஒரு காட்டில் மிகப் பெரிய ஆலமரம் ஒன்று இருந்தது. அம்மரத்தில், 'வெள்ளை வெளேர்' என்ற நிறத்தில், நான்கு வெண்புறாக்கள் வசித்தது வந்தன. அந்தப் புறாக்கள் வேளா வேளைக்கு தீனி தின்று கொழுத்துக் காணப்பட்டன.

வெகு நாட்களாகவே அந்த நான்கு புறாக்களையும், உன்னிப்பாக கவனித்து வந்தது ஒரு காகம். அதை போன்றே நன்கு கொழுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டது.

ஒருநாள் –

அந்த நான்கு புறாக்களும், இரைதேடிச் சென்று போதிய அளவுக்குத் தின்றுவிட்டு, வெகு திருப்தியுடன் தங்களது இருப்பிடத்தை அடைந்தது. பின், உண்ட களைப்பு நீங்க ஓய்வெடுக்க துவங்கின.

புறாக்களை உற்று கவனித்து கொண்டிருந்த காகத்திற்கு, ஒரு யோசனை தோன்றியது.

'நாளை, இவர்களுடன் வந்து தங்கி, இவர்களைப் போலவே நன்கு தின்று வளர வேண்டும்' என்ற எண்ணத்திற்கு வந்தது. தன் சக பறவைகளிடம் அந்த யோசனையைச் சொல்லாமல், தான் மட்டுமே சுகபோகத்தில் திகழ விருப்பம் கொண்டது காகம்.

மறுநாள் –

நல்ல வெள்ளை நிறச் சாயத்தை எடுத்து, தன் மேனி முழுவதும் பூசிக் கொண்டது காகம்.

மாலை நேரம் பறவைகள் தங்களது கூடுகளை அடையும் நேரம். வேஷம் போட்டுக் கொண்ட காகம், வெண்புறாக்கள் வாழ்ந்து வந்த மரத்தை நோக்கிப் பறந்து சென்றது.

வெள்ளை நிறத்தில் சென்ற அந்த காகத்தை வெண்புறாக்கள் தங்கள் இனத்தார் என்று கருதி இடம் அளித்தன.

இரவில், புறாக்கள், தாங்கள் உண்ட உணவை காகத்திடம் கொடுத்தன. வயிறு முட்ட தானிய வகைகளையும், இதர உணவையும் தின்றது காகம்.

காகத்தின் பொருத்தமான வேஷத்தை புறாக்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அதிகாலை நேரம் –

அனைத்து வகைப் பறவைகளும், தங்களது குரலில் ஒலியெழுப்பி காலையை வரவேற்றன.

வேஷம் போட்ட காகமும், தன் வாய் திறந்து ஒலி எழுப்பிற்று. அதன் குரலைக் கேட்ட புறாக்கள் அதிர்ச்சியுற்றன. அந்நியன் வந்துவிட்டான் என்று கருதி புறாக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து காகத்தை கொத்தி கொத்தி விரட்டி அடித்துவிட்டன.

தப்பிப் பிழைத்த காகம், பழையபடி தன் இனத்தார் இருந்த இடம் நோக்கி, வேகமாகப் பறந்து வந்தது.

காகத்தின் இனத்தார் அதன் நிறத்தைப் பார்த்து விட்டு, எதிரி என்று கருதி, தங்களது அலகுகளால் ஆளுக்கொன்றாக அதன் முதுகில் கொத்தி கொத்தித் துரத்தின.

உழைத்து அதன் மூலம் உடலைப் பெருக்க வைப்பதற்குப் பதிலாக, வேஷம் போட்டு வாழத்துடித்த காகம், எங்கு போவது என்று தெரியாமல் அங்குமிங்கும் பறந்து கொண்டே இருந்தது.

நன்றி : தினமலர் சிறுவர் மலர்

- இக் கதையில் பயன்படுத்தப்பட்டுள்ள பரிச்சயமான சொற்களை (மாணவர்களுக்கு) மொழிப் பிரயோகத்திற்காகப் பட்டியலிடுங்கள்.

பரிச்சயமான சொற்கள்

**காடு, ஆலமரம், வெண்புறாக்கள், நாட்கள், வெள்ளை, காகம், இரை: பறவைகள், இருப்பிடம், விருப்பம்,இவர்கள், வெள்ளை, மரம், தானியங்கள், உடல், வாய், ஒலி, இடம், குரல், மாலை, இரவு, வயிறு, அதிகாலை, முதுகு, அலகுகள், காலை, ஆசை, நான்கு, உணவு, கூடுகள்**

பரிச்சயமற்ற சொற்களையும் மாணவர்களுக்கு அறிமுகஞ் செய்யுங்கள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றின் கருத்தை மாணவர்களுக்கு புரிய வையுங்கள்.

**பரிச்சயமான சொற்கள்**

**தீனி, திருப்தி, களைப்பு, யோசனை, ஓய்வு, எண்ணம், சுகபோகம், நிறச்சாயம், வேஷம், தானியவகை, அந்நியன், எதிரி, அதிர்ச்சி, அங்குமிங்கும், இனத்தார்**

மேலே தரப்பட்டுள்ளவாறான சொற்களைச் சரியான உச்சரிப்புடன் மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். அச்சொற்களை மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதவும், எழுதியவற்றை வகுப்பின் முன் உரத்து வாசிக்கவும் வழிப்படுத்துங்கள்.
அதன் பின் கதையுடன் தொடர்டை சிறிய வினாக்களை வினவுங்கள். வினாக்களை கரும்பலகையில் எழுதுங்கள். வினாக்களை மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி விடையளிக்க வழிப்படுத்துங்கள்.

- சிறுவர்களுக்கான இணையத்தளங்களில் இருந்து கணினி ஊடாக விடுகதைகளை மாணவர்கள் பார்வையிட ஆவன செய்யுங்கள். பாடசாலையில் இவ்வசதி இல்லாதிருப்பின் இணையத்தளத்திலிருந்து / சிறுவர் சஞ்சிகைகளில் இருந்து விடுகதைகளைப் பிரதி செய்து அவற்றைச் சுவைபட மாணவர்கள் மத்தியில் முன்வையுங்கள். விடுகதைகளை மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி விடையளிக்க வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு : 3**

:



## விடுகதைக்கு விடை என்ன?

**– இரா.கமலம், கோப்பு**

1) ஆண்டுதோறும் வரும் வரி! அடுத்தடுத்து வரும் வரி. அது என்ன?
2) ஆயிரம் நூல் பின்னலை அள்ளி அள்ளித் தின்னலாம். அது என்ன?
3) தாறுமாறாய்ச் சுற்றினாலும் தலை சுற்றாது இவனுக்கு அவன் யார்?
4) வாலால் நண்டு பிடிப்பேன்; வாயால் தேன் எடுப்பேன்; குள்ளன் எனப் எயர் எடுத்தேன்; கூட்டத்தோடு போர் தொடுப்பேன். நான் யார்?
5) கண்டு பூ பூக்கும்; காணாமல் காய் காய்க்கும்! அது என்ன?
6) ஓங்கி உயர்ந்தாள்; ஓராயிரம் பிள்ளை பெற்றாள்! அவள் யார்?
7) பச்சைத் தோலனுக்கு சிவப்பு ரத்தம்! அவன் யார்?
8) வேண்டுதலுக்காக இவனை விசிறியடிப்பர் பல பேர்! இவன் யார்?
9) உனக்குச் சொந்தம் இது. உபயோகிப்பவரோ உன்னைவிட அதிகம். அது என்ன?
10) நீரும் இல்லை; நிலமும் இல்லை; கரை மட்டும் உண்டு! அது என்ன?
11) வெள்ளைச் சீமாட்டிக்குத் தலைமேல் விளக்கு! அவள் யார்?
12) தச்சர், கொத்தர் செய்யாத தேர்; தானே கிளம்பும் சரிவான தேர்! அது என்ன?
13) அண்ணன் இனிப்பு; தம்பி புளிப்பு; தங்கை மணப்பாள்! யார் அவர்கள்?
14) வாசலிலே வண்ணப் பூ! தினம் தினம் மாறும் பூ! தெளிவாகத் தோன்றும் பூ! அது என்ன?
15) வேட்டை ஆடாத மான்; வேடர்கள் நிறைந்த மான்; கொம்பு இல்லாத மான்; குரல் இல்லாத மான்! அது என்ன?
16) ஆடுவதற்காகச் சட்டை போடுவான்! ஆடும்போது சட்டை இழப்பான்! அவன் யார்?
17) கயிற்றுக்கு வேலை கொடுத்தால் கலகல ஆட்டம்! அது என்ன?
18) பாடி வந்து பார்த்திடுவார்! பாகவதர் அல்ல! நாடி வந்து ஊசியிடுவார்! மருத்துவரும் அல்ல! அவர் யார்?
19) நீரில்லாக் குளத்திலே நீண்ட கொடி ஒன்று! வாடாது; வதங்காது; பூக்காது; காய்க்காது! அது என்ன?
20) கண்டது இருவர்; எடுத்தது பத்துப் பேர்! உண்டது ஒருவர்! யார் அவர்கள்?

**விடைகள்**
1) ஜனவரி, பிப்ரவரி
2) இடியாப்பம்
3) காற்றாடி
4) குள்ள நரி
5) வேர்க்கடலை
6) தென்னை
7) தர்பூசணி
8) தேங்காய்
9) பெயர்
10) சர்க்கரை
11) மெழுகுவர்த்தி
12) புற்று
13) பால், மோர், நெய்
14) கோலம்
15) அந்தமான்
16) பம்பரம்
17) ஸ்கிப்பிங்
18) கொசு
19) கைரேகை
20) கண், விரல்கள், வாய்

நன்றி: கோகுலம்



DRAFT

DRAFT

**மொழிப்பயிற்சி**

- மொழிப் பயிற்சிகளுக்கான சிறிய அறிவுறுத்தல்களை அட்டைகளில் எழுதி மாணவர்களுக்கு வழங்கி அவற்றை உரத்து வாசிக்கவும் செவிமடுக்கவும் செவிமடுத்துப் புரிந்து பதிலளிக்கவும் ஊக்கப்படுத்தித் தெளிவூட்டிய பின்னர் மொழிப் பயிற்சிகளுக்கு விடையளிக்க வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு : 5**

- கீழே தரப்பட்டுள்ள சொற்களை கணினி மூலம் எழுத்தமைப்புச் செய்து, பிரதியெடுத்து, அட்டைக் கீலங்களில் ஒட்டி, மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப தயார்படுத்திக் கொள்ளுங்கள்.

  **எடுத்துக்காட்டு :**

**சொற்கள்**

**மல்லிகை, குயில், தாமரை, வேப்பமரம், கொக்கு, ஆலமரம், செவ்வரத்தை, புளியமரம், செண்பகம், தூக்கணாங்குருவி, மாமரம், நித்தியகல்யாணி, பலாமரம், பருந்து, செவ்வந்தி**

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். சொற்கள் எழுதப்பட்ட அட்டைக் கீலங்களை ஒன்று வீதம் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- அட்டைக் கீலங்களில் எழுதப்பட்டுள்ள சொற்களை குழுவாக குழுவிலுள்ள ஒவ்வொருவரும் தனித்தனியாக தமது குழுக்களுக்கிடையே வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை கணினி மூலம் எழுத்தமைப்புச் செய்து, A4 தாளில் பிரதியெடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள்.

  **எடுத்துக்காட்டு :**

| **பூக்கள்** | **பறவைகள்** | **மலர்கள்** |
|---|---|---|
| 1. .................. | 1. .................. | 1. .................. |
| 2. .................. | 2. .................. | 2. .................. |
| 3. .................. | 3. .................. | 3. .................. |
| 4. .................. | 4. .................. | 4. .................. |
| 5. .................. | 5. .................. | 5. .................. |

- ஏற்கனவே கொப்பியில் எழுதிய சொற்களை வகைப்படுத்தி அட்டவணைப்படுத்தி எழுதுமாறு ஊக்கப்படுத்துங்கள்.
- இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள். பூர்த்திசெய்த அட்டவணையை அப்பியாசக் கொப்பியில் ஒட்டுமாறு அறிவுறுத்துங்கள்.
- இதுபோன்று வேறு வகைப்படுத்தல் பயிற்சிகளையும் வழங்குங்கள்.

**செயற்பாடு: 6**

- பின்வருமாறு சொற்களை கணினி எழுத்தமைப்புச் செய்து, A4 தாளில் பிரதியெடுத்து, எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். அதன் பின்னர் அச்சொற்களைப் பெரிய எழுத்துக்களில் கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதி சரியான உச்சரிப்புடன் வாசித்துக் காட்டுங்கள்.
- அதன் பின்னர், A4 தாளில் உள்ள புள்ளிக்கோடுகளில் சரியாகப் பார்த்து சொற்களை எழுத வழிப்படுத்துங்கள். எழுதிய பின், எழுதிய சொற்களை வாசிக்க ஊக்கப்படுத்துங்கள்.


**எடுத்துக்காட்டு:**

| சொற்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| பலம் | - | பழம் | மலை | - | மழை |
| ............... | | ............... | ............ | | ................ |
| வால் | - | வாள் | காலை | - | காளை |
| ............... | | ............... | ............ | | ................ |
| அரை | - | அறை | புலி | - | புளி |
| ............... | | ............... | ............ | | ................ |
| கரை | - | கறை | ஆனி | - | ஆடி |
| ............... | | ............... | ............ | | ................ |
| வலை | - | வளை | குலை | - | குழை |
| ............... | | ............... | ............ | | ................ |
| பனி | - | பணி | வலி | - | வழி |
| ............... | | ............... | ............ | | ................ |


**செயற்பாடு: 7**


- சிறிய கதையை மாணவர்கள் வாசிப்பதற்காக பிரதியெடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். கதையை படங்களுடன் இணைத்து வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் கதையைப் பார்த்து எழுதும்படி மாணவர்களுக்குக் கூறுங்கள். எழுதும்போது படங்கள் உள்ள இடங்களில் படங்கள் குறிக்கும் பிராணிகளின் பெயர்களை எழுதும்படி அறிவுறுத்துங்கள். கதையை எழுதிய பின்னர், மாணவர்களை சுயமாக வாசிக்க வழிப்படுத்துங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.

  **எடுத்துக்காட்டு :**

எங்கள் வீட்டில் உள்ள மாமரத்தில்  ஒன்று அமர்ந்தது. அதனைக் கண்ட

 பயந்து ஓடியது. மரத்தில் அமர்ந்திருந்த  பறந்து சென்றது.

 மாம்பழம் ஒன்றைப் பறித்தது. அது கீழே விழுந்துவிட்டது.

விழுந்த பழத்தை எடுக்கக்  கீழே இறங்கியது. அதனைக் கண்ட்


 குரைத்தது.

DRAFT

**செயற்பாடு: 8**

- கதைப்படங்களை A4 தாளில் பிரதியெடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். வழங்கப்பட்ட கதைப்படங்களைப் பார்த்து கதை ஒன்றைக் கட்டியெழுப்ப ஆர்வமூட்டுங்கள். கட்டியெழுப்பிய கதையை சித்திரமாக வரைய வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு** *:* கதைப்படம்



© பதிப்புரிமையுடையது

- அதன் பின்னர், தாம் கூறிய கதையுடன் தொடர்புடைய சில சொற்களை அல்லது சிவ வாக்கியங்களை எழுதும்படி மாணவர்களுக்குக் கூறுங்கள். எழுதியவற்றை மாணவர்கள் சுயமாக வாசிக்க வழிப்படுத்துங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.

- மாணவர்களிடம் வினாக்களை வினவுங்கள். அவர்கள் விடையளிக்க ஊக்கப்படுத்துங்கள்.

- அதன் பின்னர், வினாக்களைக் கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதுங்கள். வினாக்களை எழுதி, அதன் கீழ் விடைகளை எழுத வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு: 9**

**எழுத்துக்களை இனைத்துச் சொற்களை உருவாக்கும் செயற்பாட்டை மாணவர்களுக்கு வழங்குங்கள். எழுத்துக்களை இனைத்துச் சொற்களை உருவாக்க ஆர்வமூட்டுங்கள்.**

- எழுத்துக்களை இணைத்துச் சொல் உருவாக்குங்கள்.

**எடுத்துக்காட்டு:**

| | | | |
|---|---|---|---|
| **த** | **ங்** | **க** | **ம்** |
| **சி** | | | |

**தங்கம்**

**சிங்கம்**

DRAFT

| | | | |
|---|---|---|---|
| கா | டு | க | ள் |
| நா | | | |

……………………

……………………

| | | | |
|---|---|---|---|
| எ | ண் | ணெ | ய் |
| வெ | | | |

……………………

……………………

| | | | |
|---|---|---|---|
| வ | ண் | ண் | ம் |
| கி | | | |

……………………

……………………

| | | | |
|---|---|---|---|
| கூ | ட் | ட | ம் |
| த | | | |

……………………

……………………

| | | | |
|---|---|---|---|
| க | ரு | த் | து |
| கு | | | |

……………………

……………………

செயற்பாடு : 10

- எழுத்துக்களை இணைத்துச் சொற்களை ஆக்குவதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு :**

கா — னகம், கிதம், வலன், துகள், ல்கள்

1. ……………………
2. ……………………
3. ……………………
4. ……………………
5. ……………………


வா, சொ, கொ, வி, ப — த்து

1. ……………………
2. ……………………
3. ……………………
4. ……………………
5. ……………………

DRAFT

செயற்பாடு : **11**

- கீழே தரப்பட்டுள்ள காட்சிப்படத்தை குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப பிரதியெடுத்துக் கொள்ளுங்கள்.
- பிரதியெடுத்த காட்சிப்படங்களை அட்டைகளில் ஒட்டி, குழுக்களுக்கு ஒவ்வொன்று வீதம் வழங்குங்கள். அதன் பின்னர் குழுக்களிடையே வினாக்களை வினவுங்கள்.



© பதிப்புரிமையுடையது

- **பின்வரும் வாக்கியங்களை கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதுங்கள். காட்சிப்படத்தைப் பார்த்து வாக்கியங்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளமிட்டு அப்பியாசக் கொப்பியில் எழுத மாணவர்களை வழிப்படுத்துங்கள்.**

1. ஓட்டப்போட்டியில் நாய் பங்குபற்றுகின்றது. ☐
2. ஓட்டப்போட்டியில் குதிரை பங்குபற்றுகின்றது. ☐
3. ஓட்டப்போட்டியில் நரி பங்குபற்றவில்லை. ☐
4. ஓட்டப்போட்டியில் யானை ஆரம்பித்து வைக்கின்றது. ☐
5. ஓட்டப்போட்டியில் பூனையும் குரங்கும் பங்குபற்றுகின்றன. ☐

- காட்சிப்படம் தொடர்பான வினாக்களை வினவுங்கள். மாணவர்கள் சுயமாக விடைகூறும் வகையில் அவர்களை ஊக்கப்படுத்துங்கள். இதுதான் சரியான விடை எனக் கூறுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். மாணவர்களின் கற்பனைக்கு இடமளியுங்கள். பாராட்டுங்கள், ஊக்கப்படுத்துங்கள்.

**வினாக்கள் :**

1. ஓட்டப்போட்டியில் பங்குபற்றிய பிராணிகள் எவை?
2. ஓட்டப்போட்டியை எந்தப் பிராணி ஆரம்பித்து வைக்கின்றது?
3. ஓட்டப்பந்தயத்தில் எந்தப் பிராணிகள் வேகமாக ஓடக்கூடிய பிராணி எது?
4. ஓட்டப்பந்தயத்தில் மிக வேகமாக ஓடக்கூடிய பிராணி எது?
5. ஓட்டப்பந்தயத்தில் கடைசியாக ஓடி முடிக்கும் பிராணி எது என்று கருதுகிறீர்கள்?
6. ஓட்டப்பந்தயத்தில் பங்குபற்றும் பிராணிகளில் உங்களுக்குப் பிடித்த பிராணி எது?

- வினாக்களைக் கரும்பலகையில் எழுதுங்கள். அவ்வினாக்களுக்கு மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் விடையெழுத வழிப்படுத்துங்கள்.


**செயற்பாடு : 12**

- கீழே தரப்பட்டுள்ள பிராணிகள் பேசினால் எவ்வாறு தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளும் எனக் கற்பனை செய்து கூறுமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள். தரப்பட்டுள்ள பிராணிகளின் படங்களில் இருந்து விரும்பிய பிராணி ஒன்றின் படத்தைத் தெரிவு செய்து பிராணியாக மாறி தம்மை அறிமுகப்படுத்துமாறு எல்லா மாணவர்களுக்கும் அறிவுறுத்துங்கள். அதன் பின்னர் பிராணியாக மாறி தம்மை அறிமுகப்படுத்திய வாக்கியங்கள் சிலவற்றை அப்பியாசக் கொப்பியில் எழுதுமாறு அறிவுறுத்துங்கள். வாக்கியங்களுக்கு அருகில் தாம் தெரிவு செய்த பிராணியின் படத்தைத் தெரிவு வரையுமாறு உற்காகப்படுத்துங்கள்.


எடுத்துக்காட்டு:

1. 


   எனது பெயர் சேவல்
   நான் காலையில் கூவுவேன்
   குப்பைகளைக் கிளறுவேன்.
   பூச்சி புழுக்களையும் உண்பேன்.

2. 

   ..............................................................
   ..............................................................
   ..............................................................
   ..............................................................

3. 

   ..............................................................
   ..............................................................
   ..............................................................
   ..............................................................

4. 


   ..............................................................
   ..............................................................
   ..............................................................
   ..............................................................

- மாணவர்கள் இரண்டு அல்லது மூன்று சிறிய வாக்கியங்களை ஒற்றை றூள் கொப்பியில் எழுதினால் போதுமானது. ஆர்வமூட்டுங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு அவ்வேளையிலேயே உதவுங்கள். இதுபோன்ற வேறு படங்களை மாணவர்களுக்கு கொடுத்து பிராணிகளாகத் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளும் வாக்கியங்களை கூறவும் எழுதவும் மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு : 13**

- மாணவர்களைச் சிறுசிறு குழுக்களாக்குங்கள். சிறுவர் பத்திரிகைகள், சிறுவர் நாளிதழ்கள், வார இதழ்கள் போன்றவற்றில் இடம்பெற்ற படங்களைத் தேர்ந்தெடுத்து அப்படங்களைப் பிரதிசெய்து அட்டைகளில் ஒட்டி மாணவர்களுக்கு வழங்குங்கள். அவர்கள் காட்சிப் படத்தையைப் பார்த்து வாக்கியங்களை நிகழ்காலத்தில் கூறவும் சில வாக்கியங்களை எழுதவும் வழிப்படுத்துங்கள்.

DRAFT



© பதிப்புரிமையுடையது

1. ........................................................................................
2. ........................................................................................
3. ........................................................................................

செயற்பாடு: 14

- கரும்பலகையில் / வெண்பலகையில் பின்வரும் சொற்களை எழுதுங்கள். அச் சொற்களை **ககர** வரிசையில் எல்லா மாணவர்களும் வரிசையில் எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.

| |
|---|
| கடல், கிண்ணம், குதிரை, கூரை, காகிதம், கௌதாரி, கேள்வி, கைகள், கொக்கு, கோலம், கடல், கீரை |

- கீழ்க்காணும் சொற்களைக் ககர வரிசையில் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| க | ................................ | கெ | ...................................... |
| கா | ................................ | கே | ...................................... |
| கி | ................................ | கை | ...................................... |
| கீ | ................................ | கொ | ...................................... |
| கு | ................................ | கோ | ...................................... |
| கூ | ................................ | கௌ | ...................................... |

இதுபோன்று தகர, நகர, பகர, வகர, மகர ...................................... வரிசைகளிலும்பயிற்சிகளை வழங்குங்கள்.



DRAFT

**செயற்பாடு : 15**

- கட்டங்களில் ஒளிந்திருக்கும் பறவைகள் மற்றும் மிருகங்களின் பெயர்களை கண்ட பிடித்து எழுதுவதற்காகத் தரப்பட்டுள்ள பயிற்சியை மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரதி எடுத்து அட்டைகளில் ஒட்டிக் கொள்ளுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி அவ் அட்டைகளை குழுக்களுக்கு வழங்கி கட்டங்களில் ஒளிந்திருக்கும் பறவைகள் மற்றும் மிருகங்களின் பெயர்களை இனங்காணவும் அவ் பெயர்களை அப்பியாசக் கொப்பியில் எழுதவும் வழிப்படுத்துங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| யா | கா | க | ம் | ப |
| பூ | னை | ம | கு | ரு |
| நா | ப | யி | ரு | ந் |
| ய் | சு | ல் | வி | து |
| ஒ | ட் | ட | க | ம் |

**பறவைகள்**

1. ..........................
2. ..........................
3. ..........................
4. ..........................

**மிருகங்கள்**

1. ..........................
2. ..........................
3. ..........................
4. ..........................

DRAFT

**செயற்பாடு: 16**

- கீழே தரப்பட்டுள்ள சொற்களின் முதல் எழுத்துக்களை மாற்றி சுயமாக புதிய சொற்களை எழுத வழிப்படுத்துங்கள்.


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. மயில் | | | | | | |
| 2. தட்டு | | | | | | |
| 3. பஞ்சு | | | | | | |
| 4. வரம் | | | | | | |
| 5. நண்டு | | | | | | |
| 6. குட்டை | | | | | | |

- தரப்பட்டுள்ள சொற்களின் முதல் எழுத்துக்களை மாற்றி சுயமாக எழுதிய புதிய சொற்களை வாசிக்க ஆர்வமூட்டுங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.

**செயற்பாடு: 17**

- கீழே தரப்பட்டுள்ளவாறு சொற்சக்கரத்தை கணினி மூலம் உருவாக்கி அல்லது எழுதிக் கொள்ளுங்கள். அதன் பின்னர் மாணவ குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப பிரதி எடுத்துக் கொள்ளுங்கள். பிரதி எடுத்த பின்னர் வட்ட வடிவில் வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். வெட்டி எடுத்த பின்னர் அவற்றை அட்டைகளில் ஒட்டிக் கொள்ளுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி அவர்களுக்கு அட்டைகளை வழங்குங்கள். சொற் சக்க ரத்தில் உள்ள படங்களையும் முதல் எழுத்துக்களையும் கொண்டு சொற்களைக் கூறு வதற்கும் அச்சொற்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசித்துக் காட்டவும் வழிப்ப டுத்துங்கள். இடர்ப்படும் போது உதவிகளை உடனுக்குடன் வழங்குங்கள்.

**எடுத்துக்காட்டு :**




**செயற்பாடு: 18**

- தொடர்பற்ற சொல்லைக் கண்டுபிடித்து கட்டத்திற்குள் எழுதும் பயிற்சி அட்டையைத் தயாரியுங்கள். மாணவர்கள் எல்லோருக்கும் பிரதி எடுத்து வழங்குங்கள்.

**எடுத்துக்காட்டு:**


| | |
|---|---|
| **நாய் / பூனை / / மேசை / கோழி** | **மேசை** |
| **1. கண் / காது / ஆடு / வாய்** | |
| **2. கிளி / பந்து / மயில் / குயில்** | |
| **3. ஆடு/ வேர் / தண்டு / இலை** | |
| **4. நண்டு/ கல் / இறால் / மீன்** | |

செயற்பாடு - 19

- படக் குறிப்புக்களைப் கொண்டு வாக்கியங்களின் இடைவெளிகளைப் பூர்த்தி செய்யும் பயிற்சி அட்டையைத் தயாரியுங்கள். மாணவர்கள் எல்லோருக்கும் பிரதி எடுத்து வழங்குங்கள். கட்டமிடப்பட்ட இடங்களில் வர வேண்டிய சொற்களை படக் குறிப்புக்களைக் கொண்டு கண்டுபிடித்துப் பூர்த்தி செய்ய வழிப்படுத்துங்கள்

***எடுத்துக்காட்டு:***

படக் குறிப்புக்களைப் கொண்டு வாக்கியங்களின் இடைவெளிகளைப் பூர்த்தி செய்வோம்.



**1. ______ துள்ளி ஓடும்.**

**2. ______ ஊர்ந்து செல்லும்.**

**3. ______ வீட்டைக் காக்கும்.**


**4. ______ எலி பிடிக்கும்.**

**5. ______ மிகவும் பெரியது.**

**6. ______ புல் மேயும்.**

**7. ______ முட்டைஇடும்.**

**8. ______ தாவிப் பாய்ந்தது.**



இது போன்ற பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்.

**கணிப்பீடு :**

- காட்சிப் படங்களைப் பார்த்து நியம மொழியில் கூறுதல்
- கதைப் படங்களைப் பார்த்து நியம மொழியில் கூறுதல்
- படம் பார்த்து வாசித்தல், நியம மொழியில் எழுதுதல்
- ஒலி - ஒளி இறுவட்டுக்களைக் கேட்டு நியம மொழியில் எழுதுதல்
- இணையத்தளங்களைப் பார்வையிட்டுப் பயன்படுத்துதல்
- மொழிப் பயிற்சிகளுக்கான அறிவுறுத்தல்களை செவிமடுத்து வாசித்து விளங்கி நியம மொழியில் விடையளித்தல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

**தமிழ்மொழிப் பாடத்திற்கான பாடக் குறிப்பில் தேர்ச்சிகள், உள்ளடக்கம், கற்றற்பேறுகள், வளங்கள், உத்தேச நேரம், கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்(செயற்பாடுகள்), கணிப்பீடு ஆகியன உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதினை கவனத்திற் கொள்க.(மாதிரிப் பாடக்குறிப்பினைப் பார்க்குக.)**

DRAFT

# தாய்மொழி - தமிழ்
## மாதிரிப் பாடக்குறிப்பு

திகதி : ..................... முதல் ................... வரை வகுப்பு: தரம் 2 ......

| தேர்ச்சிகள் | உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | வளங்கள் | உத்தேச நேரம் | கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் (செயற்பாடுகள்) | கணிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| $L_7$ $S_7$ $R_7$ $W_7$ | • கதைப்படங்கள் | • படங்களின் தொடர்பைக் கண்டு பிடித்து கதையொன்றைக் கட்டி யெழுப்புவார். | • கதைப்படங்கள் அட்டைகள் | 120 நிமிடங்கள் | • செயற்பாடு I கதைப்படங்களை ஒழுங்குபடுத்திக் கதையைக் கூறுதல் (பக்கம83) | • கதைப்படங்களை ஒழுங்குபடுத்திக் கதைகளைக் கட்டியெழுப்புவதைக் கணிப்பீடு செய்தல். |
| | • சுய சரிதை | • தாம் அறிந்த பிராணிகள், பழங்கள், பொருட்கள் பற்றிய சுயசரிதைகளை மொழியாட்சித் திறன்களை விருத்தி செய்வதற்காக முன்வைப்பார். | • பிராணிகள், பழங்கள், பொருட்கள் ஆகியவற்றின் முகமூடிகள், விரல் மொம்மைகள் | 60 நிமிடங்கள் | • செயற்பாடு 4 முகமூடி அணிந்து சுயசரிதையைக் கூறுதல் (பக்கம் 84) | • மாணவர்கள் போலச் செய்வதை கணிப்பீடு செய்தல் |
| | • கொன்றை வேந்தன் | • கொன்றை வேந்தன் அடிகளை மனனம் செய்து தெளிவாக முன்வைப்பார். | • கொன்றை வேந்தன் அடிகள் எழுதப்பட்ட அட்டைகள், | 60 நிமிடங்கள் | • செயற்பாடு 5 கொன்றை வேந்தன் பாடலாகச் சொல்லிக் கொடுத்தல் (பக்கம் 86) | • கொன்றை வேந்தனைச் சரியாக உச்சரித்துக் கூறுவதனைக் கணிப்பீடு செய்தல் |
| | • கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய) | • கிராமிய விளையாட்டுக்களை அறிந்து மற்றவர்களுடன் இணைந்து விளையாடி மகிழ்வுறுவார். | • கிராமிய விளையாட்டுக்களின் படங்கள், சொல் அட்டைகள் | 120 நிமிடங்கள் | • செயற்பாடு 6 பாரம்பரிய விளையாட்டுக்களை அறிமுகம் செய்தல் (பக்கம் 88) | • ஒற்றுமையாக சிறந்த தொடர்பாடலுடன் விளையாட்டுக்களில் ஈடுபடுவதனைக் கணிப்பீடு செய்தல் |
| | • பண்டிகைகள் | • பண்டிகைகள் பற்றிய அனுபவங்களை முன்வைப்பதோடு முக்கியத்துவத்தினையும் தெரிந்து கொள்ள முன்வருவார். | • பண்டிகைகள் தொடர்பான படங்கள் | 60 நிமிடங்கள் | • செயற்பாடு 8 பண்டிகைகள் தொடர்பான படங்களைக் காட்சிப்படுத்தி அனுபவங்களைக் கூறச் செய்தல் (பக்கம் 90) | • பண்டிகை தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதனைக் கணிப்பீடு செய்தல் |
| | | | | 60 நிமிடங்கள் | • மாதரிப் பண்டிகைகைக் கொண்டாட்டம் (பக்கம் 91) | • பண்டிகை தொடர்பான அனுபவங்களைப் பெறுவதனை அவதானித்துக் கணிப்பீடு செய்தல் |

DRAFT

# 2.0 சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

## 01. அறிமுகம்

''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்' எனும் இக்கற்றல் கூறு, மனிதன் மீதும் மனிதசமுதாயத்தின் மீதும் பல்வேறு விதங்களில் செல்வாக்குச் செலுத்திய அல்லது செலுத்துகின்ற பௌதிக, சமூக, உயிரியல் தொகுதிகள் தொடர்பாகவும் அவற்றை அடிப்படையாகக் கொண்டு நிகழவேண்டிய கற்றல் செயலொழுங்கு தொடர்பாகவும் வழிப்படுத்துகிறது.''

குழந்தைப் பருவம் தொட்டு இயல்பாகவே மனிதன், தனது சுற்றுப்புறத்தின்பால் ஆர்வங்கொண்டு, கிரமமாக அச்சுற்றாடலுடன் வெற்றிகரமாக இடைத்தாக்கம் புரிவதற்கு அவசியமான தேர்ச்சிகளை அடைய முயற்சிக்கின்றான். இச்செயன்முறையின் போது தனது புலனுறுப்புக்களைப் பயன்படுத்துவதோடு அவற்றின் உணர்திறன்களை வகைப்படுத்தல், தர்க்கித்தல் போன்ற அறிவுசார் திறன்களையும் விருத்தி செய்து கொள்கிறான். அவ்வாறே அவற்றின் ஊடாகத் தனது சொற்களஞ்சியத்தையும் தொடர்பாடல் திறனையும் விருத்தி செய்து கொள்கிறான். தான் வாழும் சுற்றாடல் தொடர்பான தகவல்களைக் கண்டறிதல், சேகரித்தல், மீள வெளிப்படுத்துதல் என்பன பிள்ளையின் வாழ்க்கைச் செயன்முறையின் ஓர் அங்கமாகும். இது இயல்பாக எந்தவோர் உயிரியிலும் நிகழ்வதொன்றாகும். பிள்ளையின் அப்போக்கை விருத்திசெய்வதே ''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' கட்டியெழுப்பப்படும் அடிப்படையாகும்.

அன்றாட வாழ்கையில் சந்திக்கும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடிய, நாட்டின் அபிவிருத்திச் செயன்முறையில் பங்களிக்கக்கூடிய, சமநிலையான ஆளுமை யுடைய ஒருவரிடத்தே எழுத்தறிவு, கணித அறிவு, சமயம் தொடர்பான தேர்ச்சிகளோடு மேலும் பல துறைகளுக்குரிய தேர்ச்சிகளும் விருத்தியடைதல் வேண்டும். கடந்த காலங்களில் அமுலாக்கப்பட்ட ஆரம்பக்கல்விப் இக்கலைத்திட்டங்களில் அழகியற்கல்வி, ஆக்கத் தொழிற்பாடுகள், உடற்கல்வி, ஆரம்ப விஞ்ஞானம் போன்ற பாடங்களின் கீழ் அத்தேர்ச்சிகளை அடைவதற்கான சந்தர்ப்பங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. ஆனால் புதிய கலைத்திட்டத்தில் ''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' எனும் விரிவான பாடத்தின் கீழ் பல்வேறு துறைகளுக்குரிய தேர்ச்சிகளைச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வெளிக்கொணர இடமளிக்கப்பட்டுள்ளது.

முதன்மை நிலை ஒன்றில் 16 கருப்பொருள்களை மையமாகக்கொண்டு, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்ற பாடத்தின் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அழகியல், ஆக்கம், உடற்கல்வி ஆகிய துறைகளுக்குப் பொருத்தமான தேர்ச்சிகளை வெளிக்கொணர்வதோடு, சமயம், தாய்மொழி, கணிதம் ஆகிய பிரதான பாடங்களை வளப்படுத்துவதற்கும் சுற்றாடல் தொடர்பான செயற்பாடுகளைப் பயன்படுத்தலாம். தரம் ஒன்றில் பிள்ளைகளின் உரையாடலுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களையும் இச்செயற்பாடுகளினூடாக வெளிக்கொணரலாம். இப்பாடத்திற்குரிய செயற்பாடுகளை ஒழுங்கு செய்யும்போது ஆசிரியருக்குத் துணையாக, உதவி புரிவோர் இருப்பாரெனின் அவற்றை ஒழுங்கமைத்தல் இலகுவாக அமையும். அப்பாடசாலையிலேயே தரம் 5, 6 இல் கல்வி பயிலும் பிள்ளைகளின் உதவியை இதற்குப் பெற்றுக் கொள்ளலாம்.

பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சகல பகுதிகளும் அதிலுள்ளவாறே இலங்கையின் எல்லாப் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என்பதில்லை. இப்பருவப் பிள்ளைகளின் சுற்றாடல் வரையறுக்கப்பட்டதாகும். அவ் வரையறையினுள் காணப்படுபவை, நிகழுபவை யாவும் எல்லாப் பாடசாலைகளுக்கும் பொதுவானவை அல்ல. எனவே பிள்ளைகளுக்காகச் செயற்பாடுகளைத் தெரிவு செய்யும் போது தனது சூழல் வளங்களுக்குப் பொருத்தமானவாறு அவற்றைத் தெரிவு செய்யும் சுதந்திரமும் பொறுப்பும் ஆசிரியருக்கு உண்டு.

எனவே, ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள அந்தந்தக் கருப்பொருளின் ஊடாகக் குறித்த தேர்ச்சிகளை அடைவதற்காக, உத்தேச செயற்பாடுகளுக்குப் பதிலாக வேறு செயற்பாடுகளை நீங்கள் ஆக்கிக் கொள்ளலாம். குறித்த தேர்ச்சிகளை அடையத்தக்கவாறாகச் செயற்பாடுகளைத் திட்டமிட்டு ஆக்கிக் கொள்வது தொடர்பாக ஆசிரியர்கள் கரிசனை காட்டுதல் வேண்டும்.

DRAFT

## 02. ஆரம்பக் கல்விப் பருவத்திற்குரிய தேர்ச்சிகள்

தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையிலான இக்கற்றல் பரப்பினூடாக மாணவரிடத்தே பின்வரும் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்களை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

- ✓ தனது சுற்றுப்புறத்தின் அழகினை இனங்கண்டு அதனூடாக இரசனை பெறுவார்.
- ✓ விளையாட்டு, ஓய்வு, களிப்பு என்பன வாழ்க்கைக்கு அவசியமான அம்சங்களெனக்கருதி அவற்றை நாளாந்த வாழ்வில் பொருத்தமாகச் சேர்த்துச் செயற்படுவார்.
- ✓ தொடர்பானவற்றை மதித்து அவற்றைத் தனது வெளிப்பாட்டு நடவடிக்கைகளின் போது பயன்படுத்துவார்.
- ✓ ஆரோக்கிய வாழ்விற்குத் தேவையான அடிப்படைப் பழக்கங்களை வெளிக்காட்டுவார். மனிதனின் ஆக்கங்களை மதிப்பார்.
- ✓ தனது சுற்றாடலில் வசிக்கும் உயிரினங்கள், அவற்றின் சில இடைத்தாக்கங்கள் என்பன தொடர்பான விளக்கத்தைப் பெற்றுச் செயற்படுவார்.
- ✓ மனித சமூகம், மனித நடத்தைகள், மனிதர் மீது அவற்றின் ஆதிக்கம் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.
- ✓ புவி அதன் வளங்கள், வெளி என்பன மனிதன் மீது செலுத்தும் செல்வாக்கை ஆராய்வார். சூழல் பாதுகாப்புச் செயன்முறையில் தனது பொறுப்பை விளங்கி அதற்கேற்பச் செயற்படுவார்.
- ✓ தனது சுற்றாடலில் சக்திப் பயன்பாடு, விசைப் பிரயோகம் என்பன சமூகத்தின் முன்னேற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தினை கூர்ந்து நோக்கி மதிப்பார்.
- ✓ எதிர்கால வேலையுலகிற்கு தேவையான அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்காக தமது சூழலிலுள்ள பொருட்களையும் உபகரணங்களையும் தேவைக்கேற்பப் பயன்படுத்துவார்.

## 03. முதன்மை நிலை ஒன்றில் "சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்" பாடத்திற்குரிய கற்றல் தேர்ச்சிகள்

- ✓ பாடசாலைச் சூழலுடன் இசைவடைந்து செயற்படுவார்.
- ✓ வீட்டில் மகிழ்ச்சியுடனும், பயனுறுதியுடைய வகையிலும் ஆட்களுடன் இடைத்தொடர்பு கொள்வார்.
- ✓ தகவல்களைச் சேகரிப்பதற்காக அவதானிப்பார்.
- ✓ அனுபவங்களினூடாக இலகுவான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- ✓ பழக்க வழக்கங்களை அனுசரித்துச் செயற்படுவார்.
- ✓ பாடசாலையுடன் தொடர்புடைய கடந்தகாலத் தகவல்களைத் தேடியறிவார்.
- ✓ ஆரோக்கிய வாழ்வுக்காக, நற்பழக்கங்களைப் பின்பற்றுவார்.
- ✓ நட்புடன் உரையாடி, தகவல்களைச் சரியாகப் பரிமாறுவார்.
- ✓ அயற்சூழலில் நிகழும் மாற்றங்கள் குறித்து உறுத்துணர்வுடன் செயற்படுவார்.
- ✓ தம்மையும் தமது அயற்சூழலையும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் பேணுவதில் பங்களிப்பார்.
- ✓ ஏனையோர் விரும்பத்தக்க வகையில் தமது நடத்தைகளைப் பேணிவருவார்.
- ✓ அடிப்படை மெய்ந்நிலைகளைப் பேணிவருவார்.
- ✓ அன்றாட வேலைகளின் போது தமது பாதுகாப்பு தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.
- ✓ வெளியைப் பொருத்தமானவாறு பயன்படுத்தி, விளையாட்டுக்களிலும் செயற்பாடுகளிலும் ஈடுபடுவார்.
- ✓ குறித்த நோக்கங்களைக் கொண்ட வேலைகளில் கூட்டாகவும் பொறுப்புடனும் ஈடுபடுவார்.
- ✓ சுற்றாடற் பல்வகைமை குறித்து உறுத்துணர்வுடன் செயற்படுவார்.
- ✓ தேவையான சந்தர்ப்பங்களில் ஏனையோருக்கு உதவ முன்வருவார்.
- ✓ காட்சிப் பலகைகளில், படங்கள், குறியீடுகள், மற்றும் எழுத்து மூலம் காட்டப்பட்டுள்ள தகவல்களைப் பெறுவார்.
- ✓ தமது அனுபவங்களைச் சித்திரங்களாகவும் உருவ ஆக்கங்களாகவும் வெளியிடுவார்.
- ✓ சுற்றாடலில் உள்ள ஒலிகள், ஓசைகள், அசைவுகளையும், அவற்றுக்குரிய பாத்திரங்களையும் போலச் செய்து காட்டுவார்.
- ✓ அபிநயம் செய்து நடித்து, ஆடிப்பாடுவார்.

DRAFT

- ✓ வெவ்வேறு வேலைகளின்போது இயைபாக்கத்துடன் உடலை அசைப்பார்.
- ✓ பல்வேறு பொருள்களைப் பயன்படுத்தி வெவ்வேறு ஆக்கங்களை உருவாக்குவார்.
- ✓ பெற்ற அனுபவங்களையும், சேகரித்த தகவல்களையும் தனியாகவோ, கூட்டாகவோ ஒரு தொகுதியினர் முன்னிலையில் சமர்ப்பிப்பார்.
- ✓ வீட்டிலும் பாடசாலையிலும் தமது கடமைகள், பொறுப்புக்கள் குறித்து உறுத்துணர்வுடன் செயற்படுவார்.

## 04. "சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்" என்ற பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வழிப்படுத்தல்

- ✓ இப்பாடத்திட்டத்தில் பிள்ளையின் சுற்றாடல் 16 கருப்பொருள்கள் வாயிலாக விரிவு படுத்தப்பட்டுள்ளது.
- ✓ சகலவற்றையும் திருப்திகரமான அனுபவங்களாகப் பெற்றுக் கொள்வதற்குப் பிள்ளைகளுக்கு இடமளிக்க வேண்டும். அதற்குப் போதியளவு திட்டமிடலும் ஆயத்தமும் அவசியமாகும்.
- ✓ இங்கு தரப்பட்டுள்ள கருத்துகளுக்கேற்ப அறிமுக முறைகளையும், கற்றல் முறைகளையும் பிரயோகித்துப் பாடங்கள் திட்டமிடப்படல் வேண்டும்.
- ✓ தகவல்களைத் தேடியறிதலும் தகவல்களை அறிக்கைப்படுத்தலும் முக்கியமானவையாகும். ஆரம்பக் கட்டத்தில் வாய்மொழியாகவும் பருமட்டான படங்கள் மூலமும் தமது அனுபவங் களை வெளிப்படுத்துவதற்குப் பிள்ளைகளை ஊக்குவிக்குக. படிப்படியாக, சொற்களையும், வாக்கியங்களையும் ஓரளவு விளக்கமான படங்களையும் பயன்படுத்துவதற்குப் பிள்ளைகளை வழிப்படுத்துக.
- ✓ சகல, வேலைகளையும் முயற்சிகளையும் மதிக்க வேண்டும்.
- ✓ பிள்ளைகளைக் குழுக்களாக வேலைகளில் ஈடுபடுத்தவும். எனினும் ஆரம்பச் சந்தர்ப்பங்களில் குழுவில் செயலாற்ற வேண்டிய முறை தொடர்பாகப் பிள்ளைகளுக்கு வழிகாட்டுதலும் உதவி புரிதலும் அவசியமாகக் கூடும்.
- ✓ ஏதேனும் கருப்பொருள் தொடர்பாகக் கற்றல் - கற்பித்தல் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது படிப்படியாகக் குவியும் தகவல்களையும் பொருள்களையும் (படிப்படியாகக் கட்டி யெழுப்பப்படும்) ஒரு கண்காட்சியாக மாற்றுக.
- ✓ குறித்தவோர் ஒழுங்கில் கருப்பொருள்கள் முன்வைக்கப்படவில்லை. எந்தவொரு நேரத்திற்கும் பொருத்தமான கருப்பொருளை எந்த இடத்திலிருந்தும் தெரிவுசெய்வதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரமுண்டு. காலத்திற்குப் பொருத்தமானவாறு கருப்பொருள்களைத் தெரிவுசெய்வதனால் வளங்களைப் பயன்படுத்துதல் மிக இலகுவாக அமையும்.

## 05. கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' எனும் பாடம், கற்பித்தலை விட கற்றலுக்கே முதலிடம் வழங்குகின்ற ஒரு கற்றல் - கற்பித்தற் செயன்முறையாகும். முழு வகுப்பையுமோ குழுக்களையோ தனித்தனி மாணவரையோ கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம்.

ஆசிரியர் முன்கூட்டியே இதற்காக ஆயத்தங்களைச் செய்துகொள்ள வேண்டும். ஒரு குறித்த சந்தர்ப்பத்தில் வெவ்வேறு குழுக்களை வெவ்வேறுபட்ட வேலைகளில் ஈடுபடுத்தலாம். பரந்த பாடப்பரப்பை உள்ளடக்குவதற்கு இது வழிகோலும்.
மாணவர்களுக்காகத் திட்டமிடும் வேலைகளில், அவதானிப்புகள், களப் பிரயாணங்கள். கையாண்டு பார்த்தல், குறுஞ்செயற்றிட்டம், சேகரித்தல், வகிபாகமேற்றல் போன்ற பல்வேறு கற்றல் அணுகுமுறைகளினூடாகவும், மனிதர்கள், நூல்கள், அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் போன்றவற்றினூடாகவும் தகவல் சேகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் அடங்கியிருத்தல் வேண்டும்.

## 06. பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

தரம் ஒன்றில் ''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' பாடத்தில் நாள் முழுவதும் மேசைக்கருகில், கதிரையில் அமர்ந்திருப்பதற்குப் பதிலாக பல்வேறு மெய்ந்நிலைகளிலும் மகிழ்ச்சியுடன் செயற்பாடுகளில் ஈடுபடும் பிள்ளைகளைக் காணக்கூடியவாறாகவே பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டங்களும் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.



DRAFT

- ✓ பாடசாலை நேரத்தினுள், தரம் ஒன்றில் கற்கும் பிள்ளைகள், பிரதானமாக விளையாட்டுடன் கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான சுற்றாடலை ஒழுங்கு செய்தல்.
- ✓ திறந்த வெளியில் கற்பதற்கான வாய்ப்பு வசதிகளை வழங்குதல்.
- ✓ பாடசாலையின் விளையாட்டுக்கள், அழகியற் செயற்பாடுகள், வேறு இணைப்பாட நடவடிக்கை களின்போது தரம் ஒன்றின் பிள்ளைகளையும் பங்குகொள்ளச் செய்தல்.
- ✓ தேவையான சந்தர்ப்பங்களில், பாடசாலையில் மேல் வகுப்புக்களில் (தரம் 5, 6 இல்) உள்ள பிள்ளைகளின் உதவியையும் பெற்றுக் கொடுத்தல்.

## 07. மாணவர் முன்னேற்றத்தைக் கணிப்பிடல்

மாணவரது கற்றல் - கற்பித்தல் பணிகளை ஒழுங்கு செய்யும்போது, அவர்கள் கற்றல் தொடர்பாக வெளிக்காட்டும் ஆற்றல்கள், ஆற்றலின்மைகள் பற்றிய சிறப்பான விளக்கத்தை ஆசிரியர்கள் பெற்றிருத்தல் வேண்டும். இதற்காக வகுப்பறையில் இடையறாது நடத்தப்படும் தகவல் சேகரிப்புச் செயன்முறையே ‘‘கணிப்பீடு’’ என்பதால் கருதப்படுகின்றது. மாணவரைக் கணிப்பிடுவதன் நோக்கங்கள் பலவாகும். எனினும் ஆரம்பத் தரங்களில் நடத்தப்படும் கணிப்பீடானது பிரதானமான இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்று கண்டறிதலாகும். தமது வகுப்பறையில் இருக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் மாணவிக்கும் அவரவருக்குப் பொருத்தமானவாறு கல்வியை வழங்குவதாயின் ஆசிரியர், ஒவ்வொரு மாணவன்/மாணவி தொடர்பாகவும் தெளிவான விளக்கத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். கண்டறிந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு மாணவனுக்கும் / மாணவிக்கும் போதனை சார்ந்த பின்னூட்டலை வழங்குவதே இரண்டாவது நோக்கமாகும். எனவே ஆரம்பத் தரங்களில் நடைமுறைப்படுத்தப்படும் கணிப்பீடானது, மாணவரைத் தர வரிசைப்படுத்தல், ஒரு மாணவனை மற்றொருவருடன் ஒப்பிட்டு மதித்தல், மாணவரை அவர்களது ஆற்றல்களின்படி வகைப்படுத்தல் போன்றவற்றுக்கு அப்பாற்பட்ட ஒன்று எனக் கருதலாம்.

ஆரம்பத் தரங்களில் நடைமுறைப்படுத்தப்படும் கணிப்பீட்டை ஆசிரியரால் நடத்தப்படுகின்ற நியதி சார்ந்த, முறைசாராத தொடர்ச்சியான ஒரு கணிப்பீடு எனக் குறிப்பிடலாம். கலைத்திட்டத்தின் உத்தேச தேர்ச்சிகளுக்கு அமைய உருவாக்கப்பட்ட மதிப்பீட்டுப் பிரமாணங்கள், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் அடக்கப்பட்டுள்ளன. மாணவர் இப் பிரமாணங்களை எந்த அளவுக்கு எட்டியுள்ளார் என்பதைக் கணிப்பீட்டினூடாக ஆசிரியர்கள் கண்டறிதல் வேண்டும்.

வினாக்கள் கேட்டல், முறைசாராத வகையில் மாணவரை அவதானித்தல், அவர்களுடன் கலந்துரையாடல், செயல் அடைவுக்கோவைகளைப் பேணிவருதல், வீட்டு வேலைகளை மதிப்பிடல் போன்ற முறைசாரா உத்திகளையும் பயன்படுத்தலாம். அவற்றைப் பொருத்தமானவாறு பயன்படுத்துதல் ஆரம்பத் தரங்களில் வகுப்பாசிரியரின் பொறுப்பாகும். அலகு இறுதியிலோ தவணை இறுதியிலோ அன்றி, கற்பித்தற் பணிகள் நிகழும் வேளையிலேயோ கணிப்பீட்டை நடத்துதல் வேண்டும். கல்வியை மேலும் சிறப்பாக மாணவர்க்கு வழங்குவதற்காக, ஒவ்வொரு மாணவனுக்கும் / மாணவிக்கும் சிறந்த கல்வியை வழங்குவதற்காக நன்கு இனங்காணத்தக்க ஒரு செயன்முறையே கணிப்பீடு என்பதை ஆசிரியர் விளங்கிக் கொள்ள வேண்டும்.

DRAFT

DRAFT

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| **1.** நாமும் பாடசாலையும் | • பாடசாலையில் உள்ள சிறப்பான மற்றும் முக்கியமான இடங்களை இனங்கண்டு அவற்றின் பல்வகைமைக்கு இசைவாகச் செயற்படுவார்.<br>• பாடசாலையின் கருமங்களில் பங்களிப்புச் செய்து பாடசாலைப் பண்பாட்டை நன்றே பேணிவரச் செயற்படுவார்.<br>• பாடசாலையில் இருக்கும் வெவ்வேறு தனியாள் வகிபாகங்களை இனங்கண்டு அவர்களின்பால் உணர்த்தன்மையுடன் செயற்படுவார்.<br>• வகுப்பறையை அழகாகப் பேணிவருவதற்காக, பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி படைப்பாக்கங்கள் புரிவார்.<br>• உபகரணங்களைப் பயன்படுத்தி நரம்பு - தசை இசைவாக்கத்துக்காக அசைவுச்/ இயக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• பாடசாலையின் பெறுமானத்தை மேம்படுத்திக் காட்டுவதற்காக களிப்பூட்டும் அணுகுமுறைகளைப் பயன்படுத்துவார். | • பாடசாலைச் சூழலை அழகாகவும் சுத்தமாகவும் வைத்திருத்தல்<br>• பாடசாலையின் பொதுச் சொத்துக்களைப் பேணுதல்<br>• பாடசாலையில் நடந்து கொள்ள வேண்டிய விதம்<br>• வகுப்பறைக்கும் பாடசாலைக்கும் தாம் ஆற்ற வேண்டிய கடமைகளும் பொறுப்புக்களும்<br>• பாடசாலையில் வெவ்வேறு வேலைகளைச் செய்யும் தனியாள்களை மதித்தல்<br>• வகுப்பறையை அழகாகப் பேணி வருவதற்குப் பொருத்தமான படைப்பாக்கங்கள்<br>• விளையாட்டு முற்றத்தையும் பல்வேறு உபகரணங்களையும் பயன்படுத்திச் செய்யத்தக்க இயக்க/ அசைவுச் செயற் பாடுகள்<br>• பாடசாலையின் பெறுமானத்தை எடுத்துக்கூறும் பாடங்கள், கவிதைகள் |
| **2.** எமது வீடு | • வீடு, வீட்டுடன் தொடர்புடைய தனியாள்கள் மற்றும் பிராணிகள் தொடர்பாக நன்மனப்பாங்குடன் செயற்படுவார்.<br>• தமது கடமைகளையம் பொறுப்புக்களையும் நிறைவேற்றி, வீட்டை நன்றே பேணிவரப் பங்களிப்புச் செய்வார். | • குடும்பத்தின் நெருக்கமான உறவினர்கள் மற்றும் உறவத் தொடர்புகள் பற்றிய தகவல்கள்<br>• பெற்றாரும் வீட்டில் இருக்கும் ஏனைய உறுப்பினர்களும் தமது கடமைகளை யும் பொறுப்பக்களையும் நிறைவேற் றும் விதம் |

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
| --- | --- | --- |
| | • அன்றாடம் வீட்டில் பயன்படுத்தத் தக்கவற்றை உற்பத்தி செய்து கொள்ளப் பங்களிப்புச் செய்வார்.<br>• வீட்டின் அழகையும் சுத்தததையும் பேணுவதற்காகக் கையாளத்தக்க படைப்பாக்கங்கள் செய்து களிப்பறுவார்.<br>• வீட்டுச் சூழலைத் துணையாகக் கொண்டே இயக்கச்/ அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் களிப்புறுவார்.<br>• வீட்டுச் சூழல் தொடர்பாகப் பெறும் அனுபங்ளைப் களிப்புடன் வெளிப்படுத்துவார். | • தமது குடும்ப உறுப்பினர்களுடன் நல்ல தொடர்புகளைப் பேணிவருதல்<br>• தாம் வீட்டுக்காக ஆற்றத்தக்க கடமைகள்<br>• வீட்டின் அழகையும் சுத்தத்தையும் பேணுவதற்காகப் பயன்படுத்தத்தக்க படைப்பாக்கங்கள்<br>• வீட்டுச் சூழல் சார்ந்த சிறு விளையாட்டுக்கள்<br>• குடும்ப உறுப்பினர்களின் வகிபாகங் களை எடுத்துக்காட்டும் வகையிலான நடித்துக் காட்டல்கள் |
| **3.**தோட்டத்திற்கு வரும் பிராணிகள் | • சுற்றுப்புறச் சூழலில் வாழும் பிராணிகளுக்கு இடையே காணப் படும் பல்வகைமையைக் கற்றாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• பிராணிகளும் சூழலில் ஒரு பகுதியே எனக் கருதி, பிராணிகள் குறித்து உணர்தன்மையுடன் செயற்படுவார்.<br>• எமது சுற்றுப்புறத்தில் காணப்படும் பிராணிகளின் நடத்தைகள் தொடர்பாக கவனஞ் செலுத்தி, இயக்க அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• பிராணிகளின் வெவ்வேறு இயல்பு களையும் நடத்தைகளையும் களிப்புன் முன்வைப்பார்.<br>• வெவ்வேறு ஊடகங்களைப் பயன் படுத்தி, பிராணிகளின் வாழிட மாதிரிகள் அமைப்பார். | • சுற்றுப்புறச் சூழலில் உள்ள பிராணிக ளினது புறத்தோற்ற வேறுபாடுகள்<br>• பிராணிகளின் வெவ்வேறு நடத்தை களிலுள்ள வேறுபாடுகள்<br>• பிராணிகளின் வெவ்வேறு நடத்தைகள், நாளாந்த வாழ்க்கையின் மனிதனுக்குப் பயன்படும் விதம்<br>• பிராணிகளின் இருப்புக்காகச் செய்யத்தக்கவை<br>• பிராணிகளின் நடத்தைகள் சார்ந்த ஆக்கச் செயற்பாடுகள்<br>• பிராணிகளின் வெவ்வேறு அசைவுகள் மெய்ந்நிலகள் சார்ந்த ஆக்கி நடித்தல்கள்<br>• பிராணிகள் மற்றும் பிராணிகளின் வாழிடங்கள் சார்ந்த சித்தரங்களும் மாதிரியுருக்களும் |

DRAFT

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| **4.** நீருடன் விளையாட்டு | • நீரானது பெறுமதி மிக்க ஒரு வளமாகும் எனக் கருதி, அதனைப் பயனுள்ளவாறு கையாள்வார்.<br>• ஆரோக்கிய வாழ்க்கைக்காக, நீரின் முக்கியத்துவத்தை மதித்து உரியவாறு பயன்படுத்துவார்.<br>• நீரின் தன்மை மற்றும் பொருள்கள் நீருடன் காட்டும் நடத்தைகள் ஆகியன தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.<br>• நீரை வெவ்வேறு வழிகளில் பயன்படுத்தி ஆக்கங்கள் புரிவார்.<br>• நீரைப் பயன்படுத்தி, ஆக்கியல் அசைவு/ இயக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• நீரைக் கருப்பொருளாகக் கொண்டு களிப்பூட்டும் செயற்பாடு களில் ஈடுபடுவார். | • நீரை ஒரு வளமாகப் பயன்படுத்தி, விளைதிறனுள்ளதாகப் பயன்படுத்து வதன் முக்கியத்துவம்<br>• நீரை ஓரிடத்தில் இருந்து மற்றுமொரு இடத்துக்குக் கொண்டு செல்லத்தக்க வழிகள்<br>• ஆரோக்கிய வாழ்க்கைக்காக நீரைப் போதுமான அளவுக்கு நுகருதல்<br>• வெவ்வேறு பொருள்கள் நீருடன் காடடும் நடத்தைகள்<br>• நீரில் மிதந்து செல்லச் செல்லத்தக்க ஆக்கங்கள்<br>• நீரைத் தொடர்புபடுத்தி செய்யத்தக்க ஆக்கபூர்வமான விளையாட்டுக்கள்.<br>• நீரைப் பயன்படுத்தி பல்வேறு நாதங்களைப் பிறப்பிக்கத்தக்க வழிகள் |
| **5.** புத்தாண்டுக் காலம் | • புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங் களைத் தேடியறிந்து அறிக்கைப் படுத்துவர்/ பதிவு செய்வர்.<br>• புத்தாண்டுப் பாரம்பரியங்களின் முக்கியத்துவத்தை மதித்துச் செயற்படுவார்.<br>• புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் செய்யும் செயல்கள் காரணமாக நிகழத்தக்க விபத்துக்கள் தொடர் பாகக் கவனஞ் செலுத்தி அவற்றி லிருந்து பாதுகாப்புப் பெற ஆவண செய்வார்.<br>• புத்தாண்டின் சிறப்பு, வெளிப் படுத்தும் வெவ்வேறு ஆக்கங்களில் ஈடுபட்டுக் களிப்புறுவர். | • புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் சுற்றுப்புறச் சூழலில் நிகழும் மாற்றங்கள்<br>• புத்தாண்டுப் பண்டிகைக் கால பாரம்பரியங்கள்<br>• வெவ்வேறு மக்கட் பிரிவினருக்குரிய சிறப்பான புத்தாண்டுப் பாரம்பரியங்கள்.<br>• புத்தாண்டுப் பண்டிகை நாள்களில் நிகழத்தக்க விபத்துக்களும் அவற்றில் இருந்து பாதுகாப்புப் பெறும் விதமும்<br>• புத்தாண்டுப் பண்கைக் காலம் சார்ந்த படைப்பாக்கங்கள்<br>• புத்தாண்டுப் பண்டிகைக் காலத்துக் குரிய சிறப்பான கிராமிய விளையாட்டுக்கள் |

DRAFT

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | • வெவ்வேறு மக்கட் பிரிவினரின் புத்தாண்டுப் பாரம்பரியங்களை மதிப்பார்.<br>• புத்தாண்டுப் பண்டிகைக் காலம் தொடர்பான விளையாட்டுக்களில் ஈடுபட்டுக் களிப்புறுவார்.<br>• புத்தாண்டுப் படிண்கைக் காலத்துக் கெனச் சிறப்பான களிப்பூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | • புத்தாண்டுப் பண்டிகைக் காலத்துக் குரிய சிறப்பான நாட்டார் பாடல்கள் - நாட்டார் கவிதைகள் உள்ளடக்கிய அசைவு/ இயக்கச் செயற்பாடுகள் |
| **06.** நாம் காணும் வானம் | • வானத்திலும் அதன் சுற்றுப் புறத்திலும் நிகழும் மாற்றங்களை அவதானித்து அறிக்கைப்படுத்து வார்.<br>• சூரிய ஒளி, காற்று, மழை ஆகியன காரணமாக ஏற்படும் தாக்கங்கள் குறித்துக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.<br>• வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி, வளம் மற்றும் சுற்றுப்புற சூழல் மாற்றங்களை வெளிக்காட்டும் ஆக்கங்கள் புரிவார்.<br>• வெளியைப் பயன்படுத்தி விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.<br>• வானத்தின் அழகை வெளிபாட்டு ஊடகங்களின் மூலம் முன்வைத்துக் களிப்புறுவார். | • நாளின் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்கள்<br>• சூரிய ஒளி, மழை, காற்று ஆகியன காரணமாக ஏற்படும் தாக்கங்கள்<br>• அதிக சூரிய ஒளி காரணமாக உடலில் ஏற்படும் பாதகமான நிலைமைகளில் இருந்து பாதுகாப்புப் பெறும் விதம்<br>• வெவ்வேறு பொருள்களைப் பயன் படுத்தி வான்பொருள்கள் ஆக்குதல்<br>• கிடையான மற்றும் நிலைக்குத்தான வெளியைப் பயன்படுத்துதல் தொடர்பான விளையாட்டுக்கள்.<br>• வானத்தின் அழகு பற்றிக் கூறும் பாடல்களும் வெளிப்பாடு சார்ந்த அசைவுகளும்<br>• காற்றைப் பயன்படுத்தி ஒலி பிறப்பிக்கத் தக்க வாத்தியக் கருவிகள் |
| **7.** நாம் உண்பவையும் குடிப்பவையும் | • உணவு வகைளின் முக்கியத்து வத்தை இனங்கண்டு அவற்றை நுகர்வார்.<br>• ஆரோக்கியமாக இருப்புக்காக | • ஓர் உணவு என்ற வகையில் கீரை வகைககளின் முக்கியத்துவம்<br>• உணவு வேளையொன்று தயாரித்தல்<br>• போசாக்கான உணவை |

DRAFT

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | (வாழ்க்கைக்காக) சரியான சுகாதாரப் பழக்கங்களைக் கையாள்வார்.<br>• உணவு அசுத்தமடையும் (மாசடையும்) விதங்களை இனங் கண்டு, அவற்றிலிருந்து உணவைப் பாதுகாக்க ஆவன செய்வார்.<br>• பல்வேறு ஊடகங்களைப் பயன் படுத்தி உணவு தொடர்பான படைப்பாக்கங்களில் ஈடுபடுவார்.<br>• சக்தி விருத்திக்குத் துணையாகும் அசைவு இயக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• உணவு உண்ணும்போது பேண வேண்டிய சரியான ஒழுங்குகளை எடுத்துக்காட்டும் வகையில் ஆக்கியல் நடிப்புக்களில் ஈடுபடுவர். | உட்கொள்வதன் அவசியம்<br>• நோய்களிலிருந்து தவிர்ந்திருப்பதற்குத் தேவையான உணவுப் பழக்கங்கள்<br>• உணவு வீண்விரயத்தைத் தவிர்த்துக் கொள்ளும் விதம்<br>• வெவ்வேறு ஊடகங்களைக் கொண்டு உணவு வகைகளின் மாதிரியுருக்கள் ஆக்குதல்<br>• சக்தி விருத்திக்குத் துணையாகத்தக்க அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடல்<br>• உணவு தொடரபான பாடல்கள், கவிதைகள், வகிபாகமேற்று நடித்தல்கள் |
| **8.** தகவல்கள் கிடைக்கும் வழிகள் | • தொடர்பாடலின்போது பயன்படுத்தும் வெவ்வேறு ஊடகங்களை இனங்கண்டு அவற்றைச் சரியாகக் கையாள்வார்.<br>• தொடர்பாடல் சார்ந்த தொழினுட்ப சாதனங்களைப் பயன்படுத்தும் திறனை வெளிப்படுத்துவார்.<br>• தொடர்பாடலின்போது மரியாதையாக நடந்து கொள்வார்.<br>• தகவல் தொடர்பாடல் சார்ந்த பல்வேறு ஆக்கங்கள் புரிவார்.<br>• வெவ்வேறு சமிக்ஞைகளுக்கு எதிர்வினை காட்டியவாறு அசைவு/ இயக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• வெவ்வேறு தொடர்பாடல் வழிகளைக் கையாண்டு கருத்து | • தகவல்களைச் சரியாகப் பெறும் மற்றும் சரியாக வழங்கும் திறன்கள்<br>• கருத்துக்களையும் உணர்வுகளையும் சரியாக வெளிப்படும் விதம்<br>• தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தும் தொழினுட்ப சாதனங்களைச் சரியாகப் பயன்படுத்துதல்<br>• தொழினுட்ப சாதனங்களைப் பயன்படுத்தும்போது நிகழத்தக்க விபத்துக்கள்<br>• தகவல்களை வழங்கும் போதும் பெறும் போதும் மரியாதையாக நடந்து கொள்ளல்<br>• வெவ்வேறு ஊடகங்களைப் பயன் படுத்திச் செய்யும் தகவல் தொடர் பாடலுக்கப் பொருத்தமான ஆக்கங்கள்<br>• வெவ்வேறு சமிக்ஞைகளுக்கு எதிர் |

DRAFT

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | வெளிப்பாட்டு அசைவுகளையுள் ளடக்கிய செயற்பாடுகளில் ஈடுபடுவார். | வினை(துலங்கல்) காட்டியவாறு செய்யும் இயக்க/ அசைவுச் செயற்பாடுகள்<br>• ஊமம் (Mimicry) மூலம் தொடர்பாடல் |
| **9.** சுற்றுப் புறத்தில் நிகழும் மாற்றங்கள் | • சூழலில் நிகழும் மாற்ங்கள் மற்றும் அம்மாற்றங்களுக்கு பிராணிகள் காட்டும் எதிர்வினை களைத் தேடியறிந்து அறிக்கைப் படுத்துவார்.<br>• சுற்றுப்புறச் சூழலல் பாதகமான மாற்றங்களைச் சாதகமான மாற் றங்களாக மாற்றிக் கொள்வார்.<br>• இயற்கைச் சூழலில் ஏற்படத்தக்க அவசர நிலைமைகள் தொடர் பாகக் கவனஞ் செலுத்திச் செயற் படுவார்.<br>• சுற்றுப்புறச் சூழலின் வேறுபாடு களின்படி செயற்படுத்தத்தக்க ஆக்கங்களைச் செய்வார்.<br>• சுற்றுப்புறச் சூழலில் நிகழும் மாற்றங்களின் வழியே அசைவு தேடல் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• வெளியைப் பயன்படுத்தி களிப்பூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | • இயற்கைக் காரணங்கள் காரணமாக, சூழலில் நிகழும் மாற்றங்கள் (மழை, வெயில், காற்று தொடர்பாக)<br>• மழை, வெயில், காற்று சார்பாக சுற்றுப் புறச் சூழலில் நிகழும் மாற்றங்களின் பாதகமான மாற்றங்களைச் சாதகமான மாற்றங்களாக மாற்றிக் கொள்ளல்<br>• காற்றின் துணையுடன் செயற்படுத்தத்தக்கவற்றை ஆக்குதல்<br>• சுற்றுப்புறச் சூழலில் நிகழும் மாற்றங்களின் வழியே நெகிழ்தன்மை வளர்ச்சிக்குத் துணையாகும் அசைவியக்கங்கள் தேடல்கள்<br>• சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்களின் துணையுடன் களிப்பூட்டும் செயற்பாடுகள் |
| **10.** எமது நல்வாழ்வு | • நன்கு ஒழுங்கமைத்து செயற் படுவதன் மூலம் தமது கருமங் களை வெற்றிகரமாக நிறைக் கொள்வார்.<br>• நற்பண்புகளை மதித்து அப்பண்புகளைப் பேணிவர | • அன்றாட கருமங்களில் ஒருங்கும் நேர்த்தியும்<br>• பாடசாலையில் ஒரு நல்ல மாணவ னாக/ மாணவியாக/ பிள்ளையாக நடந்து கொள்வதன் அவசியம்<br>• தன்னடக்கத்துடன் கருத்து |

DRAFT

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | ஆவன செய்வார்.<br>• பொறுப்புக்களை நிறைவேற்றிய வாறு பொதுக் கருமங்களில் பங்களிப்புச் செய்வார்.<br>• சட்டதிட்டங்களை ஏற்று, அச்சட்ட திட்டங்களை மதித்து நடந்து கொள்வர்.<br>• நற்பழக்கங்களைப் பேணிவரத் துணையாகும் வகையிலான ஆக்கங்கள் புரிவார்.<br>• உடல், உள தகைமையைப் பேணிவருவதற்குத் துணையாகும் ஆக்கங்களில் ஈடுபடுவார்.<br>• களிப்பூட்டும் அணுகுமுறைகளைக் கையாண்டு நல்ல நடத்தைகளை வெளிக்காட்டுவார். | வெளியிடலின் அவசியம்<br>• தேவையான சந்தர்ப்பங்களில் ஏனையோருக்கு உதவி புரிவதன் முக்கியத்துவம்<br>• தமது தருணம் வரும் வரையில் இருக்கப் பழகிக் கொள்ளல்<br>• நற்பழக்கங்களைப் பேணிவர உதவும் ஆக்கங்கள்<br>• கூட்டுணர்வை வளர்க்கத்தக்க குழு விளையாட்டுக்கள்<br>• நல்வாழ்க்கையை வலியுறுத்தும் பாடல்கள், கவிதைகள், வகிபாகமேற்று நடித்தல்கள் |
| **11.** எமக்குத் தேவை யானவை கிடைக்கும் வழிகள் | • தேவைப்படும் சந்தர்ப்பங்களில் எமக்கு உதவி புரிவோரை இனங்கண்டு அவர்களின்பால் நல்ல மனப்பாங்குடன் செயற்படுவார்.<br>• வியாபார நிலையமொன்றின் தன்மையையும் தொழிற்பாட்டை யும் இனங்கண்டு அறிக்கைப் படுத்துவார்/ பதிவு செய்வார்.<br>• தமக்குக் கிடைத்தவற்றை ஏனை யோருடன் பகிர்ந்து பரிமாறிக் கொள்ளும் நற்பண்பை பேணிவர ஆவன செய்வார்.<br>• எமக்குத் தேவைப்படும் சிலவற் றைத் தாமே உற்பத்தி செய்து கொள்ளலாம் என்பதை விளங்கிச் செயற்படுவார்.<br>• அன்றாடம் தேவைப்படுபவற்றை பல்வேறு பொருள்களை பயன் | • உதவி புரிவோரும் அவர்கள் ஆற்றும் சேவையும்<br>• அன்றாடம் எமக்குத் தேவைப்படுப வற்றை வியாபார சந்தையிலிருந்து நிலையங்களிலிருந்து பெற முடிதல்<br>• சந்தைச் செயற்பாடு தொடர்பான அனுபவங்கள்<br>• தமக்குக் கிடைப்பவற்றை தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பகிர்ந்து பரிமாறிக் கொள்ளும் பழக்கத்தை பேணிவருதல்<br>• அன்றாடம் தேவைப்படும் சிலவற்றைத் தாமாக உற்பத்தி செய்து கொள்வதன் முக்கியத்துவம்<br>• தையல் வேலை தொடர்பான அடிப்படைப் பரிச்சயம்<br>• வெவ்வேறு பொருள்களைப் பயன் படுத்தி, உடலின் துரித இயக்கத்தை |

DRAFT

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | படுத்தி ஆக்குவார்.<br>• உடல் தகைமை விருத்திக்காக அவசியமான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• எமக்குத் தேவையானவற்றை வழங்கும் இடங்களால் ஆற்றப் படும் கருமங்களை களிப்புற்றவாறு வெளிப்படுத்துவார். | வளர்க்க உதவும் செயற்பாடுகள்.<br>• எமக்குத் தேவையானவற்றை வழங்கும் இடங்கள் மூலம் ஆற்றப்படும் கருமங்கள் தொடர்பான வகிபாகமேற்று நடித்தல்கள் |
| **12.** பிரயாணம் | • பிரயாணத்தின்போது சரியான மெய்ந்நிலைகளைப் பேணிவரு வார்.<br>• பொதுப் போக்குவரத்துச் சேவை கள் பற்றி அறிவூட்டம் பெற்று அவற்றைப் பாதுகாக்க ஆவன செய்வார்.<br>• பிரயாணஞ் செய்யும்போது எதிர்ப் படத்தக்க தடைகள், விபத்துக்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற ஆவன செய்வார்.<br>• பிரயாணங்களின்போது பரஸ்பரம் ஒத்துழைத்துச் செயற்படுவார்.<br>• போக்கவரத்து முறைகளின் மாதிரி களை வெவ்வேறு ஊடகங்களைக் கொண்டு ஆக்குவார்.<br>• பிரயாணஞ் செய்தல் தொடர்பான இயக்க/ அசைவுச் செயற்பாடு களில் ஈடுபடுவார்.<br>• வெவ்வேறு பயணப் பாங்குகளைத் தழுவி, ஆக்க நடித்தல்களில் ஈடுபடுவார். | • பாரமானவற்றைத் தூக்குதல் தொடர் பாகப் பேணிவர வேண்டிய சரியான மெய்நிலைகள்<br>• வெவ்வேறு வேலைகளைச் செய்யும்போது பேணிவர வேண்டிய உடற் சமனிலை<br>• போக்குவரத்துக்காப் பயன்படும்போது வாகனங்களும் தெருக்களும் பாதுகாக்க வேண்டிய பொதுச் சொத்துக்களாகும்.<br>• பிரயாணங்களின்போது எதிர்படத்தக்க தடங்கல்களினதும் நிகழத்தக்க விபத்துக்களினதும் பாதுகாப்புப் பெறுவதற்காகக் கையாள வேண்டிய நடவடிக்கைகள்<br>• வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி வாகன மாதிரியுருக்கள் ஆக்குதல்<br>• உடலின் சமநிலைக் காத்தல் தொடர்பான மெய்ந்நிலைகள் சார்ந்த செயற்பாடுகள்<br>• வெவ்வேறு பயணப் பங்குகளின் சந்தத்துக்கு/ தாளத்துக்கு அமைவான ஆக்கியல் அசைவுச் செயற்பாடுகள் |

DRAFT

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| **13.** ஒளியுடன் / வெளிச்சத் துடன் விளையாட்டு | • ஒளி முதல், ஒளி, கண் ஆகியவற் றுக்கு இடையிலான தொடர்பை கற்றாய்வார்.<br>• கண்ணின் பாதுகாப்பு தொடர் பாகக் கவனஞ் செலுத்தி நாளாந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவார்.<br>• இயற்கையான ஒளி மாற்றங்களின் படி சூழலில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் ஒளியை மாற்றத்தக்க விதங்கள் பற்றித் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• அழகூட்டுவதற்காக, ஒளியைப் பயன்படுத்தி பல்வேறு ஆக்கங்கள் படைப்பார்.<br>• இயற்கை ஒளியின் செல்வாக்குகள் பற்றிக் கவனஞ் செலுத்தி பயனுள்ளவாறு விளையாட்டுக் களில் ஈடுபடுவார்.<br>• ஒளியுடன் செய்யத்தக்க அபினயங் களை முதன்மையாகக் கொண்ட களிப்பூட்டும் வெளிப்பாடுகளை முன்வைப்பார். | • எமக்கு ஒளி கிடைக்கும் வழிகள்<br>• அன்றாடக் கருமங்களின்போது கண்களின் பாதுகாப்பு தொடர்பாகக் கவனஞ் செலுத்துவதன் அவசியம்<br>• இயற்கை ஒளியின் செல்வாக்கு காரணமாக, சூழலின் வெவ்வேறு பொருள்களில் ஏற்படும் மாற்றங்கள்<br>• ஒளி பரவுதலும் தெறித்தலும்<br>• நிழல் பொம்மைகள் ஆக்குதலும் பயன்படுத்தலும்<br>• இயற்கை ஒளியைப் பயன்படுத்திச் செய்யத்தக்க ஆக்கியல் இயக்க/ அசைவுச் செயற்பாடுகள்<br>• வெவ்வேறு ஒளிகளுக்கு (வெளிச்சங் களுக்கு) எதிர்வினை காட்டும்போது முகத்தில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பான செய்முறைச் செயற்பாடுகள் |
| **14.** மனிதர் வேலை செய்யும் இடங்கள் | • கிட்டிய - சுற்றுப்புறச் சூழலில் ஆட்கள் சீவனோபாயத்துக்காக வேலை செய்யும் இடங்களையும் அவ்விடங்களில் தமது பாதுகாப் பை உறுதிப்படுத்திக் கொள்ளும் விதத்தையும் நுணுகியாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• வெவ்வேறு கருமங்களுக்காகப் பயன்படுத்தும் ஆடையணிகள், உபகரணங்களை இனங்கண்டு அறிக்கைப்படுத்துவார்.<br>• மனிதர் சீவனோபாயத்துக்காகச் | • சுற்றுப்புறச் சூழலில் மனிதர் தமது சீவனோபாயத்துக்காகச் செய்யும் வேலைகள் மற்றும் இடங்கள் தொடர்பாக தகவல்கள்<br>• மனிதர் வேலை செய்யும் இடங்களில் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளும் வழிகள்<br>• வெவ்வேறு கருமங்களுக்காகப் பயன்படுத்தும் ஆடையணிகளும் உபகரணங்களும்<br>• மனிதர் செய்யும் பல்வேறு வேலைகளும் அவற்றினால் |

DRAFT

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | செய்யும் கருமங்களையும் அவற்றினால் ஆற்றப்படும் சேவை களையும் மதிப்பார்.<br>• மனிதர் வேலை செய்யும் இடங்கள் சார்ந்த அசைவுகளைப் போலச் செய்தல் மற்றும் சமனிலையைப் பேண வேண்டிய செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• வேலை செய்யும் இடங்கள், பயன் படுத்தும் பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான ஆக்கங்கள் செய்வார்.<br>• மனிதர் வேலை செய்யும் இடங்கள் தொடர்பான தகவல்களை களிப்பு டன் முன்வைப்பார். | ஆற்றப்படும் சேவைகளும்<br>• வேலை செய்யும் சந்தர்ப்பங்களில் மனிதர் பயன்படுத்தும் பண்டங்கள் (பொருள்கள்) உபகரணங்களின் மாதிரியுருக்கள் அமைத்தல்<br>• பெரிய மற்றும் சிறிய தசைகளின் வளர்ச்சிக்கு உதவும் அசைவுகளைப் போலச் செய்தல்<br>• மனிதர் வேலை செய்யும் வெவ்வேறு இடங்கள் தொடர்பான நாட்டார் பாடல்கள், கிராமிய நடனங்கள், ஊமங்கள் |
| **15.** சுற்றுப் புறத்தில் வெவ்வேறு பட்ட இடங்கள் | • சூழலின் வெவ்வேறு இடங்களில் மனிதனால் செய்யப்படும் பாதக மான மாற்றங்களை இனங்கண்டு அந்த இடங்களை நல்ல இடங்களாக மாற்றுவதற்கு ஆவன செய்வார்.<br>• இயற்கையாகவும் மனிதனின் செயற்பாடுகள் காரணமாகவும் சூழல் மீது ஏற்படும் பாதகமான தாக்கங்களையும் அத்தாக்கங் களிலிருந்து மண்ணைப் பாதுகாப் பதற்காக எடுக்கத்தக்க நடவடிக் கைகளை நுணுகியாய்வார்.<br>• சூழலின் பல்வகைமைக்குப் பொருந்தமான ஆக்கங்கள் செய்து சூழலின் அழகைப் பேணிவருவார்.<br>• பாடசாலைச் சூழலின் வேறுபட்ட இடங்களுக்கு அமைவாக அடிப் படையான உடல் தகைமையை | • தமது பயனுக்காக மனிதன் சூழலில் செய்துள்ள மாற்றங்கள்<br>• மனிதன் சூழலில் செய்துள்ள பாதகமான மாற்றங்கள் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள்<br>• பாதகமான தாக்கங்களைச் சாதகமான நிலைக்கு மாற்றவதற்காகச் செய்யத்தக்கவை<br>• இயற்கையான செயற்பாடுகள் மற்றும் மனிதனின் செயற்பாடுகள் காரணமாக மண்ணில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள்<br>• மண்ணைப் பாதுகாக்கத்தக்க வெவ்வேறு முறைகள்<br>• பாடசாலை தோட்டத்தில் தெரிவு செய்து கொண்ட ஓர் இடத்தின் மாதிரியுருவை அமைத்தல்<br>• பெரிய தசைகள் மற்றும் சிறிய தசைகளின் இசைவாக்கத்துக்காக அசைவு - இசைவுச் செயற்பாடுகள் |

DRAFT

| கருப்பொருள் | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் |
| --- | --- | --- |
| | வளர்க்கத்தக்க இயக்கச் செய்வாடுகளில் ஈடுபடுவார்.<br>• சுற்றுப்புறத்தில் வேறுபட்ட இடங்களில் காணப்படும் பல்வகைமையை எடுத்துக்காட்டும் சந்த/ தாள/ லய அசைவுகளைக் களிப்புடன் முன்வைப்பார். | • பிரதியீட்டு புத்தளிப்பு வாத்தியக் கருவிகளைப் பயன்படுத்தி சூழலில் கேட்டும் வெவ்வேறு ஒலிகளையும் நாதங்களையும் போலச் செய்தல். |
| **16.** எமது உதவி தேவைப் படுவோர் | • சமூகததில் எமது உதவி தேவைப் படுவோரை இனங்கண்டு உதவி புரிய ஆவன செய்வார்.<br>• வெற்றியடைவதற்காக, ஒத்துழைத்து/ ஒற்றுமையாகச் செயற் படுவார்.<br>• ஏனையோருக்கு உதவி புரியத் தக்கவையாக ஆக்கங்கள் செய்வார்.<br>• பரஸ்பர ஒத்துழைப்பை வளர்ப்பதற்காக அசைவு இயக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• சமூகத்தில் வெவ்வேறு ஆட்கள் தொடர்பாக உணர்தன்மையை வெளிப்படுத்திக் காட்டும் வகிபாக மேற்று நடித்தல்களில் ஈடுபடுவார். | • தேவையான சந்தர்ப்பங்களில் ஏனையோரது உதவியைப் பெறுதல்<br>• உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அவ்வாறு உதவி தேவைப்படுவோருக்கு உதவி புரிதல்.<br>• ஒத்துழைத்து செயற்படுவதால் அதிக பெறுபேறு பெறத்தக்க சாத்தியம் உண்டு.<br>• எமது உதவி தேவைப்படுவோருக்குப் பயன்படத்தக்கவையான ஆக்கங்கள்<br>• ஒத்துழைத்துச் செய்யத்தக்க அசைவு - இசைவுச் செயற்பாடுகள்<br>• வெவ்வேறு தேவைகள் உள்ளோரின் பால் உணர்த்தன்மையை வெளிப் படுத்தும் விதம் தொடர்பான வகிபாக மேற்று நடித்தல்கள்/ சிறு நாடகங்கள் |

DRAFT

**01** கருப்பொருள் :- நாமும் பாடசாலையும்

**தேர்ச்சி** :-

- பாடசாலையில் காணப்படும் சிறப்பான, முக்கியமான இடங்களை இனங்கண்டு அவற்றின் பல்வகைமைக்கு அமைவாகச் செயற்படுவார்.
- பாடசாலைக் கருமங்களில் பங்களிப்புச் செய்து பாடசாலைப் பண்பாட்டைச் சிறப்பாகப் பேணிவரச் செயற்படுவார்.
- பாடசாலையில் இருக்கும் வெவ்வேறு தனியாள் வகிபாகங்களை இனங்கண்டு அவர்களின்பால் உணர்வுடன் செயற்படுவார்.
- வகுப்பறையை அழகாகப் பேணிவருவதற்காக வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி ஆக்கங்களைச் செய்வார்.
- உபகரணங்களைப் பயன்படுத்தி, தசை நரம்பு இயைபாக்கத்துக் கான அசைவியக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- பாடசாலையின் பெறுமானத்தை மேம்படுத்திக்காட்டுவதற்காகக் களிப்பூட்டும் அணுகுமுறைகளைப் பயன்படுத்துவார்.

**கற்றற் பேறுகள்** :-

- பாடசாலைச் சூழலை அழகாகவும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருக்கப் பங்களிப்புச் செய்வார்.
- பாடசாலையின் பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகத் தமது பங்களிப்பை வழங்குவார்.
- தாம் வகுப்பறைக்கும் பாடசாலைக்கும் ஆற்ற வேண்டிய கடமைகள் பொறுப்புக்களை நிறைவேற்றுவார்.
- பாடசாலைக் கருமங்களில் உதவி புரியும் ஆட்களை மதிப்பார்.
- வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி வகுப்பறையின் அழகைப் பேணிவருவதற்குப் பொருத்தமான ஆக்கங்களை முன்வைப்பார்.
- தசை - நரம்பு இயைபாக்கத்துக்காக விளையாட்டு முற்ற உபகரணங்களைப் பயன்படுத்துவார்.
- பாடசாலையின் பெறுமானத்தைக் கூறும் பாடல்கள்/ கவிதைகளைத் தாள லய அசைவுகளுடன் முன்வைப்பார்.

DRAFT

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- பாடசாலைச் சூழலின் தன்மையை அவதானிப்பதற்காக மாணவருடன் களப்பிரயாணம் செய்க.
- அக்களப்பிரயாணத்தின் போது அந்த இடங்களின் ஒழுங்கு/ ஒழுங்கீனம், சுத்தம்/ அசுத்தம் போன்ற விடயங்கள் குறித்து மாணவரது கவனத்தை ஈர்க்குக.
- அந்த இடங்கள் அவ்வாறு காணப்படுவத்றகான காரணங்களின்பால் மாணவரின் கவனத்தை ஈர்க்குக.
- அந்த இடங்கள் அசுத்தமான ஒழுங்கற்ற இடமாகக் காணப்படுமாயின் மிக அழகாகவும் சுத்தமாகவும் முறைமையாகவும் நேர்த்தியாகவும் வைத்திருப்பதற்காகத் தாம் செய்யத்தக்கவை பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.

  உ-ம்:
  - இடத்தைப் பெயரிடல்
  - சுத்திகரித்தல்
  - தேவையற்றவற்றை அப்பறப்படுத்தல்
  - நன்கு ஒழுங்காகக் கட்டியெழுப்புதல்
- இதற்கமைய வகுப்பறையில், பாடசாலையில் ஒழுங்கின்றிக் காணப்படும் ஓர் இடத்தைத் தெரிவு செய்து அவ்விடத்தை ஒழுங்கான, நேர்த்தியான சுத்தமான, அழகான ஓர் இடமாக மாற்றுவதற்கு நடவடிக்கைகளைத் திட்டமிடுக.

  உதாரணம்:
  - கூட்டித்துப்பரவு செய்தல், களைப்பூண்டுகளைப் பிடுங்குதல்
  - பூம்பாத்திகள் அமைத்தல்
  - அமைத்த பாத்திகளை நன்கு பராமரித்தல், செய்து காட்டுதல், காட்சிப்படுத்தல்
  - படங்கள் தொங்கவிடுதல்
  - தேவையான இடங்களில் நிறப் பூச்சுப்பூசுதல்
  - உடைந்த சிதைந்த இடங்களைப் பழுதுபார்த்தல்
  - சிலந்திவலை துடைத்தல்
  - மிதிக்கும் இடங்களில் கல், வேர், முள் போன்றவற்றை அப்புறப்படுத்துவது

  போன்ற விடயங்கள்
- ஆசிரியரது உதவியுடன், மாணவர்களது மட்டத்தில் செய்யக்கூடிய இவ்வாறான எந்தவொரு மாற்றத்தை செய்யுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மாணவர் ஒவ்வொருவரையும் கருமங்களில் ஈடுபடுத்துக.
- கருமங்களில் ஈடுபட்ட மாணவர்களைப் பாராட்டுக.
- பின்னர், இவ்வாறாகச் செயற்படுவதன் மூலம் கிடைக்கும் பயன்கள் தொடர்பாக மாணவருடன் உரையாடுக.

  உ-ம்:
  - கற்றல் கருமங்களுக்குப் பொருத்தமான ஒரு சூழல் உருவாதல்
  - ஆரோக்கியத்தைப் பேணிச் செல்ல உதவுதல்
  - கவர்ச்சிகரமான பாடசாலைச் சூழல் உருவாதல் ... போன்ற விடயங்கள்

DRAFT

- இவ்வாறான சூழலைப் பேணிவருவதற்காகப் பின்வரும் பழக்கங்களை இடையறாது பேணிவருவதன் முக்கியத்துவம் தொடர்பாக மாணவரது கவனத்தை ஈர்க்குக.

  உ-ம்:
  - ஒழுங்காக, நேர்த்தியாக வேலை செய்தல்
  - எடுத்த யாதேனும் பொருளை அதே இடத்திலே மீண்டும் வைத்தல்
  - தாம் வேலை செய்த இடத்தைச் சுத்திகரித்தல்
  - குப்பைக் கூளங்களை உரியவாறு அப்புறப்படுத்தல் ... போன்றவை

**செயற்பாடு - II**

- பாடசாலையில் பயன்பாட்டுக்கென உள்ள கதிரை, வாங்கு (மேசை), கரும்பலகை, நீர்க்குழாய் வாயில், மலசல கூட வசதிகள் போன்ற பாவனைப் பொருள்கள், உபகரணங்கள் கட்டடங்கள் மூலம் எமக்குக் கிடைக்கும் பயன்கள் பற்றி மாணவருடன் உரையாடுக.
- பின்னர் மாணவரைப் பாடசாலை சுற்றுப்புறத்தில் அவதானிப்புக் களப் பிரயாணமொன்றில் ஈடுபடுத்தி, உடைந்துள்ள சேதமடைந்துள்ள இடங்கள், பாவனைப் பொருட்கள், மேசை கதிரைகள் மற்றும் புத்தகங்கள் ஒழுங்கின்றி இட்டுவைக்கப்பட்டுள்ள இடங்கள் உள்ளனவாயின் அவற்றை அவதானிக்கச் செய்க.
- தமது அவதானிப்புக்கள் தொடர்பாக மாணவரது கருத்துக்களை வினவுக.

  உ-ம்:
  - மாணவர் அறிந்தவை, உணர்ந்தவை
  - அவ்வாறான இடங்களைப் பாடசாலைச் சுற்றப்புறத்தில் விட்டுவைப்பதால் சூழலில் ஏற்படும் பாதகமான விளைவுகள்
- மேற்படி இடங்கள், உபகரணங்கள் அவ்வாறான நிலையில் காணப்படுவதற்கான காரணங்களை மாணவருடன் கலந்துரையாடுக.

  உ-ம்:
  - ஒழுங்கின்றியும் நேர்த்தியின்றியம் புத்தகங்களைப் பயன்படுத்துதல்
  - மேசை, கதிரைகளை இடத்துக்கிடம் கொண்டு செல்வதற்காக இழுத்துச் செல்லலும் கதிரையின் இரண்டு கால்களில் மட்டும் அமர்ந்து ஆட்டி அசைத்தலும்
  - நீர் ஒழுக்கு நிகழும் வகையில் நீர்க்குழாய்வாயிலைச் சரியாக மூடாது வைத்தல்
  - தேவையற்ற கிறுக்கல்கள் மூலம் சுவரின் அழகைக் கெடுத்தல்
  - இரும்பு வலை போன்றவற்றில் உரிய காலத்தில் பூச்சுப் பூசாமையால் அவை துருப்பிடித்தலுக்கு உள்ளாதல்
  - சேதமுற்ற சுவர்ப்பகுதிகளைச் செப்பனிடாமையால் சுவர் மேலும் உடைதல்
- அவ்விடங்களையும் உபரணங்களையும் ஏன் பாதுகாத்தல் வேண்டும் என்பதைப் பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, மாணவருடன் தொடர்ந்தும் உரையாடுக.
  - பாடசாலையும் வகுப்பறையும் எமது பொதுப்பயன்பாட்டுக்காக உள்ள இடங்களாகும்.
  - அவற்றைச் சேதப்படுத்தலாகாது
  - கவனமாகவும் நேர்த்தியாகவும் பயன்படுத்த வேண்டும்

DRAFT

- அவ்வாறு செய்வதால் எதிர்காலத்தில் தமது சகோதர சகோதரிகளுக்கும் இவற்றை முறைமையாகப் பயன்படுத்தச் சந்தர்ப்பம் கிடைக்கும்
    - அதன் மூலம் மேலும் பெருந்தொகையான மாணவர்களுக்குச் சேவை கிடைத்தல்
    - அரசினால் எமக்கு இலவசமாக வழங்கப்படும் இவற்றைச் சேதப்படுத்த எந்த ஒரு மாணவனுக்கும் உரிமை கிடையாது.
    - இவற்றைப் பாதுகாப்பது எமது கடமையாகும்.
- சுத்தமாகவும் நேர்த்தியாகவும் நூல்களைப் பயன்படுத்தும் மாணவரைப் பாராட்டுக.
- நாம் பயன்படுத்தும் பொருள்களை நாமே பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை மாணவர்க்கு உறுதிப்படுத்துவதற்காக வகிபாகமேற்று நடித்தல்கள் அல்லது சிறிய நாடகம் நடிக்குமாறு மாணவரை ஈடுபடுத்துக.
- மாணவரது அளிக்கைகளை (முன்வைப்புக்களை) பாராட்டுக.

செயற்பாடு - **III**

- தாம் தமது வகுப்பறைக்கும் பாடசாலைக்கும் ஆற்ற வேண்டியவை பற்றி இனங் காண்பதற்காக மாணவரைப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- அதற்கமைய பாடசாலையிலிருந்து தமக்குக் கிடைப்பவை பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.

  உ-ம்:
    - நற்பழக்கங்களைக் கற்பித்தல்
    - சிறந்த கல்வி வழங்குதல்
    - ஆரோக்கிய வாழ்க்கைக்குத் தேவையான பழக்கங்களை வழங்குதல்
    - நண்பர்களுடன் பழகச் சந்தர்ப்பம் கிடைத்தல் .... போன்றவை
- இவை எல்லாவற்றையும் வழங்குவதற்காக ஆசிரியர்கள் வருந்தி உழைப்பதை எடுத்துக்காட்டுக.
- அவ்வாறே நாம் பாடசாலைக்கு ஆற்ற வேண்டியவைகளும் உள்ளன எனவும் அதற்கமைய பின்வரும் விடயங்களை வெளிப்படுத்திக் காட்டி விளக்குக.

  உ-ம்:
    - கற்றல் வேலைகளை நன்றாகச் செய்தல்
    - நற்குணங்களுடன் நடந்து கொள்ளல்
    - தமது பாடசாலைக்கு மதிப்பளித்துச் செயற்படல்
    - பாடசாலையின் நற்பெயரை உயர்த்தும் வகையில் செயற்படல்
    - ஆசிரியர்களுக்குப் பணிந்து நடத்தல்
    - பாடசாலையில் உள்ள வளங்களைப் பாதுகாத்தல்.
    - பாடசாலையை அழகாக வைத்திருக்க உதவுதல் .... போன்றவை
- இவ்வாறாகச் செயற்படுவதன் மூலம் நாம் நல்ல பிள்ளைகளாவோம் என்பதையும் அதன் விளைவாக சமூகத்தின் மதிப்பிற்கு உள்ளாவோம் என்பதையும் விளக்குக.

DRAFT

**செயற்பாடு - IV**

- பாடசாலையின் கருமங்களுக்கு உதவும் ஆள்கள்/ நபர்கள் பற்றி மாணவரிடம் வினவுக.
  உ-ம்: அதிபர், ஆசிரியர்கள், அலுவலக உதவியாளர்கள், சுத்திகரிப்போர்
- அவ்வொவ்வொருவரும் பாடசாலைக் கருமங்களுக்கு உதவும் விதம் பற்றி வினவுக.
- பாடசாலையில் சேவையாற்றும் ஒருவரை வகுப்புக்கு அழைக்குக. நட்புடன் உரையாடி அவர் பாடசாலைக்குச் செய்யும் சேவைகள் பற்றி அறிவூட்டம் பெறுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

  உ-ம்:

  அலுவலக உதவியாளர் - அலுவலகத்தைத் திறத்தல், உரிய வேளையில் மணி அடித்தல், தேவையானவற்றை ஆயத்தஞ் செய்தல் ... போன்றன.
- அதற்கமைய அவர்கள் செய்யும் வெவ்வேறு கருமங்கள் பாடசாலையின் கருமங்களை இலகுபடுத்துவதற்காகவும் பாடசாலையின் முன்னேற்றத்துக்காகவும் அளப்பரிய சேவை செய்கின்றமையை எடுத்துக் காட்டுக.
- நாளாந்தக் கருமங்களைச் செய்யும்போது பாடசாலையில் பல்வேறு கருமங்களில் ஈடுபடும் அனைவருடனும் நட்புடனும் கருணையுடனும் செயற்படுதல் வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுக.
- அவ்வாறு செய்வதால் எல்லாருக்கும், பாடசாலை ஒரு மகிழ்ச்சிகரமான இடமாக அமையும் எனக் கலந்துரையாடல் மூலம் எடுத்துக் காட்டுக.

**செயற்பாடு - V**

- ஆண்டில் விசேட தினங்களைக் குறித்து வைப்பதற்காகப் பாடசாலையில் காட்சிப்படுத்தத்தக்க நாட்காட்டியொன்றினைத் தயாரிப்பதற்காக மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்குக.
- சம அளவுடையதாகத் தயாரித்த 12 கடதாசித் தாள்கள் (ஏ3 அளவுள்ள கடதாசி போன்ற) திரவ நிலை வர்ணங்கள் ஆகியவற்றை மாணவர்க்கு வழங்குக.
- தரப்பட்ட கடதாசியை சரிமத்தியில் இரண்டாக மடித்து ஒரு பகுதியில் திரவநிலை வர்ணத்தைக் கொண்டு உள்ளங்கைகளையும் விரல்களையும் அச்சுப்பதித்து ஆக்கங்கள் செய்யுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மாணவர் தயாரித்த கடதாசித்தாள்களை ஜனவரி, பெப்ரவரி, ....... டிசம்பர் என்றவாறு பெயரிடுக.
- கடதாசியில் சித்திரம் ஆக்கிய பகுதி தவிர்ந்த மற்றைய வெறுமையாக உள்ள அரைப்பகுதியில் சற்றுப் பெரிய எழுத்தில் மாதத்தில் அடங்கியுள்ள விசேட தினங்களை/ திகதிகளைக் குறிப்பிடுக.

| உ-ம்: | **மாதம்** | **விசேட தினம்** | **இடம்பெறும் திகதி** |
|---|---|---|---|
| | ஜனவரி மாதம் | பௌர்ணமி | |
| | | தைப்பொங்கல் | |

- அவசியமெனின் சனி, ஞாயிறு தினங்களையும் குறிப்பிடலாம்.
- பின்னர் அவ்வெல்லாத் தாள்களையும் திரட்டி, ஒரு நாட்காட்டி போன்று தயாரித்து பொருத்தமானவாறு பூர்த்தி செய்து வகுப்பில் காட்சிப்படுத்துக.
- மாணவரது ஆக்கங்களைப் பாராட்டுக.

DRAFT

செயற்பாடு - **VI**

- பாடசாலை தொடர்பாக மாணவரிடத்தே நல்ல மனப்பாங்குகளை உருவாக்குவதற்காக உதவத்தக்க காட்சிப் பலகைகள் சிலவற்றைத் தயாரிப்பதற்காக மாணரைக் குழுக்களாகப் பிரிக்குக.
- அவ்வாறான காட்சிப்படுத்தல் பலகைகளில் உள்ளடக்குவதற்குப் பொருத்தமான சில கூற்றுக்களை/ வாசகங்களைத் தெரிவு செய்து கொள்க.


  உ-ம்:

  - வகுப்பைச் சுத்தமாக வைத்திருப்போம்
  - புத்தங்களை ஒழுங்காக வைத்திருப்போம்

  போன்ற விடயங்கள் அடங்கிய காட்சிப்பலகைகள்
- இவற்றைத் தயாரிப்பதற்காகப் பொருத்தமான கடதாசிக் கீலங்களை மாணவர் குழுக்களுக்கு வழங்குக.
- அக்கடதாசிக் கீலங்களில் கூற்றுக்களை/ வாசகங்களை எழுதிக் காட்போட் மட்டைகளில் ஒட்டிப் பொருத்தமான இடங்களில் காட்சிப்படுத்த வழிப்படுத்துக.
- மாணவரது ஆக்கங்களைப் பாராட்டுக.

செயற்பாடு - **VII**

- மாணவரை விளையாட்டு முற்றத்துக்கு அழைத்துச் செல்க.
- அங்கு உள்ள உபகரணங்களின் துணையுடன் நடத்தப்படும் செயற்பாடுகள் மூலம் உடலுக்குக் கிடைக்கும் நன்மைகள் குறித்து உரையாடுக.
- அவ்வுபகரணங்களைப் பயன்படுத்தும்போது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய விதம் குறித்து மாணவரது கவனத்தை ஈர்க்குக.
- மாணவர்க்கு விளையாட்டு முற்றத்தில் உள்ள உபகரணங்களைக் கொண்டு விளையாட்டுக்களில் ஈடுபடச் சந்தர்ப்பமளிக்குக.
- பின்னர் பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துக.
- மாணவர் நுழைந்து செல்வதற்காகப் பொருத்தமான வெவ்வேறு அளவுடைய வளையங்கள் சிலவற்றைத் தயாரித்துக் கொள்க.
- இதற்காகப் பிரம்பந்தண்டு, வளைக்கத்தக்க பீவீசி (PVC) குழாய் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.
- அவற்றைப் படத்திற் காட்டியுள்ளது போன்று பிடித்திருக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.



DRAFT

- பின்னர் வகுப்பில் ஏனைய மாணவர்களை ஒரு வரிசையில் நிறுத்துக.
- ஆசிரியை வழங்கும் சமிக்ஞையின்படி வரிசையில் ஒருவர் பின் ஒருவராக வளையங்களின் ஊடாக நுழைந்து செல்ல வேண்டும்.
- இவ்வாறாக மாணவர் அனைவரும் பங்கேற்கும் வகையில் தொடர்ந்தும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- வளையங்களைப் பிடித்திருக்கும் மாணவர்க்கும் செயற்பாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பமளிக்குக.

சமூக ஒருங்கிணைப்பு எண்ணக் கருவுக்கென எழுதப்பட்டுள்ள சிறுவர் கதைத் தொகுப்பில் **"எமது காட்டுப் பாடசாலை"** என்னும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக.

DRAFT

**02** **கருப்பொருள் :- எமது வீடு**

**தேர்ச்சி :-**

- வீடு, வீட்டுடன் தொடர்புடைய ஆட்கள் மற்றும் பிராணிகளின் பால் நல்ல மனப்பாங்குடன் செயற்படுவார்.
- தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றி வீட்டை நன்றாக வைத்திருக்கப் பங்களிப்புச் செய்வார்.
- நாளாந்தம் வீட்டில் பயன்படுத்தத்தக்க பொருள்களை உற்பத்தி செய்து கொள்ளப்பங்களிப்புச் செய்வார்.
- வீட்டின் அழகையும் சுத்தத்தையும் பேணுவதற்காகப் பயன்படுத்தத் தக்க ஆக்கங்கள் செய்து களிப்புறுவார்.
- வீட்டுச் சூழல் சார்ந்த வகையில் அசைவியக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் களிப்புறுவார்.
- வீட்டுச் சூழலில் கிடைக்கும் அனுபவங்களைக் களிப்புடன் வெளிப்படுத்துவார்.

**கற்றற் பேறுகள் :-**

- குடும்பத்தில் நெருங்கிய உறவினரை உறவுப்பெயர் கொண்டு அழைப்பார்.
- குடும்பத்தில் நல்ல தொடர்புகளைப் பேணிவர ஆவன செய்வார்.
- பெற்றாரும் வீட்டில் இருக்கும் ஏனைய உறுப்பினர்களும் தமது கடமைகள், பொறுப்புக்களை ஆற்றுவதற்காகச் செய்யும் செயல்களை விவரிப்பார்.
- வீட்டுக் கருமங்களில் தமது பங்களிப்பை வழங்குவார்.
- வீட்டின் அழகையும் சுத்தத்தையும் பேணுவதற்காகப் பயன்படுத்தத் தக்க ஆக்கங்கள் செய்வார்.
- வீட்டுச் சூழல் சார்ந்த வகையில் சிறு விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- குடும்ப உறுப்பினர்களின் வகிபாகங்களைக் காட்டும் வகையிலான நடித்தல்களை முன்வைப்பார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- குடும்பத்தில் நெருங்கிய உறவினர் பற்றி இனங்காண்பதற்காக ஒவ்வொரு மாணவரிடமும் தமது குடும்பத்தில் இருக்கும் உறவினர் பற்றிய தகவல்களைக் கலந்துரையாடுக.
- குடும்பத்தில் உள்ள உறவினர்கள் யாவர், அவர்களை அழைக்கும் விதம் போன்ற தகவல்களைக் கலந்துரையாடல் மூலம் வெளிக்கொணர்க.
- பின்னர் பின்வரும் செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துக.




DRAFT

கீழே காட்டியுள்ளவாறு, குடும்பத்தில் நெருங்கிய உறவினர்களின் உறவுப் பெயர்களை அட்டைகளில் எழுதி அவ்வட்டைகளை மாலையில் தொங்கவைத்த பதக்கங்களைத் தயார்ப்படுக்கிக் கொள்ளுங்கள்.




- அந்தந்த உறவு முறைப் பாத்திரத்துக்குப் பொருத்தமான உடைகளையும் பெறுக. பாடசாலைத் தோட்டத்தில் இடவசதி உள்ள ஓர் இடத்திற்கு மாணவரை அழைத்துச் செல்க. மேற்படி பாத்திரங்களை நடித்துக்காட்டுவதற்காகச் சில மாணவர்களைத் தெரிவு செய்து கொள்க. அவர்களுக்குப் பொருத்தமான உடைகளை வழங்குக. குறித்த உறவுப் பெயர்கள் எழுதிய அட்டைகளைக் கொண்ட மாலைகளையும் அணிவிக்குக. தாய், தந்தை ஆகிய பாத்திரங்கள் தவிர ஏனைய உறவு முறைகளைக் காட்டும் பாத்திரங்களைக் குறிக்கும் மாணவர்களை சில இடங்களில் நிறுத்துக. அதன் பின்னர் அம்மா, அப்பா பாத்திரங்களைக் குறிக்கும் மாணவர்களை ஆசிரியருடன் சென்று அந்த அந்த இடங்களில் உள்ள உறவினர்களைச் சந்திக்க வழிப்படுத்துக.



- அப்போது சந்திக்கும் உறவினரை, உறவுப் பெயர் கொண்டு விழித்துச் சுருக்கமாக உரையாட வழிப்படுத்துக.
- அந்தந்த உறவு முறை மாணவருடன் எவ்வாறு தொடர்புறுகின்றது, அவர்களை எவ்வாறு விழித்தல் வேண்டும் போன்ற விடயங்களை வெளிக்கொணர்க.
- சந்திக்கும் ஒவ்வோர் உறவினரையும் கூடவே அழைத்துச் சென்று ஏனைய உறவினர்களையும் சந்திக்குக.

DRAFT

செயற்பாடு - **II**

- கதை/ நிகழ்வு/ பாடல்/ பிராணிகளின் உலகம் தொடர்பான அனுபவம் போன்ற ஒன்றினைத் தெரிவு செய்து நல்ல குடும்பமொன்றின் தன்மை பற்றி மாணவரது கவனத்தை ஈர்க்குக.
- நல்ல குடும்பமொன்றில் காணப்பட வேண்டிய தன்மைகளை மாணவருடன் கலந்துரையாடுக.

  உ-ம்:
    - குடும்ப உறுப்பினர் அனைவருடனும் ஒற்றுமையாகச் செயற்படுதல்
    - கிடைப்பவற்றை அனைவருக்கிடையிலும் பகிர்ந்தளித்தல்
    - நட்புடன் விழித்தல், உரையாடல்
    - குடும்பத்துடன் பிணைப்பு
    - பாதுகாத்தல்
    - ஒருவருக்கொருவர் உதவி புரிதல்

போன்ற இயல்புகளைப் பேணிவருவதன் மூலம் குடும்பத்தில் தமக்கும் குடும்பத்துக்கும் கிடைக்கத்தக்கவை குறித்துக் கலந்துரையாடுக.

- வீடு மகிழ்ச்சிகரமான ஓர் இடமாக அமைதல்
- சமூகத்தில் அக்குடும்பம் தொடர்பாக நல்ல மனப்பாங்குகள் உருவாதல் ... போன்ற விடயங்கள்

- அதற்கமைய குடும்பத்தில் இவ்வாறான நிலைமையை ஏற்படுத்துவதற்காக எமது நடத்தைகள் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதை மாணவர்க்கு விளக்குக.


செயற்பாடு - **III**

- குடும்பத்தின் நல்ல இருப்புக்காக அதன் உறுப்பினர்கள் செய்ய வேண்டியவை பற்றி மாணவர்க்கு அறிவூட்டம் செய்வதற்காகப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- குடும்பத்தின் நல்ல இருப்புக்காக அதன் உறுப்பினர்கள் செய்யும் பல்வேறு செயல்களைத் தனித்தனியே அட்டைகளில் எழுதித் தயாரித்துக் கொள்க.

உ-ம்:

| | |
|---|---|
| வீட்டைக் கூட்டிப் பெருக்குதல் | முற்றத்தைக் கூட்டிப் பெருக்குதல் |
| பூஞ்செடிகளுக்கு நீர் ஊற்றுதல் | உணவு சமைத்தல் |
| பணம் சம்பாதித்தல் | தோட்டத்தைச் சுத்திகரித்தல் |
| துணி துவைத்தல் | தேங்காய் துருவுதல் |
| கடைக்குச் சென்று பொருள்கள் வாங்கி வருதல் | |

- வகுப்பு மாணவரைச் சில குழுக்களாகப் பிரிக்குக.
- தயாரித்த அட்டைகளை குழுக்களுக்கு சில வீதம் பகிர்ந்தளிக்குக.
- தமது குழுவுக்குக் கிடைத்த அட்டைகளில் உள்ளவற்றைக் குழு உறப்பினர்கள் அனைவரும் அவதானிக்குமாறு வழிப்படுத்துக.
- பின்னர் அவ்வட்டைகளில் அடங்கியுள்ள செயல்களைத் தமது குடும்பத்தில் செய்வோர் யார் என்பது பற்றி மாணவர் ஒவ்வொருவரிடமும் வினவுக.
- இவ்வாறாக எல்லாக்குழுக்களினதும் கருத்துக்களை வினவி, குடும்பத்தில் வேலைகளைச் செய்வதற்காக உறுப்பினர் ஒவ்வொருவரும் உதவி புரிகின்றமையை விளக்குக.
- பிரிஸ்டல் அட்டையொன்றில் அல்லது டிமை தாளொன்றில் பின்வரும் உருவைப் போன்ற ஒரு படத்தை வரைந்து கொள்க.



- பின்னர் அதன் மத்தியில் உள்ள வட்டத்தினுள் மாணவரது கையில் உள்ள அட்டைகளை ஒட்டுமாறு வழிப்படுத்துக.
- இவ்வாறாக குடும்பத்தின் சகல வேலைகளையும் எல்லாரும் சேர்ந்து கூட்டாகச் செய்ய வேண்டும் என்பதை உறுதிப் படுத்துக.


DRAFT

**செயற்பாடு - IV**


- தமது குடும்பத்துக்காகத் தாம் செய்யும் வேலை ஒன்றைக் குறிப்பிடுவதற்காக மாணவர் ஒவ்வொருவருக்கும் சிறிய அட்டை ஒவ்வொன்று வீதம் வழங்குக.
- வீட்டுக்காகச் செய்யும் ஒரு வேலையை அந்த அட்டையில் எழுத வழிப்படுத்துக.
- அட்டையின் மறுபக்கத்தில் மாணவனின் பெயரை எழுதுமாறு அறிவுறுத்துக.
- எல்லா அட்டைகளையும் சேகரித்து சிறிய பெட்டியொன்றினுள் இடுக.
- பின்னர் மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்று வட்டமாக நிற்குமாறு அறிவுறுத்துக.
- தாம் அட்டையில் எழுதியதை வட்டத்தின் மத்தியில் வந்து போலச் செய்து காட்டுமாறு மாணவரிடம் கூறுக.
- பின்னர் ஆசிரியை பெட்டியிலிருந்து ஓர் அட்டையை வெளியே எடுத்து அதில் பெயர் குறிக்கப்பட்டுள்ள மாணவனை வட்டத்தின் மத்தியில் அழைத்து தாம் அட்டையில் குறிப்பிட்டதைப் போலச் செய்து காட்டுமாறு கூறுக. (அட்டையில் எழுதியுள்ள விடயங்களை ஏனைய மாணவர் பார்க்க முடியாதவாறு அட்டையை வைத்திருக்குக.)
- பின்னர் “அம்மாணவன் செய்து காட்டியது யாது” என அனுமானித்துக் கூறுமாறு ஏனைய மாணவருக்குக் கூறுக.
- அம்மாணவர்கள் வழங்கிய விடைகள் சரியானவையா என உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இறுதியில் அட்டையின் மறுபுறம் திருப்பிக் காட்சிப்படுத்துக.
- இவ்வாறாக மாணவர் ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் வரையில் செயற்பாட்டைத் தொடர்ந்தும் நடத்துக.

**செயற்பாடு - V**


- வீட்டில் சுத்தத்தைப் பேணத்துணையாகும் தூசு துடைப்பான் ஒன்றினை ஆக்குவதற்குத் தேவையான பொருள்களைக் கொண்டு வருமாறு மாணவர்க்குக் கூறுக.
  - 30 சென்ரிமீற்றர் நீளமான 20 சென்ரிமீற்றர் அகலமான துணித்துண்டு (சற்றுப்புதிய)
  - ஏறத்தாழ 30 சென்ரிமீற்றர் நீளமான, தும்புத்தடித்துண்டு போன்ற அமைப்புடைய தடித்துண்டு
  - “கோட் நூல்” (Cord) ஏறத்தாழ 2 மீற்றர் நீளமான துண்டு
  - துணித்துண்டின் 5 சென்ரிமீற்றர் அளவுள்ள பகுதி எஞ்சியிருக்குமாறு ஒரு சென்ரி மீற்றர் அளவுள்ள கீற்றுக் களாக (படத்தில் காட்டியுள்ளவாறு) வெட்டிக் கொள்க.



உரு. 01



உரு. 02




உரு. 03

DRAFT

- கீற்றுக்களாக வெட்டாத பகுதியில் நன்றாகப் பசை பூசிக் கொள்க.
- பின்னர் தடியின் ஓர் அந்தத்தில் துணித்துண்டை இறுக்கமாக ஒட்டிக் கொள்க.
- பின்னர் கோட் நுலை எடுத்து பைன்டர் பசை பூசி, நூல் சுற்றுக்கள் நெருக்கமாக அமையுமாறு சுற்றிக்கட்டி அழகிய தூசு துடைப்பானொன்றை ஆக்கிக் கொள்க.

**செயற்பாடு - VI கட்டம் பாய்தல் விளையாட்டு**

- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.
- ஆறுபேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்குக.
- படத்தில் காட்டியுள்ளவாறு நிலத்தில் வட்டங்கள் வரைந்து கொள்க. (வட்டங்களுக்கு இடையிலான தூரம் சம அளவாக இருத்தல் வேண்டும்.)




- மாணவரை ஆறு வட்டங்களில் ஒவ்வொரு வராக (குழு மாணவரை) நிறுத்துக.
- ஆசிரியை வழங்கும் சமிக்ஞையின்படி மாணவர்கள் ஒரு வட்டத்தில் இருந்து மற்று மொரு வட்டத்துக்கு இடம்மாறுதல் வேண்டும் எனக் கூறுக.
- இவ்வாறு இடம்மாறும் போது **மத்தியில் இருக்கும் மாணவன்** வெளிவட்டத்தில் ஓர் இடத்தைப் பிடிக்க முயற்சி செய்தல் வேண்டும்.
- போட்டியை ஆரம்பித்த பின்னர் எல்லா மாணவரும் இடம்மாறி ஓடியவாறு தமக்குரிய இடத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். எவரும் தமது இடத்தை மாற்றாது அதே இடத்தில் தரித்திருக்கலாகாது என்பதை விளக்குக.
- விளையாட்டின் போது வெளிவட்டத்தில் இடத்தை இழந்து நடு வட்டத்துக்குச் செல்ல நேரிடும் மாணவன் மீண்டும் நடு வட்டத்துக்கு வந்து போட்டியை ஆரம்பித்தல் வேண்டும்.

சமூக ஒருங்கிணைப்பு எண்ணக் கருவுக்கென எழுதப்பட்டுள்ள சிறுவர் கதைத் தொகுப்பில் **“எல்லோரும் பெறுமதியானவர்கள்”** என்னும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக.

DRAFT

## 03 கருப்பொருள்: தோட்டத்துக்கு வரும் பிராணிகள்

**தேர்ச்சி** :-

- சுற்றுப்புறச் சூழலில் வாழும் பிராணிகளுக்கு இடையே காணப் படும் பல்வகைமையைக் கற்றாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
- பிராணிகளும் சூழலின் ஒரு பகுதியே எனக் கருதி, பிராணிகள் குறித்து உணர்தன்மையுடன் செயற்படுவார்.
- எமது சுற்றுப்புறத்தில் காணப்படும் பிராணிகளின் நடத்தைகள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி, இயக்க அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- பிராணிகளின் வெவ்வேறு இயல்புகளையும் நடத்தைகளையும் களிப்புடன் முன்வைப்பார்.
- வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி, பிராணிகளின் வாழிட மாதிரிகள் அமைப்பார்.

**கற்றற் பேறுகள்** :-

- சுற்றுப்புறச் சூழலில் காணும் பிராணிகளை அவற்றின் புறத்தோற்றத்துக்கு அமைய எளிமையான வகையில் வேறாக்கிக் காட்டுவார்.
- சுற்றுப்புறச் சூழலில் சஞ்சரிக்கும் பிராணிகளை அவதானித்து அப்பிராணிகளின் நடத்தைகளை அறிக்கைப்படுத்துவார்.
- சுற்றுப்புறச் சூழலில் சஞ்சரிக்கும் பிராணிகளின் பல்வேறு நடத்தைகள் மனிதனுக்குப் பயனளிக்கும் வழிகளை முன்வைப்பார்.
- பிராணிகள் சூழலின் ஒரு பகுதியே எனக் கருதி, பிராணிகளின் இருப்புக்காகப் பங்களிப்புச் செய்வார்.
- பிராணிகளின் நடத்தைகளை அடிப்படையாகக் கொண்ட விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- பிராணிகளின் நடத்தைகள் சார்ந்த ஆக்க நடிப்புக்களில் ஈடுபடுவார்.
- வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி, பிராணி மாதிரியுருக்கள் மற்றும் சித்திரங்கள் படைப்பார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- எமது சுற்றுப்புறச் சூழலில் இருக்கும் பிராணிகளின் புற இயல்புகள் பற்றிக் கூறும் பாடலொன்றை அல்லது கவிதையொன்றினை மாணவருடன் சேர்ந்து கூட்டாகப் பாடுக. உதாரணம்:

DRAFT

**உதாரணம்:**

**பச்சைக் கிளி**

பச்சைக் கிளியைப் பார்
பசுமை மிக்க வனப்பு

செக்கச் கிவந்த மூக்கு
செதுக்கிய கூர்மை அலகு

சிக்கென இருக்கும் கழுத்து
சட்டென திரும்பும் அழகு

பச்சை வண்ணக் கிளியை
பார்த்து நாமும் மகிழ்வோம்

- பாடலில் கூறப்படும் பிராணிகளின் உடல் இயல்புகள் குறித்து மாணவரிடம் வினவுக.
- கண்கள், கால்களின் மற்றும் உடலின் நிற வேறுபாடுகள் பற்றி மாணவரிடம் வினவுக.
- மாணவருடன் சேர்ந்து பாடிய பாடலில் இடம்பெற்ற பிராணிகளின் இயல்புகளை உள்ளடக்கிய சித்திரங்கள் வரைவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரது ஆக்கங்களைப் பாராட்டுக.

**செயற்பாடு - II**

- சுற்றுப்புறச் சூழலில் இருக்கும் பிராணிகளை அவதானிப்பதற்காக ஒரு களப்பிரயாணத்தை ஒழுங்கு செய்க.
- களப்பிரயாணத்தின்போது பயன்படுத்துவதற்குத் தேவையான பொருள்களைத் தேடிப் பெறுக. உ-ம்: கைவில்லையும் வேறு தேவையான உபகரணங்களும்
- பிராணிகளை அவதானிக்கும்போது அப்பிராணிகளுக்கிடையே உடலில் வெளிப்புறத்தே காணப்படும் வெவ்வேறுப இயல்புகளைக் கவனமாக அவதானிக்குமாறு வழிப்படுத்துக.
- பிராணிகளை அவதானிக்கச் செல்ல முன்னர் பின்வருவது போன்று தயாரித்த ஓர் அட்டவணையை மாணவர் ஒவ்வொருவருக்கும் வழங்குக.
- அதற்கமையத் தகவல்களைப் பதிவு செய்யுமாறு அறிவுறுத்துக.

உ-ம்:

| கண்ட பிராணி | கால்கள் எத்தனை | இறகு | | உரோமம் | | நிறம் |
|---|---|---|---|---|---|---|
| | | உண்டு | இல்லை | உண்டு | இல்லை | |
| நாய் | 4 | | x | x | | கபிலம் |
| எறும்பு | | | | | | |
| புறா | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

DRAFT

- பிராணிகளை அவதானிப்பதற்காக கொண்டு வந்துள்ள உபகரணங்களைத் தேவைக் கேற்பப் பயன்படுத்துமாறு மாணவரை வழிப்படுத்துக.
- களப் பிராயணத்தின் பின்னர் மாணவர் அவதானித்துப் பெற்ற தகவல்கள் பற்றிக் கலந்துரையாடுக.
- அத்தகவல்களின்படி பிராணிகளை வகைப்படுத்துக.
  உ-ம்:
  - கால்களின் தொகைப்படி
  - இறக்கைகள் உண்டா? இல்லையா? என்பதற்கமைய....
  - உரோமம் உண்டா? இல்லையா?
- மிகப் பெரிய பிராணி தொடக்கம் மிகச் சிறிய பிராணி வரையில் அப்பிராணிகளை வேறாக்குமாறு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- இதற்கமைய ஒவ்வொரு பிராணியும் யாதேனும் சிறப்பம்சம் காரணமாக ஒன்றிலிருந்தொன்று வேறுபடுகின்றமையையும் அதன் வழியே ஒன்றிலிருந்தொன்று வேறுபடுகின்றமையால் எமது சுற்றுப்புறச் சூழல் மேன்மேலும் அழகு பெறுகின்றமையையும் கலந்துரையாடுவதன் மூலம் வெளிக் கொணர்க.

செயற்பாடு - **III**

- மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்குக.
- அவதானிப்பதற்காகக் குழுவுக்கு ஒன்று வீதம் பிராணிகளின் பெயர்களை வழங்குக.
  உ-ம்: செவ்வெறும்பு, காகம், எறும்பு, அணில், வண்ணத்துப்பூச்சி போன்றவை (சுற்றுப்புறச் சூழலில் பரவலாகச் சஞ்சரிக்கும் பிராணிகளைத் தெரிவு செய்து கொள்க.)
- பின்வரும் விடயங்களின்கீழ் அப்பிராணிகளின் இயல்புகளை அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக. (இங்கு மாணவரது பாதுகாப்புக் குறித்து விசேட கவனஞ் செலுத்துக.)
  உ-ம்:
  - தனியே வாழ்கின்றதா? கூட்டமாக வாழ்கின்றனவா?
  - பயணம் செய்யும் விதம்
  - குரல் எழுப்பும் விதமும் குரல் எழுப்பும் சந்தர்ப்பங்களும்
- உணவு உண்ணும் முறை எவ்வாறானது? (உம்: பசு, அணில் ..... போன்றவை)
- மாணவர் சேகரிக்கும் இவ்வாறான தகவல்களை வகுப்பில் அறிக்கைப்படுத்த அல்லது முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவர்கள் அறிக்கைப்படுத்திய விடயங்களுக்கமைய அந்தந்தப் பிராணியின் நடத்தை ஒன்றிலிருந்தொன்று வேறுபடுகின்றமையை எடுத்துக் காட்டி, அவ்வேறுபாடுகள் தொடர்பாக மாணவருடன் உரையாடுக. வசதி உள்ளதாயின் பிராணிகளின் நடத்தைகளைக் காட்டும் வீடியோ காட்சிகளைக் காட்சிப்படுத்தி மாணவரது அனுபவங்களை மேலும் உறுதிப்படுத்துக.
- பிராணிகள் தொடர்பாக நல்ல மனப்பாங்குகளுடன் செயற்படுதல் வேண்டும் என்பதை வெளிப்படுத்தும் வகையில் மாணவருடன் உரையாடுக.
- வீடியோ காட்சிகளில் பார்த்த/ அவதானித்தவற்றுள் தாம் மிக விரும்பும் பிராணிகளைச் சித்திரமாக வரைய மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரது முயற்சிகளைப் பாராட்டுக.

DRAFT

செயற்பாடு - **IV**

- பிராணிகளின் வெவ்வேறு நடத்தைகள் பற்றிக் கூறும் பாடல்களைப் புனைந்து மாணவருடன் சேர்ந்து அவற்றைப் பாடுக.

உ-ம்:

**சேவல்**

கழுத்தை நீட்டிக் கூவிடுமே
காலைப் பொழுதில் சிறகடித்தே
எழுந்திரு, விழித்திரு என்றதும்
எழுப்பித் தூக்கம் ஓட்டிடுமே

**நாய்**

நன்றி உள்ள உயிர்களிலே
நல்ல மிருகம் இதுவொன்றாம்
வெற்றி கொண்ட வீரனை போல்
வீட்டைக் காத்து நின்றிடுமே


**பூனை**

பாலைக் குடித்தும் சாதுவைப் போல்
பிஞ்சக் காலால் நடந்திடுமே
வேலை அதற்கு வேறில்லை
விட்டில் எலிகள் பிடிப்பதுதான்

- அழ வள்ளியப்பா

- பிராணிகளின் இவ்வாறான நடத்தைக் கோலங்கள் மனிதனுக்குப் பயன்படும் விதம் பற்றி மாணவரிடம் வினவி உரையாடுக. இவ்வாறான சந்தர்ப்பங்களைக் காட்டும் நிகழ்வுகள்/ கதைகளை மாணவர்க்கு முன்வைக்குக. அதற்காகப் பின்வருவன போன்ற சந்தர்ப்பங்களையும் துணையாகக் கொள்க.
- அந்நடத்தைகள் மனிதனுக்குப் பயன்படும் விதம் குறித்து மாணவருடன் உரையாடுக. உ-ம்:
  - இனந்தெரியாத ஒருவர் வந்துள்ளபோது நாய் குரைத்தல்/ வீட்டுக்கு ஒருவர் வந்துள்ளமை பற்றிய செய்தி
  - நச்சுப்பாம்புகளைக் கண்டதும் அணில், பறவைகள் போன்ற பிராணிகள் குரலெழும்புதல்
  - அதிகாலை வேளையில் சேவல் கூவுதல்/ நேரம் பற்றிய செய்தி
  - மழை பெய்ய முன்னர் ஆட்காட்டிக்குருவி பறத்தல், ஈசல்கள் வெளிப்படுதல்/ பறத்தல் - வானிலை மாற்றம் பற்றிய செய்தி
- வகுப்பு மாணவரை வட்டவடிவமாக நிறுத்துக. பின்வருவது போன்று தயாரித்த பிராணி உருவப்படத்தைக் கொண்ட அட்டைகளை மாலைபோன்று மாணவர் ஒவ்வொருவரதும் கழுத்தில் அணிவிக்குக. மனிதனுக்குப் பயனுள்ள நடத்தைக் கோலங்களைக் காட்டும் பிராணிகளைத் தெரிவு செய்து அவற்றின் படங்களைப் பயன்படுத்துக.

உ-ம்:



DRAFT

- ஒவ்வொரு பிராணி வகையையும் காட்டும் நான்கு அல்லது ஐந்து படங்கள் வீதம் தயாரப்படுத்திக் கொள்க.
- ஆசிரியர் வட்டத்தின் மத்தியில் நிற்குக. ஆசிரியை யாதேனும் பிராணியின் பெயரைக் கூறிய பின்னர் அப்பிராணிப் படத்தை அணிந்துள்ள மாணவர்கள் வட்டத்தின் மத்திக்கு வந்து அப்பிராணியின் நடத்தைக் கோலங்களைப் போலச் செய்து காட்ட வேண்டும் எனக் கூறுக.
- பின்னர் மாணவர்/ ஆசிரியை கூறும் மற்றுமொரு பிராணிப்படத்தை அணிந்துள்ள மாணவர்கள் வட்டத்தின் மத்திக்கு வந்து, மேற்குறிப்பிட்டவாறு அப்பிராணியின் நடத்தைகளைப் போலச் செய்து காட்டச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவர் ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமாறு மேற்படி செயற்பாட்டை பல தடவைகள் நடத்துக.
- அப்பிராணிகளுக்கும் எம்மைப் போன்றே சூழலில் சுதந்திரமாகச் சஞ்சரிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குவதும் நாம் அனுசரிக்க வேண்டிய ஒரு நற்பழக்கமாகும் என்பதைச் செயற்பாடு மூலம் எடுத்துக்காட்டுக.

**செயற்பாடு - V**

- பிராணிகள் எதுவும் இல்லாதிருப்பின் உலகம் எவ்வாறாக இருக்கும்? என மாணவரிடம் வினவுக. மாணவர்க்குத் தத்தமது கருத்துக்களை வெளியிடச் சந்தர்ப்பமளிக்குக. அவ்வுரையாடலின்போது பின்வருமாறான விடயங்களை வெளிக்கொணர்க.
  உ-ம்:
  - சூழலின் அழகு அற்றுப்போதல்
  - உணவுத் தட்டுப்பாடு ஏற்படல்

  போன்றவை.
- வீட்டில் வளர்க்கும் பிராணிகள் தொடர்பாக பின்வருவன போன்ற விடயங்களை முன்வைத்து மாணவரது கவனத்தை ஈர்க்குக.
  - அப்பிராணிகளும் எம்முடன் வாழும் ஒரு பகுதி உயிரிகள் ஆகும்.
  - சில பிராணிகள் எமக்கு உதவுதல்.
  - செல்லப் பிராணிகளாக வளர்க்கும் பிராணிகள் காரணமாக எமக்கு உளத் திருப்தி கிடைக்கின்றமை.
  - வேளாவேளைக்கு அவற்றுக்கு உணவு வழங்கப்படுதல் வேண்டும்.
  - சுத்தம் தொடர்பாகக் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.
  - உரிய சந்தர்ப்பங்களில் தடுப்பு மருந்துகள் வழங்குதல் வேண்டும்.
- எம்மைப்போன்றே பிராணிகளும் சுயாதீனமாக இருக்க விரும்புகின்றமையை மாணவர்க்கு விளக்குக. இதற்காகக் கதைகள் சம்பவங்கள் படங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துக.
  உதாரணம்:
  - மரம் தறித்தல் காரணமாக குருவிக்கூடுகளுக்குச் சேதம் விளைந்துள்ளமையைக் காட்டும் சித்திரங்கள் .... போன்றவை
- பாதையோரங்களிலும் பொது இடங்களிலும் பிராணிகளைக் கைவிட்டுச் செல்லல் ஒரு பொருத்தமான செயல் அல்ல என்பதையும் இக்கலந்துரையாடலில் வலியுறுத்துக.
- தாம் வளர்க்கும் பிராணிகளுக்கும் சுற்றுப்புறத்தில் வாழும் பிராணகளுக்கும் பாதிப்புகள் ஏற்படாதவாறு எமது நடத்தைகளைப் பேணிவருவதன் முக்கியத்துவத்தை மாணவர்க்கு எடுத்துக்காட்டுக.

DRAFT

- மாணவரது கருத்துக்களையும் கவனத்திற் கொண்டு எம்மைப்போன்றே பிராணிகளும் சூழலில் வாழ்வதன் முக்கியத்துவத்தையும் அதன் மூலம் சூழலின் அழகு பேணப்படும் விதத்தையும் எடுத்துக்காட்டுக.
- குருவிகளுக்கு உணவு வழங்கப்பட்டுள்ள ஓர் இடத்தில் அவை அவ்வுணவை உண்ணும் விதத்தைச் சித்திரமாக வரைவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு - VI**

- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.
- சுற்றுப்புறச் சூழலில் சஞ்சரிக்கும் மூன்று அல்லது நான்கு பிராணிகளின் பெயர்களைத் தெரிவு செய்து கொள்க.

  உ-ம்: தவளை, அணில், குரங்கு
- மற்றைய மாணவரின் செவிகளுக்கு எட்டாதவாறு மாணவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிராணியின் பெயரை வழங்குக.

  (தெரிவு செய்த எல்லாப் பிராணி வகைகளதும் பெயர்கள், மாணவரிடையே சரிசமனாகப் பகிரப்படும் வகையில் அவற்றை வழங்குக.)
- தமக்குக் கிடைத்துள்ள பிராணியின் பெயரைப் பெற்றுள்ள மேலும் சில மாணவர்கள் வகுப்பில் உள்ளனர் என ஆசிரியர் மாணவரிடம் கூறுக. தமக்குக்கிடைத்த பிராணியின் பெயரை வாயினால் கூறாது அப்பிராணியின் நடத்தைகளைப் போலச் செய்து காட்டியவாறு தமது வகையைச் சேர்ந்த நண்பர்களைத் தேடிக் கண்டு பிடிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- அவ்வாறு தேடிக் கண்டு பிடித்த நண்பர்களுடன் அருகருகே அமர்ந்திருக்குமாறு அறிவுறுத்துக.
- இவ்வாறாக ஒவ்வொரு மாணவருக்கும் பிராணிகளின் நடத்தைகளைக் காட்டுவதற்குச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு - VII**


- பயன்படுத்திக் கழித்த பொருள்கள் உட்பட எளிதாகத் தேடிப்பெறத்தக்க பொருள்களைத் திரட்டிக் கொள்க.


  உதாரணம்:
  - வர்ணக் கடதாசி, யோகட் கிண்ணங்கள், நூல் துண்டுகள், கயிற்றுத்துண்டுகள், தெறிகள் (பொத்தான்கள்), போத்தல் மூடிகள், தென்னஞ் சிரட்டைகள் ..... போன்றவை.
- அப்பொருள்களையும் கிளே, களி போன்ற வெவ்வேறு பொருள்களையும் பயன்படுத்தி பிராணிகளின் உருவங்களை ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மாணவர்க்குத் தாம் விரும்பியவாறு பொருள்களைப் பயன்படுத்தி, தாம் விரும்பிய ஒரு பிராணியின் மாதிரியுருவொன்றினைச் செய்யச் சந்தர்ப்பமளிக்குக.
- அவற்றுள் மிகவும் இலேசான (பாரம் குறைவான) மூலப்பொருள்களைக் கொண்டு (கடதாசி, நூல் .... போன்ற) ஆக்கிய பிராணி உருவத்தின் கீழ்ப்புறத்தில் குண்டூசி/ கடதாசி கவ்வி (Paper clip) இணைத்து தடித்த அட்டைத் துண்டொன்றின் மீது வைக்குக.



DRAFT

- அட்டையின் கீழ்ப்பறத்தே காந்தமொன்றினை அங்குமிங்கும் அசைப்பதன் மூலம் பிராணி மாதிரி உருவத்தை அசையச் செய்து களிப்பற மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- பிராணி உரு அவ்வாறு அசைவதேன் என வினாவெழுப்பி மாணவரது கருத்துக்களைப் பெறுக.
- குண்டுசிக்கு/ கடதாசி கௌவிக்குப் பதிலாக வேறு பொருள்களைப் பயன்படுத்தி இதனைக்கையாண்டு பார்க்கலைச் செய்யச் சந்தர்ப்பமளிக்குக.




சமூக ஒருங்கிணைப்பு எண்ணக் கருவுக்கென எழுதப்பட்டுள்ள சிறுவர் கதைத் தொகுப்பில் **"எறும்புகளின் வேலை"** என்னும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக.

## 04 கருப்பொருள் : நீருடன் விளையாட்டு

**தேர்ச்சி** :-

- நீரானது பெறுமதி மிக்க ஒரு வளமாகும் எனக் கருதி, அதனைப் பயனுள்ளவாறு கையாள்வார்.
- ஆரோக்கிய வாழ்க்கைக்காக, நீரின் முக்கியத்துவத்தை மதித்து உரியவாறு பயன்படுத்துவார்.
- நீரின் தன்மை மற்றும் பொருள்கள் நீருடன் காட்டும் நடத்தைகள் ஆகியன தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.
- நீரை வெவ்வேறு வழிகளில் பயன்படுத்தி ஆக்கங்கள் புரிவார்.
- நீரைப் பயன்படுத்தி, ஆக்கியல் அசைவு/ இயக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- நீரைக் கருப்பொருளாகக் கொண்டு களிப்பூட்டும் செயற்பாடு களில் ஈடுபடுவார்.

**கற்றற் பேறுகள்** :-

- நீரை ஒரு வளமாகக் கொண்டு, விளைதிறனுள்ளதாகப் பயன்படுத்துவார்.
- நீரை ஓரிடத்தில் இருந்து மற்றுமொரு இடத்துக்குக் கொண்டு செல்லத்தக்க வழிகளைக் கையாண்டு பார்ப்பார்.
- ஆரோக்கிய வாழ்க்கைக்காக நீரைத் தினமும் போதுமான அளவுக்கு பருகுவார்.
- நாளாந்தம் சுத்தமாக இருப்பதற்காக நீரைப் பயன்படுத்துவார்.
- வெவ்வேறு பொருள்கள் நீருடன் காட்டும் நடத்தைகளைப் பரிசோதிப்பார்.
- நீரில் மிதந்து செல்லச் செல்லத்தக்க ஆக்கங்களைச் செய்வார்.
- நீரைப் பயன்படுத்தி செய்யத்தக்க ஆக்கபூர்வமான விளையாட்டுக் களில் கூட்டாக ஈடுபடுவார்.
- நீரைப் பயன்படுத்தி பல்வேறு நாதங்களைப் பிறப்பிக்கத்தக்க விதத்தை கையாண்டு பார்த்து அனுபவங்களைக் கூறுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- நாம் நாளாந்தம் செய்யும் பெரும்பாலான வேலைகளுக்காக நீர் தேவைப்படும் விதம் தொடர்பாக சுயாதீனமாகச் சித்திரம் வரையச் சந்தர்ப்பமளிக்குக.

  உ-ம்: பருகுவதற்கு, உணவு சமைப்பதற்கு, குளிப்பதற்கு அல்லது நீராடுவதற்கு, துணி துவைப்பதற்கு, பயிர்ச்செய்கைக்கு, தாவரங்களின் வளர்ச்சிக்கு .... போன்றன.
- மாணவர்கள் வரைந்த சித்திரங்களைத் துணையாகக் கொண்டு நீரின் முக்கியத்துவத்தை வலியுறுத்துக.

DRAFT

- தமது வீட்டுக்கு நீரைப் பெறும் வழி பற்றி மாணவரிடம் வினவுக.
- நாம் நீர் பெறத்தக்க வேறு வழிகள் தொடர்பாக மாணவரிடம் வினவுக.
- அதற்கமைய ஆறு, அருவி, ஓடை போன்றவற்றிலிருந்து நாம் நீரைப் பெறலாமெனினும் எமது நாளாந்தப் பயன்பாட்டுக்குப் பொருத்தமான நீர் மிக வரையறைப்பட்டது என்பதை எடுத்துக்காட்டுக.
- மனிதர் செய்யும் பல்வேறு செயல்கள் காரணமாக, நீர் அழுக்கடையும் என்பதையும் அவ்வாறானவற்றைச் செய்யாதிருப்பதற்கு நாம் சிறுபராய முதலே பழகிக் கொள்ள வேண்டும் என்பதையும் அவ்வாறு பழகிக் கொள்வது தமது பொறுப்பு என்பதையும் மாணவர்க்கு எடுத்துக்காட்டுக.
- நீர் இல்லையேல் ஏற்படத்தக்க நிலைமைகள் தொடர்பான மாணவர்க்கு விளக்குக.
  உ-ம்: வறட்சி ஏற்படல், மரஞ்செடி கொடிகள் உலர்ந்து போதல், நிலம் வெடிப்புறுதல், நீர் ஊற்றுக்கள் வற்றிப்போதல் .... போன்றவை.
- எனவே நீர் ஒரு பெறுமதிமிக்க வளமாகும் என்பதைக் கவனத்திற்கொண்டு அதனைப் பாதுகாத்தல் வேண்டும் என்பதை மாணவர்க்கு வலியுறுத்துக.
- காசித்தும்பை, கங்குன், வத்தாளை போன்ற ஒரு தாவர வகையில் ஒத்த இரண்டு தாவரங்களைப் பெற்று அவற்றுள் ஒன்றை நீர் அடங்கியுள்ள ஒரு பாத்திரத்திலும் மற்றையதை நீர் அற்ற ஒரு பாத்திரத்திலும் இடுக.
- நிகழுபவற்றை இடையிடையே அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- தாவரங்களுக்கு என்ன நடந்துள்ளது என மாணவரிடம் வினவுக.
- அதற்கமையத் தாவரங்களின் வளர்ச்சிக்கும் இருப்புக்கும் நீர் அவசியம் என்பதை எடுத்துக் காட்டுக.
- எமது உடற் சுகாதாரத்தைப் பேணுவதற்காக தினமும் போதுமான அளவு நீர் பருக வேண்டும் என்பதையும் வலியுறுத்துக.

**செயற்பாடு - II**

- நீர்த்தட்டுப்பாடு உள்ள பிரதேசங்களில் மனிதர் நீரைப் பெறுவதற்காக முயற்சி செய்யும் விதத்தைக் காட்டும் சித்திரங்கள்/ படங்கள்/ வீடியோ காட்சிகளைத் தயார்ப்படுத்திக் கொள்க.
- அவற்றைத் துணையாகக் கொண்டு நீரைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை மாணவர்க்கு எடுத்துக்காட்டுக.
- ‘‘நீர்’’ பெறுமதி மிக்க வளமாகையால் அதனைப் பாதுகாப்பதற்காக நாம் செய்யத்தக்கவை பற்றி மாணவரிடம் வினவுக.
  உ-ம்:
  - நீர்ப்பாத்திரங்களில் உள்ள நீர் மாசடையாதவாறு மூடிவைத்தல்
  - பிராணிகள் எச்சம் பீச்சுவதால் கிணற்று நீர் மாசடைவதைத் தவிர்க்க ஆவன செய்தல்
  - நீர் அடங்கியுள்ள இடங்களில் கழிவுப் பொருட்கள் கொட்டுவதைத் தவிர்த்தல் ... போன்றன.



DRAFT

- பிரயாணங்கள் - சுற்றுலாக்களின்போது நீர் நிலைகளிலோ அவற்றுக்கு அண்மையிலோ குப்பை கூளங்கள் இடுவதைத் தவிர்த்தல் தொடர்பாக மாணவர்க்கு அறிவூட்டம் செய்க.
- நீர் துளித்துளியாக ஒழுகும் ஓர் இடத்தில் பாத்திரமொன்றை வைக்குக. அல்லது நீர்க்குழாய் வாயிலொன்றிலிருந்து நீர்த்துளித்துளியாக விழுமாறு திறந்து அதன் கீழ் பாத்திரமொன்றை வைக்குக.
- ஒரு நிமிடத்தின் பின்னரும் 5, 10, 15 நிமிடங்களின் பின்னரும், சில மணித்தியாலங்களின் பின்னரும் பாத்திரத்தை அவதானிக்க வழிப்படுத்துக.
- நீர், துளித்துளியாக வடிந்த போதிலும் நேரம் அதிகரிக்க அதிகரிக்க ஒழுகும் நீரின் அளவும் அதிகரிக்கும் என்பதை இச்செயற்பாட்டின் மூலம் மாணவர்க்கு விளக்குக.
- நிகழும் நீர் ஒழுக்கு அல்லது வீண் விரயம் சிறியதாயினும் அதனை நீண்ட காலத்துக்கு கணிப்போமாயின் அதிக அளவு நீர் வீண்விரயமாகும் என்பதைக் காட்டுவதற்கு மாணவரைப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- நீர்க்குழாய் வாயிலைத் திறந்து நீரைப் பெற்ற பின்னர் அதனை நன்கு மூடிவிட வேண்டும் என்பதையும் நாம் நாளாந்தம் செய்யும் வெவ்வேறு வேலைகளின் போது நீர்க்குழாய்வாயிலைத் தொடர்ந்தும் திறந்து வைத்திருப்பதைத் தவிர்த்து, தேவையான வேளைகளில் மாத்திரம் திறந்து நீரைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டுக.

  உ-ம்:

  - கை கழுவும் வேளையில்
  - முகம் கழுவும் வேளையில்
  - பல் துலக்கும் வேளையில் ... போன்றவை
- அதற்கமைய நீர் ஒழுகும் குழாய்வாயிலொன்றைக் காணும் வேளைகளில் அதனை இறுக்கமாக மூடிவிடுவது ஒரு **நல்ல பழக்கம்** என்பதை வலியுறுத்துக.

**செயற்பாடு - III**

- வாழைத்தண்டிலிருந்து கழற்றியெடுத்த, வாழை மடல் போன்ற நீர் இலகுவில் வழிந்தோடத்தக்க ஒரு பொருளை அல்லது கூரைப் பீலித்துண்டு, பிளாத்திக்கு குழாய்த் துண்டுகள் மற்றும் சற்றுப்பெரிய நீர்ப் பாத்திரங்கள் சிலவற்றையும் தேடிப் பெறுக.
- பாதுகாப்பான, திறந்தவெளியான ஓர் இடத்துக்கு இப்பொருள்களைக் கொண்டு செல்க. மாணவரையும் அங்கு அழைத்துச் செல்க.
- மாணவர்களுக்கு பீலி, நீர், வெறும்பாத்திரம் ஆகியவற்றை வழங்குக.
- பீலிகளில் நீர் ஊற்றி பீலிகளின் வழியே வழிந்தோடும் நீரைப் பாத்திரங்களில் சேகரிக்குமாறு வழிப்படுத்துக.
- பீலியினுள் நீரை இட்டவுடன் நிகழுபவற்றை அவதானித்து வாய்மொழி மூலமும் சித்திரமாகவும் அறிக்கைப்படுத்தச் சந்தர்ப்பமளிக்குக.
- பீலியின் ஓர் அந்தத்தைச் சற்று உயர்த்தி வைத்து நீர் இட்டு நிகழுபவற்றை அவதானித்துக் கூறுமாறு வழிப்படுத்துக.
- உயரமான ஓர் இடத்திலிருந்து தாழ்வான ஓர் இடத்துக்கு நீர் பாய்கின்றமையை அவதானிக்கச் சந்தர்ப்பமளித்து அது பற்றிக் கலந்துரையாடுக.

DRAFT

- நீர் பாய்ந்து செல்லும் பீலியினுள், இலேசான யாதேனும் பொருள்களை (கடதாசி உருண்டை, ரெஜிபோம் உருண்டை அல்லது துண்டு போன்றவை) இட்டு நிகழுபவற்றை அவதானித்து அறிக்கைப்படுத்த வழிப்படுத்துக.
- நிறை, வடிவம் போன்ற வெவ்வேறு இயல்புகளை மாற்றியவாறு பொருள்களைப் பீலியினுள் இட்டு நிகழுபவற்றை அவதானித்து அறிக்கைப்படுத்தச் செய்க.
- நீர் பாய்ந்து செல்லும்போது இடைவழியே இருக்கும் பொருள்களுக்கு யாது நிகழும் என அவதானிக்க வழிப்படுத்துக.
- பாயும் நீரில் இவ்வாறாக வெவ்வேறு பொருள்களை இட்டு, நிகழுபவற்றை அவதானித்து அறிக்கைப்படுத்துமாறு வழிப்படுத்துக.

**செயற்பாடு - IV**

- வெண்ணிறக் கடதாசியொன்றில் நிறமூட்டிய இரண்டு நீர்த்துளிகளை சற்றுத் தூரத்தூர இடுமாறு மாணவர்க்குக் கூறுக.
- அவற்றுள் ஒரு துளியை வாயினால் ஊதி வெவ்வேறு கோலங்கள் ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
    - பரம்பிய நீருக்கு யாது நிகழ்ந்தது?
    - பரம்பாது இருக்கும் நீர்த்துளிக்கு யாது நிகழ்ந்தது?
- நீர்ப்பாய்ந்து செல்லல், பரம்பிச் செல்லல், காற்று காரணமாக நீர் வெளியேறல் விரைவாக நிகழும் விதம், உலர்வது தாமதமாவதற்குக் காரணம் போன்றவற்றைப் பற்றி உரையாடுக.
- துணித்துண்டொன்றை வெவ்வேறு விதமாகப் பயன்படுத்தி, யாதேனும் ஓர் இடத்தில் தேங்கியுள்ள நீரை அப்பறப்படுத்த வழிப்படுத்துக. (துணித்துண்டினால் துடைத்தல், நீரை ஒற்றியெடுத்துப் பிழிதல், நீர் உள்ள இடத்தில் துணித்துண்டை விரித்து இழுத்துச் செல்லல் ... போன்றவை)
- காற்று மூலம் நீரை அப்புறப்படுத்தும் நேரடியான செயற்பாடுகள் மற்றும் அது தொடர்பான அவதானிப்புக்கள், அனுபவங்கள் தொடர்பாக மாணவர்களுடன் உரையாடுக.
    - தரையில் பதிந்த ஈரப்பாதச் சுவடுகளை காற்று வீசி உலரச் செய்தல்
    - நிறந்தீட்டிய ஈரச் சித்தரமொன்றை உலர்த்துவதற்காக காற்றில் அங்குமிங்குமாக அசைத்தல்
    - கைக்குட்டையொன்றைக் கழுவி, வகுப்பறையில் தொங்கவிட்டு காற்றில் உலரச் செய்தல் ... போன்றவை.

**செயற்பாடு - V**

- வெண்ணிறத்துணித்துண்டு அல்லது ரிசூதாள், ஒத்த அளவுள்ள இரண்டு கண்ணாடிப்பாத்திரங்கள் ஆகியவற்றைப் பெறுக.
- ஒரு பாத்திரத்தில் நிறமூட்டிய நீரை இட்டு, அதனுள் துணித்துண்டின் அல்லது ரிசூ தாளின் ஒரு அந்தத்தையும் அதன் அருகே வைத்த வெறும் பாத்திரத்தில் அதன் மறு அந்தத்தையும் இட்டு வைக்குக.
- நிகழத்தக்கவற்றை அனுமானித்துக் கூறுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- நிகழுபவற்றை அவதானிப்பதற்கும் அவதானங்களை அறிக்கைப்படுத்துவதற்கும் மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.



DRAFT

- தாம் அனுமானித்தது நிகழ்ந்துள்ளதா? இல்லையா? என்பதைச் சிந்தித்துப்பார்க்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- அதற்கமைய நீரை இடத்துக்கிடம் கொண்டு செல்லத்தக்க வேறு உத்திகள் அல்லது வழிகள் பற்றி மாணவரது கருத்துக்களை வெளியிடச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு - VI**

- பொருள்கள் நீரில் கரைவதைச் சோதிப்பதற்காகப் பின்வருவது போன்ற சில பொருள்களைப் பெற்றுக் கொள்க.

  உ-ம்: உப்பு, நீலப்பொடி, வெவ்வேறு மை வகைகள், கோதுமை மா, தேயிலை, தேங்காயெண்ணெய், மண்ணெண்ணெய், சவர்க்காரம் ....
- ஊடு காட்டும் தன்மையுள்ள பாத்திரங்கள்/ வெறும் போத்தல்கள் சிலவற்றைப் பெற்று அவற்றில் நீர் இட்டு, மேற்படி பொருள்களை ஒரு பாத்திரத்தில் ஒன்று வீதம் இட்டு நிகழுபவற்றை அவதானித்து அறிக்கைப்படுத்துமாறு மாணவரை வழிப்படுத்துக.
- பாத்திரங்களைச் சிறிது நேரம் அசையாது வைத்து இடையிடையே அவதானித்து, அவ்வவதானிப்புக்களைப் பதிவு செய்யுமாறு அல்லது அறிக்கையிடுமாறு வழிப்படுத்துக. சில மணி நேரத்தின் பின்னர் காண்பவற்றையும் அவதானித்து அறிக்கைப்படுத்த மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு - VII**


- நீரில் கரையும் பொருள்கள் எமக்குப் பயன்படும் சந்தர்ப்பங்கள் பற்றி மாணவரிடம் வினவுக.

  உ-ம்: சுத்திகரிப்பதற்காக, சித்திரத்துக்கு நிறந்தீட்டுவதற்காக, சுவரில் நிறப்பூச்சுப் பூசுவதற்காக ...
- நிறங்களை நீரில் கரைத்து, நிற மூட்டிய நீர்த்துளிகளைக் கடதாசியொன்றின் மீது இட்டு, வாயினால் ஊதிப் பல்வேறு கோலங்களை ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- சித்திரங்களுக்கு நிறந்தீட்டுவதற்காக வெவ்வேறு நிறங்களைத் தயாரித்துக் கொள்ள வழிப்படுத்துக.
- இரண்டு நிறங்களைக் கலந்து வேறு நிறமொன்றினைத் தயாரித்துக் கொள்வதற்காக பின்வருவது போன்று நிறங்களைக் கலக்க மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
  - சிவப்பு + கறுப்பு $\rightarrow$ கபிலம்
  - மஞ்சள் + நீலம் $\rightarrow$ பச்சை
  - சிவப்பு + நீலம் $\rightarrow$ ஊதா
  - கடும் நிறம் + வெள்ளை $\rightarrow$ இள நிறம்
- தயாரித்த நிறத்துளிகளை இரண்டாக மடித்த கடதாசியொன்றின் மடிப்புக் கோட்டில் இட்டு, கடதாசியை இரண்டாக மடித்து வெவ்வேறு ஆக்கங்கள் செய்ய மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- அவ்வாறு ஆக்கிய ஆக்கங்களில் தோன்றியுள்ள கோலங்கள் பற்றி மாணவரிடம் வினவுக. உ-ம்: வண்ணாத்திப்பூச்சி, மரம், தேனீ, .... போன்ற
- மாணவரது ஆக்கங்களை வகுப்பில் பொருத்தமான ஓர் இடத்தில் காட்சிப்படுத்துக.

DRAFT

செயற்பாடு - **VIII**

- படிப்படியாகக் குறைவடைந்து செல்லுமாறு அல்லது அதிகரித்துச் செல்லுமாறு வெவ்வேறு அளவு நீர் இட்ட ஒத்த அளவுள்ன சில குவளைகள் மீது தடித்துண்டினால் தட்டி, வெவ்வேறு ஒலிகள் எழுவதை மாணவர்க்குச் செய்து காட்டுக.
- நீர்க்குவளைகளின் வெவ்வேறு இடங்களில் தட்டியவாறு (உ-ம்: வாய், நடுப்பகுதி, நீர் உள்ள பகுதி, நீர் இல்லாத பகுதி ....) ஒலி வேறுபடும் விதத்தை இனங்காணுமாறு மாணவரை வழிப்படுத்துக.



- மாணவரைக் குழுக்களாகப் பிரிக்குக.
- படிப்படியாக குறைய அல்லது கூட நீர் இட்ட ஒத்த கண்ணாடிக் குவளைகள் மூன்றினை அல்லது அதிலும் மேற்பட்டவற்றை எடுத்து அவற்றின் வெவ்வேறு இடங்களில் தடியினால் தட்டியவாறு எழும் ஒலிகளை/ நாதங்களை அவதானிக்க வழிப்படுத்துக.
    - தடிக்குப் பதிலாக வேறு ஒரு பொருளைக் கொண்டு (உலோகக் கரண்டி, பிளாத்திக்கு நாடா .... ) தட்டச் செய்து ஒலியின் அல்லது நாதத்தின் வேறுபாட்டை இனங்காணச் செய்க.
    - குறைந்த வேகத்தில் ஆரம்பித்து அதிக வேகம் வரையிலும் அல்லது அதிக வேகத்தில் ஆரம்பித்து குறைந்த வேகம் வரையிலும் தாளப்படி தட்டச் சந்தர்ப்பமளிக்குக.
- குழுவாக, சுயாதீனமாகத் தாளமிசைக்க மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- கண்ணாடிக் குவளைக்குப் பதிலாக ஒத்த அளவுள்ள சில போத்தல்களைப் பயன்படுத்தியும் இச்செயற்பாட்டை மீண்டும் செய்யுமாறு மாணவரை வழப்படுத்துக.
- சிறிய வாய் கொண்ட போத்தலொன்றினுள் வெவ்வேறு உயர மட்டம் வரை நீர் இட்டு, அதன் வாயை தமது வாயின் அருகே வைத்து ஊதுவதன் மூலம் ஒலிகளை பிறப்பிக்கச் சந்தர்ப்பமளிக்குக. தாளப்படி ஊதி ஒலியெழுப்பிக் களிப்புறச் சந்தர்ப்பமளிக்குக.
- வடிவம் உயரம் வேறுபட்ட போத்தல்களில் வெவ்வேறு உயரத்துக்கு நீர் நிரப்பி, வாயினால் ஊதச் சந்தர்ப்பமளிக்குக. அப்போது தோன்றும் ஒலிகளின் வேறுபாட்டை இனங்காண வழிப்படுத்துக.
- பேனைக் குழாய், பருகு குழாய் அல்லது பானக் குழாய் போன்ற ஒரு பொருளை எடுத்து நீர் அடங்கியுள்ள பாத்திரத்தினுள் ஒரு அந்தத்தை இட்டு மறு அந்தத்தில் வாயை வைத்து ஊதச் செய்க. குமிழிகள் தோன்றுவதை அவதானிப்பதற்கும் எழும் ஒலியைச் செவிமடுப்பதற்கும் சந்தர்ப்பமளிக்குக.


DRAFT

செயற்பாடு - **IX**

- மாணவரைப் பின்வரும் விளையாட்டில் ஈடுபடுத்துக. அதற்காக,
    - மாணவரைச் சில குழக்களாகப் பிரிக்குக.
    - ஒவ்வொரு குழுவுக்கும் நீர் நிரப்பிய (ஒத்த அளவுள்ள) சற்றுப் பெரிய, சிறிய வாய் கொண்ட போத்தல் ஒவ்வொன்று வழங்குக.
- ஒவ்வொரு குழுவுக்கும் சிறிய பேசின் அல்லது பாத்திரம் அத்துடன் புனல் சிறிய பாத்திரம் ஒவ்வொன்று வழங்கி, போத்தலில் உள்ள நீரை அதில் இடுமாறு கூறுக.
- குழுவாகப் பிரித்த மாணவர்களை வரிசைகளில் நிற்குமாறு கூறுக.
- ஒவ்வொரு வரிசையின் எதிரேயும் நீர் அடங்கிய பேசின், போத்தல், புனல், சிறிய பாத்திரம் ஒவ்வொன்று வீதம் வைக்குக.
- தடவைக்கு ஒரு மாணவன் வீதம் ஓடி வந்து, தமது குழுவுக்குரிய பேசினிலிருந்து சிறிய பாத்திரத்தில் நீரை அள்ளி, போத்தலில் நிரப்புமாறு வழிப்படுத்துக.
- குழு உறுப்பினர் அனைவருக்கும் சந்தர்ப்பமளிக்குக.
- பேசினில் உள்ள நீரைக் கொண்டு போத்தலைப் பூரணமாக நிரப்ப முடியுமாகையால், நீர் வீண்விரயமாகாதவாறு இவ்விளையாட்டில் ஈடுபடுமாறு அறிவுறுத்துக.
- போத்தலில் அதிக உயரத்துக்கு நீர்நிரப்பிய குழு வெற்றி பெற்ற குழுவாகும்.

செயற்பாடு - **X**

- நீரில் வெவ்வேறு பொருள்களை மிதந்து செல்லச் செய்து களிப்புறுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- இதற்காகக் கடதாசியில் வெட்டியெடுத்த பின்வருவன போன்ற நட்சத்திரங்கள் சிலவற்றையும் நீர்ப்பாத்திரங்கள் சிலவற்றையும் பெற்றுக் கொள்க.
- படத்தில் காட்டியுள்ளவாறு A,B,C,D,E,Fஆகிய மூலைகளை மத்தியில் உள்ள G எழுத்து வரை மடிக்குக. அதனை நீரினுள் இட தாம் ஆயத்தமாக இருப்பதாக ஆசிரியை கூறுக.




- நீப்பாத்திரத்தினுள் நட்சத்திரத்தை இட முன்னர் நீர்ப்பாத்திரத் தில் இட்டால் அதற்கு யாது நிகழும் என மாணவரிடம் வினவுக.

  உ-ம்: மிதக்குமா? அமிழுமா? விரியுமா? விரியமாட்டாதா? ... என்றவாறு வினவுக.
- நட்சத்திரத்தின் மடித்த இதழ்கள் மேல் நோக்கி இருக்குமாறு அதனை நீர்ப்பாத்திரத்தினுள் இட்டு நிகழுபவற்றை அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மாணவரது அவதானிப்புக்களை அறிக்கையிட வழிப்படுத்துக.
- பின்னர், மாணவர் குழுக்களுக்கு நீர்ப்பாத்திரம், நட்சத்திரம் ஆகியவற்றை வழங்கி, குழுவாகச் செயற்பாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பமளிக்குக.

DRAFT

செயற்பாடு - **XI**

- பாடசாலைப் பகற்போசனத்தின் பின்னர் (ஓய்வு நேரத்தில்) மாணவர்க்கு அவர்களது தண்ணீர்ப்போத்தல்களில் உள்ள நீர் மட்டங்களை அவதானிக்குமாறு வழிப்படுத்துக. சில மாணவர்கள் போதுமான அளவு நீர் பருகி உள்ளமையையும் மற்றும் சிலர் குறைவான அளவு நீர் பருகி உள்ளமையையும் எடுத்துக் காட்டுக.
- எமது ஆரோக்கியத்தைச் சீராகப் பேணிவருவதற்காக நாளொன்றுக்குப் போதுமான அளவு நீர் பருகுவதன் அவசியத்தை மாணவர்க்கு விளக்குக.
- அதற்கமைய ஒரே தடவையில் அதிக அளவு நீரைப் பருகுவதை விட நாள் முழுவதும் இடையிடையே நீர் பருகுவது முக்கியமானது என எடுத்துக் காட்டுக.
- அவ்வாறு நீர் பருகாத போது ஏற்படத்தக்க நிலைமைகள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.

  உ-ம்: - வியர்வை துர்மணமாக இருத்தல்
  - உரியவாறு சிறுநீர் வெளியேறாமையால் ஏற்படத்தக்க நோய்கள்/ கோளாறுகள்
  - உரியவாறு மலம் கழியாமையால் ஏற்படத்தக்க நோய்கள்/ கோளாறுகள்

  போன்றன.
- போதுமான அளவு நீர் பருகுவதற்காகச் சுத்தமான நீரையே பயன்படுத்த வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுக.
- பருகுவதற்குப் பொருத்தமானது கொதித்தாறிய நீரே என்பதை மாணர்க்கு எடுத்துக்காட்டி விளக்குக.

செயற்பாடு - **XII**

- மாணவர் அனைவருக்கும் பகிர்ந்தளிப்பதற்குப் போதுமான தொகையில் வெண்ணிற திசூ தாள்களை அல்லது வெண்ணிறத் துணித்துண்டுகளைத் தேடிப்பெறுக.
- பாடசாலையில் ஓய்வு வேளை முடிவடைந்த பின்னர், வகுப்புக்குத் திரும்பி வந்த பின்னர், துணித்துண்டு அல்லது திசூத்தாள் துண்டு ஒவ்வொன்று வீதம் மாணவர் ஒவ்வொருவருக்கும் வழங்குக.
- அதனைப் பயன்படுத்தி, தமது இரண்டு கைகளிலும் முழங்கைக்கு கீழான பகுதிகளை நன்கு துடைக்குமாறு கூறுக.
- திசூத் தாள்களுக்கு அல்லது வெண்ணிறத் துணித்துண்டுகளுக்கு யாது நிகழ்ந்துள்ளது என்பதனை மாணவரிடம் வினவுக.
- மாணவரது கருத்துக்களையும் வெளிப்படுத்தச் சந்தர்ப்பமளித்து, இரண்டு கைகளும் அசுத்தமடைந்துள்ளமையால், துணித்துண்டு அல்லது திசுத்தாள் துண்டு/ கடதாசி துர் நிறமாக மாறியுள்ளது என்பதை எடுத்துக்காட்டுக.
- நன்கு, உரியவாறு சவர்க்காரம் இட்டு கைகளைக் கழுவிக் கொள்ள வேண்டிய விதத்தை மாணவர்க்குச் செய்து காட்டுக.
- அதற்கமைய மாணவர்க்குத் தமது கைகளைக் கழுவிக் கொள்ளச் சந்தர்ப்பமளிக்குக.
- இவ்வாக நாம் நாளாந்தம் செய்யும் பெரும்பாலான செயற்பாடுகளின் போது எமது உடல் அசுத்தமடையும் எனவும், எமது நாளாந்த சுத்தம் தொடர்பாக விசேட கவனஞ் செலுத்துதல் வேண்டும் எனவும் மாணவர்க்கு விளக்குக.

DRAFT

## 05 கருப்பொருள் : புத்தாண்டுக் காலம்

**தேர்ச்சி** :-

- புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்களைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்/ பதிவு செய்வார்.
- புத்தாண்டுப் பாரம்பரியங்களின் முக்கியத்துவத்தை மதித்துச் செயற்படுவார்.
- புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் செய்யும் செயல்கள் காரணமாக நிகழத்தக்க விபத்துக்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற ஆவன செய்வார்.
- புத்தாண்டின் சிறப்பை, வெளிப்படுத்தும் வெவ்வேறு ஆக்கங்களில் ஈடுபட்டுக் களிப்புறுவார்.
- வெவ்வேறு மக்கட் பிரிவினரின் புத்தாண்டுப் பாரம்பரியங்களை மதிப்பார்.
- புத்தாண்டுப் பண்டிகைக் காலம் தொடர்பான விளையாட்டுக்களில் ஈடுபட்டுக் களிப்புறுவார்.
- புத்தாண்டுப் பண்டிகைக் காலத்துக்குரிய சிறப்பான களிப்பூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

**கற்றற் பேறுகள்** :-

- புத்தாண்டுப் பண்டிகைக் காலத்துக்காக, சுற்றப்புறத்தில் உள்ளோர் ஆயத்தமாகும் விதத்தை விவரிப்பார்.
- புத்தாண்டுப் பண்டிகைப் பாரம்பரியங்களில் ஈடுபடுவதன் மூலம் தமக்கும் சமூகத்துக்கும் கிடைக்கும் பயன்களை விவரிப்பார்.
- வெவ்வேறு மக்கட் பிரிவினருக்குரிய சிறப்பான பாரம்பரியங்கள் இடம்பெறும் விதத்தை வெளியிடுவார்.
- புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் நிகழத்தக்க விபத்துக்களில் இருந்து பாதுகாப்புப் பெற ஆவன செய்வார்.
- புத்தாண்டுக் கால பலகார மாதிரிகளைச் செய்வார்.
- புத்தாண்டுப் பண்டிகைக் காலத்துக்கெனச் சிறப்பான கிராமிய விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- புத்தாண்டுப் பண்டிகைக் காலத்துக்கெனச் சிறப்பான நாட்டார் பாடல்கள், நாட்டார் கவிதைகள், “ரபான்” பாடல்கள் போன்றவற்றைப் பாடுவார்.

DRAFT

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் சுற்றுப்புறத்தில் மரஞ்செடி கொடிகளில் நிகழும் மாற்றங்களை அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- இதற்காக மாணவருடன் திறந்த வெளியில் களப்பிரயாணம் செய்க.
- குயில் கூவுதல், முள்முருக்கை பூக்கள் பூத்திருத்தல், மா, ரம்புட்டான், ஜம்பு மரங்களில் காய்கள் காய்த்திருத்தல், மரஞ்செடிகொடிகளில் இலைகள் உதிர்ந்து புதிய தளிர்கள், இலைகள் தோன்றியிருத்தல்.
- புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் சூழலில் காணப்படும் மாற்றங்கள் தொடர்பாகக் கூறும் பின்வருவது போன்ற கவிதைகள்/ பாடல்களைத் தேடிப்பெறுக. இல்லையேல் கவிதைகள்/ பாடல்களைப் புனைந்து கொள்க. அவற்றை மாணவருடன் சேர்ந்து பாடுக.
  உதாரணம் : **பாடல்**

**பதிய மாற்றம்**

முள்முருங்கை பூக்கின்றது
முத்து முத்தாய் தெரிகின்றது

மா, பலா காய்க்கின்றது
மரங்களிலே புதிய தளிர்கள் வருகின்றன

பறவைகளும் வந்து சேர்கின்றன
புதிய உலகைப் பார்க்கின்றன

புத்தாண்டும் மலர்கின்றது
புதிய வாழ்வைத் தருகின்றது

- பண்டிகைக் காலத்தைச் சூழலில் ஏற்படும் மாற்றங்களையும் மனிதரின் நடத்தைகளில் காணப்படும் வேறுபாடுகளையும் பற்றி மாணவருடன் உரையாடுக.
- பண்டிகைக் காலத்தில் வீடுகளில் இடம்பெறும் நிகழ்வுகளை உள்ளடக்கித் தமது அனுபவங்களை வெளியிடச் சந்தர்ப்பமளிக்குக.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படுமாறு கலந்துரையாடுக.
  உதாரணம்:
    - வீடுகளைச் சுத்திகரித்தலும் பழுதுபார்த்தலும் அழகுபடுத்தலும்
    - புதிய தளவாடங்கள் வாங்குதல்
    - உணவுப் பொருள்கள் சேகரித்தல்
    - தின்பண்டங்கள் தயாரித்தல்
    - புதிய ஆடைகள் தைத்தல்
    - வெளியிடங்களில் தொழில் செய்வோர் புத்தாண்டுக் கொண்டாட்டத்துக்காக வீடு செல்லல்
    - வீடுகளுக்கு உறவினர்கள் வருதலும் உறவுகள் புதுப்பிக்கப்படுதலும்

DRAFT

- புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் சூழலின் அலகு/ சுற்றுப்புறம் புத்தாண்டுப் பண்டிகைக்குத் தயாராகும் விதம் குறித்து சுயாதீனமாகச் சித்திரம் வரையுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மாணவரது ஆக்கங்களைப் பராட்டுக.

**செயற்பாடு - II**

- புத்தாண்டுப் பண்டிகையுடன் தொடர்புடைய பழக்க வழக்கங்கள் தொடர்பாகத் தகவல்களைத் தேடிப்பெற்று எடுத்து வருமாறு மாணவர்க்கு அறிவுறுத்துக.
- மாணவர் தேடிப்பெற்று, வகுப்புக்குக் கொண்டு வந்த தகவல்களையும் துணையாகக் கொண்டு புத்தாண்டுப்பண்டிகைப் பழக்க வழக்கங்களை நிறைவேற்றும் விதம் தொடர்பாக மாணவருடன் உரையாடுக.
- இதற்காகப் பொருத்மான வளர்ந்தோர்/ முதியோர் ஒருவரை வகுப்புக்கு அழைத்து புத்தாண்டுப் பண்டிகையைப் பழக்க வழக்கங்கள், சித்திரைப் புத்தாண்டின் முக்கியத்துவம் ஆகியன பற்றிப் பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் மாணவருடன் உரையாடுக.
    - புத்தாடை அணிதல்
    - புண்ணிய காலத்தில் சமயக் கிரியைகள்/ வழக்காறுகள்
    - அடுப்பு மூட்டல்
    - கொடுக்கல் வாங்கல் செய்தலும் வேலை ஆரம்பித்தலும்
    - உணவு உண்ணல்
    - மூத்தோருக்கு வெற்றிலை கொடுத்து வணங்குதல்/ வணக்கந்தெரிவித்தல்
    - தலைக்கு எண்ணெய் வைத்தல்
    - விசேடமான புத்தாண்டுத் தின்பண்டங்கள்
    - உறவினர் வீடுகளுக்குச் செல்லல்
- இவ்வாறான பழக்க வழக்கங்களில் ஈடுபடுவதால், தமக்கும் சமூகத்துக்கும் கிடைக்கும் பயன்கள் பற்றி மாணவர்க்கு வலியுறுத்தும் வகையில் பின்வரும் விடயங்களையும் வெளிக்கொணர்ந்து உரையாடல் நடத்தி மேலும் அறிவூட்டம் செய்க.

  உ-ம்:
    - ஒற்றுமையாக வாழ்தல், பகிர்ந்து பரிமாறிக் கொள்ளும் பழக்கம், மூத்தோரை மதிக்கும் பழக்கம், உரிய வேளையில் வேலை செய்யும் பழக்கம், பொறுமையாக இருக்கப் பழகுதல்
- இவ்வாறான பண்புகளை புத்தாண்டுப் பண்டிகைப் பழக்க வழக்கங்கள் மூலம் அடையலாம் என்பதை வெளிக்கொணர்ந்து காட்டுக.
- உரையாடலின் இறுதியில் சித்திரைப் புத்தாண்டு, மிக முக்கியமான ஒரு தேசியப் பண்டிகையாகும் என்பதை மாணவர்க்கு வலியுறுத்துக.

**செயற்பாடு - III**

- பெற்றாரின் உதவியுடன் விளையாட்டு வீடுகள் (குச்சுவீடுகள்) சில அமைத்து அவற்றை சித்திரைப் புத்தாண்டின் சிறப்புக்கள் வெளிப்படுமாறு ஆயத்தப்படுத்துக.
- அவ்வீடுகளுள் ஒன்றையேனும் சிங்கள பண்பாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு வீடாக ஆயத்தம் செய்து கொள்க.

DRAFT

- வகுப்பில் உள்ள மாணவர்களை அவ்விளையாட்டு வீடுகளுக்கமையப் பிரித்து தமிழ் - சிங்கள புத்தாண்டு விழாவொன்று நடத்துக.
- இதற்காகப் புத்தாண்டுப் பழக்க வழக்கங்களை உள்ளடக்கிய ஒரு நிகழ்ச்சி நிரலைத் தயாரித்துக் கொள்க.
- புத்தாண்டுப் பழக்க வழக்கங்களை (வழக்காறுகளை) நிறைவேற்றிய பின்னர், புத்தாண்டுப் பண்டிகை என்பது தமிழ் (இந்து) மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்களாலும் கொண்டாடப்படும் ஒரு பண்டிகையாகும் என்பதனையும் அவர்கள் வழக்காறுகளை நிறைவேற்றும் முறைகளில் உள்ள சிறப்புக்கள் பற்றியும் மாணவருடன் உரையாடுக.

**செயற்பாடு - IV**

- புத்தாண்டுப் பண்டிகையை அழகியல் ரீதியாக நடத்துவதற்காகப் பின்வரும் விளையாட்டில் மாணவரை ஈடுபடுத்துக. புத்தாண்டுப் பண்டிகைக் காலம் பற்றிக் கூறும் பாடல்கள், கவிதைகள், பாடல்களைத் தேடிப் பெற்றுக்கொள்க.
  - அவற்றை மாணவருடன் சேர்ந்து பாடுக.
- பெற்றாரின் உதவியுடன் புத்தளிப்புக் கருவி ஒன்றை ஆயத்தப்படுத்திக் கொள்க.
- எளிமையான தாளத்துடன் கூடிய பாடல்களை புத்தளிப்புக்கருவியின் துணையுடன் இசைப்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

  உதாரணம்: பாடல்

**புத்தாண்டு**

புத்தாண்டு வருகிகிறது
புதுப் பொலிவைத் தருகிறது

மத்தாப்பு சிரிப்பது போல்
மகிழ்ச்சி எங்கும் நிறைகிறது

பருவமழை பொழியட்டும்
பயிர்கள் எல்லாம் தழைட்டும்

நன்முறைகள் பெருகட்டும்
நாடெங்கும் செழிக்கட்டும்

- இவ்வாறான வேறு பாடல்களையும் புத்தளிப்புக்கருவியின் துணையுடன் இசைப்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு - V**

- புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் நிகழும் விபத்துக்கள் தொடர்பான ஒளிப்படங்கள்/ வீடியோ காட்சிகள்/ செய்திப்பத்திரிகை அறிக்கைகளைத் திரட்டிக்கொள்க.
- அவற்றுக்கமையப் புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் விபத்துக்கள் நிகழ்ந்த சந்தர்ப்பங்கள், விபத்துக்கள் நிகழத்தக்க வழிகள், விபத்துக்கள் காரணமாக ஏற்படத்தக்க இழப்புக்கள் பற்றி மாணவர்க்கு எடுத்துக்காட்டுக.
- பாதுகாப்பானவாறு செயற்பட வேண்டிய விதம் தொடர்பாக, பின்வரும் சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டி விளக்குக.

DRAFT

- பட்டாசு கொளுத்துதல், வாண வேடிக்கைகளின்போது விபத்து ஏற்படத்தக்க சந்தர்ப்பங்கள்
- நாட்டார் விளையாட்டுக்களின்போது நிகழத்தக்க விபத்துக்கள்
- தின்பண்டங்கள் தயாரிக்கும்போது நிகழத்தக்க விபத்துக்கள்

- இவ்வாறான விபத்துக்கள் காரணமாக உடலில் காயம், உயிரிழப்பு, சொத்துச் சேதம் போன்றவை நிகழ இடமுண்டு என்பதை விளக்குக. மேலும் விபத்துக்களைத் தவிர்க்கும் வகையில் செயற்படுவதன் அவசியத்தையும் விளக்குக.

**செயற்பாடு - VI**

- புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் விளையாடப்படும் சில நாட்டார் விளையாட்டுக்கள் தொடர்பான தகவல்களை சேகரித்து வருமாறு மாணவர்க்குக் கூறுக.
  உதாரணம்:
  கயிறிழுத்தல், ஆடுபுலி ஆட்டம் அவற்றுள் சில விளையாட்டுக்ளில் மாணவரை ஈடுபடுத்துக.
- நாட்டார்/ கிராமிய விளையாட்டுக்களுள், ஆடும் புலியும், விளையாட்டின் போது பாடும் பாடலைப் பாடியவாறு அவ்விளையாட்டில் ஈடுபடுமாறு மாணவரை வழிப்படுத்துக.

**செயற்பாடு - VII**

- பதப்படுத்திய களி/ வெள்ளை நிறக் களி போன்ற மூலப்பொருள்களைப் பெறுக.
- மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்குக.
- தமிழ் (இந்து) - சிங்கள புத்தாண்டு கால உணவு வகைகள்/ தின்பண்டங்களின் மாதிரியுருக்களை ஆக்குவதற்காக மேற்படி ஆயத்தப்படுத்திய மூலப்பொருள்களை மாணவர் குழுக்களுக்குப் பகிர்ந்தளிக்குக.
- ஆக்கிய மாதிரி உருக்கள் நன்கு உலர்த்திக் கொள்க. உலர்த்திய பின்னர் நிறந்தீட்ட வழிப்படுத்துக.
- ஆக்கிய தின்பண்ட மாதிரிகளைப் பயன்படுத்தி, புத்தாண்டுப் பண்டிகை உணவு மேசையொன்றைத் தயார்ப்படுத்த வழிப்படுத்துக.
- மாணவரின் ஆக்கங்களைப் பாராட்டுக.

சமூக ஒருங்கிணைப்பு எண்ணக் கருவுக்கென எழுதப்பட்டுள்ள சிறுவர் கதைத் தொகுப்பில் **"மேகங்களின் கெட்டித்தனம்"** என்னும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக.

DRAFT

## 06 கருப்பொருள் : நாம் காணும் வானம்

**தேர்ச்சி :-**

- வானத்திலும் அதன் சுற்றுப் புறத்திலும் நிகழும் மாற்றங்களை அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.
- சூரிய ஒளி, காற்று, மழை ஆகியன காரணமாக ஏற்படும் தாக்கங்கள் குறித்துக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.
- வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி, வானம் மற்றும் சுற்றுப்புற சூழல் மாற்றங்களை வெளிக்காட்டும் ஆக்கங்கள் புரிவார்.
- வெளியைப் பயன்படுத்தி விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- வானத்தின் அழகை வெளிபாட்டு ஊடகங்களின் மூலம் முன்வைத்துக் களிப்புறுவார்.

**கற்றற் பேறுகள் :-**

- நாளின் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சுற்றுப்புறச் சூழலில் நிகழும் மாற்றங்களை அவதானித்து வெளிப்படுத்துவார்.
- அதிக சூரிய ஒளி காரணமாக உடலில் ஏற்படும் பாதகமான நிலைமைகளில் இருந்து உடலைப் பாதுகாத்துக் கொள்ள ஆவன செய்வார்.
- அதிக சூரிய ஒளி காரணமாக ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பான அனுபவங்களை விவரிப்பார்.
- வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி கண்களின் பாதுகாப்புக்காகச் செய்யக்கூடிய ஆக்கங்களைச் செய்வார்.
- வெவ்வேறு பொருள்களைப் பயன்படுத்தி வான்பொருள்களின் மாதிரியுருக்கள் ஆக்குவார்.
- உடல் சமநிலையைப் பேணியவாறு கிடை மற்றும் நிலைக்குத்து வெளியைப் பயன்படுத்தி சிறு விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- வானத்தின் அழகு பற்றிக் கூறும் எளிமையான பாடல்கள்/ கவிதைகளை வெளிப்பாட்டு அசைவுகளுடன் பாடுவார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- நாளின் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வானத்தில் காணப்படும் மாற்றங்கள் தொடர்பாகத் தேடியறிவதற்காக, வானத்தைத் தெளிவாக அவதானிப்பதற்கு ஏற்ற ஓர் இடத்திற்கு மாணவரை அழைத்துச் செல்க.

  மாணவருக்கு வானத்தை அவதானிக்கச் சந்தர்ப்பமளித்து, அங்கு காணப்படுபவை யாவை என்பது குறித்து எளிமையானவாறு கலந்துரையாடுக.

DRAFT

பின்வரும் விடயங்கள் தொடர்பாக அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.

முகில்களின் தன்மை:
- வடிவங்கள் சமமானவையா? வேறுபட்டவையா?
- அவற்றின் நிறத்தில் வேறுபாடு உள்ளதா?
- எல்லா முகில்களும்/ மேகங்களும் சமமான வேகத்தில் அசைகின்றனவா ... போன்ற விடயங்கள்

வானத்தின் தன்மை:
- வானம் தெளிவாகத் தெரிகின்றதா?
- தெளிவாக இல்லையெனில் அது ஏன்?
- வானம் தெளிவாக உள்ள வேளைகளில் அதன் நிறம் எவ்வாறானது?
- எல்லா இடங்களிலும் வானத்தின் நிறம் சமமானதா?

- நாளில் வெவ்வேறுபட்ட சில சந்தர்ப்பங்களில் மாணவர்க்கு மேற்படி விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி வானத்தை அவதானிக்கச் செய்து, அங்கு நிகழும் மாற்றங்கள் தொடர்பாகத் தேடியறியுமாறு அவர்களது கவனத்தை ஈர்க்குக.
- இவ்வாறாக அதிக மழை பெய்யும் ஒரு நாளிலும் சராசரியான மழை பெய்யும் ஒரு நாளிலும் வானத்தின் தன்மையைத் தேடியறியுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- அந்த அவதானிப்புக்களைக் கொண்டு, நாளின் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வானத்தில் காணப்படும் மாற்றங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல் நடத்துக.
- அதன்போது மாணவரது அவதானிப்புக்களின் ஊடாகப் பெற்ற அனுபவங்களை அறிக்கைப்படுத்தச் சந்தர்ப்பமளிக்குக. வானில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பான மாணவரது அனுபவங்களைச் சித்திரமாக வரைய வழிப்படுத்துக.
- வானம் பற்றிக் கூறும் படங்கள் சிலவற்றைத் தேடிப்பெற்று அவற்றைப் பாடவும் அதற்கமைய கருத்து வெளிப்பாட்டு, உடலியக்க அசைவுகளை முனைவைப்பதற்கும் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு - II**

- அதிக சூரிய ஒளி (வெய்யில்) காரணமாக ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக மாணவரது கவனத்தை ஈர்க்குக.
- சூரிய ஒளி அதிகமாகக் காணப்படும் ஒரு சந்தர்ப்பதில் வெளியே இருக்கும்போது கடுமையான சூரிய ஒளி உடலினால் உணரப்படுவதால் ஏற்படும் அசௌகரியம் பற்றி மாணவருடன் உரையாடுக.


  உ-ம்:- வியர்த்தல், தாகம் ஏற்படல், சோர்வு, களைப்பு, கண்களில் கூச்சம், தலையில் அசௌகரியம், மயக்கம் ... போன்றவை
- சூரிய ஒளி காரணமாக எமக்கு ஏற்படத்தக்க பாதிப்புக்கள் பற்றி மாணவரது கவனத்தை ஈர்க்குக.
- நீண்ட காலத்துக்கு உடலில் கடுமையான சூரிய ஒளி படுவதால் உடலில் பல்வேறு நோய்கள் ஏற்பட இடமுண்டு என்பதை விளக்குக.

  உ-ம்: கண்ணில் நோய்கள், தோல் நோய்கள், தோலின் நிறம் மாற்றமடைதல்
- இவ்வாறாக ஏற்படும் கண் நோய் காரணமாக கண்பார்வை பாதிக்கப்பட இடமுண்டு என்பதை எடுத்துக்காட்டுக.

DRAFT

- அவற்றில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகச் செயற்பட வேண்டிய விதம் குறித்து மாணவரிடம் வினவுக.

  உ-ம்:
  - கண்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகக் கறுப்புக்கண்ணாடி (Sunglass) அணிதல்
  - உடல் நன்கு மறைக்கப்படும் வகையில் ஆடையணிதல்
  - தொப்பி அணிதல்/ தலையணி அணிதல்
  - குடைபிடித்தல்
- சூரிய ஒளி (வெப்பம்) காரணமாக உடலுக்கு ஏற்டத்தக்க மேற்படி பாதிப்புக்கள் தொடர்பாக அறிவூட்டம் செய்வதற்காகப் பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துக.
- சூரிய ஒளி (வெய்யில்) காரணமாக உடலுக்கு ஏற்படத்தக்க பாதிப்புக்களைக் காட்டும் ஒளிப்படங்கள் அல்லது படங்கள் அல்லது வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகள, அப்பாதிப்புக்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகக் கையாளத்தக்க வழிகள் போன்றவை வரையப்பட்ட படங்கள் அல்லது எழுதப்பட்ட அட்டைகளைத் தயாரித்துக் கொள்க.
- டிமை கடதாசியொன்றில் சூரியனின் படமொன்றினை ஒட்டி, சூரிய ஒளி காரணமாக உடலில் ஏற்படும் பாதிப்புக்கள் அதற்காகக் கையாளத்தக்க வழிகளை உள்ளடக்கிய அட்டைகளை ஒழுங்குபடுத்தி மாணவரது அனுபவங்களை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளச் சந்தர்ப்பமளிக்குக.



**சூரிய ஒளி காரணமாக உடலுக்கு ஏற்படும் பாதிப்புக்ககள்**

- தோலின் நிறம் மாறுதல்
- மயக்கம் ஏற்படல்
- கண்களில் அசௌகரியம் உணரப்படுதல்
- களைப்பு

**சூரிய ஒளியிலிருந்து உடலைப் பாதுகாத்துக் கொள்வதற்காகக் கையாளத்தக்க வழிகள்**


- உடல் நன்கு மறைக்கப்படும் வகையில் உடையணிதல்
- குடை பிடித்தல்
- தொப்பி அணிதல்/ தலையணி அணிதல்
- கறுப்புக் கண்ணாடி/ வெயிற் கண்ணாடி அணிதல்

- அதற்கமைய சூரிய ஒளியிலிருந்து எப்போதும் உடலைப் பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும் என்பதை விளக்குக.

DRAFT

செயற்பாடு - **III**

- வகுப்பு மாணவர்களைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.
- படத்தில் காட்டியுள்ளதுபோன்று ஐந்து கோடுகள் குறிக்குக.
- மாணவரை ஆரம்பக் கோட்டில் நிறுத்துக.
- ஆசிரியை சமிக்ஞை வழங்கியவுடன் மாணவர்கள் ஆரம்பக் கோட்டில் இருந்து முதலாவது கோடு வரையில் ஓடிச் செல்ல வேண்டும்.
- முதலாவது கோட்டை அடைந்த மாணவர்கள் துள்ளித் துள்ளி இரண்டாம் கோட்டுக்குச் செல்ல வேண்டும்.
- இரண்டாம் கோட்டுக்கு வந்த மாணவர்கள் ஒற்றைக்காலில் பாய்ந்தவாறு மூன்றாம் கோட்டுக்குச் செல்ல வேண்டும்.
- மூன்றாம் கோட்டிலிருந்து நான்காம் கோட்டுக்கு அதாவது முடிவுக் கோட்டுக்கு வேகமாக ஓடிச் செல்ல வேண்டும்.




- இச்செயற்பாட்டைச் செய்யும்போது திறந்த வெளியான இடத்தில் இருக்கும் இடவசதிக்கு ஏற்ப, அந்தந்தச் செயற்பாட்டுக்குப் பொருத்தமானவாறு இடவசதியை ஒதுக்கிக் கொள்க.
- வகுப்பு மாணவர் தொகைக்கேற்ப, செயற்பாட்டுக்காக மாணவர்களைக் குழுக்களாகவோ, மாணவர் அனைவரும் பங்குபற்றத்தக்கவாறான ஒரு தனிக்குழுச் செயற்பாடாகவோ இதனை ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

செயற்பாடு - **IV**

- சூரிய ஒளியின் செல்வாக்குக் காரணமாக சூழலில் நிகழும் தாக்கங்கள் பற்றித் தேடியறியப் பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துக.
- இதற்காக பின்வரும் பொருட்களை ஆயத்தம் செய்து கொள்க.
    - வெண்ணிறம் அல்லாத வேறு நிறச் சிறு தட்டொன்றில் (Saucer) இட்ட உப்புக் கரைசல் சிறிதளவு
    - மெல்லியதாக வெட்டிய பாகற் காய்த்துண்டுகள்
    - வாழைக்காய்த் துண்டுகள்
    - ஈரமான கைக்குட்டை
    - நீர்ச்சேர்த்துக் குழைத்துத் தட்டையாக்கிய களித்திரள் போன்றவற்றைப் பெறுக.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து இவற்றுள் ஒன்றையோ சிலவற்றையோ குழுக்களுக்குப் பகிர்ந்தளிக்குக.
- அப்பொருள்களை வெயிலில் வைத்து நிகழுபவற்றை அவதானிக்க வழிப்படுத்துக.
- அந்தந்தக் குழுவுக்கு வழங்கிய பொருளுக்கு அல்லது பொருள்களுக்கு யாது நிகழ்கின்றது என அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- வெயிலில் வைத்து உலர்த்திய பொருள்களுக்கு யாது நிகழ்ந்துள்ளது என விரல்களால் தொட்டு இனங்காணச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரது அவதானிப்புக்களைக் குழுவாக அறிக்கைப்படுத்தச் செய்க.
- அதற்கமைய,
    - களியில் இருந்த நீர் வற்றிப் போயுள்ளது என்பது
    - களி மண் திரள் வெடித்துள்ளது என்பது
    - பாகல் அல்லது வாழைக்காய்த்துண்டுகளின் ஈரலிப்பு வற்றி, உலர்ந்துள்ளது என்பது


DRAFT

- கைக்குட்டையில் இருந்து நீர் வெளியேறி உள்ளது என்பது
- உப்புக்கரைசலில் இருந்த நீர் வெளியேறி உள்ளதோடு உப்புப் பளிங்குகள் மீதியாக உள்ளது என்பது

- இவை இவ்வாறு நிகழ்ந்தமைக்குக் காரணங்களை மாணவரிடம் வினவுக.
- அதற்கமைய சூரிய ஒளியின் தாக்கம் காரணமாக இந்த மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமையை எடுத்துக்காட்டுக.
- இவ்வாறாகக் கடும் வறட்சியான வானிலை உள்ள சந்தர்ப்பங்களில் கிணறு, மீன்கள் உள்ள நீர்க்குட்டை, நீர் ஊற்று, குளம், மரஞ்செடிகொடிகள் போன்றவற்றுக்கு யாது நிகழும் என அனுமானித்துக் கூறச் சந்தர்ப்பமளிக்குக.
- மீன்கள் போன்ற பிராணிகள் உள்ள நீர்க்குட்டையில் நீர் வற்றிப்போவதால் அப்பிராணிகள் இறக்க நேரிடும். எனவே அவ்வாறான (அப்பாவிப்) பிராணிகளைப் பாதுகாப்பது எமது பொறுப்பு என்பதை எடுத்துக்காட்டுக.
- எனவே கடுமையான சூரிய ஒளி அல்லது வெயில் பிராணிகளுக்கும் சூழலுக்கும் பாதகமானது என்பதை விளங்கிக் கொள்ள ஆவன செய்க.

**செயற்பாடு - V**

- சூரிய ஒளியிலிருந்து கண்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வெயில் கண்ணாடி (கறுப்புக் கண்ணாடி) (Sun Glass) ஒன்று ஆக்குவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- இதற்காக சற்றுத் தடித்த அட்டை, இலாஸ்திக்கு நூல், ஊடு காட்டும் தன்மையுள்ள நிறத்தாள் (செலோபேன் தாள்) போன்றவற்றைத் தேடிப் பெறுக.
- ஆசிரியை வழங்கும் மாதிரிக்கு அமைய மூக்குக் கண்ணாடியின் வெளி வட்டத்தை ஆக்கிக் கொள்ளுமாறு மாணவரை வழிப்படுத்துக.



- பின்னர் மாணவர்க்கு தாம் விரும்பியவாறு நிறத்தாள் ஒட்டிக் கொள்ளச் சந்தர்ப்ப மளிக்குக.
- மூக்குக் கண்ணாடி கீழே விழுந்து விடாதிருப் பதற்கான தேவையெனின் இலாஸ்திக்கு நூலைப் பயன்படுத்துக.
- தாம் தயாரித்த கறுப்புக் கண்ணாடியை அணிந்து களிப்புறச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு - VI**

- பதப்படுத்திய களி, நிறமூட்டிய மணல், (மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு) பசை ஆகியவற்றைப் பெறுக.
- பதப்படுத்திய களியைப் பயன்படுத்தி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகிய வான்பொருள்களை ஆக்கிக் கொள்க. அவற்றின் மீது பொருத்தமானவாறு நிறமூட்டிய மணலை ஒட்டி நிழலில் அல்லது இளங் காற்றில் வைத்து உலர்த்திக் கொள்க.
- அவ்வான்பொருள்களைக் கொண்டு வகுப்பறையில் தெளிவாகப் பார்க்கத்தக்கவாறான ஓர் இடத்தில் வானத்தின் மாதிரியொன்றை அமைக்குக.

சமூக ஒருங்கிணைப்பு எண்ணக் கருவுக்கென எழுதப்பட்டுள்ள சிறுவர் கதைத் தொகுப்பில் **"மேகங்களின் கெட்டித்தனம்"** என்னும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக.

DRAFT

## 07 கருப்பொருள் : நாம் உண்பவையும் குடிப்பவையும்

**தேர்ச்சி** :-

- உணவு வகைகளின் முக்கியத்துவத்தை இனங்கண்டு அவற்றை நுகர்வார்.
- ஆரோக்கியமான இருப்புக்காக (வாழ்க்கைக்காக) சரியான சுகாதாரப் பழக்கங்களைக் கையாள்வார்.
- உணவு அசுத்தமடையும் (மாசடையும்) விதங்களை இனங்கண்டு, அவற்றிலிருந்து உணவைப் பாதுகாக்க ஆவன செய்வார்.
- பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி உணவு தொடர்பான படைப்பாக்கங்களில் ஈடுபடுவார்.
- சக்தி விருத்திக்குத் துணையாகும் அசைவு இயக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- உணவு உண்ணும்போது பேண வேண்டிய சரியான ஒழுங்குகளை எடுத்துக்காட்டும் வகையில் ஆக்கபூர்வமான நடிப்புக்களில் ஈடுபடுவர்.

**கற்றற் பேறுகள்** :-

- அன்றாடம் தமது உணவு வேளையில் அடங்கியுள்ள கீரை வகைகளை விருப்புடன் நுகர்வார்.
- பழப்பானம்/ பழக்கலவை (பழச்சாறு)/ பழச்சலாது தயாரிப்பதில் பங்களிப்புச் செய்வார்.
- அன்றாட நுகர்வுக்காகப் போசாக்கான உணவுகளைச் சேகரித்துக்கொள்ள ஆவன செய்வார்.
- நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக நல்ல சுகாதாரப் பழக்கங்களைப் பேணிவருவார்.
- உணவு வீண் விரயத்தைத் தவிர்க்கப் பங்களிப்புச் செய்வார்.
- வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி, உணவு வகைகளின் மாதிரியுருக்கள் ஆக்குவார்.
- உடலின் சக்தியை வளர்த்துக் கொள்வதற்குத் துணையாகும் அசைவியக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- உணவுகள் தொடர்பாகக் கூறும் பாடல் வரிகளை இசைப்பார்.

DRAFT

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- கீரை வகைகள் சிலவற்றை வகுப்பிற்குக் கொண்டு வருக.
- அவற்றின் பெயர்கள் தனித்தனியே எழுதப்பட்ட அட்டைகள் சிலவற்றைத் தயாரித்துக் கொள்க.
- கீரை வகைகளைத் தனித்தனியே பாத்திரங்களில் இட்டுக் கொள்க.
- அப்பாத்திரங்களை மாணவர்கள் நன்கு பார்க்கக் கூடியவாறாக வகுப்பில் காட்சிப்படுத்துக.
- கீரை வகையின் பெயர் எழுதப்பட்ட அட்டைகளை அந்தந்தக் கீரை வகை அடங்கியுள்ள பாத்திரத்தின் முன்னே முன்வைக்குக.
- அக்கீரை வகைகளின் இலைகளையும் தண்டுகளையும் கவனமாக அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- வெறுங்கண்ணாலும் கைவில்லையினாலும் அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- பின்னர் பின்வருவது போன்று ஆக்கிய பாடல்கள்/ கவிதைகளை மாணவருடன் சேர்ந்து பாடுக.

**கீரை**

அம்மா சமைக்கும் கீரை
அதிக சத்துள்ள கீரை
பார்வைக்கு உதவும் கீரை
பசுமை மிக்க வல்லாரை
சின்னத் தண்டுக் கீரை
செழித்து வளரும் முளைக்கிரை
மலிவாய் கிடைக்கும் கீரை
மருத்துவ குணமுள்ள அரைக்கீரை

- பாத்திரங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள கீரை வகைகள் எவை என மாணவரிடம் வினவுக.
- அவதானிப்பின்போது இனங்கண்ட கீரை வகைகளில் காணப்படும் (இலைகளின் தன்மை, தண்டின் தன்மை ... போன்றன) அடிப்படையான வேறுபாடுகளைக் கலந்துரையாடுக.
- இவ்வாறான போசாக்கான உணவுகளை உணவு வேளையுடன் சேர்த்துக் கொள்ளாமையால் ஏற்படும் போசணைக்குறைபாடுகளைக் காட்டுவதற்காகப் பொருத்தமான படங்கள், சித்திரம், வீடியோ காட்சிகளைப் பெறுக.
- அவற்றைப் பயன்படுத்தி, கீரை வகைகளை உணவாக உட்கொள்வதால் ஏற்படத்தக்க நிலைமைகள் பற்றிக் கலந்துரையாடுக.

  உ-ம்:
    - கண் பார்வைக்கு
    - தோல்/ சருமம் அழகுபெறுவதற்கு
    - ஆரோக்கியமான தலைமயிர் பெறுவதற்கு
    - ஞாபக சக்திக்கு/ நினைவாற்றலுக்கு
    - உடலுக்குத் தேவையான ஏனைய விற்றமின் வகைகளைப் பெறுவதற்கு
- இதற்கமைய நாளாந்த உணவு வேளைகளில் கீரை வகைகளையும் சேர்த்துக் கொள்வதன் அவசியத்தை எடுத்துக்காட்டுக.

DRAFT

செயற்பாடு - **II**

- ஆக்கபூர்வமாக கீரைத்தட்டொன்றைத் தயாரிப்பதற்காக மாணவரைப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- வகுப்பு மாணவரைச் சில குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு பிரிஸ்டல் அட்டை வழங்குக.
- தேடிப்பெற்ற கீரை வகைகள் ஒவ்வொன்றினதும் சில தண்டுத்துண்டுகளை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குக.
- பிரிஸ்டல் அட்டை மீது ஒரு தட்டுப்போன்று (வட்டில்) வரைந்து பகிர்ந்தளித்த கீரை வகைத் தண்டுகளை செலோரேப் அல்லது பசை இட்டு அல்லது வேறு ஒட்டு பொருள் இட்டு ஒட்டுவதற்குச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரது ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.

செயற்பாடு - **III**

- பகல் உணவுக்காக சோறு கொண்டுவரும்படி முன்னைய தினத்தில் மாணவர்க்கு அறிவிக்குக.
- உணவாக உட்கொள்ளப்படும் கீரை வகைகளுள் தாம் பெரிதும் விரும்பும் கீரை வகை எது என மாணவர் ஒவ்வொருவரிடமும் வினவுக.
- மாணவரது விருப்புக்கேற்ப கீரை வகையொன்றினைத் தீர்மானித்து பாடசாலையில் கீரை வறை/ கீரைச் சுண்டல்/ கீரைச் சலாது ஒன்றினைப் பெற்றாரின் துணையுடன் தயாரிப்பதற்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்து கொள்க.
- மாணவனது உதவியுடன் கீரை வகையை ஒடித்துச் சுத்திகரித்துக் கொள்க.
- கீரை வகைகளை சில தடவைகள் நன்றாக அலசிக் கழுவுதல் வேண்டும் எனவும் அவ்வாறு கழுவும் போது அந்நீருடன் சிறிதளவு உப்பு சேர்ப்பதால் அவற்றில் இருக்கக் கூடிய, எமது உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடியயவற்றை பெருமளவுக்கு நீக்கிக் கொள்ளலாம் என்பதை மாணவர்க்கு விளக்குக.
- மாணவரது துணையுடன் கீரைச் சலாதை/ கீரை வறையை/ கீரைச் சுண்டலைத் தயாரிக்குக. (மாணவரது பாதுகாப்புக் குறித்துக் கவனஞ் செலுத்துக.)
- சலாதை அல்லது வறுவலை ஆக்கபூர்வமாகப் பரிமாறுவது குறித்துக் கவனஞ் செலுத்துக.
- வீட்டில் தயாரித்து பாடசாலைக்கு எடுத்து வந்த உணவுடன் கீரை வறையை அல்லது சலாதையும் சேர்த்து உண்ணுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவர்கள் பகல் உணவுக்காகச் சோற்றுடன் கீரையும் கொண்டுவரும் தினங்களில் அச்சோற்றுடன் கீரையைச் சேர்த்து உட்கொள்கின்றனரா என்பது குறித்துப் பரிசீலிக்குக.
- பாடசாலையில் பகல் உணவுடன் கீரை வகைகளைச் சேர்த்துக் கொண்டுள்ள மாணவரை மேலும் ஆர்வமூட்டுவதற்காகவும் ஏனைய மாணவரிடத்திலும் அவ்வாறான ஆர்வத்தை ஏற்படுத்துவதற்காகவும் நட்சத்திரம் சிரித்த முகம் வழங்கும் வேலைத்திட்டமொன்றை ஒழுங்கு செய்க.
- மாதத்தின் இறுதியில் அதிக நட்சத்திரங்களை/ சிரித்த முகங்களைப் பெற்ற மாணவரைப் பாராட்டுக.

செயற்பாடு - **IV**

- சுற்றப்புறச் சூழலில் பெறக்கூடிய நம்நாட்டுப் பழ வகைகளைக் கொண்டு வருமாறு முன்னைய தினமொன்றில் மாணவர்க்கு அறிவிக்குக.

  உ-ம்: பலாப்பழம், கருக்காய், கிண்ணை, சீதாப்பழம், இராம்பழம், நாவல்பழம், வெரலு, லொவி, அம்பரெல்லா, நட்சத்திரப்பழம் ... போன்ற
- அப்பழ வகைகளை நன்கு கழுவிச் சுத்திகரித்துக் கொள்க.
- அவற்றை வெவ்வேறாகப் பாத்திரங்களில் இட்டு, பழங்களின் பெயர் எழுதிய அட்டைகளைப் பாத்திரத்தின் முன்னே வைத்து மாணவர்க்கு அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- இவ்வாறான பழங்களை உணவாக உண்பதன் முக்கியத்துவம் பற்றி உரையாடுக.

  உ-ம்: - ஆரோக்கிய வாழ்க்கைக்காக

  - உடல் சக்தி வளர்ச்சிக்காக .... போன்றவை
- நாளாந்தம் நாம் உண்ணும் ஒவ்வொரு உணவு வேளையின்போதும் பழ வகைகளைச் சேர்ததுக் கொள்வதன் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்துக.
- மேலும் நாம் நிதமும் உணவாக உட்கொள்ளும் பழ வகைகளுக்குப் பதிலாக சுற்றுப் புறச் சூழலில் இருந்து பெறக்கூடிய சுத்தமான சுவையான நலம்தரும் பழ வகைகள் பல உள்ளன என்பதையும் அவற்றை உணவாக உட்கொள்வது மிகப் பொருத்தமானது என்பதையும் மாணவர்க்கு எடுத்துக்காட்டுக.
- சேகரித்த பழ வகைகளை மாணவர்க்கு உண்பதற்குக் கொடுக்குக.
- சுற்றப்புறத்தில் இருந்து பெற்ற பழ வகைகளைப் பயன்படுத்தி வளர்ந்தோரின் உதவியுடன் பழக்கலவையொன்று அல்லது பழச்சாற்றுப் பானமொன்று தயாரித்துக் கொள்க.
- தயாரித்த பழக்கலவையை/ பழச்சாற்றுப் பானத்தைச் சுவைப்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

செயற்பாடு - **V**

- உணவுகள் வீண்விரயமாகும் வழிகள் பற்றி மாணவரது அனுபவங்களின் வழியே உரையாடுக.

  உ-ம்:
  - அன்றாடம் வீட்டில் உணவு வீண்விரயமாகும் வழிகள்
  - அன்னதான நிகழ்வுகளின்போது உணவு வீண்விரயமாகும் வழிகள்
  - வெவ்வேறு உற்சவங்களின்போது உணவு வீண்விரயமாகும் வழிகள்
- வகுப்பறையில் உணவு உண்ட பின்னர் மாணவர் மீதியாக விட்டு வைக்கும் உணவு முழுவதையும் ஒரு பெரிய பாத்திரத்தில் இட்டு எவ்வளவு உணவு வீண் விரயமாகின்றது என்பதை மாணவர்க்குக் காட்டுக.
- அதன் வழியே உணவை விண் விரயமாக்குதலாகாது என்பது குறித்து மாணவரது கவனத்தை ஈர்க்குக.
- வெவ்வேறு உணவு வகைகளைச் செய்கை பண்ணுவதற்காக மனிதர்கள் கஷ்டப்பட்டு உழைக்கும் விதம் பற்றி மாணவருடன் உரையாடுக.

  உ-ம்: நெற்பயிர்ச் செய்கைக்காக

DRAFT


- உணவு செய்கை பண்ணுவதற்காக நிலம் பண்படுத்துவது தொடக்கம் விளைபொருளை அறுவடை செய்யும் வரையிலான செய்கைகளுக்காகக் கஷ்டப்படும் விதத்தை விளக்குக.
- உணவு உற்பத்தி செய்வதற்காக, அக்கருமங்களில் ஈடுபடுவோர், அதிக கஷ்டப்பட்டு உழைப்பதாகவும் அதற்காக அதிக தொகைப் பணத்தைச் செலவு செய்வதாகவும் எடுத்துக்காட்டி நாம் இயன்ற அளவுக்கு உணவு வீண்விரயத்தைத் தவிர்த்து உணவு நுகர வேண்டும் என்பதையும் மாணவர்க்கு எடுத்துக்காட்டுக.
- இதற்காக, வசதி உள்ளதாயின் பொருத்தமான படங்கள், சித்திரங்கள், வீடியோக் காட்சிகள் போன்றவற்றைப் பயன்படுத்துக.
- உணவு இல்லாமை காரணமாக மனிதர் அவதியுறுவதைக் காட்டும் ஒளிப்படங்கள், வீடியோக்காட்சிகளை மாணவர்க்குக்காட்டி அவர்களின்பால் மாணவரது உள்ளத்தில் (பரிவுணர்வு) உணர்தன்மை வெளிப்படுமாறு உரையாடுக.
- அதற்கமைய உணவு உட்கொள்ளும் போது உணவு வீண்விரயமாகாதவாறு செயற்பட வேண்டிய விதத்தை விளக்குக.

  உ-ம்:

  - உணவு பரிமாறிக்கொள்ளும்போது தமக்குப் போதுமான அளவுக்கு மாத்திரம் எடுத்துக் கொள்ளல்
  - பிராணிகள் காரணமாக மாசடையாதவாறு/ சேதமுறாதவாறு உணவைப் பாதுகாப்பாக வைத்தல்

செயற்பாடு - **VI**

- போசாக்கான உணவு தொடர்பான அனுபவங்களைப் பெறுவதற்காக மாணவரைப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- வகுப்பு மாணவர்களை சில குழுக்களாகப் பிரிக்குக.
- குழுவுக்கு ஒன்று வீதம் உணவு உண்ணும் தட்டொன்றின் அல்லது பீங்கான் அல்லது கோப்பையொன்றின் படம் வரையப்பட்ட பிரிஸ்டல் அட்டைகளைப் பகிர்ந்தளிக்குக.
- படத்தில் காட்டியுள்ளவாறு அவ்வுணவுத் தட்டுடன் வெவ்வேறு இடங்களில் பின்வரும் உணவு வகைகளின் பெயரை எழுதுக.



- இச்செயற்பாடடில் ஈடுபடுத்துவதற்காக குழுவுக்கு ஒன்று வீதம் பின்வரும் உணவுப் பொருள்களின் படம் அடங்கிய அட்டைகளைத் தயாரித்துக்கொள்க.

  உ-ம்:

  - மீன்/ முட்டைப் படம் - 4
  - கீரை வகைப் படம் - 4
  - தானிய வகைப்படம் - 4
  - சோறு அடங்கிய படம் - 4
  - காய்கறிவகை படம் - 4

DRAFT

- இந்த எல்லாப் படங்களையும் ஒரு பாத்திரத்தில் இட்டு வகுப்பின் மத்தியில் வைக்குக.
- வழங்கப்படும் சமிக்ஞையின்படி மேற்படி உணவு வகைகளுள் ஒன்றை எடுத்து தமது குழுவுக்கு வழங்கப்பட்ட பீங்கான் அல்லது தட்டுப் படத்தில் ஒட்டுமாறு வழிப்படுத்துக.
- அதற்கமைய போசாக்கான ஓர் உணவுத் தட்டு தயாரிக்குமாறு மாணவரை வழப்படுத்துக.
- சரியாகச் செயற்பாட்டைப் பூர்த்தி செய்யும் குழுவைப்பாராட்டுக.
- பின்னர் அந்தந்த உணவுத் தட்டின் தன்மை பற்றியும் அவற்றின் போசாக்குப் பற்றியும் மாணவருடன் உரையாடுக.
- போசாக்கான உணவை உண்ணுவதன் மூலம் நாள் நாளாந்தம் செய்யும் வேலைகளைச் செய்வதற்குத் தேவையான சக்தி கிடைக்கின்றது என்பதையும் நோய்களிலிருந்து தவிர்ந்து வாழ முடிகின்றது எனவும் வலியுறுத்துக.
- போசாக்கான வேளை உணவைப் போதுமான அளவுக்கு உண்பதற்கு, நாளாந்தம் உணவு உண்ட பின்னர் பழவகையொன்றினை உண்பது முக்கியமானது எனவும் வலியுறுத்துக.
- நாளாந்தம் சுத்தமான நீரைப் போதிய அளவுக்குப் பருகுதல் வேண்டும் எனவும் வலியுறுத்துக. போதுமான நீர் பருகாதவிடத்து நோய்கள், கோளாறுகள் ஏற்பட இடமுண்டு என்பதையும் விளக்குக.

**செயற்பாடு - VII**

- எமக்கு உணவு காரணமாக ஏற்படக்கூடிய நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக பின்பற்ற வேண்டிய உணவுப் பழக்கங்கள் பற்றி வலியுறுத்துவதற்கான பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடல் மூலம் விளக்குக.

  உ-ம்:
  - அதிக இனிப்பான உணவுகள் அதிகம் உப்பு அடங்கியுள்ள உணவுகள், அதிகம் எண்ணெய் அடங்கியுள்ள உணவுகளை உட்கொள்ளுவதைக் கட்டுப்படுத்தல்
  - இனிப்பான உணவு உண்ட பின்னர் வாயை நன்கு சுத்திகரித்தல்
  - நிலத்தில் விழுந்த உணவாயின் (பழவகை) நன்கு கழுவிய பின்னர் உண்ணுதல்
  - பிராணிகள் உண்டு மீதியாக உள்ள பழங்களை உட்கொள்வதைத் தவிர்த்தல்
  - உடன் உணவுகள் (Fast food) உட்கொள்வதை இயன்ற அளவுக்குக் கட்டுப்படுத்தல் அல்லது குறைத்தல்
- தவறான உணவுப்பழக்கங்கள் காரணமாக பல்வேறு நோய்கள் மனிதனுக்கு ஏற்படும் என்பதை மாணவர்க்கு எடுத்துக்காட்டுக.

  உ-ம்:
  - அதிகம் கொழுத்த உடல்
  - அதிகம் மெலிந்த உடல்
  - வாய் சார்ந்த நோய்கள்
  - இரைப்பை (வயிற்று) நோய்கள்
  - நீரிழிவு
- இவ்வாறான நோய்கள் காரணமாக எமது நாளாந்தக் கருமங்கள் சீர்குலைதல், கற்றல் கருமங்கள் தடைப்படல் போன்ற நிலைமைகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதை மாணவர்க்கு எடுத்துக் காட்டுக.

DRAFT

- எனவே, நாம் எமது வாழ்க்கைக் காலம் முழுவதிலும் நல்ல உணவுப் பழக்கங்களைப் பின்பற்றுதல் வேண்டும் என்பதையும் இயலுமான எல்லாச் சநதர்ப்பங்களிலும் அப்பழக்கங்களைப் பின்பற்றுவதன் மூலம் நாம் எமது உடலை ஆரோக்கியமாகப் பேணலாம் என்பதையும் எடுத்துக்காட்டுக.

**செயற்பாடு - VIII**

- தாம் விரும்பும் ஒரு காய்கறி வகையின் அல்லது பழவகையின் மாதிரியொன்றினை ஆக்குவதற்காகப் பொருத்தமான ஒரு களி வகையைக் கொண்டுவருமாறு அறிவுறுத்துக.
- அக்களியைப் பயன்படுத்தி தாம் விரும்பிய காய்கறியின் பழத்தின் மாதிரி உருவை ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மாணவர் ஆக்கிய ஆக்கங்களை இளங்காற்றில் உலரவிட்டுச் சாயம் (Non toxic) பூசுமாறு வழிப்படுத்துக.
- மேலே பயன்படுத்திய வர்ணச் சாயத்தைப் பயன்படுத்தி, அரித்தெடுத்த மென்மணலுக்கு நிறமூட்டி, அதனைக் கடதாசியொன்றில் பரப்பி, ஆக்கிய ஆக்கத்தின் மீது பசை தடவி ஆக்கத்தின் மீது தூவுமாறு அறிவுறுத்துக.
- மாணவரது ஆக்கங்களைப் பாராட்டுக.
- ஆக்கங்கள் எல்லாவற்றையும் சேர்த்துக் கண்காட்சி நடத்துக.

**செயற்பாடு - IX**

- உணவுகள் மூலம் கிடைக்கும் போசாக்கு மற்றும் நல்ல உணவுப் பழக்கங்கள் பற்றிக் கூறும் படங்கள் அல்லது கவிதைகள் அல்லது “றபான்” பாடல்களை/ ஆக்கிய பாடல்களைத் திரட்டுக.

  உ-ம்:

**உணவு**

**பாண், பணிஸ், வடை**
**பல நோய்கனை எமக்கு தந்திடுமே**

**புடிங் கேக் லட்டு பூந்தி**
**பற்களை நன்கு பாதிக்குமே**

**சோறு காய்கறி பழங்கள்**
**சக்தியை எப்போதும் தந்திடுமே**

- அப்பாடல்களை மாணவருடன் சேர்ந்து தாள லயத்துடன் பாடுக.
- பாடும்போது பொருத்தமானவாறு புத்தளிப்பு வாத்தியக்கருவிகளைப் பயன்படுத்துக.

DRAFT

செயற்பாடு - **X**

- மாணவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று வீதம் ஏறத்தாழ ஒரு மீற்றர் நீளமான மெழுகுச்சீலை அல்லது பாய் போன்றதொன்றைப் பெறுக.
- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்று இருவரிருவராக முகத்தை முகம் நோக்கி (எதிரெதிரே) அமரச் செய்க.
- கால்களை விரித்து ஒரு மாணவனின் வலது பாதம் மற்றைய மாணவனின் இடது பாதத்திலம் அம்மாணவனின் இடதுபாதம் மற்றைய மாணவனின் வலது பாதத்திலும் தொடுமாறு வைத்திருத்தல் வேண்டும்.
- கைகளைப் பற்றிப்பிடித்து கைகளைத் தள்ளி ஆடுமாறு கூறுக.

சமூக ஒருங்கிணைப்பு எண்ணக் கருவுக்கென எழுதப்பட்டுள்ள சிறுவர் கதைத் தொகுப்பில் **"நாம் மாத்திரந்தானா?"** என்னும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக.

DRAFT

## 08 கருப்பொருள்: தகவல்கள் கிடைக்கும் வழிகள்

**தேர்ச்சி** :-

- தொடர்பாடலின்போது பயன்படுத்தும் வெவ்வேறு ஊடகங்களை இனங்கண்டு அவற்றைச் சரியாகக் கையாள்வார்.
- தொடர்பாடல் சார்ந்த தொழினுட்ப சாதனங்களைப் பயன்படுத்தும் திறனை வெளிப்படுத்துவார்.
- தொடர்பாடலின்போது மரியாதையாக நடந்து கொள்வார்.
- தகவல் தொடர்பாடல் சார்ந்த பல்வேறு ஆக்கங்கள் புரிவார்.
- வெவ்வேறு சமிக்ஞைகளுக்கு எதிர்வினை காட்டியவாறு அசைவு/ இயக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- வெவ்வேறு தொடர்பாடல் வழிகளைக் கையாண்டு கருத்து வெளிப்பாட்டு அசைவுகளையுள்ளடக்கிய செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

**கற்றற் பேறுகள்** :-

- தகவல்களைச் சரியாகப் பெறும் மற்றும் வழங்கும் திறன்களை வெளிப்படுத்துவார்.
- குரலையும் மெய்ந்நிலைகளையும்/ அங்க அசைவுகளையும் பொருத்தமானவாறு பயன்படுத்தி கருத்துக்களையும் உணர்வு களையும் சரியாக வெளிப்படுத்துவார்.
- தகவல் பெறுவதற்கும் தகவல் வழங்குவதற்கும் பயன்படுத்தும் வெவ்வேறு தொழினுட்பச் சாதனங்களைச் சரியாகவும் பாதுகாப்பாகவும் பயன்படுத்துவார்.
- தகவல் பெறும் போதும் தகவல் வழங்கும் போதும் மரியாதையாக நடந்து கொள்வார்.
- வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தித் தொடர்பாடல் சாதன மாதிரியுருக்களை ஆக்குவார்.
- சுவரேடுகள் உருவாக்குவதன் மூலம் பல்வேறு வெளிப்பாட்டுத்திறன்களை வெளிப்படுத்துவார்.
- சமிக்ஞைகளுக்கு அமைவாகத் துலங்கியவாறு அசைவியக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- ஊமம் (மௌன) மூலம் செய்யத்தக்க முகபாவ வெளிப்பாடுகளை தொடர்பாடலுக்காகப் பயன்படுத்திக் களிப்புறுவார்.

DRAFT

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- தகவல்களைச் சரியாகப் பெறுவதன் மற்றும் வழங்குவதன் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்வதற்காக மாணவரைப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- மாணவரை 10 - 12 பேர் அடங்கும் வகையில் வரிசைகளில் நிறுத்துக.
- யாதேனுமொரு செய்தியை ஏனைய மாணவர்களின் செவிகளில் விழாதவாறு வரிசையில் இறுதியாக இருக்கும் மாணவனிடம் கூறுக.

  உ-ம்: நான் நேற்றுக் கடைக்குப் போய் தங்கைக்கு மாலையும் எனக்கு பந்தும் கொண்டு வந்தேன்.
- ஆசிரியர் தமது காதின் அருகே கூறிய அச்செய்தியை அம்மாணவன் தனக்கு முன்னால் வரிசையில் நிற்கும் மாணவரிடமும் அம்மாணவன் தனக்கு முன்னால் நிற்கும் மாணவரிடமும் என்றவாறு வரிசையில் முதலில் நிற்கும் மாணவன் வரையில் அச்செய்தியைத் தொடர்பாடுதல் வேண்டும்.
- மாணவர் செய்தியைத் தொடர்பாடும்போது ஒரு தடவை மாத்திரமே அதைக் கூற வேண்டும்.
- இவ்வாறாகப் பொருத்தமான சில வாக்கியங்களைப் பயன்படுத்தி செயற்பாட்டை நடத்துக.
- ஆசிரியர் கூறிய செய்தியையும் வரிசையில் முதலாவது நிற்கும் மாணவனுக்குக் கிடைத்த செய்தியையும் வகுப்பில் மாணவர் அனைவரும் கேட்கத்தக்கவாறு உரத்துக் கூறுக.
- இவ்விரண்டு செய்திகளுக்கும் இடையே யாதேனும் வேறுபாடு ஏற்பட்டுள்ளதாயின், அது எவ்வாறான வேறுபாடு என்பது குறித்து உரையாடுக.
- யாதேனும் தகவலை, சிலர் ஒருவருக்கொருவர் தொடர்பாடும் போது அதில் பல்வேறு வேறுபாடுகள் இடம்பெற இடமுண்டாதலால் எப்போதும் சரியான தகவல்களைப் பெறவும் அத்தகவல்களைச் சரியாக வழங்கவும் ஆவன செய்வது மிக முக்கியமானது என்பது வலியுறுத்தப்படும் வகையில் மாணவருடன் உரையாடுக.

**செயற்பாடு - II**

- வகுப்பு மாணவரை இடவசதி உள்ள ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.
- மாணவர் இருவரை முன்னே அழைத்து அவர்களுள் ஒருவரைச் சற்று அப்பால் நிறுத்துக.
- பின்னர் யாதேனும் குறுஞ் செய்தியொன்றினை அப்பால் நிற்கும் மற்றைய மாணவரிடம் கூறுமாறு வழிப்படுத்துக.

  உ-ம்: ''இங்கே வாருங்கள்'' போன்ற குறுஞ் செய்தி
- பின்னர் கீழே உள்ளவாறு மற்றைய மாணவரை அழைக்குமாறு அப்பால் உள்ள மாணவரிடம் கூறுக.
  - குரலைத் தாழ்த்தி கையை அசைத்து வருமாறு சமிக்ஞை செய்தல்
  - குரலைப் பயன்படுத்தாது அங்க அசைவுகள் மூலம் சமிக்ஞை செய்தல்
  - குரலை உயர்த்தி கைகளை அசைத்து வருமாறு சமிக்ஞை செய்தல்
- இவற்றுள் மிகவும் சிறந்த முறை எது என மாணவரிடம் வினவுக.

DRAFT

- இதற்கமைய மூன்றாவது சந்தர்ப்பத்தில் வழங்கிய செய்தி நன்கு விளங்கியமைக்கான காரணங்களை எடுத்துக்காட்டுக.
- குரலும் அங்க அசைவுகளும் தொடர்பாடலின் போது முக்கியமானவை என்பதை இச்செயற்பாட்டின் மூலம் வலியுறுத்துக.
- தொடர்பாடலின்போது மனிதரால் பல்வேறு அங்க அசைவுகள் பயன்படுத்தப்படுகின்றமை குறித்து உரையாடுக.
- அவ்வாறக வெளிப்படுத்தும் அங்க அசைவுகள் குறித்து உதாரணங்களை எடுத்துக்காட்டி விளக்குக.

**செயற்பாடு - III**

- மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்குக.
- எமக்கு நாளாந்தம் தகவல்கள் கிடைக்கும் வெவ்வேறு வழிகள் எவை என மாணவரிடம் வினவுக.

  உ-ம்: தொலைக்காட்சி, செய்தித்தாள், வானொலி, தொலைபேசி ... போன்றன.
- இவ்வாறான சில சாதனங்களை வகுப்புக்குத் தருவித்துக் கொள்க. இல்லையேல் அவ்வாறான சாதனங்கள் காணப்படும் ஓர் இடத்துக்கு மாணவரை அழைத்துச் செல்க.
- அச்சாதனங்களைச் சரியாகப் பயன்படுத்தும் விதம் தொடர்பான மாணவர்க்கு அறிவூட்டம் செய்க.

  உதாரணம்:
  - ''செல்பேசி'' மூலம் அழைப்பு பெறும்போது பின்பற்ற வேண்டிய படிமுறைகள்
  - வானொலியைத் தொழிற்படச் செய்யும் முறையும் தொழிற்பாட்டை நிறுத்தும் முறையும் ... போன்றவை
- பின்னர் நாம் தகவல் பெறுவதற்காகப் பயன்படுத்தும் உபகரணங்களைக் கையாளும் போது மிகக் கவனமாகச் செயற்படுதல் வேண்டும் எனவும் அவ்வாறு செய்யாதவிடத்து அச்சாதனத்திற்கும் தமக்கும் தீங்குகள் விளைய இடமுண்டு என்பதையும் எடுத்துக் காட்டுக.

  உ-ம்:
  - மின்னல் வெட்டும் வேளைகளில் தொலைபேசியை பயன்படுத்துவதால் ஏற்படத்தக்க பாதிப்புக்கள் அல்லது தீங்குகள்
  - மின்னல் வெட்டும் வேளைகளில் தொலைக்காட்சிக் கருவியின் தொடர்பை துண்டிக்காது வைப்பதால் ஏற்படத்தக்க இழப்புக்கள்
  - கணினி போன்ற உபகரணங்களைப் பயன்படுத்தும்போது சரியான மெய்ந்நிலைகளைப் பேணி வராமையால் உடலில் ஏற்படத்தக்க கோளாறுகள்
- இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக மாணவரின் அனுபவங்களை வினவி பாதுகாப்பாகவும் சரியாகவும் மேற்படி தொழினுட்பச் சாதனங்களைப் பயன்படுத்தல் வேண்டும் என்பதை மாணவருக்கு எடுத்துக்காட்டுக.

DRAFT

செயற்பாடு - **IV**

- வகுப்பறையில் சுவரேடொன்று (சுவர்ப்பத்திரிகை) நடத்திவருவதற்குப் பொருத்தமான ஓர் இடத்தை தயார்ப்படுத்திக் கொள்க.
- மாணவர் ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் வகையிலும் மாணவரது உள்ளார்ந்த ஆக்கத்திறன்கள் வெளிப்படும் வகையிலும் சுவரேட்டுக்கு ஆக்கங்கள் தயாரித்து முன்வைக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- அச்சுவரேட்டுக்காகப் பின்வருவன போன்ற ஆக்கங்களை முன்வைக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.

  உ-ம்:
  - எளிமையான பாடல்கள் அல்லது கவிதைகள்
  - சித்திரங்கள், ஒளிப்படங்கள்
  - ஆக்கச் செயற்பாடுகள் (ஒரிகாமி, கொலாஜ் (ஒட்டுச்சித்திரம்) ... போன்ற ஆக்கங்கள்)
- இதனை வெற்றிகரமான ஆக்கத்திரட்டாகப் பேணிவருவதற்காக ஆசிரியர் நிதமும் மேற்பார்வை செய்க.
- சுவரேட்டை வருடம் முழுவதில் நடத்திச் செல்லுமாறும் அதில் உள்ளவற்றை உசாவுமாறும் மாணவரை வழிப்படுத்துக.

செயற்பாடு - **V**

- தொடர்பாடலின் போது மரியாதையாகத் தகவல்களைப் பெறுவதன் மற்றும் வழங்குவதன் முக்கியத்துவத்தை விளக்குவதற்காகப் பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துக.
- அதற்காகப் பின்வருவன போன்ற பொருத்தமான சில கூற்றுக்களைத் தெரிவு செய்து கொள்க.

  உ-ம்:
  - பென்சிலைத் தாருங்கள்
  - அங்கு செல்லுங்கள்
  - தண்ணீர் கொஞ்சம் தாருங்கள்

- இவ்வாறான கூற்றுக்களை மேலும் மரியாதையுடன் முன்வைக்கத்தக்க விதத்தை அறிமுகஞ் செய்க.

  உ-ம்:
  - தயவு செய்து பென்சிலைத் தாருங்கள்
  - தயவு செய்து அங்கு நில்லுங்கள்
  - எனக்குக் கொஞ்சம் தண்ணீர் தருவீர்களா?
- இதற்கமைய தொடர்பாடலின்போது மரியாதையாகச் சொற்களைப் பயன்படுத்தல், குரலை மென்மையாகப் பயன்படுத்தல் போன்றவை, மற்றையவர்கள் தம்மை விரும்பக் காரணமாகும் என்பதை எடுத்துக்காட்டுக.
- இருவர் சந்திக்கும் போது இடம்பெறும் மரியாதையான ஓர் உரையாடலைச் செய்து காட்டுவதற்காக வகுப்பு மாணவரை இருவரிருவராகப் பிரிக்குக.

DRAFT

- பின்வருவது போன்ற ஓர் உரையாடலை வகுப்பு மாணவர்க்கு முன்வைக்குக.

  உ-ம்:

  நிமலன்: நான் நிமலன், உங்கள் பெயர் என்ன?

  கரீம்: நான் கரீம்

  நிமலன்: கரீம், எனது சப்பாத்து கழன்று விட்டது. தயவு செய்து இந்த புத்தகத்தைக் கொஞ்சம் வைத்துக் கொள்கிறீர்களா? (புத்தகத்தை நீட்டியவாறு)

  கரீம்: தாருங்கள், தாருங்கள் நான் வைத்துக் கொள்கின்றேன்.

  நிமலன்: சரி, புத்தகத்தைத் தாருங்கள், உங்களுக்குக் மிக்க நன்றி

  கரீம்: உங்களுக்கு உதவியது குறித்து மகிழ்ச்சியாக இருக்கிறது.

- இவ்வாறான பொருத்தமான மேலும் சில உரையாடல்களைத் தயாரித்து அவற்றை மாணவர் சோடிகளுக்கு வழங்கி உரையாடலைச் செய்து காட்டுமாறு வழிப்படுத்துக.
- சந்தர்ப்பங்களை மாற்றி மாற்றி வழங்கி, சகல மாணவருக்கும் அனுபவங்கள் பெறச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு - VI**

- வெறும் தீப்பெட்டிகள், யோகட் கிண்ணங்கள், நூல், வெறும் நூற் கூம்புகள் போன்றவற்றைப் பயன்படுத்தி பொம்மைத் தொலைபேசிகள் ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- எவரேனும் ஒருவருக்குச் செய்தியொன்றினை அல்லது தகவலொன்றினை வழங்கும்போது அல்லது ஒருவரிடமிருந்து தகவலொன்றினைப் பெறும்போது மரியாதையாகப் பேச வேண்டிய விதம் குறித்து மாணவருடன் உரையாடுக.
- மரியாதையான சொற்களைப் பயன்படுத்தல், குரலைப் பயன்படுத்த வேண்டிய விதம் ஆகிய விடயங்கள் குறித்து மாணவரின் கவனத்தை ஈர்க்குக.
- அது தொடர்பான பரிச்சயத்தைப் பெறுவதற்காகப் பின்வருவது போன்ற ஒரு தொலைபேசி உரையாடலில் மாணவரை ஈடுபடுத்துக.
- இதற்காக மாணவரை இருவரிருவராகப் பிரித்து, ஏற்கனவே தயாரித்த அல்லது ஆக்கிய பொம்மைத் தொலைபேசிகளை அவர்களுக்கு வழங்குக.
- தமது பொம்மைத் தொலைபேசியைப் பயன்படுத்தி செயற்பாட்டை நடத்துவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

  உ-ம்:

  சாந்தி : ஹலோ ... நான் சாந்தி, பாத்திமா தானே கதைக்கிறீர்கள்?

  பாத்திமா : ஆம் ... நான் பாத்திமா

  சாந்தி : நீங்கள் இன்றைக்கு பாடசாலைக்கு வருவீர்களா?

  பாத்திமா : ஆமாம், நான் பாடசாலைக்கு வருவேன்

  சாந்தி : நல்லது. தயவு செய்து உங்கள் சிறுவர் பாடல் புத்தகத்தைக் கொண்டு வருவீர்களா?

  பாத்திமா : சரி கொண்டு வாருகிறேன்

  சாந்தி : மிக்க நன்றி பாத்திமா

- மாணவரது வாழ்க்கையோடு இணைந்த பொருத்தமான சந்தர்ப்பங்களை இனங்கண்டு, இவ்வாறான சில உரையாடல்களைத் தயாரித்துக் கொள்க.

DRAFT

செயற்பாடு - **VII**

- மாணவரை இடவசதியுள்ள ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்று வட்ட வடிவில் நிறுத்துக.
- தொப்பி அல்லது பந்து அல்லது பொம்மை (பாவைப் பிள்ளை) போன்ற ஒரு பொருளைப் பெற்றுக் கொள்க.
- சிறுவர் பாடலொன்றை இசைக்குக. (இதற்காகப் பொருத்தமான ஓர் உத்தியைக் கையாள்க.)
- பாடல் ஆரம்பித்தவுடன் மேற்படி தெரிவு செய்த பொருளை (பந்து அல்லது பொம்மை) ஒருவர் பின் ஒருவராகக் கைமாற்றி அனுப்புதல் வேண்டும் என அறிவுறுத்துக.
- ஆசிரியை பாடலை இசைத்து பின் திடீரென நிறுத்தியவுடன் பொருள் (பந்து அல்லது பொம்மை அல்லது தொப்பி) யாரிடம் இருக்கிறதோ அவர் போட்டியிலிருந்து விலகுதல் வேண்டும்.
- மீண்டும் முன்னர் போன்றே பாடலை இசைத்துப் போட்டியை நடத்திச் செல்க.
- இவ்வாறாகப் பாடலை இசைத்தும் நிறுத்தியும் இறுதியாக ஒரு மாணவன் மாத்திரம் எஞ்சும் வரை போட்டியை நடத்திச் செல்க.

செயற்பாடு - **VIII**

- செல்பேசி (பைப்பேசி) அல்லது வீட்டுத் தொலைபேசி மாதிரயொன்றினை ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- அதற்காகப் பின்வரும் பொருள்களைச் சேகரித்துக் கொள்க.
- களி, கிளே, காட்போட், பசை, கத்தரிக்கோல், நிறக்கடதாசி, நீர் வர்ணம்
- மாணவரைச் சில குழுக்களாகப் பிரித்து தாம் விரும்பிய யாதேனும் ஊடகத்தை (மூலப் பொருளைப்) பயன்படுத்தச் செல்பேசி அல்லது வீட்டுத் தொலைபேசி மாதிரியொன்று ஆக்குமாறு வழிப்படுத்துக.

  உ-ம்: களி மண்ணைப் பயன்படுத்தித் தொலைபேசி ஆக்குதல்
  'கிளே' பயன்படுத்தித் தொலைபேசி ஆக்குதல்
- ஆக்கிய தொலைபேசியை நிறம் பூசி அல்லது நிறக் கடதாசித் துண்டுகள் ஒட்டி அழகுபடுத்த வழிப்படுத்துக.
- மாணவரது ஆக்கங்களைப் பாராட்டுக.

செயற்பாடு - **IX**

- ஊமமாக (மௌன) நிகழ்வொன்றினை முன்வைக்கத்தக்க விதம் குறித்து மாணவர்க்கு அறிவூட்டம் செய்க. ஆசிரியர் பின்வருவனவற்றுள் ஒரு நிகழ்வை ஊம முன்வைப்பாகச் செய்து காட்டுக.
- மாணவரை ஊம நடிப்பில் ஈடுபடுத்துவதற்குப் பொருத்தமான சில சந்தர்ப்பங்களைத் தெரிவு செய்து தனித்தனியே கடதாசித்துண்டுகளில் எழுதித் தயார்ப்படுத்திக் கொள்க.

DRAFT

உதாரணம்:

  - காலையில் எழுந்து பல்துலக்கி முகங்கழுவுதல்
  - பூப்பறித்தல்
  - வாகனமோட்டுதல்
  - சைக்கிளோட்டுதல்
  - மரத்தில் உயரத்தே உள்ள ஒரு பழத்தைப் பறித்தல்
  - தேங்காய் துருவுதல்
  - தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடுதல்

- எழுதிய கடதாசித்துண்டுகளை (சீட்டுக்களை) ஒவ்வொன்றாகச் சுருட்டி ஒரு சிறு பாத்திரத்தினுள் இட்டுக் கொள்க.
- மாணவர் ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் முன்வைப்புச் செய்யத்தக்க ஒவ்வொரு சீட்டு வீதம் வெளியே எடுத்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள செயலை வகுப்பில் செய்து காட்டுமாறு மாணவருக்கு ஊக்கமளிக்க.
- மாணவரது முன்வைப்புக்களைப் பாராட்டுக.

| |
|---|
| சமூக ஒருங்கிணைப்பு எண்ணக் கருவுக்கென எழுதப்பட்டுள்ள சிறுவர் கதைத் தொகுப்பில் **"எல்லோருக்கும் படிப்பினை"** என்னும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக. |

DRAFT

## 09 கருப்பொருள் : சுற்றுப் புறத்தில் நிகழும் மாற்றங்கள்

**தேர்ச்சி :-**

- சூழலில் நிகழும் மாற்ங்கள் மற்றும் அம்மாற்றங்களுக்கு பிராணிகள் காட்டும் எதிர்வினைகளைத் தேடியறிந்து அறிக்கைப் படுத்துவார்.
- சுற்றுப்புறச் சூழலில் பாதகமான மாற்றங்களைச் சாதகமான மாற்றங்களாக மாற்றிக் கொள்வார்.
- இயற்கைச் சூழலில் ஏற்படத்தக்க அவசர நிலைமைகள் தொடர் பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.
- சுற்றுப்புறச் சூழலின் வேறுபாடுகளின்படி செயற்படுத்தத்தக்க ஆக்கங்களைச் செய்வார்.
- சுற்றுப்புறச் சூழலில் நிகழும் மாற்றங்களின் வழியே அசைவியக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- வெளியைப் பயன்படுத்தி களிப்பூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

**கற்றற் பேறுகள் :-**

- மழை, காற்று காரணமாக சூழலில் நிகழும் மாற்றங்கள் சிலவற்றை அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.
- மழை, காற்று காரணமாக சூழலில் நிகழும் பாதகமான மாற்றங்கள் சிலவற்றை இனங்கண்டு கூறுவார்.
- மழை, காற்று காரணமாகச் சுற்றுப்புறச் சூழலில் நிகழும் பாதகமான விளைவுகளை இழிவாக்குவதில் பங்களிப்புச் செய்வார்.
- காற்றினால் இயக்கத்தக்க உபகரண்ங்க்ளை ஆக்கிப் பயன்படுத்துவார்.
- சுற்றுப்புறச் சூழலில் நிகழும் மாற்றங்களின் வழியே, உடலின் நெகிழ் தன்மை வளர்ச்சிக்குத் துணையாகும் அசைவு/ தேடல் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்கள் தொடர்பான கவிதைகள்/ பாடல்களைப் பாடியவாறு நடிப்பில் ஈடுபடுவார்.
- காற்றைத்துணையாகக் கொண்டு, நாதமெழுப்பத்தக்க உபகரணங்களை ஆக்கிப் பயன்படுத்துவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- காற்றின் வேகம் கூடதலாகவும் குறைவாகவும் உள்ள சில சந்தர்ப்பங்களில் சூழலில் ஏற்படும் மாற்றங்களை அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.

  உ-ம்: மரங்களில் இலைகள் அசையும் விதம்

  இலைகள், சருகுகள், கடதாசித் துண்டுகள் காற்றில் அடித்துச் செல்லும் விதம்

DRAFT

- மாணவரது அவதானிப்புக்களை அறிக்கைப்படுத்தச் சந்தர்ப்பமளிக்குக. காற்றின் வேகத்துக்கேற்ப ஏற்படும் மாற்றங்கள் வெவ்வேறுபட்டவையாகும் என்பதை எடுத்துக்காட்டுக.
- காற்று காரணமாக மரஞ்செடிகொடிகளில் நிகழும் மாற்றங்கள் காரணமாக சூழல் அழகு பெறுவதை எடுத்துக்காட்டும் வகையிலான அசைவியக்கங்களை முன்வைக்க மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரது அவதானிப்புக்களைச் சித்திரமாக வரையவும் வழிப்படுத்துக.

செயற்பாடு - **II**

- காற்றுக் காரணமாக கிட்டிய சூழலில் ஏற்படத்தக்க பாதகமான விளைவுகள் யாவை என வினவி மாணவருடன் உரையாடுக.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து எடுத்துக்காட்டுக.
    - மரங்களின் கிளைகள் முறிதல்
    - வீட்டுக் கூரைகளில் பொருத்தப்பட்டுள்ள வேய் தகடுகள் அல்லது கிடுகு போன்றவை காற்றால் அடித்துச் செல்லப்படல்
- பாடசாலைத் தோட்டத்தில் களப்பிரயாணத்தில் ஈடுபட்டு அவதானித்து, காற்று காரணமாக யாதேனும் பாதகமான விளைவு ஏற்படத்தக்க இடங்கள் உள்ளனவாயின் அவற்றை இனங்காணச் சந்தர்ப்பமளிக்குக.

  உ-ம்:
    - காற்றுக் காரணமாக யாதேனும் பாதகமான விளைவை ஏற்படுத்தத்தக்க ஒரு மரம்
    - காற்று காரணமாக யாதேனும் பாதகமான விளைவை ஏற்படுத்தத்தக்க கட்டடங்கள், கதவு, யன்னல்கள்
- இவ்வாறான இடங்களில் நிகழத்தக்க தடங்கல்கள், விபத்துக்களில் இருந்து பாதுகாப்பு பெறத்தக்க விதத்தையும் அதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் பற்றி மாணவருடன் உரையாடுக.
- மாணவரின் பங்களிப்புடன் யாதேனும் மாற்றத்தை ஏற்படுத்தத்தக்க ஓர் இடம் உள்ளதாயின் அந்த இடத்தைக் காற்றினால் பாதிப்பு, சேதம், விபத்து நிகழாத ஓர் இடமாக மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குக.

செயற்பாடு - **III**

- பொருத்தமான ஒரு சந்தர்ப்பத்தில் காற்றினால் சூழலில் ஏற்பட்ட பாதகமான தாக்கங்கள் பற்றிக் கண்டறிவதற்காக அவதானிப்பில் ஈடுபடுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- அதற்கமைய, சூழலில் நிகழ்ந்துள்ள மாற்றங்களை இனங்காண்க.

  உ-ம்:
    - இலைகள் விழுந்திருத்தல்
    - மரங்களின் கிளைகள் முறிந்திருத்தல்
    - கூரைக்குச் சேதம் ஏற்பட்டிருத்தல்
    - பூஞ்செடிகள் சரிந்து விழுந்திருத்ல், மரங்கள் விழுந்திருத்தல்




DRAFT

- யன்னல்கள் கதவுகள் காற்றுக் காரணமாக வேகமாக மூடுவதால் சேதத்துக்கு உள்ளாதல்

- காற்றின் தன்மையின்படி, சுற்றாடலில் நிகழும் தாக்கங்கள், கூடுதலானதாகவோ குறைவானதாகவோ இருக்கலாம் என்பதை எடுத்துக்காட்டுக.
- மரங்களின் இலைகள், அருகிலும் தூரத்திலும் விழுந்துள்ள விதத்தை அவதானிக்க வழிப்படுத்துக. அதற்கான காரணம் வீசிய காற்றாகும் என விளக்குக.
- எனவே காற்றின் தாக்கத்தால் சூழலில் வெவ்வேறு அளவிலான பாதிப்பு ஏற்படுகின்றமையை எடுத்துக் காட்டுக.

செயற்பாடு - **IV**

- ஈர்க்குகள் அல்லது பானக்குழாய்கள், கிளே ஆகியவற்றைப் பயன்படுத்தி படத்தில் காட்டியுள்ளவாறு வெவ்வேறு வடிவ, வெவ்வேறு உயரமுள்ள தூண் போன்ற ஆக்கங்கள் அல்லது அமைப்புக்கள் சில செய்யுமாறு மாணவர் குழுக்களை வழிப்படுத்துக.



- இதற்காக எல்லாக் குழுக்களுக்கும் ஈர்க்குத் துண்டுகள் அல்லது பானக்குழாய்கள் 20 - 25 உம் போதுமான அளவு கிளேயும் வழங்குக.
- மாணவர்கள் ஆக்கிய ஒவ்வோர் அமைப்பிலும் உச்சியில் கடதாசி செலேபேன் தாள் அல்லது மெழுகுத்தாள் போன்ற வெவ்வேறு நிறத்தாள்களினால் வெவ்வேறு அளவும் வடிவமும் கொண்ட கொடி ஒன்றை அல்லது கொடிகள் சிலவற்றைப் பொருத்துக.
- காற்று வீசும் ஓர் இடத்தில் அல்லது இயங்கும் மின் விசிறி ஒன்றின் எதிரே அவ்வமைப்புக்களை வைத்து காற்றில் சரிந்து விழாது நீண்ட நேரம் இருக்கும் தூண் களைத் தெரிவு செய்க.
- அதற்கமைய பின்வரும் விடயங்களின்பால் மாணவரது கவனத்தை ஈர்த்து உரையாடுக. உ-ம்:
    - காற்று வீசும்போது அதிக நேரத்துக்கு விழாமல் இருந்த அமைப்பு எது
    - எத்தனை கொடிகள் இருந்த தூண் விரைவில் விழுந்தது
    - விரைவில் விழுந்த தூணில் வடிவம் யாது? உயரம் யாது?
    - காற்று வீசும்போது யாதேனும் அமைப்பு, விழாது இருந்தாயின் அதற்கான காரணங்கள் எவையாக இருக்கலாம்?

செயற்பாடு - **V**

- மழை பெய்த பின்னர் சுற்றுப்புறச் சூழலை அவதானிப்பதற்காக மாணவரை பாதுகாப்பாக அழைத்துச் செல்க.
- மழை காரணமாக மண் கழுவிச் செல்லப்பட்டுள்ள இடங்கள், நீர் தேங்கி நிற்கும் இடங்கள், பாசி வளர்ந்துள்ள இடங்கள் கட்டடங்களில் ஒழுகும் இடங்கள் போன்றவற்றைச் சுட்டிக்காட்டிக் களப்பிரயாணத்தில் ஈடுபடுத்துக.

- கல்வேலி அமைந்துள்ள இடங்கள், புல் வளர்ந்துள்ள இடங்கள், மண் திறந்த நிலையில் உள்ள இடங்கள் போன்ற வெவ்வேறு இடங்களில் மண் கழுவிச் செல்லலை ஒப்பிட்டு உரையாடுக.
- பொலித்தீன் உறைகள், வேறு கழிவுப்பொருள்கள் காரணமாக வடிகான்களில் நீர் வடிந்து செல்லல் தடைப்பட்டுள்ள விதத்தை அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- வகுப்பறைக்கு அல்லது வீட்டுக்கு அல்லது வீட்டுத் தோட்டத்துக்கு மழை காரணமாக ஏற்படும் பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்காகச் செய்யத்தக்கவை பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.
- மாணவரது பாதுகாப்புத் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி, இயன்ற அளவுக்கு அந்த இடங்களில் மழை காரணமாக ஏற்படும் பாதகமான தாக்கங்களைக் குறைக்கத்தக்கவாறான செயற்பாடுகளில் ஈடுபட மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

  உ-ம்: புற்பாளங்கள் பதித்தல், கல்வேலி அமைத்தல்

**செயற்பாடு - VI**

- மழை, காற்று போன்ற சந்தர்ப்பங்களைக் காட்டுவதற்காகச் சுயாதீனமாக சித்திரங்கள் வரையச் சந்தர்ப்பமளிக்குக.
- மழை, காற்று காரணமாக நிகழத்தக்க பாதிப்புக்கள் மற்றும் அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகளை எழுதிய சில அட்டைகளைத் தயாரித்துக் கொள்க.

குடை பயன்படுத்தல் | கல்வேலி அமைத்தல் | மழை மேலங்கி அணிதல்

வீடுகளுக்குக் கூரை அமைத்தல் | கூரையில் பூச்சுப் பூசுதல்

மரக்கன்றுகளுக்கு ஆதாரத் தடி அமைத்தல் | பலகைகளில் எரி எண்ணெய் பூசுதல்

மரங்களின் ஆபத்தான கிளைகளைத் தறித்தல் | புற்பாளங்கள் பதித்தல்

மழைநீர் வடிந்தோடும் வடிகால்கள் அமைத்தல்

யன்னல்கள் அல்லது கதவுகள் காற்றினால் மூடித்திறப்பதைத் தடுப்பதற்காகத் தாழிடல்/ பாரம் வைத்தல்

- தயார்ப்படுத்திய அட்டைகளை அத்தாளில் பொருத்தமானவாறு ஒட்டுமாறு மாணவரை வழிப்படுத்துக.

DRAFT

- டிமை கடதாசியொன்றில் பின்வருவது போன்ற ஓர் அட்டவணையைத் தயாரித்துக் கொள்க.

| மழையினால் அல்லது காற்றினால் ஏற்படும் பாதிப்புக்கள் | மழையிலிருந்து அல்லது காற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகச் செய்ய வேண்டியவை |
|---|---|
| | |

- அதற்கமைய மழையினாலும் காற்றினாலும் ஏற்படும் பாதிப்புக்களை இயன்ற அளவுக்குக் குறைப்பதற்காக நாம் பல்வேறு உத்திகளைக் கையாளலாம் என்பதை மாணவர்க்கு விளக்குக.

### செயற்பாடு - VII

- வெயில், மழை, காற்றுக் காரணமாக சுற்றுப்புறச் சூழலில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பாக அசைவியக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுமாறு மாணவரை வழிப்படுத்துக.

  உ-ம்:
  - இளங்காற்று உள்ளபோது மரங்கள் அசைவது போன்று தாமும் அசைதல்
  - படிப்படியாக காற்று அதிகரிக்கும்போது மரங்கள் அசைவது போன்று தாமும் அசைதல்
  - மழைத்தூறல் போன்று மெதுவாகத் துள்ளுதல்
  - மழை படிப்படியாக அதிகரிப்பது போன்ற படிப்படியாக வேகத்தை அதிகரித்தல்
  - சூரியன் உதிக்கும்போது பூவொன்று மலரும் விதத்தையும் சூரியன் மறையும் போது பூவொன்று சுருங்கும் விதத்தையும் காட்டுதல்
  - மாணவரை மழை - காற்று என இரண்டு குழுக்களாகப் பிரித்து மழை பெய்கின்றது எனக் கூறியவுடன் ‘‘மழை’’ குழுவினரும் காற்று வீசுகிறது எனக் கூறியவுடன் ‘‘காற்று’’ குழுவினரும் குறித்த அசைவியக்கங்களைக் காட்டியவாறு செயற்பாடுகளில் ஈடுபட வழிப்படுத்துக.
- குழுக்களை மாற்றி மேற்படி செயற்பாட்டை மீளச் செய்யச் சந்தர்ப்பமளிக்குக.

### செயற்பாடு - VIII

- ‘‘பலூன் ரொக்கட்’’ செய்வதற்குத் தேவையான சில பொருள்களைச் சேகரித்துக் கொள்ளுமாறு மாணவரை வழிப்படுத்துக.

  உ-ம்: பலூன், நூல், பானக்குழாய், செலோடேப் (பசை நாடா)
- மாணவரை திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்று பின்வருவது போன்ற ஒரு பலூன் ரொக்கட்டை செய்யுமாறு மாணவர் குழுக்களை வழிப்படுத்துக.
- ஊதிய பலூன்மீது பானக் குழாயொன்றினை ஒட்டி, பானக் குழாயின் ஊடாக நூலொன்றைச் செலுத்துக.

DRAFT

- படத்தில் காட்டியுள்ளவாறு நூலின் இரண்டு அந்தங்களையும் இரண்டு இடங்களில் இணைக்க வழிப்படுத்துக.
- பலூனின் மூடிக்கட்டியுள்ள வாயைத் திடீரென அவிழ்த்து அல்லது வெட்டி நிகழுபவற்றை அவதானிக்க வழிப்படுத்துக.
- நூலின் அந்தங்களை வெவ்வேறு அளவு சாய்வாக இணைத்து அதிக வேகத்தில் பலூன் ரொக்கட்டைச் செலுத்தக்கூடிய சந்தர்ப்பத்தைக் கண்டறியுமாறு மாணவரை வழிப்படுத்துக.





- வெவ்வேறு அளவுடைய பலூன்களைப் பயன்படுத்தி இச் செயற்பாட்டை நடத்தி வேறுபாடுகளை இனங்காணச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு - IX**

- காற்றின் துணையுடன் ஒலியெழுப்பக் கூடிய உபகரணங்கள் ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.

  உ-ம்:
  - வெறும் பேனைக் குழாயொன்றை, பலூனொன்றுடன் இணைத்து ஒலியெழுப்பக் கூடிய ஓர் ஊதியை ஆக்கும் விதம்
  - வெறும் பேனைக் குழாயின் ஏறத்தாழ இரண்டு சென்ரி மீற்றர் அளவை பலூனின் உள்ளே புகுத்தி, அதனை நன்கு இறுக்கமாகக் கட்டிக் கொள்க.
  - பேனைக்குழாயின் மூலம் பலூனில் காற்று நிரப்புக.
- பலூனில் நிரப்பிய காற்றை வெளியேற விடுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- மீண்டும் பலூனில் காற்று நிரப்பி, முன்னர் எழுப்பிய ஒலியை விட வேறுபட்ட ஒலிகளை எழுப்புவதற்கு என்ன செய்யலாம் என மாணவரிடம் வினவுக.

  உ-ம்:
  - காற்று வெளியேறும் துவாரத்தைத் திறத்தல் மூடுதல்
  - காற்று வெளியேறும் துவாரத்தை பாதியளவு திறத்தல்
  - வெவ்வேறு அளவுள்ள பேனைக்குழாய்கள் பயன்படுத்தல்



- மாணவர் முன்வைக்கும் கருத்துக்களைக் கையாண்டு பார்ப்பதற்குச் சந்தர்ப்பமளிக்குக.
- குருத்தோலை ஊதி அல்லது பனையோலை ஊதி அல்லது தென்னோலை ஊதி அல்லது பூவரசம் இலை ஊதி செய்ய மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- வெவ்வேறு ஒலிகளைப் பிறப்பிக்கத்தக்க கையாண்டு பார்த்தல்களைச் செய்யுமாறும் மாணவரை ஈடுபடுத்துக.

| |
|---|
| சமூக ஒருங்கிணைப்பு எண்ணக் கருவுக்கென எழுதப்பட்டுள்ள சிறுவர் கதைத் தொகுப்பில் **"மேகங்களின் கெட்டித்தனம்"** என்னும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக. |

DRAFT

## 10 கருப்பொருள்: எமது நல்வாழ்வு

**தேர்ச்சி** :-

- நன்கு ஒழுங்கமைந்து செயற்படுவதன் மூலம் தமது கருமங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வார்.
- நற்பண்புகளை மதித்து அப்பண்புகளைப் பேணிவர ஆவன செய்வார்.
- பொறுப்புக்களை நிறைவேற்றியவாறு பொதுக் கருமங்களில் பங்களிப்புச் செய்வார்.
- நல்வாழ்க்கைக்குரிய சட்டதிட்டங்களை ஏற்று, அச்சட்ட திட்டங்களை மதித்து நடந்து கொள்வார்.
- நற்பழக்கங்களைப் பேணிவரத் துணையாகும் வகையிலான ஆக்கங்கள் புரிவார்.
- உடல், உள தகைமையைப் பேணிவருவதற்குத் துணையாகும் ஆக்கங்களில் ஈடுபடுவார்.
- களிப்பூட்டும் அணுகுமுறைகளைக் கையாண்டு நல்ல நடத்தைகளை வெளிக்காட்டுவார்.

**கற்றற் பேறுகள்** :-

- பாடசாலையில் தமது அன்றாடக் கருமங்களை ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் பேணிவருவார்.
- வகுப்பறையிலும் பாடசாலையிலும் ஒப்படைக்கப்படும் வேலை களை கூட்டாகச் செய்வதில் பங்களிப்பார்.
- பாடசாலைக் கருமங்களில் நல்ல நடத்தைகளை வெளிக்காட்டுவார்.
- ஏனையோருக்கு உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் தாம் முன்வந்து உதவி புரிவார்.
- வகுப்பறைச் செயற்பாடுகளில் ஈடுபடும் போது தமது தருணம் வரும்வரை இருப்பார்.
- பாடசாலைப் பொதுச் சட்டதிட்டங்களுக்கு அமைவாகச் செயற்படுவார்.
- கூட்டுணர்வும் ஒற்றுமையும் வெளிக்காட்டப்படும் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- நற்பழக்கங்கள் வெளிக்காட்டப்படும் பாடல்கள், கவிதைகளைத் திரட்டிப் பாடுவார்.
- நற்பழக்கங்களை வெளிக்காட்டும் வகிபாகமேற்று நடித்தல்களை முன்வைப்பார்.

DRAFT

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- தமது நாளாந்த வேலைகளின்போது நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் செயற்படுவதன் அவசியத்தை எடுத்துக்காட்டுவதற்காகப் பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துக.
  உ-ம்:
  - வகுப்பு மாணவரைச் சில குழுக்களாகப் பிரிக்குக.
  - மாணவர்கள் நாளாந்தம் பயன்படுத்தும் சில புத்தங்களைக் குழுவினது மேசைமீது இட்டு அப்புத்தகங்களை அவதானிக்க வழிப்படுத்துக.
- அப்புத்தகங்கள் அதிகம் அழுக்கடைந்துள்ள சேதம் அடைந்துள்ள அல்லது கசங்கியுள்ள புத்தகங்களைத் தெரிவு செய்க.
- அப்புத்தகங்களுள் உள்ள சுத்தமான நேர்த்தியான சில புத்தகங்களையும் தெரிவு செய்க.
- அதனைப் பாராட்டி, இவ்வாறாக சில புத்தகங்கள் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் காணப்படுவதற்கும் ஏனைய புத்தகங்கள் அவ்வாறு காணப்படாமைக்குமான காரணங்களை மாணவரிடம் வினவுக.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகவும் கவனஞ் செலுத்துக.
  உ-ம்:
  - புத்தகங்கள் கசங்கியிருத்தல்
  - அழுக்கடைந்திருத்தல்
  - புற அட்டை இல்லாதிருத்தல்
- இவ்வாறாகச் சில புத்தகங்கள் அழுக்கடைவதற்கு ஏதுவாகத்தக்க காரணங்கள் பற்றி மாணவருடன் உரையாடுக.
  - புத்தகங்களை அங்குமிங்கும் எறிதல்
  - மேசைமீது உள்ள தூசு அல்லது கைகளில் உள்ள அழுக்குகள் போன்றவை புத்தகங்களில் ஒட்டிக் கொள்ளல், நனைதல், பேனை, பென்சில் போன்றவற்றால் கிறுக்குதல் ... போன்றவை
- புத்தகங்களை நன்றாகப் பேணிவரும் மாணவர்களை இனங்கண்டு வகுப்பின் முன்னே அழைத்து அவர்களது புத்தகங்களைக் காட்சிப்படுத்திப் பாராட்டுக.

**செயற்பாடு - II**

- வகுப்பறையில் கற்றல் கருமங்களைச் செய்யும்போது நேர்த்தியையும் ஒழுங்கையும் பேணுவதன் அவசியத்தை எடுத்துக்காட்டுக.
- இதற்காக பின்வரும் ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் மாணவரது கவனத்தை ஈர்க்குக.
  - தமது புத்தகப்பையை வைத்துள்ள இடமும் அது வைக்கப்பட்டுள்ள விதமும்
  - தமது தண்ணீர்ப் போத்தலை வைத்துள்ள இடம்
  - வகுப்பறையில் நாளாந்தம் மாணவர் கையாளும் புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ள வேறு இடங்களும் அவை வைக்கப்பட்டுள்ள விதமும்

DRAFT

- மாணவர் பயன்படுத்தும் மேசை அல்லது வாங்கு, கதிரைகள் வைக்கப்பட்டுள்ள விதம்
- வகுப்பைச் சுத்திகரிக்கப் பயன்படும் உபகரணங்கள் வைக்கப்பட்டுள்ள இடமும் அவை வைக்கப்பட்டுள்ள விதமும்

- இவற்றை எந்த அளவுக்கு நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் பேணி வருவதன் காரணமாக தமது வகுப்பறை விருப்புக்குரிய ஓர் இடமாகவும் அழகான ஓர் இடமாகவும் மாறும் என்பதை எடுத்துக்காட்டுக.
- தமது வகுப்பை நாளாந்தம் ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் பேணிவருமாறு மாணவரை வழிப்படுத்தி அவ்வேலைகளில் ஈடுபடும் மாணவரை நிதமும் பாராட்டுக.

**செயற்பாடு - III**

- வகுப்பு அல்லது பாடசாலை வேலைகளின்போது மாணவர்கள் காட்டும் நல்ல நடத்தைகள் தொடர்பாக விளக்குவதற்காக மாணவர்க்குப் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடச் சந்தர்ப்பமளிக்குக. மாணவர்களுக்குத் தாம் விரும்பும் நண்பர் ஒருவரை (ஒரு நண்பர் மாத்திரம்) இனங்காணுமாறு கூறுக.
- அவ்வாறு இனங்கண்ட பின்னர் அந்த நண்பனைத் தெரிவு செய்தமைக்கான காரணத்தை கூறுமாறு அந்தந்த மாணவனுக்குச் சந்தர்ப்பமளிக்குக.
- இவ்வாறாக எல்லா மாணவர்களதும் கருத்துக்களைச் செவிமடுக்குக. அக்கருத்துக்களை ஒன்றன் பின் ஒன்றாக ஆசிரியை கரும்பலகையில் எழுதுக.
  உ-ம்:
  - எனது நண்பன் நேர காலத்துள் அல்லது காலையிலேயே பாடசாலைக்கு வருகிறார்.
  - அவர் எனது பாட வேலைகளில் உதவி செய்கிறார்

- மாணவர்களது தெரிவுக்கு மேலதிகமாக மாணவர்கள் பேணிவர வேண்டிய நல்ல நடத்தைகளைப் பின்வரும் விடயங்களை, உதாரணங்களாகக் காட்டி மேலும் விளக்கமளிக்குக.
- அவ்வாறு எடுத்துக்காட்டும் விடயங்களுள்,
  - வகுப்பில் ஒப்படைக்கப்படும் வேலையை நன்றாக நிறைவேற்றுதல்
  - ஆசிரியர்களுக்கும் பாடசாலையில் சேவையாற்றும் ஏனையோருக்கும் கௌரவமளித்துச் செயற்படுதல்
  - நண்பர் ஒருவர் அல்லது வேறு எவரேனும் ஒருவர் யாதேனும் உதவி செய்யுமாறு வேண்டி நிற்கும் சந்தர்ப்பங்களில் தம்மாலான வகையில் உதவி புரிதல்
  - மற்றுமொருவருடன் உரையாடும் போது அடக்கமாகப் பேசுதல்

DRAFT

செயற்பாடு - **IV**

- ஒரு நல்ல பிள்ளை கடைப்பிடிக்க வேண்டிய நல்ல பழக்கங்களை வெளிப்படுத்திக் காட்டும் பாடல்கள் அல்லது கவிதைகள் சிலவற்றைத் தேடிப்பெறுக.

உதாரணம்: **நல்ல பழக்கங்கள்**

கண்ணே மணியே எழுந்திடு
காலைக் கடனை முடித்திடு

திண்ணை மேலே அமர்ந்திடு
தினமும் பாடம் படித்திடு

அப்பா சொல்லைக் கேட்டிடு
அம்மாவுக்கு உதவிடு

மனதில் நல்லதை நினைத்திடு
மற்றவர்க்கு உதவி செய்திடு

வெ.நல்லதம்பி

- அவற்றுள் சில பாடல்களை அல்லது கவிதைகளைத் தெரிவு செய்து அவற்றை ஒவ்வொன்றாகப் பாடி, அவற்றில் அடங்கியுள்ள நற்பண்புகள் பற்றி உரையாடுக.
- பின்னர் அப்பாடங்களை அல்லது கவிதைகளை மாணவருடன் பாடுக.
- மாணவர்கள் பாடல்களை அல்லது கவிதைகளைப் பாடும்போது அவற்றை ஒலிப்பதிவு அல்லது ஒலி - ஒளிப்பதிவு செய்து கொள்க.
- ஒலிப்பதிவு அல்லது ஒலி - ஒளிப்பதிவு செய்த பாடல்கள் அல்லது கவிதைகளைச் செவிமடுப்பதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பளிக்க.
- அப்பாடல்களைப் பொருத்தமானவாறு தெரிவு செய்து நாளாந்தம் அவ்வாறான ஒரு பாடலை அல்லது கவிதையைப் பாடிய பின் வகுப்பில் வேலைகளைத் தொடங்குவதற்கான ஒழுங்குகளைச் செய்து கொள்க.
- தெரிவு செய்த பாடல்களுள் சிலவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துவதற்குப் பொருத்தமானவாறு பெரிய அட்டைகள் சிலவற்றில் எழுதித் தயார்ப்படுத்திக் கொள்க.
- அவற்றைப் பாடசாலையில் பொருத்தமான இடங்களில் காட்சிப்படுத்துக.
- இப்பாடல்களில் கூறப்படும் யாதேனும் நற்பண்பைக் காட்டும் வகையில் சித்திரம் வரையுமாறு மாணவர்க்குக் கூறிச் சந்தர்ப்பமளிக்குக. மாணவரது ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.

செயற்பாடு - **V**

- நாளாந்தக் கருமங்களின்போது மாணவர் பின்பற்ற வேண்டிய கிட்டிய, பாடசாலை மற்றும் சுற்றுப் புறத்தில் உள்ள இடங்களில் நடைமுறையில் உள்ள எளிமையான சில சட்டதிட்டங்களை இனங்கண்டு கொள்க.

உ-ம்:

  - நேர காலத்துடன் பாடசாலைக்கு வருகை தர வேண்டும்
  - உரிய நேரத்துக்கு முன்னர் பாடசாலையிலிருந்து வெளியேறலாகாது.



DRAFT

- ஏனையோரின் பொருள்களை எடுத்தலாகாது.
- ஆசிரியர்களின் அறிவுறுத்தல்களுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்.
- பாடசாலையில் உள்ள சொத்துக்களை அல்லது வளங்களைச் சேதப்படுத்தலாகாது.

- இவ்வாறான சட்டதிட்டங்களைப் பின்பற்றுவதால் தமக்கும் பாடசாலைக்கும் கிடைக்கும் நன்மைகளைப் பற்றி உரையாடுக.

  உ-ம்:

  - பாராட்டுக்கிடைத்தல்
  - பாடசாலை மேம்பாடடைதல் அல்லது விருத்தியடைதல்
  - நல்ல மாணவர்கள் உருவாதல்


- பின்னர் மேற்படி சட்டதிட்டங்களிலிருந்து வகுப்பறையில் அல்லது பாடசாலையில் காட்சிப்படுத்துவதற்காக, பொருத்தமான அட்டைகள் தயாரித்து வகுப்பில் பாடசாலையில் காட்சிப்படுத்துக.

  உ-ம்:

  - ஏனையோரின் பொருள்களை எடுக்க மாட்டோம்.
  - மணியோசைக்குக் கட்டுப்படுவோம்.
  - நேர காலத்துடன் பாடசாலைக்கு வருவோம்.
  - ஆசிரியர்களுக்குக் கட்டுப்படுவோம்.

**செயற்பாடு - VI**

- மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்குக.
- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க. படத்தில் காட்டியுள்ளவாறு தரையில் கோடுகள் கீறி, சில நிரைகளாகப் பிரித்துக் கொள்க.
- கோடுகளின் முன்னே மாணவரை வரிசையாக நிறுத்துக. வரிசைகளின் முன்னே நிறுத்துவதற்காகச் சில கொடிகள் தயாரித்துக் கொள்க.




- மாணவர் குழுக்களைப் படத்தில் காட்டியுள்ளவாறு வரிசைகளில் நிறுத்துக.
- மாணவரின் எதிரே அடையாளமிடப்பட்டுள்ள இடத்தில் பெரிய பந்து ஒன்றினை வைக்குக.
- ஆசிரியையின் சமிக்ஞைப்படி வரிசையில் முதலாவதாக நிற்கும் மாணவர்கள் முன்னால் வந்து பந்தைக் காலால் உதைத்து எதிரே நிறுத்தியுள்ள கொடி உள்ள இடம் வரையில் பந்தைக் கொண்டு செல்ல வேண்டும்.

DRAFT

- இவ்வாறாகச் செல்லும்போது தமது எல்லைக்கு அப்பால் பந்து செல்லாது தவிர்த்துக் கொள்ள வேண்டும். பந்து எல்லைக்கு வெளியே செல்லுமாயின் அவர் விளையாட்டிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்.
- பின்னர் அவர் பந்தை ஆரம்ப இடத்தில் வைத்து விட்டு தமது வரிசையில் இறுதியில் அமர்ந்து கொள்ளல் வேண்டும்.
- பின்னர் வரிசையில் நிற்கும் இரண்டாம் மாணவன் பந்து இருக்குமிடத்துக்குச் சென்று முன்னைய மாணவன் செய்ததைப் போன்றே பந்தை உதைத்துக் கொடி உள்ள இடம் வரை கொண்டு செல்ல வேண்டும்.
- இவ்வாறாக சகல மாணவர்களும் விளையாட்டில் ஈடுபடும் வகையில் தொடர்ந்தும் விளையாட வேண்டும்.
- விரைவில் செய்து முடிக்கும் குழு வெற்றி பெற்ற குழுவாகும்.

செயற்பாடு - **VII**

- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.
- மாணவரை நான்கு (4) குழுக்களாகப் பிரிக்குக.
- படத்தில் காட்டியுள்ளவாறு அந்தந்தக் குழுவுக்கு எல்லைகளை வேறாக்கிக் கோடுகள் வரைக.




- எல்லையின் மத்தியில் ஒரு வட்டம் வரைந்து அதனை வெற்றிக் கம்பம் என அறிமுகம் செய்க.

□ ஒவ்வொரு எல்லையிலும் மாணவர்கள் நிற்க வேண்டிய இடங்களை அடையாளம் இடுக.



DRAFT

- ஒவ்வொரு குழுவிலும் வரிசையில் இறுதியில் நிற்கும் மாணவரிடம் ஒவ்வொரு பந்து வீதம் வழங்குக.
- ஆசிரியையின் சமிக்ஞைப்படி இரண்டாவது படத்தில் அம்புக்குறிகளால் காட்டியுள்ள வாறாக பந்தை ஒருவர் பின் ஒருவராக தலைக்கு மேலாக அனுப்புதல் வேண்டும்.
- யாதேனும் குழுவில் எவரேனும் மாணவன் பந்தைப் பிடிக்கத் தவறி அது கீழே விழுந்து விடுமாயின் அக்குழுவினர் மீண்டும் முதலாவது மாணவனில் ஆரம்பித்து விளையாட்டைத் தொடருதல் வேண்டும்.
- வெற்றிக் கம்பத்தின் அருகே இருக்கும் மாணவன் தனது கையில் பந்து கிடைத்தவுடன் அதனை இயன்ற அளவு விரைவாக வெற்றிக்கம்பத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும்.
- முதன் முதலில் வெற்றிக்கம்பத்துக்குப் பந்தை எடுத்துச் சென்ற குழு வெற்றி பெற்ற குழுவாகும்.

| |
|---|
| சமூக ஒருங்கிணைப்பு எண்ணக் கருவுக்கென எழுதப்பட்டுள்ள சிறுவர் கதைத் தொகுப்பில் **“எமது காட்டுப் பாடசாலை”** என்னும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக. |

DRAFT

**11** **கருப்பொருள் : எமக்குத் தேவையானவை கிடைக்கும் வழிகள்**

**தேர்ச்சி** :-

- தேவைப்படும் சந்தர்ப்பங்களில் எமக்கு உதவி புரிவோரை இனங்கண்டு அவர்களின்பால் நல்ல மனப்பாங்குடன் செயற்படுவார்.
- வியாபார நிலையமொன்றின் தன்மையையும் தொழிற்பாட்டை யும் இனங்கண்டு அறிக்கைப்படுத்துவார்/ பதிவு செய்வார்.
- தமக்குக் கிடைத்தவற்றை ஏனையோருடன் பகிர்ந்து பரிமாறிக் கொள்ளும் தன்மையைப் பேணிவருவார்.
- எமக்குத் தேவைப்படும் சிலவற்றைத் தாமே உற்பத்தி செய்து கொள்ளலாம் என்பதை விளங்கிச் செயற்படுவார்.
- அன்றாடம் தேவைப்படுபவற்றை பல்வேறு பொருள்களைப் பயன் படுத்தி ஆக்குவார்.
- உடல் தகைமை விருத்திக்காக அவசியமான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- எமக்குத் தேவையானவற்றை வழங்கும் இடங்களில் ஆற்றப் படும் கருமங்களைக் களிப்புற்றவாறு வெளிப்படுத்துவார்.

**கற்றற் பேறுகள்** :-

- நாளாந்தம் எமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள உதவி புரிவோர் தொடர்பாக நல்ல மனப்பாங்குடன் செயற்படுவார். வியாபார நிலையத்தில் தாம் செயற்பட வேண்டிய விதத்தை இனங்கண்டு குறிப்பிடுவார்.
- வகுப்பறைக் கருமங்களின் போது தமக்குரித்தானவற்றை ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளும் பழக்கத்தை வெளிக் காட்டுவார்.
- அன்றாடம் தேவைப்படுபவை சிலவற்றைத் தாமே ஆக்கிக் கொள்வார்.
- தையல் வேலை தொடர்பான அடிப்படைப் பரிச்சயத்தைப் பெறுவார்.
- பல்வேறு பொருள்களைப் பயன்படுத்தி உடலின் துரித இயக்கத்தை வளர்க்க உதவும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- வியாபார நிலையத்தினால்/ சந்தையினால் ஆற்றப்படும் கருமங்களுடன் தொடர்புடைய வகிபாகமேற்று நடித்தல்களை முன்வைப்பார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- எமது நாளாந்த வாழக்கையின்போது தேவைப்படுபவை தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுக.

  உ-ம்: நீர், உணவுப் பொருட்கள், மின்சாரம், ...

DRAFT

- அவ்வாறு தேவைப்படுபவை எமக்குக் கிடைக்கும் வழிகள் தொடர்பாக மாணவருடன் உரையாடுக.

  உ-ம்: - வீட்டிலிருந்தே பெறக்கூடியவை
  - சந்தையில் கொள்வனவு செய்யக் கூடியவை
  - வேறு நிறுவனங்களிலிருந்து பெறக் கூடியவை
- வீடடில் உற்பத்தி செய்யாத எனினும் வெளியே இருந்து எமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு உதவி புரிகின்ற ஆட்கள் அல்லது நிறுவனங்களை இனங்காண்க.

  உ-ம்: நாளாந்தத் தேவைகளை நாம் பெறும் வகையில் வீட்டுக்கு அண்மையில் அமைந்துள்ள வியாபார நிலையங்கள்
- நீர், மின்சாரம் போன்ற சேவைகள் வழங்கும் நிறுவனங்களிலிருந்து எமது வீட்டுக்கு வருவோர்.
- இவ்வாறாக எமக்குத் தேவையானவை கிடைக்காது போகுமாயின் ஏற்படும் நிலைமைகள் தொடர்பாக மாணவருடன் உரையாடி அது தொடர்பாக மாணவரின் கவனத்தை ஈர்க்குக.
- அதற்கமைய அவர்கள் தொடர்பாக நல்ல உணர்வுடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டுக.

  உ-ம்: அவர்களுடன் நட்புடன் உரையாடுதல்
  பொறுமையுடன் செயற்படல் (வியாபார நிலையமொன்றிலிருந்து பொருள்கள் வாங்கும் போது)
- இவ்வாறான நடத்தைகளைப் பேணி வருவதால் எமக்கு உதவி புரியும் ஆட்களிடத்தே எம்மைப்பற்றி நம்பிக்கையும் தெளிவும் ஏற்படும் என்பதையும் அவ்வாறான ஆட்கள் மிக விருப்பத்துடன் எமக்கு உதவி புரிய முன்வருவர் என்பதையும் எடுத்துக் காட்டுக.

**செயற்பாடு - II**

- பொருள்கள் வாங்குவதற்காகக் கடைக்குச் சென்றுள்ளோர் யாவர் என மாணவரிடம் வினவுக.
- மாணவர்கள் சிலருடன் அவர்கள் அங்கு பெற்ற அனுபவங்கள் தொடர்பாக உரையாடுக.
- பொருள்கள் வாங்குவதற்குக் கடைக்கு/ சந்தைக்கு/ வியாபார நிலையத்துக்கு போகும்போது கொண்டு போகும் பொருள்கள் எவை என மாணவரிடம் வினவுக.

  உ-ம்: - வாங்க வேண்டிய பொருள்களின் பட்டியல்
  - பணம்
  - பைகள் அல்லது உறைகள்
- சிலர் பொருள்கள் வாங்கக் கடைக்குச் செல்லும்போது உறைகள் அல்லது பைகளை எடுத்துச் செல்வதில்லை என்பதை எடுத்துக்காட்டுக.
- அவ்வாறு ஆயத்தமின்றிக் கடைக்குச் செல்வதால் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பொலித்தீன் உறைகள் போன்ற பல பொருள்களை வீட்டுக்கு கொண்டு வர நேரிடுகின்றமையை வலியுறுத்திக் குறிப்பிடுக.
- பொலித்தீன் பயன்பாடு காரணமாக சூழலில் எற்படும் பாதகமான நிலைமைகள் தொடர்பாக உரையாடுக.

DRAFT

உ-ம்:

- பொலிதீன் விரைவில் பிரிகையடைவதில்லை
- மண்ணுடன் நச்சுப் பொருள்கள் சேர்த்தல், மண்ணின் வளம் குறைவடைதல்
- பொலித்தீனை முறைமையற்ற வகையில் வெளியேற்றுவதால் வடிகான்கள் போன்றவை அடைப்புக்குள்ளாதலும் அதன் விளைவாக வெள்ளம் போன்ற நிலைமைகள் ஏற்படுதலும்.
- சூழலின் அழகு கெடுதல் போன்றவை

- அதற்கமைய பொலித்தீன் பயன்பாட்டை இயன்ற அளவுக்குக் குறைத்தல் வேண்டும் எனவும் பயன்படுத்திய பின் உரியவாறு வெளியேற்றுதல் வேண்டும் எனவும் எடுத்துக் காட்டுக.
- சந்தையில் அல்லது கடையில் நடந்து கொள்ள வேண்டிய விதம் தொடர்பாக, பின்வரும் விடயங்களின்பால் மாணவரது கவனத்தை ஈர்த்து உரையாடுக.
  - வரிசையில் தமக்குரிய சந்தர்ப்பம் வரும் வரை காத்திருத்தல்
  - பொருள்கள் வாங்கும் ஏனையோருக்கு இடைஞ்சல் ஏற்படாதவாறு நடந்து கொள்ளல்
  - தமது பாதுகாப்புக் குறித்துக் கவனஞ் செலுத்துதல்
- பொருள்கள் வாங்கும் போது கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பாக மாணவருடன் உரையாடுக.
  - ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டுள்ள பொருள்களின் ஒழுங்கைக் கலைப்பதைத் தவிர்த்தல்
  - அடக்கத்துடன், பொறுமையுடன் பொருள்களைத் தெரிவு செய்தல்
  - பொருள்களைத் தெரிவு செய்யும்போது அவற்றுக்குச் சேதம் விளையாதவாறு செயற்படல்
  - பணத்தைச் செலுத்துதலும் மீதிப் பணத்தைச் சரியாகப் பெற்றுக் கொள்ளலும்
- மாணவர் நடைமுறை அனுபவங்களைப் பெறுவதற்காக வகுப்பறையில் பாலர் சந்தை ஒன்று ஒழுங்கு செய்து நடத்துக.
- அவ்வாறு மேலே கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுத்துக.
- சந்தை தொடர்பாக மாணவரது அனுபவங்களைச் சித்திரமாக வரைவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரது ஆக்கங்களைக் காட்சிப்படுத்துக. பாராட்டுக.


செயற்பாடு - **III**

- தமது பாதுகாப்பு மற்றும் ஏனையோரின் பாதுகாப்புக் குறித்துக் கவனஞ் செலுத்தியவாறு தையல் தொடர்பான அடிப்படைப் பயிற்சியை வழங்குவதற்காகப் பின்வரும் செயற்பாடடில் மாணவரை ஈடுபடுத்துக.
- அதற்காக மாணவர் ஒவ்வொருவருக்கும் பின்வரும் பொருள்களைத் தேடிப் பெறுமாறு அறிவுறுத்துக.
- தையல் ஊசி, நூல், 15 சென்ரிமீற்றர் x 15 சென்ரிமீற்றர் அளவுள்ள துணித்துண்டு (தனி நிற) மழுங்கிய முனையுள்ள (டப்பஸ்ட்ரி - Tapestry) தையல் ஊசி



DRAFT

- படத்தில் காட்டியுள்ளவாற துணித்துணடில் சில கோடுகளை அடையாளமிடுக.
- அக்கோடுகளின் மீது பெருநூலோடுமாறு மாணவரை வழிப்படுத்துக.



**செயற்பாடு - IV**

- நாளாந்தத் தேவைகளுக்காக, வெவ்வேறு அளவுள்ள உறைகள் (Covers) செய்வதற்காகப் பின்வரும் பொருள்களைத் திரட்டிக் கொள்க.


  ஏ4 அளவுள்ள கடதாசி (ஆளுக்கு ஒன்று வீதம்)

  பசை

  கத்தரிக்கோல்

  நீர் வர்ணம்

  அச்சுப்பதிப்பதற்குப் பொருத்தமான பொருள்கள்
- மாணவர்க்கு ஆளுக்கு ஒன்று வீதம் ஏ4 கடதாசிகளைப் பகிர்ந்தளிக்குக.
- அதன் ஒரு பக்கத்தில் நீர் வர்ணத்தைக் கொண்டு தாம் விரும்பியவாறு அச்சுப் பதிக்க வழிப்படுத்துக.
- மாணவர் ஆக்கிய அச்சுப்பதித்த கடதாசியை நன்கு உலர்த்திக் கொள்க.
- கீழே படத்தில் காட்டியுள்ளவாறு உறைவு போன்று செய்வதற்குப் பொருத்தமான மாதிரியுருவொன்றினை (Block) தடித்த அட்டையில் ஆசிரியை தயாரித்துக் கொள்க.



- அம்மாதிரியுருவைப் பயன்படுத்தி, அதே வடிவில் தாம் அச்சுப்பதித்துத் தயாரித்த கடதாசியை வெட்டியெடுப்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- பின்னர் முறிகோடுகளால் வேறாக்கிக் காட்டியுள்ள பகுதிகளை மடித்து பசை பூசி ஒட்டி, உறை போன்று தயாரித்துக் கொள்ளுமாறு வழிப்படுத்துக.
- மாணவரது ஆக்கங்களைப் பாராட்டுக.

**செயற்பாடு - V**

- தம்மிடமுள்ளவற்றை ஏனையோருடன் பகிர்ந்து பரிமாறிக் கொள்வது தொடர்பாகக் கூறும் கதையொன்றினை அல்லது சம்பவமொன்றினை மாணவர்க்குக் கூறுக.

  உ-ம்:

  - உணவு கொண்டுவரத் தவறிய ஒருவருக்குத் தமது உணவின் ஒரு பகுதியைக் கொடுத்தல்.

DRAFT

- பென்சில், அழிறப்பர் இல்லாத ஒரு நண்பருக்கு தம்மிடம் மேலதிகமாக உள்ள பென்சிலை அல்லது அழிறப்பரைக் கொடுத்தல்.

பின்னர்

- இவ்வாறாக தம்மிடம் உள்ளவற்றை ஏனையோருடன் பகிர்ந்து கொள்வதன் அவசியம் பற்றி உரையாடுக.

பின்வரும் விடயங்களை எடுத்துக்காட்டுக.

- நட்பு வளர்ச்சியடைதல்
- ஏனையோருக்கு உதவி புரிவதனால் மகிழ்ச்சி அல்லது திருப்தி ஏற்படுதல்
- கணிப்புக்கு உள்ளாதல் .... போன்றவை

- பகிர்ந்து பரிமாறிக்கொள்வதன் நன்மைகள் பற்றிக் கூறும் பாடலொன்றை நினைவூட்டுக. அப்பாடலின் பொருளை விளக்குக.

உதாரணம் :

**மனிதநேயம்**

ஒருவருக்கொருவர் உதவிடுவோம்
ஒற்றுமையாக வாழ்ந்திடுவோம்

மற்றவர்க்கு உதவி செய்திடுவோம்
மனிதநேயத்தை வளர்த்திடுவோம்

கூடி வாழக் கற்றிடுவோம்
கோபங் கொள்ளாது இருந்திடுவோம்

பகிர்ந்து உண்ணப் பழகிடுவோம்
பிறர் பசியைப் போக்க உதவிடுவோம்


-- செல்வ உதயன்

- அவ்வாறான மேலும் பாடல்களைத் தேடிப் பெற்று அவற்றின் பொருளை விளக்கிய பின் அவற்றை மாணவருடன் சேர்ந்து பாடி, மாணவரிடத்தே அப்பண்புகளை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ள வழிப்படுத்துக.

**செயற்பாடு - VI**

- உடலின் அசைவியக்கத்தை (Agility) வளர்க்க உதவத்தக்க செயற்பாடொன்றை நடத்துவதந்காகப் பயன்படும் பின்வரும் பொருட்களைச் சேகரித்துக் கொள்க.
  உ-ம்:
- நிறமூட்டிய நீர் நிரப்பட்டப்பட்ட, ஒத்த அளவுள்ள பிளாத்திக்குப் போத்தல்கள் பல அல்லது சில
- சற்றுப் பெரிய பந்துகள் இரண்டு
- வகுப்பு மாணவரை திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.

- மாணவரை சம அளவான இரண்டு குழுக்களாகப் பிரித்துப் படத்தில் காட்டியுள்ளது போன்று நிற்கச் செய்க.




- இரண்டு குழுக்களிலும் வரிசையில் முதலாவது மாணவனின் கையில் ஒவ்வொரு பந்து வீதம் வழங்குக.
- ஆசிரியை சமிக்ஞை வழங்கியவுடன் இரண்டு குழுக்களிலும் முதலாவதாக நிற்கும் மாணவர் தமக்கு எதிரே இருக்கும் போத்தல்களுக்கு இடையே படத்தில் அம்புக்குறிகளால் காட்டப்பட்டுள்ளவாறு வளைநெளி முறையில் ஓடிச் சென்று மீண்டும் தமது வரிசையில் நிற்கும் இரண்டாவது மாணவனுக்குப் பந்தைக் கொடுக்க வேண்டும்.
- பந்தைக் கையில் எடுத்த இரண்டாவது மாணவன் முதலாவது மாணவன் செய்ததைப் போன்றே செயற்பட்டு வரிசையில் நிற்கும் அடுத்த மாணவனுக்குப் பந்தை வழங்க வேண்டும்.
- இவ்வாறாக வரிசையில் இறுதி மாணவன் வரையில் விளையாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பமளிக்குக.
- முதலில் ஓடி முடித்த குழுவைப் பாராட்டுக.

| |
|---|
| சமூக ஒருங்கிணைப்பு எண்ணக் கருவுக்கென எழுதப்பட்டுள்ள சிறுவர் கதைத் தொகுப்பில் **“நாம் மாத்திரமா?”** என்னும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக. |



DRAFT

**12** கருப்பொருள் : பிரயாணம்

**தேர்ச்சி** :-

- பிரயாணத்தின்போது சரியான மெய்ந்நிலைகளைப் பேணிவருவார்.
- பொதுப் போக்குவரத்துச் சேவைகள் பற்றி அறிவூட்டம் பெற்று அவற்றைப் பாதுகாக்க ஆவன செய்வார்.
- பிரயாணஞ் செய்யும்போது எதிர்ப்படத்தக்க தடைகள், விபத்துக்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற ஆவன செய்வார்.
- பிரயாணங்களின்போது பரஸ்பரம் ஒத்துழைத்துச் செயற்படுவார்.
- போக்குவரத்து முறைகளின் மாதிரிகளை வெவ்வேறு ஊடகங்களைக் கொண்டு ஆக்குவார்.
- பிரயாணஞ் செய்தல் தொடர்பான இயக்க/ அசைவுச் செயற்பாடு களில் ஈடுபடுவார்.
- வெவ்வேறு பயணப் பாங்குகளைத் தழுவி, ஆக்க நடித்தல்களில் ஈடுபடுவார்.

**கற்றற் பேறுகள்** :-

- உடலின் சமனிலையைப் பேணியவாறு அன்றாடக் கருமங்களில் ஈடுபடுவார்.
- பாரமானவற்றைத் தூக்குதல் தொடர்பாக, சரியான மெய்ந்நிலைகளைப் பேணி வருவார்.
- வாகனத்தில் பயணஞ் செய்யும்போது சரியான மெய்ந்நிலையைப் பேணுவார்.
- வாகனங்களும் வீதிகளும் பொதுச் சொத்துக்களாகும் எனக் கருதி அவற்றைப் பாதுகாக்க ஆவன செய்வார்.
- பயணங்கள் செய்யும்போது எதிர்ப்படத்தக்க தடங்கலிலிருந்தும் நிகழத்தக்க விபத்துக்களிலிருந்தும் பாதுகாப்புப் பெற ஆவன செய்வார்.
- வெவ்வேறு பொருள்களைப் பயன்படுத்தி வாகன மாதிரியுருக்கள் ஆக்குவார்.
- இயக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு உடலின் சமநிலையைப் பேணுவார்.
- வெவ்வேறு பயணப் போக்குவரத்துச் சாதனங்களின் சந்தத்தின்/ தாள லயத்தின் ஊடாக ஆக்கியல் அசைவியக்கத் தொழிற்பாடுகளில் ஈடுபடுவார்.

DRAFT

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- வகுப்பு மாணவர்களை இடவசதியுள்ள ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்று, கைகளை இரு புறமும் நீட்டி கையளவு தூரத்தில் இடைவெளியில் நிற்கச் செய்க.
- பின்னர் ஒற்றைக்காலில் நின்றவாறு கைகளை வெவ்வேறு விதமாக அசைத்து அல்லது கையாண்டு உடலின் சமனிலையைப் பேணி நிற்க வழிப்படுத்துக.
  உ-ம்: கைகளை முன்னோக்கி நீட்டி ஒற்றைக்காலில் சிறிது நேரம் நிற்கச் செய்க. இவ்வாறாக காலை மாற்றி மாற்றி இச்செயற்பாட்டைத் தொடர்ந்தும் நடத்துக.

- இச்செயற்பாட்டுடன் உடல் சமநிலையின் முக்கியத்துவம் குறித்து உரையாடுக. சமனிலை அற்றுப்போகுமாயின் எமக்கு யாது நிகழும் சிந்திக்க வழிப்படுத்தி அவர்களது கருத்துக்களைப் பெறுக. இதற்கமைய சமனிலை இல்லையெனில் நாம் எமது நாளாந்த வேலகளைச் செய்ய முடியாத நிலை ஏற்படும் என்பதை விளக்குக.
- நாளாந்த வாழ்க்கையில் ஒருவர் செய்யும் செயற்பாடுகள் தொடர்பாக உரையாடுக.
  உ-ம்:
  - கிணற்றில் நீர் அள்ளுதல்
  - படிக்கட்டில் வரிசையில் ஏறுதல்
  - வீட்டைக் கூட்டிப் பெருக்குதல்
- இச்செயற்பாடுகளைச் செய்யும்போது நமது உடலின் மெய்ந்நிலை வெவ்வேறு விதமாக மாற்றுகின்றமையை விளக்குக.
- நாளாந்த வாழ்க்கையில் செய்யும் சில செயற்பாடுகளைச் செய்து காட்டுமாறு மாணவரை வழிப்படுத்தி, அவற்றிலிருந்து உடலின் மெய்ந்நிலைகள் மாற்றமடையும் விதத்தை இனங்காண வழிப்படுத்துக.
- தவறான மெய்ந்நிலைகளைப் பேணுவதன் விளைவாக உடலில் பல்வேறு கோளாறுகள் ஆபத்துக்கள் ஏற்பட இடமுண்டு என்பதை விளக்குக. அவ்வாறாக ஏற்படத்தக்க கோளாறுகள் குறித்து உரையாடுக.

**செயற்பாடு - II**

- எமது நாளாந்த வேலைகளைச் செய்யும்போது சில பொருள்களைத் தூக்கவும் தூக்கி இடத்துக்கிடம் கொண்டு செல்லவும் நேரிடுகின்றமை பற்றிக் கலந்துரையாடுக. கலந்துரையாடிய விடயங்கள் மற்றும் மாணவரின் அனுபவங்கள் மூலம் சில பொருள்களைத் தூக்குதல் மற்றும் தூக்கிக் கொண்டு செல்லல் தொடர்பான வகிபாகங்களைச் செய்து காட்டுமாறு மாணவரை வழிப்படுத்துக.
  உ-ம்:
  - மண்வெட்டியொன்றினைத் தோளில் வைத்துக் கொண்டு செல்லும் விதம்
  - யாதேனும் சுமையைத் தோளின் மீது, தலையின் மீது வைத்துச் செல்லும் விதம்
  - யாதேனும் சுமையைத் தொங்கவிட்டவாறு கொண்டு செல்லும் விதம்
  - தண்ணீர்க் குடமொன்றை இடுப்பில் வைத்துக் கொண்டு செல்லும் விதம்

- பாரமான பொருள்களைத் தூக்கும்போதும் கொண்டு செல்லும்போதும் உடலின் தலை, தோள், இடுப்பு, கைகள் போன்றவை அதற்குப் பயன்படும் விதத்தை விளக்குக.
- அதற்கமைய தவறான விதத்தில் தூக்குதல் மற்றும் கொண்டு செல்லல் காரணமாக உடலுக்கு ஏற்படத்தக்க கோளாறுகளை இனங்காண்க.

  உ-ம்:
    - தவறான மெய்ந்நிலையில் நின்றவாறு பாரமான பொருள்களைத் தூக்குவதால் இடுப்பில் கோளாறு ஏற்படுதல்
    - தவறான மெய்ந்நிலையில் பாரமான பொருள்களைத் தூக்கிச் செல்வதால் கழுத்து பாதிக்கப்படுதல்
- பின்னர் சரியான மெய்ந்நிலைகளில் இருந்தவாறு பாரமான பொருள்களைத் தூக்குதல், கொண்டு செல்லல் தொடர்பான மாணவர்க்கு அறிவூட்டம் செய்க.
- தேவையெனின் வளவாளர் ஒருவரின் உதவியைப் பெற்று சரியான மெயந்நிலையை எடுத்துக்காட்டுக. மாணவரும் அவற்றைப் போலச் செய்யச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு - III**

- போக்குவரத்துடன் தொடர்புடைய பொதுச் சொத்துக்கள் மற்றும் பொதுச் சொத்துக்கள் அல்லாத சொத்துக்கள் சார்ந்த வாகனப் பொம்மைகளின் படங்கள் சிலவற்றை வகுப்புக்குக் கொண்டு வருக.

  உ-ம்: பேருந்து, கார், லொரி, துவிச்சக்கரவண்டி, புகையிரதம் போன்றவை
- பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு அவ்வாகனங்கள் பொதுச் சொத்துக்கள் எனவும் பொதுச் சொத்துக்கள் அல்லாத சொத்துக்கள் எனவும் வேறாக்கி இனங்காண முடிகின்றதா என்பதைக் கண்டறிக.
    - எந்த ஒருவருக்கும் சுதந்திரமாகப் பயணஞ் செய்யக் கூடிய வாகனங்கள் எவை?
    - பொது வாகனங்கள் எவை?
    - நேர அட்டவணைப்படி பயணிக்கும் வாகனங்கள் உள்ளனவா? அவை யாவை?
    - கட்டணம் அறவிட்டுப் பயணிகளை ஓற்றிச் செல்லும் வாகனங்கள் எவை? பொது வாகனங்கள், தனியார் வாகனம் என்றவாறு
    - வாகனங்களை நிறுத்தி வைக்கும் இடங்களின்படி அவ்வாகனங்களை வகைப்படுத்த முடியுமா?
- பொதுவீதியொன்றினையும் தனியார் வீதியொன்றினையும் அவதானிக்க மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- இந்த இரண்டிலும் பயணிப்பதற்குரிய உரிமை அல்லது சுதந்திரம், அவ்வீதிகளில் காணப்படும் வசதிகள் ஆகிய விடயங்களின் கீழ் இரண்டு வகைப் வீதிகளுக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளனவா எனத் தேடியறிய மாணவரை வழிப்படுத்துக.
- பொதுவாகனங்கள் அதாவது புகையிரதம் அல்லது பஸ் வண்டி (பேருந்து) போன்றவையும் பொது வீதிகளும் (தெருக்களும்) இல்லையெனில் நாம் எதிர்நோக்க நேரிடும் இடர்ப்பாடுகள் தொடர்பாக மாணவரது கவனத்தை ஈர்க்குக.

DRAFT

உ-ம்:

பொது வாகனங்கள் இல்லையெனில் ...

- கால்நடையாகப் பயணம் செய்ய நேரிடும்
- எனவே எமது நாளாந்த வேலைகளைச் சரியாக செய்து முடிக்க முடியாமற் போகும்
- பாடசாலை செல்வதில் இடைஞ்சல்கள் ஏற்படும்
- விபத்துக்கள் ஏற்பட இடமுண்டு அல்லது பாதுகாப்புக் குறைவானது

பொது வீதிகள் இல்லையெனில் ...

- பயணஞ் செய்வதில் இடர்பாடுகள் தோன்றும்
- விபத்துக்கள், பாதுகாப்பின்மை
- வாகனங்கள் பயணிக்க முடியாமற் போதல்

போன்ற விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுக.

- அதற்கமைய பொது வானங்களும் பொதுவீதிகளும் எமது வளங்களாகும் என்பதையும் அவற்றைப் பாதுகாப்பது அவசியம் என்பதையும் விளக்குக.
- பொது வீதிகளும் வாகனங்களும் சேதமடைந்துள்ள சந்தர்ப்பங்கள் தொடர்பாக மாணவரது அனுபவங்களின் துணையுடன் கலந்துரையாடுக.

  உ-ம்:

  - வீதியின் கற்களைக் கழற்றிச் செல்லல்
  - பாதையில் விளையாடுதல்
  - பொது வாகனங்களை நோக்கிக் கல்லெறிதல்
  - பேருந்து வண்டிகளில் ஆசனங்களைச் சேதப்படுத்தல்

  போன்ற விடயங்களை வெளிக்கொணர்ந்து மனிதனின் செயற்பாடுகள் காரணமாக சேரதங்கள் விளையும் சந்தர்ப்பங்களை வலியுறுத்துக.
- பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்கும் விதம் தொடர்பாக மாணவரது கவனத்தை ஈர்க்குக.
- மாணவரைச் சில குழுக்களாகப் பிரித்து பொது வாகனங்களையும் பொதுப் வீதிகளையும் பாதுகாப்பதற்காகச் செய்யத்தக்கவை பற்றிய தகவல்களைச் சேகரிக்க வழிப்படுத்துக.

  உ-ம்:

  - பொதுப்பாதைகளில் குப்பை கூளங்களைக் கொட்டுவதைத் தவிர்த்தல்
  - பொதுப்பாதைகளில் ஆபத்தான பாதுகாப்புக்குப் பங்கம் விளைவிக்கத்தக்க பொருள்கள் உள்ளனவாயின் அவற்றை அப்புறப்படுத்தல்
  - பொதுப்பாதைகளில் விளையாடுவதைத் தவிர்த்தல்
  - தாம் கழித்தொகுக்கும் பொருள்களைப் பாதையில் போடுவதைத் தவிர்த்தல்
  - பொது வாகனங்களை அசுத்தப்படுத்தாதிருத்தல்
- பாடசாலையில் பொதுவீதி அசுத்தமடைந்துள்ள ஓர் இடத்தை இனங்காண்க. அவ்வீதியைச் சுத்தமாக வைத்திருப்பதற்காகச் செய்யத்தக்கவை பற்றி மாணவருடன் கலந்துரையாடுக. அவ்வாறு இனங்கண்ட விடயங்களைச் செயற்படுத்தி, பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பது தொடர்பாக நன்மானப்பாங்குகளைப் பிறப்பிக்குக.

DRAFT

செயற்பாடு - **IV**

- பயணங்கள் செல்லும்போது எதிர்நோக்க நேரிடத்தக்க தடைகள், விபத்துக்கள் தொடர்பாக தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்களில் வெளியிடப்படும் செய்தி அறிக்கைகளைச் செவிமடுத்து அல்லது வீட்டில் வளர்ந்தோருடன் கலந்துரையாடி பொருத்தமான சில தகவல்களை வகுப்புக்குக் கொண்டு வருமாறு மாணவரை வழிப்படுத்துக.
- அத்தகவல்களைக் கொண்டு மாணவருடன் கலந்துரையாடுக. அதற்கமையப் பயணங்கள் செல்லும்போது நிகழத்தக்க விபத்துக்களையும் அசௌகரியங்களையும் இனங்காண்க. உ-ம்:
    - பயணங்கள் செல்லும்போது ஏற்படத்தக்க தடங்கல்
    - பேருந்து வண்டி இடை நடுவே ஸ்தம்பிதமடைதல் அல்லது பழுதடைதல்
    - பேருந்து இல்லாமையால் பயணம் தாமதமாதல்
    - வீதியில் வெள்ளநீர் தேங்கி நிற்றல்
    - பாதையில் பிராணிகள் (யானை, மாடு, நாய்) சஞ்சரித்தல்
    - உடைந்த போத்தல் துண்டு காலில் குத்துதல் அல்லது காயமடைதல்
    - நாய் கடித்தல்
- பெரும்பாலான பயணங்கள் தோல்வியில் முடிவதற்கும் உரிய வேளையில் பயணத்தைச் செய்ய முடியாமற் போகின்றமைக்கும் காரணம் எமது கவனயீனம் என்பதை விளக்குக. அத்தடைகளையும் விபத்துக்களையும் தவிர்ப்பதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடுக.
- அதற்குரிய ஒரு செயற்பாடாக இரண்டு பெட்டிகளை வகுப்பின் எதிரே வைக்குக. அந்த இரண்டு பெட்டிகளிலும் மேலே குறிப்பிட்ட தடங்கல்கள், விபத்துக்கள் தொடர்பான விடயங்களையும் அவை தொடர்பான பின்வரும் தீர்வுகளையும் அட்டைகளில் எழுதி வெவ்வேறாக இடுக.
- தடங்கல்கள், விபத்துக்களைத் தவிர்க்கத்தக்க வழிகள்
  உ-ம்:
    - நேர காலத்துடன் பயணத்தை ஆரம்பித்தல் (தாமதமின்றி)
    - பாதையில் மூத்தோரின் வளர்ந்தோருடன் பயணஞ் செய்தல்.
    - பாதையில் நடந்து செல்லும்போது வலது புறத்தில் செல்லுதல்
    - பாதுகாப்பானவாறு வாகனங்களில் பயணித்தல்
- பின்னர் ஒரு டிமை கடதாசியை எடுக்குக. பெட்டிகளிலிருந்து எடுக்கும் அட்டைகளைப் பயன்படுத்தி, அக்கடதாசியின் ஒரு பகுதியின் விபத்துக்களையும் மறு பகுதியில் அவற்றுக்கான தீரவுகளையும் பொருத்தி ஒட்டுக. அதற்கமைய தடங்கல்கள், விபத்துக்களிலிருந்து தவிர்த்திருப்பதற்காக நாம் செய்ய வேண்டியவற்றை விளக்குக.
- தடங்கல்கள், விபத்துக்களிலிருந்து தவிர்த்து பயணங்களை வெற்றிகரமாக நிறைவு செய்வது தொடர்பாக மாணவரின் கவனத்தை ஈர்க்குக.
- பெட்டிகளில் உள்ள விடயங்களை வெளியே எடுத்து தடங்கல்களையும் விபத்துக்களையும் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகளை இனங்காணச் செய்க.

DRAFT

செயற்பாடு - V

- வாகனமொன்றில் பயணஞ் செய்யும்போது சரியான மெய்ந்நிலைகளைப் பேணுவார்.
- இச்செயற்பாட்டுக்காக வாகனங்களில் பயணம் செய்யும்போது அவதானிக்கத்தக்க தவறான மெய்நிலைகள் பற்றி மாணவரது கவனத்தை ஈர்த்து கலந்துரையாடுக.
- அதற்காப் பின்வருமாறு சரியான, தவறான மெயந்நிலைகளைக் காட்டும் படங்கள் சித்திரங்கள் ஒளிப்படங்கள் சிலவற்றைத் தயாரித்துக் கொள்க.

  உ-ம்: தவறான மெயந்நிலைகள்

  - துவிச்சக்கர வண்டியின் கைப்பிடியை ஒரு கையால் மாத்திரம் பிடித்து ஓட்டிச் செல்லும் காட்சி
  - தலை, கை, கால் போன்ற உறுப்புக்களை வாகனத்துக்கு வெளியே நீட்டியவாறு பயணஞ் செய்யும் காட்சி
- வகுப்பு மாணவரைச் சில குழுக்களாப் பிரித்து இவற்றுள் ஒன்றை அல்லது சிலவற்றை அக்குழுக்களுக்கு வழங்குக. பின்னர் பாதுகாப்பற்ற அம்மெய்ந்நிலகள் தொடர்பாக மாணவரது கருத்துக்களை வினவுக.
  - படத்தில் சித்திரத்தில் ஒளிப்படத்தில் உள்ள தவறான மெய்யநிலை எது என்பது
  - அத்தவறான மெய்ந்நிலை காரணமாக ஏற்படத்தக்க விபத்துக்கள்
- இவற்றை வகுப்பறையில் முன்வக்கச் சந்தர்ப்பமளிக்குக. இதற்காக வகிபாகமேற்று நடித்தல் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.
- அதற்கமைய பயணங்கள் செல்லும்போது தவறான வேறு மெய்ந்நிலைகள் தொடர்பாக மாணவரது அல்லது ஏனைய அனுபவங்கள் பற்றி உரையாடுக. அவற்றை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- மேற்படி தவறான மெய்ந்நிலைகள் காரணமாக ஏற்படத்தக்க உடல் ரீதியான தீங்குகள் அல்லது பாதிப்புக்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுக.
- மேற்படி பயணங்கள் தொடர்பான தவறான மெயந்நிலைகளுக்குப் பதிலாக அமையத்தக்க சரியான மெயந்நிலைகள் பற்றி மாணவரது அனுபவங்களை முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- செய்தித்தாள்களில் வெளியாகும் படங்கள், ஒளிப்படங்கள், தொலைக்காட்சிச் செய்திகள் போன்ற தகவல்களின் துணையுடன் அப்பாதிப்புக்கள், தீங்குகளை மேலும் விளக்குக. அவ்வாறான தகவல்கள் அடங்கிய படங்கள், ஒளிப்படங்கள், செய்தித்தாள்களில் உள்ள விபத்துக்கள் தொடர்பான தலைப்புக்கள் வகுப்பில் காட்சிப்படுத்துக.
- அவற்றுக்கமைய பயணங்கள் செல்லும்போது இடம்பெறும் தவறான மெய்ந்நிலைகளைத் தவிர்த்து சரியான மெய்ந்நிலைகளை உறுதிப்படுத்துதற்காக இடையிடையே இவற்றை மமாணவருக்கு நினைவூட்டி மாணவர்களை நினைவூட்டுக.

DRAFT

செயற்பாடு - **VI**

- மாணவர்கள் பயணம் செய்யும் வானங்கள் சிலவற்றை இனங்காண்க.
  உ-ம்: பேருந்து வண்டி, லொறி, துவிச்சக்கரவண்டி, மாட்டு வண்டி, கார், உழவுயந்திரம் (இரண்டு சக்கர உழவு இயந்திரம்)
- இவ்வாகனங்களின் மாதிரயுருக்கள் ஆக்குவதற்குப் பொருத்தமான சில ஊடகங்களையும் பொருள்களையும் இனங்கண்டு சேகரித்து வகுப்பிற்கு கொண்டு வருக.
  உ-ம்: களி, காட்போர்ட், கிளே, தடிகள் ... போன்றன
- வகுப்பு மாணவரை குழுக்களாகப் பிரிக்குக
- ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு வான மாதிரியுரு ஆக்குவதற்குப் பொருத்தமான ஊடகங்களைத் தெரிவு செய்து வழங்குக.
- மாணவரை, அவ்வாகன மாதிரியுருக்களை ஆக்குமாறு வழிப்படுத்துக.
- மாணவர் ஆக்கிய வாகனங்களுக்கு நிறந்தீட்டி வகுப்பில் காட்சிப்படுத்துக.
- மாணவர்களின் ஆக்கங்களைப் பாராட்டுக.

செயற்பாடு - **VII**

- வாகனங்கள் போன்று பாவனை செய்து வியைாட்டொன்றில் ஈடுபடுவதற்காக வகுப்பு மாணவர்களைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.
- வாகனங்கள் போன்று பாவனை செய்ய விரும்பும் மாணவர்க்குத் தாம் விரும்பும் வாகனமொன்றினைத் தெரிவு செய்து கொள்ளுமாறு வழிப்படுத்துக.
- பின்னர் மாணவர் தொகைக்குப் பொருத்தமான அளவுள்ள சதுரக் கட்டமொன்றை நிலத்தில் வரைக.
- அல்லது கயிற்றையும் நான்கு தடிகளையும் பயன்படுத்தி கட்டத்தை அமைத்துக் கொள்க.
- மாணவரை அச்சதுரக் கட்டத்தினுள் அனுப்பி, ஆசிரியர் சமிக்ஞை வழங்கியவுடன் தாம் விரும்பிய வாகனம் போன்று செயற்பட வழிப்படுத்துக. அவ்வாறு செல்லும் போது ஏனையோரின் உடலில் மோதும் அல்லது தொடுகையுறும் மாணவர்கள் போட்டியிலிருந்து நீக்குதல் வேண்டும் என அறிவிக்குக.
- இச்செயற்பாட்டில் சிறிது நேரம் ஈடுபட்டதன்பின்னர் ஆசிரியையின் அடுத்த சமிக்ஞை கிடைத்தவுடன் உடனடியாக தாம் இருந்த இடத்திலேயே நிற்றல் வேண்டும். அவ்வாறு ஒருவர் வேறு ஒருவரின் உடலில் மோதினாலோ அல்லது தொடுகையடைந்தாராயின் அவ்வாறு உடனடியாக அதே இடத்தில் நிற்கத் தவறினாராயின் அவர்கள் போட்டியிலிருந்து விலகுதல் வேண்டும் எனக் கூறுக.
- இவ்வாறாக சதுரக் கட்டத்தைப் படிப்படியாகச் சிறிதாக்கி, விளையாட்டை அல்லது போட்டியை நடத்துக. இறுதியில் எஞ்சியிருப்போர் வெற்றி பெற்றோர் ஆவர்.
- மாணவர் அனைவரையம் பாராட்டுக.


DRAFT

**செயற்பாடு - VIII**

- வகுப்பு மாணவரை இடவசதியுள்ள ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.
- மாணவர் தொகைக்குப் பொருத்தமான அளவுள்ள கட்டமொன்றை நிலத்தில் வரைக.
- மாணவரைக் கட்டத்தினுள் செல்லுமாறு வழிப்படுத்துக.
- மாணவருள் ஒருவர் அல்லது இருவர் ஒற்றைக்காலில் கெந்திப் பாய்ந்தவாறு மற்றைய மாணவர்களைப் பிடிக்க அல்லது தொட முயற்சிக்குமாறு வழிப்படுத்துக.
- அவ்வாறு தொடப்பட்ட மாணவன் அல்லது மாணவர்கள் தம்மைத் தொட்ட மாணவன் போன்று ஒற்றைக்காலில் கெந்திப் பாய்ந்தவாறு மற்றைய மாணவரைப் பிடிக்க அல்லது தொட முயற்சிக்குமாறு வழிப்படுத்துக. அவ்வாறாக விளையாட்டைச் சிறிது நேரம் செய்ய இடமளிக்குக.
- பிடிபடாது நீண்ட நேரம் விளையாடிய பிள்ளைகள் வெற்றிபெற்றோராவர்.
- எல்லா மாணவரையும் பாராட்டுக.

**செயற்பாடு - IX**

- வகுப்பு மாணவரைச் சில குழுக்களாகப் பிரிக்குக.
- படத்தில் காட்டியுள்ளவாறு நிலத்தில் வரைந்த சிறிய கட்டங்களின் கோட்டின் மீது மாணவரை நிறுத்துக.
- குழுவுக்கு ஒன்று வீதம் காற்று நிரப்பிய பலூன்களைப் பகிர்ந்தளிக்குக. ஆசிரியை சமிக்ஞை வழங்கியவுடன் பலூன் நிலத்தில் விழாதவாறு கோட்டுக்கு அப்பால் பாயாதவாறு கையால் அடித்தல் வேண்டும். மாணவர் தாம் நிற்கும் இடத்தில் இருந்தவாறே பலூனைக் கையால் அடித்து பலூன் கீழே விழாதவாறு நீண்ட நேரம் வைத்திருந்த குழு வெற்றி பெற்ற குழுவாகும்.




| |
|---|
| சமூக ஒருங்கிணைப்பு எண்ணக் கருவுக்கென எழுதப்பட்டுள்ள சிறுவர் கதைத் தொகுப்பில் **"நாமே செய்த நோயாளர் வண்டி"** என்னும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக. |

DRAFT

## 13 கருப்பொருள்: ஒளியுடன் (வெளிச்சத்துடன்) விளையாட்டு

**தேர்ச்சி** :-

- ஒளி முதல், ஒளி, கண் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பைக் கற்றாய்வார்.
- கண்ணின் பாதுகாப்பு தொடர்பாகக் கவனஞ் செலுத்தி நாளாந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவார்.
- இயற்கையான ஒளி மாற்றங்களின்படி சூழலில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் ஒளியை மாற்றத்தக்க விதங்கள் பற்றித் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.
- அழகூட்டுவதற்காக, ஒளியைப் பயன்படுத்தி பல்வேறு ஆக்கங்கள் படைப்பார்.
- இயற்கை ஒளியின் செல்வாக்குகள் பற்றிக் கவனஞ் செலுத்தி பயனுள்ளவாறு விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- ஒளியுடன் செய்யத்தக்க அபிநயங்களை முதன்மையாகக் கொண்ட களிப்பூட்டும் வெளிப்பாடுகளை முன்வைப்பார்.

**கற்றற் பேறுகள்** :-

- எமக்கு ஒளி கிடைக்கும் வழிகளைக் குறிப்பிடுவார்.
- அன்றாடக் கருமங்களின்போது கண்ணின் பாதுகாப்பு தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.
- இயற்கை ஒளியின் செல்வாக்குக் காரணமாக, சூழலின் வெவ்வேறு பொருள்களில் ஏற்படும் மாற்றங்களைத் தேடியறிவார்.
- வெவ்வேறு பொருள்களைப் பயன்படுத்தி, ஒளியின் பரவுகையை மாற்றத்தக்க விதத்தையும் ஒளியைத் தெறிக்கச் செய்யத்தக்க விதத்தையும் கையாண்டு பார்ப்பார்.
- நிழல் பொம்மைகள் அமைப்பார்.
- நிழல் சார்ந்த ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- ஒளியின் மூலம் வெவ்வேறு கோலங்களையும் நிறங்களையும் உருவாக்கத்தக்க ஆக்கங்களைச் செய்வார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**


- யாதேனுமொன்றைப் பார்ப்பதற்கு, கண்களின் அவசியம் பற்றி மாணவருடன் உரையாடுக.
- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.
- மாணவர் அனைவரையும் வட்டமாக நிறுத்துக. ஒரு மாணவனை வட்டத்தின் மத்திக்கு அழைக்குக.
- அம்மாணவனின் கண்களைத் துணி நாடாவொன்றினால் கட்டி, யாதேனுமொன்றை அம்மாணவனின் கையில் கொடுத்து அதனை இனங்காணச் செய்க.

DRAFT

- வட்டத்தின் மத்தியில் பொருளைக் கையில் வைத்திருக்கும் மாணவன், வட்டத்தில் நிற்கும் மாணவரிடம் வினாக்கள் வினவியவாறு தமது கையில் உள்ள பொருளை இனங்காண வழிப்படுத்துக.
- இனங்காண முடியாமற் போனதாயின் சிறிது நேரத்தின் பின்னர், அம்மாணவனின் கண் கட்டை அவிழ்த்து கையில் உள்ள பொருள் யாது? என இனங்காணச் செய்க.
- இவ்வாறாக வேறு மாணவர்களையும் வட்டத்தின் மத்திக்கு அழைத்து, சில தடவைகள் இச்செயற்பாட்டைச் செய்க.
- கண்கள் கட்டப்பட்ட நிலையில் கையில் கிடைத்த பொருளைச் சரியாக இனங்காண்பது கடினமாக இருந்தமைக்கான காரணத்தை மாணவரிடம் வினவுக.
- அதற்கமைய கண்களால் பார்க்க முடியாத போது ஏற்படும் நிலமை குறித்த உரையாடுக. உ-ம்:
    - சுற்றப்புறச் சூழலைப் பார்க்க/ காண முடியாமை
    - ஏனையோரின் உதவியைப் பெற்றுச் செயற்பட நேரிடுகின்றமை.
    - பாடங்களைப் படிக்க முடியாமை
- எமது நாளாந்த வேலைகளின்போது கண்களுக்குப் பாதிப்பு ஏற்படத்தக்க சந்தர்ப்பங்கள் தொடர்பாக வலியுறுத்துக.
    - கூர்மையான பொருள்களால், தீயினால் (நெருப்பினால்) பிரகாசமான ஒளியினால், இருளில் வேலை செய்வதால், நச்சுத் தன்மையுள்ள திரவங்களால்
- அவ்வாறான பாதிப்புக்களிலிருந்து கண்களைப் பாதுகாத்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை விளக்குக.

செயற்பாடு - II

- சூரிய ஒளி காரணமாகச் சுற்றுப்புறத்தில் ஏற்படும் மாற்றங்களைத் தேடியறிவதற்காகப் பின்வருவது போன்ற ஒரு செயற்பாட்டைத் திட்டமிடுக.




- சம அளவுள்ள இரண்டு பூச்சாடிகளைப் பெற்று அப்பூச்சாடிகள் இரண்டிலும் பாசிப்யற்று வித்துக்களை நடுவதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பமளிக்குக.
- பூச்சாடிகளில் நீர் தெளித்து பாசிப் பயறு வித்துக்கள் முளைக்கும் வரையில் பொருத்தமான ஓர் இடத்தில் வைக்குக. பாசிப்பயறு வித்துக்கள் முளைத்த பின்னர் அச்சாடிகளுள் ஒன்றை மேலிருந்து சூரிய ஒளி கிடைக்கும் ஓர் இடத்தில் வைக்குக.
- மற்றைய பூச்சாடியை காட்போட் பெட்டியொன்றினுள் இட்டு ஒரு பக்கத்திலிருந்து மாத்திரம் சூரிய ஒளி கிடைக்குமாறு பெட்டியின் ஒரு பக்கத்தில் துளையொன்று அமைக்குக.

DRAFT


- அப்பாசிப்பயறு நாற்றுக்களுக்கு என்ன நடக்கும் என அனுமானித்துக் கூறுமாறு வழிப்படுத்தி மாணவரது கருத்துக்களைக் கூறச் சந்தர்ப்பமளிக்குக.
- சில நாள்களின் பின்னர், அப்பூச்சாடிகளில் உள்ள பாசிப்பயறு நாற்றுக்களுக்கு என்ன நடந்துள்ளது என அவதானித்துக் கூறுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- பாசிப்பயறு நாற்றுக்கள் தொடர்பாக சில நாட்களுக்கு முன்னர் கூறியவை நிகழ்ந்துள்ளதா? இல்லையா? எனக் கவனிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்குக.
- அதற்கமைய ஒளி கிடைக்கும் திசையில் தாவாரங்கள் திரும்பி வளைந்து வளர்கின்றமையை மாணவர்க்கு எடுத்துக்காட்டுக.
- மாணவருடன் பாடசாலைத் தோட்டத்திற்கு களப்பிரயாணம் செய்க. யாதேனும் தாவரம் சூரிய ஒளியை நோகச்கி வளர்ந்துள்ளதா எனத் தேடியறிய வழிப்படுத்துக.
- அதன்வழியே மாணவரது அறிவை மேலும் உறுதிப்படுத்துக.

செயற்பாடு - **III**

- மாணவர் தொகைக்குப் போதுமான அளவு சிறிய முகம் பார்க்கும் கண்ணாடித் (தளவாடித்) துண்டுகளை வழங்கி, பின்வருவன போன்றவற்றை அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
  - முகம் பார்க்கும் கண்ணாடி மூலம் தாம் தெரியும் விதம்
  - படமொன்று தெரியும் விதம்
  - கடதாசியொன்றில் எழுதிய எழுத்துக்கள் முகம்பார்க்கும் கண்ணாடியில் தெரியும் விதம்
- மேற்படி சந்தர்ப்பங்களில் முகம்பார்க்கும் கண்ணாடியில் அவை தெரியும் விதத்தை அறிக்கைப்படுத்த மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்குக.
- இரண்டு தளவாடித்துண்டுகளையும் ஒரு சிறிய பொருளையும் படத்தில் காட்டியுள்ளவாறு வைத்துக் கண்ணாடிகளிரண்டுக்கும் இடையிலான கோணத்தை மாற்றியவாறு கண்ணாடித் துண்டுகளின் ஊடாகத் தமக்குத் தெரிபவற்றை விவரிக்கச் சந்தர்ப்பமளிக்குக.




- முகம் பார்க்கும் கண்ணாடிகளிரண்டையும் முகத்தை முகம் நோக்கியவாறு சற்றுத் தூரத்தில் வைத்து அவற்றுக்கிடையே ஒரு சிறிய பொருளை வைக்குக.
- கண்ணாடிகளின் ஊடாக தெரிபவற்றை அவதானித்துக் கூறச் சந்தர்ப்பமளிக்குக.
- படத்தில் காட்டியுள்ளவாறு சமமான அளவுள்ள நான்கு தளவாடிகளை முகம் உட்புறமாக அமையும் வண்ணம் வைத்து, செலோரேப் இட்டு ஒட்டி அல்லது துண்டு நாடாவினால் அல்லது வேறு பொருத்தமான பொருளினால் கட்டி இறுக்கமாகப் பொருத்திக் கொள்க.



- படமொன்று/ டிசைன் ஒன்று உள்ள கடதாசித்துண்டை அல்லது துணித்துண்டை பிரிஸ்டல் அட்டையொன்றில் ஒட்டி நான்கு கண்ணாடிகளாலான சதுர வடிவத்தை விடச் சற்று பெரியதாக வெட்டியெடுத்துக் கொள்க.
- படம் அடங்கியுள்ள பிரிஸ்டல் அட்டையை மேசை மீது வைத்து நான்கு தளவாடிகளைக் கொண்டு ஆக்கிய அமைப்பை நிலைக்குத்தாக அதன் மீது வைக்குக.
- கண்ணாடிகளின் ஊடாகத் தெரிபவற்றை அவதானிக்கு மாறு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக. அது தொடர்பாக மாணவரது கருத்துக்களை வினவுக.

செயற்பாடு - **IV**

- வெண்ணிற தடித்த கடதாசித்துண்டில்/ பிரிஸ்டல் அட்டைத்துண்டில் ஓரளவு பெரிய வட்டங்கள் சிலவற்றை வெட்டியெடுக்குக. (ஏறத்தாழ 10 சென்ரி மீற்றர் விட்டமுள்ள) வட்டங்களை சமமான மூன்று பகுதிகளாக அல்லது ஆறு பகுதிகளாகப் பிரித்துக் கொள்க.





- படத்தில் குறிப்பிட்டுள்ளவாறு வட்டத்தின் பகுதிகளை அந்தந்த நிறத்தில் நிறந்தீட்டுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- பின்னர் வட்டத்தின் மத்தியில் சிறு துவாரம் இட்டு, அதனூடாக பென்சிலின் கூர் முனையைச் செலுத்தி நிறுத்தி, நிற வட்டத்தை வேகமாகச் சுழற்றி அவதானிக்கச் செய்க. அவதானித்தவை பற்றி மாணவரிடம் வினவுக.

  உ-ம்:
  - அட்டையில் இருந்த நிறங்கள் தெரிகின்றனவா? அல்லது நிறங்கள் வேறுபட்டுத் தெரிகின்றதா?
  - சுழற்றும் போது தெரியும் நிறங்கள் எவை?

செயற்பாடு - **V**


- ஊடு காட்டும் தன்மையுள்ள வர்ண செலேபேன் தாள்துண்டுகளை உள்ளடக்கி வர்ணச் சட்டகங்கள் சிலவற்றை ஆக்கிக் கொள்க.



- அவ்வர்ணச் சட்டகம் ஒவ்வொன்றுக்கும் பின்னால் மின்சூள் ஒன்றின் ஒளியை விழச் செய்து அவ்வொன்றினதும் ஒளியைப் பார்க்கச் சந்தர்ப்பமளிக்குக.
- அவ்வர்ணச் சட்டகங்கள் மூலம் கிடைக்கும் ஒளி பற்றி உரையாட மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- இவ்வாறான வெவ்வேறு நிறச்சட்டகங்கள் இரண்டை அல்லது மூன்றை ஒன்றின்மீது ஒன்றாக வைத்து அதனூடாக மின்சூள் ஒளியைப் பாய்ச்சி தோன்றும் நிறங்களை அவதானிக்க வழிப்படுத்துக.
- முகம் பார்க்கும் கண்ணாடிகள் (தளவாடிகள்) சிலவற்றைப் பெறுக. அவற்றைச் ஆரிய ஒளியில் பிடித்து தெறிக்கும் ஒளியை வண்ணச் சட்டகங்கள் மீது விழச் செய்து இச்செயற்பாட்டில் ஈடுபட மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

DRAFT


செயற்பாடு - **VI**



- ஒளியின் பரம்பலைக் குறைத்தல், அதிகரித்தல் தொடர்பான அனுபவங்களை வழங்குவதற்காகப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பமளிக்குக. இவ்வாறான செயற்பாடுகளை நடத்துவதற்காகப் பெரிய காட்போட்பெட்டியொன்றை அல்லது ஒரு மறைப்பைப் பயன்படுத்தி மறைப்பிட்டு இருளாக்கிய ஓர் இடத்தைத் தயார்ப்படுத்திக் கொள்க.
- மின்சூள் ஒளியைப் பெறுக.
- அதனை ஒளிரச் செய்து அதிலிருந்து ஒளி பரம்பும் விதத்தை அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மின்சூளின் தலைப்பகுதியைக் கழற்றி, மின்குமிழ் வெளிப்படுமாறு வைக்குக. மின்சூளின் மின்குமிழை ஒளிரச் செய்து அதிலிருந்து பரவும் ஒளியை அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மறைப்பு இடுவதன் மூலம் ஒளியின் பரம்பலைக் கூட்டலாம் குறைக்கலாம் என்பதை விளங்கிக் கொள்ளச் சந்தர்ப்பமளிக்குக.
- இது தொடர்பாக மேலும் அனுபவங்களைப் பெறுவதற்காக பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துக.
- சம அளவான சதுர வடிவக் கடதாசிகள் சிலவற்றைப் பெறுக. ஒவ்வொரு கடதாசியின் நடுவிலும் சில துளை இடுக.
- கடதாசிகளைக் கொண்டு வெவ்வேறு அளவுடைய சுருள்கள் ஆக்கிக் கொள்க.
- படத்தில் காட்டியுள்ளவாறு அத்துளைகளின் ஊடாக மின்குமிழைப் புகுத்துக. பின்னர் மின்குமிழை ஒளிரச் செய்க. சுருள்களின் ஊடாக ஒளி பரவுவதன் வேறுபாடுகளை அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக.

செயற்பாடு - **VII**

- படத்திற் காட்டியவாறு சம அளவான நீண்ட செவ்வக வடிவ (சாதாரண) கண்ணாடிக் கீலங்களை/ துண்டுகளை ஒன்றுடனொன்று சாய்வாக அமைக்குமாறு வைத்துக் கறுப்புநிறக் கடதாசியினால் சுற்றுக. ஒரு அந்தத்தில் ரிசூ தாள் துண்டு ஒன்றை ஒட்டுக.





- திறந்த அந்தத்தின் (முனை) ஊடாக வர்ணக்கடதாசித்துண்டுகள், சிறிய பூ இதழ்கள் போன்றவற்றை இட்டு உருவாகும் கோலங்களைத் திறந்த அந்தத்தின் உடாக அவதானித்து களிப்புறுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

செயற்பாடு - **VIII**


- மாணவரை திறந்த வெளியான இடத்திற்கு அழைத்துச் செல்க.
- நிழலை மிதித்தல் தொடர்பான ஆக்கபூர்வமான ஒரு விளையாட்டில் ஈடுபடுவதற்காக மாணவரை இருவரிருவராகப் பிரிக்குக.
- ஒவ்வொரு சோடிக்கும் ஒவ்வொரு பட்டம் வீதம் வழங்குக.
- பட்டத்தைக் கையில் வைத்துள்ள மாணவன் அதனைப் பறக்கவிட்டவாறு அங்குமிங்கும் ஓடும்போது தோன்றும் படத்தின் நிழலை மற்றைய மாணவன் மிதிக்க முயற்சி செய்தல் வேண்டும் எனக் கூறிச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- பின்னர் பட்டத்தை மற்றைய மாணவனிடம் கொடுத்து ஓடச் செய்து செயற்பாட்டைத் தொடர்ந்தும் நடத்துக.

செயற்பாடு - **IX**

- கடதாசியைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய எளிமையான வெளிச்சக்கூடுகள் ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- படத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தடித்த கடதாசியில் வெட்டியெடுத்த சதுர வடிவ அட்டைகள் நான்கினை எடுக்குக.
- அவ்வட்டைகள் நான்கிலும் படத்தில் (உரு 1) காட்டியுள்ளவாறு ஒரு பக்கத்தில் சிறிய பகுதியை மடிக்குக.
- கடதாசியின் நடுப்பகுதியில் பொருத்தமானவாறு யாதேனும் தளவடிவில் பகுதியை வெட்டியகற்றுக. (உரு. 2)



(உரு. 1)



(உரு. 2)

- வெட்டி நீக்கிய இடத்தில் உட்புறத்தே செலோபேன் கடதாசித் துண்டொன்றை ஒட்டிக் கொள்க.
- முறிகோடுகளால் காட்டியுள்ள பகுதியைப் பயன்படுத்தி, வெளிச்சக்கூட்டை ஒட்டிப் பூரணப்படுத்துக.
- வெளிச்சக்கூட்டின் மேற்பகுதியில், அதனைத் தொங்க விடுவதற்கு ஏற்றவாறான ஒரு நூலைக் கட்டுக. கீழ்ப்பகுதியில் மெல்லிய கீற்றுக்களாக வெட்டிய கடதாசிக் கீலங்களை ஒட்டி அழகுபடுத்திக் கொள்க.
- வெளிச்சக்கூட்டுக்கு ஒளியேற்றினால் அது எவ்வாறு காட்சியளிக்கும் என மாணவரிடம் வினவுக.
- இவ்வாறான வெளிச்சக்கூடுகளை மேன்மேலும் ஆக்கபூர்வமான வகையில் முன்வைப்பதற்காகச் செய்யத்தக்கவை பற்றி மாணவரது கருத்துக்களை வினவுக.
- மாணவரது கருத்துக்களைப் பரீட்சார்த்தமாகக் கையாண்டு பார்த்து ஒவ்வொருவரும் விரும்பியவாறு வெளிச்சக்கூடுகள் தயாரிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- சமய உற்சவங்கள் மற்றும் ஏனைய விசேட உற்சவங்கள் நிகழ்வுகளின்போது இவ்வாறான ஆக்கங்கள் மூலம் வகுப்பை அழகுபடுத்துமாறு மாணவர்க்கு ஆர்வமூட்டுக.
- வெவ்வேறு அளவு தடிப்புள்ள வெவ்வேறு நிறங் கொண்ட (செய்தித்தாள், மெழுகுத்தாள் போன்ற) கடதாசிகளைப் பயன்படுத்தியும் இவ்வாறான வெளிச்சக் கூடுகளை உருவாக்கி, அவற்றிலிருந்து ஒளி பரம்பும் விதத்தை அனுபவிக்கச் சந்தர்ப்பமளிக்குக.

DRAFT

## 14 கருப்பொருள் : மனிதர் வேலை செய்யும் இடங்கள்

**தேர்ச்சி** :-

- கிட்டிய - சுற்றுப்புறச் சூழலில் ஆட்கள் சீவனோபாயத்துக்காக வேலை செய்யும் இடங்களையும் அவ்விடங்களில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் விதத்தையும் நுணுகியாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
- வெவ்வேறு கருமங்களுக்காகப் பயன்படுத்தும் ஆடையணிகள், உபகரணங்களை இனங்கண்டு அறிக்கைப்படுத்துவார்.
- மனிதர் சீவனோபாயத்துக்காகச் செய்யும் கருமங்களையும் அவற்றினால் ஆற்றப்படும் சேவைகளையும் மதிப்பார்.
- மனிதர் வேலை செய்யும் இடங்கள் சார்ந்த அசைவுகளைப் போலச் செய்தல் மற்றும் சமனிலையைப் பேண வேண்டிய செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- வேலை செய்யும் இடங்கள், பயன்படுத்தும் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான ஆக்கங்களைச் செய்வார்.
- மனிதர் வேலை செய்யும் இடங்கள் தொடர்பான தகவல்களைக் களிப்புடன் முன்வைப்பார்.

**கற்றற் பேறுகள்** :-

- சுற்றுப்புறச் சூழலில் மனிதர் வேலை செய்யும் இடங்கள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துவார்.
- மனிதர் வேலை செய்யும் இடங்களில் தமது பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளும் முறைகளை அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.
- வெவ்வேறு கருமங்களுக்காகப் பயன்படுத்தும் ஆடையணிகளும் உபகரணங்களும் தொடர்பான தகவல்களை நுணுகியாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
- மனிதர் சீவனோபாயத்துக்காகச் செய்யும் பல்வேறு வேலைகள் காரணமாக ஆற்றப்படும் சேவையை மதிப்பார்.
- வேலை செய்யும் சந்தர்ப்பங்களில் மனிதர் பயன்படுத்தும் பொருள்கள், உபகரணங்களின் மாதிரியுருக்கள் அமைப்பார்.
- சமநிலையைப் பேணியவாறு வேலை செய்ய உதவும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- மனிதர் வேலை செய்யும் இடங்களில் பயன்படும் பல்வேறு நாட்டார் பாடல்களைப் பாடியவாறு நடிப்பார்.
- வேலை செய்யும் இடங்களில் மனிதரின் நடத்தைகளை வெளிப்பாட்டு அசைவுகள் மூலம் முன்வைப்பார்.

DRAFT

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- வாழ்க்கையின்போது எமக்குத் தேவையான நாளாந்த வேலைகள் வெற்றிகரமாகவும் இலகுவாகவும் செய்வதற்காக வெவ்வேறு தொழில்களில் ஈடுபடுவோரின் உதவி தேவைப்படுகின்றமையை உரையாடி வெளிக்கொணர்க.

  உதாரணம்:
  - கீரை, காய்கறி, பழவகை விற்பனை செய்யும் வியாபாரம் செய்வோர்.
  - தேங்காய் பறிப்போர்
  - மரங்களில் கிளை தறிப்போர்
  - ஆடை துவைப்போர்
  - கத்தி, கத்தரிக்கோல் கூர்மையாக்குவோர்
  - வாகனம் பழுதுபார்ப்போர்
  - பழைய பொருள்கள் வாங்குவோர் (இரும்பு, பிளாத்திக்கு, போத்தல், பத்திரிகை, துணிமணி)
  - மின் சாதனங்கள் பழுதுபார்ப்போர்
  - சப்பாத்து தைப்போர்/ குடை திருத்துவோர்/ பயணப் பை தைப்போர்
  - சுத்திகரிப்போர்
  - குப்பை கூளங்களைச் சேகரித்து எடுத்துச் செல்வோர்
  - கடிதம் பகிர்வோர் தபாற் காரர் ... போன்றோர்
- பின்வரும் விடயங்களின் வழியே இவ்வாறான தொழில்களில் ஈடுபடுவோரின் சேவைகள் தொடர்பாக உரையாடுக.

  உ-ம்:
  - அவர்கள் வேலைகளைச் செய்யும் விதம்
  - அவர்கள் பயன்படுத்தும் உபகரணங்கள்
  - அவர்கள் அவ்வேலைகளைச் செய்வதற்காக எடுக்கும் முயற்சி/ எத்தனம்
  - அவ்வேலைகள் காரணமாக கிடைக்கும் சேவைகள்
  - அவ்வேலைகளின் ஆபத்தான தன்மை ... போன்றவை
- இவ்வாறான வேலைகளில் ஈடுபடுவோரின் சேவை உரியவாறு நிகழவில்லையெனின், அவர்களது சேவை கிடைக்காத வேளைகளில் ஏற்படத்தக்க நிலைமைகள் அவை எமது நாளாந்த வேலைகளைச் செய்யும்போது அதன் காரணமாக ஏற்படத்தக்க தடங்கல்கள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.

  உ-ம்:
  - கீரை வகை, காய்கறிகள், பழ வகைகள், விற்பனை செய்வோர் இல்லாதவிடத்து புத்தம் புதிய உணவு வகைகளைப் பெற முடியாத நிலை ஏற்படுதல்
  - பழைய பொருள்களைச் சேகரிப்போர் இல்லாதவிடத்து பயன்படுத்திக் கழித்த பொருள்கள் காரணமாக வீடு அசுத்தமடைதல், நேர்த்தி குன்றுதல், பிராணிகள் பரவுதல் (கரப்பான் பூச்சி, எலி ..)

DRAFT

- மரக்கிளை கொய்வோர் இல்லாத போது மரங்கள் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் அதிகரித்தல் ... போன்ற விடயங்களை வெளிக்கொணர்ந்து அவ்வறானோரின் சேவைகளினது முக்கியத்துவம் குறித்து உரையாடுக.
- நாம் இவ்வாறான தொழில்களில் ஈடுபடுவோரின் சேவைகளைப் பெறும்போது அவர்களது கௌரவம் பாதிக்கப்படாதவாறும் கருணையுடனும் அவ்வேலைகளைச் செய்வித்துக் கொள்ளல் வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுக.

செயற்பாடு - **II**

- பாடசாலைக்குக் கிட்டியதாக அமைந்துள்ள வேலைத்தளமொன்றை (பெரிய தொழிற்சாலை அல்ல) தெரிவு செய்து கொள்க. அதனைப் பார்வையிடுவதற்காக மாணவருடன் களப்பிராயணம் செய்க.

  உதாரணம்:

  வாகனம் பழுதுபார்க்கும் இடம், செங்கல் அரியும் இடம், விவசாய நிலம்
- அந்த இடத்திற்கு சென்று ஆசிரியர் முன்கூடியே அவ்விடத்துக்குச் சென்று, மாணவரை வழிப்படுத்த வேண்டிய - கற்கைக்குரிய விடயங்கள், இடங்கள், மாணவரை நெறிப்படுத்த வேண்டிய விதம் தொடர்பான திட்டமொன்றினைத் தயாரித்துக் கொள்க.
- வேலைத் தளத்தைப் பார்வையிடச் சென்று மாணவருடன் பின்வரும் விடயங்களின் வழியே தகவல்களைச் சேகரிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
  - அணிந்திருக்கும் ஆடையணிகள்
  - பயன்படுத்தும் உபகரணங்கள் கருவிகள்
  - செய்யும் உற்பத்திகள்
  - வேலை செய்வோர் ஆண்களா? பெண்களா?
  - பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்வதற்காகக் கையாண்டுள்ள உத்திகள்
  - பார்வையிட்ட இடங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விதம்
- களப்பிரயாணத்தை நிறைவு செய்து திரும்பி வந்த பின்னர் பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் மாணவருடன் கலந்துரையாடுக.

  உ-ம்:
  - உற்பத்தி செய்த உற்பத்திப் பொருள் எது?
  - அது எவ்வாறு செய்யப்பட்டது?
  - எவ்வாறான மூலப்பொருள்கள் பயன்படுததப்பட்டன?
  - அங்கு ஒவ்வொருவரும் செய்த வேலைகள் யாவை?
  - பயன்படுத்திய உபகரணங்களின் தொழிற்பாடு எவ்வாறானது? .... போன்றவை.
- மேற்படி விடயங்களைக் கலந்துரையாடி, இவ்வாறாக உற்பத்திகள் மனிதனின் உழைப்பின் விளைவாகவே எமது கைகளில் கிடைக்கின்றன என்பதையும் அவ்வுற்பத்திகளை நுகரும்போது சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும் அம்மனிதர்கள் செய்யும் சேவையை மதித்தல் வேண்டும் என்பதையும் விளக்குக.
- மாணவரைச் சிறு சிறு குழுக்களாகப் பிரித்து பார்வையிட்ட இடத்தில் தமது மனதைக் கவர்ந்த ஒரு சந்தர்ப்பத்தை வகிபாகமேற்று நடித்தல் மூலம் காட்டுமாறு வழிப்படுத்துக.



DRAFT

செயற்பாடு - **III**

- வேலை செய்யும்போது ஏற்படும் களைப்பைப் போக்கிக் கொள்வதற்காக வேலைத் தளங்களில் வேலை செய்வோர் வெவ்வேறு கவிதைகள், பாடல்கள் பாடுகின்றமையை மாணவர்க்கு விளக்குக.
- அவ்வாறான நாட்டார் பாடல்கள் அல்லது கவிதைகளைப் பாடியாடுமாறு மாணவரை வழிப்படுத்துக.

உ-ம்:

1. **மீனவர் பாடல்**

தண்ணீரிலே என் படகு - சலசலா
தண்ணீரிலே என் படகு - சலசலா

தேக்கு மரத்தாலே என் படகு - சலசலா
தெரிந்தவன் செய்தானே என் படகு - சலசலா

தண்ணீரிலே என் படகு - சலசலா
தண்ணீரிலே என் படகு - சலசலா

2. **கம்மாலைக்காரர் பாடல்**

அந்த அரிவாள் இந்த அரிவாள்
- ஏலேலக் குயிலே
உருக்கி வைச்ச கருக்கருவாள்
- ஏலேலக் குயிலே
சாயம் நல்ல பிடியரிவாள்
- ஏலேலக் குயிலே
சாயுதம்மா நெல்லும் புல்லும்
- ஏலேலக் குயிலே

3. **வயல்வேலைப் பாடல்**

பச்சை நாற்றுப் பளபளென்ன
- ஏலங்கிடி லேலோ
பாயுதம்மா ஏரித்தண்ணி
- ஏலங்கிடி லேலோ
குருவிகளும் சிறு விட்டில்களும்
- ஏலங்கிடி லேலோ
கதிர்மேலே கண்ணு வைக்கும்
- ஏலங்கிடி லேலோ



DRAFT

**செயற்பாடு - IV**

- வெவ்வேறு வேலைகளில் ஈடுபடுவோர், அவ்வேலைகளைச் செய்யும்போது தமது பாதுகாப்புக்காக செய்பவை தொடர்பாக, மாணவரது கவனத்தை ஈர்க்குக.
- மாணவர்களின் அனுபவத்தின்படி ஒரு தொழிலின் அல்லது சில தொழில்களின் ஆபத்தான பாதுகாப்பற்ற சந்தர்ப்பங்களை இனங்காண்பார்.

  உதாரணம்:
  - செங்கல் அரியும் வேலைத்தளத்தில் அதிக வெயில் காரணமாக ஏற்படும் பாதிப்புக்கள்
  - கருங்கல் உடைக்கும் வேலைத்தளத்தில் பயன்படுத்தும் உபகரணங்கள் காரணமாக ஏற்படத்தக்க பாதிப்புக்கள்
  - நெல் குற்றும் ஆலையில் உபகரணங்கள் காரணமாக ஏற்படத்தக்க பாதிப்புக்கள்
- இவ்வாறான பாதிப்புக்களில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக அங்கு வேலை செய்வோர் கையாண்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை வினவுக.

  உதாரணம்:
  - பாதுகாப்பு உடை அணிதல்
  - தலைக்கவசம் அணிதல்
  - பாதணி அணிதல்
  - கையுறை அணிதல்

  நாளாந்தம் வீட்டிலும் பாடசாலையிலும் வேலைகள் செய்யும்போது நாம் விபத்துக்களில் இருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பாகக் கவனம் செலுத்துவதன் அவசியத்தை வலியுறுத்துக.

**செயற்பாடு - V**

- மனிதர் வேலைத்தளங்களில் பாதுகாப்புக்கான அணிபவற்றினைக் காட்டும் படங்கள் அல்லது ஒளிப்படங்கள் அல்லது வீடியோக் காட்சிகளைத் தேடிப்பெறுக.
- அவற்றைப் பயன்படுத்தி, வேலைத்தலங்களில் பயன்படுத்தும் ஆடையணிகள் தொடர்பாகவும் அவற்றைப் பயன்படுத்தும் விதம் காரணங்கள் தொடர்பாகவும் மாணவரது அனுபவங்கள் மேலும் உறுதிப்படுத்துக.

  உதாரணம்:
  - விவசாயக் கருமங்களின்போது தொப்பி அல்லது தலையணி அணிதல்
  - கட்டட நிர்மாண வேலைத்தலங்களில் சீமந்து தொடுகையுறுவதால் உள்ளங்காலிலும் உள்ளங்கையிலும் புண்கள் போன்றவை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக பாதணி, கையுறை அணிதல்.
  - அவ்வாறான சந்தர்ப்பங்களில் நிகழத்தக்க விபத்துக்களின்போது தலையைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தலைக்கவசம் அணிதல் (Helmet)
  - பெருந்தெருக்களில் பராமரிப்புப் பணிகளில் ஈடுபடுவோர் பாதுகாப்புப் பாதணி (றப்பர் பாதணி Boots) அணிதல்
  - கடுமையான வெயிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகத் தொப்பி அணிதல், நீண்ட கைச்சட்டை அணிதல், நீண்ட காற்சட்டை அணிதல்
  - மின்கம்பித் தொகுதிகளைப் பராமரிப்போர், உயரமான இடங்களில் பராமரிப்பு அல்லது பாதுகாப்பு வேலைகளைச் செய்யும் போது இடுப்புடன் இணைந்த ஒரு வடத்தைக் கொண்டு தம்மைப் பிணைத்துக் கொள்ளல்
- காய்ச்சியிணைக்கும் (Welding) வேலைகளில் ஈடுபடுவோர் பாதுகாப்புக்கண்ணாடியினால் முகத்தையும் கண்களையும் மறைத்துக் கொள்ளல் போன்றவை.

DRAFT

- தூசு, நோய்க்கிருமிகள் போன்றவற்றிலிருந்தும், விவசாய இரசாயனங்களின் பயன்பாட்டின் போதும் பாதுகாப்புப் பெறுவதற்காக மூக்கு - வாய்க் கவசம் அணிதல்
- அதற்கமைய வேலைத்தளங்களில் வெவ்வேறு வகை ஆடையணிகள் அணியப்படுகின்றமையையும் அவற்றின் மூலம் பாதுகாப்பை எற்படுத்திக் கொள்ள முடியும் என்பதையும் மாணவர்க்கு விளக்குக.

**செயற்பாடு - VI**

- மாணவர் பார்வையிட்ட வேலைத்தலங்களில் அல்லது வேலை நிலையங்களில் வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகப் பயன்படுத்தும் ஆடையணிகள், உபகரணங்களின் மாதிரிகளை ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துக. பொருத்தமான ஊடகங்களைப் பயன்படுத்தச் சந்தர்ப்பமளிக்குக.

  உ-ம்:

  - ஏணி
  - மூக்கு - வாய்க் கவசம்
  - தலைக்கவசம்
  - மண்வெட்டி

  போன்றவற்றின் மாதிரியுருக்கள்
- மாணவரது ஆக்கங்களை வகுப்பு மாணவர் அனைவரும் பார்க்கத்தக்கவாறு காட்சிப்படுத்துக.
- மாணவரது ஆக்கங்களைப் பாராட்டுக.

**செயற்பாடு - VII**

- மாணவரது அனுபவங்களின்படி மனிதர் செய்யும் வேலைகளை ஒவ்வொன்றாகத் தனித்தனிக் கடதாசித் துண்டுகளில் (சீட்டுக்களில்) எழுதி அவற்றை ஒரு பெட்டியில் இடுக.
- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்திற்கு அழைத்து செல்க.
- வாத்திய இசையுடன் சீட்டுக்கள் அடங்கியுள்ள பெட்டியை ஒரு மாணவரிடம் கொடுத்து ஆளுக்காள் கைமாற்றி அனுப்புமாறு அறிவுறுத்துக.
- வாத்திய இசை நிறுத்தப்படும் வேளையில் பெட்டியைக் கையில் வைத்திருக்கும் மாணவன் பெட்டியிலிருந்து ஒரு சீட்டை அல்லது துண்டை வெளியே எடுத்து அதில் குறிப்பிடப் பட்டுள்ள வேலையை ஊமமாகச் (மௌனமாக) செய்து காட்டுதல் வேண்டும்.

  உதாரணம்:

  - துவிச்சரக்கர வண்டி சென்று கடிதம் பகிர்தல் அலலது பத்திரிகை பகிர்தல்
  - மரமரிதல், சீவுளியால் பலகை சீவுதல்
  - வயல் உழுதல், அரிவு வெட்டல்
  - ஆடை அழுத்துதல்
  - சுவரில் பூச்சுப் பூசுதல் ... போன்றவை
- மாணவன் ஊமமாக மௌனமாக முன்வைத்த செயல் அல்லது வேலை யாது என ஏனைய மாணவர்கள் இனங்காண முயற்சி செய்தல் வேண்டும்.
- இவ்வாறாக மாணவர் அனைவருக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமாறு செயற்பாட்டைத் தொடர்ந்து நடத்துக.

| |
|---|
| சமூக ஒருங்கிணைப்பு எண்ணக் கருவுக்கென எழுதப்பட்டுள்ள சிறுவர் கதைத் தொகுப்பில் **"எறும்புகளின் வேலை"** என்னும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக. |

DRAFT

## 15 கருப்பொருள் :சுற்றுப்புறத்தில் வெவ்வேறுபட்ட இடங்கள்

**தேர்ச்சி** :-

- சூழலின் வெவ்வேறு இடங்களில் மனிதனால் செய்யப்படும் பாதக மான மாற்றங்களை இனங்கண்டு அந்த இடங்களை நல்ல இடங்களாக மாற்றுவதற்கு ஆவன செய்வார்.
- இயற்கையாகவும் மனிதனின் செயற்பாடுகள் காரணமாகவும் சூழல் மீது ஏற்படும் பாதகமான தாக்கங்களையும் அத்தாக்கங் களிலிருந்து மண்ணைப் பாதுகாப்பதற்காக எடுக்கத்தக்க நடவடிக் கைகளையும் நுணுகியாய்வார்.
- சூழலின் பல்வகைமைக்குப் பொருத்தமான ஆக்கங்கள் செய்து சூழலின் அழகைப் பேணிவருவார்.
- பாடசாலைச் சூழலின் வேறுபட்ட இடங்களுக்கு அமைவாக அடிப் படையான உடல் தகைமையை வளர்க்கத்தக்க இயக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- சுற்றுப்புறத்தில் வேறுபட்ட இடங்களில் காணப்படும் பல்வகைமை யை எடுத்துக்காட்டும் சந்த/ தாள/ லய அசைவுகளைக் களிப்புடன் முன்வைப்பார்.

**கற்றற் பேறுகள்** :-

- தமது பயனுக்காக மனிதன் சூழலில் செய்துள்ள மாற்றங்களைக் குறிப்பிடுவார்.
- மனிதச் செயற்பாடுகள் காரணமாக சூழலில் ஏற்பட்டுள்ள தாக்கங்களைத் தேடியறிந்து பதிவு செய்வார்/ அறிக்கைப் படுத்துவார்.
- மனித செயற்பாடுகள் காரணமாக சூழலில் ஏற்பட்டுள்ள பாதகமான மாற்றங்களைக் கொண்ட இடங்களை நல்ல இடங்களாக மாற்ற ஆவன செய்வார்.
- சுற்றுப்புறச் சூழலில் இயற்கையான செயற்பாடுகள் மற்றும் மனிதச் செயற்பாடுகள் காரணமாக மண்ணில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைக் குறைக்க ஆவன செய்வார்.
- வெவ்வேறு பொருள்களைப் பயன்படுத்தி பாடசாலைத் தோட்டத்தில் தெரிவு செய்து கொண்ட ஓர் இடத்தின் மாதிரியுருவை கட்டியெழுப்புவார்.
- தடங்கல்களை உள்ளடக்கிய ஆக்கிய சூழலில் பெரிய தசைகள் மற்றும் சிறிய தசைகளின் அசைவுக்குப் பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- வெவ்வேறு பிரதியீட்டு/ புத்தளிப்பு வாத்தியக் கருவிகளைக் கொண்டு, சூழலில் கேட்கும் வெவ்வேறு ஒலிகளையும் நாதங் களையும் போலச் செய்து காட்டுவார்.

DRAFT

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- மனிதனால் சூழலில் ஏற்படுத்தப்பட்டுள்ள வேறுபாடுகள் பற்றித் தேடியறிவதற்காக பாடசாலை வளவில் களப்பிராணம் செய்க.
- பாடசாலை வளவில் பின்வரும் இடங்களை அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.

  உ-ம்:
  - விளையாட்டு மைதானம்
  - கட்டடங்கள்
  - விளையாட்டு முற்றம்
  - தோட்டம்/ பயிர்ச் செய்கைப்பாத்தி
  - பூச்சாடிகள்
  - நீர்க்குழாய் வாயில்கள் உள்ள இடம்
  - படிக்கட்டு வரிசை
  - மலசல கூடங்கள்
  - வேலை மேசை
  - பூம்பாத்தி
  - சிற்றுண்டிச்சாலை
- இந்த இடங்கள் இவ்வாறாக மாற்றப்பட முன்னர் எவ்வாறான நிலையில் இருந்திருக்கலாம் என அனுமானித்துக் கூறுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- நிலத்தில் செய்துள்ள மாற்றங்களுடன் பொருந்தியமைத்து அதனை மேலும் உறுதிப்படுத்துக.

  உதாரணம்:
  - விளையாட்டு மைதானம் அல்லது கட்டடம் அமைப்பதற்காக நிலத்தை மட்டப்படுத்தல்
- அதற்கமைய வெவ்வேறு தேவைகளுக்காகச் சூழலில் வெவ்வேறு இடங்களில் செய்யப் படும் செயல்களுக்கு ஏற்றவாறாக அவ்விடங்கள் மாற்றி அமைத்துக் கொள்ளப்படும் என்பதை மேலும் விளக்குக.

  உ-ம்:
  - வெவ்வேறு பயிர்களைச் செய்கை பண்ணுவதற்காக வெவ்வேறு விதமாக நிலத்தைப் பண்படுத்தல் அல்லது தயார்ப்படுத்தல்
  - கட்டடம் கட்டுவதற்காகத் தேவைக்கேற்ப நிலத்தைத் தயார்ப்படுத்தல்

**செயற்பாடு - II**

- மனிதச் செயற்பாடுகள் காரணமாக சூழலில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ள இடங்களை மாணவரது அனுபவங்களின் மூலம் இனங்காண்க.

  உ-ம்:
  - நீர் ஓடி அல்லது வழிந்து செல்லல் தடைப்பட்டுள்ள ஓர் இடம்
  - சூழலில் துர்மணம் வீசும் ஓர் இடம்
  - சரியாகப் பராமரிக்காமையால் அவலட்சணமாகக் காணப்படும் ஓர் இடம்
- இவ்வாறான இடங்கள் காரணமாக எமக்கு ஏற்படத்தக்க பாதிப்புக்கள் பற்றி மாணவர் கவனத்தை ஈர்க்குக.
- இவ்வாறான ஓர் இடத்தை அல்லது சில இடங்களைத் தெரிவு செய்து, அந்த இடங்களைச் சாதகமான அதாவது நல்ல இடங்களாக மாற்றுவதற்காகச் செய்யத்தக்க செயல்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுக.

DRAFT

உதாரணம்:

- சரியாகப் பராமரிக்காமை காரணமாக அவலட்சணமாகக் காணப்படும் ஓர் இடம்
- அழகுபடுத்துவதற்காகச் செய்யத்தக்கவை
  - குப்பைக் கூளங்களைக் கூட்டிப்பெருக்குதல்
  - குப்பைக் கூளங்களை உரிய இடங்களில் கொட்டுதல்
  - களைப்பூண்டுகளைக் களைதல்
  - தாவரங்களில் வளர்ந்துள்ள பயனற்ற கிளைகளைக் கொய்தல்
  - தரையில் பாசி வளர்ந்துள்ளதாயின் அவற்றை நீக்குதல்

- இக்கருமங்களைச் செய்வதன் மூலம் அவ்வறான இடங்களை அழகிய இடங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளைத் திட்டமிடுக.
- இவ்வாறான இடங்கள் மாசடைவதை அல்லது அழுக்கடைவதைத் தவிர்ப்பதற்காக, நாம் பின்பற்ற வேண்டிய நற்பழக்கங்கள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.
  உதாரணம்:
  - கடதாசித்துண்டுகளைக் கண்ட கண்ட இடங்களில் போடுவதைத் தவிர்த்தல்
  - உணவுண்ட பின்னர் மீதிகளை போன்றவற்றை கண்ட கண்ட இடங்களில் போடுவதைத் தவிர்த்தல்
  - பொலித்தீன் உறைகள் போன்றவற்றை உரியவாறு வெளியேற்றுதல்
- குப்பை கூளங்களை உரியவாறு வேறாக்கி அப்புறப்படுத்துவதற்காக வெவ்வேறு பாத்திரங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை மாணவர்க்கு வலியுறுத்துக.
- நாம் கழித்தொதுக்கும் குப்பை கூளங்களில், உக்கத்தக்க பொருள்களும் உக்காத பொருள்களும் அடங்கியிருக்கும் என்பதையும் அவற்றை வேறாக்கி வெவ்வேறு பாத்திரங்களில் சேகரித்து உரியவாறு வெளியேற்றுதல் வேண்டும் என்பதையும் மாணவர்க்கு விளக்குக.
- உக்கும் தன்மையுள்ள மற்றும் உக்காத பொருள்களை வெவ்வேறாக வெளியேற்று வதற்காகப் பாடசாலையில் அல்லது வகுப்பில் வெவ்வேறாகப் பாத்திரங்களை வைத்துப் பராமரிக்க ஆவன செய்க.
- அது தொடர்பாக மாணவர்க்கு ஆர்வமூட்டுக.

**செயற்பாடு - III**

- மனிதச் செயற்பாடுகள் காரணமாக மண்ணில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைப் பரிசீலிப்பதற்காகப் பின்வரும் செயற்பாடடில் மாணவரை ஈடுபடுத்துக.
- இதற்காக நிலம் சாய்வாக அமைந்துள்ள ஓரிடத்தைத் தெரிவு செய்து கொள்க.
- ஒரு பாத்திரத்தில் நீரை எடுத்து அச்சாய்வு மீது சாய்வின் அடிவாரத்தில் இருந்து சற்று உயரமான ஓர் இடத்தில் அந்நீரை ஊற்றி, மண்ணுக்கு யாது நிகழுகின்றது என அவதானிக்குக.
- கூம்பிய வாய் உள்ள பாத்திரமொன்றில் (கேத்தில், மூக்குப்பேணி) நீரை எடுத்து, நிலத்தில் சமதளமான ஓர் இடத்தில் சற்று உயரத்தில் இருந்து அந்நீரை ஊற்றி நிகழுபவற்றை அவதானிக்குக.

DRAFT

- நீர் காரணமாக மண் கழுவிச் செல்லப்படும் விதத்தையும் மேலே இருந்து நிலத்தின் மீது நீர் விழுவதால் நிலத்தில் ஏற்படும் மாற்றங்களையும் (சிறு பள்ளம் அல்லது குழி தோன்றல்) இனங்காண வழிப்படுத்துக.
- அதற்கமைய நீர் விழுகின்றமையால் மண் கழுவிச் செல்லப்படுகின்றமையை எடுத்துக் காட்டுக.
- இவ்வாறு கழுவிச் செல்லப்பட்ட இடங்களில் மண் செழிப்பற்றது என்பதைக் காட்டுவதற்காக பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துக.
- மேல் மண் படை கழுவிச் செல்லப்பட்டுள்ள ஓர் இடத்தில் இருந்தும் மேல் மண் படை கழுவிச் செல்லப்படாத ஒர் இடத்தில் இருந்தும் வெவ்வேறாக சிறிதளவு வீதம் மண்ணைப் பெறுக.
- இந்த இரண்டு மண் மாதிரிகளையும் ஊடுகாட்டும் தன்மையுள்ள கண்ணாடிப் போத்தல்களிரண்டில் (ஜாம் போத்தல்கள் போன்ற) இட்டு அவற்றினுள் சம அளவு வீதம் நீர் சேர்த்து நன்கு கலக்குக.
- சிறிது நேரத்தின் பின்னர் இரண்டு போத்தல்களையும் அவதானிக்குக.
- அதற்கமைய கழுவிச் செல்லப்படாத இடத்திலிருந்து பெற்ற மண் மாதிரி அடங்கியுள்ள பாத்திரத்தில் நீரின் மீது கறுப்பு நிறம் சார்ந்த உக்கிய இலைகுழை மீதிகள் (சேதனப் பசளைகள்) படையாக மிதப்பதை இனங்காண மாவணவரை வழிப்படுத்துக.
- மண் கழுவிச் செல்லப்படாத ஓர் இடத்திலிருந்து மண்வெட்டியினால் மண் பாளமொன்றினை வெட்டியெடுத்து அதனை அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக. அம்மண்ணின் மீது கறுப்புச் சார்ந்த உக்கிய இலைகுழைகளைக் கொண்ட (சேதனப் பசளைகள்) மென்மையான மண்படையொன்று உள்ளது என்பதையும் அதற்குக் கீழாக சற்று இறுக்கமான மண்படை உள்ளது என்பதையும் எடுத்துக்காட்டுக.
- இதற்கமைய மண் கழுவிச் செல்லப்படுகின்றமையால் மண் மேற்பரப்பில் உள்ள இளக்கமான மண் விரைவில் கழுவிச் செல்லப்படுமென்பதையும் செழிப்பான மண் கழுவிச் செல்லப்படுவதால் மண்ணின் செழுமை குறைவடைவதையும் விளக்குக.
- இவ்வாறாக மண்ணில் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்காகக் கையாளத்தக்க வழிவகைகள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுக.

  உ-ம்:
  - மேல் மண் கழுவிச் செல்லப்பட்டுள்ள இடங்களை இனங்கண்டு அவ்விடங்களில்
    - கல்வேலி அமைத்தல்
    - தேங்காய் உரிமட்டை அடுக்குதல்
    - மூங்கில் போன்ற தடிகளை நட்டு மறித்தல்
    - புற்பாளங்கள் பதித்தல், பாத்திகளில் மண் கழுவிச் செல்லப்படுவதைத் தவிர்ப்பதற்காக மேற்பரப்பில் வைக்கோல் பரப்புதல்
    - வடிகால் அமைத்தல்
    - மரங்கள் நடுதலும் நடப்பட்டுள்ள மரங்களைப் பாதுகாத்தலும்
- இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் மண் கழுவிச் செல்லப்படுவது தவிர்க்கப்படும் அல்லது குறைக்கப்படும் விதத்தை மாணவர்க்கு விளக்குக.

DRAFT

**செயற்பாடு - IV**

- நேரகாலத்துடன் அறிவித்து பதப்படுத்திய மண், தடிகள், உலர்ந்த இலைகள், ஈர்க்குகள், பலகைத்துண்டுகள் (40 சென்ரிமீற்றர் நீளம் x 30 சென்ரிமீற்றர் அகலமான) சிலவற்றை மாணவருடாகத் தருவித்துக் கொள்க.
- மாணவரை பாடசாலை வளவில் களப்பிரயாணம் அழைத்துச் செல்க.
- அக்களப்பிரயாணத்தின் போது,
  - நிலத்தின் தன்மை வேறுபட்டுள்ள இடங்கள் (கல், பரல் உள்ள இடங்கள்)
  - வெவ்வேறு இடங்களில் மரஞ்செடி கொடிகள் காணப்படும் விதம்
  - கறுப்பு நிறமாக அல்லது கபில நிறமாக உள்ள இடங்கள்
  - கட்டடங்கள் அமைந்துள்ள விதம்
- வகுப்பு மாணவர்களைச் சில குழுக்களாகப் பிரிக்குக.
- அவதானிப்புக் களப்பிராயணத்தின்போது கண்ட ஓர் இடத்தின் மாதிரியுருவொன்றினை ஆக்குமாறு அந்தந்தக் குழுவை வழிப்படுத்துக.
- தேவையான சந்தர்ப்பங்களில் அறிவுறுத்தல் வழங்குக.
- மாணவரது ஆக்கங்களைக் காட்சிபடுத்திப் பாராட்டுக.

**செயற்பாடு - V**

- செயற்பாட்டில் ஈடுபடுவதற்காக ஒரு எல்லையைக் குறித்துக் கொள்க.
- அங்கு சில இடங்களைத் தெரிவு செய்து அடையாளப்படுத்தி முட்கள் உள்ள இடம், சேறு உள்ள இடம், குழி உள்ள இடம், நீரோடை என்றவாறாக பெயர்பலகைகளை நிறுத்துக. இவற்றை தடைகளாகக் கருதுக.
- ஆசிரியை சைகை/ சமிக்ஞை வழங்கியவுடன் மாணவர் ஒவ்வொருவராக இந்த எல்லாத் தடைகளையும் கடந்து மீண்டும் ஆரம்ப இடத்திற்கு வர வேண்டும்.
- மாணவர்கள் அனைவரும் இச்செயற்பாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு - VI**

- மாணவர் இலகுவாக இசைக்கத்தக்க புத்தளிப்பு வாத்தியக்கருவிகள் சிலவற்றைத் தயாரித்துக் கொள்க. (பெற்றாரின் உதவியுடன் வீட்டில் அல்லது வகுப்பறையில் இவற்றைத் தயாரித்துக் கொள்ளலாம்.)
  - தகரத்தாலான குளிர்ப்பானப் போத்தல் மூடிகளை நன்கு தட்டையாக்கி நடுவில் துளை இட்டு கம்பியொன்றில் கோர்த்து நேர்த்தியாக ஆக்கிய கிலுக்கி
  - எக்ஸ்-ரே தாள் (X-Ray Sheet) ஒன்றினை மரச்சட்டகமொன்றில் இணைத்து ஆக்கிய ஒரு பக்க மேளம், அதனை இசைப்பதற்குப் பொருத்தமான குறுந்தடி
  - தகரப்பேணிகளிரண்டை சேர்த்து ஆக்கிய தம்பட்டம்
  - நன்கு சுத்திகரித்த ஒத்த அளவுள்ள சிரட்டைகள் - 2
  - கரண்டிகள் (உலோக) - 2
  - தகரப்பேணியொன்றினுள் யாதேனுமொரு வித்து வகை இட்டு ஆக்கிய கிலுக்கி (புளியங்கொட்டை, பாசிப்பயறு, கடலை, பருப்பு, மஞ்சாடி, குண்டுமணி, றப்பர் வித்துக்கள்)

DRAFT

- உரிமட்டை நீக்கிய தேங்காயின் பெரிய கண்ணைத்துளைத்து உள்ளே உள்ள தேங்காய்ச் சொட்டை வெளியேற்றி, அதனுள் சிறிய வகை வித்துக்களை இட்டு துளையில் தடியொன்றினை இறுக்கி ஆக்கிய கிலுக்கி
- ஒத்த அளவுள்ள குறுந்தடிகள் இரண்டு

- இவ்வாறாக புத்தளிப்புக் கருவிகள் மூலம் ஒலியெழுப்பும் விதத்தை மாணவர்க்குச் செய்து காட்டுக.
- சூழலில் கேட்கும் ஒலிகளைச் செவிமடுத்து அவ்வாறான ஒலிகளை மேற்படி புத்தளிப்புக் கருவிகளைக் கொண்டு பிறப்பிக்க முடியுமா? என்று கையாண்டு பார்க்க மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
  உதாரணம்:
  மழை பெய்யும் ஓசை
  இந்தப் புத்தளிப்புக் கருவிகளைக் கொண்டு இனிய நாதங்களைப் பிறப்பிக்கலாம் என்பதை அனுபவிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரது ஆக்கங்களை மதித்துப் பாராட்டுக.

| |
|---|
| சமூக ஒருங்கிணைப்பு எண்ணக் கருவுக்கென எழுதப்பட்டுள்ள சிறுவர் கதைத் தொகுப்பில் **“கரடிக் குடும்பத்தின் உல்லாசப் பயணம்”** என்னும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக. |

DRAFT

## 16 கருப்பொருள்: எமது உதவி தேவைப்படுவோர்

**தேர்ச்சி** :-

- சமூகத்தில் எமது உதவி தேவைப்படுவோரை இனங்கண்டு உதவி புரிய ஆவன செய்வார்.
- வெற்றியடைவதற்காக, ஒத்துழைத்து/ ஒற்றுமையாகச் செயற் படுவார்.
- ஏனையோருக்கு உதவி புரியத் தக்கவையாக ஆக்கங்கள் செய்வார்.
- பரஸ்பர ஒத்துழைப்பை வளர்ப்பதற்காக அசைவியக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- சமூகத்தில் வெவ்வேறு ஆட்கள் தொடர்பாக உணர்தன்மையை வெளிப்படுத்திக் காட்டும் வகிபாகமேற்று நடித்தல்களில் ஈடுபடுவார்.

**கற்றற் பேறுகள்** :-

- தேவையான சந்தர்ப்பங்களில் ஏனையோரது உதவியைப் பெறுவதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவார்.
- உதவி தேவைப்படுவோருக்கு உதவி புரிய முன்வருவார்.
- நாளாந்த வாழ்க்கையில் ஏனையோரது உதவியைப் பெற்றுக் கொள்வதன் அவசியத்தைக் கூறுவார்.
- வேலைகளைச் செய்யும்போது அதிக பெறுபேறு பெறுவதற்காக ஒத்துழைத்துச் செயற்படுவார்.
- ஒருவருக்கு அல்லது நிறுவனத்துக்கு உதவி செய்யும் வகையிலான வேலைகளில் ஈடுபடுவார்.
- ஏனையோருடன் ஒத்துழைத்துச் செயற்பட்டு அசைவு - இசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- வகிபாகமேற்று நடித்தல்கள்/ சிறு நாடகங்கள் மூலம் ஏனையோருக்கு உதவி செய்யத் தக்க விதத்தைக் காட்டும் வகிபாகமேற்று நடித்தல்களில் ஈடுபடுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - I**

- மற்றுமொருவருக்கு உதவி செய்த சந்தர்ப்பங்கள் பற்றிய நிகழ்வுகளடங்கிய கதைகளை மாணவர்களுக்குக் கூறுக. அவ்வாறான கதைகள் மூலம், ஒருவருக்கொருவர் உதவி புரிவதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுக.
- தாம் அல்லது குடும்ப உறுப்பினர் ஒருவர் மற்றொருவருக்கு உதவி புரிந்த ஒரு சந்தர்ப்பத்தைப் பற்றிக் கூறுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களுடன் தொடர்புடைய படங்கள் ஒளிப்படங்களைச் சேகரித்து அவற்றையும் துணையாகக் கொண்டு ஏனையோருக்கு உதவி புரிவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துக.

DRAFT

- இவ்வாறாக வகுப்பில் மாணவர் சிலருக்குக் கருத்துத் தெரிவிக்கச் சந்தர்ப்பமளித்து, அவ்வாறு உதவி செய்வதன் மூலம் உதவி பெறுபவருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும் என்பதை எடுத்துக் காட்டுக.
- அவ்வாறு உதவி செய்ததன் மூலம் உணர்ந்தவை, அறிந்தவை பற்றிக் கலந்துரையாடுக.
- அவ்வுரையாடலின் வழியே ஏனையோருக்கு உதவி புரிவதன் முக்கியத்துவத்தை மாணவர்க்கு உறுதிப்படுத்துக.

செயற்பாடு - **II**

- கூட்டாக வேலை செய்யும் விதத்தைக் காட்டும் படங்கள், சித்திரங்கள், வீடியோக் காட்சிகள் கதைகளை மாணவர்க்குச் சமர்ப்பிக்குக.

  உ-ம்:

  - எறும்புக் கூட்டம், உணவுத்துணிக்கையை இழுத்துச் செல்லும் விதம்
  - தேனீக்கள் வதை கட்டும் விதம்
  - பாதையமைக்கும் ஓர் இடத்தில் மனிதர் வேலை செய்யும் விதம்
  - பண்டைக்காலத்தில் குளங்கள், கோயில்கள் கட்டிய விதம்
- இவ்வாறான உதாரணங்களைப் பயன்படுத்தி, கூட்டாக வேலை செய்வதன் முக்கியத்துவம் பற்றி மாணவர்க்கு வலியுறுத்துக.
- இவ்வாறாக வேலை செய்வதால் எமக்குக் கிடைப்பவை பற்றி உரையாடுக.
  - வேலைகள் இலகுவாதல்
  - ஒற்றுமையைக் கட்டியெழுப்புதல்
  - நேரம் மீதமாதல்
  - களைப்பு குறைவு

  அதற்கமைய நாளாந்த வேலைகளின்போது கூட்டாகவும் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும வேலை செய்வதன் அவசியத்தை விளக்குக. அது எமது முன்னேற்றத்துக்குக் காரணமாகும் என்பதை எடுத்துக்காட்டுக.

DRAFT

செயற்பாடு - **III**

- மற்றுமொருவருக்காக நாம் செய்யத்தக்க உதவிகள், அவ்வாறு செய்வதன் முக்கியத்துவம் என்பனவற்றை மாணவருடன் உரையாடுக.
- ஏனையோருக்காக நாம் செய்யத்தக்க உதவிகள் பற்றிக் கலந்துரையாடுக.
- மேற்படி உரையாடலில் இனங்கண்ட செயல்களை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் திட்டமிட்டுக் கொள்க.

  உதாரணம்:

  - நன்கொடையாளிகளிடமிருந்து புத்தகங்கள் பெறுதல் (கிராமத்தில் நகரத்தில் விசேட நபர்களிடமிருந்து, பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து அல்லது பாடசாலை மாணவர்களிடமிருந்து)
  - அவ்வாறு சேகரித்த புத்தகங்களின் பாடசாலைக்கு/ மாணவர்களுக்காக வழங்குதல் அதற்காக இயலுமெனின் பெற்றார் அல்லது சமாந்தர வகுப்பு ஆசிரியைகளின் உதவியைப் பெறுக.
- தெரிவு செய்த வேலையைச் செய்யும்போது அந்தந்த வேலைப் பகுதியைப் பகிர்ந்து கொள்ளல், அதன் பொறுப்பைப் பகிர்ந்து கொள்ளல் தொடர்பாக விசேட கவனஞ் செலுத்துக.
- இக்கருமத்தை வெற்றகரமாகப் பூர்த்தி செய்த பின்னர், அதற்கு உதவி புரிந்த அனைவருக்கும் ஆசிரியை நன்றி தெரிவிக்குக. அல்லது பாராட்டுத் தெரிவிக்குக.

செயற்பாடு - **IV**

- எமது உதவி தேவைப்படுவோரை சமூகத்தில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நாம் சந்திக்க நேரிடும் என்பதை மாணவர்க்கு எடுத்துக்காட்டுக.

  உதாரணம்:

  - பாடசாலையில்
  - சமயத்தலத்தில்
  - வைத்தியசாலையில்
  - பாதையில் பயணம் செய்யும்போது
  - பஸ்வண்டியில் (பேருந்தில்) பயணம் செய்யும்போது
- மேலும் நாளாந்தம் பல்வேறு வேலைகளின்போது தேவைக்கேற்ப நாமும் ஒருவருக்கொருவர் உதவி செய்ய நேரிடுவதாக மாணவர்க்கு எடுத்துக்காட்டுக.

  உதாரணம்:

  - தமது நண்பருக்குத் தெரியாத ஒரு விடயத்தை தம்மால் இயன்ற வகையில் சொல்லிக் கொடுத்தல்
  - தம்மிடமுள்ள யாதேனும் ஒரு பொருள் மற்றுமொருவருக்குத் தேவையாயின், தம்மாலான அளவுக்கு கொடுத்து உதவி புரிதல் (தமது நண்பரொருவருக்கு, பென்சில் அழிறப்பர் போன்றவை தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றைக் கொடுத்து உதவ முன்வருதல்)

DRAFT

- அவசர நிலைமைகளின்போது தாம் செய்யத்தக்க உதவிகள் உள்ளனவாயின் தயக்கமின்றி அவ்வுதவியைச் செய்ய முன்வருதல். (வகுப்பில் அல்லது பாடசாலையில் நண்பர் ஒருவர் வழுக்கி விழுந்துள்ளபோது உதவுதல்)
- உதவி செய்தோரைப் பாராட்டப்பழகுதல் ஒரு நல்ல பழக்கமாகும் என்பதை மாணவர்க்கு நினைவூட்டுக. உதவி பெறும் போதும் உதவி புரியும்போதும் நடந்து கொள்ள வேண்டிய விதம் குறித்து மாணவருடன் கலந்துரையாடுக. இந்த உரையாடலின்போது பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்து காட்டுக.
    - வேண்டுகோள்களுக்காக இன்சொல் பயன்படுத்தல்
    - நல்ல நடத்தை
    - செய்த உதவியைப் பாராட்டுதல், நன்றி தெரிவித்தல் போன்றவை
- உதவி தேவைப்பட்ட ஒருவருக்கு உதவி செய்த ஒரு சந்தர்ப்பத்தை சித்திரமாக வரையச் சந்தர்ப்பமளிக்குக.
- அந்தந்த மாணவர் வரைந்த சித்திரத்தில் பொதிந்துள்ள கருத்துக்களையும் அவற்றின் பெறுமானத்தையும் வெளிக்கொணரும் வகையில் உரையாடுக.
- மாணவரது ஆக்கங்களைக் காட்சிப்படுத்துக.
- ஒருவருக்கு உதவி புரிவது ஒரு உயர்வான நற்பண்பாகும் என்பதை உறுதிப்படுத்தும் கதையொன்றினை (உ-ம்: நாட்டார் கதை, வரலாற்றுக்கதை, தாமே புனைந்த கதை) முன்வைக்குக.
- அக்கதையின் பாத்திரங்களை வகிபாகமேற்று நடித்தலில் ஈடுபட்டு வெளிப்படுத்த மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

  உ-ம்:

  உதவி தேவைப்படும் ஒருவர்:

  பல நாள் பட்டினி - உண்ண ஒன்றும் இல்லையே
  நாவறண்டு போச்சுதே - தண்ணீர் தர மாட்டீர்களா?

  பிள்ளை : அம்மா அந்தத் தாத்தா
  பல நாள் பட்டினியாம்
  உண்ண ஏதும் கொடுப்போம்
  பருக நீரும் கொடுப்போம்.

  தாய் : அது மிக்க நல்லது.
  புண்ணியங்கள் கிடைக்கும்.
  இந்தச் சோற்றைக் கொடுங்கள்.
  தண்ணீரும் கொடுங்கள்.

  பிள்ளை : இதோ தாத்தா சோறு
  உண்டு பசி ஆறுங்கள்.

  உதவி தேவைப்பட்டவர் : மகனே புண்ணியம் கிடைக்கும்
  எனது பசி தீரும்
  உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்.


DRAFT

செயற்பாடு - V


- மாணவரிடத்தே ஒற்றுமையை வளர்க்க உதவத்தக்க பின்வரும் விளையாட்டில் மாணவரை ஈடுபடுத்துக.
- கீழே படத்தில் காட்டியுள்ளவாறு மாணவரை இரண்டு குழுக்களாகப் பிரிக்குக.

குழு A — முதலாம் வரிசை, இரண்டாம் வரிசை

குழு B — முதலாம் வரிசை, இரண்டாம் வரிசை



- தேவையெனின் இரண்டு குழுக்களுக்கும் இரண்டு பெயர்களை இடுக.
- ஒவ்வொரு குழுவுக்கும் சற்றுப் பெரிய ஒவ்வொரு பந்து வீதம் வழங்குக.
- ஆசிரியையின் சமிக்ஞைக்கு அமைய, தமது குழுவில் முதலாம் வரிசையின் முதலாம் மாணவன் பந்தைத் தமது குழுவில் எதிரே உள்ள வரிசையில் இருக்கும் முதலாம் மாணவனை நோக்கிக் கைகளால் அனுப்புதல் வேண்டும். அடுத்ததாக அம்மாணவன் பந்தைப் பிடித்து தமது எதிரே உள்ள மாணவனுக்கு அப்பந்தை அனுப்புதல் வேண்டும். குழுக்களில் இறுதியாக இருக்கும் மாணவன் வரையில் பந்தை விரைவாக அனுப்புதல் வேண்டும். பந்து நிலத்தில் விழாதவாறு பந்தைப் பிடித்துப் பந்தை அனுப்புதல் வேண்டும். பந்து கீழே விடுமாயின் மீண்டும் பந்தை முதலாம் மாணவனிடம் இருந்து ஆரம்பித்து அனுப்புதல் வேண்டும்.
- பந்தை விரைவாக தமது குழுவின் இறுதி மாணவன் வரையில் அனுப்பும் குழு வெற்றி பெற்ற குழுவாகும்.
- பந்தை அனுப்ப வேண்டிய விதம்



DRAFT

| |
|---|
| சமூக ஒருங்கிணைப்பு எண்ணக் கருவுக்கென எழுதப்பட்டுள்ள சிறுவர் கதைத் தொகுப்பில் **"நாமே செய்த நோயாளர் வண்டி, மேகத்தின் கெட்டித்தனம்"** என்னும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக. |

## 3.0 செயற்பாடுகள் அடிப்படையிலான வாய்மொழி மூல ஆங்கிலம்

- கல்வி மறுசீரமைப்புக்களின்கீழ் முதலாந் தரம் தொடக்கம் தொடர்பாடலுக்காகவும் கிரகித்தலுக்காவும் அங்கில மொழியைப் பயன்படுத்தவதற்கு, இலங்கையின் சகல மாணவர்க்கும் சந்தர்ப்பம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தரம் மூன்றில் முறைமையான வகையில் ஆங்கிலம் கற்பிக்கத் தொடங்க முன்னர் அறிமுகஞ் செய்யப்படும் இந்த அம்சம் செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி மூல ஆங்கிலம் எனப்படுகிறது. இப்பெயரினால் சுட்டிக்கட்டப்படுவதற்கிணங்க மாணவர்கள் செயற்பாடுகளிலோ, விளையாட்டுக்களிலோ ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் உரையாடுவதற்காக ஆங்கிலத்தைப் பயனப்டுத்துவதே இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. விசேட ஆங்கில ஆசிரியர் ஒருவரைக் கொண்டு ஆங்கில மொழி கற்பித்தல் இங்கு எதிர்பார்க்கப்படவில்லை.

குறிப்பாக தரம் இரண்டில் கற்பிக்கும் ஆசிரியரினாலேயே கற்பிக்கத்தக்கவாறாக, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தத்தக்கவாறாக இப்பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் செவிமடுத்தல், பேச்சு ஆகியவற்றின்மீது மாத்திரம் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. இப்புத்தாம்சத்தை சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் எனும் பாடத்தினுள் கூடவே கணித பாடத்திலும் பயன்படுத்தத்தக்கவாறு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பின்வரும் பிரதான குறிக்கோள்களை அடைய எதிர்பார்க்கப்படுகின்றது.

- நாளாந்த வாழ்க்கையில் தேவைப்படும் எளிமையான சில ஆங்கிலச் சொற்களை நிதமும் செவிமடுக்கவும் கூறவும் செய்து சிறு பராயம் முதலே பிள்ளைகளுக்கு ஆங்கிலச் சொற்களைப் பரிச்சயப்படுத்தல்.
- தொடர்பாடல் மற்றும் கிரகித்தலுக்காக, ஆங்கிலத்தைப் பயன்படுத்தும் சூழலை வகுப்பறையிலும் அதற்கு வெளியேயும் ஏற்படுத்துதல்
- ஆங்கிலத்தைப் பயன்படுத்தல் தொடர்பாக மாணவரிடத்தே காணப்படும் பின்னடைவைத் தவிர்த்தல்
- தரம் மூன்று தொடக்கம் முறைமையான வகையில் ஆங்கில மொழியைக் கற்கும் அவாவை மாணவரிடத்தே ஏற்படுத்துவதற்கான பின்னணியை உருவாக்குதல்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

- வகுப்புப் பொறுப்பாசிரியராலேயே மாணவர்க்கு உரையாடுவதற்காக எளிமையான ஆங்கில மொழிப்பயன்பாட்டை அறிமுகஞ் செய்தல் வேண்டும்.
- இதற்காக விசேட பாட பாடவேளைகள் ஒதுக்கத் தேவையில்லை.
- மாணவர்கள் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் சார்ந்த செயற்பாடுகள் மற்றும் களிப்பூட்டும் வேளைகளில் ஈடுபட்டிருக்கும் வேளைகளிலேயே செயற்பாடு சார்ந்த வாய்மொழி மூல ஆங்கிலத்துக்கான சந்தர்ப்பத்தை வெளிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
- செயற்பாடுகளில் ஈடுபட்டு தமது மொழியில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் மாணவர்கள் நிதமும் காணும் பொருள்களின் பெயர்களை ஆங்கில மொழியில் பயன்படுத்தவும் எளிமையான ஆங்கில வினைச் சொற்களையும் கட்டளையும் அறிமுகஞ் செயத்தக்க சந்தர்ப்பங்களை எத்தனமின்றி வெளிப்படுத்திக் கொள்ள முயற்சி செய்தல் வேண்டும்.

DRAFT

- மாணவருடன் சுதந்திரமாகச் செயற்படும்போது அவர்களை ஆங்கிலத்தில் விளித்தல், வாழ்த்துக் கூறல், ஆசீர்வாதித்தல் போன்றவற்றைச் செய்யச் சந்தர்ப்பம் கிட்டும். இவ்வாறாக சந்தர்ப்பங்களை எளிமையான வாய்மொழி மூல ஆங்கிலத்தை அறிமுகஞ் செய்வதற்காகப் பயன்படுத்தலாம்.

- பிள்ளை வாழும் சூழலில் சுற்றுப்பறத்தில் நிதமும்காணும் பொருள்கள் பயன்படும் வினைச் சொற்கள், விளிப்புகள், கட்டளைகள், ஆசிர்வாதங்கள் பேன்றவற்றை உள்ளடக்கிய எளிய ஆங்கிலச் சொற் களஞ்சியமொன்றைத் தெரிவு செய்து, அச்சொற்களஞ்சியத்தை ஆசிரியருக்கோ மாணவருக்கோ மேலதிக சுமையாக அமையாதவாறும் மகிழ்ச்சிகரமாகவும் அவரவரிடையே தொடர்பாடல் சந்தர்ப்பங்களைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்கு பொருத்தமானவாறு பயன்படுத்துவதே ஆசிரியடம் விசேடமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

- உதாரணமாகக் கருதத்தக்க எளிமையான ஆங்கில சொற்களஞ்சியமொன்று இதன் இறுதியில் தரப்பட்டுள்ளது. நாளாந்த வாழ்க்கையில் மாணவர்கள் நிதமும் எதிர்கொள்ளும் பொருள்களின் ஆங்கிலப் பெயர்களும் வெவ்வேறு சந்தர்ப்பங்களுக்காகப் பொருத்தமான எளிய வினைச் சொற்களும் விளிப்புகளும் கட்டளைகள் போன்றன அடங்கியுள்ளன.

- இதற்கு மேலதிகமாக கணித பாடம் தொடர்பான செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி மூல ஆங்கிலத்துக்கான ஒரு சொற்களஞ்சியமும் முன்வைக்கப்பட்டுள்ளது. சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தையும் கணித பாடத்தையும் கற்பிக்கும் போதும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் செயற்பாடு சார்ந்த வாய்மொழி மூல ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளுதல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

- சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாட கருப்பொருள்களுக்கமைய கூட்டமாக்கப்பட்ட சொற்களஞ்சியமும் குறித்த சொற்களைப் பரிச்சயப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள பாடல்களும் ஆசிரியர் நாளாந்தம் பயன்படுத்தத்தக்க வகுப்பறை பிரயோகங்களும் இங்கு தரப்பட்டுள்ளன.

- 2009 ஆண்டு தேசிய கல்வி நிறுவக முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் தறையினால் செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி ஆங்கில அசிரியர் கைந்நூல் (ABOE Teacher's HandBook -Grade 2) ஆசிரியரது சேவையை இலகுவாக்கும் என எதிர்பார்க்கப்ப டுகின்றது.

- ஆங்கிலச் சொற்களைச் சரியாக உச்சரிப்பது குறித்து கவனஞ் செலுத்துக. தேவைப்படுமாயின் இதற்காகப் பாடசாலையில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களதும் ஆங்கில ஆசிரிய ஆலோசகரினதும் ஆலோசனைகளையும் பிரதேச ஆங்கில உதவு நிலையங்களின் சேவையையும் பெற்று ஆசிரியரின் ஆங்கில அறிவை விருத்தி செய்து கொள்வதற்கும் இதன் மூலம் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**விசேடமாகக் கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்கள்**

வாய்மொழி மூல ஆங்கிலத்தை அறிமுகஞ் செய்யும் செயன்முறையின்கீழ்,

- முறையான ஆங்கிலம் கற்பித்தல் முறைகளின் பயன்பாடு எதிர்பார்க்கப்படவில்லை.
- ஆங்கில அரிச்சவடியின் எழுத்துக்களைக் கற்பித்தலோ ஆங்கிலச் சொற்களை எழுதக் கற்பித்தலோ ஆங்கிலச் சொற்களை வாசித்தலோ எதிர்பார்க்கப்படவில்லை.
- விசேடமாக நூல்களைப் பயன்படுத்துவது அவசியமன்று.
- மாணவரது ஆங்கில அறிவை அளந்தறிவதற்காக முதலாம், இரண்டாம் தரத்தில் எழுத்தப் பரீட்சை நடத்துவது அவசியமன்று.



DRAFT

**மாணவரது ஆங்கில அறிவை அளத்தல்**

- மாணவரது ஆங்கில அறிவை அளந்தறிவதற்காக கருப்பொருளொன்றின் இறுதியில் வாய்மொழி மூலம் வினாக்கேட்டல், படமொன்றினைக் காட்டி அது யாது என வினவுதல், ஒரு சொல்லைக் கூறி அதற்குரிய படத்தைக் காட்டச் சந்தர்ப்பமளித்தல் போன்ற எளிமையான சொற்களைப் பயன்படுத்தலாம்.
- What is this?/ What is this colour?/ Show me ....)
- மாணவரின் ஆங்கில அறிவை அளந்தறிவதற்காக
  உ-ம்: Draw a cat/ Colour it in Black என்றவாறாகவும் இம்மதிப்பீட்டை வகுப்பாசிரியர் பயன்படுத்தலாம்.
- இம்மதிப்பீட்டுச் செயன்முறையை வகுப்பாசிரியர் பிள்ளைகளுக்குச் சுமையாக அமையாதவாறு நிகழ்த்துத்தல் வேண்டும்.
- செயற்பாடுகளின்போது அறிமுகஞ் செய்தல், சொற்களையும் வாக்கியங்களையும் மாத்திரம் பயன்படுத்த இம்மதிப்பீட்டைச் செய்தல் வேண்டும்.
- பிள்ளை தமது தாய்மொழி மூலம் செவிமடுத்தலிலும் பேசுவதிலும் ஈடுபட்ட விதத்திலேயே வாய்மொழி மூல ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதற்கும் பிளளையைப் பரிச்சயப்படுத்தல் வேண்டும். இதற்காக வகுப்பறையில் செயற்பாடுகளை செவிமடுத்தலுக்கும் பேசுவதற்கும் பொருத்தமானவாறு ஒழுங்கமைத்துக் கொள்ளல் வேண்டும். இதன்போது செயற்பாடு சார்ந்த வாய்மொழி மூல ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர் இச் செயற்பாடுகளின் குறிக்கோள்கள் தொடர்பாக விளங்கி அதற்கமைய அதற்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்கிக் கொள்வது முக்கியமானது.
- செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி ஆங்கிலத்தை குறித்த பாடக் கருப்பொருள்களில் அறிமுகஞ் செய்யும்போது அக்கருப்பொருள்கள் சார்பாக தமது தாய்மொழியில் கற்ற சொற்களை, ஆங்கில மொழயிலும் கற்ற பின்னர் அவ்வாறு கற்ற சொற்களுக்குரிய படங்களை வரையவும் நிறந்தீட்டவும் சந்தர்ப்பம் வழங்குவது பொருத்தமானதாகும். அதற்கமைய ஆங்கிலச் சொற்களை மேலம் இலகுவாக நினைவில் வைத்திருப்பதற்கு உவ்வுத்தி துணையாக அமையும். எனினும் அப்படங்களுக்குரிய ஆங்கிலச் சொல்லை ஆசிரியரோ, மாணவரோ எழுதுவது எதிர்ப்பார்க்கப்படவில்லை.

DRAFT

# ACTIVITY BASED ORAL ENGLISH

## Listening & Speaking

| Theme | Vocabulary | Structures | Activities |
|---|---|---|---|
| **01. We and the School (DVD - 2)** | **Places in the school (5)***<br>1. shrine room<br>2. computer room/lab/IT lab<br>3. science lab/laboratory<br>4. staff room<br>5. sick room | Let's clean the classroom.<br><br>Let's clean the garden. | **Activity :**<br>Draw the objects in the classroom, colour and say<br><br>**Song:(3)**<br>Bits of paper//<br>Lying around//<br>Make the place untidy//<br>Pick them up// |
| | **Objects in the classroom (8)**<br>1. pencil<br>2. book<br>3. bag<br>4. eraser<br>5. bottle | I'm a pencil.<br><br>You are a book. | Books and pencils// (9)<br>Erasers, bags//<br>Bottles of water//<br>In the class//<br><br>This is the way we (6)<br>worship Buddha// (God)<br>This is the way we<br>worship Buddha<br>In the shrine room//<br><br>This is the way we<br>Work with computer//<br>This is the way we<br>work with computer<br>In the computer room.//<br><br>This is the way we<br>observe things//<br>This is the way we<br>observe things<br>in the laboratory//<br><br>This is the room<br>teachers rest//<br>This is the room<br>teachers rest<br>It's the staffroom//<br><br>This is the sickroom ///<br>This is the sickroom where we rest<br>When we feel sick// |

DRAFT

| Theme | Vocabulary | Structures | Activities |
|---|---|---|---|
| | | | **Game:**<br>Prepare some picture cards of introduced vocabulary according to the number of students in the classroom. Eg. 5 classroom objects, if there are 40 students, 8 cards from each picture.<br>Distribute those cards.<br>Teacher says the word 'pencil' & asks the students to show the picture of the pencil or stand up /do like musical chairs or create a suitable game to help them to learn those words etc. |
| **02. Our Home** (11) | house/home<br>**Parts of a house**<br>1. door<br>2. window<br>3. roof<br>4. room<br><br>**Rooms of a house (14)**<br>1. kitchen<br>2. living room<br>3. bathroom<br>4. bedroom<br>5. store room | This is my...<br>That is my... | **Activity :**<br>Draw a house, colour and say the parts<br><br>**Song: (12)**<br>This is my house//<br>That is the roof//<br><br>These are windows//<br>That is a door//<br><br>(Tune: where's thumbkin?)<br><br>Kitchen//// where we cook.// (15)<br>Kitchen//// where we cook./<br><br>living room// where we rest//<br>bathroom// where we bathe//<br>bedroom// where we sleep//<br>store room// where we store//<br><br>**Game:** Create a suitable game to help them to learn those words as shown in theme 1 |
| **03. Animals around us (17)** | 1. horse<br>2. elephant<br>3. donkey<br>4. bull<br>5. goat<br>6. ant<br>7. caterpillar | What can you see?<br>I can see… | **Activity :**<br>Draw animals, colour and say |

DRAFT

| Theme | Vocabulary | Structures | Activities |
|---|---|---|---|
| | | | **Song: (18)**<br>I see a big horse//<br>I see a bull//<br>I see an elephant//<br>Walk///<br>I see a donkey//<br>I see a goat//<br>I see a caterpillar//<br>And little ant//<br>(Tune: brotherJohn)<br><br>**Game:**<br>Create a suitable game to help them to learn those words as shown in theme 1. |
| **04. Play with Water (20)** | 1. boat<br>2. float<br>3. row | | **Activity :**<br>Draw, colour and say<br><br>**Song: (21)**<br>Row /// your boat<br>Gently down the stream<br>Merrily ////<br>Life is but a dream<br><br>**Game: Guessing game : floating or sinking**<br>Teacher brings different kinds of materials. Eg. Buttons, coins, flowers, plastic balls, etc.<br>Teacher takes one thing out of them and asks whether it is sinking or floating<br>**'Guess, sinking or floating'**<br>**'See'**<br>**'Now I am going to drop this into water'**<br>If their guessing is right. Clap and appreciate them. |
| **05. Sinhala & Hindu New Year Period** | 1. oil lamp<br>2. betel<br>3. crackers<br>4. swing<br>5. oil cake | Happy New Year | **Activity :**<br>Draw oil lamp, betel, crackers, Swing, milk rice, and oil cakes, colour and say<br><br>**Song: (22)**<br>Milk rice oil cake//<br>On the plate//<br>Banana kokis//<br>I like to eat// |

DRAFT

| Theme | Vocabulary | Structures | Activities |
|---|---|---|---|
| | | | Lighting crackers//<br>Play raban//<br>I like swinging//<br>Swing/////<br><br>(brother John)<br><br>1. This is the way we clean the house (23)<br>Clean the house //<br>This is the way we<br>clean the house<br>for the new year.<br><br>2. Let's light crackers// (25)<br>Chata pata dong//<br><br>Let's have a swing//<br>Onchili chili//<br><br>(Tune: brother John<br><br>3. Oil lamp//// (27)<br>Betel////<br>Oil cakes///<br>For the new year<br><br>(Tune- one little…<br><br>**Game:**<br>Create a suitable game to help them to learn those words as shown in theme 1. |
| **06. The Sky We See (29)** | 1. aeroplanes<br>2. kites<br>3. fly<br>4. rain<br>5. rainbow<br><br>**Colours**<br>1. pink<br>2. orange<br>3. purple<br>4. brown<br>5. black<br>6. white | | **Activity :**<br>Draw them, colour and say<br><br>**Song:**<br>Birds fly in the sky (30)<br>Shala la la la<br>Planes fly in the sky<br>Shala la la la<br>kites fly in the sky<br>Shala la la la<br>They all fly in the sky<br><br>Kites and aeroplanes// (33)<br>Flying in the sky//<br>Rainbow //<br>Beautiful rainbow, colourful rainbow<br>I like you. // |

DRAFT

| Theme | Vocabulary | Structures | Activities |
|---|---|---|---|
| | | | Pink and orange// (36)<br>Purple, brown//<br>Red, blue, yellow, green//<br>Black and white//<br><br>**Game:**<br>Create a suitable game to help them to learn those words as shown in theme 1. |
| **07. Things We Eat & Drink (38)** | 1. hoppers<br>2. string hoppers<br>3. pineapple<br>4. woodapple<br>5. grapes<br>6. plantain<br>7. papaw<br>8. green leaves | Let's make a fruit salad.<br><br>Let's wash the fruits.<br><br>Let's peel the fruits.<br><br>Let's cut the fruits.<br><br>I like…<br><br>Do you like….? | **Activity :**<br>Draw fruits, colour and say<br><br>**Song:(39)**<br>I like hoppers//<br>How about you? //<br>Do you like hoppers? //<br>Yes, I do//<br><br>I like hoppers//<br>How about you? //<br>Do you like hoppers? //<br>No, I don't//<br><br>(Tune: brother John)<br><br>**Game:**<br>Create a suitable game to help them to learn those words as shown in theme 1. |
| **08. How Information is Received (41)** | 1. newspaper<br>2. letters<br>3. sad<br>4. angry<br>5. happy<br>6. notice board | | **Activity :**<br>Draw them, colour and say<br><br>**Song:** (42)<br>Newspapers letters//<br>notice board//<br><br>we see news news//<br><br>happy angry sad//<br><br>(Tune: brother John)<br><br>**Game:**<br>Create a suitable game to help them to learn those words as shown in theme 1. |

DRAFT

| Theme | Vocabulary | Structures | Activities |
|---|---|---|---|
| **09. Changes in the Environment (44)** | 1. dry<br>2. wet<br>3. windy<br>4. sunny<br>5. rainy<br>6. dusty<br>7. tidy<br>8. untidy | | **Activity :**<br>Draw them, colour and say<br><br>**Song:** (45)<br>Sunny days are dusty and dry///<br>Monday to Friday<br><br>Rainy days are windy and wet///<br>Monday to Friday<br><br>(London Bridge tune)<br><br>**Game:**<br>Create a suitable game to help them to learn those words as shown in theme 1. |
| **10. Our Well-being (47)** | 1. see<br>2. hear<br>3. speak<br>4. smell<br>5. do<br>6. think<br>7. mind | | **Song:** (48)<br>Be careful//<br>with your little eyes<br><br>What your eyes see.//<br><br>Be careful//<br>with your little ears<br><br>What your ears hear.//<br><br>Be careful//<br>with your little mouth<br><br>What your mouth speaks.<br><br>Be careful//<br>with your little nose<br><br>What your nose smells//.<br><br>Be careful//<br>with your little hands<br><br>What your hands do//.<br><br>Be careful//<br>with your little mind<br><br>What your mind thinks.//<br><br>**Game:**<br>Create a suitable game to help them to learn those words as shown in theme 1. |

DRAFT

| Theme | Vocabulary | Structures | Activities |
| --- | --- | --- | --- |
| **11. How We Get Our Needs (50)** | 1. farmer<br>2. carpenter<br>3. baker<br>4. teacher<br>5. paddy<br>6. grows<br>7. bread<br>8. learn | | **Activity :**<br>Draw them, colour and say<br><br>**Song:(51)**<br>1. The chair helps to sit //<br>He! Ho! The dairy oh<br>The chair helps to sit.<br><br>2. Who made the chair?//<br>He! Ho! The dairy oh<br>Who made the chair?<br><br>The carpenter made the chair//<br>He! Ho! The dairy oh<br>The carpenter made the chair.<br><br>3. Who grows paddy? //<br>He! Ho! The dairy oh<br>Who grows paddy?<br>The farmer grows paddy//<br>He! Ho! The dairy oh<br>The farmer grows paddy<br><br>4. Who makes bread? //<br>He! Ho! The dairy oh<br>Who makes bread?<br>Baker makes bread//<br>He! Ho! The dairy oh<br>Baker makes bread.<br><br>5. Who helps to learn?//<br>He! Ho! The dairy oh<br>Who helps to learn?<br>The teacher helps to learn//<br>He! Ho! The dairy oh<br>The teacher helps to learn |

DRAFT

| Theme | Vocabulary | Structures | Activities |
|---|---|---|---|
| **12. Transport** (52) | 1. wheelbarrow<br>2. lorry<br>3. tractor<br>4. motorcycle<br>5. road<br>6. traffic lights | | **Game:**<br>Create a suitable game to help them to learn those words as shown in theme 1.<br><br>**Activity :**<br>Draw them, colour and say<br><br>**Song: (53)**<br>Wheelbarrow//<br>Brung///<br>Lorry//<br>Peep///<br>Tractor//<br>Trucka//// truck<br>Motorcycle//<br>Broom///<br>traffic lights//<br>green orange and red<br>all are moving on the road<br><br>(Jingle Bells tune)<br><br>**Game:**<br>Create a suitable game to help them to learn those words as shown in theme 1. |
| **13. Play with Light (55)** | 1. shadow<br>2. mirror<br>3. wesak lantern | | **Activity :**<br>Draw them, colour and say<br><br>**Song:** (56)<br>Me and my shadow//<br>my shadow//<br>Me and my shadow<br>You are with me.<br><br>(tune:..this is…….)<br><br>Jump a little, walk a little, one two three/// (58)<br><br>Mirror//// (60)<br>smile with me//<br>Mirror////<br>I like you///<br><br>**Game:**<br>Create a suitable game to help them to learn those words as shown in theme 1. |

DRAFT

| Theme | Vocabulary | Structures | Activities |
|---|---|---|---|
| **14. Places Where People Work (62)** | 1. Paddyfield<br>2. hospital<br>3. Factory<br>4. farm<br>5. mammoty<br>6. seeds | | **Activity** :<br>Draw them, colour and say<br><br>**Song: (63)**<br>Places// where we work// Paddyfield// farmers work//Hospital//<br>Doctors work//<br><br>Factory//<br>Workers work//<br><br>(Jimmy tune)<br><br>**Game:**<br>Create a suitable game to help them to learn those words as shown in theme 1. |
| **15. Different Places in the Environment** (65) | 1. river<br>2. sea<br>3. mountain<br>4. rock<br>5. jungle | | **Activity** :<br>Draw them, colour and say<br><br>**Song**: (66)<br>Rivers mountains//<br>Rocks and sea//<br>Greenish jungle//<br>Beautiful//<br><br>(Tune: brother John)<br><br>**Game:**<br>Create a suitable game to help them to learn those words as shown in theme 1. |
| **16. People who need our help (68)** | 1. elders<br>2. babies | May I help you? | **Activity** :<br>Draw them, colour and say<br><br>**Song:** (69)<br>May I help you//<br>My grandma//<br><br>Thank you my child//<br>I need help//<br><br>May I help you//<br>My little brother// |

DRAFT

| Theme | Vocabulary | Structures | Activities |
|---|---|---|---|
| | | | Thank you brother<br>Thank you sister<br>I need your help//<br><br>(Tune: brother John)<br><br>**Game:**<br>Create a suitable game to help them to learn those words as shown in theme 1. |
| **Mathematics** (71) | 1. shapes<br>2. circle<br>3. triangle<br>4. square | | **Activity :**<br>Draw them, colour and say<br><br>**Song: (72)**<br>Circles///// every where<br>Triangles///// everywhere<br>Squares///// everywhere<br>Shapes///// everywhere<br><br>(jingle bells tune)<br><br>**Game:**<br>Create a suitable game to help them to learn those words as shown in theme 1. |

DRAFT

## Classroom Language

**Greeting & Wishes**

Good morning

Good afternoon!

Good evening!

Good Bye!

Good Luck!

All the best!

Happy Birthday!

Happy New Year!

Merry Christmas!

Happy Christmas!

**Requests**

May I come in?

May I go out?

Silence please

Listen to me please

Hurry up please

Be quiet

Be careful

**Polite forms**

Thank you

Please, excuse me

I'm sorry

**Simple commands**

Hands up

Hands down

Run

Jump

Start

Clap your hands

Look at me

Form a line

Form a circle

Don't go out

Get ready

**Praising**

Good

Very good

That's right

Well done

I like it

**Simple question forms**

Who is shouting?

What's this?

What's that?

What is it?

Is it a ............?

Is that a ............?

Are you ready?

DRAFT

## 4.0 இரண்டாவது தேசிய மொழி - சிங்களம்

### அறிமுகம்

ஓர் இலங்கையர் என்ற வகையில் நாட்டில் தம்முடன் வாழும் சகோதர மக்களின் மொழியைக் கற்பதன் மூலம் ஒருவரோடொருவர் புரிந்துணர்வுடன் செயற்படும் திறனை மாணவரிடம் வளர்ப்பதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனை நோக்காகக் கொண்டு, இரண்டாவது தேசிய மொழியொன்றினைக் கற்பிப்பதன் மூலம் குறித்த மொழியில் ஒவ்வொருவரும் பாண்டித்தியம் பெறுதல் வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படவில்லை. மாறாக, தொடர்பாடல் திறன்களை ஓரளவு வளர்த்துக் கொள்வதும் பரஸ்பரம் புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வதுமே எதிர்பார்க்கப்படுகின்றது.

செயலூக்கமுள்ள தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதற்கும் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான முதன்மையான அடித்தளத்தை அமைத்துக் கொள்வதற்கும் இரண்டாந் தேசிய மொழியொன்றினைக் கற்பது தூண்டுகோலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய முதலாம் முதன்மை நிலையில் இரண்டாம் தேசிய மொழியின் கீழ்ப் பின்வரும் தேர்ச்சிகளை அடையும் நோக்குடன் இந்த ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

மொழித்திறன் பரப்புக்களான செவிமடுத்தல், பேசுதல் ஆகியன தொடர்பான செயற்பாடுகள் மாத்திரமே இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன. மாணவரது வயது, முதிர்ச்சி, அனுபவங்கள் போன்றவற்றைக் கருத்திற் கொண்டே இத்தேர்ச்சிகள் வகுக்கப்பட்டுள்ளது.

**ஆரம்பக் கல்விப் பருவத்துக்குரிய தேர்ச்சிகள் (இரண்டாவது தேசிய மொழி)**

- நாளாந்தத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக பொருத்தமான சொற்களையும் சொற்றொடர்கள் - வாக்கியங்களைப் பயன்படுத்திப் பேசுவார்.
- சிங்களத்தில் கூறுபவற்றை செவிமடுத்து பொருளுள்ள வகையில் துலங்குவார்/ எதிர்வினை காட்டுவார்.
- மொழியைக் கையாளும்போது நற்பழக்கங்களை வெளிப்படுத்துவார்.
- ஏனையோரது முன்னிலையில் தமது கருத்தையும் வெளிப்படுத்த முன்வருவார்.
- வாசிப்புத்திறனை வெளிப்படுத்தி, அதனைப் பொருளுள்ள வகையில் பயன்படுத்துவார்.
- பாடல்கள், கவிதைகளை செவிமடுத்தும் பாடியும் இரசிப்பார்.
- இரண்டாம் தேசிய மொழியைக் கையாள்வதன் மூலம் களிப்புறுவார்.
- இரண்டாம் தேசிய மொழியைக் கையாளும் திறன்களை மதிப்பார்.

**முதன்மை நிலை ஒன்றிற்குரிய தேரச்சிகள்**

- நாளாந்த வாழ்க்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் மரியாதையாகவும் நட்புடனும் வாழ்த்துத் தெரிவிப்பார்.
- தம்மைப்பற்றிய தகவல்களைச் சரியாகவும் தெளிவாகவும் நட்புடனும் வெளியிடுவார்.
- பாடசாலையில் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக, நட்புடனும் மரியாதையாகவும் வேண்டுகோள்விடுப்பார்.

DRAFT

- பாடசாலையில், தமக்கு வழங்கப்படும் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுவார்.
- தமக்கு நெருக்கமானோரிடம் அவர்களது தகவல்களை நட்புடன் வினவுவார்.
- எண்களை இனங்கண்டு தெளிவாகவும் சரியாகவும் உச்சரித்து வாசிப்பார்.
- நிறங்களின் பெயர்களை இனங்கண்டு, சரியான உச்சரிப்புடன் கூறுவார்.
- எளிமையான பாடல்கள், கவிதைகளை அங்க அசைவுகளுடன் பாடுவார்.

**தரம் இரண்டிற்குரிய தேர்ச்சிகள்**

- ஒருவரைச் சந்திக்கும்போதும் அவரைப் பிரிந்து செல்லும் போதும் மரியாதையுடனும் நட்புடனும் வாழ்த்துத் தெரிவிப்பார்.
- தனது பெயரைச் சரியாகவும் நட்புடனும் கூறுவார்.
- தமது வகுப்பு நண்பர்களிடம் மரியாதையாகவும் நட்புடனும் வேண்டுகோள்கள் விடுப்பார்.
- வகுப்பறையில் ஆசிரியர் வழங்கும் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுவார்.
- தமது நெருங்கிய நண்பர்களிடம் அவர்களது தகவல்களை நட்புடன் வினவுவார்.
- 1 தொடக்கம் 10 வரையிலான எண்களைத் சிங்கள மொழியில் கூறுவார்.
- ஐந்து நிறங்களின் பெயர்களைச் சரியாகச் சிங்களத்தில் கூறுவார்.
- எளிமையான பாடல்கள் கவிதைகளை அங்க அசைவுகளுடன் பாடுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

இரண்டாவது தேசிய மொழி (சிங்கள மொழி)க்குரிய உத்தேச தேர்ச்சிகளை திட்டமிட்ட செயற்பாடுகளின் துணையுடன் அடைவதற்கு ஆவன செய்தல் அவசியமாகும். மாணவரை உரிய தேர்ச்சிகளின்பால் இட்டுச் செல்வதற்காக இங்கு விதந்துரைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளைப் பயன்படுத்துவதற்கும் தேவைக்கேற்ப சமயோசிதமான செயற்பாடுகளைத் திட்டமிட்டுப் பயன்படுத்துவதற்கும் ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு.

DRAFT

# 4.0 இரண்டாம் தேசிய மொழி - சிங்களம்

## பாடத்திட்டம்

**தேர்ச்சி**

மகிழ்ச்சியுடன் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவிப்பார்/ துலங்குவார்.

| | | |
|---|---|---|
| සුබ උපන් දිනයක් වේවා | சு(B)ப உ(P)பன் (TH)தினய(K)க் | வேவா(பிறந்தநாள் வாழ்த்துக்கள்) |
| ස්තූතියි | (S)ஸ்து(TH)திய் (நன்றி) | |

**தேர்ச்சி**

நண்பர்களிடம் மரியாதையாகவும் நட்புடனும் வேண்டுகோள் விடுப்பார்.

| | | |
|---|---|---|
| පොත ගන්න. | (P)பொத(TH) கன்ன | (புத்தகம் எடுங்கள்) |
| පැන්සල දෙන්න. | (P)பென்(S)சல (TH)தென்ன | (பென்சில் தாருங்கள்) |
| මෙහෙ එන්න | (M)மெஹே என்ன | (இங்கே வாருங்கள்) |
| එහෙ යන්න. | எஹே யன்ன | (அங்கே போங்கள்/செல்லுங்கள்) |
| මෙහෙ බලන්න | (M)மெஹே (B)பலன்ன | (இங்கே பாருங்கள்) |
| අතනින් ඉඳගන්න | அ(TH)தனின் இந்த(G)கன்ன | (அங்கே இருங்கள்) |
| අතනට දුවන්න | அதன(DH)ட துவன்ன | (அங்கே ஓடுங்கள்) |
| මෙහෙ නවතින්න | (M)மெஹே நவதின்ன | (இங்கே நில்லுங்கள்) |

**தேர்ச்சி**

குடும்ப உறுப்பினர்களின் உறவு முறையை இனங்கண்டு கூறுவார்.

| | | |
|---|---|---|
| අම්මා | அம்மா | (அம்மா) |
| තාත්තා | தாத்தா | (அப்பா) |
| අක්කා | அக்கா | (அக்கா) |
| අයියා | அய்யா | (அண்ணா) |
| නංගී | நங்கி | (தங்கை) |
| මල්ලි | மல்லி | (தம்பி) |

**தேர்ச்சி**

தமது நண்பர்களின் குடும்பத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வார்.

| | |
|---|---|
| ඔයාගේ අම්මාගේ නම මොකක් ද ? | ஒயா(G)கே அம்மாகே நம மொகக்(DH)த?<br>(உங்கள் அம்மாவின் பெயர் என்ன?) |
| මගේ අම්මාගේ නම .................... | ம(G)கே அம்மா(G)கே நம ....................<br>(எனது அம்மாவின் பெயர் ............) |
| ඔයාගේ තාත්තාගේ නම මොකක් ද ? | ஒயா(G)கே தாத்தா(G)கே நம மொகக்த?<br>(உங்கள் அப்பாவின் பெயர் என்ன?) |
| මගේ තාත්තාගේ නම .................... | மகே தாத்தாகே நம ............<br>(எனது அப்பாவின் பெயர் ............) |

DRAFT

ඔයාගේ අයියාගේ නම මොකක් ද ? | ஒயா(G)கே அய்யா(G)கே நம மொகக்த?
(உங்கள் அண்ணாவின் பெயர் என்ன?)

මගේ අයියාගේ නම .................... | ம(G)கே அய்யா(G)கே நம .............
(எனது அண்ணாவின் பெயர் ...........)

ඔයාගේ අක්කාගේ නම මොකක් ද ? | ஒயா(G)கே அக்கா(G)கே நம மொகக்த?
(உங்கள் அக்காவின் பெயர் என்ன?)

මගේ අක්කාගේ නම .................... | ம(G)கே அக்கா(G)கே நம ..........
(எனது அக்காவின் பெயர் ............)

ඔයාගේ නංගිගේ නම මොකක් ද ? | ஒயா(G)கே நங்கி(G)கே நம மொகக்த?
(உங்கள் தங்கையின் பெயர் என்ன?)

මගේ නංගිගේ නම .................... | ம(G)கே நங்கி(G)கே நம ...........
(எனது தங்கையின் பெயர் ...........)

ඔයාගේ මල්ලිගේ නම මොකක් ද ? | ஒயா(G)கே மல்லி(G)கே நம மொகக்த?
(உங்கள் தம்பியின் பெயர் என்ன?)

මගේ මල්ලිගේ නම .................... | ம(G)கே மல்லி(G)கே நம ...........
(எனது தம்பியின் பெயர் ............)

මට අක්කා කෙනෙක් නැහැ | மட்ட அக்கா கெனெக் நெஹெ
(எனக்கு அக்கா இல்லை)

**தேர்ச்சி**

1 - 10 வரை எண்களைச் சரியான உச்சரிப்புடன் சிங்கள மொழியில் பயன்படுத்துவார்.

| | | |
|---|---|---|
| එක | எ(K)க | (ஒன்று) |
| දෙක | தெ(K)க | (இரண்டு) |
| තුන | து(TH)ன | (மூன்று) |
| හතර | ஹ(TH)தர | (நான்கு) |
| පහ | (P)பஹ | (ஐந்து) |
| හය | (H)ஹய | (ஆறு) |
| හත | ஹ(TH)த | (ஏழு) |
| අට | அ(TA)ட | (எட்டு) |
| නවය | நவய | (ஒன்பது) |
| දහය | (DH)தஹய | (பத்து) |

**தேர்ச்சி**

நிறத்தைப் பெயரிட்டு எளிமையான வாக்கியங்கள் கூறுவார்.

| | | |
|---|---|---|
| අහස නිල් පාටයි | அஹ(S)ஸ நில் பா(T)ட்டய் | (வானம் நீல நிறம்) |
| කොළය කොළ පාටයි | (K)கொலய (K)கொல பா(T)ட்டய் | (இலை பச்சை நிறம்) |
| කෙසෙල් කහ පාටයි | கெ(S)செல் கஹ பாட்டய் | (வாழைப்பழம் மஞ்சள் நிறம்) |
| කොකා සුදු පාටයි | கொ(K)கா (S)சுது பாட்டய் | (கொக்கு வெள்ளை நிறம்) |
| කපුටා කළු පාටයි | கபு(T)டா களு பாட்டய் | (காகம் கறுப்பு நிறம்) |
| ජම්බු රතු පාටයි | ஜம்பு ர(TH)து பாட்டய் | (ஜம்பு சிவப்பு நிறம்) |



DRAFT

**தேர்ச்சி**

நமது நண்பர்களிடம் சுகம் விசாரிப்பார்.

| | | |
|---|---|---|
| සැප දුක් කොහොම ද ? | (S)செப (DH)துக் கொஹொம(DH)த | (எப்படிச் சுகம்?) |
| සුවෙන් සිටිනවා | (S)சுவென் (S)சிடினவா? | (நல்ல சுகம்) |

**தேர்ச்சி**

தாம் அன்றாடம் பயன்படுத்தும் சில பொருள்களைப் பெயரிடுவார்.

| | | |
|---|---|---|
| **පැන්සල** | (P)பென்(ளு)சல | (பென்சில்) |
| **පොත** | ீ)பொத | (புத்தகம்) |
| **මේසය** | (ஆ)மேசய | (மேசை) |
| **පුටුව** | ீ)புடுவ | (கதிரை) |
| **අඩිකෝදුව** | அடி(மு)கோ(னுர்)துவ | (அடிமட்டம்) |

**தேர்ச்சி**

உணவு வகைகள் சிலவற்றின் பெயர் கூறுவார்.

| | | |
|---|---|---|
| ඉඳිආප්ප | இந்(DH)தியாப்ப | (இடியப்பம்) |
| පිට්ටු | (P)பிட்(T)டு | (பிட்டு) |
| බත් | (B)பத் | (சோறு) |
| කිරිබත් | (K)கிரி(B)பத் | (பாற்சோறு) |
| ආප්ප | ஆப்(P)ப | (அப்பம்) |

**தேர்ச்சி**

சுற்றுப்புறத்தில் வாழும் சில பிராணிகளைப் பெயரிடுவார்.

| | | |
|---|---|---|
| ஔயஇன | (டீ)பல்லா | (நாய்) |
| அஞளை | ீ)பூ(ளு)சா | (பூனை) |
| டஅஙபன | (மு)கபு(வு)டா | (காகம்) |
| .ளசதன | (பு)கிரவா | (கிளி) |
| கஇயமன | லேனா | (அணில்) |

குறிப்பு :

DRAFT

## தேர்ச்சி : மகிழ்ச்சியுடன் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவிப்பார்/ துலங்குவார்.

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

**செயற்பாடு : 1**

- ஆசிரியர் வகுப்பு மாணவர்களுக்கு ආයුබෝවන් என வாழ்த்துத் தெரிவிக்குக.
- வகுப்பு மாணவரும் ආයුබෝවන් என துலங்க வழிப்படுத்துக.
- எந்த ஒருவரதும் பிறந்ததினத்தில் நாம் வாழ்த்துத் தெரிவிப்பது ஒரு நல்ல பழக்கம் என்பதை மாணவருக்கு விளக்குக.
- நாம் இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் என தமிழில் கூறும் வாழ்த்தை, 'සුභ උපන් දිනයක් වේවා' (சுப உபன் தினயக் வேவா) என சிங்களத்தில் கூறலாம் என மாணவர்க்கு எடுத்துக்காட்டுக.
- அவ்வாக்கியத்தை மாணவரைக் கொண்டு சில தடவைகள் கூறச் செய்க.
- சரியான உச்சரிப்பை மாணவர்க்குப் பரிச்சயப்படுத்துவதற்காக சொற்களைத் தனித்தனியே உச்சரிப்பது முக்கியமானது.

  இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் සුභ උපන් දිනයක් වේවා' (சுப உபன் தினயக் வேவா)

DRAFT


**செயற்பாடு : 2**

- வாழத்துத் தெரிவிப்பதற்காகப் பயன்படுத்தும் வாக்கியத்தை நன்கு உறுதிப்படுத்திய பின்னர் ஆசிரியை மாணவர்களுக்கு ஒரு பொம்மையைக் காட்சிப்படுத்தி அப்பொம்மைக்கு பொருத்தமான ஒரு பெயரைக் கூறுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- இன்று இப்பொம்மையின் பிறந்த நாள் ஆதலால் எல்லோரும் சேர்ந்து பொம்மைக்கு பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவிப்போம் எனக் கூறி சிங்கள மொழியில் பொம்மையை வாழ்த்துங்கள்

  සුභ උපන් දිනයක් වේවා' (சுப உபன் தினயக் வேவா)
- ஆசிரியர் நன்றி (ස්තූතියි/ ஸ்துதிய்) என துலங்கல் காட்டுங்கள்.
- எமக்கு எவரேனும் வாழ்த்தைத் தெரிவித்தால் நாம் பதிலாக நன்றி தெரிவிப்பது ஒரு நல்ல பழக்கமாகும் எனக் கூறி சிங்களத்தில் நன்றி ('ස්තූතියි' ஸ்துதிய்) எனும் சொல்லைப் அக்கருத்து தெரிவிக்கப்படுகின்றது என மாணவர்க்கு எடுத்துக் கூறுக.
- நன்றி ස්තූතියි எனும் சொல்லையும் மாணவர்கள் நன்கு உறுதிப்படுத்திக் சொல்லும் வரையில் சில தடவை உச்சரிக்க வழிப்படுத்துக.
- இவ்வாறாக பொம்மையை மாணவர் சிலரின் கைகளில் கொடுத்து பொம்மைக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவிக்குமாறு ஏனைய மாணவர்க்கு கூறுக. பொம்மையைக் கையால் வைத்திருக்கும் மாணவரை நன்றி ස්තූතියි (ஸ்துதிய்) கூறச் சந்தர்ப்பமளிக்குக.

செயற்பாடு : 3

- மாணவரை வட்டமாக நிறுத்துக. ஆசிரியர் வட்டத்தின் நடுவில் நின்றுகொள்ளுங்கள்.
- ‘இன்று எனது பிறந்த நாள். எல்லோரும் எனக்கு வாழ்த்துத் தெரிவியுங்கள்’ எனக் கூறி மாணவர் ஒவ்வொருவருக்கும் சிங்களமொழியில் வாழ்த்து வாக்கியத்தை கூற வழிப்படுத்துக.
  இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் සුභ උපන් දිනක් වේවා’ (சுப உபன் தினக் வேவா)
- ஆசிரியர் ස්තූතියි (ஸ்துதிய்) என துலங்குக.
- மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்குக. பின்னர் ஒரு மாணவரை குழுவின் நடுவில் நிறுத்தி, அம்மாணவருக்கு வாழ்த்துத் தெரிவிக்குமாறு ஏனைய மாணவர்க்கு அறிவுறுத்துக.
- வாழ்த்தைப் பெறும் மாணவன் ස්තූතියි (ஸ்துதிய்) எனக்கூறி துலங்க வழிப்படுத்துக.
- மாணவரை திறந்தவெளியான இடத்துக்கு அழைத்துச் சென்று வட்டமாக நிறுத்துக.
- கீழே தரப்பட்டுள்ளது போன்று தயார்ப்படுத்திய நிறப்பூ ஒவ்வொன்று மாணவர்க்கு வழங்குக.
  உதா: வகுப்பில் 25 மாணவர்கள் உள்ளனரெனின் ஒரு நிறத்தில் 5 பூக்கள் வீதம் 25 பூக்கள் தயாரித்துக் கொள்க.





- மாணவர்கள் தரம் I இல் கற்ற, நிறங்கள் பற்றிய விளக்கத்தை மேலும் உறுதிப்படுத்துவதற்காக ஆசிரியர் ஐந்து நிறங்களில் தயாரிக்கப்பட்ட பூக்களைக் கையில் எடுத்து ஒவ்வொன்றையும் காட்சிப்படுத்தி சிங்கள மொழியில் அதில் உள்ள நிறத்தை வினவுக.
  உதா: නිල් පාට (நில்பாட்ட) நீல நிறம்
- இவ்வாறாக மாணவர்கள் ஐந்து நிறங்களையும் இனங்கண்டு அந்நிறங்களைச் சரியாக உச்சரித்த பின்னர், செயற்பாட்டை ஆரம்பிக்குக.
- ஆசிரியர் வட்டத்தின் மத்தியில் நிற்குக.
- ஆசிரியர் மேற்படி நிறங்களுள் ஒன்றின் பெயரைக் கூறுக.
- அந்நிறப் பூக்களைக் கையில் வைத்துள்ள மாணவர்களை முன்னே அழைக்குக.
- பின்னர், ஒவ்வொரு மாணவரும் தமது கையில் உள்ள பூவை ஆசிரியரின் கையில் கொடுத்து ஆசிரியருக்கு සුභ උපන්දිනක් වේවා (சுப உபன்தினக் வேவா) என வாழ்த்துத் தெரிவிக்க வழிப்படுத்துங்கள்.
- ஆசிரியர் ස්තූතියි (ஸ்துதிய்) நன்றி எனத் துலங்குதல் வேண்டும்.
- மாணவர்களை வட்டத்தில் இருந்த இடத்துக்குத் திரும்பி அனுப்புக. இனி மற்றுமொரு நிறத்தை ஆசிரியர் கூறுக. அந்நிறப்பூக்களைக் கையில் வைத்துள்ள மாணவர்கள் முன்னர்போன்று வட்டத்துள் வந்து ஆசிரியருக்கு வாழ்த்துத் தெரிவிக்கச் சந்தர்ப்பமளிக்குக. இவ்வாறாக ஆசிரியர் சகல நிறங்களைக் கூறி எல்லா மாணவர்க்கும் வாழ்த்துத் தெரிவிக்கச் சந்தர்ப்பமளிக்குக.

DRAFT

**செயற்பாடு : 4**

- செயற்பாடு 3 இல் பயன்படுத்திய பூக்களை இச்செயற்பாட்டுக்காகவும் பயன்படுத்துக.
- ஒரே நிறப் பூக்களைக் கையில் வைத்திருக்கும் மாணவர்களை ஒரு வரிசையிலும் மற்றுமொரு நிறப் பூக்களைக் கையில் வைத்திருக்கும் மாணவர்களை மற்றொரு வரிசையிலும் முகத்தை முகம் நோக்கியவாறு நிற்கச் செய்க.

**உரு**




- நீல நிறப் பூவைக் கையில் வைத்துள்ள மாணவர்கள் தம்மிடமுள்ள பூவை பச்சை நிறப் பூவை வைத்துள்ள மாணவருக்குக் கொடுத்து வாழ்த்துத் தெரிவிக்கவும். பச்சை நிறப் பூவை வைத்திருக்கும் மாணவர்கள் ස්තුතියි (ஸ்துதிய்) நன்றி என நன்றி கூறுமாறும் அறிவுறுத்துக.
- பின்னர் பச்சை நிறப் பூவைக் கையில் வைத்திருக்கும் மாணவர்கள், தம்மிடமுள்ள பூவை நீல நிறப் பூவை வைத்துள்ள மாணவருக்கு கொடுத்து வாழ்த்துத் தெரிவிக்கவும். நீல நிறப் பூவை வைத்திருப்பவர் ස්තුතියි (ஸ்துதிய்) நன்றி கூறவும் அறிவுறுத்துக.
- வகுப்பு மாணவர் அனைவரும் பங்குபற்றத்தக்கவாறாக இச்செயற்பாட்டை நடத்துக.
- இவ்வாறாக மாணவரது கையில் உள்ள பூக்களைப் பரிமாறியவாறு வகையில் செயற்பாட்டை நடத்துக.

**செயற்பாடு : 5**

- பிறந்த நாள் வாழ்த்தை ஒரு பாடல் மூலம் தெரிவிக்க ஆயத்தமாகுமாறு மாணவர்க்குக் கூறுக.
- கிட்டிய ஒரு நாளில் பிறந்த தினத்தைக் கொண்டாடிய அல்லது கொண்டாடவுள்ள ஒரு மாணவனை வகுப்பின் முன்னே அழைக்குக.

  ( Happy birthday to you . . . . எனும் ஆங்கிலப் பாடலின் இராகத்தில் பாடலைச் சிங்களத்தில் பாட வழிப்படுத்துக.)

  සුභ උපන් දිනක් වේවා' (சுப உபன் தினக் வேவா)
  සුභ උපන් දිනක් වේවා' (சுப உபன் தினக் வேவா)
  සුභ උපන් දිනක් වේවා' - කමල්/ (சுப உபன் தினக் வேவா - கமல்/ ...)
  සුභ උපන් දිනක් වේවා' (சுப உபன் தினக் வேவா)

- மாணவர் ஒவ்வொருவரும் பிறந்தநாள் இடம்பெறும் நாளில் இவ்வாறாக, ஏனைய மாணவரைக் கொண்டு வாழ்த்துத் தெரிவிக்கச் செய்க.

DRAFT

## தேர்ச்சி : நண்பர்களிடம் மரியாதையாகவும் நட்புடனும் வேண்டுகோள் விடுப்பார்.

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

**செயற்பாடு : 1**

- மாணவரை திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துக் கொள்க.
- ஆசிரியர் දුවන්න (துவன்ன) ஓடுங்கள் மற்றும் නවතින්න (நவதின்ன) நில்லுங்கள் ஆகிய கட்டளைகள் மீள நினைவூட்டும் வகையில் அக்கட்டளைகளை ஒன்றுவிட்டொன்றாக வழங்கி, மாணவர்கள் ஒரே இடத்தில் ஓடுவதற்கும் ஓடுவதை நிறுத்துவதற்கும் வழிப்படுத்துக.
- ஆசிரியர், மாணவருக்கு'අතනට' (அதனட) என்பது அங்கே என்பதாகும் எனவும் 'මෙතනට' (மெதனட) என்பது இங்கே என்பதாகும் எனவும் விளக்குக.
- மாணவரை 3 - 4 குழுக்களாகப் பிரித்து பின்வருமாறு கட்டளை வழங்குக.

  අතනට දුවන්න - அதனட்ட துவன்ன (அங்கே ஓடுங்கள்)

  නවතින්න - நவதின்ன (நில்லுங்கள்)

  මෙහෙ එන්න - மெஹெ என்ன (இங்கே வாருங்கள்)

- இவ்வாறாக பின்வரும் கட்டளைகளைப் பயன்படுத்திச் செயற்பாட்டை ஒழுங்கு செய்து கொள்க.

  එහෙ යන්න - எஹெ யன்ன (அங்கே செல்லுங்கள்/ போங்கள்)

  මෙහෙ බලන්න - மெஹெ பலன்ன (இங்கே பாருங்கள்)

  අතනින් ඉඳගන්න - அதனின் இந்தகன்ன (அங்கே இருங்கள்)

  මෙහෙ නවතින්න - மெஹெ நவதின்ன (இங்கே நில்லுங்கள்)

**செயற்பாடு : 2**

- மாணவரை 2 - 3 குழுக்களாகப் பிரிக்குக.
- குழுத்தலைவரை நியமித்துக் கொள்க.
- தலைவர், செயற்பாடு இல. 01 இல் ஆசிரியர் செய்தது போன்றே தமது குழுவின் மற்றைய மாணவர்க்குக் கட்டளை பிறப்பித்தல் வேண்டும். மாணவர்கள் அக்கட்டளைக் கமைய துலங்குதல் வேண்டும்.
- குழுத்தலைவரை மாற்றியவாறு இச்செயற்பாட்டைத் தொடர்ந்தும் செய்க.

இத்தேர்ச்சியின் கீழ் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள, நட்பு ரீதியான வேண்டுகோள் வாக்கியங்களை வகுப்பறையில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையின்போது பொருத்தமானவாறு பயன்படுத்துக. மாணவரும் இவ்வாக்கியங்களைப் பயன்படுத்த வழிப்படுத்தும் வகையில் சந்தர்ப்பங்களை உருவாக்குக.

DRAFT

## தேர்ச்சி: குடும்ப உறுப்பினர்களின் உறவுமுறையை இனங்கண்டு கூறுவார்.

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

**செயற்பாடு : 1**

- அம்மா, அப்பா, அக்கா, அண்ணா, தம்பி, தங்கை ஆகியோரை தெளிவாகக் காட்டுமாறு குச்சிப் பொம்மைகள் 6 தயாரித்துக் கொள்க.
- தமது வீட்டில் இருக்கும் குடும்ப உறுப்பினர்கள் யாவர் என சில மாணவர்களிம் வினவுக.
  *உ-ம்:* அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, தங்கை, தம்பி
- "அம்மா" குச்சி பொம்மையை ஆசிரியர் கையில் எடுத்து காட்சிப்படுத்துக.
  இது எங்கள் அம்மா அம்மா என்பதைக் குறிப்பதற்காக சிங்கள மொழியிலும் අම්මා' அம்மா' எனும் சொல்லே பயன்படுகின்றது என்பதை மாணவர்க்கு விளக்குக.
- 'අම්මා' அம்மா என்பதை மாணவருடன் சேர்ந்து சில தடவைகள் உச்சரிக்குக.
- பின்னர் அப்பாவைக் குறிக்கும் குச்சிப் பொம்மையைக் காட்சிப்படுத்தி, இது அப்பா அப்பாவை குறிப்பதற்காக சிங்கள மொழியில் 'තාත්තා'- தாத்தா எனும் சொல் பயன்படுகிறது எனக் கூறி, அச்சொல்லையும் உச்சரித்துக் காட்டுக.
- அக்காவைக் குறிக்கும் குச்சிப் பொம்மையைக் காட்சிப்படுத்தி, சிங்கள மொழியிலும் "அக்கா" 'අක්කා' (அக்கா) எனும் சொல் பயன்படுத்தப்படுகின்றது எனக் குறிப்பிடுக. அச்சொல்லையும் மாணவருடன் சில தடவைகள் உச்சரிக்குக.
- இவ்வாறாக, அண்ணா என்பது 'අයියා' (அய்யா) எனவும், தங்கை என்பது 'නංගි' (நங்கி) எனவும் தம்பி என்பது 'මල්ලි' (மல்லி) எனவும் பயன்படுத்தப்படும் என்பதை விளக்குக.
- ஆசிரியர் பயன்படுத்திய குச்சிப் பொம்மைகள் எல்லாவற்றையும் கையில் எடுத்து, அவ்வொவ்வொரு பொம்மையையும் காட்சிப்படுத்தி வகுப்பு மாணவரிடத்தே அவர்கள் யார்? என சிங்களத்தில் கூற வழிப்படுத்துக.
- மாணவரது விளக்கத்தைச் சோதிப்பதற்காக எழுமாறாகத் தெரிவு செய்து குறிப்பிடும் மாணவர்கள் ஊடாகவும் விடை பெறுக.

**செயற்பாடு : 2**

- மாணவரைப் பொருத்தமான திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.
- மாணவரை ஒவ்வொருவராக முன்னே அழைத்து, தமது குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் தொடர்பான விவரங்களை முன்வைக்குமாறு வழிப்படுத்துக.
  *உ-ம்:* අම්මා, තාත්තා, මල්ලි ............... என்றவாறாக
  அம்மா, தாத்தா, மல்லி ........... என்றவாறாக
- மாணவர் ஒவ்வொருவரும் முன்வைப்புச் செய்த பின்னர், குடும்ப உறுப்பினர்கள் தொடர்பாக ஒரு பாடலைப் பாட ஆயத்தமாகுமாறு கூறி, பின்வரும் பாடலை ஒவ்வொரு வரியாக ஆசிரியர் பாடுக.

| | |
|---|---|
| අම්මා අපේ අම්මා | අක්කා අපේ අක්කා |
| තාත්තා අපේ තාත්තා | මල්ලි අපේ මල්ලි |
| අයියා අපේ අයියා | නංගි අපේ නංගි |
| ලේල ලලලෝ . . . // | ලේල ලලලෝ . . . // |

DRAFT

அம்மா அபே அம்மா
தாத்தா அபே தாத்தா
அய்யா அபே அய்யா
லல்லா லலலலா . . . //

அக்கா அபே அக்கா
மல்லி அபே மல்லி
நங்கி அபே நங்கி
லல்லா லல்லலா . . . //

- இப்பாடலில் 'අපේ' (அப்பே) என்பது எங்கள் என்பதைக் குறிக்கின்றது (பொருத்தமான மெட்டில் பாடலைப் பாடுக.)
- பின்னர் பாடலை மாணவருடன் சேர்ந்து பாடுக.

செயற்பாடு : 3


- வகுப்பு மாணவரை திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்று வட்டமாக நிறுத்துக.
- செயற்பாடு 1 இற்காகத் தயாரித்த குடும்ப உறுப்பினர்களின் குச்சிப் பொம்மைகள் ஆறையும் (06) கீழே படத்தில் காட்டியுள்ளவாறு மாணவர்க்குப் பகிர்ந்தளிக்குக.
- பாடலொன்றை இசைக்கச் செய்து, குச்சிப் பொம்மைகளை ஆளுக்காள் கைமாற்றி அனுப்புமாறு கூறுக. பாடல் நிறுத்தப்படும் சந்தர்ப்பத்தில் எவர் கையில் குச்சிப் பொம்மை உள்ளதோ அவர் அதற்கமைய தாம் யார் என அறிமுகஞ் செய்தல் வேண்டும்.

  உதாரணம்:

  * அம்மா குச்சப் பொம்மையைக் கையில் வைத்துள்ள மாணவன் -
  මම අම්මා (மம அம்மா) - நான் அம்மா

  * அண்ணா குச்சுப் பொம்மையை கையில் வைத்துள்ள மாணவன் -
  මම අයියා (மம அய்யா) - நான் அண்ணா

- இவ்வாறாக ஆறு மாணவர்களும் தம்மை அறிமுகஞ் செய்த பின்னர் மீண்டும் பாடலை இசைத்து முன்னர் போன்றே செயற்பாட்டை நடத்துக.
- மாணவர்கள் இச்சொற்களை நன்கு விளங்கிக் கொள்ளும் வரை செயற்பாட்டைத் தொடர்ந்தும் நடத்துக.




DRAFT

செயற்பாடு : 4

- வகுப்பு மாணவரை 6 பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கக.
- மாணவர் ஒவ்வொருவருக்கும் அம்மா, அப்பா, அக்கா, அண்ணா, தம்பி, தங்கை ஆகிய பாத்திரங்களைப் போலச் செய்வதோடு உதவியாக அமையத்தக்க சில பொருள்களை வழங்குக.

  உ-ம்: அம்மா - கொண்டை அப்பா - மீசை

  அண்ணா - காற்சட்டை தம்பி - தொப்பி, பந்து போன்றன


  மாணவர் ஒவ்வொருவராக வகுப்பின் முன்னே வந்து தம்மை அறிமுகஞ் செய்யச் சந்தர்ப்பமளிக்குக.


  உ-ம்: මම නංගි - மம நங்கி (நான் தங்கை)

DRAFT

செயற்பாடு : 5

- ☐ ஓர் அட்டையில் குடும்ப உறுப்பினர்கள் சிலர் உள்ளவாறு வகுப்பில் உள்ள மாணவர் தொகைக்குப் போதுமான அளவு அட்டைகள் தயாரித்துக் கொள்க.
- ☐ இவ்வாறு தயாரித்த அட்டைகளை ஆளுக்கு ஒன்று வீதம் பகிர்ந்தளியுங்கள்.
- ☐ தமக்குக் கிடைத்துள்ள அட்டையில் இருப்போர், ஒரு குடும்பத்தின் உறுப்பினர்கள் ஆவர் எனக் கூறுக.
- ☐ இனி, மாணவர் ஒவ்வொருவரிடமும் தமது கையில் உள்ள அட்டையில் இருப்போர் யார் என சிங்களத்தில் கூறுமாறு கூறுக.
- ☐ மாணவர்கள் தமக்கிடையே அட்டைகளைப் பரிமாறியவாறு, குடும்ப உறுப்பினர்கள் தொடர்பான விளக்கம் உறுதிபெறும் வகையில் இச்செயற்பாட்டை நடத்துக.





## தேர்ச்சி: தமது நண்பர்களின் குடும்பத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வார்.

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

**செயற்பாடு : 1**

- ஆசிரியை வகுப்பில் மாணவரின் எதிரே நின்றவாறு

  මම කුමාරි (மம குமாரி)

  මගේ නම කුමාරි (மகே நம குமாரி)

  මගේ අම්මාගේ නම ලතා (மகே அம்மாகே நம லதா) என்றவாறாகக் கூறுக.
- இவ்வாறு சில தடவைகள் உச்சரித்துக் காட்டுக.
- பின்னர் எழுமாறாகத் தெரிவு செய்த ஒரு மாணவரிடம் ඔබේ නම මොකක් ද ? (ஒபே நம மொகக்த) உங்கள் பெயர் என்ன? என வினவி விடை பெறுக.
- திரும்ப ඔයාගේ අම්මාගේ නම මොකක් ද ? - ஒயாகே அம்மாகே நம மொகக்த? (உங்கள் அம்மா பெயர் என்ன?) என வினவி விடை பெறுக.
- மாணவரை இருவர் இருவராக வகுப்பின் எதிரே அழைக்குக.
- அம்மாணவர் இருவருக்கும் பின்வருமாறு உரையாடலைக் கட்டியெழுப்ப சந்தர்ப்பமளிக்குக.

| | |
|---|---|
| ඔබේ නම මොකක් ද ? | ஒபே நம மொகக்த? உங்கள் பெயர் என்ன? |
| මගේ නම .... (ජනක) | மகே நம ............... (ஜனக) |
| ඔබේ අම්මාගේ නම මොකක් ද ? | ஒபே அம்மாகே நம மொகக்த? (உங்கள் அம்மா பெயர் என்ன?) |
| මගේ අම්මාගේ නම ..... (සීතා) | மகே அம்மாகே நம ....... (எனது அம்மா பெயர் ...........(சீதா) |

- இவ்வாறாக තාත්තා (தாத்தா - அப்பா), අක්කා (அக்கா - அக்கா) , අයියා (அய்யா - அண்ணா), නංගි (நங்கி - தங்கை), මල්ලි (மல்லி - தம்பி) ஆகியோரின் தகவல்களை வினவுமாறு மாணவரை வழிப்படுத்துக.

**செயற்பாடு : 2**

- அம்மா, அப்பா, அக்கா, அண்ணா, தம்பி, தங்கை ஆகியோரின் படங்களை சற்றுப் பெரிய, தடித்த மட்டையில் ஒட்டி வகுப்பில் மாணவர் குழுக்களுக்கு ஒவ்வொரு தொகுதி வீதம் வழங்குவதற்கு ஏற்ற தொகை அட்டைகள் தயாரித்துக் கொள்க.
- அவ்வட்டைத் தொகுதி ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பெட்டியில் இடுக.
- குழுவுக்கு ஒரு பெட்டி வீதம் வழங்குக. பெட்டியிலிருந்து தடவைக்கு ஓர் அட்டை வீதம் வெளியே எடுக்குமாறு கூறுக.
- அட்டையை வெளியே எடுத்த மாணவனுக்குக் கிடைத்த அட்டை "அம்மா" அட்டை எனின், அம்மாணவன் தமது வலது புறத்தே இருக்கும் மாணவனிடம் ஒபே அம்மாகே நம மொகக்த? (உங்கள் அம்மா பெயர் என்ன?) என வினவுதல் வேண்டும். அம்மாணவன் விடையளித்தல் வேண்டும்.
- இவ்வாறாக அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள கூற்றக்கள் மாணவரிடத்தே உறுதி பெறும் வரையில் செயற்பாட்டை தொடர்ந்தும் நடத்துக.

  "எனக்கு அக்கா இல்லை" என்றவாறாகத் தெரிவிக்க நேரிடும் சந்தர்ப்பங்களில் பின்வருமாறு செயற்படலாம்.

  මට අක්කා කෙනෙක් නැහැ - மட்ட அக்கா கெனெக் நெஹெ (எனக்கு அக்கா இல்லை) என்றவாறு கூறலாம்.



DRAFT

## தேர்ச்சி : 1 - 10 வரையிலான இலக்கங்களைச் சரியான சிங்கள உச்சரிப்புடன் பயன்படுத்துவார்.

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

**செயற்பாடு : 1**

- தரம் 1 இல் 1 - 5 வரையிலான இலக்கங்களைச் சிங்கள மொழியில் கூறும் திறனை மாணவர்கள் பெற்றுள்ளமையால் அதனை நினைவூட்டுவதற்காகப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- குழுவின் 5 - 6 பேர் அடங்குமாறு மாணவரைச் சில குழுக்களாகப் பிரிக்குக.
- ஒவ்வொரு குழுவுக்கும் தயாரித்து வைத்த சிறிய கொடிகள் 10 உம் அவற்றை இட்டு நிறுவத்துவதற்குப் பொருத்தமானவாறு மணல் இட்ட பாத்திரமொன்றும் வழங்குக.
- ஆசிரியர் சிங்கள மொழியில் 1 - 5 இடப்பட்ட ஓர் எண்ணைக் கூறுக. அதற்குச் சமமமான தொகைக் கொடிகளைப் பாத்திரத்தில் நிறுத்துதல் வேண்டும் என அறிவுறுத்துக.

  උදා : ஆசிரியர் - පහ (பஹ - ஐந்து)

  மாணவர்கள் - (5 கொடிகளைப் பாத்திரத்தில் நிறுத்துதல் வேண்டும்)
- 1 - 5 வரையிலான எண் பெயர்களை மீள நினைவூட்டும் வண்ணம் செயற்பாட்டைச் சில தடவைகள் நடத்துக.
- பின்னர் 6, 7 ஆகிய எண்களுக்குரிய எண் பெயர்களை மாணவர்க்கு அறிமுகஞ் செய்க.

  උදා : 6 - හය ஹய (ஆறு)

  7 - හත ஹத (ஏழு)
- 1 - 5 இற்.. செயற்பாட்டை நடத்துக. ஆசிரியர் 'හය' ஹய (ஆறு), 'හත' ஹத (ஏழு) ஆகிய சொற்கள் பல தடவைகள் உச்சரிக்கப்படும் வகையில் செயற்பாட்டை நடத்துக.
- மாணவர்கள் கைதட்டியவாறு 1 - 7 வரையிலான எண்களைச் சிங்கள மொழியில் கூறுக.
- இவ்வாறு 'අට' அட (எட்டு), 'නවය' நவய (ஒன்பது), 'දහය' தஹய (பத்து) ஆகிய எண்களையும் அறிமுகஞ் செய்க.
- ஆரம்பத்தில் கொடிகளைப் பயன்படுத்திச் செய்த செயற்பாட்டை 6 - 10 வரையிலான எண்களுக்காகவும் செய்க.


**செயற்பாடு : 2**

- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்று வட்டமாக நிறுத்துக.
- 1 - 10 வரை இலக்கங்களில் எழுதப்பட்ட அட்டைகளை ஒரு சிறிய பையில் இட்டுக் கொள்க.
- அப்பையை மாணவரிடையே ஆளுக்காக கைமாற்றி அனுப்புக.
- சைகை வழங்கியுவுடன் பையை அனுப்புவதை நிறுத்துமாறு கூறுக.
- ஆசிரியர் ගන්න கன்ன (எடுங்கள்) எனக் கூறியவுடன் பையைக் கையில் வைத்துள்ள மாணவன், அப்பையிலிருந்து ஓர் அட்டையை வெளியே எடுத்தல் வேண்டும்.
- ஆசிரியர் කියන්න கியன்ன (சொல்லுங்கள்) எனக் கூறியவுடன் அவ்வட்டையில் உள்ள எண்ணின் பெயரை சிங்கள மொழியில் மாணவன் கூற வேண்டும்.
- மாணவர்கள் சரியாக இலக்கத்தை இனங்கண்டு, சரியான உச்சரிப்புடன் கூறுகின்றனரா எனக் கவனிக்குக. தேவைப்படும் சந்தர்ப்பங்களில் திருத்தம் செய்க.
- மாணவன் வெளியே எடுத்த அட்டையை மீண்டும் பையினுள் இட்டு பையை மீண்டும் கைமாற்றி அனுப்புக. முன்னர் போன்றே செயற்பாட்டை நடத்துக.

DRAFT

**செயற்பாடு : 3**

- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்று, இரண்டு குழுக்களாகப் பிரித்து இரண்டு வரிசைகளில் நிறுத்துக.
- வரிசைகளுக்கு எதிரே மணல் நிரப்பிய பாத்திரத்தை வைக்குக. வர்ண $A_4$ கடதாசிகளைப் பயன்படுத்தித் தயாரித்த 1 - 10 வரையிலான எண்கள் தனித்தனியே எழுதப்பட்ட கொடித் தொகுதிகள் இரண்டு தயாரித்துக் கொள்க.
- அக்கொடித் தொகுதிகளை வெவ்வேறாக மணல் பரப்பிய பாத்திரங்களில் இடுக.




- ஆசிரியர் ஓர் எண்ணை சிங்களத்தில் கூறியதும் இரண்டு குழுக்களிலும் முதலில் இருக்கும் மாணவர் இருவரும் ஓடிச் சென்று தமது வரிசையில் எதிரே உள்ள பாத்திரத்தில் இருந்து அவ்வெண்ணைக் காட்டும் கொடியை எடுத்து ஆசிரியருக்கும் காட்டுதல் வேண்டும்.
- கொடியை மீண்டும் பாத்திரத்தில் இட்ட பின்னர் தமது வரிசையில் இறுதியில் அமர்ந்து கொள்ள வேண்டும்.
- இரண்டு குழுக்களிலும் எல்லா மாணவர்களும் பங்கு கொள்ளும் வரையில் செயற்பாட்டைத் தொடர்ந்தும் நடத்துதல் வேண்டும்.
- இதனை ஒரு விளையாட்டுப் போன்றும் ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

**செயற்பாடு : 4**

- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.
- மாணவரை வட்டமாக நிற்கச் செய்க.
- 1 - 10 எண்கள் எழுதப்பட்ட அட்டைகளை மாணவரிடையே பகிர்ந்தளிக்குக.
- ஆசிரியர் சிங்கள மொழயில் கூறும் எண் அடடையை கையில் வைத்துள்ள மாணவன் வடடதினுள் வருதல் வேண்டும்.
- வட்டத்தினுள் வந்த மாணவன் ஆசிரியரது அறிவுறுத்தலின்படி செயற்பட வேண்டும்.

  உ-ம்: අප්පුඩි ගහන්න — அப்புடிகஹன்ன (கை தட்டுங்கள்)

  සිට ගන්න — சிட்டகன்ன (எழுந்து நில்லுங்கள்)

  වාඩිවෙන්න — வாடிவென்ன (இருங்கள்)


- மாணவர்கள் அக்கட்டளைகளுக்குச் சரியான துலங்கிய பின்னர் அசிரியர் යන්න - யன்ன (போங்கள் / செல்லுங்கள்) எனக் கூறி மாணவனை மீண்டும் வட்டத்திற்குச் செல்லுமாறு வழிப்படுத்த வேண்டும்.
- அம்மாணவர்கள் தமது இடத்துக்குச் சென்ற பின்னர், மற்றுமோர் எண்ணைக் கூறிச் செயற்பாட்டைத் தொடருதல் வேண்டும்.
- மாணவர் அனைவர்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் வரையில் செயற்பாட்டை நடத்துக.

DRAFT

**செயற்பாடு : 5**

- 1 - 10 வரையிலான எண்களைக் காட்டும் பட அட்டைகளை வகுப்பில் மாணவரின் தொகைக்கேற்ப போதுமான அளவு தயாரித்துக் கொள்க.
- பட அட்டைகளை மாலைபொன்று அணியத்தக்கவாறு வாரிட்டுத் தயாரித்துக் கொள்க.

*உ-ம்:*



- மாணவரைத் திறந்த வெளியான ஓரிடத்திற்கு அழைத்துச் சென்று, ஆளுக்கு ஒன்று வீதம் எண் அட்டைகளைப் பகிர்ந்தளிக்குக. கழுத்தில் அணிந்து கொள்ளுமாறு கூறுக.
- ஒலிப்பதிவு செய்துள்ள பாடலொன்றை இசைக்குக. மாணவரை வட்டமாக மெதுவாக ஓடுமாறு அறிவுறுத்துக.
- ஆசிரியை, பாடலைப் பொருத்தமான ஓர் இடத்தில் நிறுத்துதல் வேண்டும். அச்சந்தர்ப்பத்தில் ஆசிரியை கூறும் எண்ணைக் காட்டும் அட்டையை வைத்திருக்கும் மாணவர்கள், வட்டத்தின் மத்தியில் நிற்றல் வேண்டும்.

□ மீண்டும் பாடலை இசைத்து வட்டத்தின் மத்தியில் வந்த மாணவரும் மீண்டும் வட்டமாக ஓடுமாறு அறிவுறுத்துங்கள்.

- இவ்வாறாக மாணவர் தமது கையில் உள்ள எண் அட்டைகளை பரிமாறியவாறு செயற் பட்டை மீண்டும் மீண்டும் ஈடுபடுதல் வேண்டும்.

**செயற்பாடு : 6**

- சிறிய பெட்டியொன்றினை அல்லது உறை அல்லது பை ஒன்றினைப் பெறுக.
- அதனுள் இடத்தக்க அளவுள்ள றப்பர் பந்துகள்/ வேறு பொருள்கள் 10 ஐத் தேடிப் பெறுக.
- ஆசிரியர் எழுமாறாக ஒரு மாணவனின் அருகே சென்று அதனுள் இருந்து எடுக்க வேண்டிய பொருள்களின் எண்ணிக்கையைச் சிங்களத்தில் கூறுக.

  உ-ம்: තුනක් ගන්න - துனக் கன்ன (மூன்று எடுங்கள்)

- அப்போது அம்மாணவர் எவ்வெண்ணிக்கைக்குச் சமமான தொகைப் பொருள்களை வெளியே எடுத்தல் வேண்டும்.
- இவ்வாறாக ஆசிரியர் மாணவர் சிலரிடம் சென்று, இச்செயற்பாடடை நடத்துக.
- பின்னர் ஆசிரியருக்குப் பதிலாக ஒரு மாணவனின் கையில் பையை அல்லத பெட்டியைக் கொடுத்து செயற்பாட்டைத் தொடர்ந்தும் நடத்துக.

□ ஆசிரியருக்குப் பதிலாக கட்டளைகளையும் மாணவரே வழங்க இடமளிக்குக.

- மாணவரைக் குழுக்களாகப் பிரித்து குழுச் செயற்பாடாகவும் இச்செயற்பாட்டைச் செய்க.

DRAFT

## தேர்ச்சி : நிறத்தைப் பெயரிட்டு, எளிமையான வாக்கியங்கள் கூறுவார்.

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

**செயற்பாடு : 1**

- நீலம், பச்சை, மஞ்சள், வெள்ளை, கறுப்பு, சிவப்பு ஆகிய நிறங்களின் தனித்தனியே 6 அட்டைகள் தயாரித்துக் கொள்க.
- நிற அட்டைகளைச் சிங்கள மொழியில் பெயரிட மாணவரை வழிப்படுத்துக.

  උදා - නිල් පාට - நில் பாட்ட (நீல நிறம்)

  කොළ පාට - கொல பாட்ட (பச்சை நிறம்)

  සුදු පාට - சுது பாட்ட (வெள்ளை நிறம்)

  ........ என்றவாறாக
- අහස - அஹச (வானம்), කොළය - கொலய (இலை), කෙසෙල් - கெசெல் (வாழைப்பழம்), කොකා - கொக்கா (கொக்கு), කපුටා - கபுடா (காகம்), ජම්බු - ஜம்பு (ஜம்பு) ஆகியவற்றின் படங்களைத் தயாரித்துக் கொள்க.
- அவற்றைப் பின்வருமாறு வர்ணந்தீட்டிக் கொள்க.

  வானம் - நீல நிறம்

  இலை - பச்சை நிறம்

  வாழைப்பழம் - மஞ்சள் நிறம்
- பட அட்டைகளில் உள்ள நிறங்களைச் சிங்கள மொழியில் அறிமுகஞ் செய்க.
- பின்னர் வானம், இலை, வாழைப்பழம் ஆகியவற்றை சிங்களத்தில் கூறும் விதத்தை விளக்குக.

  අහස - அஹச (வானம்)

  කොළය - கொலய (இலை)

  කෙසෙල් - கெசெல் (வாழைப்பழம்)
- பின்னர் அப்படங்களில் காட்டப்படும் நிறங்களைக் கூறுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- பின்னர் படம், நிறம் ஆகிய இரண்டையும் சேர்த்து அவற்றின் நிறம் தொடர்பாகக் கருத்துக் கூறுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

  උදා : අහස නිල් පාටයි - அஹச நில் பாட்டய் - (வானம் நீல நிறம்)

  කොළය කොළ පාටයි - கொலய கொல பாட்டய் - (இலை பச்சை நிறம்)
- இவ்வாறாக மற்றைய படங்களையும் அறிமுகம் செய்து அவற்றின் நிறம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 2**

- வானம், இலை, வாழைப்பழம், கொக்கு, காகம் போன்றவை உள்ளடக்குமாறு சித்திரமொன்று (நிறந்தீட்ட) தயாரித்துக் கொள்க.
- அச்சித்திரப்பிரதிகளை ஆளுக்கு ஒன்ற வீதம் மாணவர்க்குப் பகிர்ந்தளிக்குக.
- ஆசிரியர் பின்வருமாறு மாணவர்க்கு அறிவுறுத்தல் வழங்குக.

  உ-ம்: අහස නිල් පාටයි - அஹச நில் பாட்டய் - (வானம் நீல நிறம்)

  කොළය කොළ පාටයි - கொலய கொல பாட்டய் - (இலை பச்சை நிறம்)
- மாணவர்கள் நிறந்தீட்டிய பின்னர், எழுமாறாகத் தெரிவு செய்த சில மாணவர்களுக்கு, சித்திரத்தில் காணப்படும் நிறங்களைக் கூறச் சந்தர்ப்பமளிக்குக.



DRAFT

தேர்ச்சி : தமது நண்பர்களிடம் சுகம் விசாரிப்பார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

செயற்பாடு : 1

- ஆசிரியர் தமது கைகளில் அணிந்து கொள்ளத் தக்கவாறாக இரண்டு பிராணி பொம்மலாட்டப் பொம்மைகள் செய்து கொள்க.

  உ-ம்: பறவை, பூனை

  முயல், நாய்
- ஒரு கையில் உள்ள பிராணி பொம்மையை அசைத்து ஆசிரியர் மற்றைய பிராணி பொம்மையிடம் සැප දුක් කොහොම ද ? செப துக் கொஹொமத? - (எப்படிச் சுகம்?) என வினவுக.
- மீண்டும் குரலை மாற்றி, மற்றைய பொம்மையை அசைத்து හොඳින් ඉන්නවා - ஹொந்தின் இன்னவா (நல்ல சுகம்) என விடையளித்தல்
- நாம் எவரேனும் ஒருவரிடம் சிங்களத்தில் சுகம் விசாரிக்கும் போது සැපදුක් කෙසේ ද (செப்பதுக் கெஸேத) என வினவுவதாகவும், அதற்கு 'හොඳින් ඉන්නවා' - ஹொந்தின் இன்னவா எனப் பதிலளிப்பதாகவும் விளக்குக.
- மீண்டும் பொம்மைகளைப் பயன்படுத்தி, இந்த உரையாடலைச் சில தடவைகள் முன்வைக்குக.
- இவ்வாறாக பொம்மையில் உள்ள பிராணிகள், மாணவர்களிடமும் மாணவர்கள் அப்பொம்மைப் பிராணிகளிடமும் சுகம் விசாரிக்கவும் பதிலளிக்கவும் சந்தர்ப்பமளிக்குக.
- இவ்வாறாகவே ஆசிரியர் எழுமாறாக மாணவர்களிடம் සැපදුක් කොහොම ද செப்பதுக் கொஹொமத (எப்படி சுகம்?) என வினவி அவர்களிடமிருந்து பதிலைப் பெறுக.
- ஆசிரியரிடம் அவ்வாறாக வினவுவதற்கு மாணவர்க்கும் சந்தர்ப்பமளிக்குக. இவ்வாக்கியங்கள் மாணவரிடத்தே நன்கு உறுதிபெறும் வரையில் மாணவரை இருவரிருவராகவும் குழுக்களாகவும் இச்செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- வசதி உள்ளதாயின் சமாந்தர வகுப்பு ஆசியர் ஒருவரை அல்லது வேறு ஆசிரியர் ஒருவரை வகுப்புக்கு அழைத்து மாணவரிடம் இவ்வாறாக சுகம் விசாரிக்கவும் மாணவர் அதற்குப் பதிலளிக்கவும் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 2**

- மற்றுமொருவரிடம் சுகம் விசாரிக்கும் விதத்தையும் அதற்குப் பதிலளிக்கும் விதத்தையும் ஒரு பாடலாக மாணவருடன் பாடுக.

  மாணவர்கள் நன்கு பரிச்சயம் பெறும் வரையில் ஆசிரியர் பாடலைப் பாடி, வினாவை ஒரு பகுதியின் பாட, பதிலை மற்றைய பகுதியினர் அளிக்கும் வகையில் ஒழுங்கு செய்து பாடலைப் பாடுக.

  *උදා :* ஆசிரியர் - සැපදුක් කොහොම ද // செப்பதுக் கொஹொமத (எப்படி சுகம்?)

  மாணவர் - හොඳින් ඉන්නවා // (ஹொந்தின் இன்னவா - நல்ல சுகம்)

  ஆசிரியர் - සැපදුක් කොහොම ද //

  மாணவர் - හොඳින් ඉන්නවා //

DRAFT

**செயற்பாடு : 3**

- வகுப்பு மாணவரை 10 பேர் கொண்ட குழுக்களாகப் பரிக்குக.
- குழுக்களை வரிசையில் நிற்கச் செய்க.
- முன்னோக்கியவாறு வரிசையில் நிற்குமாறு எல்லாக் குழுக்களுக்கும் கூறுக. ஒரு குழுவின் மாணவர் மாத்திரம் நிற்குமாறும் ஏனைய குழு மாணவர்கள் யாவரும் அமருமாறும் கூறுக.
- ஏனைய மாணவர்களும் குழுக்களாக எழுந்து நிற்கும் மாணவர் வரிசையை நன்கு பார்க்கக் கூடியதாக அமர்த்துக.
- நிற்கும் குழு மாணவர்களும் முதலாவதாக நிற்பவர் பின்புறம் திரும்பி இரண்டாவதாக இருக்கும் மாணவனிடம் සැප දුක් කොහොමද ? செப்பதுக் கொஹொமத (எப்படி சுகம்?) என வினவுதல் வேண்டும்.
- இரண்டாவதாக நிற்கும் மாணவன் හොඳින් ඉන්නවා ஹொதின் இன்னவா (நல்ல சுகம்) எனப் பதிலளித்தல் வேண்டும்.
- மீண்டும் இரண்டாவதாக நிற்கும் மாணவன் மூன்றாவதாக நிற்கும் மாணவனை நோக்கித் திரும்பி முன்னர் போன்றே வினவுதல் வேண்டும்.
- வினாக் கேட்ட மாணவனுக்கு விடை கிடைத்த பின்னர், அவர் வரிசையில் அதே இடத்தில் அமர்ந்து கொள்ள வேண்டும்.
- இவ்வாறாக வரிசையில் இறுதி மாணவர் வரையில் செயற்பாட்டை நடத்துக.
- இவ்வாறாக வரிசையில் இறுதி மாணவர் සැප දුක් කොහොමද ? செப்பதுக் கொஹொமத (எப்படிச் சுகம்?) என வினவுதல் வேண்டும். ஆசிரியர் அதற்குப் பதிலளித்தல் வேண்டும்.
- மற்றைய குழுவினரையும் இவ்வாறாகவே செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

DRAFT

## தேர்ச்சி : நாம் அன்றாடம் பயன்படுத்தும் சில பொருள்களைப் பெயரிடுவார்.

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

**செயற்பாடு : 1**

* පැන්සල - பென்சல - (பென்சில்)

* මේසය - மேசய - (மேசை)

* අඩි කෝදුව - அடிகோதுவ - (அடிமட்டம்)

* පුටුව (புடுவ) ෙවචසම

* පොත (பொத) ය්වතවනෙත

ஆகிய ஐந்து சொற்களையும் கற்பிப்பதற்காக, வகுப்பறையிலிருந்து, பொருள்களைத் தெரிவு செய்து கொள்க. இல்லையேல் சிறிய மாதிரியுருக்களை ஆக்கிக் கொள்க.

- ஐந்து உபகரணங்களையும் தனித்தனியே காட்டிப் பெயரை வினவுக.
- இந்த உபகரணங்களின் சிங்களப் பெயர் எனின் என்று தெரியுமா என வினவுக.
- மீண்டும் மீண்டும் அப்பொருள்களை மாணவர்க்குக் காட்சிப்படுத்தி அவற்றின் சிங்களப் பெயரை அறிமுகம் செய்க.

**செயற்பாடு : 2**

- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.
- வட்டமாக நிறுத்துக.
- இதுவரையில் கற்ற பொருள்களை (புத்தகம், பென்சில், மேசை, கதிரை, அடிமட்டம்) பெறுக.
- சிலவற்றை மாணவருக்கு அருகே வைக்குக.
- ஏனையவற்றைச் சற்று அப்பால் வைக்குக.
- ஆசிரயர் அருகே உள்ள பொருள்களைச் சுட்டிக்காட்டி

  * இது பென்சில்

  * இது அடிமட்டம்

  * இது புத்தகம் என அறிமுகஞ் செய்க.

- சுட்டிக் காட்டிய பொருள்களின் சிங்களப் பெயர் பற்றி மாணவரிடம் வினவுக.
- "இது பென்சில்" என சிங்களத்தில் எப்படிக் கூறுவது என அறிந்து கொள்வோம் எனக் கூறி, 'මේ පැන්සල' (மே பென்சல) (இது பென்சில்) என அறிமுகம் செய்த சொற்கள் மாணவருக்குப் பரிச்சயமாகும் வரையில் உச்சரிக்கச் செய்க.



DRAFT

- இவ்வாறாக පුටුව புடுவ (கதிரை) மற்றும் මේසය "மேசய" மேசை ஆகிய இரண்டு சொற்களையம் அறிமுகஞ் செய்க.
- எமது அருகில் உள்ள யாதேனுமொன்றைக் குறிப்பதற்காக මේ "மே" இது எனும் சொல் பயன்படுத்தப்படுகின்றமையைக் குறிக்கும்.
- ஆசிரியர் அதே இடத்தில் இருந்தவாறு,

  * அது மேசை

  * அது கதிரை

  என்று கூறியவாறு அகத்தே உள்ள பொருள்களை அறிமுகஞ் செய்க.
- மேசையின் சிங்களப் பெயரையும் கதிரையின் சிங்களப் பெயரையும் மாணவரிடம் வினவுக.
- அது மேசை, அது கதிரை என்பவற்றைச் சிங்களத்தில் கூறுவது எப்படி எனக் கற்போம் எனக் கூறுக.
- "அர மேசய" (அது மேசை) என அறிமுகஞ் செய்க.
- மாணவர்க்கு நன்கு பரிச்சயமாகும் வரை உச்சரிக்குக.
- "அர புடுவ" (அது கதிரை) என அறிமுகஞ் செய்க.
- மீண்டும் மாணவருடன் ஆசிரியர், மேசையின் அருகே சென்று அருகே உள்ள பொருள்களை මේ "மே" உடன் சேர்வதும் துரத்தே உள்ள பொருள்களை "அர" உடன் சேர்த்தும் சொல்லிக் கொடுக்குக.
- மாணவர் உச்சரிப்பில் பரிச்சயம் பெறும் வரையில் இவ்வாறு செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- இத்தேர்ச்சியின் கீழ் மாணவருக்கு அறிமுகஞ் செய்த, சொற்களை மேலும் உறுதிப்படுத்துவதற்காக, மாணவருடன் இப்பாடலைப் பாடுக.
- பாடலில் இடம்பெற்றுள்ளவை போன்ற பொருள்களைப் பயன்படுத்தி, பாடலைப் பாடுவது மிகப் பொருத்தமானது.
- குழுவாகவும் தனித்தனியாகவும் பாடலைப் பாட சந்தர்ப்பமளிக்குக.

| | | | |
|---|---|---|---|
| 1. | මේ පැන්සල | மே பென்சல | (இது பென்சில்) |
| | මේ පැන්සල | மே பென்சல | (இது பென்சில்) |
| | මේ පැන්සල | மே பென்சல | (இது பென்சில்) |
| | ගන්න . . . | கன்ன | (எடுங்கள்) |

| | | | |
|---|---|---|---|
| 2. | මේ පෑන | மே பேன | (இது பேனை) |
| | මේ පෑන | மே பேன | (இது பேனை) |
| | මේ පෑන | மே பேன | (இது பேனை) |
| | දෙන්න . . . | தென்ன | (தாருங்கள்) |

| | | | |
|---|---|---|---|
| 3. | මේ බෝතලය | மே போதலய | (இது போத்தல்) |
| | මේ බෝතලය | மே போதலய | (இது போத்தல்) |
| | මේ බෝතලය | மே போதலய | (இது போத்தல்) |
| | ගන්න . . . | கன்ன | (எடுங்கள்) |

| | | | |
|---|---|---|---|
| 4. | මේ පැන්සල | மே பென்சல | (இது பென்சில்) |
| | මේ පෑන | மே பேன | (இது பேனை) |
| | මේ බෝතලය | மே போதலய | (இது போத்தல்) |
| | දෙන්න | தென்ன | (தாருங்கள்) |

- அருகே உள்ள பேனை, பென்சில், போத்தல் போன்ற பொருள்களைப் பயன்படுத்தியும் இப்பாடலை மாணவருடன் சேர்த்து பாடுக.





DRAFT

## தேர்ச்சி : உணவுப் பொருள்கள் சிலவற்றின் பெயர் கூறுவார்.

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

**செயற்பாடு : 1**

- இடியப்பம், பிட்டு, அப்பம், சோறு, பாற்சோறு ஆகிய உணவுப் பொருள்களைக் காட்டும் படங்களை மாணவர்க்குக் கூறுக.
- அவ்வுணவுப் பொருள்களின் பெயர்களைத் தமிழ்மொழியில் அறிமுகஞ் செய்க.
- பின்னர், அவ்வுணவுப் பொருள் ஒவ்வொன்றினதும் பெயரை சிங்களத்தில் கூறும் விதத்தை அறிமுகம் செய்க.

| | | | |
|---|---|---|---|
|  | ඉදිආප්ප | இந்தியாப்ப | இடியப்பம் |
|  | පිට්ටු | பிட்டு | பிட்டு |
|  | බත් | (B)பத் | சோறு |
|  | කිරිබත් | கிரிபBத் | பாற்சோறு |
|  | ආප්ප | ஆப்ப | அப்பம் |


- இமுதலில் தரப்பட்டுள்ள மூன்று உணவுப் பொருள்களையும் குறிக்கும் பெயர்களின் உச்சரிப்பு தமிழ் மொழி உச்சரிப்பை ஓரளவுக்கு ஒத்தது எனக் கூறி உச்சரித்துக் காட்டுக.

DRAFT

- பின்னர் அம்மூன்று உணவுப் பொருள்களிலும் படங்களை ஒவ்வொன்றாகக் காட்டி ஆசிரியர் ஒரு மாணவனைச் சுட்டிக்காட்டி அவ்வுணவுப் பொருளை குறிக்கும் சிங்களச் சொல் எது என வினவுக. மாணவர் அனைவரும் இவ்வுணவுப் பொருள்கள் தொடர்பான விளக்கத்தைப் பெறும்வரையில் இச்செயற்பாட்டைச் செய்க.
- நான்காவதாகவும் ஐந்தாவதாகவும் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள உணவு வகைகளின் பெயர்களையும் நன்கு பரிச்சயப்படும் வரையில் மாணவனைக் கொண்டு மீண்டும் மீண்டும் கூறச் செய்க.

**செயற்பாடு : 2**

- மாணவன் கற்றுள்ள உணவுப் பொருள்களின் பெயர்களைப் பயன்படுத்தி இவ்விளையாட்டில் மாணவரை ஈடுபடுத்துக.
- இதற்காக கீழே காட்டியுள்ளது போன்று பின்னணி நிறங்களைப் பயன்படுத்தி உணவு வகைகளின் படங்களை ஒரு மாணவனுக்கு ஓர் அட்டை வீதம் வழங்கத்தக்கதாக கூடிய எண்ணிக்கையில் தயாரித்துக் கொள்க.
- அட்டைகளை வெவ்வேறு நிறங்களில் தயாரித்துக் கொள்வதால் மாணவரின் அவதானிப்பை இலகுபடுத்தலாம்.



- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.
- பட அட்டைகளை ஆளுக்கு ஒன்று வீதம் வழங்குக.
- ஆசிரியர் ஓர் உணவு வகையின் பெயரைக் கூறியதும் அவ்வுணவு வகைகளைக் கொண்ட பட அட்டையின் கையில் வைத்திருப்போர் அப்பட அட்டையை உயர்த்திக் காட்டி, அப்படத்தில் உள்ள உணவுப் பொருளின் பெயரை ஆசிரியரை தொடர்ந்து உரத்து சிங்களத்தில் கூற வேண்டும்.

  உ-ம்: ஆசிரியர் - ආප්ප "ஆப்ப" (அப்பம்)

  மாணவர் (படத்தைக் காட்டியவாறு) ආප්ප ஆப்ப (அப்பம்)

- இவ்வாறாக செயற்பாட்டைச் சில தடவைகள் செய்து, பட அட்டைகளை மாணவரிடையே பரிமாற்றம் செய்து கொள்ள வழிப்படுத்துக.
- முன்னர் போன்றே எல்லா உணவுகளின் பெயர்களும் நன்கு நினைவில் இருக்கும் வகையில் செயற்பாட்டை நடத்துக.

DRAFT

ெ

ச

ய

ற

.

ப

ா


டு

| ඉදිආප්ප | ආප්ප | පිට්ටු |
| --- | --- | --- |
| இந்திஆப்ப | ஆப்ப | பிட்டு |

:

3

- மாணவனைத் திறந்த வெளியானஓர் இடத்திற்கு அழைத்துச் சென்று ஐந்து குழுக்களாக பிரிக்குக. බත් (B)பத் කිරිබත් கிரிபBத்
- குழுக்களைப் பின்வருமாறு உணவுப் பொருள்களின் பெயர்களால் பெயரிடுக.




- ஆசிரியர் ஓர் உணவுப் பொருளின் பெயரைக் கூறியவுடன் அவ்வுணவுப் பொருளுக்குரிய குழு கைதட்ட வேண்டும் எனக் கூறுக.
- கைதட்டலை நிறுத்துவதற்காக ஆசிரியர் ஒரு சைகையை பிறப்பித்து பின் மற்றுமோர் உணவுப் பொருளின் பெயரைக் கூறுதல் வேண்டும். அக்குழு மாணவர்கள் முன் குழு போன்றே துலங்குதல் (கைதட்டுதல்) வேண்டும்.
- இவ்வாறாக எல்லாக் குழுக்களுக்கும் துலங்குவதற்கு (கைதட்டுவதற்கு) சந்தர்ப்பம் வழங்கிய பின்னர் மீண்டும், குழுக்களில் உணவுப் பொருள்களின் பெயர்களைப் பரிமாறிக் கொள்ளச் செய்க. உணவுப் பொருள்களின் பெயர்களை மாணவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் முன்னர் போன்றே செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- ஆசிரியருக்குப் பதிலாக ஒரு மாணவனைக் கொண்டு கட்டளை/ சைகை வழங்கச் செய்வது மிகப் பொருத்தமானது.

**செயற்பாடு : 4**

- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.
- மாணவர் கற்றக் கொண்ட உணவு வகைகளின் பெயர்களைக் கொண்டு அவர்களுக்குப் பெயரிடுக.

  உ-ம்: வகுப்பில் 30 மாணவர்கள் உள்ளனராயின் ஒரு வகை உணவின் பெயரை 6 மாணவர்க்கு வழங்குக. அவ்வாறே மற்ற உணவுகளின் பெயர்களையும் 6 மாணவர்களுக்கு என்றவாறு வழங்குக.
- வகுப்பில் உள்ள மாணவரின் தொகையைவிட ஒன்று குறைவாக இருக்குமாறு கதிரைகளை வட்டமாக ஒழுங்குபடுத்தி வைக்குக. அக்கதிரைகளில் மாணவரை அமரச் செய்க.
- கதிரை கிடைக்காத மாணவனை வட்டத்தின் மத்தியில் நிறுத்துக.
- வட்டத்தின் நடுவில் இருக்கும் மாணவர், தாம் உண்ண விரும்பும் ஓர் உணவின் பெயரைக்



DRAFT

## தேர்ச்சி : சுற்றுப் புறத்தில் வாழும் சில பிராணிகளைப் பெயரிடுவார்.

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

**செயற்பாடு : 1**

- மாணவரை ஐந்து (5) குழுக்களாகப் பிரிக்குக.
- நாய், பூனை, காகம், கிளி, அணில் ஆகிய பிராணிகளின் பெரிய அளவுப் படங்களைத் தேடிப் பெறுக.
- அப்படங்களில் இருக்கும் பிராணிகளின் பெயரை பற்றி மாணவரிடம் வினவுக. பின்னர் ஒவ்வொரு பிராணி உருவத்துக்கும் உரிய சிங்களப் பெயரை அறிமுகஞ் செய்க.

| | | |
|---|---|---|
| බල්ලා | பல்லா | நாய் |
| පූසා | பூசா | பூனை |
| කපුටා | கபுடா | காகம் |
| ගිරවා | கிரவா | கிளி |
| ලේනා | லேனா | அணில் |

- சொற்களை நன்கு உறுதி செய்து கொள்ளும் வரையில் மாணவர் ஒவ்வொருவரிடமும் அப்பிராணிகளின் பெயரை வினவி விடை பெறுக.

**செயற்பாடு : 2**

- செயற்பாடு 1 இற்காகத் தயாரித்த பிராணி உருவங்களை குச்சிப் பொம்மைகளாகத் தயாரித்துக் கொள்க.
- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.
- மாணவரை ஒரு வட்டமாக நிறுத்துக. தடவைக்கு ஒன்றாக குச்சுப் பொம்மைப் படங்களை மாணவர்க்குக் காட்சிப்படுத்துக.
- அப்படத்தின் பெயரை சிங்களத்தில் பல தடவைகள் கூற மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- பின்னர் அப்பிராணியின் நடத்தையைச் (பயணப் பாங்கை) செய்து காட்டுமாறு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- இவ்வாறாக மற்றைய பிராணிகளின் பொம்மைகளையும் காட்சிப்படுத்தி மாணவர் அப்பிராணியின் பெயரை உச்சரித்து அதன் நடத்தையைப் போலச் செய்யுமாறு வழிப்படுத்துக.

**செயற்பாடு : 3**

- மாணவரை ஐந்து (5) குழுக்களாகப் பிரிக்குக.
- படத்தில் காட்டியுள்ளவாறு மாணவரை வரிசைகளில் நிற்கச் செய்து, ஒவ்வொரு வரிசையிலும் முதலாவதாக இருக்கும் மாணவனின் கையில் ஒரு பிராணியின் (தயார்ப்படுத்திய) குச்சுப் பொம்மை ஒவ்வொன்று வீதம் வழங்குக.
- அவர்களுள் ஒரு வரிசையில் உள்ள மாணவரை வட்டமாக நிற்குமாறு அறிவுறுத்துக.

**உரு**

DRAFT

தமது குழுவுக்குக் கிடைத்துள்ள பிராணி படத்தை குழுவில் ஏனைய மாணவரும் பார்க்கத்தக்கவாறாக, உயர்த்திப் பிடிக்குமாறு, குச்சுப் பொம்மையின் கையில் வைத்திருக்கும் மமாணவரிடம் கூறுக.

- பின்னர் அசிரியர் சைகையின்படி அக்குழுவில் உள்ள மாணவர்கள் குறித்த பிராணியின் பெயரைக் கூறி வட்டத்தின் மத்திக்கு வந்து அப்பிராணி போன்று யாதேனும் நடத்தையைக் காட்டுதல் வேண்டும்.

  *உ-ம்:* மாணவர் - 'කපුටා' கபுடா - காகம்

  "காக், காக்" என்றவாறு குரல் எழுப்பியவாறு பறந்து செல்லுதல் போன்று நடத்தையைக் காட்டலாம்.

- ஒரு மாணவர் குழு முன்வைப்பைச் செய்யும்போது மற்றைய குழு மாணவர்கள், அப்பிராணியின் பெயரைக் கொண்டே அக்குழுவை அழைத்தல் வேண்டும்.
- பின்னர், ஆசிரியரின் சைகைப்படி மாணவர் தாம் முன்னர் இருந்த இடத்துக்குச் சென்று வரிசையாக நிற்றல் வேண்டும்.
- இவ்வாறாக 5 குழுக்களும் தத்தமது குழுவுக்குரிய பிராணி உருவங்களுக்குரிய பெயரைக் கூறி அப்பிராணியின் ஒரு நடத்தையைச் செய்து காட்ட வேண்டும்.
- பின்னர் குழுக்களிடமுள்ள பிராணி உருவங்களை குழுக்களிடையே பரிமாறியவாறு பிராணிகளின் பெயரை நன்கு உறுதிபெறும் வகையில் செயற்பாட்டை தொடர்ந்தும் நடத்துக.
- அச்செயற்பாட்டை நடத்தும்போது வட்டத்தில் சேர்த்துக் கொள்ளும் குழு மாணவர்களுக்கு, மற்றைய மாணவரைக் கொண்டும் கட்டளைகள் வழங்கச் செய்யலாம்.

  *உ-ம்:* පූසා දුවන්න "பூசா துவன்ன" - பூனை ஓடுங்கள்

  බල්ලා පනින්න "பல்லா பனின்ன" - நாய் துள்ளுங்கள்

  කපුටා නවතින්න "கபுடா நவதின்ன" - காகம் நில்லுங்கள்

* இரண்டாம் தேசிய மொழி கற்பிக்கும் போது ஆசிரியர் என்ற வகையில் உங்களுக்கு தேவைப்படத்தக்க சில சொற்கள்:

| | | |
|---|---|---|
| එපා | எப்பா | வேண்டாம் |
| දන්නවා | தன்னவா | தெரியும் |
| දන්නේ නැ | தன்னே னே | தெரியாது |
| ඔව් | ஒவ் | ஆம் |
| නැහැ | நேஹே | இல்லை |

DRAFT

# 5.0 விளையாட்டு முற்றம்

தரம் ஒன்றில் பிரவேசிக்கும் மாணவர்களின் சமநிலையான விருத்திக்கு அறிவாற்றல் விருத்தியும், உடல், மனவெழுச்சி, சமூக விருத்தியும் இன்றியமையாதனவாகும். அதற்காக வகுப்புக்கு வெளியே இரசனை பெறக்கூடிய வகையில் ஒழுங்குபடுத்தப்பட்ட சூழலில் செயற்பாட்டு ரீதியில் பங்கு கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களை மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும். சகல மாணவர்களுக்கும் இரசனைமிக்க செயற்பாட்டு ரீதியான சந்தர்ப்பங்களை வழங்கக்கூடிய ஓர் இடமாக ''விளையாட்டு முற்றத்தை''க் குறிப்பிடலாம்.

விளையாட்டு முற்றத்தால் பெறக்கூடிய பல பயன்கள் உள்ளன. மீத்திறனுடைய பிள்ளைகள் வகுப்பறை வேலைகளை மிக விரைவாகச் செய்து முடிப்பர். அவ்வாறான பிள்ளைகளை, ஆசிரியர் தனது பார்வைப் புலத்திற்குட்பட்டதாகப் பாதுகாப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டு முற்றத்தில் செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம். இது வகுப்பறை வேலைகளை நன்றாகவும் விரைவாகவும் செய்து முடிப்பதற்கு வழிவகுக்கும். விளையாட்டு முற்றத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவைக்கான வாய்ப்புக்கள் உள்ளன.

- நுழைந்து செல்வதற்கு
- ஆடுவதற்கு
- ஏறுவதற்கு
- தொங்குவதற்கு

✓ இதற்கமைய விளையாட்டு முற்றத்தில் மாணவர்கள் ஈடுபடும் செயற்பாடுகளின் ஊடாக நுழைதல், புரளுதல், ஓடுதல், பாய்தல், தொங்குதல் போன்ற அடிப்படை அசைவாற்றல்களை விருத்தி செய்யலாம்.

✓ அதனூடாக இசைவாக்க ஆற்றல், சமநிலை, சந்தம், நெகிழ்தன்மை, சரியான கொண்ணிலைகளைப் பேணல் ஆகியவற்றை விருத்தி செய்யலாம்.

✓ மாணவரின் கைத் திறன்களையும் விருத்தி செய்யலாம்.

✓ மொழி எண்ணக்கருக்கள், பார்வைப் பிரித்தறிகை, கேட்டல் பிரித்தறிகை, எழுத்துமுன் திறன், உளவியக்கத்திறன்கள் போன்ற மொழி முன் எண்ணக்கருக்கள், கணித முன் எண்ணக்கருக்கள் ஆகியவற்றின் விருத்திக்கு வழிகோலத்தக்க முக்கியமான ஓர் இடமாகும்.

**எடுத்துக்காட்டு** : ஏணிப்படிச் சட்டகத்தில் ஏற விடுக.
அவர்களுக்குச் சுயாதீனமாக எதேச்சையாக ஏற இடமளியுங்கள்.
மிக உயரத்தில் இருப்பவர் யார்? , அடுத்ததாக இருப்பவர் யார்? மிகக் கீழே இருப்பவர் யார்? என்றவாறு வினாக்களை வினவி எண்ணக் கருவை வலியுறுத்துக.

✓ நிறுத்தாடுபலகையைப் (See - Saw) பயன்படுத்தி மாணவரது நிறை தொடர்பான எண்ணக்கருவை உறுதிப்படுத்துக. (மேலே, கீழே, தூர, கிட்ட, வேகமாக, மெதுவாக, பெரிய, சிறிய....போன்ற) எண்ணக்கருக்கள் அடையலாம்.

✓ வரிசைப்படுத்தல் பற்றிய கணிதப் பாடத்துக்கு முன்னர் 'டயர் ஏணியின்'' செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துக.

✓ ஒத்துழைப்பு, கூட்டாகச் செயற்படல், பகிர்ந்து பரிமாறிக்கொள்ளல், உதவி ஒத்தாசை புரிதல் போன்ற நற்பண்புகள் விருத்தியடைய வழிகோலும்.


✓ உளத்திருப்தியையும், சுதந்திரத்தையும் வழங்குவதற்கு மிகப் பொருத்தமான ஓர் இடமாகும்.

ஆரம்பக் கல்விப் பாடப்பரப்புகளுக்குரிய எண்ணக்கருக்களை விருத்தி செய்யத்தக்க வகையில் விளையாட்டு முற்றத்தைப் பயன்படுத்துவது முக்கியமானது. எனவே விளையாட்டு முற்றத்தில் மாணவர்கள் உபகரணங்களைப் பயன்படுத்தும் போது ஆசிரியரின் தலையீடு அவசியமாகும். வெவ்வேறு உபகரணங்களைக்கொண்டு, பெரிய தசை நார்களின் வளர்ச்சி, நரம்பு - தசை இசைவாக்கம் போன்ற உடல் வளர்ச்சிக்கு உதவத்தக்க செயற்பாடுகளில் ஈடுபடுத்தும்

DRAFT

அதேவேளை எண்ணக்கருக்களையும் விருத்தி செய்யலாம். பின்வரும் எடுத்துக்காட்டினூடாக இதனை மேலும் விளங்கிக்கொள்ளலாம்.
எனவே மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவக்கூடிய மேலும் உபகரணங்களைச் சேகரித்து விளையாட்டு முற்றத்தை விருத்தி செய்துகொள்வது ஆக்கபூர்வமான ஆசிரியர் எதிர்நோக்கும் சவாலாகும்.

***எடுத்துக்காட்டு:*** **தரம் ஒன்று**
தாய்மொழிப் பாடத்திட்டத்தில் சிறிய கோடுகள் இரண்டுக்கு இடையில் (வெளி) கையின் நுண்ணிய தசைநார்களைப் பயன்படுத்தி எழுதுவதற்கான சந்தர்ப்பம் உருவாகும். இதற்கு நுண்ணிய தசைநார்ப் பயிற்சி அவசியமாகும். இத்திறனை விருத்தி செய்வதற்கு எழுத்துக்களை எழுத முன்னரும் அதற்குச் சமாந்தரமாக பொருத்தமாக பெரிய தசைநார்களைப் பயன்படுத்தி (முழு உடலையும் அசைக்கத்தக்க) செயற்பாடுகளில் ஈடுபடச் செய்தல் அவசியமாகும். இதற்கு விளையாட்டு முற்றத்தில் அமைக்கப்பட்டுள்ள / நடப்பட்டுள்ள டயர் வரிசையினைப் பயன்படுத்தலாம்.



**ஆசிரியர் வழிகாட்டலை வழங்க வேண்டிய முறை**
யாருக்கு முடியும்?, யாருக்கு முடியும்? சுரங்கத்தின் ஊடாக, சுரங்கத்தின் சுவர்களில் படாதவாறு செல்வதற்கு யாருக்கு முடியும்? , யாருக்கு முடியும்? டயரில் படாதவாறு நுழைந்து செல்வதற்கு?

***எடுத்துக்காட்டு*** **: தாய்மொழி - உயிர்க்குறிகளைப் பயன்படுத்தல்**
உயிர்க்குறிகளை எழுத்தின் மேலே, கீழே அல்லது பக்கத்தில் எழுத வேண்டி உள்ளது. எனவே ஏணிச் சட்டகத்தில் மாணவர்கள் இருக்கும் இடம் தொடர்பான எண்ணக்கருவை ஏற்படுத்த வேண்டும். இதற்கு ஆசிரியர் உரிய வழிகாட்டலை வழங்கலாம். இதனூடாக குறித்த எண்ணக்கருக்கள் விருத்தியடையும்.

- ✓ ஜெஸ்மின் எனும் மாணவி காந்தன் இருக்குமிடத்துக்கு மேலே இருக்கின்றாரா? கீழே இருக்கின்றானா?
- ✓ பின்னர் காந்தனை உயரத்தில் ஏறச் செய்து பின்வரும் விதத்தில் வினவ முடியும்.
- ✓ இப்போது ஜெஸ்மின் என்ற மாணவி காந்தன் இருக்குமிடத்துக்கு மேலே இருக்கின்றாரா? கீழே இருக்கின்றாரா?



என்றவாறு வினாக்களை மாணவர்களிடம் வினவி உயர்க்குறிகள் தொடர்பான எண்ணக்கருவை விருத்தி செய்யக் கவனம் செலுத்தல் பொருத்தமானது.


DRAFT

**கணித எண்ணக்கரு - வரிசைப்படுத்தல்**
பிள்ளைக்குப் பின் உள்ள டயர் சிறியதா? பெரியதா?




தரம் 2 இல் இந்த நிலையை மேலும் விருத்தி செய்யுங்கள். ஒவ்வோர் உபகரணத்தையும் பயன்படுத்த வழிசெய்யும் வகையில் படிவங்களைப் பயன்படுத்தலாம்.

**எடுத்துக்காட்டு:**
மாணவன் அடியெடுத்து வைப்பதற்கு ஏற்ப ஏனைய மாணவர்கள் தடவைக்கு ஒன்றாக கைதட்டி ஒன்றிற்கொன்று ஒத்திசை பார்த்தல்




DRAFT

கணித எண்ணக்கரு : எதேச்சையான அலகுகளினால் தளத்தை அளத்தல்.
***எடுத்துக்காட்டு*** : அடுத்த அந்தத்திற்கு எத்தனை பாதச்சுவடுகள்



எண்ணக்கரு : சார்பான அமைவு

***எடுத்துக்காட்டு*** : முதல் சிரட்டையை விட மூன்றாவது சிரட்டைக்கு ஏறியதும் எந்தளவு உயரமிருக்கும்?



## வீட்டு வேலை (HOME WORK)

பிள்ளைகளின் முதிர்வு, உளவியல் மற்றும் கல்விக் கோட்பாடுகள் போன்றவற்றை அடிப்படையாக வைத்தே ஆரம்பக்கல்வி வகுப்புக்களின் நேரங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. இதனை அடிப்படையாக வைத்தே முதன்மைநிலை ஒன்றின் பாடசாலை நேரமும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வீட்டு வேலையைக் (HOME WORK) கொடுக்கும் போது இது தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்தி பொறுப்புடன் செயல்பட வேண்டும். மொழி, கணிதம், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், சமயம் ஆகிய நான்கு பாடங்களிலும் ஒரே தடவையில் வீட்டு வேலையை வழங்கும் போது சிறிய மாணவர்கள் இவை யாவற்றுக்கும் முகம் கொடுக்க நேரிடும். அதனால் அவர்கள் மிகுந்த சிரமத்திற்கும் களைப்பிற்கும் உள்ளாகலாம். எனவே வீட்டு வேலையை வழங்கும்போது மாணவரின் முதிர்விற்கு ஏற்ற, அவசியமான வேலைகளை மட்டும் சிறியளவில் கொடுக்கும் பொறுப்பு ஆசிரியரையே சாரும்.

அதேபோன்று தினமும் தங்களது பிள்ளைகளுக்கு பாடசாலையில் வழங்கப்படும் வீட்டு வேலை களுக்காக நேரத்தை ஒதுக்கக்கூடிய பெற்றோர்கள் மிகக் குறைந்த தொகையினரே உள்ளனர்.

குறித்த நேரத்துக்குள் பாடசாலைச் சூழலில் மட்டும் பெற்றுக்கொடுக்க முடியாத கற்றல் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்காக தேவையான சந்தர்ப்பங்களில் மட்டும் வீட்டு வேலைகளை (HOME WORK) வழங்க வேண்டிய அவசியம் ஏற்படும். இருப்பினும் அவை தொடர்பாக தெளிவாகவும் சரியாகவும் வழிப்படுத்துவது தொடர்பாகவும் தேவையான அளவு நேரத்தை பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும் ஆசிரியர் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

## 6.0 மாணவர் முன்னேற்றத்தைக் கணிப்பிடல்

கற்கும்போது தமது மாணவர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள், வெளிக்காட்டும் திறமைகள் பற்றிய பூரண விளக்கத்தை, ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். அப்போதுதான் ஆரம்பத் தரங்களில் கற்கும் மாணவர்களுக்காகப் பயனுறுதியுள்ள கற்றல் அனுபவங்களை ஒழுங்கு செய்யும் திறனைப் பெற முடியும். வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களுக்கும், பொருந்தும் வகையில் கற்றல் அனுபவங்களை ஒழுங்கு செய்ய இது வழிகோலும். இந்தப் பரந்த நோக்குடன் வகுப்பறையில் மாணவனது முன்னேற்றம் தொடர்பாக இடையறாது தகவல் சேகரிக்கும் செயன்முறையே கணிப்பீடாகும் எனக்குறிப்பிடலாம். ஆரம்பத் தரங்களைச் சேர்ந்த மாணவர்களைக் கணிப்பிடும் நோக்கங்கள் பலவாகும். இடப்படுத்தற் (Placement) பணிகள், கண்டறி பணிகள், போதனாப் பணிகள், சான்றிதழ் வழங்கல், ஆராய்ச்சிப் பணிகள் ஆகியன இவற்றுள் முக்கியமானவையாகும். ஆயினும், ஆரம்பத் தரங்களில் கண்டறி பணிகளையும், போதனாப் பணிகளையும் முதன்மையாகக் கொண்டே கணிப்பீட்டுச் செயற்பாடுகள் நடாத்தப்படுகின்றன. ஆரம்பத் தரங்களில் கற்றலின் போது மாணவர்கள் பல்வேறு இடர்பாடுகளைக் காட்டுகின்றனர். ஆசிரியைகள் கற்பிக்கும்போது இவ்விடர்பாடுகளை இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வுகாணல் வேண்டும். ஆகவே தனது வகுப்பிலுள்ள ஒவ்வொரு மாணவனும் மாணவியும் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை இனங்கண்டு அந்த ஒவ்வொரு மாணவ மாணவிக்கும் பொருத்தமானவாறு கற்றல் பணிகளை ஒழுங்கு செய்தல் இதனூடாக இலகுவாக அமையும். கலைத்திட்டத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கங்களை எல்லா மாணவரும் அடையக்கூடியவாறு ஆசிரியரினால் வழிகாட்ட முடியும். மாணவர்களை முதலாமவர், இரண்டாமவர் என வரிசைப்படுத்துவதோ **சிறந்த மாணவர், பலவீனமான மாணவர் என வகைப்படுத்துவதோ ஆரம்பத்தரங்களில் நடத்தப்படும் கணிப்பீட்டின் நோக்கமல்ல.**

### 2.0 மாணவரைக் கணிப்பிடுவதற்காகப் பயன்படுத்தத்தக்க அணுகுமுறைகள்

மாணவர்களைக் கணிப்பிடுவதற்காகப் பயன்படுத்தும் நுட்பமுறைகளைப் பிரதானமாக இரண்டு விடயங்களின் கீழ் முன்வைக்கலாம்.

### 2.1 மாணவரின் முன்னேற்றத்தை முறைமையாகக் கணிப்பிடல்

கற்பித்தல் செயற்பாட்டை தற்காலிகமாக நிறுத்தி முன் கூட்டியே திட்டமிட்டு ஆயத்தஞ்செய்து, முழுக் கவனத்தையும் அதன் மீது செலுத்திச் செய்யப்படும் கணிப்பீட்டை முறைசார் கணிப்பீடு என அறிமுகஞ் செய்யலாம். இதற்காக முறைசார் பரீட்சைகளும் செயற்பாடுகளும் பயன்படுத்தப் படும்.

### 2.2 முறைசாரா உத்திகளைப் பயன்படுத்தி மாணவரின் முன்னேற்றத்தைக் கணிப்பிடல்

மாணவர்கள் கற்றலில் ஈடுபட்டிருக்கும்போதே, அதற்குத் தடங்கல் ஏற்படுத்தாதவாறு தகவல்கள் சேகரிக்கப்படும். இங்கு பிரதானமாக வினாவுதல், மாணவருடன் தனித்தனியாகவோ குழுவாகவோ அளவளாவுதல், மாணவர்கள் வேலைகளில் ஈடுபட்டுள்ளபோது அவர்களை அவதானித்துத் தகவல் சேகரித்தல், மாணவரின் வீட்டு வேலைகளை மதிப்பிடல் போன்ற உத்திகள் பின்பற்றப்படும்.

**இங்கு ஆசிரியரின் தொழில்வாண்மை மிக முக்கியமானதாகும்.** தாம் எடுக்கும் முடிவுகள் மிகச் சரியானவையாக அமையும் வகையில் ஆசிரியர் மிகக் கவனமாகச் செயற்பட வேண்டும்.

எனினும் முறைசாரா உத்திகளின் மூலம் மாணவர்கள் பற்றி விரிவானதும், தரமானதுமான தகவல்கள் பெறப்படுகின்றமையால், அவை கற்றல் - கற்பித்தல் பணிகளைப் பொறுத்தமட்டில் மிகப்பயனுறுதியுள்ளவையாக அமையும் எனலாம்.

ஆசிரியர்கள் தமது மாணவர்கள் பற்றி முறைசாரா வழிகளில் எடுக்கும் முடிவுகளின் தகுதி (Validity) உயர்வானது எனப் பல ஆய்வுகள் காட்டியுள்ளன.

DRAFT

## 3.0 கணிப்பீட்டு வடிவங்கள்

**கணிப்பீட்டை** கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நடத்தலாம். அதற்கமைய கணிப்பீட்டுச் செயன்முறையை இறுதி நிலைக் (Summative) கணிப்பீடு, தொடர் (Formative) கணிப்பீடு என வகைப்படுத்தலாம்.

**தொடர் கணிப்பீட்டு முறை**
யாதேனும் கற்றல் கட்டத்தின் இடையில் தொடர்ச்சியாக மாணவரின் கற்றல் திறன்களையும், இடர்பாடுகளையும் கண்டறிவதே இதனால் கருப்படுகின்றது. இது தொடர் கணிப்பீடு எனவும் அழைக்கப்படுகின்றது. ஆரம்பத் தரங்களில் மாணவர்கள் கற்றலின்போது எதிர்நோக்கும் இடர்பாடுகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல் கட்டாயமானதாகும். இல்லையேல் அவர்கள் தொடர்ந்து கற்றல் கடினமானதாக அமையும். இவ்வாறு கற்றலில் அடையும் தோல்வியினால் அவர்கள் மேலும் பின்னடைவார்கள். ஆகவே மாணவரைப் பற்றித் தொடர்ச்சியாகத் தேடியறிதல் ஆரம்பத் தரக் கணிப்பீட்டின் முக்கியமான ஒரு பண்பாகக் கருதப்படுகின்றது.

**இறுதிக்கணிப்பீடு**
குறித்த ஒரு கற்றல் கட்டத்தின் முடிவில், மாணவர்கள் தமது கற்றலை எந்த அளவு வெற்றிகரமாக அடைந்துள்ளனர் என்பதைப் பரீட்சித்தலையே இறுதிக் கணிப்பீடு என்பர். இதன்படி வருடமொன்றின் இறுதியில், குறித்த வருடத்தினுள் கற்பித்த விடயங்களை உள்ளடக்கித் தயாரித்த வினாப்பத்திரம் ஒன்றின் மூலம் மாணவரின் அடைவைக் கணிப்பிட முடியும். எனினும் **இவ்வாறானதொரு கணிப்பீட்டு முறை ஆரம்பத் தரங்களுக்குப் பொருத்தமானது எனக் கருத முடியாது.**

ஆரம்பத் தரங்களில் நியதி (Criterion) சார் கணிப்பீடே நடத்தப்படுகின்றது. இங்கு ஆசிரியரால் மேற்கொள்ளப்படும் முறைசாரா நுட்பங்களில் கூடுதலான கவனஞ் செலுத்தப்படும்.

**நியதிசார் கணிப்பீடு**
கலைத்திட்டத்தின் உள்ளடக்கம், தேர்ச்சி ஆகியவற்றுக்கேற்ப தயாரிக்கப்பட்ட நியதிகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பதைப் பரீட்சித்தல் நியதி அடிப்படையிலான கணிப்பீடாகும். ஆரம்பத் தரங்களுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியின் இறுதியில், தாய்மொழி, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், கணிதம் ஆகிய பாடங்களுக்கான கணிப்பீட்டுப் படிவமும் பொதுக் கணிப்பீட்டுப் படிவமும் கணிப்பீட்டு நியதிகளும் தரப்பட்டுள்ளன. கணிதம், முதன்மொழி, சுற்றாடல்சார்ந்த செயற்பாடுகள் ஆகிய பாடங்களுக்காகவும் பொதுக் கணிப்பீட்டுக்காகவும் தயாரிக்கப்பட்ட சில கணிப்பீட்டு நியதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

**கணிதம் :**
***எடுத்துக்காட்டு*** : வெவ்வேறு அளவுடைய மூன்று பொருள்களை அல்லது படங்களை ஒழுங்கு வரிசையாக வைப்பார்.

**முதன்மொழி :**
***எடுத்துக்காட்டு*** : இலகுவான வாக்கியங்களை உரத்து வாசிப்பார்.

**சுற்றாடல்சார் செயற்பாடுகள் :**
***எடுத்துக்காட்டு*** : நல்வாழ்க்கைக்காக சுகாதாரப் பழக்கங்களைக் கடைப்பிடிப்பார்.

**பொதுக் கணிப்பீடு**
***எடுத்துக்காட்டு*** : ஏனையோருக்கு உதவி செய்ய விருப்புக்காட்டுவார்.

## 4.0 செயல் அடைவுக்கோவை

மாணவர்களைக் கணிப்பிட உபயோகிக்கக்கூடிய மிகவும் பயனுறுதியுள்ள ஒரு முறையாக இது கருதப்படுகின்றது. மாணவரின் கற்றல் தொடர்பான பிரச்சினைகளையும் அவர்களது திறன்களையும்

DRAFT

தொடர்ச்சியாகக் கணிப்பிடும் ஒரு முறையாகிய இது அதிக முக்கியத்துவமுடையது. பொதுவாக ஆரம்பத்தர ஆசிரியர்கள் யாவரும் மாணவர் ஒவ்வொருவரதும் வேலைகளைத் தனித்தனியாகக் கோவைப்படுத்தும் வழக்கமுடையவர்களாவார்கள். இது ஒரு மெச்சத்தக்க முயற்சியாகும். எனினும் செயல் அடைவுக் கோவை முறையை இதனிலும் முன்னேற்றகரமான ஒரு முறையாகக் கருதலாம். இதன்படி செயல் அடைவுக் கோவை என்பது மாணவனது திறமைகளும் அவன் கற்றலின்போது எதிர்கொள்ளும் சிரமங்களும் வெளிப்படும் வகையில் கருத்தாழத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள மாணவர் வேலைத் தொகுப்பாகும். இது மாணவர்கள் பற்றிய கருத்தை வெளிக்காட்டும் ஒரு கோவையாகும். இதனைத் தயாரிக்கும் முறை அந்தந்த ஆசிரியருக்கு ஏற்ப மாறுபடும். இது பற்றிய ஒரு நியம முறை இல்லையாகையால் ஆக்கத்திறனுடைய ஒரு ஆசிரியரினால் தனது ஆக்கத்திறனுக்கேற்ப மிக உயர்மட்டச் செயலடைவுக் கோவையொன்றை வடிவமைத்துக்கொள்ள முடியும். செயல் அடைவுக் கோவை ஒன்றில் உள்ளடக்கப்பட வேண்டியவை யாவை? இதில் மாணவரது வேலைகளின் மாதிரிகள் (Samples) உள்ளடங்கும். எழுத்துவேலைகள், செய்த கணக்குகள், வரைந்த சித்திரங்கள், ஆக்கங்கள் ஆகியன இதில் உள்ளடக்கப்படலாம். மேலும் ஆசிரியரின் சிறு குறிப்புக்களையும் இதில் உள்ளடக்கலாம்.

## 5.0 சுருக்கக் குறிப்பு எழுதுதலும் செவ்வைபார்ப்புப் பட்டியல்களை உபயோகித்தலும்

ஓர் ஆசிரியர் தனது மாணவர்களின் முன்னேற்றத்தையும் கற்றல் இடர்பாடுகளையும் இனங்காண முயற்சிக்கும்போது அவர்கள் ஒவ்வொருவரையும் பற்றிய குறிப்புகளைச் சேகரித்து வைத்தல் அவ்வாசிரியருக்கு பயனளிக்கும். வகுப்பில் கற்பிக்கும்போது, மாணவர் பற்றிய பல தகவல்கள் ஆசிரியருக்குக் கிடைக்கின்ற போதிலும் இத்தகவல்களைக் கருத்தாழமுள்ளவாறு பயன்படுத்துவது கிடையாது. ஆகவே மாணவர்கள் பற்றி வெளிக்கொணரப்படும் தகவல்களைப் புத்தகமொன்றில் சுருக்கக்குறிப்பாக வைத்திருந்து அவற்றைத் தேவைக்கேற்றவாறு பயன்படுத்துவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்படல் வேண்டும். செவ்வை பார்ப்பு பட்டியல்களைப் பயன்படுத்துதல் பயன்மிக்க மற்றுமொரு முறையாகும். ஆசிரியர் வழிகாட்டற் கோவையின் இறுதியில் தரப்பட்டுள்ள நியதிகளை மாணவர் அடைந்துள்ளனரா எனத் தீர்மானிப்பதற்கு செவ்வை பார்ப்பு பட்டியல்களைப் பயன்படுத்தலாம்

## 6.0 தகவல் அறிக்கைப்படுத்தல் படிவமும் அதனைப் பயன்படுத்தலும்

சேகரித்த தகவல்களைக் குறித்து வைத்து அறிக்கைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தக்கூடிய நான்கு படிவங்களின் மாதிரிகள் ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ளன. அவை தாய்மொழி, கணித, சுற்றாடல்சார்ந்த செயற்பாடுகள், பொதுக் கணிப்பீட்டுப் படிவங்கள் எனப் பெயரிடப்பட்டுள்ளன.

அவற்றில் ஒவ்வொரு மாணவனின் பெயருக்கும் எதிரே, ஒவ்வொரு கற்றல் பேறுக்காகவும் ஒரு கட்டம் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் அந்தந்தக் கற்றல் விளைவுகளை அண்மித்துள்ளனரா இல்லையா என சோதித்தறிந்த பின்னர் அதனை இங்கு குறித்துக்கொள்ள வேண்டும். பொதுக் கணிப்பீட்டுப் படிவத்தில் தரப்பட்டுள்ள கணிப்பீட்டுக்கு உட்படுத்த வேண்டிய பெரும்பாலான ''கற்றல் பேறுகள்'' வருடம் முழுவதும் கண்டறிய வேண்டிய விதத்தில் பரந்தமைந்துள்ளன. இங்கு ஒரு தவணைக்கு ஒரு மாணவனுக்கு ஒரு கட்டம் வீதம் பயன்படுத்தக் கூடியவாறு ஒரு கற்றல் பேறுக்கு மூன்று கட்டங்கள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாணவன் தொடர்பாகவும் ஒவ்வொரு கற்றல் பெறுபேறின் கீழும் நீங்கள் சேகரித்த தகவல்களின் உதவியுடன், பின்வருமாறு குறியீடுகளைப் பயன்படுத்தி அறிக்கை செய்யலாம்.

| முடிவு | குறியீடு |
|---|---|
| வெற்றிகரமாகச் செய்கிறார். | ✓ |
| இடர்ப்படுகிறார் / மேலும் உதவி தேவை | • |

யாதேனும் ஒரு கற்றற்பேறு தொடர்பாக மாணவர் வெற்றியைக் காட்டுகின்றனரா என்பதை ஆசிரியர் முடிவு செய்வதற்காகக் குறித்த கற்றற்பேறுக்குப் பொருத்தமானதாகத் தாமே தயாரித்த நியதிகளைப் பயன்படுத்தலாம். வகுப்பிலுள்ள எல்லா மாணவரது அடைவு மட்டங்களையும்

DRAFT

பற்றிய முடிவுகள் ஒரே நியதித் தொகுதியை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படுமாயின் அவற்றின் ஒருசீர்த்தன்மை ஏற்படுவதால், உத்தேசப் பெறுபேற்றை அடைவது கடினமாக அமையலாம்.

## 7.0 கண்டறிதலும் பரிகாரமும்

முறைசாரா - தொடர் கணிப்பீட்டு முறையின் பிரதான நோக்கம் கண்டறிதலாகும். ஒவ்வொரு மாணவனதும் கணிப்பீட்டுப் படிவத்தில் ''• '' குறியீடு இடப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பம் தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். மாணவன் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளை இனங்கண்டு, அவற்றுக்குப் பரிகாரம் கண்டு, பின்னர் மீண்டும் கணிப்பீட்டுக்கு உட்படுத்தல் வேண்டும். குறித்த ''•'' எனும் குறியீடு, ''✓ '' எனும் குறியீடாக மாறும் வரை இச்செயற்பாட்டைத் தொடர்ச்சியாக நடாத்துதல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

இனங்கண்ட கற்றல் இடர்பாடுகளைத் தவிர்ப்பதற்கு அந்தந்தச் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமானவாறு சிறப்பான பரிகாரக் கற்றல் - கற்பித்தல் முறைகளை ஒழுங்கமைத்தல் முக்கியமானதாகும். இவை ஒவ்வொரு மாணவனும் காட்டும் கற்றல் இடர்ப்பாடுகளுக்கேற்பவே தீர்மானிக்கப்படலாம்.

இவ்வாறே குறிப்பிட்ட சில கற்றல் நோக்கங்கள் தொடர்பாக வகுப்பு மாணவருள் பெரும்பாலானோர் ''• '' குறியீட்டைப் பெற்றுள்ளனராயின், அதற்கு ஏதுவான காரணங்கள் பல இருக்க முடியும். அவற்றை இனங்கண்டு பொருத்தமான ஒரு நடைமுறையைப் பின்பற்றி மாணவர்கள் உரிய கற்றல் பேறுகளை அடையச் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

## 8.0 ஏனைய விடயங்கள்

- ✓ ஒரு மாணவனின் கற்றல் முன்னேற்றத்தை மற்றொரு மாணவனின் கற்றல் முன்னேற்றத்துடன் ஒப்பிடுவதன் மூலம் கல்வி ரீதியாக முக்கியத்துவம் பெறும் தீர்மானங்களை எடுத்தல் கடினமானதாகும். ஆகவே மாணவ - மாணவ அடைவுகளை ஒப்பிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுதல் அவசியமாகும்.

- ✓ ஒரு மாணவனின் தற்போதைய அடைவு மட்டத்தை அவனது முன்னைய அடைவு மட்டத்துடன் ஒப்பிட்டு, மாணவனது முன்னேற்றம் பற்றிய தகவல்களைப் பெறலாம். எனவே இது பற்றி அக்கறை செலுத்துவதோடு கலைத்திட்டத்தின் நோக்கங்களை எந்தளவுக்கு அடைந்துள்ளனர் என அறிதலும் அவசியமாகும்.

- ✓ தனது வகுப்பிலுள்ள மாணவர்களுக்குப் பொருத்தமான விதத்தில் கணிப்பீட்டு உபகரணங்களை தயாரித்துக் கொள்வதில் வகுப்பாசிரியர் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

DRAFT

# தாய்மொழி (தமிழ்) கணிப்பீட்டுப் - படிவம்

| | | | | மாணவர் பெயர் | வெற்றிகரமாக செய்கிறார் √ <br> இடர்ப்படுகிறார்/ மேலும் உதவி தேவை • |
|---|---|---|---|---|---|
| | | | | 01. பேசுவதனைச் செவிமடுத்து சுயமாக பேசுவதற்கு முன்வருவார். | அடிப்படை மொழித்திறன்கள் |
| | | | | 02. இரு படங்களுக்கிடையிலான மூன்று வேறுபாடுகளை இனங்காண்பார். | |
| | | | | 03. படங்களைப் பார்த்து கூறுவதுடன் நினைவுபடுத்தியும் கூறுவார். | |
| | | | | 04. காட்சிப்படங்களைப் பார்த்து அதில் உள்ளவற்றைக் கூறுவார். | |
| | | | | 05. உயிர்மெய் எழுத்துக்களை இனங்கண்டு சரியான உச்சரிப்புடன் வாசிப்பார். | |
| | | | | 06. குறில், நெடில் சொற்களை இனங்காண்பார். | |
| | | | | 07. ஒருமை, பன்மைச் சொற்களை படங்களின் துணையுடன் சரியாக இனங்கண்டு வாசித்து அறிந்து கொள்வார். | |
| | | | | 08. சரியான கொண்ணிலையில் அமர்ந்து சரியாகப் பென்சிலைப் பிடிப்பார் | |
| | | | | 09. நான்கு றூள் கொப்பியில் உறுப்பமைய எழுதுவார். | |
| | | | | 10. சிறிய கதை ஒன்றைச் செவிமடுத்து தொனி வேறுபாடுகளுடன் தமது பாணியில் சுயமாக முன்வைப்பார். | |
| | | | | 11. சொற்களை உரத்து வாசித்து சரியான திசைமுகத்துடன் உறுப்பமைய எழுதுவார். . | |
| | | | | 12. ஒத்தகருத்துள்ள கொற்களை இனங்கண்டு கூறுவார்/எழுதுவார். | |
| | | | | 13. நடைமுறை வாழ்வுடன் தொடர்புடைய இலகுவான எதிர்க் கருத்துச் சொற்களை நினைவுபடுத்திக் கூறுவதுடன் அச் சொற்களைப் பிழையின்றி எழுதுவார். | |
| | | | | 14. குடும்ப உறவினர்களுடன் தொடர்புடைய இலகுவான எதிர்ப்பால் சொற்களை இனங்கண்டு கூறுவதுடன் அச் சொற்களைப் பிழையின்றி எழுதுவார். | |
| | | | | 15. முற்றுப்புள்ளி, காற்புள்ளி ஆகியவற்றை இட்டு சிறிய வாக்கியங்களை எழுதுவார். | |
| | | | | 16. பாடல்கள், கதைகளை விருப்புடனும் இரசனையுடனும் அசைவியக்கச் செயற்பாடுகளுடனும் போலச் செய்தும் வெளிப்படுத்துவார். | |
| | | | | 17. விரல் பொம்மைகளை பயன்படுத்தி உரையாடுவதன் மூலம் கற்பனையாற்றலையும் ஆக்கத்திறனையும் வெளிப்படுத்துவார். | |
| | | | | 18. ஒலி, ஒளி இறுவட்டுக்களைச் செவிமடுத்து இரசனையுடன் வெளிப்படுத்துவார். | |
| | | | | 19. பாடல்கள், கதைகளைப் புரிந்து கொண்டு விருப்புடன் சித்திரமாக முன்வைப்பார். | |
| | | | | 20. பாடசாலையுடன் தொடர்புடைய அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், கட்டளைகள் ஆகியவற்றை விளங்கி சுயமாகத் துலங்குவார். | |
| | | | | 21. எல்லோருடனும் பணிவாகவும் அன்பாகவும் நட்புறவுடனும் உரையாடுவார். | |

DRAFT

து கொண்டு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | 22. தமது சுய விபரங்களை எழுதி வாசித்துக் காட்டுவார். | |
| | | | | 23. கதைப் படங்களில் தொடர்பைக் கண்டு பிடித்து கதையொன்றைக் கட்டியெழுப்புவார். | |
| | | | | 24. தமக்குத் தெரிந்த பிராணிகளின் ஒலி மரபுச் சொற்களை அறிந்து பிழையின்றி எழுதுவார் | |
| | | | | 25. விடுகதைகளைக் கேட்டறிந்து முன்வைப்பதோடு ஆர்வத்துடன் விடுவிப்பார் / பிழையின்றி எழுதுவார். | |
| | | | | 26. குறியீடுகளைச் சரியாகப் புரிந்து கொண்டு துலங்குவார். | |
| | | | | 27. தாம் கற்ற சொற்களைச் கருத்தூன்றிச் செவிமடுத்துப் பிழையின்றி எழுதுவார். | |
| | | | | 28. பொது இடங்களில் எவ்வாறு பேச வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டு, மற்றவர்களின் கரத்துக்களுக்கு மதிப்பளித்துக் கண்ணியமாகப் பேசுவார். | |
| | | | | 29. பாடசாலையுடன் தொடர்புடைய பெயர்ப்பலகைகள், நேரஅட்டவணை, ஒட்டிகள் ஆகியவற்றை வாசித்து தெரிந்து தகவல்களையும் குறித்துக் கொள்வார். | |
| | | | | 30. ஒலி, ஒளி இறுவட்டுக்கள் ஊடாக கிரகித்த பாடல்கள், கதைகள், உரையாடல்கள், தகவல்களை நினைவுபடுத்திக் கூறுவதோடு வினாக்களுக்கும் விடையளிப்பார். | அடிப்படை மொழித்திறன்கள் |
| | | | | 31. அறிந்த பிராணிகள், பழங்கள் மரங்கள் பற்றிய சுயசரிதையைக் கூறுவார் / எழுதுவார். (மூன்று சிறிய வாக்கியங்கள்) | |
| | | | | 32. தெரிவு செய்யப்பட் கொன்றைவேந்தன் பாடல்களை மனனம் செய்து தெளிவாக முன்வைப்பார். | |
| | | | | 33. கிராமிய விளையாட்டுக்களை அறிந்து விளையாடி மகிழ்வுறுவார். /தெளிவாக முன்வைப்பார். | |
| | | | | 34. காட்சிப் படங்களைப் பார்த்து சில சொற்களைப் பிழையின்றி எழுதி வாசிப்பார். | |
| | | | | 35. பங்குபற்றிய சந்தர்ப்பங்கள், நிகழ்ச்சிகள், சுற்றுலா ஆகியன பற்றிச் சித்திரமாக முன் வைப்பதோடு சில வாக்கியங்களையும் எழுதுவார். | |
| | | | | 36 சிறுவர் சஞ்சிகைகளில் தமக்கு விருப்பமான பகுதிகளைப் பார்வையிட்டு மிகச் சிறிய வாக்கியங்களைப் பார்த்து உறுப்பமைய எழுதுவார்./வாசிப்பார் | |
| | | | | 37. தெரிவு செய்யப்பட்ட பகுதிகளை ஒலி, ஒளி இறுவட்டுக்களின் துணையுடன் வாசிப்பார், பேசுவார். | |
| | | | | 38. இணையத்தளங்களை பார்வையிட்டு தான் ரசித்த விடயங்களை மற்றையவர்களுடன் பகிர்ந்து கொள்வார். | |
| | | | | 39. காட்சிப்படங்களைப் பார்த்து சில வாக்கியங்களைப் பிழையின்றி எழுதுவார். | |
| | | | | 40. மொழிப் பயிற்சிக்கான அறிவுறுத்தல்களைச் செவிமடுத்து வாசித்து வினாக்களுக்கு விடையளிப்பார். | |

DRAFT

# தரம் 2 சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் கணிப்பீட்டுப் படிவம்

| | | | | மாணவர் பெயர் | கணிப்பீட்டு அளவுத்திட்டம்<br>வெற்றிகரமாகச் செய்கிறார் √<br>இடர்ப்படுகிறார் மேலும் உதவி தேவை • |
|---|---|---|---|---|---|
| | | | | 1. | பாடசாலையின் பொதுக் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார். |
| | | | | 2. | ஏனையோர் தொடர்பாக உணர்வுடன் செயற்படுவார். |
| | | | | 3. | குடும்ப உறுப்பினர்களால் குடும்பத்துக்காகச் செய்யப்படும் ஒவ்வொரு வேலை வீதம் குறிப்பிடுவார். |
| | | | | 4. | பிராணிகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக எடுக்கத்தக்க இரண்டு நடவடிக்கைகளைக் குறிப்பிடுவார். |
| | | | | 5. | பிராணிகளை அவதானித்து இனங்கண்டு இரண்டு இயல்புகளைக் குறிப்பிடுவார். |
| | | | | 6. | நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவார். |
| | | | | 7. | போதுமான அளவு நீரைப் பருகுவதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுவார். |
| | | | | 8. | புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் நிறைவேற்றப்படும் இரண்டு பாரம்பரியங்களைக் குறிப்பிடுவார். |
| | | | | 9. | பண்டிகைக் காலத்தில் சூழலில் ஏற்படும் மாற்றங்களை அவதானித்து, பொருத்தமானவாறு அறிக்கைப்படுத்துவார். |
| | | | | 10. | நல்வாழ்க்கைக்காகச் சுகாதாரப் பழக்கங்களை வெளிக்காட்டுவார். |
| | | | | 11. | தகவல் பரிமாற்றத்தின்போது மரியாதையாகத் துலங்கல் காட்டுவார். |
| | | | | 12. | எமக்குத் தேவையானவற்றை வீட்டுத்தோட்டத்திலேயே உற்பத்தி செய்து கொள்வதன் முக்கியத்தவத்தைக் குறிப்பிடுவார். |
| | | | | 13. | பயணங்களின்போது தமது பாதுகாப்புத் தொடர்பான கரிசனையை வெளிக்காட்டுவார். |
| | | | | 14. | உணவு - பானாதிகள் மூலம் எமக்குக் கிடைக்கும் இரண்டு பயன்களைக் குறிப்பிடுவார். |
| | | | | 15. | உணவு அசுத்தமடையும் ஒரு முறையைக் குறிப்பிடுவார். |
| | | | | 16. | வேலை செய்யும்போது அதற்குப் பொருத்தமான உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டும் எனக் கூறுவார். |
| | | | | 17. | கண்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுவார். |
| | | | | 18. | இயற்கையாக நிகழும் எதிர்பாரா அவசர நிலைமைகளின்போது செயற்பட வேண்டிய விதம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிப்பார். |
| | | | | 19. | சூரிய ஒளியின் தாக்கம் காரணமாக மனிதனுக்குக் கிடைக்கும் ஓர் அனுகூலத்தையும் ஒரு பிரதிகூலத்தையும் குறிப்பிடுவார். |
| | | | | 20. | சூழலின் அழகைக் கூறும் வாக்கியம், கவிதை, பாடல் ஆகியவற்றை முன்வைப்பார். |
| | | | | 21. | சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமானவாறு சரியான மெய்ந்நிலையை வெளிக்காட்டுவார். |
| | | | | 22. | உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் உதவி செய்ய முன்வருவார். |
| | | | | 23. | விசேட நபர்களுடன் உணர்வு பூர்வமாகச் செயற்படுவார். |
| | | | | 24. | கண்ட நிகழ்வை, அனுபவத்தை அங்க அசைவுகள் மூலம் வெளிப்படுத்துவார். |
| | | | | 25. | தாம் கற்ற ஒரு கவிதையைப் பாடலைப் பாடுவார். |
| | | | | 26. | தாம் கண்ட ஒரு நிகழ்வைச் சித்திரமாக வரைவார். |
| | | | | 27. | தமது சுற்றுப்புறச் சூழலில் காணப்படும் பொருள்களைப் பயன்படுத்தி ஆக்கம் புரிவார். |
| | | | | 28. | சுற்றுப்புறச் சூழல் குறித்துக் கவனமாக நோட்டமிடுவார். |
| | | | | 29. | சேகரிக்கும் தகவல்களை வெவ்வேறு விதமாக அறிக்கைப்படுத்துவார். |
| | | | | 30. | எளிமையான கையாண்டுபார்த்தல்களைச் செய்வார். |

DRAFT

## பொதுக் கணிப்பீட்டுப் படிவம்

| | | | | மாணவர் பெயர் — கணிப்பீட்டு அளவுத்திட்டம்: வெற்றிகரமாகச் செய்கிறார் √ ; இடர்ப்படுகிறார்/ மேலும் உதவி தேவை • |
|---|---|---|---|---|
| | | | | 1. வகுப்பில் ஏனையோரின்பால் கௌரவத்துடன் செயற்படுகிறார். |
| | | | | 2. பகிர்ந்து பரிமாறிச் செயற்படுவதன் பெறுமானத்தைக் குறிப்பிடுவார். |
| | | | | 3. சுய சுத்தம் தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுகிறார். |
| | | | | 4. தமது சுற்றுப்புறச் சூழலை சுத்திகரிப்பதில் பங்களிப்புச் செய்கிறார். |
| | | | | 5. ஏனையோருக்கு உதவி செய்ய விருப்புக் காட்டுகிறார். |
| | | | | 6. ஏனையோருடன் நட்புடன் உரையாடுகிறார். |
| | | | | 7. நட்புடன் ஏனையோரிடம் உதவி பெறுகின்றார். |
| | | | | 8. சுற்றாடல் மீது அன்பு செலுத்துகிறார். |
| | | | | 9. முடிவை அடையும் வரையில் கவனமாக வேலை செய்கிறார். |
| | | | | 10. உபகரணங்களைச் சரியாகப் பயன்படுத்துகிறார். |
| | | | | 11. பயன்படுத்திய பின்னர் உபகரணங்களை உரிய இடத்தில் வைக்கிறார். |
| | | | | 12. வேலையின் முடிவில் உபகரணங்களையும் இடத்தையும் சுத்திகரிக்கின்றார். |
| | | | | 13. பாதுகாப்புக் குறித்து கவனமாகச் செயற்படுகிறார். |
| | | | | 14. சுய கற்றலில் விருப்புக் காட்டுகிறார். |
| | | | | 15. பொருத்தமான சந்தர்ப்பங்களில் எளிமையான சிங்களச் சொற்களைப் பயன்படுத்துகிறார். |
| | | | | 16. தருணத்துக்கு ஏற்ப சிங்களமொழியில் வாழ்த்து வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார். |

DRAFT

# 7.0 அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள்

## 1.0 அறிமுகம்

தேர்ச்சி எனக் கருதப்படுவது அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றின் கூட்டுக் கலவையாகும். பல்வேறு விதங்களில் தேர்ச்சிகள் இருக்க முடியும். சில தேர்ச்சிகள் அதிகளவு திறன் சார்ந்ததாகவும் வேறு சில தேர்ச்சிகள் கூடியளவு அறிவு மனப்பாங்கு சார்ந்ததாகவும் இருக்க முடியும். முதன்மைநிலை ஒன்றைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் சகலரும் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளில் பாண்டித்தியத்தை அடைய வேண்டும் என புதிய ஆரம்பக்கல்விக் கலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தெளிவாக விளக்கம் பெற்றுக்கொள்ள வேண்டிய சில விடயங்கள் இக்கூற்றுகளில் உள்ளடக்கப் பட்டடுள்ளது. அதாவது;

- அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் என்பதால் கருதப்படுவது யாது?
- முதன்மை நிலை ஒன்றில் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளால் கருதப்படுவது யாவை?
- பாண்டித்தியம் என்பதனால் கருதப்படுவது யாது?
- தேர்ச்சி ஒன்றில் பாண்டித்தியம் அடைந்துள்ளமையை எவ்வாறு உறுதி செய்யலாம்? இவ் ஒவ்வொன்றும் தொடர்பாகவும் விரிவாகப் பார்ப்போம்.

**2.1 அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் என்பதால் கருதப்படுவது யாது?**

கலைத்திட்டமொன்றினை விருத்தி செய்யும்போது அங்கு உள்ளடக்கத்தை தீர்மானிக்கும்போது முக்கிய இடம் வழங்கப்படும். பல்வேறு திறன் மட்டங்களில் இருக்கும் மாணவர்களுக்கும் பொருத்தமான விதத்தில் இலகுவானது போன்றே சிக்கலானதுமான தேர்ச்சிகள் கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்படும்.

முதன்மை நிலை ஒன்றில் நிறைவு செய்வதற்கு முன்பு தரம் இரண்டில் மாணவர்கள் யாவரும் கட்டாயமாக உயர் மட்டத்தில் திறனை பெற்றிருக்கவேண்டிய தேர்ச்சித் தொகுதி கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. சகல மாணவர்களாலும் அடைய வேண்டுமென எதிர்பார்க்கும் இத்தேர்ச்சிகளை நாங்கள் அத்தியாவசியத் தேர்ச்சிகள் என அழைப்போம். இதற்கேற்ப அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளில் உள்ளடக்கப் படுவதாவது;

- கற்றலை மேலும் விருத்தி செய்து கொள்வதற்குப் பெற்ற அறிவினை நடைமுறைப்படுத்தல்
- சிறந்த நற்பிரசையாகவும் சிறப்பாகவும் வாழ்வதற்கான அத்தியாவசியமான தேர்ச்சிகள்

''சகலருக்கும் கல்வி'' எனும் கோட்பாட்டின் கீழ் சகல மாணவர்களிடமும் குறைந்தபட்ச அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

வகுப்பில் சகல மாணவர்களும் பெற்றிருக்க வேண்டிய அதியுயர் தேர்ச்சி மட்டம் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிதான் என ஒருபோதும் கருத வேண்டாம். மிகத் திறமைமிக்க மாணவர்களால் விருத்தி செய்துகொள்ளக் கூடியதெனக் கருதப்படும் தேர்ச்சிகள் இருந்தபோதும் சகல மாணவர் களுக்கும் அத்தியாவசியமானதெனக் கருதப்படாத உயர்மட்டத் தேர்ச்சித் தொகுதியும் இக்கலைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவை விருப்புக்குரிய (Desirable) கற்றல் தேர்ச்சிகள் என அழைக்கப்படும்.

வகுப்பிலுள்ள சகல மாணவர்களையும் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சியில் உயர் மட்ட நிலைக்குக் கொண்டு செல்வதுடன், வகுப்பு மாணவர்களில் அநேக மாணவர்களை விருப்புக்குரிய கற்றல் தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் ஆசிரியரின் குறிக்கோளாக அமைதல் வேண்டும்.

**3.0 முதன்மை நிலை ஒன்றில் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளாகக் கருதப்படுபவை யாவை?**

முதன்மைநிலை ஒன்றின் இறுதியில் மாணவர்கள் யாவரும் உயர்நிலையில் தம் ஆற்றல்களை வெளிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படும் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் தொகுதியொன்று இனங்காணப்பட்டுள்ளது. அவற்றை இனங்காணும்போது தரம் ஒன்று, தரம் இரண்டுக்குரிய பாடத்திட்டங்கள், ஏனைய கலைத்திட்ட சாதனங்கள் யாவற்றையும் ஆழமாக ஆராய்ந்தறிந்ததோடு

DRAFT

மட்டுமன்றி ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், விரிவுரையாளர்கள், கலைத்திட்ட விருத்தியாளர்கள், கல்வியியலாளர்கள் போன்றோரின் ஆலோசனைகளும் பெறப்பட்டன. அத்தோடு அத்தியாவசியமென எதிர்பார்க்கும் கற்றல் நிலைகள் பற்றி வெளிநாடுகளில் வெளியிடப்பட்ட நூல்களும் உசாவப்பட்டன.

இனங்காணப்பட்டுள்ள அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளின் தொகுதி பாட வாரியாக அல்லாது பொதுவான தேர்ச்சித் தொகுதியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்தத் தேர்ச்சித் தொகுதியில்,

- **தொடர்பாடல் தொடர்பான**
- **ஆளுமை விருத்தி தொடர்பான**
- **சூழல் தொடர்பான**
- **வேலை உலகிற்கு தயார் செய்தல் தொடர்பான**
- **சமயமும் ஒழுகலாறும் தொடர்பான**
- **ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டுத் தொடர்பான**
- **கற்றலுக்குக் கற்றல் தொடர்பான**

ஆகிய அடிப்படைத் தேர்ச்சிகளுக்குப் பொருத்தமானதாகத் தேர்ச்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ள.

## 4.0 பாண்டித்தியம் என்பதனால் கருதப்படுவது யாது?

ஒரு தேர்ச்சியில் உள்ளடக்கப்படும் அறிவு, திறன், மனப்பாங்கு தொடர்பான உயர் மட்ட இயலுமையை ஒரு மாணவர் தனது வயதுக்குப் பொருத்தமாக வெளிக்காட்டுவாராயின் அவர் குறித்த அத்தேர்ச்சியில் ‘‘பாண்டித்தியம்’’ அடைந்தவராகக் கருதப்படுவார். உயர் மட்டத்தில் திறனைப் பெற்றுள்ளாரா என்பதனை தீர்மானிப்பதற்கு கணிப்பீடு செய்வதனூடாக சேகரித்த பல்வேறு தகவல்களும் குறித்த நியதிகளையும் தேர்ச்சிகளுக்குப் பொருத்தமாக கவனத்தில் கொள்ள வேண்டி ஏற்படும்.

ஏதாவது ஒரு தேர்ச்சியில் **“பாண்டித்தியம்”** அடைந்த மாணவனிடம் காணக்கூடிய பிரதான இலட்சணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- குறித்த தேர்ச்சி மட்டத்திற்கு இயைபான அடுத்த உயர் மட்டத்திற்குப் பிரவேசிக்கத் தயார் என்பதைக் காட்டுவார்.
- குறித்த தேர்ச்சி மூலம் தொடர்ந்து கற்பதற்கான ஆர்வத்தைப் வெளிக்காட்டவார்.
- குறித்த தேர்ச்சி தொடர்பாகத் தனக்குள்ள தன்னம்பிக்கையை வெளிக்காட்டுவார்.
- குறித்த தேர்ச்சி சார்ந்த அறிவு, திறன் ஆகியவற்றை பிறிதொருவருக்குக் கூறுவதற்கோ, கற்பிப்பதற்கோ முடியும் என்பதை வெளிக்காட்டுவார்.
- குறித்த தேர்ச்சி தொடர்பாக விசேட ஈடுபாடும், விருப்பும் உண்டென்பதை வெளிக்காட்டுவார்.
- குறித்த தேர்ச்சி தொடர்பான பிரச்சினைகளை எதிர்நோக்கும் சந்தர்ப்பங்களில் அவற்றைச் சுயமாகத் தீர்த்துக் கொள்ளும் இயலுமையைக் காட்டுவார்.
- குறித்த தேர்ச்சி தொடர்பான கருமங்களை கூடியளவு சிறப்பாக ஆற்றுவார்.
- மனப்பாங்கு சார்ந்த தேர்ச்சிகளுக்கு உரிய மெய்ப்பாடுகளை எப்போதும் வெளிக்காட்டுவார்.

## 5.0 தேர்ச்சி ஒன்றில் பாண்டித்தியம் அடைந்துள்ளமையை எவ்வாறு உறுதி செய்யலாம்?

தேர்ச்சியொன்றில் பாண்டித்தியத்தை உறுதி செய்தலானது கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போதிலேயே நிறைவேற்ற வேண்டிய செயலொழுங்காகும். அதற்குப் பயன்படுத்தக் கூடிய இரண்டு பிரதான முறைகள் இனங்காணப்பட்டுள்ளன.

(அ) முறைசாரா கணிப்பீட்டு முறை மூலம் தொடர்ச்சியாக சேகரித்த தகவல்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் எடுத்தல். (தொடர் கணிப்பீட்டுத் தகவல்கள் மட்டும்)

(ஆ) மேற்படி (அ) பகுதியில் குறிக்கப்பட்டுள்ள தகவல்களுக்கு மேலதிகமாக ஒரு இறுதிக் கணிப்பீட்டு மூலமாகவோ அதிக தடவைகளிலான இறுதிக் கணிப்பீட்டின் மூலமாகவோ தீர்மானம் எடுத்தல்

மேற்படி முறைகளைப் பயன்படுத்தி அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளை மாணவர்கள் அண்மித்துள்ளார்களா என்பது தொடர்பாகத் தீர்மானம் எடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல்கள், அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் தரப்பட்டுள்ளன.



DRAFT